திருக்குறள்

உரைக் களஞ்சியம்

துறவறவியல் - ஊழியல்

ச. தண்டபாணி தேசிகர்

UG2955
R006C05

பதிப்புத்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

திருக்குறள் உரைக்களஞ்சியம்

(துறவறவியல்—ஊழியல்)

டாக்டர் மகாவித்துவான்
ச. தண்டபாணிதேசிகர்
முன்னாள் விரிவுரையாளர், திருக்குறள் ஆய்வகம்
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்

உதவி:
திருமதி சலசா
திருக்குறளாய்வகம்

பதிப்புத்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை—625 021

பதிப்புத்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை—625 021.

© Publications Division
Madurai Kamaraj University
Madurai-625 021.

பதிப்பு எண்: 91
திருக்குறள் ஆய்வக வெளியீட்டு எண்: 14

பதிப்பு விவரங்கள்:

1	உரைக்களஞ்சிய ஆசிரியர்	: மகாவித்துவான் ச. தண்டபாணிதேசிகர் (1905) (Mahavidwan S. Dandapani Desigar) முன்னாள் விரிவுரையாளர், திருக்குறள் ஆய்வகம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.
2	தலைப்பு	: திருக்குறள் உரைக்களஞ்சியம் — துறவறவியல்—ஊழியல் (Thirukkural Variorum Edition)
3	பதிப்பு:	
	அ) இடம்	: மதுரை காமராசர் பல்கலைக்கழகம் (Madurai Kamaraj University)
	ஆ) பதிப்பித்தோர்	: பதிப்புத்துறை மதுரை காமராசர் பல்கலைக்கழகம் மதுரை—625 021 Publications Division Madurai Kamaraj University, Madurai.
	இ) ஆண்டு	: முதற் பதிப்பு — 1986
4	மொத்த பக்கங்கள்	: 466
5	பொருள்	: உரைக்களஞ்சியம்
6	அச்சும் அமைப்பும்	: அகரம், சிவகங்கை

விலை: ரூ. 30-00

இதில் அடங்கியவை

இதில் அடங்கியவை
முகவுரை
சுருக்க விளக்கம்
துறவறவியல் க
அதிகாரம் 25. அருளுடைமை ரு
25. 1. அருட்செல்வம் அ
25. 2 நல்லாற்றான் கஉ
25. 3 அருள் சேர்ந்த கசு
25. 4. மன்னுயிர் ஓம்பி கஎ
25. 5. அல்லல் அருளாள்வார்க்கு உ0
25. 6. பொருள்நீங்கிப் உச
25. 7. அருளில்லார்க்கு உஎ
25. 8. பொருளற்றார் ரு0
25. 9. தெருளாதான் ருக
25 10.வலியார்முன் ருரு
அதிகாரம் 26 புலால் மறுத்தல் ருசு
26. 1. தன்னூன்பெருக்கற்குத் ருஅ
26. 2. பொருளாட்சி ச0
26. 3. படைகொண்டார் சஉ
26. 4. அருளல்லது சச
26. 5. உண்ணாமை உள்ளது சஅ
26. 6. தினற்பொருட்டால் ருச
26. 7. உண்ணாமை வேண்டும் ருஎ
26. 8. செயிரின் ருகூ
26. 9. அவிசொரிந்து சுக
26. 10. கொல்லான் சுச
அதிகாரம் 27 தவம் சுஅ
27. 1. உற்றநோய் எ0
27. 2. தவமும் தவமுடையார்க்கு எரு
27. 3. துறந்தார்க்குத் எசு
27. 4. ஒன்னார்த் தெறலும் எஅ
27. 5. வேண்டிய வேண்டியாங் அ0
27. 6. தவஞ்செய்வார் அரு

27	7	சுடச்சுடரும்	அஅ
27	8	தன்னுயிர் தான்அற	கூஉ
27	9	கூற்றம் குதித்தலும்	கூச
27	10	இலர்பல ராகிய	கூஎ
அதிகாரம் 28		கூடா ஒழுக்கம்	க௦க
28	1	வஞ்ச மனத்தான்	க௦ங
28	2	வானுயர் தோற்றம்	க௦சா
28	3	வலியில் நிலைமையான்	கக௦
28	4	தவமறைந்து அல்லவை	ககங
28	5	பற்றற்றேம்	ககரு
28	6	நெஞ்சில் துறவார்	ககஅ
28	7	புறங்குன்றி	கஉ௦
28	8	மனத்தது மாசாக	கஉஉ
25	9	கணைகொடிது	கஉச
28	10	மழித்தலும் நீட்டலும்	கஉசா
அதிகாரம் 29		கள்ளாமை	கங௦
29	1	எள்ளாமை	கஙஉ
29	2	உள்ளத்தால் உள்ளலும்	கஙரு
29	3	களவினால் ஆகிய	கஙஎ
29	4	களவின்கண் கன்றிய	கச௦
29	5	அருள்கருதி	கசஉ
29	6	அளவின்கண்	கசரு
29	7	களவென்னும்	கசஎ
9	8	அளவறிந்தார்	கசசா
29	9	அளவல்ல	கருக
29	10	கள்வார்க்கு	கருங
அதிகாரம் 30		வாய்மை	கருஎ
30	1	வாய்மை எனப்படுவது	கருஅ
30	2	பொய்ம்மையும்	கசா௦
30	3	தன்நெஞ்	கசாங
30	4	உள்ளத்தாற் பொய்யா	கசாசா
30	5	மனத்தொடு	கசாகூ
30	6	பொய்யாமை அன்ன	கஎஉ
30	7	பொய்யாமை பொய்யாமை	கஎச
30	8	புறந்தூய்மை	கஎகூ
30	9	எல்லா விளக்கும்	கஅஉ
30	10	யாமெய்யா	கஅச
அதிகாரம் 31		வெகுளாமை	கஅஅ
31	1	செல்லிடத்துக்	கஅகூ

31	2	செல்லா இடத்து	கசுக
31	3	மறத்தல் வெகுளியை	கசுஉ
31	4	நகையும் உவகையும்	கசுச
31	5	தன்னைத்தான்	கசுரு
31	6	சினமென்னும்	கசுஅ
31	7	சினத்தை	உ0உ
31	8	இணர்எரி	உ0ச
31	9	உள்ளிய தெல்லாம்	உ0எ
31	10	இறந்தார்	உக0

அதிகாரம் 32 இன்னா செய்யாமை உகங

32	1	சிறப்புஈனும்	உகரு
32	2	கறுத்தின்னா	உகசு
32	3	செய்யாமல்	உஉ0
32	4	இன்னாசெய்தாரை	உஉங
32	5	அறிவினான்	உஉரு
32	6	இன்னா எனத்தான்	உஉஎ
32	7	எனைத்தானும்	உஉகூ
32	8	தன்னுயிர்க்கு	உஙக
32	9	பிறர்க்குஇன்னா	உஙங
32	10	நோய்எல்லாம்	உஙரு

அதிகாரம் 33 கொல்லாமை உஙகூ

33	1	அறவினை யாதெனின்	உச0
33	2	பகுத்துண்டு	உசங
33	3	ஒன்றாக நல்லது	உசரு
33	4	நல்லாறு	உசஅ
33	5	நிலை அஞ்சி	உசகூ
33	6	கொல்லாமை மேற்கொண்	உருஉ
33	7	தன்னுயிர் நீப்பினும்	உருச
33	8	நன்றாகும்	உருசு
33	9	கொலைவினையராகிய	உருகூ
33	10	உயிர்உடம்பின்	உசுக

அதிகாரம் 34 நிலையாமை உசுச

34	1	நில்லாத வற்றை	உசுசு
34	2	கூத்தாட்டு	உசுகூ
34	3	அற்கா	உஎக
34	4	நாளென	உஎச
34	5	நாச்செற்று	உஎகூ
34	6	நெருநல்	உஅஉ

34 7 ஒருபொழுதும் ௨௮௪
34 8 குடம்பை ௨௮௭
34 9 உறங்குவதுபோலும் ௨௯0
34 10 புக்கில் ௨௯௩

அதிகாரம் 35 துறவு ௨௯௭

35 1 யாதனின் ௨௯௯
35 2 வேண்டின்உண்டாக ௩0௧
35 3 அடல்வேண்டும் ௩0௩
35 4 இயல்பாகும் ௩0௬
35 5 மற்றும் தொடர்ப்பாடு ௩0௮
35 6 யான்எனது ௩௧௧
35 7 பற்றிவிடா அ ௩௧௩
35 8 தலைப்பட்டார் ௩௧௫
35 9 பற்றற்ற ௩௧௭
35 10 பற்றுக பற்றற்றான் ௩௨0

அதிகாரம் 36 மெய்யுணர்தல் ௩௨௬

36 1 பொருளல்ல ௩௨௯
36 2 இருள்நீங்கி இன்பம் ௩௩௨
36 3 ஐயத்தின் ௩௩௫
36 4 ஐயுணர்வு ௩௩௬
36 5 எப்பொருள் எத்தன்மை ௩௪௩
46 6 கற்றீண்டு ௩௪௭
36 7 ஓர்த்துள்ளம் ௩௫0
36 8 பிறப்பென்னும் ௩௫௩
36 9 சார்புணர்ந்து ௩௫௬
36 10 காமம் வெகுளி ௩௬0

அதிகாரம் 37 அவா அறுத்தல் ௩௬௬

37 1 அவாஎன்ப ௩௬௭
37 2 வேண்டுங்கால் ௩௬௯
37 3 வேண்டாமை ௩௭௨
37 4 தூஉய்மை ௩௭௪
37 5 அற்றவர் என்பார் ௩௭௬
37 6 அஞ்சுவ தோரும் ௩௭௮
37 7 அவாவினை ௩௮௧
37 8 அவாஇல்லார்க்கு ௩௮௩

37	9	இன்பம் இடையறா	௩௮௫
37	10	ஆரா இயற்கை	௩௮௭

ஊழியல் ௩௯௧

அதிகாரம் 38 ஊழ் ௩௯௨

38	1	ஆகூழால்	௩௯௪
38	2	பேதைப்	௩௯௭
37	3	நுண்ணிய	௪00
38	4	இருவேறு	௪0௩
38	5	நல்லவை	௪0௫
38	6	பரியினும்	௪0௮
38	7	வகுத்தான்	௪௧௧
38	8	துறப்பார்மன்	௪௧௪
38	9	நன்றாங்கால்	௪௧௬
38	10	ஊழிற் பெருவலி.	௪௧௩

முகவுரை

'சிறப்பு ஈனும் செல்வமும் ஈனும் அறம்' என்பது பாயிர இயலின் முப்பத்தொன்றாம் குறட்பா. 'அறத்தான் வருவதே இன்பம்'. இது அவ்வியலின் முப்பத்தொன்பதாம் குறட்பா. பாயிரமோ நூல் முழுவதிற்கும் பொது. இவ்வதிகாரம் அறத்துப் பாலுக்குச் சிறப்பானது.

குறள் கூறும் அறமோ இல்லறம் துறவறம் என இருவகைப்படும். அதன் பயனாகிய இன்பமும் சிற்றின்பம், பேரின்பம் என இருவகைப் படும். இல்லறத்தில் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் இன்பம் அது. அறிகின்ற அப்பொழுதைக்கு அன்றிப் பின்னர் அறியப் படாமையின் சிறிது பொழுது நிலைக்கும் இன்பமாய்ச் சிற்றின்பம் எனப்பட்டது. அங்ஙனமே இல்லறத்து ஈகையான் வரும் ஈத்துவக்கும் இன்பம் என்ற மற்றொன்றும், இரப்பார் இன்முகத்தைக் காணும் வரை இன்பமாவதில்லை. இன்முகத்தைக் கண்டபின்னரும் புகழாய்ச் சில காலம் பேசப்பெற்று மறையும்; புண்ணியமாய் இறந்தவன் உயிரை ஒட்டி நின்று வரும் பிறவிக்கு வாழ்வளிப்பதாய்ப் பயன்தந்து மறையும். எப்படியோ இருவகையான இல்லற இன்பங்களும் சிற்றின் பங்களே. துறவறத்தில் விளையும் இன்பமோ உண்மையறிவானந்த வடிவான ஒன்றைப் பற்றி நின்று சாவா மூவாப் பேரின்பமாக இயல் பாக எய்தப் பெறுவது. இவையிரண்டும் தம்முள் இயைபு இல்லன போலவும் எதிரானவை போலவுங் கூடத்தோன்றலாம். உள்ளத்தால் ஓர்த்துணரின் சிற்றின்பத்தைத் தரும் இல்லறமே பேரின்ப மாளிகைக்கு ஏறும் ஏணியாவதையும் கண்டின்புறலாம். 'அளவுக்கு மிஞ்சின் அமுதமும் நஞ்சாதல்' போல, உண்ட ஒரு கணத்தின் பின், இனிப்பும் புளிப்பாதல்போலச் சிற்றின்பம் சில நாளைக்குள் கசந்து போதலுங் கூடும். கருவி கரணங்கள் செயலற்றுப் போவதால் தூங்கினவன் கைவிசிறி போலத் தானே நழுவி விடுதலும் கூடும். அப்போது 'ஓர்த்து உள்ளம் உள்ளது உணர்ந்து, பேர்த்தும் பிறப்பு வேண்டாத பேரின்ப வாழ்வையடைதலுங்கூடும்.' அதனாலேயே வள்ளுவர்பெருமான் அறன்வலியுறுத்தலில் இருவகையறங்களையும் இருவகை இன்பங்களையும் இணைத்தே பேசுகிறார்.

இல்லறம் பள்ளிப்படிப்பு; துறவறம் மேனிலைப்படிப்பு. மேனிலைப் படிப்பில் கருத்துக் கொள்முதலும் உண்டு; கொண்ட கருத்தை ஏதுக்களாலும் எடுத்துக்காட்டுக்களாலும் ஆய்ந்து தெளிந்து தமதாக்கி மகிழும் இன்பநுகர்ச்சியும் உண்டு. ஆகவே இல்லறமும் துறவறமும் என்றும் இயைபுடையனவே. இல்லறத்தின் பின் இயற்றப்படுவது தான் துறவறம். இதுதான் தமிழ்மரபு; இதனாலேயே பாயிரத்து அறன் வலியுறுத்தலில் இரண்டையும் இணைத்தே வலியுறுத்துகிறார் வள்ளுவர். வடமொழி நூல்கள் கூறும் பிரமச்சரியமாகிய முதல் நிலைமை இல்லறத்தின் முதற்படியாய் இல்லறத்திலும், வானப் பிரத்தமாகிய காடுறை நிலையைத் துறவின் முதற்படியாய்த் துறவறத்திலும் அடக்கி நிலை இரண்டே என்பது தமிழ்மரபு. இவற்றையே வள்ளுவர் வகுத்துரைக்கின்றனர்.

அங்ஙனம் இருந்தும் 'வேண்டின் உண்டாகத் துறக்க' என்ற பகுதிக்கு இவ்வுலகில் அடையத்தக்க இன்பங்கள் பலவாதலின் காலம் உண்டாகவே அதாவது இளமையிலே துறக்க' எனப் பரிமேலழகர் உரைப்பர். மிருதிநூல்களும், 'நரைவரும் என்றெண்ணி நல்லறிவாளர், குழவியிடத்தே துறந்தார்' என்ற நாலடியார் மரபும் பரிமேலழகர் மனத்துக் குடிபுகுந்தமையின் இங்ஙனம் கூறினாராயிற்று.

> ''காமஞ்சான்ற கடைக் கோட்காலை
> ஏமஞ்சான்ற மக்களொடு துவன்றி
> அறம்புரி சுற்ற மொடு கிழவனும் கிழத்தியும்
> சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே.'' (தொல். சூ. 1138)

என்ற தொல்காப்பியனார் சொற்கொண்டு துணியலாம். ஆதலால் இல்லறத்தின் வளர்ச்சியும் முதிர்ச்சியுமே துறவு என்பது வள்ளுவர் கருத்தாதல் தெளிவு. இல்லறம் காய்நிலை; துறவறம் கனிநிலை. காய்முற்றின் இன் தீங்கனியாம் என்று பயிலும் நம்மையுங் கருதச் செய்கிறார், பின்பற்றச் சொல்கிறார். இம்முடிவை நன்கு துணிய இல்லறவியல் துறவறவியல் இரண்டையும் முற்ற எண்ணி, இணைத்தறிதல் எளிதாமாயினும் விரிவஞ்சிச் சிலவற்றையே நோக்கி அமையலாமே.

இல்லறவியலின் அன்புடைமையே முளைத்து முதிர்ந்து விருந்தோம்பல் ஒப்புரவு, ஈகைகளாற் படர்ந்து, துறவில் அருளுடைமை ஆகிறது. இதனையே வள்ளுவர் ''அருளென்னும் அன்பீன்குழவி'' என அணிநலங் கலந்து நம் மனப்புலத்து நிலைக்க வைக்கிறார்.

அங்ஙனமே இல்லறவியலில், பிறன்பொருளை வெளவக் கருதாமை யாக மனநிலையாக இருந்த வெஃகாமை துறவறவியலில் கள்ளாமை எனச் செயலாக வளர்ந்ததைக் கண்டு அதனைத்தடுத்துரைக்கின்றார். இதனை உற்றுணர்ந்த பரிமேலழகர் 'சிந்தனை தோன்றித்தானே செயலாகிறது.' ஆதலால், இதனையும் 'கூர்முள் வேலைமுளையிலே களையின் அல்லால், செயிர்வரவயிர்த்த போது களைய முடியாதே' என எண்ணிக் கள்ளாமை கள்ளக் கருதாமை' என உரை காண்பர்.

இல்லறத்தான் இயல்பும், காணும் பயனும் சிற்றின்பந்துய்த்தல் தானே. அதனை நூன் முறைப்படி துய்க்கக் கருதிக் காமநூலைப் படித்துப் பேராசைகொண்டு 'பிறன் மனைவியைத் துய்த்தலும் இன்ப வாயில்தானே! எனத் துணிவதைத் தடுத்தாட் கொள்ளக் கருதிய வள்ளுவனார் அவன்மன நிலைக்கும் அறிவுக்கும் ஏற்ப, அப்பா தம்பி! நீ அறனியலான் இல்வாழ்பவன் அல்லனா! நீ பிறன்இயலாள் பெண்மை நயவாமை நன்று' என இதமான முறையில் பிறன்மனை நயவாமையைக் கூறும் வள்ளுவர், துறவறவியலில் 'நீ மிக்க காமத்து வேட்கை தீர்ந்து துறந்தவன்; இந்நிலையில் நீ உன் மனைவியையும் காமக் கருவியாகக் கருதவே கூடாதே! இது உன் நிலைக்குக் கூடவே கூடாத ஒழுக்கம் ஆமே; இந்நிலையில் பிறன்மனையை நயப்பதோ தவமறைந்து அல்லவை செய்தல். இது வேட்டுவன் புதல்மறைந்து பறவைகளைக் கண்ணிவைத்துப் பிடிப்பதுபோலாம்; உன் மனத்தைக் கட்டுப்படுத்தி ஒழுகநினைக்கும் வலிமையின்மையால் துறவின் வேடம் பூண்டு இங்ஙனம் நேர்மையற்ற செயல்களைச் செய்வது பசு புலித் தோலைப் போர்த்திக் கொண்டு அயலான் வயலில் பயிரை மேய்வது போலாம். ஆகவே சிற்றின்பத்தைச் சிந்திக்காதே! சிறிதும் சிந்திக் காதே! இதுகூடவே கூடாத ஒழுக்கம்;உலகம் பழிக்கும் என வன்மை யாகக் கண்டிக்கிறார். மற்றொன்று; சில தீயகுணங்களை அதனொடி ணைந்தியங்கும் ஒன்றோடிணைத்துச் சொன்னதோடமையாது விதந்து தனியே கூறியும் வற்புறுத்துவார்.

புலால் உண்ணாமையை வலியுறுத்தும் வள்ளுவர் உணவால் உணர்வு மாறுவதை எண்ணி 'ஒன்றன் உடல் சுவையுண்டார்மனம், படை கொண்டார் நெஞ்சம் போல் நன்றூக்காது' எனக்கூறுபவர் புலால் உண்பவர் மனப்புலத்து அருள் தோன்றாது, என அருளுடைமைக்கு அரண் செய்கின்றார்.

மேலும் இவ்வதிகாரத்திலேயே 'கொல்லான்புலாலை மறுத்தானை' எனவும் 'அருள் யாதெனிற் கொல்லாமை'; 'அல்லது யாதெனிற் கோறல்;'அவ்வூன் தினல் பொருளல்லது' எனவும், 'உலகுதினற் பொருட்டாற் கொல்லாது எனின், விலைப் பொருட்டால் ஊன்தருவா

ரும் இல் எனவும், கொல்லான்புலால் மறுத்தானை எல்லாவுயிரும் கை கூப்பித்தொழும்' எனவும் புலால் மறுத்தலிலே ஐந்து இடங்களில் கொல்லாமையை வலியுறுத்துகிறவர் அவ்வளவில் அமையாது. மேலும் கொல்லாமையைத் தனியேயும் வலியுறுத்துவர். உலகநடையில் பொய் களவு-இன்னா செய்தல், வெகுளி முதலியவற்றானும் கொலைநிகழும் ஆதலின் அவற்றை முறையே முன்னர் நீக்கிக் கொல்லாமையை இறுதியாக வலியுறுத்துவர்.

இங்ஙனம் துறவும் துறவியலும் இல்லறவியலின் வழிவளர்ந்து, தமிழ் மரபு பிறழாத இயைபுடன், விளங்குவதைக் காணலாம். ஆதலால், துறவற இயலும், அதனையடுத்த ஊழும் வழக்கம்போல உரைக் களஞ்சியமாக, உரைகள், விளக்கங்கள், ஒப்புமைப் பகுதி, மேற்கோட் பகுதி சற்றேறக்குறைய முப்பதுக்கு மேற்பட்ட உரை, உரை விளக்கக் குறிப்புகள் இவை தொகுப்பும் குறிப்புமாக இணைந்து களஞ்சியமாகிக் கவின்பெற மதுரைக் காமராசர் பல்கலைக்கழகப் பதிப்புத்துறை வாயிலாக வெளி வருகிறது.

இப்பணி வளர்ந்து மலர ஏடுகள், பழைய கட்டுரைத்தாள்கள், ஆய்வு மலர்கள் தந்துதவிய, பேரூர் சாந்தலிங்க அடிகளார் தமிழ்க்கல்லூரித் தாளாளர் சிவத்திரு இராமசாமி அடியார் அவர்களுக்கும் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி செங்கோட்டுவேலன் அவர்கட்கும் செந்தமிழ், செந்தமிழ்ச்செல்வி, வள்ளுவர், குறளியம் போன்ற தாள்களின் தாளாளர்கள் பலருக்கும் என்னுடைய பணிவான நன்றி என்றும் உரியதாகும்.

இப்பணியில் என்னை ஈடுபடுத்திய முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சை. வே. சிட்டிபாபு அவர்களுக்கும் வழிவழித்துணைவேந்தர்களான டாக்டர் வ. சுப. மாணிக்கம் அவர்களுக்கும், டாக்டர் வா.செ.குழந்தைசாமி அவர்கட்கும், பேராசிரியர் ஜா. இராமச்சந்திரன் அவர்களுக்கும், இந்நாள்துணைவேந்தர், விஞ்ஞானக் கலைவேந்தர், கல்வியுலகிலும் சமுதாய சமயப்பணிகளிலும் பேராதரவு காட்டிவரும் டாக்டர் சீனி. கிருட்டிணசாமி அவர்களுக்கும் மனநிறைந்த நன்றி. வழக்கம்போல உரைக்களஞ்சியம் சிறப்புடன் வரப் பல்லாற்றானும் வழிதுறைகளை வகுத்துக் கொடுத்து ஊக்கம் தந்துதவும் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் தமிழண்ணல் அவர்களுக்கும் நன்றி. உற்றுழி உதவியுறுதுணையாக இருக்கும் திருக்குறள் ஆய்வுத்துறைத் தலைவர் டாக்டர் தி. முருகரத்தனம் அவர்களுக்கும் நன்றி. அயரா அன்போடு படியெடுத்தும், ஒப்பு நோக்கியும், மேற்கோட்பகுதி ஒப்புமைப் பகுதிகளை மூல நூலோடு ஒப்புநோக்கிச் செப்பனிட்டும், தந்த ஆய்வுத்துறை உதவியாளர் திருமதி சலசாகோபிநாத் எம்.ஏ.

அவர்களுடைய முழுநேர உழைப்பும் உதவியும் பாராட்டிற்குரியன. இவர்மேன்மேலும் இத்தகைய பணிகளில் வளர்ந்து தமிழன்னையின் அருளுக்கு இலக்காகி வாழ்வாராக.

அச்சுப்படியை ஒப்புநோக்கிப் பதிப்புக்காலத்து உடனிருந்து கண்காணித்து வரும் ஓய்வுபெற்ற *தமிழாசிரியர் இராம. வரதராசனார்* அவர்கட்கும் நன்றி

பதிப்புமுறை, கட்டு, முகப்பு, அனைத்திலும் சிறப்பு விளங்கப்பதித்துத் தரும் பதிப்புத்துறைத் தலைவர் டாக்டர் உயர்திரு கதிர் மகாதேவன் அவர்களுக்கும் என் நன்றி என்றும் உரியதாகும். காண்பவர் கருத்துட் பதிய மிகச்சீரிய முறையில் அச்சிட்டுத் தரும் அகரம் அச்சக உரிமையாளர் கவிஞர் தமிழ்ப் பேராசிரியர் உயர்திரு மீரா அவர்களுக்கும் நன்றி.

பல ஆண்டு உழைத்த உழைப்பும், அமைப்பாளர் குழு தந்த ஆணையின் வண்ணம் உருவாக்கிய அருமையும், அவ்வப்போது செந்தமிழ், செந்தமிழ்ச் செல்வி, தமிழ்ப்பொழில், குறளியம், பல ஆண்டுமலர்கள் விழாமலர்களில் வந்த கட்டுரைகள் இவற்றான் களஞ்சியம் நிரம்பிவழிகிறது. அறிவுப்பசியைப் போக்கி ஆய்வு வன்மையை அளிக்கிறது. இதில் நிறை குறைகண்டு காட்டுபவர்களே இந்நூலை ஊன்றிப் படித்தவர்கள்; பணியாளன் அறிவைப் பதஞ் செய்பவர்கள்; ஆகையால், குணங்கூறிப் பாராட்டுவானினும், குறை கூறி என்னை வளர்ப்பவர்களே 'எண்ணின் எனக்கினிய'ராவார். ஆதலால் அவர்கள் உதவி இப்பதிப்பு முடியும் வரையில் எனக்கு மிகத் தேவை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். என்றும் செந்தமிழ்ச் சொக்கலிங்கப் பெருமான் திருவருள் துணை நிற்கும். விரைவில் உரைக் களஞ்சியம் முற்றுப் பெற்று நிறைவு விழாப்பெறும், என்று எதிர்நோக்கி அங்கயற் கண்ணியம்மையின் திருவடிகளைப் போற்றி அமைகின்றேன்.

இங்ஙனம்
ச. தண்டபாணி தேசிகர்.

சுருக்க விளக்கம்

I. ஆசிரியர்கள்

அடியார்.	அடியார்க்கு நல்லார்
இராம.	நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை
இராமா.	இராமாநுசக்கவிராயர்
இளம்.	இளம்பூரணர்
உ. வே. சா.	உ.வே. சாமிநாத ஐயர்
கவிராசர்	கவிராச பண்டிதர்
கா. சு.	கா. சுப்பிரமணியபிள்ளை
காரிதகாரிரத்ன.	காரிரத்ன கவிராயர்
காளி.	காளிங்கர்
குணசா.	குணசாகரர்
குழந்தை.	புலவர் குழந்தை
கோ. வ.	கோ. வடிவேலு செட்டியார்
சங்கர.	சங்கரநமச்சிவாயர்
சி. இ.	சி. இலக்குவனார்
சிவஞான.	சிவஞான சுவாமிகள்
சுப்பிரமணிய.	சுப்பிரமணிய தீட்சதர்
சுவாமிநாத.	சுவாமிநாத தேசிகர்
சொ. த.	நாகை சொ. தண்டபாணியார்
தெய்வச்.	தெய்வச்சிலையார்
தேவநேயர்	தேவநேயப்பாவாணர்

நச்சி. & நச்சர்.	நச்சினார்க்கினியர்
பரிதி.	பரிதியார்
பரிப்.	பரிப்பெருமாள்
பரிமே.	பரிமேலழகர்
பழைய 2	பழைய உரை 2
பி. சா. சு.	பி.சா. சுப்பிரமணிய சாஸ்திரி
பெருந்.	பெருந்தேவனார்
பேரா.	பேராசிரியர்
மணக்	மணக்குடவர்
மயிலை.	மயிலைநாதர்
மு. கோ.	மு. கோவிந்தசாமி
மு. ரா. அ.	மு.ரா. அருணாசலக் கவிராயர்
மு. வ.	மு. வரதராசனார்
வ.உ.சி.	வ.உ. சிதம்பரம் பிள்ளை
வெள்ளி.	வெள்ளியம்பலவாணர்
வைத்தியநாத,	வைத்தியநாத தேசிகர்
ஜி. வரத.	ஜி. வரதராஜபிள்ளை.

2. *நூல்கள்:*

அக.விள.	அகப்பொருள் விளக்கம்
அகநா.	அகநானூறு
அப்பர்.	அப்பர் தேவாரம்
அப்பர். பொது.	அப்பர் பொதுப் பதிகங்கள்
பதி.	பதிகங்கள்
அறநெறி	அறநெறிச்சாரம்
இலிங்க.	இலிங்கபுராணம்
இறை.	இறையனார் அகப்பொருள்
இன்னா.	இன்னா நாற்பது
இனியவை.	இனியவை நாற்பது
உத்தர.	உத்தர ராமாயணம்
உதயண. & உத.	உதயண குமாரகாவியம்
கந்த.	கந்த புராணம்
கம்பராமா.	கம்பராமாயணம்
அரசியல்	அரசியற்படலம்
காட்சிப்.	காட்சிப்படலம்
கிட்கிந்,	கிட்கிந்தா காண்டம்
கும்ப. வதை.	கும்பகர்ணன்வதைப் படலம்
இந்திரசித்து	இந்திரசித்துப்படலம்

நிந்தனை.	நிந்தனைப்படலம்
மந்திரப்.	மந்திரப்படலம்
மாரீசன்,	மாரீசன்வதைப்படலம்
கலி.	கலித்தொகை
குண்டல.	குண்டலகேசி
குறுந்.	குறுந்தொகை
கொன்றை.	கொன்றை வேந்தன்
கோயில் நான்மணி.	கோயில் நான்மணிமாலை
சம்பந்தர்.	சம்பந்தர் தேவாரம்
தேவூர்	திருத்தேவூர்
மணஞ்சேரி	திருமணஞ்சேரி
சாய்க்காடு	திருச்சாய்க்காடு
கோழம்பம்	திருக்கோழம்பம்
குரங்கணில்	திருக்குரங்கணில் முட்டம்
அறையணிநல்லூர்	திருஅறையணிநல்லூர்
சிறுகுடி	திருச்சிறுகுடி
சித்தி. பரபக். செய்	சித்தியார் பரபக்கம் செய்யுள்
சிலம்பு. & சிலப்.	சிலப்பதிகாரம்
சிலம்பு. பதி.	சிலப்பதிகாரம் பதிகம்
இந்திர.	இந்திரவிழாவூர் எடுத்த காதை
காடுகாண்	காடுகாண் காதை
நாடுகாண்	நாடுகாண் காதை
சிவஞானபோ.	சிவஞானபோதம்
சிறுபஞ்ச,	சிறுபஞ்சமூலம்
சீவக,	சீவகசிந்தாமணி
சீவக முத்தி,	சீவகசிந்தாமணி முத்தியிலம்பகம்
சுக்கிர,	சுக்கிரநீதி
சுந்தரர்	சுந்தரர் தேவாரம்
ஆரூர்	திருவாரூர்
கழிப்பாலை	திருக்கழிப்பாலை
துறையூர்	திருத்துறையூர்
திருக்கே,	திருக்கேதாரம்
நெல்வாயில்	திருநெல்வாயில் அரத்துறை
கோவலூர்	திருக்கோத்திட்டையும் திருக்கோவலூரும்
சூளா,	சூளாமணி
சூளா, துறவு	சூளாமணி துறவுச் சருக்கம்
தண்டி,	தண்டியலங்காரம்
திரி.	திரிகடுகம்

திருக்கலம்ப,	திருக்கலம்பகம்
திருக்களிற்றுப்	திருக்களிற்றுப்படியார்
திருச்சந்த,	திருச்சந்த விருத்தம்
திருமந்,	திருமந்திரம்
திருமுருகு,	திருமுருகாற்றுப்படை
திருவாசக,பிரார்த்தனை.	திருவாசகம், பிரார்த்தனைப் பத்து
திருவாய்.	திருவாய்மொழி
திருவிளை.	திருவிளையாடற்புராணம்
தொல்.	தொல்காப்பியம்
நற்.	நற்றிணை நானூறு
நன்.	நன்னூல்
நாலடி.	நாலடியார்
நான்மணி.	நான்மணிக்கடிகை
நீதிநெறி,	நீதிநெறி விளக்கம்
நீல.	நீலகேசி
நெஞ்.	நெஞ்சறிவுறுத்தல்
நெஞ்சுவிடு.	நெஞ்சுவிடுதூது
நேமி	நேமிநாதம்
பதிற்றுப், பதிற்.	பதிற்றுப்பத்து
பரிபா.	பரிபாடல்
பழமொழி.	பழமொழி நானூறு
பிரமோத்தர	பிரமோத்தர காண்டம்
பிரயோக.	பிரயோகவிவேகம்
புறநா.	புறநானூறு
பெரிய.	பெரியபுராணம்
காரைக்கால்	பெரியபுராணம் காரைக்கால்அம்மையார்
சண்டே	சண்டேசுவர நாயனார்புராணம்
சம்.	திருஞான சம்பந்தர் புராணம்
திருக்கூட்.	திருக்கூட்டச் சிறப்பு
திருநீல.	திருநீலகண்டநாயனார் புராணம்
மூர்த்தி.	மூர்த்திநாயனார் புராணம்
மெய்ப்பொருள்	மெய்ப்பொருள்நாயனார்புராணம்
பெரியாழ், திரு.	பெரியாழ்வார் திருமொழி
பெருங்.	பெருங்கதை
பொருந.	பொருநராற்றுப்படை
மணி.	மணிமேகலை
மணி. பவத்	மணிமேகலை, பவத்திறம் அறுகெனப் பாவைநோற்ற காதை
ஆதிரை.	ஆதிரை பிச்சையிட்ட காதை

மனு.	மனுதர்ம சாத்திரம்
மனோன்.	மனோன்மணீயம்
மாறன்.	மாறனலங்காரம்
முதுமொழி.	முதுமொழிக் காஞ்சி
முத்தி. பேருரை	முத்தி நிச்சயப் பேருரை
மேரு.	மேருமந்திரபுராணம்
யசோதர.	யசோதர காவியம்
யா. கா.	யாப்பருங்கலக்காரிகை
யா. வி. சூ.	யாப்பருங்கலவிருத்தி சூத்திரம்
வளையா.	வளையாபதி
வில்லி.	வில்லிபாரதம்
வீரசோ.	வீரசோழியம்

3. பிற:

அதி.	அதிகாரம்
எழுத்து.	எழுத்ததிகாரம்
செய்யுள்.	செய்யுளியல்
சொல்.	சொல்லதிகாரம்
நூற்.	நூற்பா
பக்.	பக்கம்
புறத்	புறத்திணையியல்
பொருள்.	பொருளதிகாரம்

III. துறவறவியல்

உ) *பரிமேல்*: இனி முறையானே துறவறங்கூறிய தொடங்கினார். துறவறமாவது மேற்கூறிய இல்லறத்தின் வழுவாதொழுகி அறிவுடையராய்ப் பிறப்பினை அஞ்சி வீடுபேற்றின் பொருட்டுத் துறந்தார்க்கு உரித்தாய அறம். அதுதான் வினைமாசு தீர்ந்து அந்தக் கரணங்கள்[1] தூயவாதற் பொருட்டு அவரால் காக்கப்படும் விரதங்களும், அவற்றான் அவை தூயவாயவழி உதிப்பதாய ஞானமும் என இருவகைப்படும்.

விரதம்

அவற்றுள்[2] விரதங்களாவன: இன்னஅறஞ்செய்வல் எனவும்இன்ன பாவம் ஒழிவல் எனவும் தம் ஆற்றலுக்கு ஏற்ப வரைந்து கொள்வன[3]. அவைதாம் வரம்பிலவாகலின்[4] பெருகுமென்று அஞ்சி, அவை தம்முள்ளே பலவற்றையும் அகப்படுத்து நிற்குஞ் சிறப்புடையன சிலவற்றை ஈண்டுக்கூறுவான் தொடங்கி, முதற்கண் அருளுடைமை கூறுகின்றார்.

இராமா: அதாவது, மேலே சொல்லப்பட்ட இல்லறத்திலே தவறாமல் நடந்து, அறிவுடையவராகிப் பிறவித்துன்பத்திற்கு அஞ்சி, மோட்சத்தையடையும் பொருட்டு, உலகப்பற்றுக்களையெல்லாம் வெறுத்துவிட்டவர்க்கு உரித்தாகிய தருமமாம். அந்தத் தருமமானது, தீவினை மாசுதீர்ந்து, அந்தக் கரணங்கள் பரிசுத்தமாகவேண்டிய நிமித்தம் அவராற்காக்கப்படும் விரதங்

---

1 அந்தக்கரணங்கள் - அகக்கருவிகளாகிய மனம், புத்தி, சித்த அகங்காரங்கள்.

2 அவற்றுள் - விரதம், ஞானம் என்னும் இரண்டனுள்.

3 வரைந்து கொள்வன - அளவுபடுத்திக் கொள்வன அல்லது எல்லையிட்டுக் கொள்வன.

4 விரதங்கள் பலவாதலை மனுதரும சாஸ்திரத்திலும், சூதசங்கிதையின் ஞானயோக காண்டத்தில், கழுவாயுரைத்த வத்தியாயத்திலும் பிறவற்றிலுங் காண்க.

களும், அந்த விரதங்களால் அவை பரிசுத்தமானபோது தோன்றுவதாகிய ஞானமுமென இருவகைப்படும். அவற்றுள் விரதங்களாவன, இன்ன தருமஞ்செய்வேனெனவும் இன்ன பாவம் ஒழிவேனெனவும் நம்முடைய சத்திக்குப் பொருந்தும் படி வரையறுத்துக் கொள்ளப்படுவன. அவைதாம் அளவில; ஆதலால், விரிந்துபோமென்று அஞ்சி அவை பலவற்றையும் உள்ளடக்கி நிற்கும் சிறப்புடையனவாகிய சிலவற்றை இங்கே சொல்லத் தொடங்கிவைத்து முதலிலே அருளுடைமை கூறுகின்றார்.

25. அருளுடைமை

அ) *மணக்.:* அருளுடைமையாவது யாதானும் ஓருயிர் இடர்ப் படின்[1] அதற்குத் தன்னுயிர்க்கு உற்ற துன்பத்தினால் வருந்து மாறு போல வருந்தும் ஈரமுடைமை.[2]

ஆ) *பரிதி.:* அருளுடைமையாவது வானப்பிரஸ்தம்.

இ) *பரிப்.:* துறவறமாவது தவமேற் கொண்டொழுகுதல், அது வானப்பிரத்தம் சந்நியாசம் என இரண்டு வகைப்படும். அது கூறப்பட்ட அதிகாரம் பதின்மூன்றினும் வானப்பிரத்தம் அருளுடைமையும், புலான்மறுத்தலும், தவமும் ஓரோவதிகாரத்தானும், அவற்றின்பின் காமம் வெகுளி மயக்கம் மூன்று குற்றத்தினும் காமப்பகுதியாயின தவிர்தல் மூன்றதிகாரத்தானும், வெகுளிப் பகுதியாயின தவிர்தல் மூன்றதிகாரத்தானும், மயக்கந்தவிர்தல் ஓரதிகாரத்தானும், சந்நியாசம், துறவு, மெய்யுணர்தல், அவா வறுத்தல் என்ற மூன்றதிகாரத்தானும் கூறப்பட்டது. அவற்றுள் அருளுடைமையும் புலான் மறுத்தலும் இல்வாழ்வார்க்கும் ஏற்ற தாதலால் அதன்பின்னாகத் தவத்திற்கு முன்னாகக் கூறப்பட்டன.

ஈ) *காளி.:* இனி, மற்று இவ்வில்லறத்தின் பின்னரே துறவறம் அறி விப்பான் எடுத்துக்கொண்டார்; அஃதாவது மேல்வருகின்ற துற வறத்துக்கெல்லாம் முதற்காரணம், ஒருவன் தன்நெஞ்சத்து அருளுடைமையாகலான் அனைத்துயிர்க்கும் ஒப்பநிகழ்வதாகிய அருளில்வழி மற்றவர் செய்யுந் தவம் வஞ்சனையுடைத்தாய், அஞ்சத்தக்கதாகலானும், துறவறம் பூண்பார்க்கு நிறையருள் வேண்டும் என்பதனாலும், அதனை அறிவிக்கின்றது அருளுடைமை என்னும் அதிகாரம்.

உ) *பரிமேல்.:* அஃதாவது தொடர்பு[3] பற்றாது இயல்பாக எல்லா

---

1 இடர்ப்படின் - துன்புறின். 2 ஈரமுடைமை-அருளுடைமை

3 தொடர்பு-மனைவி, மக்கள், பந்து, மித்திரர் முதலியவரைப் பற்றி வரும் சம்பந்தம்.

உயிர்கள் மேலும் செல்வதாகிய கருணை. இல்லறத்திற்கு அன்புடைமை போல இது துறவறத்திற்குச் சிறந்தமையின் முற்கூறப்பட்டது.

இராமா.: அதாவது, காரணகாரியத் தொடர்ச்சி பற்றாமல் இயல்பாகவே யெல்லாவுயிர்கள் மேலுஞ் செல்வதாகிய கருணையுடையவராதல், இல்லறத்திற்கு அன்புடைமை போலத் துறவறத்திற்கு இது சிறந்தமையால் அதுநோக்கி முன் வைக்கப்பட்டது.

ஊ) *கவிராசர்*: இனி துறவறம் சொல்லுகின்றார். துறவறமாவது முன்சொன்ன இல்லறத்தின் வழியே தப்பாமல் நடந்து, அறிவுடையர்களாய்ப் பிறந்துஇறக்கிறதற்குப் பயப்பட்டு மோக்ஷம் பெறுகிறதின் பொருட்டுத் துறக்கிறவர்களுக்கு உரியதான தர்மம். அது கர்மம் கெடுக்கிறதன் பொருட்டு, அவர்களாலே காக்கப்பட்ட விரதம். அது 'இன்னதர்மம் செய்யவேண்டும்' என்றும், 'இன்ன பாபம் செய்யாமல் இருக்கவேண்டும்' என்றுமாம். அந்த விரதங்களாலே ஞானம் உண்டாய் வீடுபெறலாம். அந்த விரதங்கள் அனேகமாதலின் அவற்றிலே சிறப்புடையன சிறிது எடுத்துக் கொண்டு, முதலில் அருளுடைமை கூறுகின்றார். அருளாவது ஒருவர் இடத்திலேயும் ஆசை வையாமல் எல்லா ஜீவன்களிடத்திலேயும் ஸ்வபாவமாக உண்டாகிய கருணை. இல்லறத்தின்கண் அன்புடைமை போலத் துறவறத்தினுக்கு அருளுடைமை பெரியதாதலால் முன்னே சொல்லப்பட்டது.

ஏ) *பழைய 2*: அஃதாவது தொடர்ச்சி பற்றாது இயல்பாக எல்லா உயிர்கள் மேலும் மனம் செல்லும் கருணை எனக் கொள்க. இல்லறத்துக்கு அன்புடைமையும் துறவறத்துக்கு அருளுடைமையும் முதலுறுப்பு என்கிறது.

மல்லர்: அதாவது எல்லாவுயிர்கள்மேலே தயையுடையவனாய் இருக்கிறது.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

துறவற இயலுக்கு வரைவிலக்கணம் தருபவர்கள், பரிமேலழகரும் தண்டபாணியாரும் இராமலிங்கரும் ஆகியமூவர். இப்பகுதியிலேயே 'துறவு, விரதம், ஞானம் என இருவகைப்படும்' என வகையும் கூறுவர் *பரிமேலழகரும் தண்டபாணியாரும்*. *பரிப்பெருமாள்*, 'துறவு தவமேற்கொண்டொழுகுதல்' எனக்கூறி, 'அது வானப்பிரத்தம் சந்நியாசம் என இருவகைப்படும்' என்பர். மேலும் 'வானப்பிரத்தம் இவ்வியலிற் கூறப்படும் முதன் மூன்றதிகாரங்

களானும் தவப்பகுதியான காமவெகுளிகளைக் கடிதலைமும்மூன்றதிகாரங்களானும், மயக்கறுத்தலை ஓரதிகாரத்தானும் கூறினார்' என்பர். மற்றும் 'அருளுடைமையும் புலான்மறுத்தலும் துறவிகட்கேயன்றி இல்லறத்தார்க்கும் உரிய அறமாதலின் இல்லற இயலையடுத்து முதற்கூறினார்' என்பர். இப்பகுதி துறவுக்கும் அதன் அதிகாரங்களுக்கும் இயைபு கூறுவதாகும்.

காளிங்கர், பரிமேலழகர் கருத்திற்கிணங்க 'இல்லறத்தின் பின்னரே துறவறம் கூறுகிறார் ஆசிரியர்' என்றும், 'துறவுக்கு அருளுடைமையே இன்றியமையாத காரணமாகும்' என்றும் இரண்டு ஏதுக்களைக் கூறியமைவர்.

கவிராசபண்டிதரும், பழையஉரை 2ன் ஆசிரியரும் *பரிமேலழகரை* ஒட்டித் துறவின் இலக்கணமும், அதன் வகையும் கூறுவர்.

தேவநேயனார் 'இல்லற இன்பத்தைத் துய்த்தும் துய்க்காமலும் உலக வாழ்க்கையில் அல்லது பிறவியான் விளையும் துன்பத்தில் வெறுத்தும், வீடு பேறாகிய பேரின்பத்துய்ப்பில் நாட்டங்கொண்டு பிரமசரிய நிலையிலோ அல்லது இல்லறநிலை தபுதாரநிலை, மூப்புநிலையிலோ துறந்து அதற்குரிய அறங்களின் ஒழுகி, யான் எனதென்னும் செருக்கற்றுப் பிறப்பினின்று விடுதலை பெறுவது' என்பர். மேலும், 'இல்லறத்தாலும் வீடு பேறடையலாமாயினும் இல்லறத்தார்க்குப் பொறுப்பு மிகுதியாதலானும், பொறுப்புக்கள் பற்றினை வளர்க்க இடந்தருதலானும், பொறுப்பேற்கவும் ஆசையறுக்கவும் ஆற்றலில்லாதார், தனிவாழ்வு விரும்பித் துறவு பூண்டார்' எனப் புதியதொரு காரணம் விதப்பர்.

'துறவியற்குரிய அறப்பாகுபாடுகளை அறம்—பத்தாகவும், பயிற்சி-தவமும் மெய்யுணர்வும் என இரண்டாகவும் பகுத்து, இவையனைத்தும் அருள் தவம் துறவு ஓவம்(யோகம்) என்னும் நான்கனுள் அடங்கும்; இவைகளே நான்குவாயில்கள், இவற்றுள் அறப்பகுதியுட் சிலவும் பயிற்சியில் தவமும் இல்லறத்தார்க்கும் உரியவாயினும் அவராற் கடைபோகச் செய்யமாட்டாமையான், துறவறம் இரண்டானும் வீடுபேறுகிட்டுவதாம்' என முடிவு கூறுவர்.

தண்டபாணியார், பரிமேலழகரை ஒட்டியே வரைவிலக்கணம் எழுதித் 'துறவு என்பது புலன்களை வென்றடக்கிய வெற்றி நிலையாதலின், வாகைத்திணைப் பாற்படும். இவ்வெற்றி, அருளுடைமையோடு கூடி எய்தப் பெறுவதொன்றாதலின் அருளுடைமை முதலாகக் கூறப்பட்டது; ஆசிரியர் *தொல்காப்பியர்* ''அருளொடு புணர்ந்த அகற்சியானும்'' (தொல். பொருள். புறத். 21) என்றதும் காண்க' என்பர்.

இராமலிங்கனார் 'துறவறம் என்பது மனைவி மக்கள், வீடு வாசல், உற்றார் உறவினர் என்ற பற்றுக்களை நீக்கி இறைவனை நாடுவதில் ஈடுபடுதல். இத்துறவறம் வேண்டியதில்லை என்பதே வள்ளுவர் வாக்கு. ஆதலால் பெரும்பாலான மக்கள் மேற்கொள்ள வேண்டியது இல்லறமாதலால்' அதனை முன்கூறிச் சிறுபான்மையினர் கொள்ளுதலின் துறவறத்தைப் பின்வைத்தார் என்றும், துறவுக்கு இல்லறத்தை முடித்துக் கொண்டும் போகலாம்; இடையில் விட்டும் போகலாம்; இல்லறத்தில் ஈடுபடாமல் இளமையிலேயே போகலாம்' என *மணக்குடவர்*, *காளிங்கர்*, *பரிமேலழகர்*, *தண்டபாணியார்* முதலியவர்களை மறுப்பர்.

குழந்தை, 'துறவறமாவது இல்லறத்தை இனிது நடத்தி ஒழுக்கத்து நீத்தார் ஒழுகும் ஒழுக்கம்; இல்லற இன்பத்தைத்துறந்து தம் இல்லிருந்தே பொதுநலம் செய்வதும் துறவறமாம்' என்பர். இவையனைத்தும் துறவற இயலுக்கு உரை ஆசிரியர்கள் கூறும் பலவேறு கருத்துரைகள்.

இவற்றுள் *பரிப்பெருமாள்* 'துறவென்பது தவமேற்கொண்டொழுகுதல்' என்றாராயினும் துறவுக்குரிய ஒழுக்கங்களாக *வள்ளுவர்* கூறுவனவற்றுள் தவம் ஒன்றாமேயன்றி அதுவே துறவாகாதாகலின் இவ்வுரை சிந்தனைக்குரியதாம்.

காளிங்கர் 'இல்லறத்தின்பின்னரே துறவறம் அறிவிப்பான் எடுத்துக் கொண்டார்' என்பதால் துறவறம் பின்வைப்பதற்குக் காரணம் கூறினாரேயன்றிப் *பரிமேலழகரையும்* அவரைப் பின்பற்றிய ஏனோரையும் போல 'இல்லறத்தின் வழுவாதொழுகிப் பிறப்பிற்கு அஞ்சி, வீடுபேறெய்துதற்காகத் துறந்தார்க்குரிய அறம் என இல்லறம் பயின்ற பின்னரே துறவறம் மேற்கொள்ளுதற்குரியது' என்னும் பொருள் தோன்றக் கூறினாரல்லர்.

பழந்தமிழர் மரபு ''காமஞ்சான்ற கடைக்கோட்காலை, ஏமஞ்சான்றமக்களொடுதுவன்றி, அறம்புரிசுற்றமொடு கிழவனும் கிழத்தியும் சிறந்தது பயிற்றல் ஆதலானும்'' (தொல். பொருள். நூற். 190) ''மக்களொடுதுவன்றி மனையறங்காத்து மிக்ககாமத்து வேட்கைதீர்ந்துழி தலைவனும் தலைவியும் தம் பதிநீங்கித் தொலைவில் சுற்றமொடு துறவறம் காப்ப'' (அக. விளக்க- நூற். 116) ஆதலானும் இல்லறத்தின் வழியதே துறவறமாதல் தெளிவு. நரைவரும் என்றுஎண்ணி நல்லறிவாளர் குழவியிடத்தே துறத்தல் சமணமரபாதல் காண்க.

வள்ளுவர், 'புறத்தாற்றிற் போய்ப் பெறுவதெவன்' என்றும் 'இல்வாழக்கை நோற்பாரின்நோன்மையுடைத்து' என்றும் கூறிய

தால், துறவே வேண்டாம் இல்லறமே வீடுபேற்றையும் வழங்கும் என்றாராலோ எனின் 'புறத்தாற்றின் போய்ப் பெறுவதெவன்' என்பது வீடுபேற்றையே குறிக்கும் எனல் சாலாமையானும், 'நோற்பாரின்' என்பது வீடுபெற முயல்வாரையன்றித் துறவிகளைக் குறியாமையானும் வள்ளுவர் கருத்து அஃதன்மை தெளிந்து, இல்லறத்தை வலியுறுத்தி, அதன் வழியாகத் துறத்தலையே வள்ளுவரும் கருதுகிறார் என்பதை வானோர்க்கு உயர்ந்த உலகம் புகுதற்குரியவர்கள் துறவிகளே என்றதாலும் அறியலாம்.

அன்றியும் 'அருளென்னும் அன்பீன் குழவி' என்றதால் இல்லறத்திற்குரிய அன்பு தோன்றாத வழி அதன் முதிர்ச்சியாகிய துறவிக்குரியதாகிய அருள் தோன்றுதற்கிடமின்மையின் இல்லறவழித்தாகியே துறவு தோன்றற்குரியதாதல் தெளிவாம்.

'இன்ன அறம் செய்வல் எனவும் இன்ன பாவம் ஒழிவல் எனவும் தம் ஆற்றலுக்கு ஏற்ப வரைந்து கொள்வன. அவை பலவாதலால் அவற்றுள் சிறந்தன சிலவற்றுள் அருளுடைமை முதற்கூறப் பட்டது' என்பர் *பரிமேலழகர்*. இன்னபாவம் ஒழிவல் என விரதம் பூண்பானாயின் ஏனையபாவங்களைச் செய்யலாம் என்றாதலின் அவற்றான் இவனறிவு கலங்குதல் உறுதியாதலானும் இக்குறிப்பு இன்ன அறம் செய்வல் எனவும் பிறபாவங்களனைத்தையும்ஒழிவல் எனவும் என்றிருத்தல் நலம்.

அருளுடைமை மணக். கருதுவது 'யாதானும் ஓர்காரணத்தான் பிறவுயிர்கள் படுந்துன்பத்தையும், தனக்குற்றதுபோல வருந்தும் ஈரமுடைமை என்பது'. 'வானப்பிரத்தம்' என்பர் *பரிதி*.

வள்ளுவர் பிரமசரியத்தையும் வானப்பிரத்தத்தையும் யாண்டுங் குறித்திலர், தொல். பொருள். 190-ஆம் நூற்பா காமம் நிறைந்த கடைநாட் காலத்துச் சுற்றமொடு கிழவனும் கிழத்தியும் சிறந்தது பயிற்றலையும், அகப்பொருள் 116-ஆம் நூற்பா தலைவனும் தலைவியும் தம்பதி நீங்கிச் சுற்றமொடு துறவறங் காத்தலையும் குறிப்பன என முன்னரே கூறியது காண்க. ஆதலால், வானப் பிரத்தம் என்னும் பரிப்பெருமாள் கூற்று ஏற்புடையதாகாது எனக் கருதலாம். பெண்களுக்குத் துறவுமில்லை; வீடுபேறுமில்லை என்ற மிருதி மரபுக்கும் மாறாதலின், பரிதியுரை பொருந்தாது எனலாம்.

25.1. அருட்செல்வஞ் செல்வத்துள் செல்வம்
பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள. (௨௪௧)

உரைப்பகுதி:

அ) *மணக்.*: செல்வத்துள் வைத்துச் செல்வமாவது அருளுடைமை யாகிய செல்வமாம்; பொருட்செல்வமானது கீழாயினோர்மாட்டும் உளவாதலால் என்றவாறு.

இஃது அருள்நிலை கூறிற்று.

ஆ) *பரிதி.*: செல்வமாவது, மெய் வாய் கண் மூக்குச் செவி என்க; இதிற் பெரிய செல்வம் அருட்செல்வம் என்க. பொருட்செல்வம் அறிவிலாதவரிடத்தும் உண்டென்று அறிக என்றவாறு.

ஈ) *காளி.*: பொருளாகிய செல்வம் உலகத்து, குல மக்கட்கும் மற்றறிவுடையோர்க்கும் அறிவுகேடர்க்கும் ஒப்பதாக வந்து எய்து மாதலால், மற்றிது சிற்றின்பம் பயக்குமதுவே யாதலால், கற்றுணர்ந்தோர் இதனைச் செல்வம் என்று கருதார்; இனி அருட் செல்வமானது அளவிறந்த இன்பம் பயப்பதொன்றாதலான் இதனை என்றும் அழியாத செல்வம் என்று கொள்வர் அறிவுடையோர் என்றவாறு.

உ) *பரிமேல்.*: செல்வங்கள் பலவற்றுள்ளும் ஆராய்ந்து எடுக்கப் பட்ட செல்வமாவது அருளான் வரும் செல்வம்; அஃது ஒழிந்த பொருளான் வருஞ் செல்வங்கள்[1] இழிந்தார்கண்ணும் உளவாம் ஆகலான்.

அருளான்வரும் செல்வமாவது உயிர்களை ஓம்பி அவ்வறத் தான் மேம்படுதல், உயர்ந்தார்கண்ணேயல்லது இல்லாத அருட் செல்வமே சிறப்புடைய செல்வம்; ஏனை நீசர்கண்ணும்[2] உளவாம் பொருட்செல்வங்கள் சிறப்பில என்பதாம்,

இராமா.: செல்வத்துட்செல்வம்- செல்வங்கள் பலவற்றுள்ளும் ஆராய்ந்தெடுக்கப்பட்ட செல்வமாவது, அருட்செல்வம்- அருள் காரணமாகத் தோன்றுஞ் செல்வமாம், (அதுதவிர்ந்த)பொருட் செல்வம்-பொருள் காரணமாக வருஞ்செல்வங்கள், பூரியார் கண்ணுமுள-கீழ் மக்களிடத்துமுண்டாமாதலால், என்றவாறு.

1 பொருளான் வரும் செல்வம்-உண்டி, உடை, உறையுள், விளைநிலம், ஏவல் முதலியன.

2 நீசர்கண்ணும் - இழிந்தார்மாட்டும்.

அறிவு முதலானவைகளாலே உயர்ந்தோரிடத்தேயிருப்பது, அருட்செல்வம். அவையின்மையால் தாழ்ந்தோரிடத்து மிருப்பது, பொருட்செல்வம். ஆதலால் எல்லாவுயிர்களையும் பாதுகாத்தற்கேதுவாகிய அருளினாலேவருஞ் செல்வமே சிறந்ததென்பதாயிற்று. ஆகவே, கீழ்மக்களிடத்திருந்தபொருட் செல்வம், அருளில்லாததினாலே பிறவுயிர்களைப் பாதுகாத்தற் கும் உபயோகப்படாது, இழிவாமென்பதாயிற்று.

ஊ) *கவிராசர்*: செல்வங்களுக்குள் எல்லாம் தேடி எடுக்கப்பட்ட செல்வம் அருட்செல்வமாகிய தயையே அஃதல்லாத பொருளால் வரும் செல்வம் நீசரிடத்திலேயும் உண்டு.

ஏ) *பழைய*: 2: செல்வங்கள் பலவற்றுள்ளும் ஆராய்ந்து எடுக்கப் பட்ட செல்வமாவது அருளாகிய செல்வமே மற்ற பொருளாகிய செல்வம் இழிந்தாரிடத்தும் உளவாம்.

மல்லர்: எல்லா உயிர் மேலே பட்சமாயிருக்கிற அருள் என்கிறது புண்ணியத்தால் வருஞ்செல்வம். பொருளால் வருகிற செல்வம் கீழ்மனுஷரிடத்திலேயும் உண்டாயிருக்கிறதினால் எ-று.

அருள் என்கிற புண்ணியம் எல்லாருக்கும் உசத்தியாயிருக்கிற ஞானிகளுக்கு லட்சணமாயிருக்கிறதினாலேயும், மோட்சத்தை அடைகிறதுக்குத் தப்பாதவழியாயிருக்கிறதினாலேயும், அதனால் வருகிற நன்மைகள்மனுஷனுக்கும்நரகத்துக்கும்பாதகமாயிருக்கிற வர்களுக்கும்பொதுவாயிருக்கிற மற்றநன்மைகளுக்குத் தலையான நன்மை என்பது கருத்து.

பூரியார்-கீழ்மக்கள், கண்-இடம், உள-உண்டு.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக்குடவர், பரிமேலழகர், காளிங்கர், பழைய 2, கா.சு., சொ.த., குழந்தை 'செல்வத்துட் செல்வம் அருட்செல்வம்' எனக் கொண்டு கூட்டி 'ஆம்' என ஒரு பயனிலை வினைச்சொல் வரு வித்து முடிப்பர். 'பொருட்செல்வம் பூரியார் கண்ணும் உள' எனப் பொருளின் இயல்பு கூறுமாற்றானே 'அருட்செல்வம் உயர்ந்தார் மாட்டே உளதாம்' என அருளின் உயர்வினைக் கருதவைப்பர்.

பரிதி. 'ஐம்பொறிகளும் செல்வம் என்றும், அதிற் பெரியது அருட்செல்வம்' என்றும் கூறுவர். இங்ஙனம் இவர் கூறுதற்கேற்ற சொல்லமைதி இக்குறட்பாவில் யாண்டுளது என்று தேட வேண்டி யிருக்கிறது. ஒரமயம் 'செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம்' என்ற குறள் இவர் நினைவில் வர அதனையடியாகக்கொண்டு

மெய்ச்செல்வம் முதல் செவிச்செல்வம் வரை எண்ணி அச்செல்வங்களினும் அருட்செல்வம் உயர்ந்தது எனக் கருதியிருப்பாரோ என எண்ணத்தோன்றுகிறது. இங்ஙனம் உரைப்பதாற் போந்த பயன் ஒன்றுமில்லாமை தெளிக.

காளிங்கர் உரை விளக்கவுரையாமேயன்றிச் சொற்பொருளாகாது. அதனுடன் பொருட்செல்வம் செல்வம் என மதிக்கப்படாமைக்கும், அருட்செல்வம் மதிக்கப்பெறுதற்கும் ஏற்ற காரணமும் கூறுகிறது.

கவிராசர் 'செல்வம்' என்பதற்குத் 'தயை' எனப்பொருள் காண்பர். இப்பொருள் இதன் சொற்பொருளா? இயைபுப் பொருளா? கருத்தா? என்பதறியக்கூடவில்லை.

இராமலிங்கர் 'அருட்செல்வம்-கருணையுள்ளகுணம் என்ற செல்வம்' எனப்பொருள் கண்டு 'இச்செல்வத்தை யாரும் எந்த வழியிலாவது சம்பாதித்துவிட முடியாது' என நயமும் கூறுவர். இவருள் வள்ளுவர் வாய்மொழிக்கேற்ற சொற்பொருள் கொள்ளு நிலையில் உள்ள மணக்குடவர் முதலியோர் உரையே செவ்விது.

'பூரியர்'-'இழிந்தார்', 'கீழாயினோர்', 'நீசர்' எனப்பொருள் ஒத்த சொற்களையே உரைத்தனர் அனைவரும். *தண்டபாணியா*ரும் 'கீழ்மக்கள்' எனப்பொருள் கண்டு, சொல்லாய்வு செய்யத் தொடங்கிப் 'பூரியம் பலகோடியின் மிக்கதோர் எண்ணைக் குறிப்பதென்றும், பலநூறு கோடி மக்களில் இழிந்தோர் பலராதல் பற்றிப் பூரியர் என்பது பலகோடிக்கணக்குள்ள இழிந்தோரை உணர்த்திற்று' என்றும் கூறி, மேலும் ஆய்தற்குரியது என்றும் கூறினர். 'பூரி-குற்றம்' என்னும் பொருளில் உள்ளதாகக்(*தமிழ்ப்பேரகராதி*, பகுதி.2.பக்.283) கூறுதலான் 'பூரியர்- குற்றம்உள்ளோர்' என்னும் பொருளதாதலைக் கருதியே வள்ளுவரும் பிறரும், 'பூரியர்கள் ஆழும் அளறு' (குறள் 919) 'பூரியரேயுந் தம்மைப் புகல் புரிந்தோர்க்கு' (*கம்பராமா.* வீடண., 119) 'பூரியமாக்கள் உண்பதுமண்டி' (*பரிபா.*, 6:48) என்றனர். ஆதலான் பூரியர்-குற்றம் உடையார் எனக்கோடலே இயைபுடைத்து.

செல்வம் போலப் பேணத்தக்க அனைத்தையும் செல்வம் என்றது உவமஆகுபெயர். செல்வம் என்பது சார்பும் அண்மையும் அவாய்நிலையும் இன்றி நேரே பொருளையுணர்த்துவதாய், அது போன்ற அனைத்தையும் உணர்த்தினதென்க. பொருளையே அன்றி, அறிவு, அருள், வீரம் முதலிய குணங்களையும் செல்வம் என்றது உபசாரவழக்காம் என்க. 'செல்வம் போன்ற பண்பைச்

செல்வம் என்றார்' என்ற தேவநேயர் குறிப்பையும் காண்க (241 குறள்).

'அருட்செல்வம்' 'அருளான் வரும் செல்வம்' என்பர் பரிமேலழகர். காளிங்கர் முதலியோர் 'அருளாகிய செல்வம்' என்பர். இவற்றுள் பொருளான் வரும் செல்வம் அருளான் வரும் செல்வம் எனின் அருளான் வரும் செல்வம் அருளின் வேறான ஒன்றாதல் வேண்டும்; அது போன்றதே பொருளான் வரும் செல்வமும். அதிகாரம் அருள் உடைமை. ஆதலால் அருள் செல்வம் என்பன வேறாதற்கு இடமில்லை. பரிமேலழகர் 'அருளான்வரும் செல்வமாவது உயிர்களை ஓம்பி அவ்வறத்தான் மேம்படுதல்' என்பர். இவ்விளக்கம் அருளான்மேம்படுதல் என்பதையே கருதுகிறது. ஆகவே அருளே செல்வம் எனப்படுவது போல தோன்றுகிறது. ஏனைய உரையாசிரியர்களும் இதனைக்கருதித் தான் 'அருளாகிய செல்வம்' என்றனர் போலும். சிந்திக்கத் தக்கது.

ஓ) ஒப்புமைப் பகுதி:

அருட்செல்வம்

வையத் துயிர்க்ளை வருத்தஞ் செய்யாது
அறவியல் மனத்தையால் ஆருயிர்க்கருள் பரப்பி நீடுவாழ்க —யசோ., 60

இரக்கமென் றொருபொருள் இலாதநெஞ்சினர் —கம்பராமா., 2733

பூவின்மே லிருந்ததெய்வத் தையலும்பொதுமையுற்றாள்
பாவியான் பயந்த நங்கை நின்பொருட்டாகப் பட்டேன்
—கம்பராமா., 7323

முற்றும்:

பொருளைப் பொருளாப் பொதிந்தோம்பல் செய்யாது
அருளைப் பொருளா அறஞ்செய்தல் வேண்டும் —வளையா.,20

பொருளினை யுணர வேறு பறத்துமொன் றுண்டோ புந்தித்
தெருளினை யுடைய ராயிற் செயலருங கருணைச் செல்வம்
—கம்பராமா., 8400

ஓ) மேற்கோள்பகுதி:

இளம்.: 'அருளொடு புணர்ந்த அகற்சி': அருளுடைமையாவது யாதானும் ஓருயிர் இடர்ப்படுமிடத்துத் தான் உயிர் வருந்தினாற் போல வருந்தும் ஈரம் உடைமை என்பதற்கு மேற்கோள் (தொல். பொருள்.75).

பெருந்தே.: இன்னது அல்லது இதுவென மொழிதலுக்கு மேற்கோள் (வீரசோ.180).

காரிரத்ன: பாவிக அலங்காரத்திற்கு மேற்கோள் (*மாற*. 251).

25.2. நல்லாற்றான் நாடி அருளாள்க பல்லாற்றான்
தேரினும் அஃதே துணை. (உசஉ)

உரைப்பகுதி:

அ) *மணக்*.: நல்லவழியாலே நாடி அருளை உண்டாக்குக; பல வழியினும் ஓடி ஆராயினும், தமக்கு அவ்வருளே துணையாம் என்றவாறு.

நல்லாற்றான் நாடி அருளாள்க என்றது அருளுடைமை யுண்டாகப் பல அறங்களையுஞ் செய்க என்றவாறு, இஃது அருளு டைமை வேண்டும் என்றது.

ஆ) *பரிதி*.: நல்லநெறி எது ஆகும் என்று விசாரிக்கில், எல்லார்க் கும் கிருபை பாவித்தலே பெரியது என்றவாறு.

ஈ) *காளி*.: எ-து வீட்டின்பத்திற்கு இதுவே நன்னெறியாவதுஎன்னு மரபினால் குறிக்கொண்டு முன் சொன்ன அருளினையே மருவுக: என்னை எனில் பல வழியாலும் மறை நூல் சொல்லுகின்ற முறைமை வகுத்தாராயினும் மற்றவருள்தானே வீட்டின்பம் சேர்தற்கு மிக்கதுணையாம் என்றவாறு.

உ) *பரிமேல்*.: அளவைகளானும் பொருந்துமாற்றானும் நன்றான நெறியிலே நின்று நமக்குத் துணையாம் அறம் யாதென்றா ராய்ந்து அருளுடையராக, ஒன்றையொன்று ஒவ்வாத சமய நெறிகள் எல்லாவற்றானும் ஆராய்ந்தாலும் துணையாவது அவ் வருளே பிறிதில்லை.

அளவைகளாவன பொறிகளால் காணுங் காட்சியும்,[1] குறிகளான்[2] உய்த்துணரும்அனுமானமும், கருத்தா மொழியாகிய ஆகமமும்[3] என மூன்று. ஒப்புப்பற்றியுணரும் உவமையும்[4], இங்ஙனமன்றாயின் இது கூடாதென்றுணரும் அருத்தாபத்தியும், உண்மைக்குமாறாய இன்மையும் என இவற்றைக்கூட்டி ஆறு என்பாரும் உளர். இவையும் ஒருவாற்றான்அவற்றுள்ளேஅடங்குதலின், மூன்றென் றலே கருத்து.[5] பொருந்துமாறாவது இது கூடும் இது கூடாது

1 கண் காது முதலிய பொறிகளால் அறியும் அறிவு. இது காண்டல் அளவை எனப்படும்.

2 குறிகளான்-அடையாளங்களான், புகை முதலிய அடையாளங்களைக் கொண்டு அறியப் படும் கருதல் அளவை.

3 உலகமுதல்வனாகிய இறைவன் அருளிய வேதமும் ஆகமங்களுமாகிய நூல்அளவைகள்.

4 பொதுஇயல்பு பற்றி அறியப்படும் உவமை அளவை, பொருள்.

5 இவையும்ஒருவாற்றான்அவற்றுள்ளேயடங்குதலின்மூன்றென்றலே கருத்து- இவற்றின் விரிவையும் விளக்கத்தையும் திருக்குறள்மூலமும் பரிமேலழகருரையும்-கோ.வடிவேலு செட்டியார்-அறத்துப்பால்-ம.கா-ப.க.பதிப்பு-பக். 240-241 காண்க.

எனத்தன்கண்ணே தோன்றுவது; இதனை வடநூலார் 'யுத்தி' என்ப. ஆற்றான் என்பது வேற்றுமைமயக்கம். ஒன்றையொன்று ஒவ்வாமையாவது மதவேறுபாட்டான் அளவைகளும் பொருள் களும் தம்முள் மாறுகோடல்; அன்னவாயினும் அருள்துணை என் றற்கண் ஒக்கும் என்பதாம். உயிரை விட்டு நீங்காது இருமையினும் உதவலின் 'துணை' என்றார். இவை இரண்டுபாட்டானும் அரு ளினது சிறப்புக் கூறப்பட்டது.

காரி.: பொறிகளால் காணும் காட்சியும், குறிகளான் உய்த் துணரும் அநுமானமும் கருத்தாமொழியாகிய ஆகமமும் என மூன்று. ஒப்புப்பற்றிஉணரும் உவமையும் 'இங்ஙனமன்றாயின் இதுகூடாது' என்று உணரும்அருத்தாபத்தியும், உண்மைக்கு மாறாய இன்மையும் என்னும் மூன்றுமாக ஆறு அளவை என்க. இவற்றை வடநூலார் பிரத்யக்ஷம், அநுமானம் சாப்தம்,[6], திருஷ்டாந்தம்[7], அருத்தாபத்தி[8] அநுபலத்தி என்பர். ''அறத்தாறிது என வேண்டா''[9] ''அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்''[10] ''உயிருடம்பின் நீக்கியார் என்ப''[11] ''பொருளாட்சி போற்றாதார்க்கில்லை[12] ''படைக் கொண்டார் நெஞ்சம் போல்''[13] ''தினற்பொருட்டால் கொல்லாது உலகு எனின்''[14] என்பன முறையே காண்க. ஒழிந்தது வந்தவழிக் காண்க. ஆற்றான் என்பது வேற்றுமை மயக்கம்.

இராமா.: பல்லாற்றால் -(ஒன்றுக்கொன்றொவ்வாத)பலசமய மார்க்கங்களாலும்,தேரினும்-(உயிர்க்குஉறுதியாவதுயாதென) ஆராய்ந்து தெளிந்தபோதும், அஃதே துணை - அந்த அருளே சகாயப்படுவது, (ஆதலால்) நல்லாற்றால்-ஒருநன் மார்க்கத்திலே நின்று, நாடி-(எல்லாநூல்களையும்)ஆராய்ந்து, அருளாள்க - அருளுடைமையையேயுறுதிப் பொருளாகஆள்க, எ-று.

எல்லாச் சமயத்தாரானும் உறுதியாக விரும்பப்படுவது அருளாதலால் உயிர்க்குறுதி வேண்டினோர் அருளுடையராக வென்பது கருத்து. இவையிரண்டு பாட்டாலும் அருளின் சிறப்புக் கூறப்பட்டது.

ஊ) *கவிராசர்*: நல்லவகையாலே தயையைத் தேடிக்கொள்ள வேண்டும். பற்பல விதங்களாலே ஆராய்ந்து பார்த்தாலும் அந்த அருள் என்கிற தயையே துணை (எ-று).

---

6 சாப்தம்-ஆகமப்பிரமாணம் 7 திருஷ்டாந்தம்-உவமை 8 அருத்தாபத்தி- குறிப்பு.
9 குறள் 37 10 குறள் 71 11 குறள் 330
12குறள் 252 13 குறள் 253 14 குறள் 256

ஏ) பழைய: 2: நல்ல ஆகமசாத்திரங்களினால் நாடி, நல்ல சமயங்களிலே நின்று, நமக்குத் துணையான அறன் யாது? என்று ஆராய்ந்து அருளை உடையவராக. ஒன்றையொன்று ஒவ்வாத சமய நெறிகள் எல்லாவற்றுள்ளும் ஆராய்ந்தாலும் உயிர்க்குத் துணையாவது அருளே; பிறிதொன்று இல்லை எ-று.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

''அருள் ஆள்க''

'அருளை உண்டாக்குக' **மணக்.**, 'அருளினையே மருவுக' *காளிங்கர்*; 'அருள் உடையர் ஆக' *பரிமேல்.*, *பழைய 2*; 'தயையைத் தேடிக்கொள்க' **கவிராசர்**;' நல்லாற்றான் - நல்லநெறியிலே நின்று; நாடி - அருட்குணம் பெறவிரும்பி, அருள் ஆள்க - அருளொடு கூடிய செயல்களைச் செய்து பழகுக' *கா.சு.*; 'அருள் -அருளை, நல்லாற்றான் - நல்லவழியான், நாடி - தேடி, ஆள்க- செய்க' *சொ.த.*; 'உத்திக்குப் பொருத்தமான நல்ல அளவைகளால் ஆய்ந்துணர்ந்து அருளைமேற்கொள்க' **தேவநேயர்**. ஏனையோர் பலரும் இக்கருத்தினரேயாவர். இவருள் 'அருளை உண்டாக்குக' என்ற **மணக்குடவர்** உரை சற்று ஊன்றிச் சிந்தித்தற்குரியது. அருள் உயிர்த்துணையாவது என வள்ளுவரே கூறுகின்றார். உயிர் உருவமில்லாத அருவப் பொருள். அருள், அன்பு முதலியன தொன்றுதொட்டே உயிரைச் சார்ந்துள்ள குணங்கள். அவற்றை உண்டாக்குக எனலின், ஈண்டு உண்டாக்குதல் என்பதும் மேற்கொள்க என்பதும் உயிரொடு ஒன்றிய அருட்பண்பை வெளிப்படச் செய்க என்ற அளவிலே கருத்துடையதென்க. புதிதாக உண்டாகச் செய்தலுமன்று புதிதாக மேற்கோடலுமன்று; உள்ளதன் விளக்கமேயாம் என்க.

''நல்லாற்றான் நாடி''

'நல்லவழியாலே நாடி. அஃதாவது அருளுடைமையுண்டாகப் பல அறங்களைச் செய்து' என்பர் **மணக்.**; 'நல்லநெறி எதுவாகும் என்று விவரிக்கின்' என்பர் *பரிதி.*; 'வீட்டின்பத்திற்கு இதுவே நன்னெறியாவது என்னும் மரபினால் குறிக்கொண்டு' என்பர் *காளி.*; 'நல்லவகையான்' என்பர் **கவிராசர்**; 'நல்ல ஆகம சாஸ்திரங்களாலே நாடி நல்ல சமயங்களிலே நின்று' என்பர் *பழைய 2*; *பரிமேலழகர்* 'அளவைகள்ானும் பொருந்துமாற்றானும் நன்றான நெறியிலே நின்று நமக்குத் துணையாவது எவ்வறம் என ஆய்ந்து' என்றார் பிற்கால உரையாசிரியர்களில் *கா.சு.* 'நல்லநெறியிலே நின்று அருட்குணம் பெறவிரும்பி' என்பர். *சொ.த.* 'நல்ல வழியாலே தேடி' என உரைகண்டு, 'ஊனுண்டு உயிர்கட்கு அருளுடை

யேம் என்றலும், ஊரைப்பிடுங்கி உலையிற் போட்டு அன்ன தானம் செய்வேம் என்றலும் போலாது புலால்மறுத்தல் வெஃகாமை கள்ளாமை முதலிய அறவழிகளிலே நின்று' என விளக்கமுங் கூறி, '*பரிமேலழகர்* கூறும் அளவைகளாலும் பொருந்துமாற்றானும் ஆய்தல் பின்வரும் பல்லாற்றான் நாடற்கு உரியதாதலின் அவை ஈண்டைக்கேலா' என மறுப்பர். *தேவநேய ரும் பரிமேலழகரை* ஒட்டி உரைப்பர்.

'ஆட்டிற்குக் குழைகொடுத்தும், புள்ளுக்கு உணவருத்தியும் அருள்காட்டி வளர்த்துப் பின் அவற்றைத் தம் வயிற்றுக்கீவார் போலாது அருணோக்கம் ஆகிற நல்லநெறியானே அருளாள்க' என்ற கருத்தை வழங்கும் *மணக்குடவர், கா.சு., சொ.த.*போன் றோர் உரை ஏற்புடையது.

''பல்லாற்றான்''

இதற்குப் *பரிமேலழகர்* தரும் விளக்கமாகிய 'ஒன்றையொன் றொவ்வாத சமயநெறிகளான் ஆய்ந்தாலும்' என்பது சமய நெறிகள் அளவைகளானும்பொருந்துமாற்றானுந்தானேஆய்வன. அதனையே முன்னுங் கூறிப் பின்னும் கூறுவதாற் போந்தபயன் யாதோஎனஎண்ணி, 'நல்லாற்றான்'என்பதற்கு 'நல்லவழியாலே' என்பாருரை நயம் பயத்தல் காண்க. இயல் துறவாயிருப்பதாலும், அருளுடைமை மெய்யுணர்விற்கு முதற்படி ஆதலானும் சமயக்கண் கொண்டு இக்குறளை நோக்கியிருக்கிறார் *பரிமேலழகர்*. அருள், உயிரின் இயல்பான குணம். அதனை ஆளும் போது நன்னெறியில் ஆள வேண்டும் என்பதே *வள்ளுவர்* கருத்தாதலின் அதற்கேற்ப உரைப்பார் உரைகளே சிறந்தன. அங்ஙனமே 'பல்லாற்றான்' என்பதற்கு உலகியலை ஒட்டியும், அறிவியலை ஒட்டியும் முற்கூறிய அளவைகளான் ஆராயினும் என்பது சிறந்த கருத்தாம். 'புல்லாற்றான் தேரினும் அஃதே துணை'' என்பதற்குக் *காளிங்கர்* எழுதும் உரை, 'பலவழியானும் மறைநூல் சொல்லுகின்ற முறைமை வகுத்தாராயினும் மற்றவருள் தானே வீட்டின்பம் சேர்தற்கு மிக்க துணையாம்' என்பது. இந்தப் பொருள் குறளின் சொல்லமைதிக்கேற்ப இல்லாமையும், விளக்க மின்மையும் கருதிப் 'பாடம் தேர்தற்கு மிக்க துணையாம்' என்று பாடம் இருந்திருக்கலாமோ என்று துணியத் தோன்றுகிறது. 'தேறினும்' *தருமர், தாமத்தர்* பாடம் என்பர் *வ.உ.சி.*

ஒ) ஒப்புமைப் பகுதி:

'அருளாள்க'

ஆற்றுமின் அருள் ஆருயிர் மாட்டெலாம் —*வளையா.,* 19
அறனும் அருளுடையார் கண்ணதே ஆகும் —*சிறுபஞ்ச.,* 3

நெகிழ்ந்த அருளினான் ஆகும் அறம் — சிறுபஞ்ச., 35
அறந்தரு தவத்தை யாயு மருளினால் — கம்பராமா., 7107

25.3. அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை இருள்சேர்ந்த இன்னா உலகம் புகல். (உசஙு)

உரைப்பகுதி:

அ) மணக்.: அருளைப் பொருந்தின நெஞ்சினை உடையவர்க்கு இருளைப் பொருந்திய நரகலோகம் புகுதல் இல்லை என்றவாறு.

இது நரகம் புகார் என்றது.

ஆ) பரிதி.: எ - து சர்வரிடத்திலும்[1] கிருபை ஆள்பவர்க்கு நரக லோகம் இல்லை. தெய்வலோகம் சித்திக்கும்[2] என்றவாறு.

ஈ) காளி.: எ - து அனைத்துயிர்மாட்டும் ஒத்த அருளானது பொருந்திய நெஞ்சிலையுடையார்க்கு எஞ்ஞான்றும் இல்லை; யாதோ எலில் உண்மை உணராமை காரணமாக வந்து சேர்ந்த இன்னாங்குடைய[3] உலகங்களைச் சென்றடைதல் என்றவாறு.

உ) பரிமேல்.: இருள்செறிந்த துன்ப உலகத்துள் சென்று புகுதல் அருள்செறிந்த நெஞ்சினையுடையார்க்கு இல்லை.

இருள்செறிந்த துன்பவுலகம் என்றது திணிந்த இருளை யுடைத்தாய்த் தன்கட்புக்கார்க்குத் துன்பஞ்செய்வதோர் நரகத்தை; அது கீழ் உலகத்துள் ஓரிடமாகலின் 'உலகம்' எனப் பட்டது.

இராமா.: இருள்சேர்ந்த அந்தகாரந்துன்னிய, இன்னா வுலகம் புகல்-துன்பந்தரும் உலகமாகிய நரகத்திலே சேர்வது, அருள்சேர்ந்த நெஞ்சினார்க்கில்லை—அருள்செறிந்த மன முடையார்க்கு இல்லை, எ-று.

அருளுடையார்க்கு நரக வேதனையில்லையென்பது கருத்து.

ஊ) கவிராசர்: தயையுடனே கூடியிருக்கிற நெஞ்சையுடையவர் கள், இருளாயிருக்கப்பட்ட பொல்லாத நரகலோகத்திலே போகிற தில்லை எ - று.

ஏ) பழைய 2: இருள்செறிந்த துன்ப உலகத்துச் சென்று புகுதல் அருள்செறிந்த நெஞ்சினை உடையார்க்கு இல்லை.

---

1 சர்வரிடத்திலும் - எல்லாரிடத்திலும் 2 சித்திக்கும்—கிட்டும்
3 இன்னாங்கு - துன்பம்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

''இருள்சேர்ந்த இன்னா உலகம்''

'இருள்செறிந்த துன்பமயமான உலகம்' பரிமேல்.; 'உலக மாகிய நரகம்' என உரைகாண்பர் மணக்., பரிதி., காளி., பழைய 2; 'அறியாமை சூழ்ந்த துன்பச்சூழல்' குழந்தை; 'அறியா மையாகிய இருள்பொருந்திய துன்பஉலகில் வாழும் வாழ்க்கை' மு.வ.; 'அறியாமை பொருந்திய துன்பங்கள் உள்ள உலகில் ஈடுபாடு' இராம.; 'நரகம் பாதாளலோகம். இதற்கு 'இருள்' என்றும் ஒரு பெயருண்டு' என்பர் மு.ரா.அரு.

இவ்வுரைகளில் வள்ளுவர் 'இருள்சேர்ந்த இன்னாவுலகம்' என இன்னாமையே உருவான ஓர் உலகம் உண்டு எனக் குறித்த லானும், இவ்வுலகம் அறிவு அறியாமைகட்கும், துன்ப இன்பங் கட்கும் இருப்பாய் இரு தன்மையும் உடையதாகலானும், 'அடங்காமை ஆரிருள் உய்த்துவிடும்' என்பதில் நரக விசேடத் தையே குறித்தலானும் பழைய உரைகள் சிறந்தனவாகலாம்.

''அருள்''

'அருளைப்பொருந்திய', 'அருளைச்சேர்ந்த' என்பாரினும் 'சர்வரிடத்திலும்(எல்லோரிடத்தும்) கிருபை' என்னும் பரிதியும், 'அனைத்து உயிர்மாட்டும் ஒத்த அருளானது' என்ற காளிங்கரும் கூறுதல் ஒன்றினொன்று சிறந்தது.

ஒ) ஒப்புமைப்பகுதி:

ஆற்றுமின் அருள் ஆருயிர்மாட் டெல்லாம் —வளையா., 19

அருளைப் பொருளா அறஞ்செய்து வான்கண்
இருளில் இயல்பு எய்தாதது என்னோ நமரங்காள் —வளையா., 20

அருடீர்ந்த நெஞ்சிற் கரிதென்பதவ் வந்த காரம் —கம்பராமா.,3302

25.4. மன்னுயிர் ஓம்பி அருளாள்வாற் கில்என்ப
தன்னுயிர் அஞ்சும் வினை. (உசச)

உரைப்பகுதி :

அ) மணக்.: நிலைபெற்ற உயிரை ஓம்பி அருளை ஆள்வானுக்குத் தன்னுயிரஞ்சவரும் வினை வருவதில்லை என்று சொல்லுவார் என்றவாறு.

இது தீமை வராது என்றது.

ஆ) *பரிதி*: எ-து தன்னுயிர் போலே எல்லாரையும் பரிந்து பார்த்து[1] நடப்பார்க்கு எந்தக் காலத்திலும் வினையில்லை என்றவாறு.

ஈ) *காளி.*: எ-து இவ்வுலகத்துக்கு மன்னப்பட்ட[2] உயிர்களனைத்தையும் பாதுகாத்து இயல்வதோர் அருளினையுடையார்க்கு என்றும் இல்லை என்று சொல்லுவர் சான்றோர்; யாதோ எனின், தனது உயிர், வீட்டின்பத்தின்கண் செல்லுமிடத்துத் தான் அஞ்சுவதோர் காரியம் என்றவாறு.

மன்ன என்றது நிலைபெறுதலை.

உ) *பரிமேல்.*: நிலைபேறுடைய உயிர்களைப்பேணி அவற்றின்கண் அருளுடையன் ஆவானுக்கு தன்னுயிர் அஞ்சுதற்கு ஏதுவாகிய தீவினைகள் உளவாகா என்று சொல்லுவர் அறிந்தோர்.

உயிர்களெல்லாம் நித்தமாகலின்[3] மன்னுயிர் என்றார்[4]. அஞ்சுதல் துன்பநோக்கி அஞ்சுதல்[5]. அன்ன அறத்தினோன்[6] கொலை முதலிய பாவங்கள் செய்யான் எனவே மறுமைக்கண் நரகம்புகாமைக்கு ஏது கூறியவாறாயிற்று.

இராமா.: தன்னுயிரஞ்சும் வினை- தன்னுயிரஞ்சுதற்கேதுவாக வருந் தீவினைப் பயன்கள். மன்னுயிரோம்பியருளாள்வாற்கு- நிலைபேறுடைய வெல்லாவுயிர்களையும் பாதுகாத்து அருளுடைமையாகிய தருமத்தைக் கொள்வானுக்கு, இல்லென்ப- இல்லையென்று சொல்லுவர் புலவர், எ-று.

தீவினைப் பயன்களைத் தீவினையென்றது ஆகுபெயர். எனவே மறுமையிலே நரகவேதனையில்லாமைக்கு ஏதுகூறியவாறாயிற்று.

ஊ) *கவிராசர்*: நித்தியமாய் இருக்கிற சீவன்கள் மேல் தயையை வைத்து நடக்கிறவர்களுக்குத் தங்கள் சீவன் பயப்படத்தக்க பாபங்கள் உண்டாகா (எ-று).

---

1 பரிந்து பார்த்து-அன்புடன் நோக்கி.

2 மன்னப்பட்ட—நிலைபெறுத்தப்பட்ட

3 நித்தியம்- துவசம்சாபாவ அப்பிரதியோகி (முன்னின்மைக்கெதிர் மறையாகாமை): அஃதாவது நாசமின்றியிருப்பது. (கோ.வ.)

4 உயிர்கள் எல்லாம் சித்தாயிருத்தல் பற்றி 'நித்தமாகலின்' என்று கூறினார். இது கந்தபுராணம் சூதசங்கிதை நித்தியவத்து விசாரமுரைத்த வத்தியாயத்தில் ''ஒத்தசடம் நித்தியமல்லாது சித்துக்க நித்தியம்வந்துறுதலின்றே'' என்றும், பாகவதபுராணம் 11-வது புராணம் 11-வது ஸ்கந்தத்தில் ''அறிவினிலாக்கை மூன்றும்சத்தியமென்று நீக்கி, நிறைவுறுமறிவுதானே நித்தியமென்று தேர்வோர், பிறவிவெங்கடலையொன்றார்' என்றும் கூறுவதனாலும் நன்கு உணரப்படும்.

உயிர்களெல்லாம் நித்தியம், சித்தாயிருத்தலின்யாது சித்து அது நித்தியம் ஈசுவரன் போல; யாது நித்தியமன்று அதுசித்தன்று கடம்போல என்பதிங்கனுமானமாம். இஃதந்வயவியதிரேகி யனுமானமாம். (கோ-வ.)

5 தீவினையாலுண்டாகுந் துன்பத்தைக் கருதி அது செய்யப்பயப்படுதல்.

6 மன்னுயிர் ஓம்பி அருளாளும் அவ்வறத்தினையுடையவன்,

ஏ) பழைய 2: நிலைபேறுடையஉயிர்களைப் பேணி, உயிர்களிடத்து அருளுடையன் ஆவானுக்குத் தன்உயிர் அஞ்சும் துன்பமாகிய தீவினை இல்லை.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

''மன்னுயிர்''

'நிலைபெற்ற உயிர்' *மணக்.*, 'இவ்வுலகத்து மன்னப்பட்ட உயிர்கள் அனைத்தையும்'; 'மன்ன- என்றது நிலைபெறுதலை'. *காளி.*, 'நிலைபேறுடைய உயிர்கள்' *பரிமேல்.*, 'உலகிலுள்ள பிறவுயிர்களை' *இராம.*

இவற்றுள் *மணக்குடவர்* முதலிய தொல்லோர் உரைகளும் பிற்காலத்தன சிலவும் 'உயிர்கள் என்றும் அழியாதன; நிலைத்தன' என்னும் தமிழ்மெய்ப்பொருட்டுணிபை விளக்குவன. 'உள்ள பிறவுயிர்களை' என்பார் கருத்து 'மன்னுதல்-இருத்தல் அல்லது உளவாதல்' என்ற அளவில் அமைந்தது. ஆகவேமன்னுயிர்க்குத்தமிழர் தத்துவ நூற்கொள்கையை விளக்கும் உரைகளே சிறந்தவை.

'தன்உயிர் அஞ்சும் வினை'

'தன்னுயிர் அஞ்சவரும் வினை' *மணக்.*; 'தன்னுயிர் அஞ்சுவதற்கு ஏதுவாகிய தீவினைகள்'' *பரிமேல்.*, *சொ.த.*; தனதுயிர் வீட்டின்பத்தின்கண் செல்லுமிடத்துத்தான் அஞ்சுவதோர் காரியம். *காளி.*

இவ்வுரைகளில் *காளிங்கர்* உரை வீட்டுலகிற் செல்லும்போது அச்சம் தோன்றாது என்கின்றார். வீடு என்பது இருவினை ஒப்பும் மலபரிபாகமும் எய்தியபோது எய்தப்பெறுவதொன்றாதலானும், வீட்டின்பத்தில் செல்லும்போது அச்சம் உண்டாதல் இல்லையாதலானும், அங்ஙனம் அச்சம் உண்டாயின் அது வீடு பேற்றிற்குத் தடையாகலானும் *காளிங்கர்* உரையின் இப்பகுதி கருதுதற்குரியது'

'தன் உயிரைப்பற்றி அஞ்சவேண்டியநிலை அல்லது வேலை- அல்லது தொழில் உளவாகாது' என்பதில் 'வினை' என்பது 'வேலை' அல்லது 'தொழில்' எனக் காண்பர் *குழந்தை* முதலிய உரையாசிரியர்கள். முற்காலத்தோர் 'சென்ற பிறவியில் ஈட்டிய வினையின் பயனும் அதனால் வருந்துன்பமும்' எனக் கொள்வர். இங்ஙனம் கூறுவதனாலும் நன்கு உணரப்படும்.

உயிர்களெல்லாம் நித்தியம், சித்தாயிருத்தலின் யாது சித்து அது நித்தியம் ஈசுவரன் போல; யாது நித்தியமன்று அதுசித்தன்று

கடம் போல என்பதிங்கனுமானமாம். இஃதந்வயவியதிரேகி யனுமானமாம். (கோ.வ.)

ஒ) ஒப்புமைப்பகுதி:

'மன்னுயிர் ஓம்பி அருள்ஆள்வான்'

வெல்புகழ் மன்னவன் விளங்கிய ஒழுக்கத்தான்
நல்லாற்றின் உயிர்காத்து நடுக்கறத் தான்செய்த
தொல்வினைப் பயன்துய்ப்பத் துறக்கம்வேட் டெழுந்தாற்போல்
— *கலி.*, 118: 1-3

ஆற்றுமின் அருள் ஆருயிர் மாட்டெல்லாம்
—*வளையா.*, 19

25. 5. *அல்லல் அருளாள்வார்க் கில்லை வளிவழங்கும்*
மல்லன்மா ஞாலம் கரி. (உசரு)

உரைப்பகுதி:

அ) மணக்.: அருளுடையார்க்கு அல்லலில்லை; அதற்குச் சான்று காற்று இயங்குகின்ற வளப்பத்தினையுடைய பெரிய உலகம் என்றவாறு.

இஃது அருளுடையார்க்கு அல்லலின்மை உலகத்தார்மாட்டே காணப்படும் என்றது.

ஆ) பரிதி: 'வளியியங்கும்' பாடம்.

எ-து கிலேசம்[1] அருளை விரும்பினாரிடத்து வாராது; அதற்கு வாயு இயங்கும் பூமிசாட்சி என்றவாறு.

ஈ) காளி.: எ-து இல்லற முதலாகிய நல்வினை செய்வார்க்கும் அதனின்நீங்கிய தீவினை செய்வார்க்கும் உயர்ந்தும் இழிந்தும் பிறந்திறந்துழலும் பெருந்துயர் உறவேண்டுதலான். மற்றிவ்வல்ல லானது, அனைத்துயிர் மாட்டும் அவற்றிற்குத் துயர் செய்யாத அருளுடைமையை எஞ்ஞான்றும் இடைவிடாது ஆளும் அமைவுடை யோர்க்கு இல்லை; மற்று இதற்குக் காற்று வழங்கும் கடல்சூழ் உலகமே சான்று என்றவாறு.

உ) பரிமேல்.: அருளுடையார்க்கு இம்மையினும் ஒரு துன்பம் உண் டாகாது; அதற்குக்[2] காற்றியங்குகின்ற வளப்பத்தையுடைய பெரிய ஞாலத்து வாழ்வார் சான்று.

---

1 கிலேசம்- வருத்தம்.

2 அதற்கு-இம்மையினும் ஒரு துன்பம் உண்டாகாது என்பதற்கு.

சான்றாவார்- தாம் கண்டு தேறிய பொருளைக் காணாதார்க்கு தேற்றுதற்கு உரியவர். அருளாள்வார்க்கு அல்லலுண்டாக ஒரு காலத்தும் ஓரிடத்தும் ஒருவரும்கண்டறிவார் இன்மையின்,இன்மை முகத்தான் ஞாலத்தார் யாவருஞ் சான்று என்பார்[3] 'வளி வழங்கு மல்லன்மா ஞாலங்கரி'[4] என்றார். எனவே,[5] இம்மைக் கண்[5] என்பது பெற்றாம். ஞாலம் ஆகுபெயர். இவை மூன்று பாட்டானும் அத்துணையுடையார்க்கு இருமையிலும் துன்பம் இல்லாமை கூறப்பட்டது.

ஊ) கவிராசர்: அருளுடையவர்களுக்கு இம்மை மறுமையிரண்டிலேயும் ஒரு துக்கமும் உண்டாகாது. அதற்குக் காற்றுப் பரவப்பட்ட பெரிய பூமிகளிலே வாழ்கிறவர்களும் அருகனும் சாட்சி (எ-று).

ஓ) தொகுப்பும் குறிப்பும்:

''அல்லல் அருளாள்வார்க்கு இல்லை''

என்ற தொடர்க்கு உரை காண்பார் பலரினும் *பரிமேலழகர்* மட்டும் 'இம்மையினும் அல்லல் இல்லை' எனஒரு சொல்வருவித்து எழுதுவர். 'இம்மை மறுமையிரண்டினும் ஒரு துன்பமும் உளதா காது'என்பர் *கவிராசர்*, *பழைய*2; 'கருணையுள்ளகாரியங்களையே செய்கிறவர்களுக்குத் துன்பம் என்பது இல்லை' *இராம*.; மறுமைக் கண் துன்பமின்மையை 'இருள் சேர்ந்த இன்னாவுலகம் புகலில்லை என்று வலியுறுத்தியதால் ஈண்டு 'இம்மைக் கண்ணும்' என ஒரு சொல் வருவித்துரைத்தனர் *பரிமேலழகர்* எனலாம்.

''வளி வழங்கும் மல்லல்மாஞாலம் கரி''

''சான்று காற்று இயங்குகின்றவளப்பத்தினையுடையஉலகம்'' *மணக்.*, *பரிமேல்.*; 'வாயு இயங்கும் பூமி சாட்சி' *பரிதி.*; 'காற்று வழங்கும் கடல்சூழ் ஞாலமே சான்று'*காளிங்கர்.*'காற்றுபரவப்பட்ட பெரிய பூமியிலே வாழ்கிற மக்களும் அருகனும் சாட்சி' *கவிராசர்*.

பிற்கால உரைகள் யாவும் தெளிவுரையும், எளியவுரையும், நய வுரையுமாகலின் சொற்பொருளன்றி விளக்கங்கள் தந்தில.

---

3 அருளுடையவர்க்குத் துன்பமுண்டாக ஓரிடத்திலும் கண்டறிந்தார் ஒருவருமில்லை என்பதனை ஏதுவாகக் கொண்டு உலகத்தார் யாவரையுஞ் சாட்சியாகக் கொண்டார் என்க.

4 வளி (காற்று) வழங்காத இடத்து மக்கள் வாழுதலின்மையின், 'வளிவழங்கும் மல்லன்மா ஞாலம்' என்று கூறப்பட்டது. வளிவழங்கும் ஞாலத்தை இவ்வுலகம் என்றது பிரசித்தமாயிருப்பது நோக்கியாம்.

5 எனவே—வளி வழங்கும் ஞாலம் எனவே.

பரிமேலழகர் ‘அருளுடையார் அல்லல் உறுவதை ஒரு காலத்தும் ஒருவரும் கண்டறியாமையின் இன்மை முகத்தான் ஞாலத்தார் யாவருங் கரி என்றார்’ என விளக்கமுந் தருவர்.

சொ. த. ‘நிலம் தன்னைக் குத்தியும் வெட்டியும் மிதித்தும் துவைத்தும் வருத்துவார்க்கும் பலவகை வளங்களும் கனிந்து விளைத்தலினாலே தன் பெருமைக்குச் சிறிதும் குறைவின்றித் தன்நிலை துளங்கி வருந்தாதிருத்தல் கண் கூடாதலின் அருளாள்வார்க்குச் சான்றாயிற்று. அந்நிலத்து வீசுங்காற்றோ ஓரோருகால் முரண்டு, அருள் சிறிதுமின்றி அழித்தும், கலங்களைக் கவிழ்த்தும் பல் லுயிர்க்குக் கேடு விளைப்பதோடு, நீரும் நெருப்பும் வெகுண்டெழுந் தால் அவற்றிற்குத் துணை நின்று இன்னலைப் பெருக்கும் இயல் பிற்றாதலின், அஃதியாண்டும் ஒருநிலையில் நில்லாது அங்கங் கோடி அல்லலுற்ற வண்ணமாய் இருத்தலின் அருளற்று அல்ல லுறுவார்க்குச் சான்றாகிறது’ என்பர். ஆகவே அருளாள்வார் ‘அல்லல் உறாமைக்கு ‘மல்லன் மாஞாலமும்’, அருளிலார் அல்லல் உறுவதற்கு ‘வழங்கும் வளியும் சான்றாம்’ என விளக்கி, *மணக் குடவரும் பரிமேலழகரும்* ‘ஞாலம் ஆகுபெயர்’ என்றது பொருந் தாது. குறித்தது ஆகுபெயர்ப் பொருளாயின் ‘வளிவழங்கு மல்லன்மா’ என்ற அடையெல்லாம் அவ்வாகு பெயர்ப் பொருளைச் சிறப்பியாது இயற்பெயர்ப் பொருளையே சிறப்பித்தலான் பெறக் கிடக்கும் பயன்யாது?’ என மறுப்பர். *சொ. த.*

இவர் உரைப்போக்கு வளியும் ஞாலமும் கரியாம் என இரண்டு எழுவாய்களையுடையது. இப்பொருளில் இவர் ‘வழங்கும்வளி’ எனச் சொல்நிலை மாற்றிக் கூட்டியிருக்க வேண்டும், இக்குறட் பாவோ ‘அல்லல் அருளாள்வார்க்கில்லை’ என்ற ஒருகருத்தை வற்புறுத்தவே வளி வழங்கும் ஞாலத்தைச் சான்றாக்குகிறது. அருளாள்வார்க்கு அல்லல் இல்லை எனவே அஃதிலார்க்கு அல்லல் உண்டு என்பதுபோதரும். அதனை வள்ளுவர் கூறிற்றிலர். அதனை வருவித்து ஒரே தொடராகிய வளி வழங்கும் மல்லன் மாஞாலத்தை, வழங்கும் வளியும் மல்லன் மாஞாலமும் என இரண்டாக்கி ஆசிரியரே கூறும் அருளாள்வார்க்கு அல்லல் இன்மைக்கு ஞாலத்தைக் கூறி, அஃதிலார்க்கு என்ற தொடரை வருவித்து வளி கரி என்பதாற் போந்த பயனின்மையான் இவ்வாறு வலிந்து இருதொடராக்காது ஒரு தொடராகவே கொண்டு, வளிவழங்குவதும், அல்லலை யுடையதுமாகிய ஞாலமே கரியாம் என்பதே ஆசிரியர் உள்ளக் கிடக்கையாதல் வேண்டும் எனத் தெளியலாம்.

ஞாலம் ஆகுபெயர். இடவாகு பெயராய் மக்களே சான்றாவர் எனக் கொள்வதில் இடையூறு அடைமொழிகள் ஆகுபெயர்ப்

பொருளை விசேடியாமல் இயற்பெயர்ப் பொருளையே விசேடித்து நிற்றலே எனின், அங்ஙனம் வரினும் ஆகுபெயராதற்கு இழுக்கின்று. வளிவழங்கும் முதலியன ஞாலம் என்பதன் இயற்பொருளை விசேடிக்க அனைத்தும் ஒரு சொன்னீர்மைப்பட்டு ஆகுபெயராய்க் கொள்வதே பொருந்தும் எனினும் கொள்க' என்று ஒழிந்தார். இவ்வுரை விளக்கத்தில் வளிவழங்கும் மல்லல் மாஞாலத்தை இரு கூறாக்கி வள்ளுவர் வழியே அருளாள்வார் அல்லலுறாமைக்கும் அஃதிலார் அல்லலுறுவதற்கும் சான்றாக்குதலைக் காட்டிலும் ஒரே தொடராகக் கொண்டு ஆகுபெயராகவும் கொள்ளாமல் 'எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி நல்லை வாழிய நிலனே' என்றதையுளங் கொண்டு அருளாள்வார் அல்லலுறாமல் வசிப்பதால் ஞாலம் வளி வழங்க மல்லலோடு இருக்கிறது. அங்ஙனம் இருக்கும் ஞாலம் அருளாள்வார் அல்லல் உறாமைக்குச் சான்றாகிறது என்றல் ஏற்புடையதாகலாம்; எண்ணுக.

இராமலிங்கனார் 'காற்று கணமும் தங்காமல் எங்கும் எப்போதும் உலவிவருகிறது; அது சுற்றாத இடமே இல்லை. அங்கெல்லாம் கூடத் துறவிகள் துன்பப்பட்டதாகத் தெரியவில்லை. வளமான இடங்களில் மக்கட்சமுதாயம் இருக்கும். அங்கே தான் சான்று கிடைக்கும். கேட்டுப் பார்த்தார் போலும்' எனக் கவிதை நலம் பெறக் கற்பனை நயம் காண்பர்.

கோ. வடிவேலு செட்டியார் 'காற்றுவீசாத இடம். மக்கள் வாழ முடியாத இடம். ஞாலத்து வாழும் மக்கள் அனைவரும் இதற்குச் சான்றென்பார் இங்ஙனம் கூறினார்' என்பர்.

தேவநேயர், *பரிமேலழகரை* ஒட்டியே உரை தருவர்.

அனந்தநாதநயினார், 'ஞாலம் கனோகதி, கனோவாதம், தனுவாதம் என்ற மூன்று வளிகளாலேயே நிலைத்திருக்கிறது. அபாயம் இல்லாமலிருக்கிறது. அதுபோல அருளாள்பவர்க்கு அபாயம் இல்லை' என்பர் (*திருக்குறளாராய்ச்சியும் -சைனமத சித்தாந்தமும்*) பக். 43-44).

வ.உ.சி. 'வழிவழங்கும்' எனப்பாடமும் கொண்டு, 'மாஞாலம்' என்பதற்குப் 'பெருமைநிறைந்த மெய்ஞ்ஞானிகள்' எனப் பொருள் கண்டு 'அருளாள்வார்க்கு அல்லல் இல்லாமைக்கு மெய்ஞ்ஞானிகளே சாட்சி' என்பர். இப்பாடம் ஏற்புடையதாயின் 'மெய்ஞ்ஞானி' என்ற உரையும் ஏற்புடையதாம்.

பி.எஸ். சுப்பிரமணியசாத்திரியார் பாலருரையில் 'பூமி செழிப்புடன் விளங்குவதே அருளுடையார்க்குத் துன்பம் இல்லை,

என்பதைக் காட்டுகிறது என்பர். அருளாளர் உண்மையால் நிலம் வளமுடையதாகிறதன்றிப் பூமி வளமாயிருப்பதால் அருளுடையார் அல்லல் இலர் ஆகிறார் என்பதும் ஆய்வுக்குரியது.

இவ்வுரைகளின் தடைவிடைகளைச் சீர்தூக்கிப் பார்க்கும்போது நிலம் எங்கு வளமும் வளியும் உடையதாகிறதோ அங்கு அருளாள்வார் அல்லலின்றி வாழ்கிறார்கள் என்பதை அறியலாம் என்ற கருத்துடைய உரைகள் சிறந்தன எனலாம்.

ஓ) ஒப்புமைப்பகுதி:

'அருளாள்வார்'

கண்ணே யமிழ்தே கருணா கரனே — *கம்பராமா.*, 8816

'அல்லல் அருளாள் வார்க் கில்லை'

அறந்தலை நின்றார்க் கில்லை யழிவெனு மறிஞர் வார்த்தை
சிறந்தது....... — *கம்பராமா.*, 9309.

25. 6. பொருள்நீங்கிப் பொச்சாந்தார் என்பர் அருள் நீங்கி
அல்லவை செய்தொழுகு வார். (உசகூ)

உரைப்பகுதி:

அ) மணக்.: முற்பிறப்பின்கண் அருளினின்று நீங்கி அல்லாதவற்றைச் செய்தொழுகினவர், இப்பிறப்பின்கண் பொருளினின்றும் நீங்கி மறவியும்[1] உடையவர் என்று சொல்லுவர் என்றவாறு.

இது பொருளில்லையாம் என்றது.

ஆ) *பரிதி:* எ-து சத்தியத்தைச் சேராமல், பொய்ந்நெறி ஒழுகுவார் அருளை நீங்கிக் கொடுமைத் தொழில் செய்வார் என்றவாறு.

ஈ) *காளி.:* 'பொய்ச்சாந்தார்' பாடம். எ-து மெய்ப்பொருளாகிய இதனை நீங்கி மற்றிதனை இகழ்ந்துவிடுவார் என்று சொல்லுவர் சான்றோர்; யாரை எனின், அருள் நீங்கி அஃதல்லனவற்றையே செய்து பின்னும் மீட்சி விகாரமின்றியே[2] மறித்து[3] அதன் கண்ணே ஒழுகுகின்ற அறிவில்லாதாரை என்றவாறு.

பொய்ச்சாப்பு என்பது இகழ்ச்சி

உ) *பரிமேல்.:* உயிர்கண் மாட்டுச் செய்யப்படும் அருளைத்தவிர்ந்து தவிரப்படுங் கொடுமைகளைச் செய்தொழுகுவாரை முன்னும்

1 மறவி - மறதி; 2 மீட்சிவிகாரமின்றி- மீளும்வேறுபாடின்றி; 3 மறித்து- திரும்பி

உறுதிப் பொருளைச் செய்யா தாம் துன்புறுகின்றமையை மறந்தவர் என்று சொல்லுவர் நல்லோர்.

உறுதிப்பொருள் அறம். துன்புறுதல் பிறவித்துன்பம் மூன்றனையும்[4] அனுபவித்தல் மறந்திலராயின், அவ்வாறு ஒழுகார்என்பது கருத்து[5].

ஊ) கவிராசர்: சீவன்களிடத்திலே செய்யப்பட்ட தயையை விட்டுத் தீவிரதுக்கக் கொடுமைகளைச் செய்கிறவர்களை முந்தின ஜென்மத்திலே தமக்குறுதியான தருமங்களைச் செய்யாமல் துக்கப்படுகிறதை மறந்தவர்கள் என்று சொல்லுவார்கள் அறிவுள்ளவர்கள் எ-று.

ஏ) பழைய.2: உயிர்களிடத்தும் செய்யும் அருளைத் தவிர்த்து கொடுமை செய்து திரிவார், தமக்கு முன்செய்த நல்வினையாகிய பொருளைத் தவிர்ந்து, துன்புறுகின்றதை மறந்தவர் என்று சொல்வர் அறநூல் அறிந்த பெரியோர்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக்குடவர் 'முற்பிறவியில் அருள் அற்றிருந்த தீவினையே இப்பிறவியில் பொருளற்று வறுமையுள் வாடுதற்கு ஏதுவாயிற்று' என அருளற்று அல்லவை செய்தலைப் போன பிறவிக்கும், வறியனாதலை இப்பிறவிக்கும் ஆக்கினார் என்க. பொருள்-செல்வம்.

அதிகாரம் அருளுடைமை. இயல் துறவு. துறவிக்குப் பொருளற்றிருத்தலால் பற்றொழிதலாகிய துறவு சித்திக்கும் ஆதலின் அவனுக்கு அது தீமையாகாது. குறட்போக்கு எடுத்த இப்பிறவியில் அருள் நீங்கி அல்லவை செய்தொழுகுவார் (உறுதிப்) பொருளின் நீங்கித் துறவு மேற்கொண்ட தம் இலட்சியத்தையும் மறந்தவராவர் என்னும் கருத்துடையது. எச்சரிக்கையாகவும் உள்ளது. இதனை இருமைக்கும் இயைபு படுத்துவதால் பயனுமின்று ஆதலால் அவர் உரை ஆய்வுக்குரியது.

பரிதியார் 'பொருள் நீங்கிப் பொச்சாந்தார், அருள் நீங்கி அல்லவை செய்தொழுகுவார்' என பொச்சாந்தாரைஎழுவாயாக்கி, ஒழுகுவார் என்பதைப் பயனிலையாக்கி முடிப்பர். இதன் பயன் பொய்நெறி ஒழுகுவார் அருள்நீங்கிக் கொடுமை பல செய்வார் எனப் பொருள் தந்தது. பொருள் நீங்கிப் பொச்சாந்தார்க்குத் தலைமை வழங்குவதால், அவர் செயல் அருளின் நீங்கலும் அல்லவை

4 4-ஆம் குறள் உரையில் காண்க.

5 தாம் பிறவித்துன்பங்களால் வருந்துகின்றதை மறவாதவராயின், உயிர்களிடத்துச் செய்யப்படும் அருளை ஒழித்து, பற்றற ஒழிக்கப் படுவனவாகிய கொடுமைகளைச் செய்து நடக்கார் என்பது கருத்தாம் என்க.

செய்தலும் ஆகி அருளுடைமைக்குச் சிறப்புத்தராமல் அதிகார இயைபை இழக்கிறது.

காளிங்கர் 'மெய்ப்பொருளை நீங்கி அம்மெய்ப் பொருளையே மறந்தவர்கள் அல்லவை செய்தொழுகுவர்' என்பர். பொருள் மெய்ப்பொருள். இவர் கருத்து துறந்து அருளுடையராய் மெய்ப் பொருளைச் சார வேண்டியவர்கள் அதனை விட்டு அருளல்லன வற்றையே செய்து ஒழுகுவார்கள் என்பது இவ்வுரை ஏனைய உரை களிலும் இயற்பொருத்தமும் கடமையையுணரச் செய்வதும் ஆம் எனலாம்.

பரிமேலழகர் 'செய்யத்தக்க அருளை விட்டுச் செய்யத்தகாத அல்ல வைகளைச் செய்வார் முன்னும் உறுதிப்பொருளையுணராமல் தாம் துன்பப்படுவதை மறந்தவர்கள்' என *மணக்குடவரை* ஒத்து உரைப் பர். முன்னும்- என்பது முற்பிறவிகளிலும் என்னும் பொருளது. *கவிராசர்* சொன்னநடை சிறிது மாறியிருப்பினும் *பரிமேலழகரையும் மணக்குடவரையும்* ஒட்டிய கருத்துடையவர். *பழைய* 2- முன்செய்த நல்வினையாகிய பொருளைத் தவிர்ந்து துன்புறுகின்றதை மறந்தவர் என்பதால் இம்மையில் துன்புறுவது முன்னே நல்வினையாகிய பொருளைத்துறந்ததன் விளைவு என்ற கருத்தினதாய் *மணக்குடவர் பரிமேலழகர்* முதலானோர் கருத்தையே சார்ந்து நிற்கிறது. ஆனால் அருளின்றிக் கொடுமைசெய்பவர் நல்வினைப்பொருளையிழந்ததை மறந்தவர் என்ற கருத்துரை இனிவருபிறவியைக் குறித்தது போன்று உளது.

இங்ஙனம் வருபிறவிப் பயனாயின் பொச்சாப்பர் என எதிர் காலத்தால் இருத்தல் நலம். அன்றாயின் துணிவு பற்றிக்காலம் வழுவியதாகக் கோடல் தகும்.

முற்பிறவியில் அருணீங்கி அல்லவை செய்தாரேஇன்று வறுமை யும் மறதியும் உடையவர் என்னில் அவை துறவிக்கு வரவேற்கத் தக்கனவாய்ப் பற்றுகைக்கு ஏதுவாகின்றன. ஆதலால் இவ்வுரை இவ்வியலுக்குப் புறமாகிறது. இவைகளை எண்ணிக் காளிங்கர் உரையின் நயம் கொள்க.

சொ.த. 'பொருள்- உறுதிப்பொருள்', அது அறம் எனப் பொருள்கண்ட *பரிமேலழகரை* ஒட்டி 'அருளற்றவர் உறுதிப் பொருளாகிய அறத்தையும் விட்டவராவர்' எனக் கருத்தும் உரைப்பர். இது *பரிமேலழகரை* ஒட்டிய கருத்தேயாம்.

தேவநேயர் 'கருணைகாட்டாது ,கொடுமைகளையே செய்வார் முற்பிறப்பினும் அறமாகிய உறுதியைத் தேடாது இப்பிறப்பினும்

அதனை மறந்தவராவர்' என, மணக்குடவர், காளிங்கர் கருத்துக் களைத் தழுவிக் கூறுவர்.

குழந்தை 'அறத்தையும் இழந்து, அருள் செய்தலாகிய கடமையையும் மறந்தவர்' என்பர். இராமலிங்கனார் 'பொருளை ஓரிடத்தில் வைத்துவிட்டு, அவ்விடத்தை மறந்து விட்டவர்கள் ஆவார்கள்' என்பர். இவ்வுரை உலகியலை ஒட்டி எளியதாயினும் இயற் பொருத்தமின்மையை எண்ணுக.

இவ்வுரைகள் அனைத்தினும், துறவி தாம் மேற்கொண்ட இலக்கைவிட்டு, அவ்விலக்கை எளிதிற் கூட்டுவிக்கும் அருளை மறத்தலாகாது என்ற கருத்துடைய உரைகள் சிறப்புடையன.

ஒ) ஒப்புமைப் பகுதி:

''பொருணீங்கிப் பொச்சாந்தார்''

உயிர்களெல்லாம் உணர்வு பாழாகிப்
பொருள்வழங்கு செவித்துளை தூர்ந்தறி விழந்த
வறந்தலை யுலகத் தறம்பாடு சிறக்க

—மணி., 10: 7—9.

25.7. அருளில்லார்க் கவ்வுலகம் இல்லை பொருளில்லார்க் கிவ்வுலகம் இல்லாகி யாங்கு. (உசஎ)

உரைப்பகுதி:

அ) மணக்.: அருள் இல்லாதார்க்கு மேலுலகம் உறுங்காட்சி[1] இல்லை; பொருள் இல்லாதார்க்கு இவ்வுலகின்கண் இன்பம் உறுங் காட்சிஇல்லையானாற் போல என்றவாறு.

இஃது அருளில்லாதார் சுவர்க்கம் புகார் என்றது.

ஆ) பரிதி.: எ-து அருளில்லாதார்க்குத் தெய்வலோகம் இல்லை; அது போலப் பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்றவாறு.

ஈ) காளி.: எ-து இவ்வுலகத்தொருவர் துறவின்கண் இயலுமிடத்து அருள் என்னும் பெருந்துணை இலராயின், இப்பிறவித்துயர் நீங்கத் தாம் வீட்டின்பம் பெறுவதொன்றில்லை; என்போலஎனில் பொருளீட்டம்[2] இல்லாதார்க்குப் பிறவிக்கண் பெறுவதாகிய இவ்வுலகம் இல்லாதிருக்கின்றது யாதொருபடி மற்று அப்படியே என்றவாறு.

1 காட்சி- நோக்கம்
2 பொருளீட்டம்- செல்வத்தின்குவியல்.

உ) *பரிமேல்.*: உயிர்கள் மேல் அருளில்லாதார்க்கு வீட்டுலகத்தின்பம் இல்லை பொருளில்லாதார்க்கு இவ்வுலகத்தின்பம் இல்லையாயினாற் போல.

அவ்வுலகம் இவ்வுலகம் என்பன ஆகுபெயர். இவ்வுலகத்து இன்பங்கட்குப் பொருள்காரணமானாற்போல, அவ்வுலகத்துஇன்பங்கட்கு அருள்காரணம் என்பதாயிற்று.

ஊ) *கவிராசர்*: சீவன்கள் மேலே அருள் இல்லாதவர்களுக்கு வீட்டுலகத்தின் இன்பமில்லை; பொருள் இல்லாதார்க்கு இந்த உலகத்திலேஇன்பம் இல்லையானாற் போல எ-று.

ஏ) *பழைய 2*: உயிர்கள் மேல் அருள் இல்லாதவர்க்குச் சுவர்க்க லோகத்து இன்பம் இல்லை; பொருள் இல்லார்க்கு இவ்வுலகத்து இன்பும் இல்லாது போல.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

இக்குறட்பா தெளிவாகப் பொருள் தெரிவிப்பது. ஆயினும் அவ்வுலகம்-இவ்வுலகம் என்பன ஆசிரியர்கள் கருத்தை எங்கெங்கோ அழைத்துப் போவதைக் காண்கிறோம். *மணக்குடவர்*, அவ்வுலகம்-இவ்வுலகம்— உறுங்காட்சி இவ்வுலகம்' என்பர். *காளிங்கர்* 'வீட்டின்பம்- இவ்வுலகம்' என்பர். *பரிமேலழகர்* 'வீட்டுலகத்தின்பம்-இவ்வுகலத்தின்பம்' என்பர். *கா.சு.* 'இவ்வுலகத்தே இன்பம்-வீட்டுலகத்து இன்பம்' என்பர். *மு.வ.* 'இவ்வுலகத்து வாழ்க்கை அவ்வுலகத்து வாழ்க்கை' என்பர். இங்ஙனமே அனைவரும் கூறுவன. ஆயினும் *பரிமேலழகர்* 'உலகம் என்பது ஆகுபெயராய் உலகத்தின்பத்தை உணர்த்திற்று' என்பர். அவ்வுலகத்து இன்பம் இல்லை என்றால் பொருள் இவ்வுலகத்தில் இன்பம் துய்த்தற்குத் துணையாதல் போல அருள் அங்குத் துணையாம் என்பது பொருளன்று. அருள் அவ்வுலகம் அடைதற்கு ஏது அவ்வுலகத்தை யடைந்தபின் உயிர் அருள் அன்பு முதலிய தன்குணங்களின்றிச் செம்பொருளின் தன்மையேயாய் இருத்தலின் அங்குத்தன் அருள்துணையாகாது. இறையருளே துணையாகும். இன்பம் தானே விளங்கித் தோன்றும் என்பதாம். ஆகவே அருள் வீடடைதற்கு வாயில் என்ற அளவே, 'இல்லாகியாங்கு' என்பதனை ஆசிரியர் அனைவரும் இல் ஆகி ஆங்கு எனப் பிரிப்பர். *தேவநேயர்* இல்லாகிய ஆங்கு எனப் பிரிப்பர்.

பழைய உரை: 2 'சுவர்க்க லோகத்து இன்பம் இல்லை' என்னும். *பரிமேலழகர்* முதலியோர் 'வீட்டுலக இன்பம்' என்பர். துறவிகள் அருளுடையராய்ப் பற்றற்று மெய்யுணர்ந்து எய்துவது சுவர்க்கம்

அன்று. வீட்டுலகமே; ஆதலின், வீட்டுலகத்தின்பம்என்பார்உரையே சிறந்தது.

ஒ) ஒப்புமைப் பகுதி:

''பொருளில்லார்க்கிவ்வுலகம் இல்''

இல்லோன் இன்பங் காமுற் றாஅங்கு —குறுந்., 120:1

ஒத்தகுடிப் பிறந்தக் கண்ணும் ஒன் றில்லாதார்
செத்த பிணத்திற் கடை —நாலடி., 281

மட்டார்பூம் பிண்டி வளங்செழு முக்குடைக்கீழ் மாலேகண்டீர்
முட்டாத வின்பப் புதாத்திறக்குந் தாளுடைய மூர்த்தி பாதம்
எட்டானும் பத்தானு மில்லாதார்க் கிவ்வுலகி லின்ப மேபோல்
ஒட்டாவே கண்டீர் வினையவனைத் தேறாதார்க் குணர்ந்தீ என்றே
—சீவக. 1549.

முற்றும்

பொருளிலார்க்கு இவ்வழிப் பொறியின் போகமும்
அருளிலார்க்கு அறத்தினால் பயனும் நூல்வழி —குளா., 2082

இல்லெனின் வாழ்க்கையு மில்லை —வளையா.,39

அருளிலார். . . . . . அருளி னெஞ்சினன் —கம்பராமா., 2288

மாடுதான தில்லெனின் மானுடர்
பாடுதான் செல்வாரில்லை —அப்பர், கொண்டீச்சரம், 3

பத்தெட்டுடைமை பலருள்ளும் பாடெய்தும் —நாலடி., 281

இ) மேற்கோள் பகுதி:

மயிலை.: உடம்போடு கூடிய உயிர்க்குணம் 'அருள்' என்பதற்கு மேற்கோள். (நன். 451)

பெருந்.: தர்க்கத்தில் எடுத்துக் காட்டுப் போலி. (விரசோ. 180).

சுவாமி.: இல்லாகி யாங்கு என்பதற்கு இல்லையானாற்போல என்று 'ஆனால்' என்பதை விரித்துப் பொருளெழுதி வாளாபோயினர் என மறுப்பர். (இ. கொ. 86)

அடியார்: 'பிணிப்பறுத்தோர்' பிணிப்பு-பற்று; அது அன்பாகிய ஒரு தளை' அதனை அறுத்தோர் அருளுடையோர்; அவர் பேற்றி யாவது சுவர்க்கம் எனக்கொள்க.

'அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை... ஆங்கு' என்றாராக லின் (சிலப். அடைக்கலக். 100.)

25.8. பொருளற்றார் பூப்பர் ஒருகால் அருளற்றார்
அற்றார்மற் றாதல் அரிது. (உசஅ)

உரைப்பகுதி:

அ) மணக்.: பொருளில்லாதார் ஒரு காலத்தே பொருளுடையார் ஆதலும் கூடும்; அருளில்லாதார் கெட்டார், பின்பு ஆக்கமுண்டாகாது என்றவாறு.

இது பொருளின்மையேயன்றி எல்லாக்கேடும் உண்டாம் என்றது.

ஆ) பரிதி: எ-து பொருளற்றார் ஒருகாலத்திலே செல்வராவர்; அருளற்றார் நரகாத்துமாக்கள்[1] ஆவர் என்றவாறு.

ஈ) காளி.: எ-து முன் தமக்குள்ள பொருட்செல்வத்தார் பின்னும் ஒரு காலம் பொருட்பொலிவுடையார்[2] ஆகவும் கூடும்; இனி அவ் வாறன்றி வீட்டின்பக் காரணமாகிய மெய்யருளற்றார்[3] மறித்து ஆக்க முடையார் ஆதல் அரிது என்றவாறு.

பூப்பர் என்பது பொலிவுடையர் என்றது.

உ) பரிமேல்.: ஊழான் வறியராயினார் அது நீங்கிப் பின் ஒரு காலத்துச் செல்வத்தால் பொலிவர், அவ்வாறன்றி அருளில்லாதார் பாவம் அறாமையின்[5] அழிந்தாரே; பின் ஒரு காலத்தும் ஆதலில்லை.

மற்று வினைமாற்றின்கண் வந்தது[6]. மேல் பொருளின்மையோடு ஒருவாற்றான் ஒப்புமை கூறினாராகலின், அது மறுத்து, பிற வாற்றான் அதனினும் கொடிது என்பது கூறியவாறு.[7]

ஊ) கவிராசர்: முன்செய்த தீவினையால் தரித்திரரான பேர்கள் அந்தத் தரித்திரம் போய்ப் பிறகு ஒரு காலத்திலே ஐசுவரியவான்கள் ஆவார்கள். அருளில்லாதவர்கள் பாவந்தொலையாமல் அழிந்து நரகத்திற் போகிறதல்லாமல் பின்னையொரு காலத்திலும் பாபம் போய்ப் புண்ணியவான்களாகிறது அருமை.

---

1 நரகாத்துமாக்கள்- நரகத்து விழ்ந்து வருந்தும் உயிர்கள்

2 பொருட்பொலிவு— பொருள்மிகுதியான் வரும் விளக்கம்

3 மெய்யருளற்றார்-உண்மையான அருட்குணம் இல்லாதார்.

4 ஊழ்- நல்வினையின் பயனாகிய இன்பமும் தீவினையின் பயனாகிய துன்பமும் அவ்வினைகளைச் செய்தவனையே சென்று அடைவதற்குக் காரணமாகிய நியதி.

5 அறாமையின் — நீங்காமையின்.

6 அற்றார் என்னும் வினையை மாற்றி அறாமையின் என்னும் பொருளைத் தந்தமையின் மற்றுவினைமாற்றாயிற்று.

7 மேல் (947 ஆம் குறளில்) பொருளில்லாமையோடு அருளில்லாமையை ஒருவகையான் உவமை கூறினாராதலால் (இக்குறளில்) அது மறுத்து (பொருளில்லாமையோடு அருளில்லாமையை ஒப்புக்கூறியதை மறுத்துப் பிறவாற்றான் (வேறொரு வழியினால் அஃதாவது ஊழினால் தரித்திரராயினோர் அத்தரித்திரம் நீங்கிப் பின்பொரு காலத்தில் செல்வமுடையவராவர்; அருளில்லாதவர் பாவம் ஒழியாமையின் அழிந்தவரே; பின்னொரு காலத்தும் விருத்தியடைவதில்லை யென்பதால்) பொருளில்லாமை யானும் அருளில்லாமை கொடியது என்று கூறியவிதமாம் என்க.

ஏ) பழைய 2: ஊழ்வினையால் வறியர் ஆனவரும் ஒருகாலத்துச் செல்வர் ஆவர். அப்படி ஆகமாட்டார். அருள்இல்லாதவர்; பாவந் தீராமையால் அழிந்தார் பின்னொருகாலத்தும் ஆகுதல் அரிது.

ஐ)தொகுப்பும் குறிப்பும்:

அருள் அற்றார்:

'வீட்டின்பக்காரணமாகிய மெய்யருள் அற்றார்' *காளி.*, 'அருளில்லாதார்' *மணக்.*, *பரிமேல்.*, *பரிதி.*, *மு.வ.* *சி.இ.*, *குழந்தை*, **தேவநேயர்** அனைவரும்; 'அருட்குணத்தை இழந்தவர்' *இராம.* அனைவரும், இல்லாதவர்- இழந்தவர்கள் என உரை காண்பாராயினும், அருட்குணம் உடம்போடுகூடிய உயிர்க்குணம் என்பதை *நன்னூல்* 451 நூற்பாவின் *மயிலைநாதர்* எடுத்து விளக்குதலான் வெண்மை சுண்ணத்தை விட்டு நீங்காததுபோல அருளும் உயிரைவிட்டு நீங்காது ஆதலின் அருள் வெளிப்படா தொழியப் பாவமிகுதியின் அழிந்தாரேயாவர் என்ற உரை சிறந்த தாகும். ஆனால் அறுதல் என்பது உயிர்க்குணமாகிய அருள் வெளிப் பட வேண்டிய இடங்களில் வெளிப்படாமல் அதற்கு மாறான மருள் விளக்கமுறுதல் என்ற பொருணோக்கினதாம்.

பரிமேலழகர் 'பொருளுறாதான் வறியாராதல் ஊழின் வலி என்றும், அவ்வூழ் ஆகூழாயின் அசைவின்மை வாயிலாக ஆக்கம் பெறுதல் கூடும் என்றும், அருளறின் அற்றது அற்றதே. மீண்டும் அருளுடை யராதல் கூடாது என்றும்' பொருள்பட விளக்கந்தருகிறார்.

25.9. தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால் தேரின்
அருளாதான் செய்யும் அறம். (உசகூ)

உரைப்பகுதி:

அ) *மணக்.*: தெளிவில்லாதான் மெய்ப்பொருளைத் தெளிந்தாற் போலும்; ஆராயின், அருளில்லாதான் செய்யும் அறமும் என்றவாறு.

இஃது அறஞ் செய்யவும் மாட்டார் என்றது.

ஆ) *பரிதி.*: எ-து குழந்தை கையில் மாணிக்கம் என்று அறிக அறிவில்லாதான் செய்யும் தன்மம் என்றவாறு.

ஈ) *காளி.*: எ-து இவ்வுலகத்து மெய்ஞ்ஞானமென்னும் அறிவில்லா தான் வீட்டின்பமென்னும் மெய்ப்பொருளினை விடக்கண்ட அத்தன்மையுடைத்து நூன்முறை வழிநுண்ணிதாக ஆராய்ந்து தன் நெஞ்சத்து அனைத்துயிர்க்கும் ஒப்ப நிதழ்வதோர் அருளிலாதான் செய்யக் கருதும் துறவறமானது என்றவாறு.

தெருளாதான் என்பது அறிவில்லாதான். தேரின் என்பது ஆராயின்.

உ) *பரிமேல்.*: உயிர்கண் மாட்டு அருள் செய்யாதவன் செய்யும் அறத்தை ஆராயின், ஞானம் இல்லாதவன் ஒருகால் மெய்ப் பொருளை உணர்ந்தாற்போலும்.

மெய்ப்பொருள்- மெய்ந்நூலில் சொல்லும் பொருள். நிலை பெற்ற ஞானமில்லாதவன்[1] இடையே மெய்ப்பொருளை உணர்ந் தால் அதனைத் தன் ஞானமின்மையால் தானே அழித்துவிடும்; அது போல அருளாதான் இடையே அறஞ்செய்தால் அதனைத் தன்னரு ளாமையால் தானேயழித்துவிடும் என்பதாயிற்று; ஆகவே, பிறஅறங் கட்கெல்லாம்அருளுடைமை மூலம் என்பதுபெற்றாம். இவை நான்கு பாட்டானும்அத்துணை இல்லாதார்க்கு வரும் குற்றம்கூறப்பட்டது.

ஊ) *கவிராசர்*: சீவன்களிடத்திலே தயையில்லாதவன் செய்கிற தருமத்தை ஆராய்ந்து பார்த்தால், சம்யக்ஞானம்[2] இல்லாதவன் நிச்சயமாயிருக்கிற சீவன்[3] முதலிய ஆறுவிதவஸ்து[4] ஸ்வரூபத்தைச்[5] சொன்னாற்போலும் (எ-று).

எ) *பழைய 2*: உயிரிடத்து அருள் செய்யாதவன், செய்கின்ற துறவறம், ஆராயின், ஞானம் இல்லாதவன் மெய்ப்பொருளைக் கண்டது போலும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்.:

''தெருளாதான்''

'தெளிவில்லாதவன்' *மணக்.*; *சி.இ.*; 'அறிவில்லாதவன்' *பரிதி.*; 'மெய்ஞ்ஞானம் என்னும் அறிவில்லாதவன்' *காளி.*; 'ஞான மில்லாதவன்' *பரிமேல்.*; *பழைய உரை 2*; 'சம்யக்ஞானம்' *கவிராசர்*; 'ஞானமுறாதவன்' *சொ.த.*; 'மனத் தெளிவில்லாதவன்' *கா.சு.*, *மு.வ.*, *இராம.*,

இவ்வுரைகளில் 'அறிவில்லாதவன்' 'ஞானமில்லாதவன்' என்பனவும் அக்கருத்துடையனவும் ஏற்புடையன அல்ல. தெருள்- தெளிவு. அறிவில்லாதவன் என்பது தெளிந்த அறிவு இல்லாதான் என்பதே கருத்து. அறிவு அருள் முதலியன உயிர்க்குணமாதலின் அறிவின்றி ஒருயிர் இருத்தல் இயலாதது. ஆதலின், *மணக்குடவர்*, *இலக்குவனார்* உரைகளே ஏற்புடையன. *காளிங்கர்* உரையும்

1 நிலைபெற்ற ஞானம்- சற்குரு மூர்த்தியினிடத்துப் பலமுறை தத்துவ விசாரஞ் செய்த தனாலுண்டாகிய ஐயந்திரிவின்றிய ஞானம். 2. சம்யக்ஞானம்— நல்லறிவு.

3 சிவன்- உயிர். 4. ஆறுவிதவஸ்து- புத்கலன், தர்மம், அதர்மம், ஆகாசம், காலம் என்பன (மேருமந்தரபுராணம் 69, 70, 71)

5 ஸ்வரூபத்தை—உருவ முதலிய நிலை வேறுபாடுகளை,

'மெய்ஞ்ஞானம் என்னும் அறிவு என்ற விளக்கத்ததாய் *மணக்குடவர்* கருத்தை ஓரளவு உட்கொண்டதாகலாம்.

''மெய்ப்பொருள்''

'வீட்டின்பம் என்னும் மெய்ப்பொருள்' என்பர் *காளி.*; 'மெய்ந் நூலிற் சொல்லிய பொருள்' என ஆகமப்பிரமாண எண்ணத்தைக் கொணர்ந்தியைக்க முற்படுகிறார் *பரிமேலழகர்.* செம்மையும் அதாவது நேர்மைப்பண்பும், என்றும் அழியாதிருக்கும் உண்மைத் தன்மையும் உள்ள பொருளையே **வள்ளுவர்** செம்பொருள் மெய்ப் பொருள் என்கின்றார் ஆதலின் மெய்ப்பொருள் என்றது உண்மைத் தன்மையை உடைய பொருள் என்பதே நேரிய பொருள். அதனை மெய்ந்நூல்கள் சொல்லலாம். மெய்ந்நூல்கள் சொல்வதற்கும் அதனிடம் உள்ள மெய்ம்மையே ஏது ஆதலின் என்க.

ஒ)ஒப்புமைப் பகுதி:

'தெருளாதான்'

ஒட்டாவே கண்டீர் வினையவனைத் தேறாதார்க்கு உணர்ந்தீர் அன்றே
—*சீவக.*, 1549

25. 10. வலியார்முன் தன்னை நினைக்கதான் தன்னின் மெலியார்மேல் செல்லும் இடத்து. (உ௰)

உரைப்பகுதி:

அ) *மணக்.*: தாம் தம்மின் மெலியார்மேல் வெகுண்டெழுமிடத்து, தம்மின் வலியார்முன் தாம் நிற்குநிலையை நினைக்க என்றவாறு.

ஆ) *பரிதி.*: எ-து தான் தனக்கு எளியார் மேல் கோபிக்குங் கோபத்தைத் தனக்குவலியாரிடத்திலே சென்று அறிக என்றவாறு.

இ) *பரிப்.*: அருள் உண்டாக்குமாறு கூறிற்று.

ஈ) *காளி.*: எ-து தான் தன்னின் வலியார்முன் சென்றால் அவரால் உறும்துயர், இழிவு, எளிமை இவையிற்றை நினைத்துக் கொள்க. அது எவ்விடத்து என்னின் தான் தன்னின் மெலியாரை அடர்க்கச்[1] செல்லுமிடத்து என்றவாறு.

உ) *பரிமேல்.*: தன்னின் வலியார் தன்னை நலியவரும் பொழுது அவர்முன் தான் அஞ்சிநிற்கும் நிலையினை நினைக்க, அருளில்லா தவன் தன்னின் எளியார்மேல் தான் நலியச்[2] செல்லும் பொழுது.

மெலியார் எனச் சிறப்புடைய உயர்திணைமேல் கூறினாராயி

1 அடர்க்க—வருத்த. 2 நலிய—வருத்த

னும், ஏனை அஃறிணையுங்[3] கொள்ளப்படும். அதனை நினைக் கவே[4] இவ்வுயிர்க்கு அவ்வாறே அச்சமாம் என்றறிந்து அதன்மேல் அருளுடையனாம் என்பது கருத்து. இதனால் அருள் பிறத்தற்கு உபாயம் கூறப்பட்டது.

இராமா: தான்றன்னின்மெலியார்மேற் செல்லுமிடத்து-அருளில் லாதவன்தனக்கு எளியவர்மேற்கோபித்துத் தண்டனைசெய்யப் போம்போது, வலியார்முற்றன்னை நினைக்க-தன்னின்வலியரா யினோர் தன்னைவருத்தப்படுத்தவரும்போது அவர் முன்னே தானஞ்சிநின்றநிலையைநினைக்க, எ-று.

பெரியார்மேலெனவுயர்திணைப்பலர்பால்மேல்வைத்துக்கூறினா ராயினும் ''ஒருமொழியொழிதன்னினங் கொளற்குரித்து'' என்பதனால் ஒழிந்தநான்குபாலினுங் கொள்ளப்படும். அவற் றையவ்வாறுநினைக்கவே இவற்றிற்குமிவ்வாறே யச்சமா மென்றறிந்து அவ்வுயிர்களிடத்தருளுடையவனாவானென்பது கருத்து. இதனால் அருள்பிறத்தற்குபாயங் கூறப்பட்டது.

ஊ) *கவிராசர்*: தன்னிலும் பலவானானவன் தன்னை வாதை[5] பண்ண வருகிறபோது அவர்கள்முன் தான் பயப்பட்டு நிற்கிற நிலையை நினைத்துக் கொள்ளவேண்டும். தான் தன்னிலும் ஏழை யானபேரை வாதை பண்ணப் போகிறபோது (எ-று).

ஏ) *பழைய2*: தன்னின் யார் வலிதன்னை நலிய வரும்பொழுதுஅவர் முன்தான் அஞ்சி நிற்கும் நிலையை நினைக்க; அருள் இல்லாதவன் தன்னின் எளியார்மேல் தான் வலியச் செல்லும்போது.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

பழைய உரையாசிரியர்களில் *மணக்குடவர்* உரை 'வலியார்முன்' என்பதற்குத் 'தம்மின் வலியார் தம்மை வெகுளுமிடத்து, என்னும் கருத்தினது. இதனை விரித்தே *பரிமேலழகரும், காளிங்கரும்* எழுதி னர். *பரிதியார்* உரை நன்கு தெளிவிலது. தான் தனக்கு எளியார் மேல் கோபிக்கும் கோபத்தைத் தனக்கு வலியாரிடத்திலே சென்று அறிக எனின் தனக்கு வலியார் இடத்திலேதான் கோபிக்கும் கோபத் தால் விளையும் பயனை அறிக என்னுங்கருத்தினதாய் ஏனையோர் கருத்தினின்று சிறிது மாறுபடுகின்றது. 'தன்னை—தான் அஞ்சி நிற் கும் நிலையினை' என்ற உரையைக் காட்டிலும் *காளிங்கர்* கூறும் விளக்கம் சிறந்ததாகும்.

---

3 ஏனை அஃறிணை—மாடு, மான், பறவை முதலிய அஃறிணையுயிர்கள். இவ்வாறு கொள்ளுதல் உபலட்சணமாம்.

4 தன்னைப் பார்க்கிலும் வலியவர் தன்னை வருத்த வரும்போது அவ்வலியவர் முன்பு தான் பயந்து நிற்கும் நிலையை நினைக்கவே.

5 வாதை—துன்பம்

ஓ) ஒப்புமைப் பகுதி:

முற்றும்

.... வலிய மெனாமனம்
புறந்தி றம்ப வெளியவர்ப் பொங்குதல்
அறந்தி றம்பல் ... ... —*கம்பராமா.*, 4146

அல்லுநன் பகலு நீங்கா யனங்கநீ யருளிற் றீர்ந்தாய்
செல்லுமென் றெளிவந் தோர்மேற் செலுத்தலுஞ் சீர்மைத்தாமோ
—*கம்பராமா.*,4310

25. அருளுடைமை

	அருட்செல்வம்	நல்லாற்றான்	அருள்சேர்ந்த	மன்னுயிர்	அல்லல்	பொருள் நீங்கிப்	அருளில்லார்க்	பொருளற்றார்	தெருளாதான்	வலியார் முன்
மணக்.,	2	1	3	4	5	8	6	9	7	10
பரிதி.,	7	3	1	2	4	5	10	6	9	8
பரிப்.,	—	—	—	—	—	—	—	—	—	10
காளி.,	9	7	6	5	1	8	2	10	4	3
பரிமேல்.,	1	2	3	4	5	6	7	8	9	10

25-வது அதிகாரம் 'அருளுடைமை' முற்றிற்று.

26. புலான் மறுத்தல்

அ) *மணக்*.: புலான் மறுத்தலாவது புலால் தின்றால் அருளில்லை யாம்என்பதனால் புலாலை விடுக.

ஆ) *பரிதி*.: புலால் மறுத்தலாவது சர்வாத்மாக்களிடத்திலும்[1] அருளுண்டாகில் புலால் மறுக்க வேணும் என்றவாறு.

உ) *பரிமேல்*.: அஃதாவது ஊனுண்டலை ஒழிதல். கொலைப் பாவத்தைப் பின்னும் உளதாக்கலின் அதற்குக் காரணமாதலையும் முன்னும் அதனான்வருதலின் அதன்காரியமாதலையும் ஒருங்குடைத் தாய ஊனுண்டல் அருளுடையார்க்கு இயைவதன்று ஆகலின் அதனை விலக்குதற்கு, இஃது அருளுடைமையின்பின் வைக்கப் பட்டது.

> *இராமா*.: அதாவது, புலாலுண்பதை விலக்கல். கொலைப் பாவத்தைப் பின் உளதாக்கலின் அதற்குக் காரணமாவதையும் முன்னுமக் கொலேயாலன்றிப் புலால் தின்னக் கிடையாமையினக் கொலைக்குக்காரியமாவதையுமொருமித்துடையதாகிய புலா லுணல் அருளுடையார்க்குப் பொருந்தாமையாலதைவிலக்குதற் பொருட்டு இது அருளுடைமையின் பின் வைக்கப்பட்டது.

ஊ) *கவிராசர்*: அஃதாவது மாங்கிசம்[2] தின்கிறதைவிட்டுவிடுகிறது. மாங்கிசம் சீவன்களைக் கொல்லாமல் வாராது. சீவன்களைக் கொல்லுகிறவர்களுக்குத் தயை என்பது இராது. தயையில்லாதவன் என்ன தர்மம் பண்ணினாலும் தானம் தபசுபண்ணினாலும் ஒருபலனு மில்லாமல் சாம்பலிலே வார்த்த நெய் போலாம் என்பதாம்.

ஏ) *பழைய* 2: அஃதாவது புலாலை உண்ணாமல் விடுதல்.

மல்லர்: அதாவது மாமிசத்தைச் சாப்பிடாயல் கட்டோடே தள்ளு கிறது.

---

1 சர்வாத்மாக்களிடத்தும்—எல்லாவுயிர்களிடத்தும் 2 மாங்கிசம்—ஊன்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

கூறப்பெற்ற அதிகார இலக்கணங்களுள், அனைவரும் 'புலால்' மறுத்தல், என்னுந் தொடர்க்கு உரைகாணும் வகையில் ஒத்த கருத்தினராயினும், அதிகார அடைவுக் காரணம் காணும் வகையில் சிறிது மாறுபடுகின்றனர்.

மணக்குடவர் 'புலால் தின்றால் அருளின்றாம்; ஆதலால், அதனை விடுக்க' என்கின்றார். *பரிதியார்* உரை 'அருள் என்பது உண்ணும் உயிர்ப்பொருள் ஒழிய ஏனைய உயிர்களிடம் என்று எண்ணுதல் கூடாது. உயிர்கள் எல்லாவற்றினிடத்தும்அருள்உண்டாகில் புலாலை விலக்குக' என்னுங் கருத்தினதாய் முன்னையதினும் சிறிது விளக்கமுடையது.

ஊன் உண்ணாமைக்குக் காரணம் கூறவந்த *பரிமேலழகர்* 'ஊன் கொலையான் வருதலின் காரியமாதலையும் 'தினற் பொருட்டால்' என்னும் *குறளால்* பின்னர்க் கூறுதலின்—கொலைக்கு ஏதுவாகலின் காரணமாதலையும் உடையது. அதனால் புலாலை ஒழிக' என்பர்.

தண்டபாணியார் 'கொல்லாமையை அருளுடைமையை யடுத்தும், புலால் உண்ணாமையை விரதத்தின் இறுதியிலும் வைத்தல் இயைபுடையதாகவும் மாறிவைத்தது ஏன் என்பதற்குக் காரணங் கற்பிப்பாராய் ஓரறிவுயிரையும் கொல்லாதிருத்தல் கொல்லாமை. பிற உயிரைப் போக்கிய ஊனை உண்ணாதிருத்தல் புலால் மறுத்தல். ஆதலால் அருளையடுத்தஇடம் பெறத்தக்கது புலான்மறுத்தல். முதிர்ந்த விரதமாக இறுதியில் இடம்பெறத் தக்கது கொல்லாமை அதனால் அமைத்தனர்' என்பர்.

'ஊன் பெருக்க உண்ணப்படும் ஊனைத்தவிர்த்தலினும், தன்னுயிரையே கொல்லவரினும் தற்காப்பிற்காகவேனும் பிறவுயிரைக் கொல்லாமையாகிய விரதம்சிறப்புடைத்தாகலின்சிறப்புடைப் பொருளைப் பிற்படமொழிந்தனர்' எனவும் கூறுவர்.

குழந்தை 'இயல்முறை கருதிப் புலால் உண்ணாமை துறவறத்தார்க்குவிலக்கப்பட்டது என்பதால் இல்லறத்தார் உண்ணலாம் என்பதைக் குறிப்பான் உணர்த்துவர். இது சிறப்பு வகையான் துறவிக்கு இன்றியமையாத ஒழுக்கம். இல்லறத்தார்க்குப் பொதுவகையான் உரியது'என்பதே கருத்து என்பர்.

வ.உ.சி. 'புலால் அதனாலாகிய உணவையுணர்த்துதலின்ஆகுபெயர். ஊன் உணவை விலக்கல்' என்பர். புல் மரம் முதலியவற்றையோ அவற்றின் பகுதிகளையோ முதிர்ந்து முற்றி விழுந்தனவற்றையோ புலால் என்றல்வழக்காறன்மையானும், அவைஊனாகா

மையானும் அவற்றையும் ஒழிந்து உயிர் வாழ்தல் இயலாமை மட்டு மன்றி, அவற்றை அறநூல்கள் விலக்காமையானும் ஓரறிவுயிரையும் கொல்லாதிருத்தல் கொல்லாமையாகும் என்பது அத்துணை ஏற்புடைய கருத்தன்று.

முரள் நந்தாதியான[1] ஈரறிவுயிர்கள் முதலாக ஆறறிவுயிர்கள் ஈறானவையே ஊனுடம்புடையன. அவற்றின் ஊனுயிர் வேறு செய் தலே கொலையாம் என்க. சமண சமயத்தவராகிய *கவிராச பண்டித* ரும் 'மாங்கிசம் தின்கிறதை விட்டுவிடுகிறது' என்றது காண்க.

இவ்வுரைகள் அனைத்திலும், காரண காரியத்தன்மை இரண்டும் உடைய. 'புலாலை மறுத்தல்' என்ற உரை, ஒரு கல்லில் இரண்டு மாங்காய் அடித்தது போலப் புலாலை உண்ணாமை, உணவு காரண மாக நிகழும் கொலையையும் ஒழித்தலின் அவ்வுரை சிறந்ததாம். அன்றியும் உணவுக்காக நிகழ்த்தும் கொலையையும் இதனாலேயே வள்ளுவர் விலக்கினார் என்றல் 'தினற்பொருட்டால்' என்ற இவ்வதி காரத்தின் ஆறாம் குறளானே தெற்றென விளங்கும். ஆதலால் கொல்லாமையால் ஆசிரியர் விலக்கக் கருதுவது செற்றம்[2] முதலிய வற்றான் நிகழ்த்தப் பெறும் கொலையையே என்க.

26.1. *தன்ஊன் பெருக்கற்குத் தான்பிறி தூன்உண்பான்*
எங்ஙனம் ஆளும் அருள். (உ௫௧)

உரைப்பகுதி :

அ) *மணக்.*: தன்னுடம்பை வளர்த்தற்குத் தான் பிறிதொன்றினது உடம்பை உண்ணுமவன், அருளுடையவனாவது மற்றியாதானோ? என்றவாறு. 'ஊனுண்ண அருள் கெடுமோ?' என்றார்க்கு, இது கூறப்பட்டது.

ஆ) *பரிதி.*: 'ஆகும் அருள்' பாடம். எ-து தன்னுடம்பு பெருக்குதற் குத் தான் பிறிதொன்றின் உடலைத் தின்பார்க்கு எப்படி அருள் உண்டாம் என்றவாறு.

இ) *காளி.*: எ-து தன் ஊனினைப் பெருக்கி வளர்ப்பதோர் காரண மாக, தான் பிறிதொன்றினது ஊனை உண்கின்ற பாவியானவன் மற்ற அனைத்துயிர் மாட்டும் அருளினை எவ்வாற்றால் மருவிப் போதுமோ[3] என்றவாறு.

---

1 முரள்—இப்பி- நந்து—சங்கு. 2 செற்றம்—கோபம்.

3 மருவிப் போதுமோ—பொருந்திச் செல்வானோ?

உ) *பரிமேல்.*: தன்னுடம்பை வீக்குதற்[1] பொருட்டுத் தான் பிறிதோருயிரின் உடம்பைத் தின்பவன், எவ்வகையான்நடத்தும் அருளினை.

பயனில்லாத ஊன் பெருக்கலைப்பயனெனக்கருதி இக்கொடுமை செய்வானே அறிவிலாத கொடியோன் என்றவாறாயிற்று. எங்ஙனம் ஆளும்அருள் என்பது ஆளான் என்பது பயப்பநின்ற இகழ்ச்சிக்குறிப்பு.

இராமா.: தன்னூன் பெருக்கற்கு—தன்னுடம்பைப் பெருக்கச் செய்தற்பொருட்டு, தான் பிறிதூனுண்பான்—தான் மற்றோருயிரினுடம்பைத் தின்பவன், எங்ஙனம்—எவ்வடி, ஆளுமருள்—அருளைத் தனக்குடைமையாக ஆள்வான், எ-று.

பயனிலாதவுடல் வீங்குதலைப் பயனென்றெண்ணிக் கொடுமை செய்பவனே கொடியாரிற் கொடியோனென்றவாறாயிற்று. எங்ஙனமாளுமருளென்றது, ஆளானென்பதுபடநின்ற இகழ்ச்சிக் குறிப்பு.

ஊ) *கவிராசர்*: தன்னுடைய உடம்பு பெருக்கிறதற்காகத் தான் பின்னையொரு சீவனுடைய சரீரத்தைத் தின்கிறவன் எப்படித் தயை[2]யுமுடையவனாகப் போகிறான். ஒரு பயனும் இல்லாத உடம்பைப்பருக்க வேண்டும்என்று கொடிதானபாவங்களைச்செய்கிறவனே அறிவிலாதவன்.

ஏ) *பழைய2*: 'பெருத்தற்குத்'பாடம் (2வது குறளாக உள்ளது).

தன் உடம்பு பெருக்கிறதற்காகப் பிறிதோர் உயிரின் உடம்பைத் தின்பவன் எவ்விடத்து[3] அருளை உடையவனாவரன்?

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'எங்ஙனம் ஆகும் அருள்' என்பது பாடமாயின் 'உண்பானுக்கு என நான்கன் உருபு விரித்துரைக்க,

கருத்து வேற்றுமையில்லாத குறட்பா இது. சொ.த. 'ஊனைப் பெருக்க ஊனைத் தின்று ஊனே நாட்டமாய்த் திரிபவன் உயிர்கள் மாட்டுச் செய்யப்படும் அருளுக்குப் புறம்பானவன்' என நயமான விளக்கந் தருவர்.

'தன்னுடல் பருக்கத் தன்னலம் ஒன்றுமே கருதி மற்ற உயிர்களின் உடலையுண்பவன் எப்படி ஜீவகாருண்யம் உள்ளவனாவான்' என்ற இராமலிங்கனார் உரை தெளிவானது.

---

1 வீக்குதற்கு—பெருத்தற்கு. 2 தயை—கருணை 3 எவ்விடத்து—எப்படி

ஓ) ஒப்புமைப் பகுதி:

'பிறிதூன் உண்பான்'

ஊனைத்தின்று ஊனைப் பெருக்காமை முன்னினிதே —இனியவை.,5

ஊனைத்தின்று ஊனைப் பெருக்கல் முன் இன்னா —இன்னா.,21

ஒர்த்துடம்பு பேருமென் றூனவாய் உண்ணானேல் —சிறுபஞ்ச., 18

ஊன்சுவைத் துடம்பு வீக்கி நரகத்தில் உறைதல் —சீவக.,1235

ஊன் தின்றல் இழுக்கென்னான் —நீல.,163

உரைப்ப பேரருள் உண்பன மீனொடுன்
திரைப்ப மெல்லணை செய்வ விழுத்தவம்
கரைப்ப தீவினை கண்டது சூனியம்
புரைப்பின் மார்க்கம் பொருத்த முடைத்தரோ —நீல.,251

மைத்திரம் பாவித்து மற்றவற் றூனை
அசிப்பன வேபோல் அமர்ந்திருந் துண்ணும் —நீல.,254

மறங்கொடு மன்னுயிர் கொன்று வாழ்ந்தவன் —கம்பராமா.,2288

முற்றும்:

மேன்மக்க ணஞ்சொடு கள்வரைந் தாரது
போன்மக்க ளாரும் புலால்வரை யாரெனிற்
றான்மெய்க்க ணின்ற தவசிமற் றெங்குளன்
ஊன்மெய்க் கொண் டுண்பவ னுன்னலது என்றாள் —நீல.,342

ஓ) மேற்கோள்பகுதி:

நீலகேசி உரை: அன்பு செய்யப்பட்டார் துன்புகண்டன்றே அன்புடையார் இரங்குவது; அதுபோல அருள் செய்யப்பட்ட பிராணிகளின் சரீரங்கள் சோர்ந்துகிடப்பக் கண்டால் அருளுடையார் அருள் செய்ப அன்றே; இவன் அருளில்லாமையினன்றே பிணம் தின்கின்றது என்ப ஆதலின் அருளிலன். 'தன்னூன்....அருள்' என்பதும் கொள்க. (௱).

26.2. பொருளாட்சி போற்றாதார்க் கில்லை அருளாட்சி
ஆங்கில்லை ஊன்தின் பவர்க்கு. (உ௫உ)

உரைப்பகுதி:

அ) *மணக்.:* பொருளினை யாளுதல் அதனைக் காக்கமாட்டார்க்கு இல்லை; அதுபோல், அருளினை யாளுதல் ஊன் தின்பவர்க்கு இல்லை என்றவாறு.

இஃது ஊனுண்ண அருட்கேடு வரும் என்றது.

ஆ) *பரிதி*.: எ-து பொருளாட்சி செலவழிப்பார்க்கு இல்லை; அது போல அருளாட்சி புலால் உண்பார்க்கு இல்லை என்றவாறு.

ஈ) *காளி*.:எ-து தம் பொருளினைக் கெடாமல் பேணிவாழும் ஆட்சிப் பாடு[1] குறிக்கொண்டு பாதுகாவாதார்க்கு இல்லை; மற்றதுபோல அருந்தவமுயல்வார்க்கு ஓர் பெருந்துணையாக முன் சொன்ன அருளினைக் கெடாமல் ஆண்டு,பெறுவதோர் ஆட்சிப்பாடு இல்லை; பிறிதொன்றின் நோவு[2] அறியாது தின்பவனுக்கு என்றவாறு.

உ) *பரிமேல்*.: பொருளாற் பயன்கோடல் அதனைப்பாதுகாவா தார்க்கு இல்லை; அதுபோல அருளாற் பயன்கோடல் ஊன்றின் பவர்க்கு இல்லை எ-று.

பொருட்பயன் இழத்தற்குக் காரணம் காவாமைபோல, அருட் பயனிழத்தற்கு ஊன்தினல் காரணம்என்பதாயிற்று. ஊன்தின்றா ராயினும் உயிர்கட்கு ஒரு தீங்கும் நினையாதார்க்கு அருளாடற்கு[3] இழுக்கில்லை என்பாரை மறுத்து, அஃதுண்டென்பது இவையிரண்டு பாட்டானும் கூறப்பட்டது.

> *இராமா*.: பொருளாட்சி— பொருளாற்பயன்கொள்ளுமுரிமை, போற்றுதார்க்கில்லை அதனைக்காவாதவர்க்கில்லை. ஆங்கு— அது போலவே, அருளாட்சி-அருளாற்பயன்கொள்ளுமுரிமை, ஊன்றின்பவர்க்கில்லை- புலால்தின்பவர்க்கில்லை, எ-று.
>
> பொருளின்பயன் இழந்துபோதற்குக்காரணம் போற்றுமை போல, அருட்பயனிழத்தற்கு, ஊனுணல்காரணமென்பதா யிற்று.ஊனுண்பாராயினும் உயிர்களுக்கொருதீங்கு நினையாதார் அருளாளுதற்குக்குற்றமில்லையென்பவரை நோக்கி மறுத்துக் குற்றமுண்டென்பது இந்த இரண்டுபாட்டாலுங் கூறப்பட்டது.

ஊ) *கவிராசர்*: பொருளினாற் பயன் கொள்ளுகிறவர்களுக்கு அந்தப் பொருளைக் காத்து, ரட்சியாவிட்டால்[4] பலன் இல்லை. அதுபோல அருளின் பலனாகிய நற்கதியடைய வேணும் என்கிறவர்கள் மாங்கிசம் தின்னாமல் இருக்க வேணும். மாங்கிசம் தின்றால் தயையும் நல்லகதியும் இல்லாமற் போகும்.

ஏ)*பழைய*2: (251-ஆம் குறளாகக் கொள்வர்.) பொருளை வருந்தித் தேடிப் போற்றாதவனுக்குப் பொருள் இல்லை. அதுபோல. அருளைச் செலுத்துதலும் அவ்விடத்து இல்லை; ஊனைத் தின்பவர்க்கு.

1 ஆட்சிப்பாடு—ஆளுதலால் வரும் பயன். 2 நோவு-துன்பம்
3 அருளாடற்கு—அருளைப் பூணுதற்கு 4 ரட்சியாவிட்டால்-காவாவிடின்

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

''பொருளாட்சி''

'பொருளினை யாளுதல்' மணக்.; 'பொருளாட்சி' பரிதி.; 'தம் பொருளினைக்கெடாது பேணி வாழும் ஆட்சி' காளிங்கர்; 'பொருளாற் பயன்கோடல்' பரிமேல்., கவிராசர்; 'பொருளைக் கையாளுதல்' கா.சு.; 'பொருள் செயல்' சொ.த.; 'பொருட் செல்வத்தின் நன்மைகள்' இராம.; 'செல்வத்தை ஈட்டி ஆளுந்தன்மை' வ.உ.சி.

''போற்றாதார்''

'காக்கமாட்டாதவர்' மணக்.; 'செலவழிப்பார்' பரிதி.; 'குறிக்கொண்டு பாதுகாவாதார்' காளிங்கர்; 'பாதுகாவாதார்' பரிமேல்., கவிராசர்., கா.சு., சொ.த.; 'ஆளுதல்-குறையாமல் வைத்திருத்தல்' குழந்தை; 'காவாதாரின் பொருள் குறைதல் போல ஊன் தின்பாரின் அருள்குறையும்' எனக் கருதுவர் குழந்தை.

இவ்வுரைகளில் பெரியதோர் கருத்துமாற்றம் இல்லாமை உணரத்தக்கது.

ஒ) ஒப்புமைப்பகுதி:

''ஊன்தின்பவர்க்கு''

திங்கின்றான் பிணம் —நீல.,190

உரைப்பபேரருள் உண்பன மீனொடு ஊன் —நீல.,251

ஊன்தின்றல் இழுக்கென்னான் —நீல.,163

''பொருளாட்சி போற்றாதார்க்கில்லை''

பொருள்தனைப் போற்றிவாழ் —ஆத்திசூடி

ஓ) மேற்கோள் பகுதி:

நீலகேசிஉரை: அருளுடையோம் என்று சொல்லுப, ஊன் தின்ப; 'அருளாட்சி ஆங்கில்லை ஊன் தின்பவர்க்கு' என்றலின் (251).

26.3. படைகொண்டார் நெஞ்சம்போல் நன்றூக்கா தொன்றன்
உடல்சுவை உண்டார் மனம். (உருஙு)

உரைப்பகுதி:

அ) மணக்.: ஆயுதம் கையிற்கொண்டவர் நெஞ்சுபோல், நன்மையை நினையாது; ஒன்றின் உடலைச் சுவைப்பட உண்டார் மனம் என்றவாறு.

ஆ) பரிதி.:எ-து அரிவாளும் கையும் பிடித்தவர்மனம் கொலை மேலே நினைப்பது போலப் புலாலுண்டார் மனமும் கொலையை நினைக்கும் என்றவாறு.

ஈ) பரிப்.: மேல் ஊனுண்டார் அருளாளுதற்கு வேறுநெறியில்லை என்றார்க்கு அஃதுண்டாலும் உயிர்க்கு அருள்செய்வாராயின் அருளுண்டாகாதோ என்றார்க்குக் கூறப்பட்டது.

ஈ) காளி.:எ-து அந்தணராயினும், ஆயுதத்தைக் கைப்பற்றினால் அதனைச் சுற்றுதல், எறிதல், நீட்டுதல், நிமிர்த்தல், வெட்டுதல் செய்வர்; மற்றதுபோல நன்றிக்கண் செல்லாது யாது எனில், ஓர் யிர்வாழ்சாதியின் ஊனின் சுவை கருதி உண்டாரது நெஞ்சம் என்றவாறு.

உ) பரிமேல்.: கொலைக்கருவியைத் தம்கையிற் கொண்டவர் மனம், அதனால் செய்யும் கொலையையே நோக்குவதல்லது அருளை நோக்காதவாறு போல, பிறிதோருயிரின் உடலைச் சுவைபட உண்டவர் மனம் அவ்வூனையே நோக்குவதல்லது அருளை நோக்காது எ—று.

சுவைபட— உண்டல் காயங்[1]களான் இனியசுவைத்தாக்கி உண்டல். இதனான் ஊன்தின்றார் மனம் தீங்கு நினைத்தல் உவம அளவையாற் சாதித்து, மேலது வலியுறுத்தப் பெற்றது.

> *இராமா.*: படைகொண்டார் நெஞ்சம்போல்-கொலைக் கருவியாகிய ஆயுதத்தைக் கையிலே கொண்டவருடையமனமானது (அதனாற்செய்யுங்கொலையை நோக்குவதன்றியருளை நோக்காதவாறு)போல. ஒன்றினுடல் சுவையுண்டார்மனம்-மற்றோருயிரினுடலை யினிய சுவையுண்டாக உண்டவர்மனமானது, நன்றூக்காது — அந்தவூனையே நோக்குவதன்றியருளை நோக்காது, எ-று.
>
> சுவைபடவுண்டல், பலகாயங்களாலின்சுவையுண்டாகச்செய்துண்டல். இதினாலே புலாலுண்பார்மனந்தீங்கு நினைத்தலையுவமானப்பிரமாணத்தால், மெய்ப்பித்து மேற்கூறியவருளின்மையை வலியுறுத்தலுங் கூறப்பட்டது.

ஊ) கவிராசர்: கொல்லத்தக்க ஆயுதத்தைக் கையிலே பிடித்தவர் மனது அந்த ஆயுதத்தாலே செய்யப்பட்ட கொலையையே செய்யப் பார்க்குமல்லாமல் தயையைப் பாராது; அதுபோல, ஒரு சீவன் உடம்பைத் தின்கிறவன் மனது மாங்கிசத்தினையே தின்னவேணும் என்று எண்ணுகிறதல்லது தயையை நினையாது.

---

1 காயம்-மிளகு முதலிய உறைப்புப்பொருள்கள்.

ஏ) *பழைய 2:* 'சுவைத்துண்டார்' பாடம். கொலை செய்யும் கருவி யைத் தம்கையில் கொண்டவர் மனம் அவ்வூனை நோக்குவது அல்லது, அருளை நோக்காது, (போல), பிறிதோர் உயிரின் உடலைச் சுவைத்து உண்டவர் மனம் அருளை நோக்காது.

ஒ) தொகுப்பும் குறிப்பும்:

'நன்று'

'அருள்' என்பர் *பரிமேல்.*; *பழைய2*; 'தயை' என்பர் ***கவிராசர்.*** இது சொற்பொருள் ஆகாது கருத்தாற் போந்த பொருளேயாகும். ஆதலால் *மணக்குடவர்* 'நன்மையை நினையாது' என்றனர். 'இரும்பு பிடித்தவன் கையும் துரும்பு பிடித்தவன் கையும் சும்மா இராது' என்பது பழமொழி. இரும்பு—இரும்பானியன்ற படை. அதைப் பிடித்தவன் எதையாவது நறுக்குவான்; அடிப்பான், குட்டு வான் இவை எவையுமே நல்ல செயலாகா. உள்ளதன் அழிவையே உணர்த்தும். இப் பழமொழியை ஒட்டிய கருத்தே இக்குறளின் முற் பகுதி. *வள்ளுவர்* நெஞ்சு தன் செயலாகக் கூறியதைப் பழமொழி, கையின் செயலாகக் கூறுகிறது:

பரிதி. கூறும் 'அரிவாளும் கையும் பிடித்தவன் மனம்' என்பதும் 'அரிவாளும் கையுமாக அலைகிறான்' என்ற வழக்கினை ஒட்டி எழுதப் பெற்றதாம்.

பரிமேலழகர் பாடம் 'ஒன்றன்'. ஏனையோர்பாடம் 'ஒன்றின்' என்பர் *வ. உ. சி.* 'எண்ணின் இறுதி அன்னொடுசிவணும்' (தொல். எழுத். 199) என்பதே விதியாய் 'ஒன்றன்' என வருதலே முறை. ஆயினும் 'இயற்கை ஆகும் செயற்கைய' என்னும் சூத்திரத்துச் 'செயற்கைய' என்ற இலேசானே இன்சாரியையும் கொடுக்க என்ற *நச்சினார்க்கினியர்* உரையைத் தழுவிய பாடம் 'ஒன்றின்' என்பதுணர்க.

ஓ) ஒப்புமைப் பகுதி:

'நன்றாக்காது ஒன்றன் உடல் சுவை உண்டார் மனம்'

கொலைநின்று தின்றொழுகுவானும்......
யாதுங் கடைப் பிடியாதார் — *திரி.,74—*

தின்கின்றான் பிணம் — *நீல.,190—*

26.4. அருளல்ல தியாதெனின் கொல்லாமை கோறல்
பொருளல்ல தவ்வூன் தினல் (உருச)

உரைப்பகுதி:

அ) *மணக்.:* அருளல்லது யாதெனின், கொல்லாமையைச் சிதைத் தல், பொருளல்லது யரதெனின் அவ்வூனைத் தின்றல் என்றவாறு.

இஃது அதனை உண்டதனால் அருள் கெடுதலேயன்றி, பெறுவதொரு பயனும் இல்லை என்றது.

ஆ) *பரிதி.*: எ-து அருளாவதும், அருளல்லாமையும் யாவை எனில், கொல்லாமையே அருள், அருள் அல்லாமையே கொலை. உபதேசமும்[1], உபதேசம் இல்லாமையும் யாவை என்னில், உபதேச நெறியே புலால் மறுத்தல்; உபதேச நெறியல்லாமை புலாலுண்டல் என்றவாறு.

ஈ) *காளி.*: (எ-து) உலகத்து அருளும் அல்லதும் யாவை எனின் ஒன்றினை ஊன் சுவை கருதிக் கொல்லாமையும் அதனைக் கோறலும்[2] அன்றே; மற்றது போல ஒருவன் தவப் பெருநெறியல்லது உங்கு[3] யாது எனில் மற்ற ஊனைத்தின்றல் என்றவாறு.

கொல்லாமை கோறலை 'செய்ந்நன்றி கொன்றான்' என்றாற் போலக் கொள்க. அன்றியும், அருளும், அருளல்லாததும் கொல்லாமையும் கோறலும் என்று பொருளுரைப்பாரும் உளர். இஃது அருள் கெடுத்தலேயன்றி அதனை உண்டாற் பெறுவதொரு பயனுமில்லையென்றது. உடம்பு வளர்தல் பயனாயின் அதற்குப் பிறிதும் உணவுண்டாதலால்.

உ) *பரிமேல்.*: அருள் யாதெனின் கொல்லாமை; அருளல்லது யாதெனின் கோறல்; ஆகலான், அக்கோறலான் வந்த ஊனைத் தின்கை பாவம்.

உபசார வழக்கால் கொல்லாமை கோறலாகிய காரியங்களை அருள் அல்லது எனக் காரணங்களாக்கியும், ஊன்தின்கையாகிய காரணத்தைப் பாவம்[4] எனக் காரியமாக்கியும் கூறினார்.[5] அருளல்லது—கொடுமை. சிறப்புப் பற்றி அறமும் பொருளெனப் படுதலின், பாவம் பொருளல்லது எனப்பட்டது.[6] கோறல் என முன்னின்றமையின், அவ்வூன் என்றார். இனி இதனை இவ்வாறன்றி அருளல்லது என்பதனை ஒன்றாக்கி, கொல்லாமை கோறல் என்பதற்குக் கொல்

---

1 உபதேசம்— நன்மைபயக்கும் சொற்கள்: 2 கோறல்— கொல்லுதல்;

3 உங்கு— உவ்விடத்து; அதாவது அணிமைக்கும் சேய்மைக்கும் இடைப்பட்ட இடம்.

4 'பொருளல்லதென' என்றும் பாடமுண்டு,

5 உபசார வழக்கு— ஒன்றன் தன்மையை மற்றொன்றின்மேல் ஏற்றிக் கூறுவது. ஈண்டு அருள் காரணமாக உண்டாகும் கொல்லாமையாகிய காரியத்தை அருள் என்றும், அருளில்லாமை காரணமாக நிகழும் கொல்லுதலாகிய காரியத்தை அருளல்லது என்றும் கூறியது காரணம் காரியமாக வந்த உபசார வழக்கு. பொருளல்லதாகிய காரியம் தோன்றுவதற்குக் காரணமான ஊன்றின்னலை ஊன்தினல் பொருளல்லது எனக் காரியமாக்கியும் கூறியதால் உபசாரமாயிற்று.

6 அறம் என்பது குணம். அதனைப்பொருள் எனக் குணிப்பாகக் கூறியது இம்மை மறுமை வீடு என்னும் மூன்றையும் பயக்கும் சிறப்புப் பற்றி என்க. குணத்தையும் பொருள் என்றல் வைசேடிகர் மதம்.

லாமை என்னும் விரதத்தை அழித்தல் என்று உரைப்பாரும் உளர்.[7]

காரி.: கோறல் என முன்னின்றமையின் 'அவ்வூன்' எனச் சுட்டிக் காட்டினார்; அல்லாக்கால், செய்யுளாதலின் சுட்டு முற் கூறினார் என்பது. அஃது ''ஆக்கமுங் கேடும் அதனால் வருதலால் காத்தோம்பல் சொல்லின்கட்சோர்வு''[8] என்பதனுட்காண்க. யாதெனின் என்பதனை முன்னுங் கட்டுக.

இராமா.: அருளல்லதியாதெனின்—கருணைப் பண்பல்லாதது யாதென்று வினுவின், கொல்லாமை கோறல் — கொல்லாமையென்கின்ற தருமத்தைக் கெடுப்பதாம். பொருளல்லது—தருமமல்லாதது யாதெனின், அவ்வூன்றினல்-அந்தக்கொலையினுலே வந்த மாமிசத்தையுண்பதுதானென்க. எ-று.

யாதெனின் என்னும் வினைவைப் பின்னுங்கூட்டுக. அற முதலிய நான்கையும் பொருளெனப்படுதலாலிங்கே பொருள் அறமெனப் பட்டது. பொருளல்லது, பாவமெனப் பட்டது. இனி—அருள் யாதெனின் அல்லது யாதெனின் எனவிரண்டு வினுவாக்கி அதற்குவிடை கொல்லாமையுங் கொலையுமாமெனப் பொருள் கூறுவாருமுண்டு. அங்ஙனமாயின் பின்பு,' பொருளல்லதென்பதையும், பொருள் யாதெனின் பொருளல்லதியாதெனின் எனப் பகுக்க வேண்டும். இங்ஙனம் பகுக்கப் பொருள் படாமையாற் பொருந்தாதென்க.

ஊ) *கவிராசர்*: தயையாகிறது ஏதென்றால் ஒரு சீவனையும் கொல்லாமல் இருக்கிறது. அருளல்லாதது ஏதென்றால் சீவன்களைக் கொல்லுகிறது; கொன்ற சீவன்களுடைய மாங்கிசங்களைத் தின்கிறதே பாவம் (எ-று).

எ) *பழைய 2*: அருள் யாதெனில், கொல்லாமை அருளல்லதியாதெனில், கொல்லுதல் ஆதலால் கொல்லுதலான ஊனைத்தின்னுதல் பொருளல்லாத பாவமாம்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக்குடவர் 'அருளல்லது யாது எனில் கொல்லாமை கோறல்' என ஒரு தொடராக்கி 'அருளல்லது கொல்லாமையைக் கொல்வது' என உரை கண்டனர். இவருரையை உட்கொண்டு இலக்கணக்

7 முன்னர் 25 6ம் குறளிலும் அறமுதலியவற்றைப் பொருளென்று கூறினார்; அதற்கும் இதுவே இலக்கணமாதல் காண்க. இங்ஙனம் உரை கூறுபவர் மணக்குடவர்.
8 குறள் 642

கொத்து ஆசிரியர் 'செய்யா இருவினை செய்வினையாகி' என்ற நூற்பாவின் உரையில் 'கொல்லாமையாகிய செய்யாவினை அறமாகிய செய்வினையாக வந்ததற்கு' மேற்கோள் காட்டியமையாலும் இவ்வுரைச் சிறப்பு உணரக்கூடும். *பரிதி., பரிமேல்., காளி., கா.சு., சொ.த., குழந்தை, சி.இ.* முதலிய அனைவரும் 'அருள்யாதெனின் கொல்லாமை; அல்லது யாதெனின் கோறல்' எனப்பிரித்துப் பொருள் கண்டனர்.

தண்டபாணியார் 'அருளல்லது யாதெனிற் கோறல் (புலால் மறுத்தலின்) *கொல்லாமை* பொருள்; அல்லது அவ்வூன்தினல் எனப் பிரித்துக் கூட்டி, அருளாகாதது கொல்லுதல்; கொல்லாமையே கருத்தாவது; அல்லதாகிய கோறலே அவ்வூன் தினல்' எனப் பொருள் கூறுவர்.

மேலும் *மணக்குடவர், பரிமேலழகர்* உரைகளை எடுத்துக்காட்டி வேறுரையாக 'அருளல்லது கொல்லுதல்; கொல்லாமை ஊன்தினல் பொருள் அல்லது எனக் கூட்டி, அருள் அல்லாதது உயிர்களைக் கொல்லுதல். கொல்லாமையான் வந்த ஊனைத் தின்றல் பொருட்படுத்தக் கூடியதன்று எனலுமாம்' என்பர். கொல்லாமையான் வந்த ஊன்தானே இறந்தவற்றின் ஊனும், ஆதிதெய்விகமுதலியவற்றான் இறந்த ஊனும் எனக் கருதுவர்.

நிரனிறைப் பொருள்கோள் வகையான் உரைகொள்ளும் *பரிமேலழகரை* மறுப்பாராக, 'அங்ஙனம் கூறுதல் ஆசிரியர்கருத்தன்று; ஆசிரியர் கருத்தாயின் 'அருளல்லதியாவெனின்,'எனப் பன்மை வாய்பாட்டாற் கூறியிருப்பர். அதனால் அசையும் சீரும் சிதைவின்மையின் அது நோக்கியே யாம் இங்ஙனம் உரைகண்டோம்' எனத் தம் உரைக்கு அரண் அமைப்பர், ஆண்டும் ஆற்றொழுக்குப் பெறப்படுகிறதே என வினாயினார்க்கு, 'ஆற்றொழுக்காய்ச் செல்லின் ஆண்டும் யாப்பிடர்ப்படத்தான் செய்யும்ஆதலால் எம்உரையேஏற்புடையதாகக் கொள்வர்' என்பர்.

1. இவர் உரையில் ஒன்று அருளும் அல்லதுமாகிய இருபெயர்ச் சொற்கள் யாது என்ற ஒருமை வினாவினைக்குறிப்பு முற்றுக் கொண்டு முடிதல் வழு என்பது.

2. மற்றொன்று நிரனிறையாகக் கொள்ளின் பரிமேலழகர்க்கு யாப்பழிவது போலத்தான் எமக்கும் அழிகிறது. அதனால் அதனை ஒரு காரணமாகக் கோடல் வேண்டாம் என்பது.

'அருள் அல்லது யாதெனின்' என்பதை அருள் யாதெனின் அல்லது யாதெனின் எனத் தனித்தனி முடித்தலான் பால் வழு வாராது; ஆகையால், *பரிமேலழகர்* அங்ஙனம் முடித்தாராதலின்

யா எனப் பாடம் கொள்ள வேண்டிய இன்றியமையாமையில்லை யாம் என்க.

அருளல்லதியாதெனின் என்புழி யாப்பழியுமே என ஐயுறற்க. இகரம் குற்றியலிகரமாதலின் அவ்விகரம் அலகுகாரியம் பெறாது என்பது 'ஒற்றெழுத்தியற்றேகுற்றியலிகரம்' (தொல்.செய்.நூற்.7) என்பதனாலும், ''சீருந்தளையும் சிதையின் சிறிய இஉவோடு, ஆரு மறிவர் அலகு பெறாமை'' (யா.கா.ஒழி.) என்பதனாலும், பெறப் படுதலின் யாப்பழியாமை காண்க. ஆதலால் அருளல்லதியாதெனிற் கோறல் கொல்லாமை பொருள்; என மொழி மாற்றியும் வலிந்தும் பொருள் கோடல் வேண்டுவதின்றாம்.

ஆகவே *பரிப்பெருமாள், காளிங்கர்* முதலியோர் நிரனிறையாக வைத்துக் கண்ட பொருளே அதிகாரத்திற்கு இயைபுடையதாம் என்க.

ஓ) ஒப்புமைப் பகுதி:

'ஊன் தினல்'

ஊன் தின்றல் இழுக்கென்னான் —*நீல.*, 163.

ஐயமின்றி யறங்கட வாதவருள்
மெயி னின்றபின் வேள்வியும் வேண்டுமோ —*கம்பராமா.*, 1512.

ஓ) மேற்கோள் பகுதி:

பேராசிரியர்: இயலசை சார்ந்து ஒற்றியற்றாகி குற்றிகரம் வந்த தற்கு மேற்கோள் (தொல்.பொருள்.320.).

குணசா.: குற்றியலிகரம் ஒற்றியல்பினவாய் நின்று அலகு பெறா மைக்கு மேற்கோள் (யா.கா.38).

'பொருள்கோள்' என்பது உம்மைத்தொகை. பொருளும் பொருள் கோளும் என; என்னே? 'அருளல்லது'.என்பதில் அருளும் அருளல்லதும் என உம்மை தொக்காற்போல (யா.கா.45.).

யா.வி.உரை: குற்றியலிகரம் அலகு பெறாமல் வந்ததற்கு மேற் கோள் (சூ.4).

நச்சர்: குற்றியலிகரம் அலகு பெறாமல் வந்ததற்கு மேற்கோள். (தொல்.செய்யுள்.8.)

26.5. உண்ணாமை உள்ள துயிர்நிலை ஊனுண்ண
அண்ணாத்தல் செய்யா தளறு. (உருரு)

உரைப்பகுதி:

அ) *மணக்.*: உயிர் நிலையைப் பெறுதல் ஊனை உண்ணாமை

யினால் உள்ளது; ஊனை உண்ண, உண்டாரை எல்லாவுலகத்தினும் இழிந்த நரகம் விழுங்கிக்கொண்டு அங்காவாது என்றவாறு.

அங்காவாமை—புறப்படவிடாமை[1].

ஆ) *பரிதி*.: எ-து புலால் விடுத்தல் உயிர் நிலை பெறுதல்; புலால் உணவு, நரகத்தை விட்டு மேலேறவொட்டாது என்றவாறு.

இ) *பரிப்*.: உயிர்நிலை யென்றது உயிர்க்கு நிலைபேறான முத்தித் தானம். இஃது உண்பார்க்கு உள்ளதாகும் குற்றம் கூறிற்று.

ஈ) *காளி*.: இவர் உரை பரிதியார் உரையை ஒத்துள்ளது.

உ) *பரிமேல்*.: ஒருசார் உயிர்[2] உடம்பின் கண்ணே நிற்றல் ஊனுண்ணாமை என்கின்ற அறத்தின் கண்ணது; ஆகலான், அந்நிலை குலைய[3] ஒருவன் அதனை உண்ணுமாயின் அவனை விழுங்கிய நிரயம் பின் உமிழ்தற்கு அங்காவாது.

உண்ணப்படும் விலங்குகள் அதனாற் றேய்ந்து சிலவாக ஏனைய பலவாய் வருதலின் 'உண்ணாமையுள்ளது உயிர்நிலை' என்றார். உண்ணின் என்பது உண்ண எனத் திரிந்து நின்றது. ஊனுண்டவன் அப்பாவத்தான் நெடுங்காலம் நிரயத்துள் அழுந்தும் என்பதாம். கொலைப்பாவம் கொன்றார்மேல் நிற்றலின் பின் ஊனுண்பார்க்குப் பாவமில்லை என்பாரை மறுத்து அஃதுண்டென்பது இவ்விரண்டு பாட்டானுங் கூறப்பட்டது.

இராமா.: உண்ணாமையுள்ள துயிர்நிலை— ஊனுண்ணாமை யாகிய தருமங்காரணமாகவே நிலைத்திருப்பதுசரீரம், ஆதலால் ஊனுண்ண— (ஒருவனந்தத்தருமத்தைக் கெடுத்து) அவ்வுடம் பினைச் சுவைபடவுண்பானாயின், அளறு— (மறுமையிலவனை விழுங்கிய) நரகமானது, அண்ணாத்தல் செய்யாது— (பின்பு அவன் வெளியேவரும்படிக்கு) வாயைத் திறவாது, எ-று.

உயிர்நிலை தேகம் ஆதலால் உடலில்லாவிடினுயிர் நில்லா தென்பதாயிற்று. ஆகவேயவ்வாறு செய்து அந்தப் புலாலுண் பவனே மறுமையிலே நரகவாசி யென்பதாம். கொலைப்பாவங் கொன்றார் மேல் நிற்றலால் அதுசெய்யாது ஊனுண்பார்க்குப் பாவமில்லை யென்பாரைத்தடுத்து அது உண்டென்பதிந்த இரண்டு பாட்டாலுங் கூறப்பட்டது.

ஊ) *கவிராசர்*.: மாங்கிசங்களைத் தின்னாமலிருக்கிறதே தருமம். அந்தத் தரும முண்டானவன் மறுஜென்மத்திலே வியாதியில்லாத

1 'அ ஆ அங்காப்புடைய' என்புழிப் போல அங்காத்தல்—வாய்திறத்தல். அதன் எதிர் மறை அங்காவாமை. ஈண்டுக் கருத்துப் பொருளாக புறப்படவிடாமை எனக் கருது கிறார் ஆசிரியர்.

2 ஒருசார் உயிர்—தின்னுதற்குரிய அல்லாத விலங்குபறவைகள்.

3 அந்நிலைகுலைய—உயிர் உடம்பிலிருக்கும் நிலை கெட,

நல்ல சரீரத்தை எடுத்துச் சுகமாய் இருப்பான். மாங்கிசங்களைத் தின்கிற பேர் வியாதியையும் துர்க்கந்தங்களையுமுடைய[4] சரீரத்தை எடுத்து நரகத்திலே வெகுகோடி காலம் வாதைப்படுவார்கள். ஒரு காலத்திலேயும் நரகத்தை விட்டு வரமாட்டார்கள் (ஏ-று).

ஏ) *பழைய2.*: ஊன் உண்ணாமையால் உள்ளது உயிர்நிலையாகிய ஊன் உடம்பு. அந்த ஊனை ஒருவன் உண்ண, அவனை நரகம் உண்ணும், பின் உமிழ்ந்து விட அந்த நரகம் வாயைத் திறவாது.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

இக்குறட்பாவில் **'*உண்ணாமை உள்ளது உயிர் நிலை*'**, **'*அண்ணாத்தல் செய்யாது அளறு*'**, என்ற இருபகுதிகட்கும் உரை காணும் வகையில் ஆசிரியர்கள் பெரிதும் வேறுபடுகின்றனர்.

மணக்குடவர் முதற்பகுதிக்கு 'உயிர் நிலையைப் பெறுதல் ஊனை உண்ணாமையால் உள்ளது' என்றார். இதன்கருத்து 'ஊன் உண்பவன் உயிர், அழியாத்தன்மையை உரியகாலம் வரை பெறுதல் ஊன் உண்ணாமையால் உள்ளது என்பதாம். ஊனுண்பானாயின் வேட்டை முதலிய ஊனைப் பெறும் முயற்சியின் வேறுபாட்டாலோ, உண்டபின் உளதாம் நோய்களாலோ நச்சுணவுபட்டமையாலோ உயிர் நிலைபெறாததாகலாம். உண்ணானாயின் அங்ஙனமாகாமல் உயிர் நிலைபேறுடையதாகும்' என்பது. இதனையே **வ.உ.சி.யும்** 'ஊனுண்ணாமையை உடைய உடம்பு உயிர்நின்ற உடம்பு' என்றல் காண்க.

பரிதியார் 'உண்பவன் உயிர்நிலை பெறுதலா? உண்பவன் உண்ணாமையால் பிற உயிர்கள் நிலை பெறுதலா?' என்று துணிவு தோன்றாது 'இருவகையுயிரும் நிலைபெறுதல்' என்ற முடிவு தோன்ற உரைத்தனர்.

பரிப்பெருமாள் 'உயிர்நிலை உயிருக்கு நிலைபேறான முத்தித் தானம்' என்றனர். ***கா.சு.வும்*** 'உயிருக்குறுதியான நன்னிலை ஊன் உண்ணாமையால் உளதாவது' என்பதும் இக்கருத்தினதே. *பரிமேலழகர்* 'உண்ணத்தக்க உயிர்களில் ஒரு சாரான உயிரோடு வாழ்தல் ஊன் உண்ணாமையாலேயே' என்ற கருத்துப்பட உரைப்பர். 'ஒருசார் உயிர்' என்பதற்குக் குறிப்புரை வரைந்த *கோ.வடிவேலுச் செட்டியார்* 'ஒருசார் உயிர்' என்றது 'தின்பதற்குரிய வாகாத பிராணிகளை' என எழுதினர். தின்னற்குரிய வல்லாத உயிர்கள் உயிரோடு இருப்பதில் வியப்பில்லை. உண்டற்குரிய உயிர்களி

4 துர்க்கந்தங்களையுடைய—தீய நாற்றங்களையுடைய

லேயே உண்டனஒழிய எஞ்சி நிற்பன உண்ணப்படாமையால் என்பதே பொருட் சிறப்புடையது.

தேவநேயர், இலக்குவனார் இருவரும் *பரிமேலழகரை* ஒத்த கருத்தினரேயாம். *தண்டபாணியார்* பலவகைப்பட்ட உடலோடு கூடி உயிர்கள் நிலைபெறுதல் உண்பவன் ஊனுண்ணாமையால் என்ற கருத்துப்பட உரை கூறுவர்.

குழந்தை 'சில உயிர் இன்னும் உடம்பின்கண்ணே நிலைத்திருத்தல்' என்பர். *பரிமேலழகர்* உரைக்கு விளக்கம் எழுதிய வை.மு.கோ. 'ஏனைய பலவாய் வருதல்' என்ற உரைப்பகுதிக்கு 'மனிதருடம்புகள் வளர்ந்து பலவாய் வருதல்' என்பர். மனிதருடம்பையே குறிப்பதாகாது. ஊனுண்ணும் மக்களால் உண்ணப்படாமையால் எஞ்சி நிற்பனவற்றை உணர்த்துவதாம்.

இராமலிங்கனார் 'மனிதனுடைய உயிர்வாழ்வுக்கு வேண்டிய உணவுகள் ஊனுண்ணாமையிலேயே இருக்கின்றன' என்பர். இவ்வுரையில் சொற்கிடக்கையைக்காட்டிலும் 'வேண்டிய' 'உணவுகள்' என்பனபோன்ற சில சொற்களை வருவித்தே இப்பொருள் முடிவு கொள்ள வேண்டியுள்ளது. இது ஓரளவு வலிந்துரைக்கப்படுவது தான்.

மு.வ. 'ஊனுண்ணாமையாற்றான் உயிரின் இன்பவாழ்க்கை நிலைத்திருக்கிறது' என்பர். *மணக்., பரிதி., மு.வ., இராம.* போன்றோர் உரைகள் உண்ணப்படும் உயிர்களை யுணர்த்தாது உண்பவனது உயிர்நிற்றலையே உணர்த்துவன. *பரிமேலழகர்* உரை 'மனிதன் ஊன் உண்ணாமையால் உண்ணப்படும் உயிர்கள் நிலைபெறுவதை'யுணர்த்துகிறது. இவற்றுள் 'உண்பவன் உண்ணாமையால் உண்ணப்படும் உயிர்கள் நிலைபெற்றுள்ளன' என்ற கருத்தமைந்த உரைகளே சிறந்தன.

'அண்ணாத்தல் செய்யாது அளறு'

'ஊன் உண்டாரை விழுங்கிய நரகம் ஊன் உண்டவர்களை விடுதலை செய்யாது' என்று *பரிதியார்* கருத்துப் பொருள் கூறுவர். *பரிமேலழகர்* 'ஒருவன் ஊன் உண்ணுமாயின் அவனை விழுங்கிய நரகம் பின் அவனை விடுவியாது' என்பர். *கா.சு.* 'துன்பம் அல்லது நரகமானது உண்டவனை விட்டு நீங்காது' என்றுகூறி, 'அண்ணாத்தல் செய்யாதளறு' எனப்பாடத் திரிபு கூறி 'விழுங்க வாய்திறக்கும்' என உரைப்பர். குழந்தை உரைப்பகுதியில் *பரிமேலழகரை* ஒட்டியே உரைத்து 'அளறு—பூரியர்கள் ஆழும் அளறு' என்றாற் போல 'அளறு—தீ நாற்றம் உடைய சேறு' என்பர். இவர் கொள்கை

'சுவர்க்க நரகங்களை ஒவ்வாதது ஆதலால்' என்பர். *இராமலிங்கனார்* 'உயிர் போன பிணத்தை நரகமும் வெறுக்கிறது; ஊன் உண்பவன் உயிரைப் போக்கிப் பிணத்தையுண்பது என்னே' என நயங் காட்டுவர். 'அண்ணாத்தல் செய்வதளறு' எனப் பாடந்திருத்திய *வ.உ.சி.* 'ஊனுண்டவனை விழுங்க நரகமே வாய்திறவாது' எனப் பொருள் கண்டு, *பரிமேலழகர்* 'ஊனுண்டவனை விழுங்கிய நரகம் அவனைப் போக்க வாய் திறவாது' என உரை காண்பர். 'விழுங்க என்பதை ஒரு முறையும் வருவிக்க வேண்டுமாயின் ஒரு முறை வாய் திறக்க வேண்டிய நிலை விளைகிறது. *வள்ளுவரோ* 'அண்ணாத்தல் செய்யாது' என ஒருமுறை தான் சொல்லியிருக்கிறார். ஆதலால் 'ஊனுண்டவனை நரகங்கூட ஏற்றுக் கொள்ள வாய்திறவாது என்பதே சிறந்த உரையும் ஊன் உண்பவனுக்கு இழிவு தருவதும் ஆம்' என்பர் சிலர்.

'இக்காட்டுள்புகின் கூறை கோட்பட்டான்' என்பது மிகுதியான் நிகழ் செயலாதல் போலவும் 'அறஞ்செய்தான் சுவர்க்கம் புகும்' என்பது போலவும், 'புலால் உண்டான் நிரயம்புகுதல் உறுதி யாதலின் அவன் புகுந்ததைக் கூறாது தீவினை நுகர்ந்து கழிந்த பிறகு அவனை விடுவிக்க வாய்திறக்காது' என்பதே கூறவேண்டு தலின் அதனை மட்டும் கூறினார் என்க. இதனால் முன் விழுங் கியமை தாமே உணரப் பெறுமாதலான் என்க.

அன்றியும் புலால் உண்டலால் உடல் பருத்தலாகிய பயன் உண்ட உடலையும் அதனால் விளையும் பாவம் உயிரையும் சார்ந்து நின்று, நிரயத்துன்பத்தை நுகரத்தந்த யாதனாசரீரம் எடுத்து.உயிர் நிரயம் புகுமேயன்றி உண்ட உடல் சுட்டோ புதைக்கப் பெற்றோ தான் அழிக்கப்படுவது. அது நிரயம் புகுவதேயில்லை. ஆதலால் நிரயமும் வேண்டாத பிணத்தை இவன் உண்கிறான் என்ற இழிவு குறிக்கும் கருத்தும் ஏற்புடையதன்று. *வ.உ.சி.* 'அண்ணாத்தல் செய்வதளறு' எனப்பாடம் திரித்து, 'ஊனையுண்பதற்காக வாயைத் திறக்கும் உடம்பு நரகம்' என உரை காண்பர். இதன் அகலமாக முந்திய உரையாசிரியர்கள் 'அண்ணாத்தல் செய்யாது அளறு' எனப் பாடங்கொண்டு 'நரகம் அவனை விடுவிக்க வாய் திறவாது' என உரை கண்டனர். ''அண்ணாத்தல்'' என்பது ஒருவன் ஒன்றனை உட்கொள்ள விரும்பி வாய் திறத்தல் என்பது வழக்கு எனவும், ஒருவனை ஊன்உண்டமைக்காக விழுங்கிய நரகம் அவனைப் பின்னர் ஒருகாலும் வெளி விடாது எனவும் கூறின் அவன் ஊன் உண்ணலை விடுதலாலாவது வேறு பாவங்களைச் செய்யாமை யாலாவது அடையும் பயன் யாது?

அவன் எத்துணை கொடிய பாவம் புரியினும் அவன் அதனை நிறுத்திய மாத்திரத்தில் அப்பாவம் அவனைப்பற்றாது நீங்கும் எனக் கூறிப் பாவம் செய்யாமல் இருக்க தூண்டுதவன்றோ நீதி நூலின் கடமை?

அன்றியும் ஊன் உண்ணாத உடம்பு உயிர்நிலை எனின் ஊன் உண்ணும் உடம்பு உயிர்நிலையல்லாத வேறொன்று என்றல்லவா கூறியிருக்க வேண்டும். ஆதலால் ஊன் உண்ண அண்ணாத்தல் செய்யாது அளறு என்பது ஏடு எழுதுவோன் செய்த பிழை என்பர். இத் தடை விடைகளில் நம்முடைய ஆய்வுக்கு இலக்காவனவும் பலவுள.

இக்குறட்பாவின் கருத்து ஊன் உண்ணுதல் கூடாது என்பது தான். அதனை வலியுறுத்த ஊன் உண்டவனை உறுதியாக நரகம் விழுங்கும் என்பதுதான். விழுங்கிய நரகம் விடாது என்பது கூறி ஊன் உண்டலை ஒழித்ததாம். 'பாவஞ் செய்தால் நரகம் புகும்' என்பது துணிவாதலின் அப்பாவம் இவனை ஒட்டாது நீங்கும் என்று வள்ளுவர் ஒருபோதும் கூறார். 'தீவினை செய்தார் கெடுதல் நிழல் தன்னை வீயாது அடியுறைந் தற்று' என்பது அவர் வாய்மொழி. ஆகையால் கொடிய பாவம் புரியினும் அப்பாவம் அவனைப் பற்றாது என்றுக்கூறி இனிச்செய்யாதவாறு தடுத்தல் நீதிநூல் கொள்கையன்று; நியதிக்கும் மாறு; தினைவிதைத்தவன் தினையையும் வினை விதைத்தவன் வினையையும் தான் நுகர இயலும் என்பது உலகப் பழமொழி. ஆகையால் பழைய உரையாசிரியருடைய கருத்தே அமைவுடையது. இக்கருத்தினைக்காட்டிலும் ஊன் உண்பவன் உடல் முடை நாற்றம் உடையது. அதனை விழுங்க அளறும் வாயைத் திறவாது என்ற உரையும் ஓரளவு இயைபுடையதாகும்.

ஊன் உண்ணாத உடம்பு, உயிர் நின்ற உடம்பு; ஊன் உண்ண வாய் திறக்கும் உடம்பு நரகம், என ஊனுண்ணாத உடலை நரகமாக உருவகப்படுத்துவதாயின் உண்ணாத உயிர்நிலையையும் உருவகித்திருக்கவேண்டும்;

(ஓ) ஒப்புமைப்பகுதி:

'ஊன் உண்ணல்'

அலைப்பான் பிறிதுயிரை ஆக்கலுங் குற்றம்
விலைப்பாலிற் கொண் டூன்மிசைதலுங் குற்றம்'' —*நான்மணி.செய்.,*

முற்றும்:

ஊன் சுவைத் துடம்பு வீக்கி நரகத்தில் உறைதல் நன்றோ
ஊன்தினாது உடம்பு வாட்டித் தேவராய் உறைதல் நன்றோ

ஊன்றிஇவ் விரண்டி னுள்ளும் உறுதிநீ யுரைத்தி டென்ன
ஊன்தினா தொழிந்து புத்தே ளாவதே உறுதி என்றான —சீவக., 1235

தின்னுமது குற்றமில்லை செத்தெனும் புத்தா! தின்பைனக் கொன்றுனக்குத் தீற்றினர்க்குப் பாவம்
மன்னுவதுன் காரணத்தாற் றின்னார்க்கு வதைத் தொன்றை யிடாமையினார் வதைத்தவர்க்கே பாவம்
என்னிலுனை யூட்டினர்க்குப் பாவஞ்சேர என்னதவம் புரிகின்றாய் புலால் கடவுட்கிடாயோ
உன்னுடலம் அசுசியென நாணி வேறோர் உடலுன்னி யசுசி யென உணர்ந் திலை காணீயே! —சித்தி.பரபக்.செய்.,

உயிர்களைக் கொல்லச் சொல்பவன், கொல்பவன், ஊனை யறுத்தெடுப்பவன்,
விற்பவன், வாங்குகிறவன், சமைக்கிறவன், பரிமாறுபவன், உண்பவன் ஆகிய
அனைவரும் கொலைஞர்களே. —மனு.அத்.5

ஒ) மேற்கோள்பகுதி:

மயிலை: தாப்பிசைப் பொருள்கோளுக்கு மேற்கோள்(415).

சங்கர: தாப்பிசைப் பொருள்கோளுக்கு மேற்கோள்(நன்.416).

குணவீர: தாப்பிசைப் பொருள்கோளுக்குமேற்கோள்(நேமி.68).

குணசா: தாப்பிசைப் பொருள்கோளுக்கு மேற்கோள் (யா.கா.45).

யா.வி. உரை: தாப்பிசைப் பொருள்கோளுக்கு மேற்கோள்(சூ.95).

26.6. தினற்பொருட்டால் கொல்லா துலகெனின் யாரும்
விலைப்பொருட்டால் ஊன்தருவார் இல். (உ௫௬)

உரைப்பகுதி:

அ) மணக்.: 'கொள்ளா துலகெனின்' பாடம். தின்னுதற்காக உலகத்தார் கொள்ளாராயின் விலைக்காக ஊன்விற்பார் யாரும் இல்லை என்றவாறு.

இது கொன்றுதின்னாது விலைக்குக் கொண்டு தின்பார்க்குக் குற்றமென்னை என்றார்க்கு, அதனாலும் கொலைப்பாவம் வரும் என்று கூறிற்று.

ஆ) பரிதி.: எ—து தின்பது பொருட்டாகப் புலால் விற்பார்கள்; புலால் விட்டாரிடத்தில், புலால் விற்பார் இல்லை; அதெப்படி

என்றால், அகரத்திலே[1] மாங்கிசம் விற்பாரில்லை என்றறிக என்றவாறு.

ஈ) *காளி.*: எ—து இவ்வுலகமானது ஒன்றின் சுவை கருதி மற்ற தனைத் தினற்பொருட்டால் கொல்லாதாயின் இவ்வுலகத்து யாவரும் பொருள் விலையின் பொருட்டாக ஒன்றின் ஊனினைக் கொண்டு வந்துவிற்பாரும் இல்லை என்றவாறு.

உ) *பரிமேல்.*: பேதைமை காரணமாக அல்லது ஊன்தின்கை காரணமாக உலகம் கொல்லாதாயின், பொருள் காரணமாக ஊன் விற்பார் யாவரும் இல்லை.

உலகு என்பது ஈண்டு உயிர்ப்பன்மைமேல் நின்றது. பின் நிகழும் தின்கை முன்னிகழுங் கொலைக்குக் காரணமாகாமையின் தின்பார்க்குக் காரணத்தான்வரும் பாவமில்லை என்ற வாதியை[2] நோக்கி, அருத்தா பத்திய[3]ளவையால் காரணமாதல் சாதித்தலின், இதனான் மேலது[4] வலியுறுத்தப்பட்டது.

> *இராமா.*: தினற்பொருட்டாற் கொல்லாதுலகெனின்—(தின்பது காரணமாகவுலகங் கொலைசெய்வதாயிருக்க, அதைமறுத்து) தின்பது காரணமாகவுலகங் கொலைசெய்யாதென்று சொல்லு வாயாயின், யாரும் விலைப்பொருட்டாலூன் றருவாரில்—யாரும் விலைப் பொருள்காரணமாகவூனைக் கொடுப்பவரில்லை, எ-று. உலகு என்றது, இங்கேஉயிர்ப்பன்மையெனநின்றது. பின்னா வதாகியதின்கை, முன்னானதாகிய கொலைக்குக் காரண மாகாமையால் தின்பார்க்குப் பாவமில்லையென்றவாதியை நோக்கி அருத்தாவத்திப் பிரமாணத்தால் புலாலுணல் கொலைக் குக் காரணமாதல் சாதித்த இக்குறளினாலே மேற் கூறிய நரக வேதனை வலியுறுத்தப்பட்டது.

ஊ) *கவிராசர்*: 'கொள்ளார்'பாடம். மாங்கிசத்தைத் தின்னுகின்ற நிமித்தமாக உலகத்தார் கொள்ளாரென்றால் விற்கிற நிமித்தமாய் மாங்கிசம் கொண்டு வருகிற பேர்கள் ஒருத்தரும் இல்லை, (எ-று).

ஏ) *பழைய2*: ஊன் உண்ணல் காரணமாக உலகத்து உள்ளவர் கொல்லாராயின், பொருள் காரணமாக ஊன் விற்பவர் யாவரும் இல்லை.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

இக்குறளில் 'தினற்பொருட்டால் கொள்ளாது உலகெனின்' என்று பாடங் கொண்டவர் *மணக்குடவர்*, *பரிதியார்*, குழந்தை ஆகி

1 அகரம்—அந்தணர்வீதி (அக்கிரகாரம்) 2 வாதி—வாதாடுபவன்.
3 அருத்தாபத்தி—இஃது இங்ஙனம் அன்றாயின் இதுவாம் என்பது.
4 254, 255ஆம் குறள்கள்.

யோர். 'கொள்ளாதெனின் கொள்ளாராயின்' *பரிதியார்* 'புலால் விட்டாரிடத்தில் புலால் விற்பான் இல்லை என்ற உரையும் கொள்ளா தெனின்' என்ற பாடத்தையே கருதுகிறது. *காளிங்கர், பரிமேலழகர்* முதலாயோரும் பிற்காலத்துரையாசிரியர்களும் 'கொல்லாதுல கெனில்' என்றே பாடங்கொண்டனர். இக்குறட்போக்கு, கொள்வா னில்லையானால் விற்பவனும் இல்லை என்ற முதுமொழியை உட் கொண்டது. ஆகவே '*கொள்ளார்*' என்ற பாடமே சிறந்தது. உண்ப வர்கள் தினற்பொருட்டாகக் கொல்லாராயின், *விற்பானிடம்*விலைக் குக்கொள்முதல் செய்தே உண்ண வேண்டும். விற்பவர்கள் கொன்றே விற்பனை செய்தல்வேண்டும். விற்பனையின் பொருட்டு ஊன் தரு வார் உளராவரேயன்றி இலராகார். ஆதலால் *பரிமேலழகர்* கொண்ட பாடமும், அதன் விளக்கவுரையும் அமைதியும் ஊன்றியாயத்தக்கன. 'கொள்ளார் எனின்' என்ற பாடமே சிறந்தது.

'ஊன் தருவாரில்' என்பதால் 'கொள்ளாதெனின்' என்பதே ஆசிரியர் பாடம் எனக் கருதுவர் *வ.உ.சி.*

ஓ) ஒப்புமைப் பகுதி:

முற்றும்:

கொன்றான் கொலையை உடன்பட்டான் கோடாது
கொன்றதனைக் கொண்டான் கொழிக்குங்கால்— கொன்றதனை
அட்டான் இடவுண்டான் ஐவரினும் ஆகும் எனக்
கட்டெளிந்த பாவங் கருது —*சிறுபஞ்ச.,70*

தகாதுயிர்கொல் வானின் மிகாமையிலை பாவம்
அவாவிலையி லுண்பான் புலால் பெருகல் வேண்டும்
புகாவலை விலங்காய்ப் பொறாதுபிற வூன் கொன் (று)
அவாவிலையில் விற்பானும் ஆண்டதுவே வேண்டுமால் —*வளையா.,21*

கொல்வினை யஞ்சிப் புலால்குற்ற மென்பதை
நல்வினை யேயென நாட்டலு மாமென்னை —*நீல.,327*

வெற்றுடம் புண்பதும் வேலின் விளிந்தவை
தெற்றென வுண்பதும் தீமை தருமென்னை —*நீல.,332*

உகுநெற் பலகூட்டி யுண்டி முடிப்பான்
மிகுநெல் உதிர்வதனை வேண்டும்—தகவுடையோர்
உண்ணாப் படுமுடையை யுண்பான் உயிர்மரணம்
எண்ணாத வாறுண்டோ யிங்கு —*நீல.332 உரைமேற்கோள்*

விலைபடைத்தா ருன்வேண்ட அவ்விலைதான் வேண்டி
விலைபடைத்தார்க் கெம்முயிரை வைக்கின்றாம் இன்ன
கொலை படைத்தானோ கொடியன் என்பனவே போலத்
தலையெடுத்து வாய்திறப்ப தாமிவையோ காணீர் —*நீல,471*

26.7. உண்ணாமை வேண்டும் புலாஅல் பிறிதொன்றன்
புண்ண துணர்வார்ப் பெறின். (உருஎ)

உரைப்பகுதி:

அ) *மணக்.*: 'புலாலைப்' பாடம், புலாலை உண்ணாமைவேண்டும். அது பிறிதொன்றின் புண்; ஆதலால், அதனை அவ்வாறு காண் பாருண்டாயின் என்றவாறு.

இது புலால்மறுத்தல் வேண்டும் என்பதூஉம், அது தூயதாம் என்பதூஉம் கூறிற்று.

ஆ) *பரிதி.*: எ-து. புலாலைத் தின்னாமல் வேண்டும்; அது எது எனில், தன்னுடம்பின் புண்ணைத் தானே தின்னான் அதுபோல் பிரிதொன்றின் புண் என்றவாறு.

இ) *பரிப்.*: காணாதார்க்கு அமிழ்தாயே தோற்றும்.

ஈ) *காளி.*: எ-து. என்னெனில் மற்று அதனது உண்ணாமைத் தன்மையை[1] ஓர்ந்துணர்வாரைப் பெறின் மற்றவ் ஊன்தானும் பிறி தொன்றினது புண் அல்லது மற்றொன்றும் இல்லை; இப்படியாத லால் எஞ்ஞான்றும் புலாலினை உண்ணாமையைக் கருதவேண்டும் என்றவாறு.

உ) *பரிமேல்.*: புலாலாவது பிறிதோருடம்பின் புண், அது தூய்து அன்மை[2] அறிவாரைப் பெறின், அதனை உண்ணாது ஒழியல்வேண் டும்.

அஃது என்னல்வேண்டும் ஆய்தம் விகாரத்தால் தொக்கது.[3] அம் மெய்ம்மை[4]யுணராமையின், அதனை உண்கின்றார் என்பதாம். பொருந்து மாற்றானும்[5] புலாலுண்டல் இழிந்தது என்பது இதனால் கூறப்பட்டது.

காரி.: புண்ணது உணர்வார்—ஆய்தம் விகாரம் என்றது, கண்டு எனக் குற்றியலுகரத்திறே உயிரேறுவதல்லது அது என்னுஞ் சுட்டீற்றுகரம் உயிரேறாது என்பது நோக்கி; 'வாளதுணர்வார்ப் பெறின்''[6] என்பதனுட் காண்க. ''விலங்கலைக் கால்விண்டு''

1. ''தனது உண்ணாமைத் தன்மையை''—பாடம், உரைவளம்—முதற்பதிப்பு, உரைக் கொத்து—காசிமடப் பதிப்பு; 2. தூய்து அன்மை—தூயது அல்லாமையே;
3. அது உணர்வார்ப்பெறின் என்பது அஃது உணர்வார்ப்பெறின் என்றிருத்தல் வேண்டும். அது செய்யுள் விகாரத்தால் தொக்கது. முன் உயிர் வருமிடத்து ஆய்தப் புள்ளி மன்னல் வேண்டும் அல்வழியான்; முன் என்றதனால் வேற்றுமைக் கண்ணும் இவ்விதி கொள்க என்ற விதிப்படி அது உணர்வார்ப்பெறின் என்பது வேற்றுமைத் தொகையாதலின் ஆய்தம் இருத்தல்வேண்டும். ஈண்டு இன்மையின் செய்யுள் விகாரம் எனப்பட்டது.
4. அம்மெய்ம்மை—புண் என்று உணரும் உண்மைத் தன்மை. 5. பொருந்துமாறு— இது கூடும் இதுகூடாது எனத்தன்னிடத்தே தோன்றும் புக்தி. 6. குறள்—334

என்னும் கோவையாரில்[7] ''துலங்கலைச் சென்றிதென்னோ' என்பதன் பதவுரையினும் காண்க.

இராமா.: புலாஅல்பிறிதொன்றன்புண்—புலாலாவதுவேரோருடம்பின் புண்ணும், அதுணர்வார்ப் பெறின்—அதுதூய்மையன்றென்று அறிவாரைப் பெறின், உண்ணாமை வேண்டும்—அதனையுண்ணா தொழிதல் வேண்டும், எ-று.

அஃது என்பது, ஆய்தங் கெட்டுநின்றது. புலால்புண்ணெனப் பெயர் பெற்றதினாலும் பரிசுத்தமன்றுதலாலும் அந்த உண்மையையுணராமையாலதனையுண்கிறாரென்பதாம். பொருந்தியவுலகநீதியாலும் ஊனுண்டல் இழிவென்பது இதனாற் கூறப்பட்டது.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

பரிதியார் உரையில் 'தின்னாமல் வேண்டும்' என்ற பகுதி 'தின்னாமை வேண்டும்' என்றிருப்பதே நலம். 'மல்' விகுதி பண்புக்கு வாராமையின் 'அது உணர்வார்ப்பெறின்' என்றதன் பொருளும் விடுபட்டுள்ளது.

காளிங்கர் உரைக்கண் வரும் 'தனது உண்ணாமைத்தன்மையை என்பதில் 'தனது' என்பதற்குத் 'தன்னுடையதாகிய ஊனை அல்லது புண்ணை' எனப்பொருள் கொள்க. 'எஞ்ஞான்றும் என்பது ஒளி தோன்ற இருள் மாய்ந்தாற் போல மற்றதன் புண் என்று உணர்கின்ற அந்நேரத்தில் மட்டும் ஒழியாது என்றும் ஒழிக' என வலியுறுத்தியவாறாம்.

பழைய உரை 2-ல் வரும் 'உணர்வான் அறிவாரைப் பெறின்' என்பது அறிவான் அறிந்தான் என்பது போலக் கருவிப்பொருட்கண் வந்த மூன்றாம் உருபு ஆன்என்பது.

தேவநேயர், 'உணர்வார்' என்பதற்கு 'நோய்வாய்ப்பட்டது' என்றும், 'துப்புரவற்ற'தென்றும் 'அருவருப்பானது' என்றும் 'அறிதல்' என விளக்கமும் தருவர்.

மணக்குடவர், பரிமேலழகர், தண்டபாணியார், கா.சு. முதலியோர் உரைகள் 'ஊன் பிறிதோருயிரின் உடம்பின் புண் அதனை உணர்ந்தால் புலால் உண்ணார்கள்' என்கின்றன. *பரிதி., காளி.*, இருவரும் 'தன்னுடம்பின் புண்ணைத் தானே தின்னான் ஆகி அதனைப் புண் என்று உணர்வதுபோல தின்னும் ஊனும் பிறிதோருடம்பின் புண்' என்ற கருத்தினதாய்ச் சிறிது மாறுபடுகிறது.

மு.வ. 'உணர்வார்ப் பெறின்' என்பதற்கு 'ஆராய்ந்து பார்ப்பா

7 திருக்கோவை.24.

ரானால்' என உரை கொள்வர். செய்யுட் போக்கு உணர்வாரைப் பெற்றால் புலால் உண்ணாமை வேண்டும் என்றிருத்தல் காண்க.

வ.உ.சி. 'புலால் உண்ணாமை வேண்டும். அஃதுணர்வார்ப் பெறின் பிறிதொன்றன் புண்' என்று கொண்டு கூட்டிப் பொருள் காண்பர்.

இவற்றுள் 'புலால் பிறிதொன்றன் புண்; உணர்வார்ப்பெறின் உண்ணாமை வேண்டும்'' எனக்கூட்டிக் காணும் உரைகளே சிறந்தவை.

ஒ) *ஒப்புமைப் பகுதி:*

தம்புண் கழுவி மருந்திடுவர் தாப்பிறிதின்
செம்புண் வறுத்த வறைதின்பர் —*அறநெறி.*,97.

தூய்மையி லாமுடை சுக்கில சோணித
மாமது போன் மெனி னான்முலைப் பாலன்ன
தூய்மைய தன்று சொல்லுவன் சோர்வில
வாம னுரைவையந் தன்னொடு மாறே —*நீல.*,341

பிணங்கிடக்க நான்நுகரேன் என்றுநீ பேசும்
குணங்கிடக்க வேண்டியதென் கூறாய்—பிணத்தைக்
கலத்திலே யிட்டுக் கலந்துநா வாரப்
புலத்தினால் தின்றாய் புகல் —*தனிப்பாடல்*

ஓ) *மேற்கோள் பகுதி:*

தெய்வ.: உண்டு என்பது பொதுவினை என்பதற்கு உண்ணாமை வேண்டும் புலால் என்பது மேற்கோள் (தொல்.சொல். 45).

நீலகேசி உரை: 'தூய்மையிலா முடை சுக்கில சோணித, மாமது போன்ம் எனின் ஆன்முலைப் பாலன்ன தூய்மையதன்று' என்றதன் உரையில் ஆன்முலைப்பாலினை எக்குலத்து எத்தவத்தார் இழிக் கின்றார்? ஆதலால், மாம்சம் சுத்தமானது என்று கூறுபவனை மறுக்கும் போது 'உண்ணாமை வேண்டும்.... பெறின்' என மாம்சம் நிந்திக்கப்படுகின்றனதன்றே; ஆதலின் மாம்சத்தைப் பாலோடு ஒப்பிப்பது லோக விரோதம் என்பது என்று குறிக்கின்றார். (341)

26.8. *செயிரின் தலைப்பிரிந்த காட்சியார் உண்ணார்*
உயிரின் தலைப்பிரிந்த ஊன். (௨௫௮)

உரைப்பகுதி:

அ) மணக்.: குற்றத்தினின்று நீங்கின தெளிவுடையார் உண்ணார்; உயிரினின்று நீங்கின உடம்பை என்றவாறு.

இது மேற்கூறிய குற்றமெல்லாம் பயத்தலின், அதனைத் தெளிவுடையார் உண்ணார் என்றது.

ஆ) *பரிதி.*: எ-து அசுத்தத்தின் நெறியை அறிந்தகாட்சியினார் உண்ணார்; உயிர்போன உடலை என்றவாறு.

உயிர்போன உடல் சவம்[1] என்பதாம்.

இ) *பரிப்.*: மேற்றெளிவுடையார் உண்ணார் என்றார். அவர் உண்ணாததுயாதனைக் கருதி யென்றார்க்கு, அது எல்லாப் புண்ணியத்தினும் நன்று என்று கூறப்பெற்றது.

ஈ) *காளி.*: எ-து பாவத்தின்கண் நீங்கி நின்ற அறிவினையுடையோர்........[2]

உ) *பரிமேல்.*: மயக்கமாகிய குற்றத்தின் நீங்கிய அறிவினையுடையார் ஒருயிரின் நீங்கிவந்த ஊனை உண்ணார்.

தலைப்பிரிவு என்பது ஒருசொல்[3]. பிணம் என ஊனின்மெய்ம்மை தாமே உணர்தலின் 'உண்ணார்' என்றார்[4].

இராமா.: செயிரிற்றலைப் பிரிந்த காட்சியார்—குற்றத்தில் நீங்கிய அறிவுடையோர், உயிரிற்றலைப் பிரிந்தவூனுண்ணார்—ஒருயிரில் நீங்கிவந்த விடக்கைத்தின்னார், எ-று.

தலைப்பிரிதல், நீங்குதல். உயிர் நீங்கியபொழுதே பிணமென்றுணர்வராதலாலறிவுடையோர் உண்ணாரென்றார்.

ஊ) *கவிராசர்*: மயக்கமாகிய குற்றத்தின் நீங்கிய நல்ல அறிவை உடையவர்கள் ஓர் உயிரினின்றும் வாங்கின மாங்கிசங்களைத் தின்னார்கள்; (எ-று).

எ) *பழைய-2*: மயக்கமாகிய குற்றத்தை நீங்கித் தெளிந்த அறிவுடையார் ஓர் உயிரினை விட்டு நீங்கிய ஊனை உண்ணார்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'செயிர்', 'குற்றம்', 'அசுத்தம்', 'மயக்கமாகிய குற்றம்' என்பர் பழைய உரையாசிரியர்கள். *காளிங்கர்* 'பாவம்' என்பர். பழைய உரையாசிரியர்களும் *தண்டபாணியார்* முதலிய பின்னோரும் 'குற்ற

1 சவம்—பிணம். 2 இப்பகுதி சிதைவுபட்டுள்ளது.

3 தலைப்பிரிந்த—பிரிந்த என்னும் அளவிற்றாய், தலை என்பது ஒரு பொருளையும் உணர்த்தாமையின ஒரு சொல் என்றார்.

4 ஒருயிரினின்றும் நீங்கிவந்த மாமிசத்தை (உயிர் நீங்கிய உடலை)ப் பிணமென்று தாமே உள்ளவாறு அறிதலால் பிணவடிவ மாமிசத்தை மயக்கம் நீங்கிய அறிவினையுடையவர் உண்ணார் என்பதாம். எனவே மாமிசம் புசிப்பவர் மாமிசத்தைப் பிணவடிவம் என்றறியாமையினாலதனை யுண்ணுகின்றார் என்பதாயிற்று; ஆகவே, பிணத்தைத் தொட்டதனால் தீட்டுண்டாயிற் றென்றதற்காகப் பரிகாரந் தேடுவோர் பிணவடிவ மாமிசத்தைப் புசித்தல் அறியாமையிலும் அறியாமையாம். இதனால் மாமிசம் புசிப்போர் பிணம் புசிப்போர் என்றாயிற்றென்க. (கோ.வ.)

மற்ற அறிவினையுடையார் புலால் உண்ணார்' என்று கூற, இராம லிங்கனார் 'பிறஉயிர்களுக்குத் துன்பம் உண்டாக்குகிறகுற்றங்களை விட்டவர்' என்பர். 'காட்சியறிவு' என ஏனையோர் கூற இவர் 'நோக்கம்' என்பர்.

ஒ) ஒப்புமைப் பகுதி:

ஊன் றின்றலிழுக் கென்னான் —*நீல.*, 163

ஓ) மேற்கோள் பகுதி:

பேரா: (தொல். பொருள். 170)

சிவஞான: 'செயிரில் தலைப்பிரிந்த காட்சியார்' என்றாற் போல்வன இடைச்சொற்களாய்த் தாம் சேர்ந்த வினையைச் சிறப்பித்துப் பொருட்கு உபகாரப்பட்டு வரும். இவ்வாறு வருவனவற்றை வட நூலார் உபசர்க்கம் என்பர். (பாயிர.பக். 11).

26.9. அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று. (உருசு)

உரைப்பகுதி:

அ) மணக்.: 'ஒன்றின்' பாடம். நெய் முதலான அவியைச்சொரிந்து ஆயிரம் வேள்விவேட்டலினும், ஒன்றினுயிரை நீக்கி அதன் உடம்பை யுண்ணாமைநன்று என்றவாறு.

ஆ) பரிதி.: எ-து நெய்முதலானவற்றை ஓமத்திலே[1] சொரிந்து, ஆயிரம் யாகம் செய்வதில், ஒரு உயிரைக் கொன்று புலால் தின்னாமை நன்று என்றவாறு.

இ) காளி.: எ-து வேள்வித்திக்குஉரித்தாயுள்ள நெய்யும் அசனமும்[2] முதலாகிய ஓமத்திரவியங்களைக்[3] குறைவறச் சொரிந்து ஆயிரம் வேட்டலினும் மிகநன்று; மற்றொன்றினையே கொன்று அதன் ஊனை உண்ணாமை என்றவாறு.

உ) பரிமேல்.: தீயின்கண் நெய் முதலிய அவிகளைச் சொரிந்து ஆயிரம் வேள்வி வேட்டலினும் ஓர் விலங்கின் உயிரைப் போக்கி, அது நின்ற[4] ஊனை உண்ணாமை நன்று.

இராமா.: அவிசொரிந்தாயிரம் வேட்டலின்—நெருப்பிலே நெய் முதலாகிய தேவருணவுகளைப்பெய்து ஆயிரம் யாகங்களைச் செய்வதைப்பார்க்கிலும், ஒன்றினுயிர் செகுத்துண்ணாமை

1 ஓமம்—வேள்வித்தீ; 2 அசனம்--உணவு அல்லது.சோறு
3 ஓமத்திரவியங்கள்--வேள்வித்தீயில் இடும் பண்டங்கள்- 4 அது நின்ற--உயிர் நின்ற

நன்று-மிருக முதலியவற்றுளொன்றினுயிரைப் போக்கியந்த வுயிர் நிலையாகிய வூனையுண்ணாமைநன்று எ-று.

அவி, தேவருணவு. ஆயிரம்வேள்விப்பயனிலும் ஓருயிரைக் கொன்று தின்னாமையின்பயன் அதிக நன்மை என்பதாம்.

ஊ) *கவிராசர்* நெருப்பிலே நெய் முதலானவைகளை வார்த்து ஆயிரம் ஓமம் பண்ணினாலும் ஒரு சீவனைக் கொன்று அதனுடலைத் தின்னாமலிருக்கிறதே நன்மை; (எ-று).

ஏ) *பழைய-2:* தீயின்கண் நெய் முதலிய அவிகளைச் சொரிந்து ஆயிரம் வேள்வி செய்யினும், ஒரு மிருகத்தின் உயிரைப் போக்கி நின்ற ஊனை உண்ணாமை நன்று.

ஒ) தொகுப்பும் குறிப்பும்:

மணக்குடவர் முதலிய அனைவரும் 'வேள்வி செய்வதிலும் ஓருயிரையும் கொல்லாதிருத்தல் நன்று' எனவே உரைப்பர். 'வேட்டலின்' என்பதன் கண்ணுள்ள 'இன்' என்னும் உருபு உறழ் பொருளில் வந்தது. வேட்டலைப்போல என ஒப்புப் பொருளில் உரைப்பாரும் உளர். *கவிராசர்* 'ஓமத்திலே நெய் முதலியவற்றை வார்த்து' என்பதால் கொலை வேள்வியைக் குறியாராயினர் என லாம். உயிர்க்கொலையின்றியே இயற்றப்படும் வேள்விகளும் சில உள. ஓருயிரைக் கொல்லாமையான் வரும் பயனும், ஆயிரம் வேள்வி யான் வரும் பயனும் ஒக்கும் என்பதாம். *கா.சு.* 'ஊன் கலந்தஆகுதி களைச் சொரிந்து செய்யும் வேள்விகளிலும் ஓருயிரைக் கொல்லாமை நன்று' என்பர்.

வேள்வியுள் 'பசுவேட்டு எரியோம்பும் வேள்வியும், அவிசொரிந் தாற்றும் வேள்வியும்' என இருவகையுண்டு. அவற்றுள் உயிர்க் கொலை வேள்வியை விடுத்து அவிசொரிந்து ஆற்றும் வேள்வியையே *வள்ளுவர்* குறித்தனர். ஓருயிரையுங் கொன்று தின்னலாகாது என்பவர் ஆயிரம் வேள்வியில் ஆயிரம் உயிரைக் கொன்று கொடுத்து அடையும் பயனைக் காட்டிலும் ஒன்றன் உயிர் கெடுத்துண்ணாமை நன்று என்று அருளார். ஆகையால் அவிசொரிந்தாற்றும் வேள்வி களையே குறித்தனர் என்க. 'அவி'—'வேள்வித் தீக்குரித்தாகிய நெய்யும் அசனமும்(சோறும்) முதலான ஓமத்திரவியங்கள்' என்னும் *காளிங்கர்* உரையாலும் தெளியலாம். தீய வழுக்கியும் வாயாற் சொல்லற்க,எனப் பிறர்க்கும் விதிக்கும் *வள்ளுவர்*, கொலை வேள்வியை உவமைக்கேனும் உரையார் என்பது.

பி.சா.சுப்பிரமணிய சாத்திரியார் 'இல்லறத்தார் ஆயிரம் வேள்வி செய்து அடையும் பயனைக் காட்டிலும் துறந்தார் ஊனுண் ணாமையால் அடையும் பயன் மேலானது' எனக் கருத்துரைப்பர்.

அன்றியும். 'வேட்டலின்' என்பதற்கு 'வேட்டலைப் போன்று' என இன்னுருபு ஒப்புப் பொருளில் வந்ததாகக் கொண்டும், 'வேட்டலைக் காட்டினும்' என உறழ் பொருளாகக் கொண்டும் உரைகள் கூறப்படுகின்றன.

'வேட்டல்' என்பதற்கு 'ஐவகை வேள்வியுள் ஒன்றாகிய விருந்தோம்பல் எனவும் பொருள்கொண்டு ஆயிரம் யாகங்கள் செய்வது போலக் கொல்லாமையும், நெய் தெளித்து ஆயிரம் விருந்தினரை ஓம்புதலை விட ஒன்றன் உயிர் செகுத்துண்ணாமையும் நன்று' என்பாரும் உளர். இப்பாடலில் சொல்லமைப்பு இடந்தருமேல் இதனை உரையாகக் கருதலாம்.

'அவி' என்னும் சொல் செம்மறியாட்டையும், வெள்ளாட்டையுமே குறிக்கும் என்றலைச் *சுக்கிரநீதி* அத்தியாயம் 4, பிரசரணம் 2, சுலோகம் 98 லும், மேற்படி, பிரசரணம் 4, சுலோகம் 53 லும் காணலாம். தொல்லுயிர் வழங்கிய அவிப்பலி முதலியனவும் கொன்றீயும் வலியையே குறித்தலானும், வேத வேள்வி அதுவேயாதலானும் அவிசொரிதலும் வேட்டலும் வேறாக எண்ண வேண்டாமை தெளியலாம்.

இக்குறள் புலாலுண்ணாமையின் சிறப்புக் கூறுவதாகவே, கொன்று புரியும் யாகங்கள் ஆயிரத்தைக் காட்டிலும் — அல்லது யாகங்களைப் போல ஒன்றன் உயிரைச் செகுத்துண்ணாமை நன்று என்ற கருத்து சிறந்ததாகலாம்.

ஒ) ஒப்புமைப் பகுதி:

ஒன்றன் உயிர் செகுத்து உண்ணுதல் :

கொலை கூடிவரும் அறம் கொள்ளன்மின் —*வளையா.,17*

முற்றும்:

எவன் நூறுவருஷ பரியந்தம் வருஷந்தோறும் அஸ்வமேதயாகஞ் செய்கின்றானோ எவன் மாமிசத்தைச் சாமளவும் நீக்குகிறானோ இவரிருவருக்கும் புண்ணியபலன் சரிதான். —*மனு.*

ஒன்றன் உயிர்செகுத்து உண்ணாமை:

மாமிசத்தை நீக்குகிறவன் எந்தப்பலனை யடைகிறானோ அந்தப் பலனைப் பழம்கிழங்கு சாலியன்னம் என்னும் இவற்றால் ஜீவிக்கின்ற முனியும் அடைய மாட்டான். —*மனு., அதி., 5*

ஒ) மேற்கோள் பகுதி:

காரிரத்ன.: பாவிக அலங்காரத்திற்கு மேற்கோள் (மாற.251)

26.10. கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும்[1] தொழும். (௨௬௦)

உரைப் பகுதி:

அ) மணக்.: கொல்லானுமாய்ப் புலாலையுண்டலையும் தவிர்த்தவனை, கைகுவித்து எல்லா உயிரும் தொழும் என்றவாறு.

மேல் எல்லாப்புண்ணியத்திலும் இது நன்று என்றார்; அது யாதினைத்தரும் என்றார்க்கு, கொல்லாதவன் தேவர்க்கும் மேலாவன் என்று கூறினார்.

ஆ) பரிதி.: கொல்லாமையும், புலால் மறுத்தலும் உள்ளானை எல்லா உயிரும் தொழும் என்றவாறு.

ஈ) காளி.: எ—து தனக்குச் சுவை கருதி ஒன்றினைக் கொல்லானுமாய், புலாலினைத் தின்ன மறுப்பது செய்வானுமாய் இருந்தானை அனைத்து உயிரும் கைகூப்பித் தொழும் என்றவாறு.

உ) பரிமேல்.: ஓருயிரையும் கொல்லாதவனுமாய்ப் புலாலையும் உண்ணாதவனை எல்லா உயிரும் கைகுவித்துத் தொழும்.

இவ்விரண்டறமும் ஒருங்குடையார்க்கல்லது ஒன்றேயுடையார்க்கு அதனால் பயனில்லை ஆகலின், கொல்லாமையும் உடன் கூறினார். இப்பேரருளுடையான் மறுமைக்கண்தேவரின் மிக்கானாம் என அப்பயனது[2] பெருமை கூறியவாறு. இவை மூன்றுபாட்டானும் ஊனுண்ணாமையது உயர்ச்சி கூறப்பட்டது.

இராமா.: கொல்லான்— ஒருயிரையுங் கொலைசெய்யாதவனுமாகி, புலாலைமறுத்தானை—புலாலுண்பதையும்விலக்கியிருப்பவனை, கைகூப்பியெல்லாவுயிருந்தொழும் — எல்லாவுயிர்களுங் கைகுவித்துத்தொழும், எ—று.

நெல்முதலியவிதைகளெல்லா முளைத்துக் காய்த்தலாலவற்றைக் கொன்றுதின்பதுங்கொலையும் புலாலுணலுமாதலாலிது துறவறத்தாருள்ளுங் காய்கனி கிழங்கு முதலிய புசிப்பார்க்குப்பொருந்தாது. சருகுமுதலிய புசிப்பவரையே நாடிற்று அப்படிப்புசித்துத் தவஞ்செய்வோரெல்லாவுயிர்களிடத்துங் கருணையுடையவ

---

1 எல்லா உயிரும்—எல்லா உயிரும் கைகூப்பித்தொழும் என்றதனால் மக்கள் உயிரையே குறித்தவாறு காண்க.

2 அப்பயன்—புலால் உண்ணாமையினால் ஏற்படும் பெருமை—தேவரின் மிக்கான் ஆகும் பெருமையும் ஆம்.

ராவர். ஆகவே யவரை யெல்லாவுயிர்களுங் கைகூப்பித்தொழு மென்பதுய்த்துணர நின்றமையினிதுவுய்த்துணர்வைப்பென்னும் உத்தி. இவைமூன்றுபாட்டாலும் புலாலுண்ணாமையினுயர்வு கூறப்பட்டது.

ஊ) *கவிராசர்*: சீவனையும் கொல்லாதவனாய் மாங்கிசங்களைத் தின்னாதே என்ற ஜினனைச்[3] சகலமான சீவன்களும் கைகுவித்துத் தோத்திரம் பண்ணும் (எ—று).

ஏ) *பழைய2*: ஓர் உயிரையும் கொல்லானுமாய், புலாலையும் உண்ணாதவனுமாய் இருப்பவனை, மறுமையில் அவனை எல்லா உயிரும் தொழும் என்றவாறு.

மல்லர்: ஒரு உயிருங் கொல்லாமல் மாங்கிசத்தைத் தவிர்க்கிறவனை உயிர் எல்லாங் கைகுவித்து வணங்கும் எ—று.

ஒரு உயிருங் கொன்று போடாதபடிக்கு எச்சரிக்கையாயிருந்து உயிருள்ள வஸ்துக்களுக்கு உயிர்ச்சேதம் வாராதபடிக்கு அதுகளுடைய மாங்கிசத்துக்கு ஆசைப்படாமல் அதைத் தவிர்க்கிறவனை லோகத்திலே கொல்லத்தக்க உயிருள்ள வஸ்துக்கள் எல்லாந் தங்களுக்குச் சார்வாயிருந்து தங்களுடம்பிலே உயிரை அவன் இருத்தின படியினாலே நன்றி யறிந்து வணங்கும் என்பது கருத்து.

கொல்லல்—கொலை செய்தல்; மறுத்தல்—நீக்குதல்; கூப்பல்—குவித்தல்; தொழுதல்—வணங்குதல்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

உரையாசிரியர் எல்லாரும் ஒத்த கருத்தினரேயாவர். *காளி.* 'தனக்குச் சுவை கருதி ஒன்றனைக் கொல்லானுமாய்ப்புலாலை உண்ண மறுப்பதும் செய்வானாயின் என்பது கொல்லுதல் சுவை கருதித்தானே கொல்லுதலும் அதனைத் தின்னலும் வழக்கமாதலைக்' குறிக்கிறது.

கவிராசர் 'சீவன்களைக் கொல்லாதவனாய் மாங்கிசங்களைத் தின்னாதே என்ற ஜினன்' என்பது ஜீனதேவன், கொல்லாதே புலாலுண்ணாதே என்றவன். அவனை எல்லாவுயிர்களும் தொழும் என்ற கருத்தினைத் தெரிவிக்கிறது.

இதில் 'எல்லாவுயிரும் தொழும்' என்பதற்குத் தொழுதல் வினை உயர்திணைக்கேயுரியதாதலின் எல்லாவுயிரும் என்றாரேனும் உரிமை பற்றி உயர்திணை மக்களுயிரையே உணர்த்திற்று என்பர் சிலர். அருகிலிருந்து அறம் உரைக்கும் சமவ சரணத்தின் இரண்டாம்

3 ஜினன்—வென்றவன்.

வீதியாகிய காதிகா ஓர் நீர் நிலை. மலர்களை யுடையது. அதிலிறங்கி அறங் கேட்கச் செல்லும் உயிர்கள் மலர்பறித்துச் செல்கின்றன என்பர். ஏனைய மதநூல்களிலும் யானை, குரங்கு, எறும்பு நாரை வழிப்பட்டனவாகச் செய்திகள் காணப்படுகின்றன. ஆதலால் எல்லா உயிரும் தொழுதல் ஏற்புடையதே. அன்றியும் கவிச் சுவை படக் கூறினார் என்றதுமாம்.

குழந்தை 'அறவோனிடம் உயிர்கள் அச்சமின்றிப் பழகும். இதையே கை கூப்பித் தொழும்' என நயம்படக் கூறினார் என்பர். **தண்டபாணியார்** 'கேட்குந போலவும் கிளக்குந போலவும் அஃறிணை மருங்கினும் அறையப்படுதல் மரபாதலால் எல்லாவுயிரும் தொழுதல் கூறப்பட்டது' என்பர்.

ஒ) ஒப்புமைப் பகுதி :

கொல்லான் புலாலை மறுத்தானை

வாய்மையின் வழாது மன்னுயிரோம்புநர்க்கு
யாவது முண்டோ எய்தா அரும்பொருள் —*சிலப்.*, 11:158—159

கொலையின தின்மை கூறின் குவலயத் திறைமை செய்யும்
—*யசோதர.*, 243

ஓ) மேற்கோள் பகுதி:

அடியார்க்கு.: 'வாய்மையின் வழாது மன்னுயிர் ஓம்புநர்க்கு, யாவதும் உண்டோ எய்தா அரும்பொருள்' 'யாமெய்யா... ...... பிற' எனவும், 'கொல்லான் ... ...தொழும்' எனவும் உட்கொண்டவாறு எனக் கொள்க. (சிலப். காடுகாண். 158—9.)

குணவீர.: இக்குறளில் 'மறுத்தானை' என்றதாயினும் ஐம்பால் மேலும் ஒட்டிக்கொள்க. (நேமி. சு.66.)

குணசா.: ஒழுகிசைச் செப்பலோசைக்கு மேற்கோள். (யா. கா.).

காரிரத்ன.: காதைகரப்பு என்ற சித்திரகவியில் இக்குறள் எழுத்துக்கள் அமைந்திருப்பதைக் காட்டுவர். (மாற. 289).

26. புலான் மறுத்தல்

	தன்ஊன்	பொருளாட்சி	படைகொண்டார்	அருளல்ல	உண்ணாமையுள்ள	தினற்பொருட்டால்	உண்ணாமை வேண்டும்	செயிரின்	அவிசொரிந்து	கொல்லான்
மணக்.	3	2	4	6	10	5	1	7	8	9
பரிதி.	5	4	9	3	6	10	7	8	1	2
பரிப்.	—	—	4	—	10	5	1	7	8	9
காளி.	6	7	4	8	10	3	5	9	1	2
பரிமேல்.	1	2	3	4	5	6	7	8	9	10

26—வது அதிகாரம் 'புலான் மறுத்தல்' முற்றிற்று.

27. தவம்

அ) *மணக்.*: தவமாவது ஊணும் உறக்கமுங் குறைத்தலும், வெயிலும் பனியும் தாங்கலும், தேவர்வழிபாடு முதலாயினவும் மேற்கொண்டு முயறல்.

ஆ) *பரிதி.*: தவமாவது, தவஞ்செய்யும் நெறியைச் சொல்லும் என்றவாறு.

இ) *பரிப்.*: இஃது இவ்வறத்திற்கு முன்வைக்கற்பாலது. அருளுடையார்க்கும் புலால் உண்ணாதார்க்குமல்லது நடத்துதற்கருமையின் பிற்கூறப்பெற்றது.

உ) *பரிமேல்.*: அதாவது மனம் பொறிவழிப் போகாது நிற்றற் பொருட்டு விரதங்களான் உண்டிசுருக்கலும்[1], கோடைக்கண் வெயினிலை நிற்றலும்[2], மாரியினும் பனியினும் நீர்நிலை நிற்றலும்[3] முதலிய செயல்களை மேற்கொண்டு[4], அவற்றான் தம் உயிர்க்கு வரும் துன்பங்களைப் பொறுத்து, பிற உயிர்களை ஓம்புதல். புலால் மறுத்து உயிர்கண்மேல் அருள் முதிர்ந்துழிச் செய்யப்படுவதாகலின், இது புலால்மறுத்தலின்பின் வைக்கப்பட்டது.

> *இராமா.*: அதாவது மனம்இந்திரியவழியிலே செல்லாமற் பொருட்டுவிரதாதிகளால் உண்டிசுருக்குதலும் கோடைகாலத்திலேவெயிலிலே நிலைநிற்றலும் மழைக்காலத்திலும் பனிக்காலத்திலும் நீரிலே நிலைநிற்றலுமுதலிய செயல்களைமேற்கொண்டு அவற்றால் தம்முயிர்க்கு வருந்துன்பங்களைப் பொறுத்துப் பிறவுயிர்களைப் பாதுகாத்தல். புலாலைமறுத்

1 உண்டி சுருக்கல் - உணவைக் குறைத்தல்.

2 சித்திரை மாதம் முதல் ஆடி மாதம் ஈறாயுள்ள வெயிற்காலத்தில் வெயில் படுமிடத்தில் நின்று கொண்டிருத்தல். வெயில்நிலை நிற்றல் என்பதனால் (நாற்புறமும் தீச்சூழ மேலே சூரியகிரணம் படுவதான) பஞ்சாக்கினி மத்தியில் நிற்றலுங்கொள்க.

3 ஆவணிமாதம் முதல் கார்த்திகை மாதம் ஈறாயுள்ள மழைக்காலத்திலும், மார்கழி முதல் பங்குனி மாதம் ஈறாயுள்ள பனிக்காலத்திலும் நீர்நிலையில் (ஏரி ஆறு மடு முதலியவற்றில்) நின்று கொண்டிருத்தல்.

4 முதலிய என்றதனால் ஈரத்துணியைப் போர்த்துக் கொள்ளலும்.

தெல்லாவுயிர்களின் மேல் அருள்முதிர்ந்தபோது செய்யப்படு வதாதலானிது புலான் மறுத்தலின் பின்வைக்கப்பட்டது.

ஊ) *கவிராசர்*: அஃதாவது இந்திரியங்களின் வழியே மனம் போகா மல் நிற்பதற்காக விரதங்களாலே புசிக்கிற வஸ்துக்களைக் குறைத் துக் கோடைக்காலங்களிலே பர்வதங்களின் மேல் (வெயிலில்) நின்றும் மழைக்காலங்களிலே மரத்தின்கீழ் நின்றும், பனிக்காலங் களிலே வெள்ளாகாசத்திலேயும் கடல் தண்ணீர்க்கரையிலே நின்றும், இது முதலான விரதங்களைக் கெட்டியாகக் காத்து அதனாலே தன்னுடைய சீவனுக்கு வருகிற துன்பங்களைப் பொறுத்துப் பிற வுயிர்கள் மேலே தயையுடையவர்களாய் இருக்கிறது. இது சீவன் களைக் கொல்லாமலும் மாங்கிசங்களைத் தின்னாமலும் இருந்தால் அல்லது கூடாது என்பதாம்.

ஏ) *பழைய 2.*: அஃதாவது, புலன் பொறிவழிப் போகாது நிற்றல்; விரதங்களை அனுஷ்டித்தல்; உண்டி சுருக்குதல்; கோடையில் வெயிலினிற்றல்; மாரியினும் பனியினும் நீரிடை நிற்றல்; யோகத்தின் இருத்தல்; ஞானத்தின் ஒழுகுதல்; முதலாய அனுஷ்டிக்கும் இடத்து வரும் துன்பங்களைப் பொறுத்தல் தவம் என்றது.

மல்லர்: அதாவது தன் சரீரத்தைக் கட்டுப்படுத்துகிறது.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக்குடவர், 'ஊண் உறக்கம் குறைத்தல், உடல் நோயைத் தாங்குதல், தேவர் வழிபாடு, என்ற மூன்றே தவம்' என்பர். இவற் றுள் முன்னிரண்டும் வள்ளுவர் கூறும் 'உற்ற நோய் நோன்றலை' அடியாகக் கொண்டு கூறிய இலக்கணம். தெய்வவழி பாடுபயிறல் பொறிகளைச் செலுத்த வேண்டிய மாற்று நிலை.

பரிதி. உரை 'நெறியைச் சொல்வது' எனப் பொதுமையின் விளக்கியது. *பரிப்பெருமாள்* உரை 'தவம்' துறவற இயலின் முன் வைக்கற்பாலது; பின் வைத்தமைக்குக் காரணம் காட்டுவது. *கவிராசர்* உரை 'பொறிகளை யடக்கியாளும்பொருட்டு உற்ற நோய் நோன்றலும், இன்னாசெய்யாமையும் தவம்' என்கிறது.

பரிமேலழகர் இவ்வதிகாரத்தின் முதற்குறளை முழுதும் அடி யொற்றி அதிகார வரைவு கூறுவர். *பரிமேலழகரை* ஒத்து *சொ.த.*, *சி.இ.*, *பழைய உரை 2*, *கா.சு.* அனைவரும் கூறுவர்.

இவவுரைகளாற் போந்த கருத்து 'தவம்—மன அடக்கம், அது நிலைக்க விரதம், உடலை ஒறுக்கும் முயற்சிகள் இவைகளை மேற் கொள்ளுதல்' என்பதே. இங்ஙனம் 'தடுத்தலும் ஒறுத்தலுமே தவ

மாகாது தெய்வவழிபாடுகளை ஒருமனப்பட்டு ஊன்றிப்பயிறலே தவம்' என்னும் *மணக்குடவர்* உரை சிறந்தது.

குழந்தை இன்னாசெய்யாமையின்பின்னும் கூடாஒழுக்கத் தின் முன்னுமாக இதனை முப்பதாவது அதிகாரமாக வைப்பர்.

தேவநேயர். 'உடம்பை ஒறுக்கும் வன்மையான நிலையே தவம். அது தக—தகம், தவம் என்ற தோற்றமாறுபாடுகளை யுடையதாகி, உடலை எரித்தல் போன்ற துறவறப் பயிற்சி' என்பர். இதனை 'நாலிரு வழக்கிற் றாபப்தபக்கம்' என்னும் *தொல்காப்பியப் பகுதியானும்* 'நீர் பலகான் முழுகி' என்னும் *புறப்பொருள் வெண்பா மாலைச்* செய்யுளானும் அறியலாம் என்பர்.

இராமலிங்கனார் 'மனம் ஒரேநோக்கத்தில் ஈடுபட்டு வேறெண் ணங்களுக்கு இடம் கொடாமைக்காக இயற்றப்படும் முயற்சிகளின் தொகை' என்பர்.

வ.உ.சி: தவம்—அஃதாவது நோன்பு. அது உற்ற நோய் நோன்றலும் உயிர்க்கு உறுகண் செய்யாமையும்' என்பர். இதனைப் புலாலுண்ணாமைக்கும் கூடா வொழுக்கத்திற்கும் இடையில் இருபத்துநான்காம் அதிகாரமாக வைப்பர்.

27.1. *உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண்செய்யாமை அற்றே தவத்திற் குரு.* (௨௬௧)

உரைப்பகுதி:

அ) *மணக்.:* தமக்கு உற்றநோயைப் பொறுத்தலும் பிறவுயிர்க்கு நோய் செய்யாமையும் ஆகிய அத்தன்மையே தவத்திற்கு வடிவாம் என்றவாறு.

ஆ) *பரிதி.:* எ-து பிறர் நோவுக்கு இரங்கலும், தான் பிறர்க்கு வருத்தஞ் செய்யாமையும் ஆகிய இவையே தவத்திற்கு வடிவு என்றவாறு.

இ) *காளி.:* எ-து தமக்கு வந்துற்ற நோயைத் தாம் பொறுத் தலும் தாம் பிற உயிர்க்கு இடுக்கண் செய்யாமையுமாகிய அத் தன்மைத்தே ஒருவரொருவர் செய்யுந் தவத்திற்கு வடிவாவது என்றவாறு.

உறுகண் என்பது இடுக்கண். நோன்றல் என்பது பொறுத்தல்.

ஈ) *பரிமேல்.:* தவத்தின் வடிவு உண்டிசுருக்கல் முதலியவற்றால் தம் உயிர்க்கு வருந்துன்பங்களைப் பொறுத்தலும், தாம் பிற உயிர் கட்குத் துன்பஞ்செய்யாமையுமாகிய அவ்வளவிற்று.

மற்றுள்ளன எல்லாம்[1] இவற்றுள்ளே அடங்குதலின், அற்றே எனத் தேற்றேகாரங் கொடுத்தார். தவத்திற்கு உருஅற்று என்பது யானையதுகோடு கூரிது என்பதனை யானைக்குக் கோடு கூரிது என்றாற் போல ஆறாவதன்பொருட்கண் நான்காவது வந்த மயக்கம்[2]. இதனால் தவத்தது இலக்கணம் கூறப்பட்டது.

காரி.: தவத்திற்கு உரு அற்று என்பது, யானையதுகோடு கூரிது என்பது போலும். 'இதனின் இது இற்று என்னுங் கிளவியும்'[3] என்பதனால் அறிக.

இராமா.: தவத்திற்குரு- தவத்திற்குவடிவாவது, உற்றநோய் நோன்றல்- உண்டிசுருக்கல் (முதலியவற்றால்) தமக்குவருந் துன்பங்களைப் பொறுத்தலும், உயிர்க்குறுகண்செய்யாமை- பிறவுயிர்களுக்குத்துன்பஞ் செய்யாதிருத்தலும், அற்று —ஆகிய அவ்வளவையுடையதாம் எ—று.

மற்றுள்ளதவத்தின் அங்கங்களெல்லாமிவற்றுள்ளேயடங் குதலால் அற்றே எனத்தேற்ற ஏகாரங்கொடுத்தார். தவத்திற் குரு வற்றேயென்றது, யானையதுகோடு கூரிது என்பதை யானைக்குக்கோடுகூரிதென்றாற்போல ஆறாவதன்பொருளிலே நான்காம் வேற்றுமையுருபுமயங்கி நின்ற பொருளின் மயக்கம். இதினாலே தவத்திற்கு இலக்கணங்கூறப்பட்டது.

௨) *கவிராசர்*: தபசாகிறது போசனம் ரசவஸ்துக்கள் முதலானவை களை விரதங்களாலே குறைக்கிறதும் பிறவுயிர்களுக்குத் தீங்கு செய்யாமையுமாம்.

---

1 'மற்றுள்ளன எல்லாம்' என்றதில் திரிகால ஸ்நானம், தேவர்கடன் பிதிரர்கடன் செய்தல், தன்னலமின்மை, புணர்ச்சி விருப்பாமை முதலியனவும் அடங்கும் என்பர்' கோ.வ ; தேவர்கடன், பிதிரர் கடன்களைச் செய்தல் 'தென்புலத்தார் தெய்வம். என்ற குறளால்இல்லறத்தான் கடமையாக ஆசிரியர் வள்ளுவரே கூறியிருத்தலானும் புணர்ச்சி வெறுத்தலைக் கூடா ஒழுக்கம் எனக்கூறுதலானும், தன்னலமின்மையை ஒருவாறு புலால் உண்ணாமையிற் கருதலாமாதலானும் இவ்விரண்டில் கோ. வ. கூறும் விளக்கத்தில் உள்ளவை அடங்காமை தெளிவு. நீர்பலகால் மூழ்கல் முதலிய தாபத வாகையுட் கூறப்பட்டனவும் நாலிருவழக்கிற்றாபதப்பக்கம் என்பனவும் ஆம் என்கிறது திருக்குறள் உரைத்திறன். இவையனைத்தும் தாபத ஒழுக்கங் கூறுவன வன்றித் தவத்திற்குருவாகா. அங்ஙனம் ஆம் எனின் அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கம் முதலியனவற்றை நோயாகக் கருதும் மரபு இல்லை. ஆகையால் முன்னை ஊழ்வினை வயத்தான்வரும் மூவகைத்துன்பங்களையும் பொறுத்துக் கொள்ளுத லும், அங்ஙனம் பொறுக்கலாற்றாவழி வெகுண்டு பிறஉயிர்கட்கு இன்னாசெய்யாமை யும் ஆகிய இரண்டையும் வள்ளுவர் கருதுகிறார். அவற்றையே பரிமேலழகர் மற்றுள் ளனவெல்லாம் எனத் தொகுத்துரைத்தார் எனல் தகும்.

2 உருபு மயக்கம்; ஒரு வேற்றுமையுருபு மற்றொரு வேற்றுமையுருபின் பொருட்கண் வருதல். ஈண்டு 'தவத்தினது உரு' எனற்பாலது தவத்திற்கு உரு என வந்து நான்க னுருபு ஆறாம் வேற்றுமைக்கிழமைப்பொருளில் வந்தது மயக்கம்.

3 தொல். சொல். 110.

ஏ) *பழைய 2*: விரதங்களை அனுஷ்டித்து, உண்டி சுருக்கல் முதலிய வற்றால் உயிர்க்கு வரும் துன்பங்களைப் பொறுத்தலும், தாம் பிற உயிர்கட்குத் துன்பம் செய்யாமையுமாகிய அவ்வளவிற்றே தவத்திற்கு வடிவு என்றவாறு.

மற்றுள்ளனவும் இவற்றுள்ளே அடங்கும் எனக் கொள்க.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'உற்றநோய் நோன்றலை' *மணக்., பரிப்., பழைய உரை 2, சொ.த.*, குழந்தை, தேவநேயர், *சி.இ.* முதலியோர் 'தமக்குற்ற நோயைப் பொறுத்தல்' என்பர். *பரிதியார்* 'பிறர் நோவுக்கு இரங்குதலும், தான் பிறர்க்கு வருத்தஞ் செய்யாமையும்' என்பர். இவற்றுள் 'பிறர் துன்பத்தினைக் கண்டு மனம்பொறாமையும், தான் பிறர்க்குத் துன்பம் செய்யாமையுமே தவத்தின் உண்மை வடிவு' என்ற *பரிதியார்* உரை மிகப் போற்றற்பாலது. தன் துன்பத்தைத் தான் பொறுத்தல் பெரியதவமாகாது. துன்பத்தை மாற்றக் கூடுமாயின் மாற்றிக் கோடலும் அங்ஙனமன்றெனின்பொறுத்துக் கோடலும் உலகியற்கை. அதனைப் பெரிய தவமாகக் கருதுதல்அத்துணை உயர்ந்த கருத்தினதன்று ஆகலான் என்க.

தேவநேயர் 'இயற்கையாகவும் செயற்கையாகவும் தமக்குவரும் துன்பங்கள் என்றது பசி தாகம் முதலிய இயற்கைத் துன்பங்களையும், பிறர் செய்ய வரும் துன்பங்களையும் பொறுத்தலாம் என்பர். *இராமலிங்கர்* இதனையே விளக்கிப் 'பசி முதலிய துன்பங்களைப் பொறுத்தல் மட்டும் தவம் ஆகாது; பிறர் செய்யுந் துன்பங்களைப் பொறுத்தலே தவமாம்' என்பர்.

'கொலை முதலிய பாவ நீக்கத்தின் பொருட்டு உடல்வலிமைக்கு ஏற்றவாறு உண்ணாமை முதலியன மேற்கொண்டு விடய போகங்களைத் துறந்தனம்; ஞானதியானங்கள் பயில்வுழி வெயில், பனி, மழை வந்தால் அவற்றை வலிமைக்குத் தக்கவாறு பொறுத்தாம், என்னை உற்ற நோய் நோன்றல்? என்பது எம்மோத்தாகலின்' என்ற *நீலகேசி* 353ம் பாடலுரையை மேற்கோள்காட்டி 'உடலளவு விரதமே யன்றித் தவத்திற்காக ஆற்றலை மீறி உடலை வருத்துவ தன்று' என விளக்கம் தருவார் ***கவிராசர்***.

மு.ரா.அரு. 'பசியைப் பொறுப்பது போல்வது ஒன்று பிற உயிர்க்குத் துன்பஞ் செய்யாமை' என்றது இவர் விளக்கம். நோய் நோன்றலும் உறுகண் செய்யாமையும் ஒத்த பயனுடையவாய்த் தவத்தின் உருவாயிற்று என்பது இவர் கருத்துப் போலும்.

வ.உ.சி. 'உற்ற நோய் நோன்றல்—தம்மைப் பொருந்திய நோயைப் பொறுத்தல். அற்றே என்றமையால் தம் உடம்பை வருத்துதல் முதலியன தவத்தின் பாற்படா' எனப் *பரிமேலழகர்*

கருத்தை மறுப்பர். பரிமேலழகர் தாபதவாகைஎன்றபுறத்திணையை மனத்துட்கொண்டு எழுதியஉரை இது. உற்றநோய் நோன்றல், என்பதற்கு உடம்பை வருத்துதலே என்ற பரிமேலழகர் கருத்து மேற்கோள் பின்னணியே உடையது.

ஒ) ஒப்புமைப் பகுதி:

தவம்:

''படநாகந் தோலுரித்தாற் போற்றுறந்து கண்ணவர்மெய் பனிப்ப நோற்றிட்டு
உடனாக ஐம்பொறியும் வென்றார்க்கு —*சீவக.,*1546

கமையொப்பதோர் தவமுஞ்சுடு கனலொப்பதோர் சினமாகும்
—*கம்பராமா.,*1362

வெங்கனன் முழுகியும் புலன்கள் வீக்கியும்
நுங்குவ வருந்துவ நீக்கி நோற்பவர்
எங்குளர் குலத்தில்வந் தில்லின் மாண்புடை
நங்கையர் மனத்தவம் நவிலற் பாலதோ *கம்பராமா.,*5246

.....................தவமெனுந் தகவில்லோர் —*கம்பராமா.,*6397

உயிர்க்கு உறுகண் செய்யாமை:

அருளுதல் சான்ற அருந்தவம் செய்மின் —*வளையா.,*24

முற்றும்:

உயிர்நோய் செய்யாமை யுறுநோய் மறுத்தல்
செயிர்நோய் பிறர்கண் செய்யாமை—செயிர்நோய்
விழைவு வெகுளி இவை விடுவானாயின்
இழிவன் றினிது தவம் —*சிறுபஞ்ச.,*31

ஓ) மேற்கோள் பகுதி:

நீலகேசி உரை: ஒருவழி நிற்றல் இருத்தல்செய்து ஞான தியானங்கள் பயில்வுழி வெயிலும் மழையும் காற்றும் முதலாயின வந்தால் அவற்றைச் சக்திக்குத் தக்கவாறு பொறுத்தாம். என்னை? 'உற்றநோய் நோன்றல்....... உரு' என்பது எம் ஒத்தாகலின். தானே வந்தன பொறுத்தலல்லது, வெயில் முதலாயினவற்று வருந்துதலே தவமென்று சொன்னோமோ? இல்வாழ்க்கைக்கண் நின்றாரும், இல்வாழ்க்கைக் காரியங்கள் ஒன்று செய்வுழி ஒழிந்த காரியங்கள் துறந்து, க்ருஷி முதலாயின செய்வதற்காகக் காயம் வருந்தினாராவரோ? (353)

27.2. தவமும் தவம்உடையார்க் காகும் அவம்அதனை
அஃதிலார் மேற்கொள் வது. (௨௬௨)

உரைப்பகுதி:

அ) *மணக்.:* தவஞ்செய்தலும் முன்பு நல்வினை செய்தார்க்கு வரும்,

அந்நல்வினையில்லாதார் அத்தவத்தை மேற்கொள்வது பயன் இல்லை என்றவாறு.

இது தவமில்லார்க்குத் தவம் வாராது; வரினும் தப்பும் என்றது.

ஆ) *பரிதி.*: எ—து இளமையிலே தவஞ்செய்கிறோம் என்றாலும், தவத்துக்கு இடையூறு ஆக்கும்; போன சென்மத்தில் விட்டகுறை உண்டாகில், அத்தவத்தை முயலப்பண்ணி முடிப்பிக்கும் என்றவாறு.

இ) *காளி.*: பரிதியார் உரை போன்றதே.

உ) *பரிமேல்.*: பயனேயன்றித்[1] தவந் தானும் உண்டாவது முன்தவ முடையார்க்கே, ஆகலான், அத்தவத்தை அம்முற்றவமில்லாதார் முயல்வது பயனின் முயற்சியாம்.

பரிசயத்தால் அறிவும் ஆற்றலும் உடையராய் முடிவு போக்க லின் தவமுடையார்க்கு ஆகும் என்றும், அஃதில்லார்க்கு அவையின் மையின் முடிவு போகாமையின்[2] அவமாம் என்றும் கூறினார்.

இராமா.: தவமுந்தவமுடையார்க்காகும்—இப்பிறப்பிற்செய்யத் தொடங்கிய தவந்தானும் முற்பிறப்பிற்செய்த தவமுடையார்க்கேஇடையூறில்லாமல் நிறைவேறும், (ஆதலால்) அதனை -அந்தத்தவத்தை,அஃதிலார்-அந்தமுன்செய்ததவமில்லாதவர், மேற்கொள்வது—பூண்டுகொள்வது, அவம்—வீண், எ—று.

பயனேயன்றித்தவந்தானுமென நிற்றலால் உம்மை யிறந்தது தழுவியது நன்மைசெய்தற்குப் பாவங்காரணமாகாமையால் நன்மைசெய்தற்கு நன்மையே காரணமென்பதாம்.

கவிராசர்.: தபசு பண்ணுகிறது முந்தின ஜென்மத்திலே தபசு பண்ணின பேர்களுக்கே கூடும். அந்தத் தபசும் முன்புண்ணியமில்லாத பேர் செய்யப்போனால் அபத்தமாய்ப் போம்[3] (எ—று).

ஏ) *பழைய2*: முன் தவம் செய்தவர்க்கே தவம் பலிக்கும்; முன்தவம் இல்லாதவர் தவம் செய்ய முயல்வது அவமாம்.

ஐ) *தொகுப்பும் குறிப்பும்*: 'தவம் தவத்தானாம் பயனையும், தவத்தையும், நல்வினையையும் உணர்த்தும்' என்பர் *மணக்குடவர்* முதலிய தொல்லாசிரியர்கள். அனைவரும் 'முன்தவமில்லாதார் முயல்வது பயனில் முயற்சியாம், என்ற முடிபையே கொண்டனர்.

பரிதியார் 'இளமையிலே தவம் செய்வோம் என்றாலும் இடையூறாகும்; விட்டகுறை இருந்தால்தான் தவம் செய்ய இயலும், பயனையும் அடையலாம்' என ஒரு கருத்துக் கொணர முயல்வர்.

---

1 பயனேயன்றி—தவத்தான் விளையும் பயனேயன்றி மேலும் தவஞ்செய்தற்கும், தவம் முடிவு போதற்கும் முன் செய்த தவம் வேண்டும் என்பதாகும்.

2 அஃதில்லார்க்கு அவையின்மையின் முடிவு போகாமையின்— முன் தவமிலார்க்கு அறிவும் சுற்றமும் இவ்வமையின் முற்றுப் பெறாமையின்.

3 அபத்தமாய்ப் போம்—பிழைபடும்.

சொ. த. 'தவப்பயன் செல்வம், குடிப்பிறப்பு, கல்வி முதலியன. அவையேயன்றித் தவமும் முன்தவம் உடையார்க்கே உளதாவதாம்' என்பர். தேவநேயரும் இக்கருத்தினரே.

இராமலிங்கனார் 'தவம் தவ இலக்கணங்களாகிய உற்ற நோய் நோன்றலும் உயிர்க்கு உறுகண் செய்யாமையும் ஆகிய இரண்டையும் உடையார்க்கே உளதாம்' எனக் கூறிப் *பரிமேலழகர்* முதலான பழைய உரையாசிரியர் கருத்தை மறுப்பர். முற்றவம் உடையார்க்கே இப்போது தவம் பயக்கும் எனின், தவஞ்செய்யும் ஊக்கம் அழியும்; முற்றவம் உண்டு இல்லை என்பதை அறிவதெப்படி? என்ற ஐயங்களை விளைத்தலின் அவ்வுரை பொருந்தாததேயாகும். முற்கூறிய காரணம் வெறும் உண்மையை நினைவூட்டத்தான் முயற்சியைத் தடுப்பதற்காக அல்ல எனின், முற்பிறப்பில் தவஞ்செய்து விட்ட குறையுடையவனும் ஏதோ ஒரு பிறப்பில் தவமே செய்யாதவனாக இருந்து பின் செய்து விட்ட குறை ஏற்படுத்திக் கொண்டவனாகத் தானே இருக்கமுடியும். ஆதலால் விட்டகுறை எனக் கொள்வது தத்துவ நெறிக்கும் பொருத்தமில்லாததேயாகும்' என ஏதுக்காட்டி மறுப்பர்.

முற்பிறப்பிற் செய்த தவம், இப்பிறப்பிற் செய்யுந் தவப்பயன் முடிதற்குக் காரணமாம் எனின் (அறவத்தை) எல்லையின்மை என்னும் குற்றந்தங்கும்; ஆகையால் தவமும் தவத்திற்குரிய ஒழுக்கம் உடையார்க்கே கூடும் என்பதே இயைபுடையது' என உரைகண்டவர் *அரசஞ் சண்முகனார்*. அவர், 'வேடநெறி நில்லார் வேடம் பூண்டென் பயன்' என்ற *திருமந்திரச்* செய்யுளை மேற்கோளாகவும் காட்டுவர். வ. உ. சி. விருத்தியுரையில் 1935ல் இக்கருத்தைக் காட்டிப் *பரிமேலழகரை* மறுப்பர். இதனையே குழந்தை 'துறவு பூண்டு நோற்றல் முதலியன இல்லறத்திலிருந்து நன்கு ஒழுகியவர்களுக்கே இயலும். அங்ஙனமில்லாதார் நோற்க முயலற்க' என்பது கருத்து என்பர்.

'பழைய தவப்பயன் இம்மைத்தவத்திற்குக் காரணமாம் என்று எல்லையின்மை என்னும் குற்றம் பொருந்தக் கூறுவதைவிட மனையறங்காத்து, வெறுத்து மனம் அடங்கித் தவம் மேற்கோடலே சிறந்தது' என்னும் *அரசஞ்சண்முகனார்*, குழந்தை உரைகள் ஏற்புடையதாகலாம்; எண்ணித்துணிக.

'தவக்கோலமும் தவஞ்செய்பவர்க்கே பொருந்துவதாகும்; தவஞ் செய்யாதார் கோலம் மட்டும் புனைந்து பயனில்லை' என உரைப்பர் *கன்னியப்பநாயக்கர்*.

'அவம்' என்றதற்குப் பயனின்றாயே கழியும் என்பது கருத்தன்று; போதிய பயன் தராது என்பதே கருத்து. பயனில் முயற்சி

யாம் எனின் முற்கூறிய ஐயங்களை வளர்ப்பதோடு வெறுவினை யாகவும் முடியும் என்க.

ஒ) ஒப்புமைப் பகுதி:

தவமும் தவமுடையார்க்கு ஆகும்:

முன்முறை செய்தவத்தின் இம்முறை இயைந்தோம் —*பரிபா*., 11:138

அகத்தாரே வாழ்வாரென் றண்ணாந்து நோக்கிப்
புகத்தாம் பெறாஅர் புறங்கடை பற்றி
மிகத்தாம் வருந்தி இருப்பாரே மேலைத்
தவத்தால் தவம்செய்யாதார் —*நாலடி*.,31

தவத்தின் மேலுறை தவத்திறை தனக்கலதரிதே —*வளையா*.,25

மக்களுக்கு முன்னைச் செய்த வினைப்பயனை நுகர்தற்குத் தக்க தாகவே அறிவு உண்டாகும். இன்றேல் நல்வினை, தீவினை களின் முற்படுதற்கு ஆற்றல் இன்றாம்.

—*சுக்கிரநீதி. அத்*.,1:45—46

முற்றும்:

தவம் செய்து வந்தார் தவநிலை நிற்பார்
அவஞ் செய்து வந்தார்க்கு அரிதும் பெரிதும் —*சூளா*.,2005

27.3 துறந்தார்க்குத் துப்புறவு வேண்டி மறந்தார்கொல் மற்றை யவர்கள் தவம். (உசுசு)

உரைப் பகுதி:

அ) *மணக்*.: துறந்தவர்களுக்கு உணவு கொடுத்தலை வேண்டித் தவிர்ந்தாராயினரோ? இல்வாழ்வார் தவம் செய்தலை என்றவாறு.

இது தானத்தினும் தவம் மிகுதியுடைத்து என்றது.

ஆ) *பரிதி*.: எ-து துறந்து தவம் பண்ணினவற்கு ஆகாரம் விசாரிக்க வேண்டிப்[1] பிறந்தார்களோ ஸ்திரிபர்த்தாக்கள் என்றவாறு.

ஈ) *காளி*.: பரிதியார் உரை போன்றதே.

உ) *பரிமேல்*.: இல்லறத்தையே பற்றி நிற்பார், துறந்தார்க்கு உண்டியும் மருந்தும் உறையுளும் உதவலை விரும்பித் தாம் தவஞ் செய்தலை மறந்தார் போலும்.

---

1 ஆகாரம் விசாரிக்க வேண்டி—உணவு கிடைக்கும் வகையை ஆராய விரும்பி.

துப்புரவு—அனுபவிக்கப்படுவன[2]. 'வேண்டிய வேண்டியாங்கு எய்தற்' பயத்ததாகலின் யாவராலும் செய்யப்படுவதாய தவத்தைத் தாம்[3] செய்யும் தானத்தின்மேல் விருப்ப மிகுதியான் மறந்தார் போலும் எனவே, தானத்தின் தவம் மிக்கது என்பது பெற்றாம்.

காரி.: மற்றையவர்கள் 'மற்றையது'[4] என்னுஞ் சூத்திரத்தில் ஒத்ததறிவான் என்பதும் அது துப்புரவும் அனுபவிக்கப்படுவன.

இராமா.: மற்றையவர்கள்—இல்லறத்தையே பற்றி நிற்பவர், துறந்தார்க்குத்துப்புரவுவேண்டி—சந்நியாசிகளுக்கு உணவும் மருந்தும் இருப்பிடமும் உதவுதலை விரும்பி; தவமறந்தார் கொல்—தாங்கள் தவஞ்செய்தலை மறந்தார்போலும், எ-று.

துப்புரவு இங்கே யநுபவிக்கப்படுவனவாகிய எல்லாவற்றின் மேலும் நின்றது. விரும்பியவற்றை விரும்பியவாறே எய்துதற் பயனையுடையதாகலின் அவர் செய்யுந்தானத்தைப்பார்க்கிலுந் தவம் மிக்கதென்பதாம்.

ஊ) *கவிராசர்*: இல்லறத்திலே இருக்கிற பேர் துறந்தவர்களுக்கு அசனமும் மருந்தும் இருப்பிடமும் கொடுக்க வேண்டும் என்று தாங்கள் தபசு பண்ணுகிறதை மறந்தார்கள் போலும்.

எ) *பழைய2*: முழுவதும் துறந்தவர்க்கு உண்டி முதலிய வேண்டி இல்லறத்தை உடையவர், துறவறத்தை மறந்தார் கொல்?

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'துப்புரவு'— 'உணவு' எனப்பொருள் கண்டனர் *மணக்., பரிதி*; 'உணவு முதலிய துய்க்கும் பொருள்கள்' எனக்கொண்டு 'உண்டி உறையுள் மருந்து உதவல்' என்றனர் *பரிமேல், கவிராசர், பழைய உரை 2, மு.ரா.அரு., வ.உ.சி., கா.சு., சி.இ.* முதலான அனைவரும்.

சொ.த. 'மறந்தார்கொல்' என்பதற்கு 'வேண்டிய வேண்டியாங் கெய்தல் தவத்தின்பயனாக மேலும் கூறப்படுதலானும், தானத்தினும் தவம் சிறந்ததாகலானும், தவமும் தவமுடையார்க்கே யாகுமாதலானும், வருபிறவியிலேனும் அதனை முடியச் செய்யும் கருத்தோடு தானத்தையும்தவத்தையும்ஒருசிறிதுசெய்தல் பயனுடைத்தென்பதை இல்லறத்தார் மறத்தல் கூடாது என்பார் இங்ஙனம் மற்றையவர்கள் தவம் மறந்தார்கொல் என்றார்' என்பர்.

இக்குறள் ஐயந்தழுவிய தற்குறிப்பேற்ற அணி என்பர் *தேவநேயர்*.

---

2 அனுபவிக்கப்படுவன—உணவும் உ[illegible]யுளும் மாதரும் உடையும் போல்வன. அங்ஙனமே மாதர்க்கு ஆடவரும் அணி[illegible]ம மணியும் மாலையும் பிறவும்.

3 265-ஆம் குறளில் உள்ளது.

4 தொல்.சொல்.இளம்,259.

கருத்து வேறுபாடில்லையாயினும் *பரிதியார்* 'துறந்தார்க்கு ஆகாரம் வேண்டிப் பிறந்தார்களோ ஸ்திரிபர்த்தாக்கள்' என்கிறார். இதில் 'துறந்தார்க்கு' என்பதற்குப் பதிலாகப் 'பிறந்தார் கொல்' எனப் பாடம் கொண்டிருப்பது அறியலாம்.

இல்வாழ்வார் துறவிக்கு உணவளிப்பதற்காகத் தவத்தை மேற்கொண்டார் அல்லர் என்ற குறளின் கருத்து இல்வாழ்க்கையின் இன்றியமையாமையையும் அவர்களுக்குள்ள கடமையுணர்ச்சியையும் கருணைப்பெருக்கையும் காட்டுவதாக இருக்க *வ.உ.சி.* உரையில் அவர்களைக் கண்டித்தவாறு என்றல் சிறிதும் பொருந்தாமை உணர்க.

27.4. ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்
எண்ணின் தவத்தான் வரும். (உசுச)

உரைப்பகுதி:

அ) *மணக்.*: இவ்விடத்துப் பகைவரைத் தெறுதலும்,[1] நட்டோரை ஆக்குதலுமாகிய[2] வலி ஆராயின், முன்செய்த தவத்தினாலே வரும் என்றவாறு.

இது பிறரை ஆக்குதலும் கெடுத்தலும் தவத்தினாலே வரும் என்றது.

ஆ) *பரிதி.*: எ-து சத்துருக்களைச் செயிப்பதும், மித்துருக்களை அளிப்பதும் தவத்தால் வரும் என்றவாறு.

இ) *காளி.*: இவருரை பரிதியார் உரை போன்றதே.

ஈ) *பரிமேல்.*: தம் அறத்திற்குப் பகையாய் அழிவு செய்தாரைக் கெடுத்தலும் அதனை யுவந்தாரை உயர்த்தலுமாகிய இவ்விரண்டையும் தவஞ்செய்வார் நினைப்பாராயின் அவர் தவவலியான் அவை அவர்க்கு உளவாம்.

முற்றத்துறந்தார்க்கு[3] ஒன்னாரும் உவந்தாரும் உண்மை கூடாமையின், தவத்திற்கு ஏற்றி உரைக்கப்பட்டது.[4] எண்ணின் என்றதனான், அவர்க்கு, அவை எண்ணாமை இயல்பு என்பது பெற்றாம். ஒன்னார் பெரியராயினும், உவந்தார் சிறியராயினும், கேடும் ஆக்கமும் நினைந்த துணையானே வந்து நிற்கும் எனத் தவஞ்செய்

1 தெறுதல்—வருத்துதல்; 2. ஆக்குதல்—வளமுறச்செய்தல்!

3 அகப்பற்று. புறப்பற்று அனைத்தையுந் துறந்தார்க்கு!.

4 ஏற்றியுரைத்தல்—ஒருபொருள் இல்லாத குணத்தை யாதானுமோர் இயைபுபற்றி அவற்றிற்குளவாகச் சொல்லுதல்.

வார்மேலிட்டுத் தவத்தினது ஆற்றல் கூறியவாறு.[5]

இராமா.: ஒன்னார்த்தெறலும்—பகைவரைக் செடுத்தலும், உவந்தாரையாக்கலும்—தனக்கு உவந்தவராகிய நட்பினரைப் பெருகச்செய்தலும், எண்ணின்-எதினாலுண்டாமென்றாராயின், தவத்தான்வரும்-அதுதவஞ்செய்தலாலுண்டாம், எ—று.

முற்றத்துறந்தவர்க்குப் பகையுமுறவுங்கூடாமையால் தவத்தின் மேலேற்றிக்கூறினார். சாபாநுக்கிரகசத்திகளிரண்டுந் தவஞ்செய் வோர்க்குண்டாமென்று சொல்ல வந்தவர் தவத்தான் வருமென்றார்.

ஊ) *கவிராசர்*: தங்கள் தவத்திற்குப் பகையாய் அழிவு செய்தார் கேடுறுதலும் அந்தத் தவசுக்குச் சந்தோஷப்பட்டவர்கள் ரக்ஷிக்கப் படுதலும் ஆராயின் அந்தத் தவத்தால் வரும் முற்றுந்துறந்த மகா முனிகளுக்கு இகழ்தலும் புகழ்தலும் ஒன்றே யாதலின் அவர்கள் இகழ்ந்தாரைக் கெடுக்கவும் புகழ்ந்தாரை ரக்ஷிக்கவும் நினையார், ஏனெனில் அவர்கள் உத்தமக்ஷமை முதலிய பரிணாமங்களாகிய[6] பத்துத் தர்மகுணங்களோடு[7] பொருந்தி மோட்சத்தை அடைவிக்கும் தவசில்[8] நிற்பதால் (எ—று).

எ) *பழைய2*: தன்மத்திற்குப் பகைசெய்வாரைக் கெடுத்தலும், தன் மத்திற்கு உவந்தாரைச் செல்வர் ஆக்குதலும் தவத்தை உடையவர் நினைப்பின், அவர் தவப்பலத்தினான் உடனே வரும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக்குடவர், பரிதியார்., அரசுமணி, இராமலிங்கனார், இவர்கள் உரை பொதுவகையான் 'பகைவரைத்தெறுதலும், நட்டோரை யாக்குதலும் தவத்தின் பயன்' என்ற கருத்திலேயே செல்கிறது.

பரிமேலழகர், கா.சு., சொ.த., பழைய உரை 2, கவிராசர், மு.ரா.அரு., வ.உ.சி. உரைகள் 'தம் அறவொழுக்கத்திற்கு இடையூறாக இருந்தவரைக் கெடுத்தலும், தாம் செய்யும் தவவொழுக்கத்தை உவந்தாரை ஆக்கலுமாகிய இரண்டும் தவத்தின் பயன்' என்ற கருத்தில் அமைகிறது.

---

5 ஆக்கலும் அழித்தலும் தவஞ்செய்வார் ஆற்றல்; அவற்றைத் தவத்தின் ஆற்றல் போல கூறியதாம்.

6 பரிணாமங்கள்—மாற்றங்கள்.

7 பத்துத் தர்மகுணங்கள்—உத்தமக்ஷமை முதலான பத்துக்குணங்கள். இவை துறவிகட்கு உரியன.

8 தவசில்—தவத்தில். தவம் தமிழில் மகர ஈற்றுச்சொல். வடமொழியில் தவசு என்பதில் 'சு' என்று விசர்க்க ஈற்றுச்சொல். தமிழில் தவசு தவசில் எனவரும்.

'துறவில் ஒழுகுவார்க்கு உற்றாரும் மாற்றாரும் இல்லையாதலானும், வேண்டுதல் வேண்டாமையில்லாதார்க்குப் பிறர்க்கு ஆக்கம் அளித்தலும் அழிவு தேடுதலும் இல்லை; ஆனால் தாம் மேற்கொண்ட துறவறத்திற்கு இடையூறு செய்வாராயின் அவ்வறம் வளர்தற் பொருட்டு அழித்தலும், தவத்திற்குத் துணையானார் மாட்டுஉவத்தலும் உளவாதலைக் கருதித் தம்மறத்திற்குப் பகையாய் அழிவு செய்தாரைக் கெடுத்தலும், உவந்தாரை ஆக்கலும்' என்று விரித்து எழுதிய உரைகள் சிறந்தன. இந்த வகையில் சமண சமயக் கருத்தை அடியொற்றிக் *கவிராசர்* தரும் விளக்கம் மிகச் சிறந்தது.

ஓ) ஒப்புமைப் பகுதி:

ஒன்னார்த் தெறல் தவத்தான் வருதல்:

........பருவமோ ராயிரந் தீர
நின்று மாதவம் புரிதியேல் நினைவுமுற் றுறுதியென்று —*கம்பராமா*.,505

இழைத்ததீ வினையையும் கடக்க வெண்ணுதல்
தழைத்தபே ரருளுடைத் தவத்தி னாகுமேல் —*கம்பராமா*.,1423

ஆவ தற்கும் மழிவதற் கும்மவர்
ஏவ நிற்கும் விதியுமென் றாலினி
யாவ தெப்பொரு ளிம்மையு மம்மையும்
தேவ ரைப்பர வுந்துணை சீர்த்ததே —*கம்பராமா*.,1505

ஐந்தவித் தரிதிற் செய்த தவமுனக்காக வென்பார் —*கம்பராமா*.,1671

தேவரென்பவர் யாருமித் திருநகர்க் கிறைவற்கு
ஏவல் செய்பவர் செய்கிலா தவரெவ ரென்னின்
தாவின் மாதவ மல்லது பிறிதொன்று தகுமோ —*கம்பராமா*.,4951

... ... செங்கண்வா ளரக்கன்
மெய்யொத் தாற்றிய தவத்தையே வியத்துமோ —*கம்பராமா*.,4959

ஈட்டுவார் தவமலான்மற் றீட்டினா லியைவ தின்மை
காட்டுவார்... ... ... —*கம்பராமா*., 5044

ஓ) மேற்கோள் பகுதி:

இளம்.: உயர்திணை மருங்கின் ஒழியாது வருதலும்; ஒழியாது என்றதால் ஒரோ வழி ஒழிந்தும் வரும். ஒன்னார்த்தெறலும் உயர்திணையுள் ஒழிந்து வந்தது. (தொல். எழுத்து. 157.)

27.5. வேண்டிய வேண்டியாங் கெய்தலால் செய்தவம்
ஈண்டு முயலப் படும். (உ-சுரு)

உரைப்பகுதி:

அ) *மணக்*.: விரும்பின விரும்பினபடியே வருதலால், தவம் செய்தலை

இவ்விடத்தே முயல வேண்டும் என்றவாறு.

இது போக நுகர்ச்சியும்[1] இதனால்வரும் என்றது.

ஆ) *பரிதி*: எ—து 'மீண்டும்' பாடம். தான்வேண்டினகாமியத்தைத்[2] தவம் தருகையினாலேமேன்மேலே தவம் பண்ணுவான் என்றவாறு.

ஈ) *காளி*.: எ-து அணிமா ஆதியாகிய சித்திகளும்[3] சுவர்க்கமும் முத்தியும் என்பனவற்றுள் தாம் விரும்பியவற்றை மற்றவ்விரும்பிய வண்ணமே ஒரு குறைபாடின்றிப் பெறுதலினான் மற்றவை அவற்றிற்குரியதாகச் செய்யத்தக்கது; தவமானது உலகத்து மக்களுள் சிறந்தாரால் செய்ய அடுக்கும் என்றவாறு.

வேண்டிய என்பது விரும்பிய.

இனி ஒருவன் இவ்வாறு ஒழுகுகின்ற தவநெறி ஒழுக்கம் தனது மனக்குறிப்பினால் அன்றியே புறத்துத் தவமுடையோன்போல ஒழுகின் அது தவநெறிக்குக் கூடாஒழுக்கம் ஆதலால் அதனை அறிவிக்கின்றது மேலையதிகாரம்.

உ) *பரிமேல்*.: முயன்றால்[4] மறுமைக்கண் தாம்வேண்டிய பயன்கள் வேண்டியவாறே பெறலாம் ஆதலால், செய்யப்படுவதாய தவம் இம்மைக்கண் அறிவுடையோரான் முயலப்படும், எ-று.

'ஈண்டு' என்பதனான், மறுமைக்கண் என்பது பெற்றாம்[5]. மேற்கதி[6] வீடு[7] பேறுகள் தவத்தானன்றி எய்தப்படா என்பதாம்[8] இவை நான்குபாட்டானும் தவத்தது சிறப்புக் கூறப்பட்டது.

இராமா.: வேண்டியவேண்டியாங் கெய்தலான்- மறுமையிலே தாம் வேண்டிய பிரயோசனங்களைவேண்டியபடியேயடைவது உறுதியாதலால், செய்தவம்-செய்யப்படுவதாகியதவமானது, ஈண்டு முயலப்படும்-இம்மையிலேயறிவுடையோராற் செய்யப் படும், எ-று.

---

1 போக நுகர்ச்சி--இன்பந்துய்த்தல்; 2 காமியம்--விரும்பியது.

3 அணிமா ஆதியாகிய சித்திகள்--அணிமா, மகிமா, லகிமா, கரிமா, பிராப்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்ற எண்வகைச் சித்திகள்,

4 முயன்றால்--தவத்தைத் தொடங்கிச் செய்தால்

5 தவஞ்செய்தல் ஈண்டு (இம்மைக்கண்) என்று கூறினமையின் வேண்டிய வேண்டியாங் கெய்தல் மறுமைக்கண் என்பதுபெற்றாம்.

6 மேற்கதி—இந்திரன் முதலிய இறையவர் பதங்கள்.

7 வீடு—உயிர், காமம், வெகுளி மயக்கங்களினின்றும் நீங்குதல்.

8 மேற்கதியும் வீடுபேறும் தவத்தானன்றி அடையப்படா வென்பதுமனுதருமசாஸ்திரம் 11—வது அத்தியாயத்தில் ''ஔஷதம், நோயில்லாமை, பிரஹ்மவித்தை, கருமானுஷ்டானம், சுவர்க்க முதலிய புண்ணியலோக வாசம் என்னும் இவை எல்லாம் தவத்தினாலே சித்திக்கின்றன; ஏனெனில் அவற்றிற்குத் தவமே காரணமல்லவா'' என்று கூறுவதாலும் விளங்கும் என்க.

தவத்தாலெல்லாப்பேறும்பெறலாமென்பதாம். இவை நான்கு பாட்டாலுந்தவத்தின்சிறப்புக்கூறப்பட்டது.

ஊ) *கவிராசர்*: தபசு பண்ணுகிறவர்கள் வேண்டிய வேண்டியபடியே மறுமையிலே பெறலாம். ஆனபடியினாலே செய்ய வேண்டிய தபசை இம்மையிலே செய்ய வேண்டும், (எ-று).

ஏ) *பழைய 2*: தவம் முன் தான் வேண்டிய வேண்டிய பயன்கள் எல்லாம் மறுமைக்கண் ஆங்கு வந்து கிடைத்தலால், செய்யப்படுவ தாய தவம் இம்மையிலே செய்ய வேண்டும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

இதற்கு உரை எழுதிய ஆசிரியர்களில் *மணக்குடவர், பரிதி.*, ‘விரும்பியன விரும்பியபடியே எய்துதலான்’ என உரை காண, *காளிங்கர், பரிமேலழகர், கவிராசர், பழைய 2, கா.சு.* முதலியோர் ‘மறுமைக்கண் வேண்டியவாறே எய்தலாம்’ என்றனர். ‘இம்மைச் செய்தன மறுமைக்கு ஆகும்’ என்ற முடிவு இவர்கட்கு. ஆகவே தவப்பயன் இம்மைக்கும் ஆகும் என்பாரும் மறுமைக்கே ஆகும் என்பாரும் என இருதிறத்தினர் உரையாசிரியர்கள். இம்மை மறுமை இரண்டற்கும் ஆம் எனல் ஏற்புடையதாகும்.

‘செய்தவம் மீண்டும் முயலப்படும்’ எனப்பாடங்கொண்டு ‘மேன் மேலே’ எனப் *பரிதியும், குழந்தையும், இராமலிங்கனாரும்*கூறுவர்.

‘ஈண்டு முயலப்படும்’ எனச் சொற்சிதைவு செய்து ‘இவ்விடத் தே’ என *மணக்குடவரும்*, ‘உலகத்துச் செய்ய அடுக்கும்’ எனக் *காளிங்கரும்*, ‘இம்மைக்கண்’ எனப் *பரிமேலழகரும், கவிராசரும், பழைய உரை 2ம், வ.உ.சி.யும்* கூறுவர்.

‘தவவலி சாபம் வரம் இவற்றான் அழியுமாகலின், அழிந்த பகுதியை மேலும் தவஞ்செய்க’ எனக் கருதுகின்ற இராமலிங் கனார் விளக்கம் சிறந்தது.

சொ.த. ‘சிறப்பு வாய்ந்ததாகலானும், ஒரே பிறப்பால் முடித் தற்கரியதாகலானும் தவத்தை (ஈண்டும்) இப்பிறப்பிலேயே செய்க’ என நயங்காண்பர்.

மு.வ., அரசுமணி, ‘ஈண்டும்--இல்வாழ்விலும்’ என உரை காண்பர். இயல் துறவாதலானும் தவ முதலியவற்றை இல்வாழ் வான் இயற்ற முடியாததாதலானும்இப்பகுதி உற்றாய்தற்குரியது. இப்பிறப்பிலேயே என்ற பொருளைத்தரும் ‘இவ்வாழ்விலேயே’ என்பது ‘இல்வாழ்விலே’ என்று அச்சாகியிருக்கலாம் என்றும் ஐயம் உண்டாகிறது.

தேவநேயர் 'வேண்டிய--மண், விண், வீட்டின்பமாகிய மூவகை யின்பங்களும் என்றும் இவற்றை இல்லறத்தானும் எய்தலாம் என்றும், ஆயினும் ஒருசாரார்க்கருமையின் தவத்தான் அன்றி எய்தப் படா எனப் *பரிமேலழகர்* கூறினார்' என்றும் விளக்கமும் நயமும் விரிப்பர்.

மு.ரா.அரு. 'வேண்டியவேண்டியாங்கு — மறுமையிடத் துத்தாம் விரும்பிய பயன்கள் குறையாமல் விரும்பியபடி' என்று ரைப்பர்.'

'ஈண்டும் முயலப்படும்' எனக் கொண்டு இப்பிறப்பிலும்--இவ் வுலகத்தும், என்ற உரைகளை விடத் 'தவம் மேன்மேலும் முயலப் படும்' என்ற கருத்தமைந்த 'மீண்டும்' என்ற சிதைவும், 'மீளவும்' என்ற உரையும், வாழ்த்துதல் வைதல்களால் தவம் அழியும், அழிந்ததை ஈடுசெய்ய என்ற விளக்கமும் மிக நயம் பயப்பன. மேலும், பயன் தரும் செயலை மேன்மேலும் பயிலுதல் மிகுநலம் பயப்பதாகலானும் 'மீண்டும்' எனக் கோடலே பொருந்துவதாம்.

ஒ) ஒப்புமைப் பகுதி:

'வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் செய்தவம்':

அருந்தவம் ஆற்றியார் நுகர்ச்சிபோல் —*கலி.,* 30.1
வேண்டுநர் வேண்டியாங் கெய்தினர் —*திருமுரு.,*248

தவஞ்செய் மாக்கள் தம்முடம் பிடாஅது
அதன்பயன் எய்திய அளவை மான —*பொருந.,* 91-92

நோற்றார்க்குச் சோற்றுள்ளும் வீழும்கறி —*பழமொழி,*150

முற்பெரிய நல்வினை முட்டின்றிச் செய்யாதார்
பிற்பெரிய செல்வம் பெறலாமோ —*பழமொழி,*312

அர்த்தகம் அருளிச் செய்த சீறடி யளியத ம்மாற்
குரற்சிலம் பொலிப்பச் சென்னிக் குஞ்சிமேன் மதிப்ப நோற்றான்
திருக்குலாய்க் கிடந்த மார்பின் சீவகன் நாங்க ளெல்லாம்
தரித்திலம் தவத்தை யென்று தார்மன்னர் ஏமுற்றாரே —*சீவக.,*2459

இந்நகரப் புறங்காட்டில் இவன்பிறந்த வாறு
தந்நிகரில் வாணிகனில் தான்வளர்ந்த வாறும்
கைந்நிகரில் வேந்தர் தொழப் போந்ததுவும் கண்டால்
என்னைதவஞ் செய்யா திகழ்ந்திருப்ப தென்பார் —*சீவக.,*2555

புண்ணிய முன்னாட் செய்த போதந்தே யுதவிசெய்ய
எண்ணிய கருமமெல்லா மியைபுடனாகப் பின்னும்
யுண்ணிய நோன்பு நோற்கப் பொருந்திய மனத்தனானான்
—*உதயண.,*304

.... பொருவில் போகத்துச்
சேர்ந்திருந்ததுஞ் செய்தவத்தெனா —உதயண.,308

ஒரு முழமுஞ் சேறலில ரேனும் பொருளூர்க்கே
வரும்வழிவினா யுழந்து வாழ்கதவ மாதோ —சீவக.,2556

விழுப்பொருள் பரவை ஞாலம் நோற்பவர்க் குரியவாகும்
—சீவக.,2986

வேண்டிய விளைத்துக் கொள்ளும் விழுத்தவம் விளைத்து வந்தான்
—சூளா.,1667

.... இன்பமே பருகநின்ற
வீங்கிய தவத்திற் கின்னும் வித்திடற் பாலது —சூளா.,1843

பெருந்தவ முள்வழி விரும்புபு செல்லும்
பொருளும் போகமும் புகழும் போல —பெருங்.,2:8:126
உய்த்தொன்றி ஏர்தந் துழவுழு தாற்றவும்
வித்தின்றிப் பைங்கூழ் விளைக்குற லென்னொக்கும்
மெய்த்தவ மில்லான் பொருளொடு போகங் கட்கு
எய்த்துழந் தேதான் இடப்படு மாறே —வளையா.,46

ஆகுமெனின் ஆகுமிவர் அழிகவெனின் அழியும்
மேகம் இவண்வருக எனின் தருமதுவும் விதியின் —யசோதர.,269

தவமொக்கும் நலம்பயப்பில் —கம்பராமா.அரசியல்.,4

வேண்டின வேண்டினர்க்கு அளிக்கும்மெய்த்தவம் —கம்பராமா.,2729

சொன்னா னிருதர்க் கிறையம்மொழி சொல்ல லோடும்
அந்நாளி னிரம்பிய அம்மதி யாண்டொர் வேலை
முந்நாளி னிளம்பிறை யாகி முளைத்த தென்றால்
எந்நாளும் அருந்தவ மன்றி யியற்ற லாமோ —கம்பராமா.,3229

கூட்டமொத் திருந்த வீரர் குறித்ததோர் பொருட்கு முன்னாள்
ஈட்டிய தவமும் பின்னர் முயற்சியும் இயைந்த தொத்தார்
—கம்பராமா.,3909

மரம டங்கலுங் கற்பகம் மனையெலாங் கனகம்
அரம டந்தையர் சிலதியர் அரக்கியர்க் கமரர்
உரம டங்கிவந் துழையரா யுழல்குவர் ஒருவர்
தரமடங்குவ தன்றிது தவஞ்செய்த தவமால் —கம்பராமா.,4950

அத்தவம் பிறவியை அகற்றி மேதகு
முத்தியை நல்கியே முதன்மை யாக்குறும்
இத்துணை யன்றியே இம்மை இன்பமும்
உய்த்திடும் உளந்தனில் உன்னும் தன்மையே —கந்த.

ஆற்றலில் தம்முடல் அலசப் பற்பகல்
நோற்றவர் அல்லரோ நுவலல் வேண்டுமோ!
தேற்றுகிலீர் கொலோ தேவராகியே
மேற்றிகழ் பதந்தொறும் மேவுற்றோர் எலாம் —கந்த.

தவம் ஈண்டு முயலப்படும்:

தவநெறி அருளெமக்கே —*சம்பந்தர், புகலி.*,3

உனைவேண்டிக் கொள்வேன் தவநெறியே —*சுந்தரர், துறையூர்*,1-10

விழவுறு மாதவம் வெஃகி னோர் —*கம்பராமா.*,376

முந்தவித் தரிதிற்செய்த தவமுனக்காக வென்பார் —*கம்பராமா.*,1671
வேண்டிய போதே வேண்டுவ வெய்தும் வினைவல்லீர்
—*கம்பராமா.*,4835

ஈட்டுவார் தவம லான்மற் றீட்டினா லியைவ தின்மை
காட்டுவார் விதியா ரஃது காண்கிற்பார் காண்மினம்மா
—*கம்பராமா.*,5044

ஓ) *மேற்கோள் பகுதி:*

நக்கீரர்: இனிக் காமம் நன்றாமாறும் உண்டு என்று கூறி, காரணம் கூறும்பொழுது 'மக்கள் பாட்டினானும், வலியானும், வனப்பானும், பொருளானும் பெறலாவதன்று தவஞ்செய்தால் பெறலாம்' என்னை? 'வேண்டிய... ...படும்' என்பதாகலான் என்று குறிப்பர்.
(இறை—சூ.1)

27.6. தவம்செய்வார் தங்கருமம் செய்வார்மற் றல்லார்
அவம்செய்வார் ஆசையுட் பட்டு. (உசாசா)

உரைப்பகுதி:

அ) மணக்.: 'ஆசையிற்பட்டு' பாடம். தம்கருமம் செய்வார் தவம் செய்வார்; அஃதல்லாதன செய்வார் எல்லாம் ஆசையிலேஅகப்பட்டுப் பயனில்லாதன செய்கின்றார் என்றவாறு.

இது தவம் பண்ண வேண்டும் என்றவாறு.

ஆ) பரிதி.: 'ஆசையிற்பட்டு' பாடம். எ-து நிலையாமை, நோய், மூப்பு, சாக்காடு என்று எண்ணித் தலையாவார் தங்கருமஞ் செய் வார்; தங்கருமமாவன தவம், பூசை, நியதி, தானம், தன்மம் என் பன. மற்றல்லாதார் செனனவழி தேடி[1] ஆசை விலங்கிட்டு அவம் செய்வார் என்றவாறு.

---

1 செனனவழி—பிறப்புக்குரிய வழி;

ஈ) *காளி.*: பரிதியார் உரையே.

உ) *பரிமேல்.*: தங்கருமம் செய்வாராவார் துறந்து தவத்தைச் செய்வார்; அவரை[2]யொழிந்த பொருளின்பங்களைச் செய்வார் அவற்றின்கண் ஆசையாகிய வலையுட்பட்டுத் தமக்குக் கேடு செய்வார்.[3]

அநித்தமாய்[4] மூவகைத் துன்பத்ததாய்[5] உயிரின்வேறாய உடற்குவருத்தம் வரும் என்று ஒழியாது தவத்தினைச் செய்ய, பிறப்புப்பிணி[6] மூப்பு[7] இறப்புக்களான் அநாதியாகத்[8] துன்பமெய்தி வருகின்ற உயிர் ஞானம் பிறந்து வீடுபெறும் ஆகலின், தவஞ்செய்வாரைத் தங்கருமஞ் செய்வார் என்றும், கணத்துள் அழிவதாய சிற்றின்பத்தின்பொருட்டுப் பலபிறவியும் துன்புறத்தக்க பாவஞ்செய்து கோடலின், அல்லாதாரை[9] அவஞ்செய்வார் என்றும் கூறினார். மற்று வினைமாற்றின்கண் வந்தது.[10]

> *இராமா.*: தவஞ்செய்வார் தங்கருமஞ்செய்வார் — தங்கருமஞ் செய்வார் தவஞ் செய்வோரேயாம், அல்லார்— மற்றையோர், ஆசையுட்பட்டு—ஆசையென்னும் வலையிற்சிக்கி, அவஞ்செய்வார்—தமக்குரிமையாகாத வீண் காரியத்தைச் செய்பவராம், எ-று.
>
> மற்று, அசைநிலை. பிறவித்துன்பத்தையொழித்துப் பேரின் பந்தருதலால், தவஞ்செய்தலைத் தங்கருமமென்றும், மற்றப் பொருளின்பங்களைக் குறித்த முயற்சிகளெல்லாம் அந்தத் துன்பத்தை மிகச்செய்து கேடுதருதலால் அவஞ்செய்வாரென்றுங் கூறினார்.

ஊ) *கவிராசர்*: துறந்து தபசு பண்ணுகிறவர்களே தங்கள் கருமம் செய்கிறவர்கள், அதல்லாமல் பொருளின்பங்களைச் செய்கிறவர்கள் பொருளின்பங்களின் ஆசையாகிற வலையிலே அகப்பட்டுத் தங்களுக்குக் கேடு செய்து கொள்ளுவார்கள் (எ-று).

---

2 அவரை—தவஞ்செய்வாரை;

3 தமக்குக் கேடு செய்வார்—தமக்கு மருத்துவர் (வைத்தியர்) தாம் என்றறியாது தங்களுக்குத் தாங்களே கெடுதி செய்து கொள்ளும் அவிவேகிகள்.

4 அநித்தமாய்—நிலையற்றதாய்.

5 மூவகைத் துன்பம்...1. ரோகம், தாகம், பசி முதலியவற்றால் உண்டாகுந் துக்கம் அத்தியாத்ம துக்கம்; 2. திருடர், புலி, சர்ப்பம் முதலியவற்றால் உண்டாகுந் துக்கம் அதிபூத துக்கம்; 3. யட்சராட்சதப் பிரதேக் கிரகாதிகளாலும் சிதவாத (காற்று) ஆதபங் (வெயில்)களாலுமுண்டாகுந் துக்கம் அதிதைவ துக்கம். (கோ.வ.)

6 தன்னையுடையவரைத் தனது வல்லமைக்கேற்ப வேறு காரியத்தில் பிரவேசிக்காவாறு பிணித்தலின் (கட்டலின்) நோய் பிணியென்று சொல்லப்பட்டது. (கோ.வ.)

7 மூப்பு—முதுமை;

8 அநாதி—தொடக்கமில்லாதது. (கோ.வ.)

9 அல்லாதாரை—தவஞ்செய்யாதவரை.

10 தவஞ்செய்தல் என்னும் வினையை மாற்றித் தவஞ்செய்யாமை என்னும் வினையைத் தந்தமையின், மற்றுவினைமாற்றாயிற்று. (கோ.வ.)

ஏ) *பழைய* 2: தம் கருமம் செய்வார் ஆவார் துறந்து தவத்தைச் செய்வார், அவரல்லாத மற்றவர்கள், பொருளும் இன்பமும் ஆகிய ஆசைவலையுட்பட்டுத் தமக்குக் கேடு செய்வார்.

மல்லர்: இச்சைகளை அடக்கித் தவஞ்செய்கிற பேர்கள் தன் பிரயோசனத்தைச் செய்கிறார்கள். இச்சையின்படியே நடந்து தவஞ்செய்யாதவர்கள் தங்களுக்குக் கேடு செய்கிறார்கள், எ—று.

இச்சைகள் முகாந்திரமாகப் பின்னுக்குத் துன்பம் வருகிறதினால் அவற்றை அடக்காமல் தவம் பண்ணாதவன் தனக்குப் பொல்லாப்பு வருத்திவிக்கிறார்கள். அவற்றை அடக்கித் தவம் பண்ணுகிறவன் அதில் வருகிற துன்பங்களுக்குத் தப்பிப் போறதினால் தனக்கு நன்மை செய்கிறான் என்பது கருத்து. அவம்—கேடு.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'ஆசையுட் பட்டு' என்பதற்கு' ஆசையிலே அகப்பட்டு' என நேரான பொருள் கண்டனர் *மணக்குடவர்*. 'ஆசையாகிய வலையுட்ட்டு' எனப் *பரிமேலழகரும்*, *கவிராசரும்*, *பழைய* 2ம் கூறுவர். *பரிமேலழகர்* முதலாயினாரை 'உட்பட்டு' என்ற வினைச்சொல் ஆசையை வலையாகக் கருதச் செய்திருக்கிறது. *மணக்குடவர்* முதலியோர் அங்ஙனம் கருதிற்றிலர்.

மேலும் *மணக்குடவர்*, *பரிமேலழகர்*, *கா.சு.*, *தண்டபாணியார்* முதலானோர் 'தங்கருமம் செய்வார் தவஞ்செய்வார்' எனக் கொண்டு கூட்டிப்பொருள் கொண்டனர். ஏனையோர் செய்யுளிற் கிடந்த படியே 'தவஞ்செய்வார் தங்கருமம் செய்வார்' என நிறுத்திப்பொருள் கண்டனர்.

அதிகாரம் *தவமாதலின்* 'தவஞ்செய்வார் தங்கருமம் செய்வார்' எனத் தவத்தினைச் செய்வார்க்கு வினைமுதலாந் தன்மை தந்தனர் *வள்ளுவர்*. உரையாசிரியர்களிற் சிலர் அவர்வழி நின்றனர். தங்கருமம் செய்வார் தவஞ்செய்வாரேயெனின் துறந்தார் தவம் செய்தல் தன்னலத்திற்காக எனவும் ஒரு கருத்து ஒளிசெய்கிறது; வினை முதலாந்தன்மை தங்கருமஞ் செய்வார்க்கு இருத்தலின்.

சொ. த. தவஞ்செய்பவர்களே தங்கருமஞ்செய்வர்எனஉரைத்து துறந்து தாம் மேற்கொண்ட தவஞ் செயலைச் செய்பவர்கள் எனக் கருதுகின்றார்.

இராமலிங்கனார் 'தவஞ் செய்கிற துறவிகள் தம்முடைய தவக் காரியத்தையே செய்துகொண்டிருப்பர். அதைவிட்டுச் சாபம் இடுவதிலும் வரங்கொடுப்பதிலும் இறங்கி விடுகிறவர்கள் விட்ட ஆசையில்

மீண்டும் சிக்கித் தீங்கு செய்பவர் ஆவர்' எனக் கருத்து உ தவுவர். இது ஏனையோர் கருத்தினும் சிறத்தல் காண்க. தம்கருமம் செய்தல் —தாம் விரும்பி மேற்கொண்ட தவச் செயலை இடைவிடாது செய்தல். மேலும், *பரிமேலழகர்* போன்றார் உரைகள் இல்லறத்தானும் துறந்து தவம் செய்ய வேண்டும் என்னும் கருத்தை விளைவித்து வள்ளுவரின் அடிப்படைக் கொள்கைக்கு முரணாகிறது என்பர். இவைகளும் இராமலிங்கனார் கருத்தை நன்கு விளக்குகிறது.

அல்லார் என்பது தவஞ்செய்யாத துறந்தாரையே உணர்த்தி நின்றது என்க ''ஆசையுட்பட்டு' *தருமர் நச்சர்* பாடமும் இது என்பர் *வ.உ.சி.*

ஒ) ஒப்புமைப் பகுதி:

தவம் செய்வார் தம்கருமம் செய்வார்:

தாவில் கொள்கைத் தந்தொழில் முடிமார் —*திருமுரு.*,89

தலையாயர் தங்கருமம் செய்வார் —*நாலடி.*,52

வேங்க டங்கள்மெய் மேல்வினை முற்றவும்
தாங்கள் தங்கட்கு நல்லனவே செய்வார்
வேங்க டத்துறை வார்க்கு நமஎனல்
ஆம்கடமை அதுசுமந் தார்கட்கே —*திருவாய்.*, 3.3..6

என்னுயிர்க் குறுவதும் செய்ய எண்ணினேன் —*கம்பராமா.*,1413

ஈட்டுவார் தவம லான்மற் றீட்டினார் இயைவ தின்மை
காட்டுவார் விதியார்.... ... —*கம்பராமா.*, 5044

அவம் செய்வார் ஆசையுட் பட்டு:

தவத்திறம் பூண்டோன் நன்மேல் வைத்த
அவத்திறம் ஒழிகென் றவன்வயின் உரைத்தபின் —*மணி.*,7:13.14

முற்றும்:

இழைத்ததீ வினையையும் கடக்க எண்ணுதல்
தழைத்தபே ரருளுடைத் தவத்தி னாகுமேல்
குழைத்ததோ ரமுதுடைக் கோர நீக்கிவே
றழைத்ததீ விடத்தினை அருந்த லாகுமே —*கம்பராமா.*,1423

ஓ) மேற்கோள் பகுதி:

காரிரத்ன:. பாவிக அலங்காரத்திற்கு மேற்கோள் (251).

27.7. சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம் சுடச்சுட நோற்கிற் பவர்க்கு. (உகூஎ)

உரைப்பகுதி:

அ) மணக்.: 'சுடச்சுடப் பொன்போல'—பாடம். நெருப்பின்கண்ணே

இட இடத் தன்னோடு கலந்த மாசு அற்று ஒளிவிடுகின்ற பொன்னைப் போல, துன்பம் நலிய நலியத்[1] தவம் செய்வார்க்குத் தம்மோடு மருவின[2] வினை விட்டு ஒளிவிடும் என்றவாறு.

இது வினைவிட்டு ஒளி உண்டாம் என்றது.

ஆ) பரிதி.: எ-து சுட வைத்த பொன் களங்கமற்றது போலக் கன்மம்[3] விடும் தவஞ்செய்கையினாலே; விக்கினம்[4] வந்தால் அந்த விக்கினத்தைப் பாராமல் தவம் பண்ணுவார்க்கு என்றவாறு.

ஈ) காளி.: எ-து தீப்பெற்று நின்று ஒளிவிட்டு விளங்கும்பொன்னைப் போல விளங்கா நிற்கும் யாதோவெனில், வீட்டின்பமாகிய ஒரு பெரும்பொருள், யார்க்கு எனின் முன் தம்மாட்டுவந்து மயங்கிக் கிடக்கின்ற அவங்களானவற்றை[5] உருவழியச் சுடுமாறுபலயாண்டும் பயிலக் குறிக்கொண்டு[6] நோற்றலை[7] வல்லாற்கு[8] என்றவாறு.

உ) பரிமேல்.: தீயின்கண் ஓடும்[9] பொன்னுக்கு அது[10] சுடச்சுடத் தன்னோடு கலந்த குற்றம் நீங்கி ஒளிமிகுமாறு போல; தவஞ்செய்ய வல்லார்க்கு அதனான் வருந்துன்பம் வருத்தவருத்த தம்மொடு கலந்த பாவம் நீங்கி ஞானம் மிகும் என்றவாறு.

'சுடச்சுடரும் பொன்போல்' என்றாராயினும், கருத்து நோக்கி இவ்வாறு உரைக்கப்பட்டது.[11] ஒளிபோலப் பொருள்களை விளக்க லின் 'ஒளி' என்றார்.

காரி.: சுடரும்—ஓடும். ஒளி—ஞானம்.

இராமா.: துன்பஞ் சுடச்சுட நோற்கிற்பவர்க்கு—துன்பமானது தம்மை வருத்தவருத்தவிடாமற் பொறுத்திருந்து தவஞ்செய்ய வல்லவர்க்கு, சுடச்சுடரும் பொன்போலொளிவிடும்—புடம் போடப்போட ஒளிவிடும் பொன்னைப் போலவே ஞானவொளி வீசும், எ-று.

சுடச்சுடவெனப் பின்பொருளிலேயடுக்கிநிற்றலால்முன்னுவமை யிலுஞ் சுடச்சுடச் சுடரும்பொன்போலென வருவிக்கப்பட்டது.

ஊ) கவிராசர்: நெருப்பிலே பொன்னைச் சுட்டால் தன்னோடு கூடிய குற்றம் நீங்கி ஒளிமிகுத்தவாறு போல, தபசு பண்ணவல்லார்க் குச் சுக்கிலத்தியானம்[12] என்ற பெருந்தீயினால் தங்களோடே கூடின பாபங்கள் நீங்கி ஞானம் மிகும், (எ-று.)

---

1 நலிய நலிய—வருந்தவருந்த;
2 மருவின-சேர்ந்துள்ள;
3 கன்மம்--புண்ணிய பாவ வினைகள்;
4 விக்கினம்--இடையீடு.
5 அவங்களானவற்றை-வீணானவற்றை
6 குறிக்கொண்டு--இலக்கு வைத்து.
7 நோற்றலை--தவஞ்செய்தலை;
8 வல்லாற்கு--வல்லவனுக்கு.
9. ஓடும்-உருகியோடுகின்ற;
10 அது--புடத்தீ.
11 இது உவம ஆகுபெயர்.
12 சுக்கிலத்தியானம்--பரமாத்தும ஏக தியானம்

ஏ) *பழைய 2:* நெருப்பின்மேல் வைத்து உருக்க உருக்க, பொன்னோடு கலந்த மாசு நீங்கி, மாற்றேறி[13] ஒளிவீசுதல் போலத் தவத்துன்பம் சுடச்சுட நோற்பற்குத் தன்னொடு கலந்து பாவம் நீங்கி ஞானம்மிகும்.

மல்லர்: 'சுடச்சுட அரும்பொன்போல்' பாடம். நெருப்பு உசத்தியான பொன்னைச் சுடச்சுட விளங்கும்படிப் போல தவத்தின் கஸ்தி[14] தவதியை வாதிக்க வாதிக்க[15] அவனுடைய உயிர் ஒழிவாய்ப் போம்.[16] (எ—று.)

பொன் தன்னோட கலந்திருக்கிற காடுகளை[17] நெருப்பிலே போக்கிச் சுத்தமாய்ப் போம் வண்ணமே தவசிகளுடைய உடம்பின் வாதனையிலே[18] ஆத்மாவோடே கலந்திருக்கிற குற்றங்களும் பொல்லாத இச்சைகளும் நீங்கி ஆத்மா சுத்தமாய்ப் போம் என்பது கருத்து.

அரும்பொன்—பெறுதற்கரிய பொன்; ஒளி—பிரகாசம்; நோற்கிற்பவர்—தவத்தோர்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'ஒளி' — 'ஞானம்' என்பர் *பரிமேலழகர், கவிராசர், பழைய2.* வீட்டின்பமாகிய ஒரு பெரும்பொருள்' என்பர் *காளிங்கர்.* 'கன்மம் விடும்' எனக்கூறி, 'கன்மநீக்கம்' 'ஞானம் அல்லது ஒளி' என்ற—கருத்தினை நாமே பெறவைப்பர் *பரிதியார்.* 'புறவிருளைப் போக்கும் ஒளிபோல அகவிருளை நீக்குவது தவமாதலின் உவம ஆகுபெயரால் ஞானத்தை ஒளி என்றார்' என்பர் *சொ.த.*

ஏனை உரையாசிரியர்கள் 'சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும்' என நிரலே இயைத்துப் பொருள் கூற 'சுடப் பொன் சுடரும்போல்' என இயைத்துப் 'புடத்திலிட்டுச் சுடச்சுடப் பொன்னுக்கு ஒளிமிகுமாறுபோல' என்றுரைத்து உவமேயமான பொருளொடு புணர்த்துமிடத்து ஒளிவிடும் உயிர் என்னாது உயிருக்குரிய ஒளிமிகும் என்றதற்கிசைய ஈண்டும் பிரித்துக்கூட்டிப் பொருள் காணப்பட்டது' என்பர்.

இராமலிங்கனார் 'எவ்வளவு துன்பங்கள் அடுத்தடுத்து வந்தாலும், என்பர். துன்பம் தவத்தின்கண் நிகழும் உண்டிசுருக்கல், நீர்பலகால முழுகுதல், வெயினிலை நிற்றல் போன்ற துன்பங்கள் என்க. அவை' யன்றித் தன்னால் வருவன முதலிய மூவகைத்துன்பங்களை அன்று

13 மாற்று- -மதிப்பு.

14 கஸ்தி—துன்பம்; வழக்குச் சொல்; 15 வாதிக்க வாதிக்க—பலகால் வாதிட.

16 ஒழிவாய்ப் போம்— (துன்பங்களிலிருந்து) நீங்கும்;

17 கசடுகளை—மாசுகளை.

18 வாதனையிலே—துன்பத்திலே.

என்க. மூவினை எனின் என்னையோ எனின் அவை நுகர்வினை யாதலின் நுகர்ந்து நீக்க வேண்டுமேயன்றி வேறெவற்றானும் நீக்கப் படாமை அறிக.

'சுடச்சுட' என்பதற்கியைய முதலடிக்கண் 'சுடச்சுடரும்' என்பதற்குச் சுடச்சுடச் சுடரும் என உரை காணப்பெற்றது.

குழந்தை ஒளி மிகுதற்குக் கூறும் 'துன்பங்கள் இன்பமாகத் தோன்றும் நிலை மிகுதல்' என்ற உரை மிகச்சிறந்தது. துன்பமும் இன்பமாகத் தோன்றுநிலை இருவினை ஒப்பு எனப்படும்.

தேவநேயர் 'இல்லறத்தானும் தன்கடமையைச் சரிவரச் செய்யின் தவஞ்செய்தவனாவான்' என்றும் 'பயன் கருதாது செய் பவன் கன்மயோகி' என்றும் பொருள்காண்பது தவறு என மறுத்துத் 'தவம் இல்லற துறவறங்கட்கு ஓரளவு பொதுவாயினும், இல்லற வினை துறவறவினையாகாது' என மறுப்பர்.

இவ்வுரைகளுள் 'தீ சுடச்சுட பொன் மாசுகழிந்து ஒளி விடுவது போலத் தவத்தான் வரும் துன்பம் சுடச்சுட உயிர்கட்கு ஒளிமிகும்' என்ற உரை சிறந்தது.

'ஒளிவிடும்' என்பதைக் காட்டிலும் 'ஒளிமிகும்' என்ற பாடமே ஆசிரியர் பாடம் என *வ.உ.சி* காட்டுவர்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

துன்பம் சுடச்சுட நோற்பவர்:

ஆரழன் முளரியன்ன அருந்தவம் —*சீவக.*, 2632

அழற்கொடி எறித்தொறுஞ் சுடரு மாடக
நிழற்கொடி யதுவென நிறைந்த காரிகைக்
குழற்கொடி யனையவள் கொண்ட நோன்பினால்
எழிற்கொடி சுடர்வதோ ரியற்கை எய்தினாள் —*சூளா.*, 209

கொள்கைக் கட்டழல் உள்ளுற மட்டி
மாசுவினை கழித்த மாதவர் போலத்
தீயகத் திலங்கித் திறல்விடு கதிரொளி
சேடுறக் கிடந்த செம்பொன் —*பெருங்.*, 2:19:62—65

தவத்தழல் எழுந்து உயிராம் பொற்றாதுவைத்
துன்பக்கறச் சுடச்சுடத் தோன்று நீரொளி
நிலவத்தலால் நின்றொளி துளும்பும் மூர்த்தியான் —*மேரு.*, 547

முற்றும்:

வீட்டி நின்றது வெவ்வினை எண்மையின்
கேட்டில் எண்குணம் எய்திஓர் கேடிலா

மாட்சி யாலுல கங்தொழ மாற்றற
ஒட்டி வைத்தசெம் பொன்னொத் தொளிருமே —மேரு.,70

இத்தனி உலகில் எத்துயர் காணினும்
அத்துணை துயரும் நம்அழுக்கெலாம் எரித்துச்
சுத்தநற் சுவர்ணமாய்ச் சோதித் தெடுக்க
வைத்தஅக் கினியென மதித்தலே உயிர்கட்கு
உத்தம பக்தியென் றுள்ளுவர் —மனோன்.,3:4:172-176

ஓ) மேற்கோள் பகுதி:

யா.வி.உரை: தலையாகுமோனைக்கு மேற்கோள் (37.) மோனை முதற்றொடையான்வந்தஇனக்குறள்வெண்பாவிற்குமேற்கோள்.(59)
வெள்ளிபம்பலவாணர்: முத்தி நிச்சயப்பேநுரை பக்.115.

27.8. தன்னுயிர் தானறப் பெற்றானை ஏனைய
மன்னுயிர் எல்லாம் தொழும். (உகூஅ)

உரைப்பகுதி:

அ) *மணக்.:* தன்னுயிரானது 'தான்' என்று கருதும் கருத்து அறப் பெற்றவனை, ஒழிந்தனவாகிய நிலைபெற்ற உயிர்கள் எல்லாம் தொழும் என்றவாறு.

உயிர் என்றது சலிப்பற்ற அறிவை; தான் என்றது சீவனாகி நிற்கின்ற நிலைமையை; தானறுதலாவது அகங்காரம் அறுதல்[1].

ஆ) *பரிதி.:* எ-து தன் ஆத்மா ஈடேறப்[2] பார்ப்பானை 'இவனாலே நாமும் ஈடேறுவோம்' என்று சகல ஆத்மாவும் தொழும் என்றவாறு.

ஈ) *காளி.:* பரிதியார் உரை போன்றதே.

உ) *பரிமேல்.:* தன்னுயிரைத் தான் தனக்கு உரித்தாகப் பெற்றவனை, பெறாதனவாகிய மன்னுயிர்களெல்லாம் தொழும்.

தனக்குரித் தாதல் தவமாகிய தன்கருமஞ் செய்தல் அதனினுங்குப்[3] பெறுதற்கரியது இன்மையின், பெற்றானை என்றார். அது[4] பெறாதன என்றது ஆசை[5]யுட்பட்டு அவஞ்[6]

1 அகங்காரம் அறுதல்--நான் நான் என்ற முனைப்பு நீங்குதல். 2 ஈடேற—உயர;
3 அதனினுங்கு--தவமாகிய தன்கருமஞ் செய்தலைக் காட்டிலும்.
4 அது--தவமாகிய தன்கருமஞ் செய்தல். 5 ஆசை--பொருளின்பங்களின் மேலுள்ள விருப்பம். 6 அவம்--கேடு

செய்யும் உயிர்களைச் சாபமும் அருளுமாகிய இரண்டாற்றலும் உடைமையின், தொழும் என்றார்.

இராமா.: தன்னுயிர்தானறப் பெற்றானை-தன்னுயிரைத் தனக்கேயுரித்தாகப் பெற்றவனை, ஏனைய-அப்படிப்பெறாதன வாகிய, மன்னுயிரெல்லாம் - நிலைபெற்றவுயிர்களெல்லாம், தொழும்-கைகூப்பி வணங்கி நிற்கும், எ-று.

பாவஞ்செய்த வெல்லாவுயிர்களையும் வருத்த அதிகாரிக ளுளராதலால், அந்தவுயிர்களெல்லாமவ்வதிகாரிகளுக்கு உரிமைபூண்டுநிற்கும். தங்கருமஞ்செய்யுந் துறவறத்தானுக்குப் பாவமில்லையாதலால்தன்னுயிர் தனக்கேயுரிமைபூண்டுநிற்கும். நிற்கவே எல்லாவுயிர்களு மிவனைத்தொழத்தக்க சாபாநுக்கிரக சத்தியுண்டாமென்பதாயிற்று.

ஊ) *கவிராசர்*: தன்னுயிரைத் தனக்கு உரித்தாகப் பெற்றவனை உலகத்திலே உண்டான சீவன்கள் எல்லாம் தோத்திரம் பண்ணும் என்றவாறு. தன்னுயிரைத் தனக்கு உரித்தாகப் பெறுதலாவது தபத்தின் முக்கியத்தினால் கருமம் தேய்தல், அதிலும் பெரியகாரியம் (வேறொன்றும்) இல்லை. தபசுபண்ணினால் ஜீவனைத் துர்க்கதி[7] போகாமல் சுபகதி அடைவிக்கும். தபத்தினால் சாபமும், அனுக் கிரகமும்[8] உண்டாம் (எ-று.)

ஏ) *பழைய 2*: தன் உயிரைத் தான் தனக்கு உரித்தாகப் பெற்றானை, அப்படிப் பெறாதனவாகிய மன்னுயிர்கள் எல்லாம் தொழும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

இக்குறட்பாவில் 'தன்னுயிர் தான் அறப் பெறுதல்' என்பதற்குக் கூறும் உரைகளில் ஆசிரியர்கள் மாறுபடுகின்றனர். *மணக்குடவர்* 'தன்னுயிரானது தான் என்று கருதும் கருத்து அறப்பெறுதல்; அதாவது அகங்காரம் ஒழிதல்' என்பர். *பரிதியார்* 'தன்னுயிர் தான் ஈடேறப் பார்ப்பான்' என்பர். *பரிமேலழகர்* 'தன்னுயிரைத் தான் தனக்குரித்தாகப் பெற்றவனை அதாவது தவமாகிய தங்கருமமே செய்பவனாதல்' என்பர். *சொ.த.*, *மணக்குடவர்*, போன்று 'தானென்று முனைத்தெழும் ஆணவ வலி கெடப் பெற்றவன்' என்பர். *தேவநேயர்* 'தன்னுயிரைத் தானுரிமையாகப் பெற்றவனை' என்றுரைத்து, 'அறப்பெறுதல்—முற்றும் பெறுதல்; அதாவது

7 துர்க்கதி--கெட்டகதி. 8 அனுக்கிரகம்—அருளல்.

ஐம்புலன்களையும் தவத்தான் வெல்லுதல்' என்பர். இராமலிங்கனார் 'தன்உயிர் பெரியது; தான் பெரியவன் என்ற எண்ணம் அறப்பெறுதல்' என மணக்குடவரை ஒத்துரைப்பர். குழந்தையும் அங்ஙனமே.

யான் என்னும் செருக்கறுப்பான் வானோர்க்கும் உயர்ந்த உலகம் புகுதலின் எல்லாவுயிருந்தொழுதல் இயைபுடையதாதல் காண்க.

இவ்வுரைகளை இணைத்து எண்ணும் போது 'அறப்பெறுதல்' —முற்றும் தனக்கே யுரித்தாகப் பெறுதல்'; 'நீக்கப்பெறுதல்' என்ற இருபொருளில் வைத்து மாறுபடுகின்றனர். இதில் 'தான் என்பது அறப்பெறுதல்' என்ற உரையே சிறத்தல் காண்க.

வ.உ.சி. 'தனது உயிர் தான் என்பது நீங்கப் பெற்றவனை அஃதாவது அகங்காரம் அற்றானை' என்பது கருத்து என்பர். மேலும் அவர் தனக்கே உரித்தாகப் பெற்றவனை என்ற பரிமேலழகர் உரை பொருந்தாது என மறுத்து மறுப்புக்குக் காரணம் காட்டுவர்.

27.9. கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின் ஆற்றல் தலைப்பட் டவர்க்கு. (உசுகூ)

உரைப் பகுதி:

அ) *மணக்.*: கூற்றத்தைத் தப்புதலும் கைகூடும்; தவத்தினாகிய வலியைக் கூடினார்க்கு என்றவாறு.

இது மார்க்கண்டேயன் தப்பினாற்போல[1] என்றது.

ஆ) *பரிதி.*: எ—து தலை எழுத்து முடிந்த நாள்வர அப்போது கூற்றுவனையும் வெல்லலாம் தவத்திற் பெரியோர்க்கு என்றது.

அதற்கு 'நந்திகேசுவர தேவனையும்[2] மார்க்கண்டேயனையும் கண்டு கொள்க என்பது.

ஈ) *காளி.*: பரிதியார் உரை போன்றதே.

உ) *பரிமேல்.*: கூற்றத்தைக் கடத்தலும் உண்டாவதாம், தவத்தான் வரும் ஆற்றலைத் தலைப்பட்டார்க்கு,

சிறப்பும்மை[3] அது கூடாமை[4] விளக்கிற்று; மன்னுயிரெல்லாம் தொழுதலேயன்றி, இதுவும் கைகூடும் என எச்சவும்மையாக உரைப்

1 மார்க்கண்டேயன் தப்பினாற் போல—சாக இருந்த மார்க்கண்டன் தவத்தால் உயிர் பிழைத்தது போல,

2 நந்திகேசுவர தேவன்—சிவபெருமான் திருவாயிலில் வாயிற்காப்பானும், சைவ நெறியின் முதன் மாணவனும் ஆன இடபமுகத்தோடு கூடிய கடவுள்,

3 குதித்தலும் என்பதிலுள்ள சிறப்பும்மை அங்ஙனம் யமனைவெல்லுதல் முடியாது என்பதை விளக்கி நின்றதாம்.

4 அது கூடாமை—யமனின்றுந் தப்புதல் முடியாமையை,

பினும் அமையும்.[5] ஆற்றல் சாப 'அருள்கள். இவை நான்கு பாட்டானும் தவஞ்செய்வாரது உயர்ச்சி கூறப்பட்டது.

காரி.: குதித்தல்—கடத்தல். அர்த்தாங்கீகாரத்துள் கடத்தலும் என்றதனை எச்சவும்மையாக்கினார். முற்கவிப்பொருளைக் குறித்தென்க.

இராமா.: நோற்றலினாற்றல் — தவஞ்செய்தலால் வரும் வல்லமையை, தலைப்பட்டவர்க்கு — மேற்கொண்டவர்க்கு, கூற்றங்குதித்தலுங்கைகூடும்-கடக்கக் கூடாத நமனைக் கடந்து விடலுமுளதாகும், எ-று.

குதித்தலுமென்ற சிறப்பும்மை அது கூடலரிதென்பது விளக்கி நின்றது. இனி யதை யிறந்தது தழுவிய எச்சவும்மையாகக் கொண்டு எல்லாவுயிர்களுந் தொழுதலேயன்றியதுவுங்கைகூடு மெனப்பொருள்கூறினும் அமையும். ஆற்றல் சாபாநுக்கிரக சத்தி. இவைநான்கு பாட்டாலும் தவஞ்செய்வாரது உயர்வு கூறப்பட்டது.

ஊ) *கவிராசர்*: கூற்றுவனாகிய யமனைக் கடந்து போகவேணும் என்றாலும் கடந்து போகலாம், தபசியே தலைப்பட்டு நல்ல தபசைப் பண்ணுகிறவர்களுக்கு என்றவாறு.

ஏ) *பழைய* 2: '**தலைப்பட்ட**வற்கு' பாடம். கூற்றுவன் தன்னை வந்து பிடியாமல் கடத்தலும் உண்டாம், தவத்தான்வரும் வலியைத் தலைப்பட்டவற்கு.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'கூற்றங்குதித்தல்' — 'கூற்றத்தைத் தப்புதல், அதாவது வெல்லுதல்' என உரை வகுத்து *மார்க்கண்டேயன், நந்தி* போல என்பர் *மணக்குடவரும், பரிதியார், பரிமேலழகர், கவிராசர், கா.சு., சொ.த., மு.வ.* முதலியவர்களும். 'சாவையும் வெல்லலாம்' என்பர் *சி.இ.*

குழந்தை 'கூற்றத்தைத் தப்புதலாவது தவத்தால் உடல் வலுப்பெற்று நீண்டநாள் உயிரோடிருத்தல்; கூற்றம் — உடலும் உயிரும் வேறுபடும் நேரம்' என்பர். ஊனுயிர் வேறு செய்வானை யன்றி வேறாகும் காலத்தை யுணர்த்தும் என்றல் புதிய வழக்கு. சிந்திக்கத்தக்கது.

இராமலிங்கனார் 'கூற்றங் குதித்தல் — எமனைப் பற்றிய அச்சம் எம வாதனைகளை அகற்றல்' என்பர்.

---

5. இதுவும் என்பதிலுள்ள எச்சவும்மை, கை கூடாதசெயலும் கைகூடும் என இறந்தது தழீஇய எச்சவும்மையாகவும் கொள்ளலாம் என்பது.

தேவநேயர் 'சாவினின்றும் தப்புதல்; மார்க்கண்டேயன் கதையைக் காட்டுதல் பொருந்தாதென' இரு காரணங்கள் காட்டி மறுப்பர். 'குதித்தலும் கைகூடும்' என்பதிலுள்ள உம்மையைச் சிறப்பும்மையாகக் கொண்டு தவவலியால் நடக்காத செயல் நடக்கும் என்றார். மேலும் இறந்தது தழீஇய எச்சவும்மையாகக் கொண்டு முன் கூறிய ஒன்னார்த்தெறல் முதலியனவன்றிக் கூற்றத்தை வெல்லலுமாம் எனவும் விளக்குவர்.

தேவநேயர் 'உம்மையை எதிர்மறையும்மையாகக்கொண்டு வெல்லுதல் யார்க்கும் கூடாததாம்' என்பர். கூற்றத்தைக்கடத்தல் கூடாத ஒன்றாயின் நிகழாத ஒன்றை உணர்தல் தவத்தைச் சிறப்பிப்பதன்றாய இக்குறட்கருத்து வெற்றுரையாக முடியும். ஆதலால் சிறந்தது கொள்க.

'கூற்று என்பது ஒரு தெய்வத்தையுணர்த்தாது' என்கிற குழந்தை 'கூறுசெய்யும் காலம் கூற்று' என்பதும் வள்ளுவர் உள்ளத்திற்கு ஒவ்வாததோ எனவும் எண்ணத் தோன்றுகிறது. ஆகவே நிகழ்ந்த ஒன்றையும் நிகழ்த்தலாம் என்ற கருத்துடைய உரைகளே சிறந்தனவும் நிறைந்தனவாதலும் தெளிவு.

ஒ) ஒப்புமைப்பகுதி:

கூற்றம் குதித்தல்:

''கூற்றம் குதித்துய்ந்தார்'' —*நாலடி.,6*

''கூற்றம் குதித்துய்ந் தறிவாரோ இல்'' —*பழமொழி:,183*

''கூழைமை பயின்ற கூற்றவரசனைக் குதிக்கும் சூழ்ச்சி''
—*சூளா.துறவு.,18*

''கூற்றன் வருங்கால் குதிக்கலு மாமே'' —*திருமந்.,172*

முற்றும்:

சாவாதார் பிறவாதவர் தவமேமிக வுடையார்
மூவாதபன் முன்வர் தொழும் முதுகுன் றடைவோமே
சம்பந்தர், முதுகுன்றம்.,6

இழைத்த தீவினையையுங் கடக்க வெண்ணுதல்
தழைத்தபே ரருளுடைத் தவத்தினாகுமேல் —*கம்பராமா.,1423*

பொன்னைத் தீயிடைப் பெய்தலப் பொன்னுடைத் தூய்மை
தன்னைக்காட்டுதற் கென்பது மனக்கொள றகுதி
—*கம்பராமா.,10218*

27.10. இலர்பலர் ஆகிய காரணம் நோற்பார்
சிலர்பலர் நோலா தவர். (உஎ0)

உரைப்பகுதி:

அ) *மணக்.*: பொருளில்லாதார் உலகத்துப் பலராதற்குக் காரணம். தவம் செய்வார் சிலராதல்; அது செய்யாதார் பலராதல் என்றவாறு,

ஆ) *பரிதி.*: எ—து பாக்கியவான்கள்[1] சிறிதாக மிடியாளர்[2] பெருத்த தாகிய காரியம் எது என்னில், தவம் பண்ணினவர்கள் அற்பம் தவம் செய்யாதார் பலராகையால் என்றவாறு.

ஈ) *காளி.*: இவ்வுலகத்து இவ்வாறு தமது பேரிடர் நீங்கிப் பெரும் பயனுறுதலைப் பலரும் இலராதற்குக் காரணம் யாதோ எனின், உலகத்தில் ஞானம் பெற நோற்பார் சிலர். மற்று நோலாதார் அளவிறந்தாராவர் என்றவாறு.

உ) *பரிமேல்.*: உலகத்துச் செல்வர்கள் சிலராக நல்கூர்வார் பல ராதற்குக் காரணம் யாது எனின், அது தவஞ்செய்வார் சிலராக அது செய்யாதார் பலராதல்.

செல்வம் நல்குரவு என்பன ஈண்டு அறிவினது உண்மை இன்மைகளையும்[3] குறித்து நின்றன; என்னை? ''நுண்ணுணர் வின்மை வறுமை அஃதுடைமை பண்ணப் பணைத்த பெருஞ் செல்வம்''[4] என்றாராகலின். நோற்பார் சிலர் எனக் காரணம் கூறினமையான், காரியம் வருவித்துஉரைக்கப்பட்டது. தவஞ்செய்யா தார்க்கு இம்மையின்பமும் இல்லை என இதனால் அவரது தாழ்வு கூறப்பட்டது.

காரி.: தவம் துறந்தார் மேற்றாகலின் செல்வம் நல்குரவு ஈண்டு அறிவின் உண்மை இன்மைகளாயின; ''நுண்ணுணர் வின்மை வறுமை அஃதுடைமை, பண்ணப் பணைத்த பெருஞ் செல்வம்'' எனக்காட்டியதும் அதனை நோக்கி என்க.

இராமா.: இலர் பலராகிய காரணம்—உலகத்திலேவறுமை யாளர் பலராயிருத்தற்குஞ்செல்வமுடையவர் சிலராயிருத்தற் குங்காரணம், நோற்பார் சிலர் பலர் நோலாதவர்— தவஞ் செய்வோர்சிலராகத் தவஞ்செய்யாதவர் பலராதலாம், எ — று.

1 பாக்கியவான்கள்—சிறந்தவர்கள் என்னும் பொருளைத்தரும் வழக்குச்சொல்.

2 மிடியாளர் — வறியர்

3 உம்மையிருப்பின் பொருளுடைமையும், இன்மையுமேயன்றி அறிவினதுடைமை இன்மைகளையும் குறித்தன எனப் பொருள்படும்.

4 நாலடி-251.

நோற்பார்சிலரென்றதனாற் செல்வர் சிலரென்பதுவருவிக்கப் பட்டது. இலர் பலர் செல்வர் சிலர், என நின்ற இதற்கியையப் பலர் நோலாதவர் சிலர் நோற்பாரெனநேராததினாலேயிதுஎதிர் நிரனிறைப்பொருள்கோள். வறுமை செல்வமென்பன, இங்கே அறிவின்மையறிவுடைமையையுங்குறித்து நின்றன. உ-ம் நுண்ணுணர் வின்மைவறுமைய ஃதுடைமை பண்ணப் பணைத்த பெருஞ்செல்வம், எனக்காண்க. தவஞ்செய்யாதவர்க்கு இம்மை யின்பமுமில்லையென்பது இதனாற்கூறப்பட்டது.

ஊ) *கவிராசர்*: உலகத்திலே தரித்திரவான்கள் அதிகமாக இருக் கிறதும் ஐஸ்வரியவான்கள்[5] கொஞ்சமாய் இருக்கிறதும் ஏனென் றால், தபசு பண்ணுகிறவர்கள் கொஞ்சமும் தபசு பண்ணாதவர்கள் அதிகமுமாம். ஆனபடியினால் தபசு பண்ணுகிறவர்களெல்லாம் ஐஸ்வரியவான்களாய்ப் பிறக்கிறார்கள். தபசு பண்ணாதவர்கள் எல்லாரும் தரித்திரமாகப் பிறக்கிறார்கள். (எ - று.)

ஏ) *பழைய 2*: உலகத்துச் செல்வர்கள் சிலராகவும் வறுமையாளர் பலராகிய காரணம் யாதென்னில் நோற்பார் சிலர், நோலாதவர் பலர்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'***இலர் பலராகிய காரணம்***' 'பொருளிலாதார் உலகத்துப் பலராதற்குக்காரணம்' *மணக்குடவர், பரிதியார், பரிமேல்., கவிராசர், பழைய 2, கா.சு., தேவநேயர்*. தேவநேயர் 'செல்வம்--கல்வி, பொருள்' என்ற இரண்டையும் குறிக்கும் என்பர்.

'ஆற்றலும் அறமும் இல்லாதார் பலராதற்குக் காரணம்' *மு.வ.*
'அறிவும் ஆற்றலும் இன்பமுமில்லாதவர்' *வரதராசபிள்ளை*.
'உலகத்து ஞானிகள் சிலராக ஞானமில்லாதவர்கள் பலராதற்குக் காரணம்' *சொ.த.*

அப்படிக் கூற்றங்குதிப்போர் பலராக இல்லாமலிருப்பதற்குக் காரணம்' என உரை எழுதி, எமபயத்தையும் எமவாதனையையும் வென்று இச்சைப்படி உடலை விடுகிறவர்கள் பலபேரில்லை எனக் கருத்தும் உரைப்பர் ***இராமலிங்கனார்***.

மேலும், 'செல்வர் வறியர்' எனப்பொருள் காண்பது முற்றிலும் தவறு. அதற்குரிய காரணங்கள்: 1. துறவி செய்யுந்தவத்திற்கும்செல் வத்திற்கும் யாதொரு சம்பந்தமும் இல்லாமை 2. அவன் தவஞ்செய் வது செல்வத்தை விரும்பியன்று 3. செல்வமில்லாதவர் எல்லாரும் தவஞ்செய்யாதார்களே எனின், எல்லாரும் துறவுபூண்டு தவஞ்செய் தால்தான் ஏழையாகப் பிறக்காமல் பணக்காரனாக முடியும்என்றாகி

[5] ஐஸ்வரியவான் - செல்வர்கள்.

இல்லறம் என்பதே வேண்டாத ஒன்றாகிவிடும். இயல்துறவாதலால் ஈண்டு இல்லறத்தாரையும் சேர்த்துக் கூறியதன்று. தவஞ்செய்யுந் துறவிகளில் சரியாகத் தவஞ்செய்வார் சிலரே எனப்பல ஏதுக்காட்டி மறுப்பர். இங்ஙனம் சிலர்பலர் என்பது பொதுமையானின்று உரையாசிரியர்களை மயக்கியிருக்கிறது.

இவ்வுரைகளில் 'செல்வம் நல்குரவு' என்பன 'அறிவின்மை உண்மைகளையுங்குறித்து நின்றது' என்ற *பரிமேலழகரும்* 'செல்வம் ஞானம் என்ற இரண்டனையும் குறித்தன' என்று விளக்கந் தந்து மேற்கோளும் காட்டினர்.

உண்மையின்மைகளையும் என உம்மையிருப்பின் முற்குறித்த செல்வநல்குரவு என்ற இரண்டையும், பின்உம்மையுடன்றழீஇய அறிவினது உண்மை இன்மைகளையும் குறிப்பதாய், இருவகைப்பற்றையும் முற்றத்துறந்து எல்லாவுயிர்களையும் ஒப்பநோக்குதலாகிய அருளை உடையனாய் உடலோம்பும் ஊனுணவையும் வெறுத்துப் புலன்களையடக்கும் ஞான வாயிலான தவத்தினை மேற்கொண்ட துறவி பொருளைக் கருதித் தவத்தை மேற்கொண்டான் என்பது போதருமாகலின் இயலுக்கு இயைபின்றாய் முடியும். *நுண்பொருள் மாலையுடையாரும்* இக்கருத்தையே வலியுறுத்தல் காண்க. *சொ.த.*வும் இக்கருத்தையே கொண்டமை காண்க.

துறந்தார் தவமேற்கொள்வது ஞானம் பெறுதற்கேயன்றிக் கூற்றங் குதித்தலை கருதியன்று; ஞானம் பெற்றாராயின் நீடுவாழ்வார். ஆகவே கூற்றங்குதித்தல் இடையில் நேர்ந்த பயன்; ஞானம் பெறுதல் முடிந்த பயன் ஆதலானும், கூற்றங்குதித்தலாகிய பயன் முதற்குறளிலே கூறப்பெற்றமையின் மீண்டும் கூறல் வேண்டாமையானும் 'இலர்' என்பது ஞானமின்மையையே உணர்த்தியது. ஆகவே *இராமலிங்கர்* உரையும் ஆய்வுக்குரியதே. ஆகவே *பரிமேலழகர்* உரைக்கு விளக்கமாக ஞானமில்லாதார் பலராதற்குக் காரணம் தவமில்லாதார் பலரானதே என்ற *நுண்பொருள்மாலையுடையார்* கருத்தே இயலுக்குப் பொருந்தியதாகும்.

'ஆகிய காரணம்' என இறந்தகாலப் பெயர்எச்சத்தால் கூறுதலின், 'நோற்றார்' என்பதே *வள்ளுவர்* வகுத்த பாடம் என்பர் *வ.உ.சி.*

ஓ) ஒப்புமைப் பகுதி:

'இலர்பலர் ஆகிய காரணம்:

புறங்கடை பற்றி
மிகத்தாம் வருந்தி யிருப்பரே மேலைத்

தவத்தாற் றவஞ்செய்யாதார் —நாலடி.,31

... ... புலன்கள் போ நெறியிற் போகாத்
தேவரோ டவுணர் தாமோ நிலைநின்று வினையிற் றீர்ந்தார்
—கம்பராமா.,5340

ஓ) மேற்கோள் பகுதி:

பெருந்தே.: ஏதுவின் முடித்தலுக்கு மேற்கோள். (வீரசோ.980)

27. தவம்

	உற்ற நோய்	தவமும்	துறந்தார்க்குத்	ஒன்னார்த்	வேண்டிய	தவம் செய்வார்	சுடச் சுடரும்	தன்னுயிர்	கூற்றம்	இலர் பலர்
மணக்.	4	3	2	8	10	1	6	5	7	9
பரிதி.	7	2	9	4	10	1	6	3	5	8
பரிப்.	—	—	—	—	—	—	—	—	—	—
காளி.	9	2	7	4	10	1	6	3	5	8
பரிமேல்.	1	2	3	4	5	6	7	8	9	10

27—வது அதிகாரம் ‘தவம்’ முற்றிற்று.

28. கூடாவொழுக்கம்

அ) மணக்.: கூடாஒழுக்கமாவது மேற்கூறிய தவத்திற்குப் பொருந் தாதஒழுக்கம்.

ஆ) பரிதி.: கூடா ஒழுக்கமாவது தவம் செய்கையிலே அவநெறி[1]ச் செய்கையை விடுவான் என்றவாறு.

உ) பரிமேல்.: அஃதாவது தாம்விட்ட காம இன்பத்தை உரனின்மை யின்[2] பின்னும் விரும்புமாறு தோன்ற அவ்வாறே கொண்டு நின்று தவத்தோடு பொருந்தாதாய தீயஒழுக்கம். அது விலக்குதற்கு இது தவத்தின்பின் வைக்கப்பட்டது.

> *இராமா.*: அதாவது, தாம்நீக்கிவிட்ட காம இன்பத்தைத் தவ வலியில்லாததனாலே பின்னும் விரும்புவது தோன்றவத் தோற்றமுன்பு கொண்டிருந்த தவத்தோடு பொருந்தாததாகிய தீயவொழுக்கம். அதனைவிலக்குதற்கு இதுதவத்தின் பின் வைக்கப்பட்டது.

ஊ) கவிராசர்: அஃதாவது தாங்கள்விட்ட காமவின்பத்தைப் பின்னை யும் விரும்பி அதன்மேலே நினைவாய்த் தபசை மனது சுத்தமாகப் பண்ணாமல் இருக்கிறது.

ஏ) பழைய2: அஃதாவது, தவம்கூடா ஒழுக்கம்; பொய் ஒழுக்கம்எனக் கொள்க.

மல்லர்: அதாவது மனசோடே கூடாது ஞானங் காண்பிக்கிற நடத்தை. மனசிலே அஞ்ஞானம் நிற்கவேஷத்திலே ஞானம் காண் பிக்கிறது.

---

1 பாவ வழி: ''அவநெறியிற் செல்லாமை தடுத்து'' பெரிய: தடுத்தாட்., 79.

2 உரனின்மை—அறிவாற்றல் இன்மை

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'தவத்திற்குப் பொருந்தாத ஒழுக்கம்' எனப் பொதுவகையான் காம ஒழுக்கத்தை மட்டும் அன்றி, பொறிபுலன்களைத் தூண்டக் கூடிய எல்லாவற்றையும் தழுவிக்கூறுவர் *மணக்குடவர்*. 'அவ நெறியை விடுதல்' என அப்பொருள் போதர உரைப்பர் *பரிதியார்*. *பரிமேலழகர்* 'காமஒழுக்கம் ஒன்றையே கருதி' உரைப்பர். *கவிராசரும்*, *பழைய* 2ம் அங்ஙனமே. *கா.சு.* 'கூடா ஒழுக்கம்' என்பது கொல்லா நலம், பொய்யாஒழுக்கம் என்பன போலக் கூடாமையாகிய ஒழுக்கம் எனப்பொருள்படும்; கூடுதல் —புணர்தல். ஆகவே, கூடாஒழுக்கம் —புணர்ச்சி தவிர்தலையே காட்டும். சிலர் தவத்தோடு பொருந்தாதாய தீய ஒழுக்கம் என்பர். அது பொருந்தாது என மறுக்கும் *செ.த.* கூடாமையாகிய அதாவது புணராமையாகிய ஒழுக்கம் எனக்கூறிப் *பரிமேலழகர்* போன்றோர் உரையை மறுக்க இரண்டு ஏதுக்கள் கூறுவர்.

1. கூடாஒழுக்கம் அறமன்று, அறமல்லாத அழுக்காறு வெகுளி அவா இவைகளை விளக்கும் ஆசிரியர் அழுக்காறாமை, வெகுளாமை அவாவின்மை என எதிர்மறைமுகத்தாற் கூறுவதுபோல் ஈண்டும் கூடாஒழுக்கம் கூடாமை அல்லது கூட்டம் இன்மை எனக் கூறியிருத்தல்வேண்டும். அங்ஙனம் கூறாது கூடாஒழுக்கம் எனக் கூறின் நேர்ச்சிசெடும். அன்றியும் ஆன்றோராசார வழக்கொடு மாறுபடுவதுமாம் என்பர்.

இராமலிங்கனார் மனவலியற்று, விட்ட சிற்றின்பத்தை மீளவும் மறைவின் நுகர்தல் என்பர். *குழந்தையும்* அங்ஙனமே.

இவ்வுரைகளில், மிக்க காமத்து வேட்கை தீர்ந்துழித் தம் மனைவியோடு காடுறை வாழ்க்கையை மேற்கொள்ளுப்போது, தவம் பயின்று பொறியடக்குதலையே பயிற்சியாகக் கொண்டு உயர்ந்து வருபவன் மீண்டும் விட்டதைத் தொட்டுக் கொள்ளக் கூடாது எனத் தன் மனை தழுவுதலுங் கூடாஒழுக்கமாம் என்ற கருத்தைப் பிணைத்து நிற்கும் உரையே தெளிந்த உரையாம். பிறர்மனைநயத்தல், பொதுமக்கட்புணர்வு பொருந்தாக்காமமாகிய பல்வகைப்புணர்வு ஆகிய அனைத்தும் கூடாஒழுக்கங்களேயாம். இவை தனித்தனியே இல்லறவியலிலும், பொருட்பாலினும் கூறப் பெறினும் துறவிக்கு என்றும் விலக்கத் தக்கதேயாம் என்பார் இங்ஙனம் பொதுமையிற் கூறினார் எனல் ஏற்புடைத்தாகும்.

மேலும் பொருந்தாத ஒழுக்கம் எனப் பல்வகையான காமக் கேடுகளைக் குறிப்பதுடன் தவநிலைக்குப் பொருந்தாதனவும் அழுக்காறாமை, வெகுளாமை முதலாக எதிர்மறை முகத்தான் விலக்கப்படாது எஞ்சி நிற்பனவுமாகிய அனைத்துக் கேடுகளும்

பொருந்தாதனவே எனக்கருதி மணக்குடவர் பொதுமையின் 'பொருந்தா ஒழுக்கம்' எனப்பொருள் கண்டனர் போலும்.

28.1. வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும். (உ௭௧)

உரைப்பகுதி:

அ) *மணக்.*: கள்ள மனத்தை உடையானது குற்றத்தினை உடைய ஒழுக்கத்தைப் பிறர் அறியாராயினும், தன் உடம்பின் உண்டான பூதங்கள் ஐந்தும் அறிந்து தம்முள்ளே நகாநிற்கும் என்றவாறு.

பூதங்கள் என்றது அவையிற்றின் காரியமாகிய பொறிகளை.

ஆ) *பரிதி.*: எ-து தவநெறி செய்கையிலே, அவநெறி செய்வானை ஐந்து பூதமும் நகைக்கும் என்றது; அதுஎதுஎனில், இவன் அவநெறி செய்ய, நாம் நரகத்திலே வீழ ஏதுவானோம் என்று சிரிக்கும் என்றவாறு.

ஈ) *காளி.*: எ-து இங்ஙனம் கூடாஒழுக்கமாகத் தவநெறி ஒழுகுகின்ற வஞ்சமனத்தானது பொய்யான ஆசாரத்தினைக்[1] கண்டு யாவரும் அச்சம் உறுவர்; மற்று அஃதன்றித் தம்முள்ளே இகழ்ந்து சிரிப்பதுஞ் செய்வார்கள் என்றவாறு.

படிற்று ஒழுக்கம் என்பது பொய்யான ஆசாரம்.

உ) *பரிமேல்.*: வஞ்சம் பொருந்திய மனத்தையுடையவனது மறைந்த ஒழுக்கத்தை, உடம்பாய் அவனோடு கலந்து நிற்கின்ற பூதங்களைந்தும்[2] கண்டு தம்முள்ளே நகும்.

காமம் தன்கண்ணே தோன்றி நலியா நிற்கவும், அதனது இன்மை கூறிப் புறத்தாரை வஞ்சித்தலின் வஞ்சம் என்றும் அந்நலிவு பொறுக்கமாட்டாது ஒழுகும் களவொழுக்கத்தைப் படிற்றொழுக்கம் என்றும், உலகத்துக் களவுடையார் பிறரறியாமல் செய்வனவற்றிற்கு ஐம்பெரும்பூதங்கள்[3] சான்றாகலின், அவ்வொழுக்கத்தையும் அவன் மறைக்கின்றவாற்றையும் அறிந்து அவனறியாமல் தம்முள்ளே நகுதலின், அகத்தே நகும் என்றும் கூறினார். செய்த குற்றம் மறையாது ஆகலின், அவ்வொழுக்கம் ஆகாது என்பது கருத்து.

காரி.: பூதங்கள்ஐஞ்சும் என்றேஓதுக. கோவையாருள் .'பணங்களைஞ்சாலும்......... குணங்களைஞ்சாற் பொலியும்'[4] என அடிப்பாடு நோக்கிவருவது காண்க. 'விச்சதின்றியே விளைவு செய்குவாய்' என்னுந் திருவாசகத்தில் .''வைச்சுவாங்குவாய்.........

---

1 ஆசாரம்—ஒழுக்கம்

2,3. பூதங்கள் ஐந்தும்—மண், புனல், அனல், கால், விண்எனப்பன. 4 குறள் 235

பிச்சனாக்கினாய்''[5] என வருவனவும் அது. ''நிச்சநிரப்புக் கொன்றாங்கு''[6] என்பதும் அது.

இராமா.: வஞ்சமனத்தான்- வஞ்சனை பொருந்தியமனத்தையு டையவனது, படிற்றொழுக்கம்— **கள்ளநடையைப்** (பார்த்து), **பூதங்களைந்தும்**— அவனுக்கு உடப்பாகியவனோடு கலந்து நின்ற ஐம்பூதங்களும், **அகத்தேநகும்**— தம்முள்ளே நகும், எ-று.

புறத்துள்ளார் நகைசெய்வதுமன்றி யென்பது குறைந்து நின்றது. தானறிந்து செய்யுந்தீமையைப் பிறரறியாரென்னும் பேதைமையைநோக்கிஅவ்வாறே பிறரறியாவகை தமக்குள்ளே நகுமெனவுய்த்துணர்க. அவ்வாறு வஞ்சித்து ஒழுகுதல் பாவ மாதலால் வெளிப்பட்டுப்பின்பு வருத்தஞ் செய்தலினது கூடா தென்பது கருத்து.

ஊ) *கவிராசர்*: மனதிலே கபடம் வைத்துக்கொண்டு கள்ளாசாரம்[7] பண்ணி நடக்கிறவனை அவன் சரீரத்திலேயே இருக்கிற பஞ்சபூதங் களும் சிரிக்கும், எ-று.

ஏ) *பழைய2*: 'அஞ்சும்' —பாடம். வஞ்சம் பொருந்திய மனத்தை உடையவன் பொய்த்தவவேட ஒழுக்கத்தை, உடம்பாய் அவனோடு கலந்த பஞ்சபூதங்களும் கண்டு தம்முள்ளே தாம் நகைக்கும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

இக்குறட்பாவில் 'பூதங்கள் ஐந்தும் அகத்தே நகும்' என்ற பகு தியே உரைகளில் மாறுபாட்டைத் தருவதாம்.

'தம் உடம்பின் உண்டான பூதங்கள் ஐந்தும்; பூதங்கள் என்றது அவையிற்றின் காரியமாகிய பொறிகளை' *மணக்.*

'ஐந்து பூதமும் இவன் அவநெறி செய்ய, நாம் நரகத்தில் வீழ ஏதுவானோம் என்பதால்' *பரிதி.*

'யாவரும் அச்சம் உறுவர்; மற்று அஃதன்றித் தம்முள்ளே சிரித் தும்பேசுவர்' ***காளி.***

'உடம்பாய் அவனொடு கலந்து நிற்கின்ற பூதங்கள் ஐந்தும் உலகத்துக் களவுடையார் பிறரறியாமல் செய்வனவற்றிற்கு ஐம்பெ ரும்பூதங்கள் சான்றாகலின் அவன் செய்வதையறிந்து அவனறியா மல்நகும்' *பரிமேலழகர்*, ***கவிராசர்***, *பழைய2*, *குழந்தை*, *சி.இ.*, ***தேவநேயர்***, ***இராம.***

'அவனுடம்பின் பகுதிகளாகிய ஐந்துபூதங்களும்' *கா.சு.*

'அவ்வொழுக்கத்துக்குக் கருவியானஅவனதுஉடம்பின்கண்கலந்து நிற்கின்றஐந்து பூதங்களும். பூதங்கள் சடமாதலின் அறியா. ஆதலின்

5 திருவாசகம், மெய்யுணர்தல்—96 6 குறள் 35?; 7 கள்ளாசாரம்—திருட்டொழுக்கம்

பூதங்கள் என்றது பூதங்களைப் பற்றி எழும்புலன்கள் என்க' சொ.த.

பூதங்கள் தன்னையுமறியாத - பிறவற்றையும் அறியாத- அறிவற்ற சடப்பொருளாகவே அவை அறிந்து நகுமாறுயாங்கனம்?என்ற ஐயத்திற்கு விடைகாணுமுறையில் உரையாசிரியர்களின் கருத்து வேறுபடுகின்றது.

ஒருவர் 'இவன் ஒழுக்கக்கேட்டிற்குக் காரணம் உடம்பு. அது ஐம்பூதங்களின் காரியம். இவன் செயலைக்கண்டு இவன் உடப்பாகியிருக்கிற பூதங்களே எள்ளிநகைக்கின்றன' என்பர். ஒருவர் 'பூதங்கள் நகையா; பூதங்களின் காரியமாகிய பொறிகள் நகுகின்றன' என்பர். பொறிகள்—கருவிகள்; அதற்கு அறிவேது?

'பொறிகளால் நுகரப்படுவனவாயும், பூதங்களின் தோற்றத்திற்குக் காரணமாயும் உள்ள தன் மாத்திரைகளாகிய சுவை முதலியன நகுகின்றன' என்பர். ஒருவர் 'புலன்களும் சடப்பொருள்; தன் மாத்திரைகள் தன்மைகள்; அவை எங்ஙனம் அறியும்; நகும்? ஆதலால் பூதங்களை என்றது பூதங்களின் அதிதெய்வங்களாய் உடனிருந்து காணும் பிரமனும் (மண்), மாலும்(நீர்), அரனும்(தீ), மகேசனும்(வாயு), சதாசிவனும் (ஆகாயம்) காண்பர் என ஐம்பூதங்களின் அதிதெய்வங்கள் கண்டு நகும்' என்பர் கோ வ. ஐம்பூதம்—பூதகாரியமான உடல்—உடலுள் இருக்கும் மனம், அது நகும்; தன்நெஞ்சே தன்னைச்சுடும் என்பதுபோல' என்பர் சிலர்.

இவற்றுள் பூதங்கள் பூதகாரிய உடலையும் உடல் இடவாகு பெயராய் உள்ளமாகிய நெஞ்சத்தையும் உணர்த்த இருமடியாகு பெயராய் நெஞ்சம் நகும் எனக் கோடல் இயைபுடைத்தாகும். அங்ஙனமாயின் 'தன்னெஞ்சே தன்னைச்சுடும்' என்றாற்போல நேரே கூறாது 'பூதங்கள் நகும்' என்றது எற்றுக்கோ எனின், பூதங்கள் உடலாயும், பூதங்களின் காரியமாகிய புலன்களாயும் இருந்து கண்டு கேட்டுண்டுயிர்த்து உற்றறியப் பெற்று உயிர்க்குப் படிற்றொழுக்கமாக இன்பம் அளித்தலின் இவையனைத்திற்கும் முதற் காரணம் பூதங்களே என்பார்; அவை நகும் எனக் கவிச்சுவைபடக் கூறினார் என்பதாம். இதுவே *வள்ளுவர்* உள்ளம் என்பதைத் 'தன்நெஞ்சம் தான்அறி குற்றப்படின்' என்று வரும் பாடற்பகுதியும் விளக்கும்.

'அகத்தே நகும்'—'தம்முள்ளே நகாநிற்கும்' *மணக்., பரிமேல்.*; இத்தொடர் உடலாயிருக்கும் பூதங்கள் ஐந்தும் உயிரின் வேறாய் நின்று உயிர்செய்யும் படிற்றொழுக்கத்தைக்கண்டு ஒன்றற்கு ஒன்று எள்ளி உரையாடிக் கொள்கின்றன என்றும் உடையவனறியாதவாறு நகைக்கின்றன எனலுமாம்.

பரிதி.: இவன் அவநெறிசெய்ய நாம் நரகத்தில் விழ கூறும்

ஏதுவானோம்' என்ற உரைப்பகுதி 'நாம், அவநெறிசெய்ய இவன் நரகத்தில் வீழ ஏதுவானோம்' என்று இருந்தால் ஓரளவு பொருள் நிரம்பியதாகலாம்.

காளிங்கர் 'ஐந்தும்' என்பதனை 'அஞ்சும்' எனப்பாடங் கொண்டு, பூதங்கள்-- பூதகாரியமான உடலையுடையார்பலரும்' 'அஞ்சுவர்' என்றும், 'நகுவர்' என்றும் உரைகாண்பர். பூதங்கள் சொல்லளவால் அஃறிணையாதலான் அஞ்சும் எனவும் நகும் எனவும் செய்யுமென்முற்று கொண்டு முடிந்தது. இவற்றுள் ஐந்தும் நகும் என்பதனை ஆகுபெயராகக் கொண்டு 'உள்ளம் அல்லது நெஞ்சம் நகும்' என்ற உரையே சிறப்பு உடையது ஆகும்.

'பூதங்கள் ஐந்தும்'— 'பொறிகள் ஐந்தும்'. 'பூதங்கள் ஆகு பெயர்; அவற்றைத் தன்மாத்திரையாக உடைய பொறிகளுக்கு ஆயினமையால்' என்பது *வ.உ.சி.* உரை. தன்மாத்திரைகள், பொறிகள், புலன்களைச் சென்று பொருந்தும்போது அடையப் பெறும் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐவகை உணர்வு. இவையே நுண்பூதமாய் மண் முதலிய பூதங்களுக்குக் காரணம் ஆகின்றன. ஆகையால் தன்மாத்திரைகள் பூதங்கள் அல்ல. (*சிவஞானபோதம்*, இரண்டாம் சூத்திரம், காண்க.)

ஆகையால் 'ஐம்பூதங்களான் இயன்ற உடம்பே நகும்' என்ற உரையே சிறந்தது. உடம்பு நகுதலாவது உடம்பொடு கூடத் துன்ப இன்பங்களை நுகர்கின்ற உயிர் உடம்பின் வேறாக நின்று நகும் என்பர். உணர்வு உயிர்க்கே உரித்தாகலின்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

'ஐந்தும் அகத்தே நகும்'

'மனத்தொடு நகையா' —பெருங்., 4.13.:213

28.2. வானுயர் தோற்றம் எவன்செய்யும் தன்நெஞ்சம்
தானறி குற்றப் படின். (உ௭உ)

உரைப்பகுதி:

அ) மணக்.: 'குற்றம் படின்'—பாடம். வானளவும் உயர்ந்த பெருமை உண்டாயினும் அஃது யாதினைச் செய்யவற்று; தன் நெஞ்சறியக் குற்றம் உண்டாயின் என்றவாறு.

தான் —அசை. இஃது இக்கூடாஒழுக்கத்தானைப் பிறர் அறிந்து இகழாராயினும், அவன் செய்கின்ற தவத்தினால் பயனுண்டாகாது என்றது.

ஆ) *பரிதி:*. எ—து வான்போலப் பெரிய தபசு பண்ணி ஆவது

என்ன? தன் ஆத்துமா அறிய அவநெறி[1] செய்வானாகில்; அது எப்படி என்றால், அவநெறி, தவநெறியைக் கெடுக்கும் என்றவாறு.

ஈ) *காளி.*: எ—து இவ்வுலகத்து ஒருவர்தம் பெயர் தேவர் அறியுமாறு விளங்கிற்றாயினும், அஃது என்செய்யும்; யாதுமோர் பயனும் இல்லை; எப்பொழுது எனில், தன்னுடைய நெஞ்சமானது தானறிவதொரு தவநெறிக் குற்றம் உடைத்தாயின் என்றவாறு.

உ) *பரிமேல்.*: ஒருவனுக்கு வான் போலுயர்ந்த தவவேடம் என்ன பயனைச் செய்யும், தான் குற்றம் என்றறிந்த அதன் கண்ணே தந்நெஞ்சு தாழுமாயின்.

வானுயர் தோற்றம் என்பது[2] 'வான்தோய்குடி' என்றாற் போல இலக்கணை வழக்கு.[3] அறியாதுசெய்த குற்றமல்லதுஅறிந்து வைத்துச் செய்த குற்றம் கழுவப் படாமையின்,[4] நெஞ்சு குற்றத்ததாயே விடும்; விடவே, நின்ற வேடமாத்திரத்துக்குப் புறத்தாரை[5] வெருட்டுதலேயல்லது வேறுபயனில்லை என்பதாம்.

காரி.: வானுயர் தோற்றம் என்பது, நாலடியில் 'வான்றோய்குடி'[6] என்றாற் போல இலக்கணை வழக்கு' அன்றியும் வான்றோய்வன்னகுடிமையுமாம். ''உடையான் அரசருள் ஏறு''[7] 'உடையார் முன் இல்லார் போல்'[8] 'வானுயர் தோற்றம்'[9] என்பனவற்றுள் உபசார வழக்கும் இலக்கணை வழக்கும் முறையே காண்க. காமத்துப்பாலுள் ''யாருள்ளித் தும்மினீர்'[10] என்பதன்கண் மகளிர்வழக்குங் காண்க.

இராமா.: தன்னெஞ்சந்தானறிகுற்றப்படின் — தானிதுகுற்றமென்றறிந்ததிலே தன்மனமானதுதங்குமாயின், வானுயர் தோற்றமெவன்செய்யும்—வான்போலுயர்ந்து அவனதுதவவேடமானதுஎன்னபயனைச்செய்யும், எ—து.

அறியாதுசெய்தகுற்றமன்றியறிந்துசெய்தகுற்றம் போக்கப் படாததினாலே நெஞ்சுகுற்றமாகியேவிடும். விடவேகொண்ட தவவேடத்திற்குப்பயன் பிறரைப்பயமுறுத்துதலேயாமென்பதாம்.

---

1 அவநெறி— வீணானநெறி;

2 வானுயர்தோற்றம் என்பது — மிகப்பொலிவுள்ள தவவேடத்தை.

3 ஒருசொல் உரிய பொருளை விட்டும் விடாதும் உரிய பொருளோடு தொடர்புடைய வேறு ஒரு பொருளையுணர்த்தி நிற்பது. இது விட்ட இலக்கணை, விடாத இலக்கணை விட்டும் விடாதஇலக்கணை எனமூவகைப்படும். இங்குவானின் உயர்வைத் தவவேடத்திற்குத் தந்துரைத்தமையின்—இலக்கணையாயிற்று.

4 கழுவப்படாமையின்—கழுவாயினால் நீக்கப்படாமையின்;

5 வெருட்டுதல்—அச்சுறுத்தல். 6. நாலடி, 142 7. குறள் 381

8 குறள் 395 9. குறள் 272 10. குறள் 131

ஊ) **கவிராசர்.**: ஒருவனுக்கு ஆகாசத்தைப்போலே உயர்ந்த தபோ வேஷம் என்ன பலனைக் கொடுக்கும்? தான் குற்றம் என்று விட்ட வஸ்துவின் மேலே தன்நெஞ்சு ஆசைப்பட்டால் ஒருபலனையும் கொடுக்கமாட்டாதென்றவாறு. அறியாமற் செய்த குற்றம் தபசு பண்ணினால் பரிகாரமாய்ப்[11]போம்; அறிந்து செய்த குற்றம் என்ன தபசு பண்ணினாலும் அனுபவியாமல் போகாதென்றவாறு.

எ) *பழைய 2*: ஒருவனுக்குப் பொய்யாகிய தவவேடப்பலிப்பு[12] என்ன பயனைத் தரும்? தரமாட்டாது. தன்னெஞ்சே தனக்குச் சாட்சியாக நிற்கப்பெண்ணாசை பொன்னாசையாகிய குற்றஞ் செய்வாற்கு?.

தன் மனமறிந்த குற்றம் தன்னிடத்திருக்க, வேடப்பலிப்பென்ன பயனைத்தரும் என்றது. வானுயர் தோற்றம்—மிகுந்த வேடப் பலிப்பு.

மல்லர்.: எ—து வானத்துக்குச் சரியாய் உசத்தியான வேஷம் என்ன பிரயோசனத்தைச் செய்யும் தன்னெஞ்சு தானே அறிந்து குற்றத்தைச் செய்தால் எ-று.

நெஞ்சிலே குற்றத்தைத்தவிராத அஞ்ஞானம்[13]உண்டாயிருக்க எத்தனை உசத்தியான ஞானவேஷம் எடுத்தாலும் அதுபொய்யான ஞானமாயிருக்குமே அல்லாமல் மெய்யான ஞானமாய் இராது; ஒரு நன்மையும் செய்யாது என்பது கருத்து.

வான்—வானம், தோற்றம்—வேஷம், எவன்—என்ன, நெஞ்சம் —நெஞ்சு.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக்குடவர், *கா.சு.* முதலானோர் 'தான்' என்பதை அசை யாகத் தள்ளி 'தன்நெஞ்சறியக் குற்றம் உண்டாயின்' என்றார். தன் நெஞ்சம்—தன் ஆத்துமா அறிய' என்பர் ***பரிதி***. இவரும் 'தான்' என்பதை அசையாகக் கொண்டனர். ***காளிங்கர்*** 'தான்—நெஞ்சமா னது, தானறி குற்றப்படின்—தானறிவதொரு தவநெறிக் குற்றம் உடையதாயின்' என்பர். *பரிமேலழகர்* 'தான் அறிகுற்றம் தன் நெஞ்சம்படின்' எனக் கூட்டித் 'தான் குற்றம் என்றறிந்த அதில்தன் மனம் ஈடுபடுமாயின்' என்றார்.

'*வான்உயர்தோற்றம்*'—'வானளவு உயர்ந்த பெருமை *மணக்.*; 'வான் போலப் பெரிய தபசு' ***பரிதி***.; 'ஒருவன் பெயர் தேவரறிய

---

11 பரிகாரமாய்—பிராயச்சித்தம் அல்லதுகழுவாய்.

12 தவவேடப் பலிப்பு— தவவேடத்தின் பொருத்தம்,

13 அஞ்ஞானம்— அறியாமை,

விளங்கிற்றாயினும்' வான்—இடவாகு பெயராய்த்தேவரையுணர்த்தியதாகக் கொள்வர் *காளிங்கர்*. *பரிமேலழகர்* 'வான் போலுயர்ந்ததவவேடம்' என்பர். *பரிதியார்* வான்போலும் உயர்ச்சியைத்தவத்திற்கு அடையாக்குவர். *பரிமேலழகர்* தவவேடத்திற்கு அடையாக்குவர். *கவிராசரும்* இக்கருத்தினரே.

'தன்நெஞ்சம் அறிகுற்றம் தான்செயின்' என இயைத்து 'தன் மனமே குற்றமென்று அறிகிற காரியத்தைத் தான் செய்தால்' எனப் பொருளும் கூறுவர் *இராமலிங்கர்*. *குழந்தை* 'தன்நெஞ்சம் தானறிகுற்றம் படின்' எனக்கூட்டி 'ஒருவன் மனம் அவனறிந்த குற்றத்தின்கண் படின்' என்டர். உரையில் 'தான்' என்பது அங்குமிங்குமாகக் கூட்டப் பெறுதலால் பொருள் சிறிது மாறுபடுமாயினும் கருத்துமாற்றமில்லை.

இவ்வுரைகளில் 'வான்போல உயர்ந்து விரிந்து பரந்த பெருமையாற் பயனில்லை; தன்மனம் குற்றமென்று அறிந்தவற்றைச் செய்யின்' என்ற உரையும், 'குற்றம்—தவநெறிக்கு ஏலாதகுற்றம்' என்பதும் ஏற்புடையன. 'வானுயர் தோற்றம்' என்பதில் 'தோற்றம் பெருமை' என்பது சிறந்ததாகும்.

'குற்றம்படின்' *மணக்*., *தாமத்தர்*, *வ.உ.சி*. கொண்டபாடம்; 'குற்றப்படின்' *பரிமேலழகர்* முதலிய ஏனையர் கொண்டபாடம் என்பர் *வ.உ.சி*.

ஒ) ஒப்புமைப் பகுதி:

***'வானத்தின் உயர்வு'*:**

வானினும் உயர்ந்தன்று —*குறுந்*., 3:1

காம மூரிற் கணிகையரோ டன்ன
தூய்மை யுண்மையிற் றோற்றங் கரந்தவட்
சேம மாவகை செல்கமற் றென்பதும்
வாம நூ லின் மறைபொ ருளல்லவோ —*நீல*., 244

மண்ணினும் வானினும் மற்ற மூன்றினும்
எண்ணினும் பெரியதோர் இடம் —*கம்பராமா*.

மறித்தொரு மாற்றங் கூறான் வானுயர் தோற்றத் தன்னான்
—*கம்பராமா*., 4243

மைந்தரைப்பெற்று வானுயர் தோற்றத்து மலர்ந்தார்
—*கம்பராமா*.,10214

28.3 வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று. (௨௭௩)

உரைப்பகுதி:

அ) *மணக்.*: வலியில்லாத நிலைமையை உடையவன், வலிதாகிய தவ உருவம் கோடல், பெற்றமானது[1] பிறர் பயப்படும்படிப் புலியினது தோலைப் போர்த்துப் பைங்கூழ்[2] மேய்ந்த தன்மைத்து என்றவாறு.

ஆ) *பரிதி.*: எ-து தவத்தில் உறுதியில்லாதான் வலுவாகக் கொண்ட வேஷம், ரிஷபம்[3] மேயவேண்டிப் புலித்தோல் போர்த்துப் புறப்பட்டதற்குச் சரி என்றவாறு.

இ) *காளி.*: எ—து இவ்வுலகத்துத் தான் கொண்டதோர் தங்குறை முடிப்பதொரு கோட்பாட்டுவலி தன்நெஞ்சத்தில்லாத தன்மையான் அவன்மாட்டுத் தவநெறி வலிபெற்று நின்றது போலத் தோன்றுகின்ற கோலமானது யாதினை ஒக்குமோ எனில், புலிபோல்வதோர் மனத்திட்பம் இல்லாத பசுவானது திட்பமுள்ளது போலப் புலியினது தோலினைப் போர்த்து நடித்தும். பண்டைப் புல்லினையே பின்னும் மேய்ந்த அத்தன்மைத்து என்றவாறு.

உ) *பரிமேல்.*: மனத்தைத் தன்வழிப்படுத்தும் வலியில்லாத இயல்பினையுடையான் வலியுடையார் வேடத்தைக் கொண்டு தான் அதன் வழிப்படுதல் பசு காவலர் கடியாமல் புலியின் தோலைப் போர்த்துப் பைங்கூழை மேய்ந்தாற்போலும்.

இல்பொருளுவமை,[4] வலியினிலைமையான் என்ற அடையானும், மேய்ந்தற்று என்னுந் தொழிலுவமையானும், வல்லுரு[5]வத், தோடு மனவழிப்படுதல் என்பது பெற்றாம். காவலர் கடியாமை. புலி புல் தின்னாது என்பதனாலும், அச்சத்தாலும் ஆம்; ஆகவே வல்லுருவங்கோடற்குப் பயன் அன்ன காரணங்களான் உலகத்தார் அயிராமையாயிற்று. இவ்வாறு தனக்குரிய இல்லாளையும் துறந்து, வலியும் இன்றிப் பிறர் அயிராத வல்லுருவங் கொண்டு நின்றவன் மனவழிப்படுதலாவது தன்மனம் ஓடியவழியே ஓடி மறைந்து பிறர்க்குரிய மகளிரை விழைதலாம். அவ்வாறாதல், பெற்றம் தனக்குரிய புல்லைவிட்டுப் பிறர்க்குரிய பைங்கூழை மேய்ந்தாற்போலும் என்ற உவமையான் அறிக.

காரி.: அதன் என்றது மனம்.

---

1 பெற்றம்-பசு; 2 பைங்கூழ்-பசிய பயிர்; 3 ரிஷபம்-காளை

4 இல்பொருள் உவமை - எக்காலத்தும் இல்லாத பொருளை உவமமாக எடுத்துரைப்பது இதனை அபூத உவமை என்பர் வடநூலார்.

5 வல்லுருவம் - வலிய விலங்கின் உருவம். ஈண்டு புலியின் உருவம் என்றார்.

இராமா.: வலியினிலைமையான்—மனத்தை தன்வசப்படுத்தத் தக்க வல்லமையில்லாதவன். வல்லுருவம் — அந்த வல்லமை யுடையவரது தவவேடத்தைக்கொண்டு தானதன்வழியிலே நடப்பது, பெற்றம்—வலிமையில்லாத பசுவானது, புலியின் றோல் போர்த்து — வலிமையுடைய புலியின்றோலைப்போர்த் துக்கொண்டு, மேய்ந்தற்று — (காவலர்பயந்தோடிப்போகப்) பயிரைமேய்ந்ததுபோலும், எ—று.

இது அபூதவுவமை. இவ்வாறு கூறவேமனமடங்கப்பெறாத வன் திருட்டளவாக மனமடங்கினவர் வேடத்தைப்பூண்டு அவர்க்குரிய சருகுகாய்கனி கிழங்குகளைவிட்டு இல்லறத்தார்க் குரிய சிற்றின்பங்களையநுபவித்தல் பசுதனக்குரியபுல்லை விட்டுப் பிறர்க்குரிய பயிரை மேய்ந்ததுபோலுமென்பதாயிற்று.

௨) *கவிராசர்*: மனத்தைத் தன்வழிப்படுத்தி அடக்கமாட்டாதவன் தபசைப் பண்ணுகிறேன் என்று வேஷத்தைப் போட்டுக்கொண்டு இருக்கிறது. பயிரைக் காக்கிறவர்கள் பயப்பட்டு ஓட்டிவிடாமல் இருக்கவேணுமென்று ஒரு எருதுக்குப் புலித்தோலைப் போர்த்துப் பயிரிலே மேயவிட்டாற்போலும், (எ—று).

ஏ) *பழைய* 2: மனத்தைத் தன்வழிப்படுத்தும் தவவலியில்லாதவன், தவவலி உடையார் வேடத்தைப் பூண்டு திரிதல், பசுவானது புலித் தோலைப் போர்த்துக்கொண்டு பயிரை மேய்ந்தாற் போலும்.

மல்லர்: ஞானத்தின் பெருமைஇல்லாத குணத்தையுள்ளி வன்ஞானத் தின் வேஷத்தை எடுக்கிறதும், பசு, புலியின் தோலால் தன்னுடம்பை மூடிப் பயிர்களிலே மேய்கிறதும் ஒக்கும் எ—று.

பசு, புலி வேஷத்தை எடுத்துப் பயிர்களிலே மேய்ந்தால் அதைக் கண்டவர்கள் புலி என்று நினைத்துப் பயத்தினாலேயும் புலி புல் தின்னாது என்கிற நினைவினாலேயுந் துரத்தப்போவதில்லை. ஆனால் அதுக்குள்ளே பசு பயிருக்கு வேண்டிய சேதம் பண்ணும். அப்படிப்போலே மனசிலே ஞானியாயிராதவன் ஞான வேஷத்தையும் எடுத்துத் திரிந்தால் அவனைக்கண்டவர்கள் ஞானி என்று நினைத்து வணக்கத்தினாலேயும் ஞானி பாவஞ்செய்யான் என்கிற நினைவி னாலேயும் அவன் போற போக்குகளிலே அவனுக்கொரு விக்கினமும் செய்யார்கள். ஆனால் அதுக்குள்ளே அவன் வேண்டிய தாறுமாறுக ளைச் செய்வான் என்பது கருத்து.

வலி-பெருமை; இல்-இல்லாத; நிலைமை-குணம்; வல்லுருவம்-வலியுள்ள ரூபம்; பெற்றம்-பசு; பைங்கூழ்-பயிர்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக்குடவர், பரிமேலழகர், கா.சு., சொ.த., உரைகள் ஐந்த வித்தொழுகும் ஆற்றலில்லாதவன் ஆற்றலுடையார் வேடத்தைத் தாங்கி ஒழுகுதல் பெற்றம் புலித்தோல் போர்த்துமேய்ந்ததுபோலும்' எனத் தொழில் பற்றிய உவமையாக உரைப்பன.

பரிதி., காளிங்கர் உரைகள் 'வல்லுருவம் மேய்ந்தற்று' என 'வல்லுருவத்தை' எழுவாயாக வைத்து 'மேய்ந்தற்று' என்ற முற்றினைக்கொண்டு முடிக்கிறது. ஆயினும் வல்லுருவத்திற்கும் புலித்தோல் போர்த்த பெற்றத்திற்கும் ஒப்பு. 'மேய்ந்தற்று' என்பது இரண்டற்கும் உள்ள பொதுத்தன்மை. ஆகவே கருத்துவகையான் இதுவும் முன்னையதை ஒத்திருக்கின்றது.

கா.சு., 'புலனடக்கும் வலிமையில்லாத நிலையில்' என 'நிலைமையான்' என்பதை ஏதுப்பொருளில் வந்த மூன்றாம் வேற்றுமை ஏற்ற பெயர்ச்சொல்லாக்கினர், வல்லுருவம் — ஒருருவத்தை மேற்கொள்ளுதல் எனத் தொழிற்பெயராக்கி அற்று என்பதனோடு முடிப்பர்.

சொ.த. 'புலிவேடங் கொள்ளாவிடின் அப்பசு வாயுறை பெற்றுச் சுகமாக வாழும்; அதுபோல மனவலியில்லாதான் துறவு பூணாவிடின், தன்பெண்டு பிள்ளைகளோடு கூடிச் சுகமாக வாழ்ந்திருப்பன். இவன் அதனையும் விட்டு இல்லறம்—துறவறம் இரண்டன் நலத்தையும் இழக்கிறான்' என நயங் காட்டுவர். வயிற்றுக்குத் தேட முடியாத பசு பட்டிமாடாய்ப் பிறர் வயலில் மேயவும் கூடும்; பல்வகைப் பயிரை உண்டு சுவைக்கவும் கூடும். அதுபோல இவன் மனத்தைக்கட்டி இல்லொழுக்க அளவிலே அமைதிபெற இயலாமல் துறந்தார் வேடம் பூண்டிருக்கவும் கூடும்; ஆதலின் அந்த இரு பாலாரையும் உள்ளடக்கிப் பொதுமையிற் கூறுகின்றார் வள்ளுவர் என்றும் கருதலாம்.

'பசு புலித்தோலைப் போர்த்து மேயப்போனால் அதற்குப் போட்டியாக அந்தப் பயிரை மற்ற மாடுகளும் மேயா. பயிருக்கு உடையவனும் ஐயப்படான். தன்விருப்பம் போல மேயும். அது போலத் துறவியும் விருப்பம் போலக் கூடாஒழுக்கத்தில் திளைக்கலாம்' என நயங்காட்டுவர் *இராமலிங்கனார்.*

இவைகளுள், தொழிலுக்குத் தொழிலையுவமையாக்கிச் சில சொல் வருவித்து எழுதும் *பரிமேலழகர்* உரையும், இத்தனை நயங்களையும் எண்ண இடந்தருகிறது. ஆதலின் பொருணயமும் இலக்கண அமைதியும் உடைய அவர் உரை சிறந்தது எனலாம்.

ஓ) மேற்கோள் பகுதி:

பெருந்தே: இஃது இல்லாதது சொன்னமையால் அபூத உவமையாயிற்று. (வீரசோ.155).

காரிரத்ன: பாவிக அலங்காரத்திற்கு மேற்கோள். (மாற.251)

28.4. தவமறைந்து அல்லவை செய்தல் புதன்மறைந்து
வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று. (உஎச)

உரைப்பகுதி:

அ) *மணக்.:* தவத்திலே மறைந்து தவம் அல்லாதவற்றைச் செய்தல் வேட்டுவன் தூற்றிலே[1] மறைந்து புள்ளைப்[2] பிணித்தாற் போலும் என்றவாறு.

அர்ச்சுனன் தவமறைந்து அல்லவை செய்தான்.[3]

ஆ) *பரிதி.:* எ—து தவவேடத்திலே மறைந்து, அவநெறி செய்வாரும் செடியில் மறைந்து புள்ளை வதைப்பாருஞ்[4] சரி என்றவாறு.

இ) *காளி:.* எ—து ஒருவன் தவத்தின் மறைந்துநின்று அல்லனவற்றைச் செய்தொழுகுதல் எத்தன்மைத்தோ 'எனில் வேட்டுவனானவன் புதலினுள் மறைந்துநின்று பேடைசேவல் என்னும் புள் விரும்பி வாய்மேல் விரலால் எற்றிப் பயில விளித்த அத்தன்மைத்து என்றவாறு.

புதல் என்றது சிறுசெடி. சிமிழ்த்தல் என்றது அவன் வாய்மேல் விரலெற்றி அதுபட விளித்தல்.

உ) *பரிமேல்.:* அவ்வலியின் நிலைமையான் தவவேடத்தின் கண்ணே மறைந்து நின்று, தவமல்லனவற்றைச் செய்தல்; வேட்டுவன் புதலின்கண்ணே மறைந்துநின்று புட்களைப் பிணித்தாற்போலும்.

தவம் ஆகுபெயர்.[5] தவமல்லனவற்றைச் செய்தலாவது பிறர்க்குரிய மகளிரைத் தன்வயத்தராக்குதல். இதுவும் இத்தொழில் உவமையானறிக.

இராமா.: தவமறைந்து— மனமடங்காதவன் அடங்கினவர் கொண்ட தவவேடத்தைக்கொண்டு அதிலே மறைந்துநின்று,

---

1 தூறு—சிறுசெடிகளின் தொகுதி அல்லது புதர்.
2 புள்—பறவை.
3 அருச்சுனன் துறவுபூண்டு. கண்ணன் தங்கை சுமத்திரையையும், சித்திராங்கதையையும் மணந்ததைக் குறிக்கிறார்.
4 வதைப்பார்—கொல்வார்.
5 தவம் என்னும் முதலின் பெயர், அதனுறுப்பாகிய வேடத்தையுணர்த்துதலின் முதலாகு பெயர். ஈண்டு தவம் என்ற தொழில் முதலாயினவாறு காண்க. பின்னர்த் தொழிலுவமை என்றதும் இக்கருத்தினதே.

அல்லவைசெய்தல்—அதற்குத் தகாத பாவங்களைச் செய்வது. வேட்டுவன்—வேடனானவன், புதன் மறைந்து—செடியிலே மறைந்திருந்து, புட்சிமிழ்த்தற்று—பறவைகளைப் பிடித்தது போலும், எ—று.

தவம், ஆகுபெயர். தகாதபாவங்களைச் செய்தலாவது பிறர்க் குரிய மங்கையரைத் தன்வசப்படுத்தல் வஞ்சித்தல் முதலியவாம்.

ஊ) *கவிராசர்*: மாயத்தினால் தபோவேஷத்தைத் தரித்துக்கொண்டு அந்த வேஷ மஹிமையினாலே தபத்திற்கேலாத காரியங்களைச் செய்தல், வேடன் புதருக்குள் தழையால் தன்னை மறைத்துப் பட்சி களைப் பிடிப்பது போல (எ—று).

ஏ) *பழைய 2*: தவவேடம் கொண்டு தவமல்லாத பொல்லாச் செயலைச் செய்யும் தவவேடம் எத்தன்மைத்து என்னில், காட்டிற் செடியினிடத்து மறைந்துநின்று, வேடன் பறவைகளைப் பிடிக்கத் தீவிரமாக ஒரு பறவையைக் கட்டி வைத்ததுபோலும்.

மல்லர்: தவவேஷத்துக்குள்ளே தன்னை மறைத்துத் தவத்துக்கு ஏலாத காரியங்களைச் செய்கிறது. குறவன் தன்னைச் செடிக்குள்ளே மறைத்துக் குருவிகளைச் சுடுகிறதும் ஒக்கும். எ-று.

குருவிகளைப் பிடிக்கிற குறவன் அவற்றுகளுக்கு மோசம் பண்ணு கிறதுக்காக வேண்டியவற்றை ஏய்த்துப்போடுகிறாப் போலே ஞான வேஷம் எடுக்கிற ஞானிகள் மனுஷருக்கு மோசம் பண்ணுகிறதுக்கு அவர்களை ஏய்த்துக்கொண்டு திரிகிறதே அல்லாமல் ஞானத்தை யுடையவர்கள் அல்ல என்பது கருத்து.

அல்லவை—தவமல்லாத காரியங்களை; புதல்—செடி; வேட்டுவன்—வேடன்; புள்—குருவி, சிமிழ்த்தல்—கட்டல்; அற்று—உவமைச்சொல்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

முற்கால பிற்கால உரைகள் யாவும் ஒத்த கருத்தினவே. வேட்டுவன் புட்சிமிழ்க்கவே புதரில்மறைந்திருக்கிறான். அதுபோலப் போலித்துறவியும் தன் காமப்பசி களையவே துறவொழுக்கத்தில் மறைகிறான் என்பது. சென்ற குறள் ஏதோ காரணத்தால் பற்றற்று வந்தும் வினைவலியின்மையால் தவறியதைக் குறித்தது. இது வேண்டும் என்றே கூடாவொழுக்கத்திற் கூடுவதற்காகவே வந்தான் என்பதை உவமை காட்டுகிறது.

'அல்லவையாவன பிறன் மனைவியைத் தன்வசப்படுத்தலும், பிறர் பொருளைத் தருமஞ்செய்வேன் என அபகரித்தலுமாம்'

என்பர் மு.ரா.அரு.

ஒ) ஒப்புமைப் பகுதி:

'தவம் மறைந்து அல்லவை செய்தல்'

தவமறைந்தொழுகுந் தன்மையிலாளர் —சிலம்பு., இந்திர., 128

தவமறைந்து அல்ல செய்வார் —பெரிய.சம்., 697

சிறகமை பறவை பேர்ப்பான் உடம்பெலாம் செடியின் முடிப்
பறவையைச் சிமிழ்ப்பின் வாங்கும் பாவியைப் போல —மேரு., 268

நெஞ்சுபுறம்பாத் துறந்தார் தவப்போர்வை
கஞ்சுக மன்று பிறிதொன்றே—கஞ்சுகம்
எப்புலமும் காவாமே மெய்ப்புலங் காக்குமற்
றிப்புலமுங் காவா திது —நீதிநெறி., 93

.... பிழைப்பில் செய்தவம்
வருந்தினான் .... —கம்பராமா., 1497

அவ்வுரை யமையக் கேட்ட வரிக்குலத்தரசு மாண்ட
செவ்வியோ யனைய தாக; செருக்களத் துருத்தெய் யாதே
வெவ்விய புளிஞ ரென்ன விலங்கியே மறைந்து வில்லால்
எவ்விய தென்னை யென்றான். .... —கம்பராமா., 4162

28.5. பற்றற்றேம் என்பார்படிற்றொழுக்கம்எற்றெற்றென் றேதம் பலவும் தரும். (உஎரு)

உரைப் பகுதி:

அ) மணக்.: பற்றினை அற்றேம் என்பாரது குற்றத்தினை உடைய ஒழுக்கம் எல்லாரும் எற்றுஎற்று என்று சொல்லும்படி, பல குற்றமும் உண்டாக்கும் என்றவாறு.

எற்று என்பது திசைச்சொல்; இது தீமைபயக்கும் என்றது.

ஆ) பரிதி.: எ—து மூன்றுவகை ஆசை[1] குடிகொண்டிருக்கவும், பற்றற்றோம் என்று வார்த்தையினாலே சொல்லி, நடக்கிறதெல்லாம் அதிக்கிரமமே[2] செய்வார்க்குக் குற்றம் வெகுவிதமாக வரும் என்றவாறு.

ஈ) காளி.: எ—துதன் நெஞ்சினால் பற்றாதே வறிதேஇவ்வுலகத்திலே பற்றும் அற்றோம் என்று சொல்லுமவனது பொய்யான ஆசாரமானது தானே கொடிய வினை

1 மூன்று வகை ஆசை—மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை.
2 அதிக்கிரமம்—அநீதி

யாதலால் அஃதிங்கண் ஏறு முயன்று நிரைதழுவத் தொழுவுக்குச் செல்வது போன்ற குற்றம் பலவுந்தரும் என்றவாறு.

உ) *பரிமேல்.*: தம்மைப் பிறர் நன்கு மதிக்கற்பொருட்டு யாம் பற்றற் றேம் என்று சொல்வாரது மறைந்த ஒழுக்கம்; அப்பொழுது இனிது போலத் தோன்றுமாயினும் பின், என்செய்தேம் என்செய்தேம் என்று தாமே இரங்கும்வகை அவர்க்குப் பல துன்பங்களையும் கொடுக்கும்.

சொல்லளவல்லது பற்றறாமையின், பற்றற்றேம் என்பார் என்றும் சிறிதாய்க் கணத்துள்ளே[3] அழிவதாய இன்பத்தின்பொருட்டுப் பெரிதாய் நெருங்காலம் நிற்பதாய பாவத்தைச் செய்வார் அதன் விளைவின்கண் அந்தோ வினையென்று அழுவராகலின், எற்று எற்று என்றும் கூறினார். இவை ஐந்துபாட்டானும் கூடாஒழுக்கத்தின் இழுக்கம் கூறப்பட்டது.

> *இராமா.*: பற்றற்றோமென்பார்— (பிறர்மதித்தற்பொருட்டு) இருவகைப்பற்றுக்களையுமறவிட்டோமென்பவருடைய, படிற் றொழுக்கம்—திருட்டொழுக்கமானது!, எற்றெற்றென்று—எத் தன்மைத்து எத்தன்மைத்தென்று (பின்னரழும்படியாக), ஏதம் பலவுந்தரும்—பலதுன்பங்களையுங்கொடுக்கும், எ.று.
>
> இந்தத்திருட்டொழுக்கமானதுமிக்கபாவமாதலால் முடிவிலே நெடுங்காலமநுபவிக்கப்படுங் கொடிய துன்பங்களையே தரு மென்பதாம், இவையைந்துபட்டாலுங் கூடாவொழுக்கத்தின் குற்றங்கூறப்பட்டது.

ஊ) *கவிராசர்*: தன்னைப் பிறர் பெரியவன் என்று சொல்லிக் கொள்ளவேணும் என்று 'நான் ஆசையற்றவன்' என்று சொல்லு கிறவனுடைய பொய்யொழுக்கம், அப்போதைக்கு நன்றாயிருந் தாலும், பிறகு அறியாமற் சொன்னோமென்று தான் விசாரப்[4] படத்தக்கதாக அவனுக்கு அனேகம் துக்கங்களைத் தரும் (எ-று).

ஏ) *பழைய2*: தம்மைப் பிறர் நன்கு மதிக்கத் தவவேடம் பூண்டு பொன்னாசை, பெண்ணாசை என்னும் பற்றுவிட்டோம் என்று சொல் வார், பொய்யொழுக்கம் பின்பு தமக்குப் பாவம் பலிக்கும்போது, என்செய்தோம், என்செய்தோம் என்று தாமே இரங்கும் வகை பல துன்பங்களையும் கொடுக்கும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக்குடவர் உரையமைதி 'பற்றற்றேம் என்பாரது வஞ்சக ஒழுக்கத்தைக் கண்டு எல்லாரும் இது எப்படி? என்று ஒழுக்கக்கேடு

3 கணத்துள்ளே—ஒரு கணப்பொழுதில். **4 விசாரம் — துன்பம்.**

உண்டாகாத இடத்தில் உண்டானதால் வியந்து இழித்துரைக்கிறார்கள்' என்ற கருத்தை வழங்குவது. 'எற்று என்பது திசைச்சொல்' என்பர்.

பரிதியுரை 'ஏதம் எற்று எற்று என்று பலவும் தரும்' என்ற இயைபினதாய்ப் 'பற்றற்றான் செய்யும் பாவ ஒழுக்கத்தைக் கண்டு, அதன் பயனாக வரக்கருதும் குற்றங்கள் எப்படி எப்படி எல்லாம் இவனை வந்தடையலாம் என்று எண்ணி எண்ணி அந்தந்த வழிகளால் வந்து அடையும்' என்ற கருத்தையளிக்கிறது. 'ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும்' என்பது போல.

காளிங்கர் 'என்பார்' என்ற சொல்லாற்றலான் 'உண்மையில் பற்றறாதே பற்று அற்றேம் என்று வாயாற் சொல்லுமவன்' என்று உரைகண்டு, 'அவனுடைய பொய்யான ஒழுக்கம் ஏறு எற்றென்று ஏதம் பலவும் தரும்' எனப் பாடங்கொண்டு 'தொழுவுட்புகுந்த காளை போலப் பலதுன்பங்களைத்தரும்' எனப்பொருள் கொள்வர். இதில் 'ஏறு எற்றென்று-இடபமானது முயன்று நிரைதழுவத் தொழுவுக்குச் செல்வது போன்ற' என்னும் பொருள் தருவதாய் இவர் கொண்ட பாடம் 'ஏறெற்றென்று' எனத்துணிய இடந்தருகிறது. தொழு-பசு கட்டும் இடம்; நிரை- பசுக்கூட்டம்.

பரிமேலழகர் 'எற்று எற்று' என்பதற்கு 'என்செய்தேம் என் செய்தேம்' என உரை எழுதுவர். இவர் மனத்திரையின் 'எற்றென் றிரங்குவ செய்யற்க' என்ற குறட்பா நிழலாடியிருக்கிறது; அதனால் இங்ஙனம் எழுதினராதல் வேண்டும். **கா.சு., சொ.த., மு.வ., தேவநேயர், சி.இ.,** குழந்தை முதலியோரும் இங்ஙனமே கூறுவர்.

இராமலிங்கனார் ''துறவிகள் திருட்டுத்தனமாகச் சிற்றின்ப வாழ்க்கை நடத்தினால் அது 'ஏது' 'ஏது' என்றே துன்பங்கள் பலவற்றையும் உண்டாக்கிவிடும்'' என்பர். இதில் 'எற்றுஎற்று-எது 'எது' என்று பொருள் காணப்பட்டுள்ளது. எற்று என்பது இடைச்சொல்லாயின் 'எற்றென்கிளவி இறந்தபொருட்டே' என எற்றென் உடம்பின் எழினலம் என்றாற் போல கழிந்ததே என்ற பொருளில் வருதல் மரபாதலின் ஒழுக்கக்கேட்டால் ஏதம்பலவரத் துன்புறுந் துறவி கழிவிரக்கப்பட்டதாகும் 'எ' என்னும் வினாவடியாகப் பிறந்த குறிப்புமுற்றாயின் 'எத்தன்மைத்து என்னும் பொருள் தருமேயன்றி 'எது' எனப்பொருள் தராது என ஆய்க.

வேறுபாடம் கொள்ளாத நிலையில் 'படிற்றொழுக்கம் கழிவிரக்கப்படக்கூடிய துன்பங்களைத் தரும்' என்ற உரைகளே சிறந்தன. *காளிங்கர்* கூடாஒழுக்கமுடைய துறந்தார் மீது கொண்ட சீற்றத்

தாற் போலும் 'ஏறு எற்று' என்று பாடமும் கொண்டு 'ஏறு நிரை தழுவத் தொழுவுக்குச் சென்றாற் போலத் துன்பந்தரும்' என உரைத்தனர். இங்ஙனம் அவர் உரைத்தற்கு 'ஏறு எற்று' என்ற தொடரே அடியாதலைக் காண்க.

வ.உ.சி. 'ஏதம்' — 'கொல்' வெட்டு என்று சொல்லுதற்குக் காரணமான குற்றம்; எற்றெற்று—துறவி கூடாஒழுக்கம் புரிய பிறவில்லின்கட்கு சென்ற போது பிறன் எனப்பட்டஅவன் தன்னருகில் நிற்பானை நோக்கிக் கூறியது' என்பர். இவ்வுரைகளுள் பிறரறியார் என்றுதுணிந்து தீயசெய்தவழிப்பிறர்அறிந்துதுன்புறுத்த அதனால் துறவி இரங்கிக் கூறியதாகக் கருத்து வழங்கும் உரைகளே சிறந்தவை.

தருமர் 'பற்றற்றோம்—என்பான்'; *தாமத்தர்* 'பற்றற்றேம்—என்பான்'; *நச்சர்* 'பற்றற்றோம்—என்பார்' பாடம் என்பர் வ.உ.சி.

28.6. நெஞ்சில் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து வாழ்வாரின் வன்கணார் இல். (உஎசு)

உரைப்பகுதி:

அ) *மணக்.*: நெஞ்சில் துறவாராய்த் துறந்தாரைப்போல வஞ்சனை செய்து வாழுமவர்களைப் போலக் கொடியார் இல்லை உலகத்து என்றவாறு.

ஆ) *பரிதி.*: எ—து மனத்தில் மூன்று ஆசையும்[1] இருக்க, ஆசையை விட்டோம் என்பார் வஞ்சகர்க்குள் வஞ்சகர் என்றவாறு.

ஈ) *காளி.*: எ—து இவ்வுலகத்துச் சிலர் துறக்கக் கருதுகின்றது மற்றதனை நெஞ்சினால் துறவாராய் வறிதே துறந்தார்போலப் பாவித்து இங்ஙனம் வஞ்சித்து உயிர் வாழ்வாரைப் போலத் தறுகணாளர்[2] ஒருவரும் இல்லை என்றவாறு.

பரிமேல்.: நெஞ்சால் பற்றறாது வைத்து[3], பற்றற்றார் போன்று தானம் செய்வாரை வஞ்சித்து வாழுமவர்போல், வன்கண்மையை உடையார் உலகத்து இல்லை.

தானம் செய்வாரை வஞ்சித்தலாவது யாம் மறுமைக்கண் தேவராதற் பொருட்டு இவ்வருந்தவர்க்கு 'இன்னது ஈதும்' என்று அறியாது ஈந்தாரை அதுகொண்டு இழிபிறப்பினர் ஆக்குதல். அவர் இழிபிறப்பினராதல் ''அடங்கலர்க்கீந்த தானப் பயத்தினால் அலறு

---

1 மண்ஆசை, பெண்ணாசை, பொன்னாசை என்பன.

2 தறுகணாளர்—கொடியர்; 3 பற்றறாது வைத்து— இருவகைப்பற்று மொழியாதிருந்தும்

முந்நீர்த் தடங்கடல் நடுவுள் தீவு பலவுள அவற்றுள் தோன்றி, உடம்பொடு முகங்கள் ஒவ்வார் ஊழ்கனி மாந்தி வாழ்வர், படங்கலஞ் சீற்றத்துப் பின் மானவேல் மன்னர் ஏறே''[4] என்பதனான் அறிக. தமக்கு ஆவன[5] செய்தார்க்கு ஆகாதன விளைத்தலின் வன்கணார் இல் என்றார்.

இராமா.: நெஞ்சிற்றுறவார்—மனத்திற் பற்றறாதுவைத்து, துறந்தார் போல்வஞ்சித்து—பற்றுவிட்டவர்போல இல்லறத் தாரைமயக்கி, வாழ்வாரின் வன்கணாரில்—வாழுங்கூடா வொழுக்கத்தாரைப்போலக் கொடியவரில்லை, எ—று.

இல்லறத்தாரைவஞ்சித்தலாவது, அவர் துறந்தாரென்றெண் ணிச் செய்யுமுபசாரங்களைக் கைக்கொண்டு அதினாலேயவர்க் கொருபிரயோசனமுமில்லாமற் செய்தலுமன்றியவரையுமிழிந் தோராக்குதலாம். தமக்குஆவனசெய்தார்க்கு ஆகாதனசெய்த லால் அவரின் வன்கணாரில்லென்றார்.

ஊ) *கவிராசர்*: மனதிலே ஆசை அறாமல் வைத்துக்கொண்டு, துறந்த சன்னாசியைப்[6] போலத் தானம் கொடுக்கிறவர்களை வஞ்சித்துப் பிழைக்கிறவர்களைப் போலக் கடினசித்தம்[7] உலகத்திலே இல்லை, (எ—று.)

எ) *பழைய*2: நெஞ்சில் ஆசையறாது, ஆசையற்றவர் போன்று, தமக்குக் கொடுப்பார்க்குப் பொய்வேடங் காட்டி வாங்கித்தின்று, வாழ்வாரைப்போல வன்கண்ணரில்லை.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

ஏனைய உரையாசிரியர்கள் அனைவரும் 'வஞ்சித்து' — 'வஞ்சனைசெய்து', 'பிறரை வஞ்சித்து' என வாளா கூறப் *பரிமேலழகரும்*, அவரைப்பின்பற்றிய சிலரும் 'தானஞ் செய்வாரை வஞ்சித்து' எனச் செயப்படுபொருள் வருவித்து, 'அடங்கலர்க்கீந்த தானப்பயத்தினார்' என்னும் *சீவகசிந்தாமணிப்* பாடலை மேற்கோள் காட்டியும் விளக்குவர்.

சொ.த. 'உலகை வஞ்சித்து' என்பர். இல்லறத்தாரைஏமாற்றி குற்றவாளிகளாயிருந்தும் பெரியோர்போலப் போற்றப் பெறுதல்—உழையாது' இருந்துண்டல் என்ற முக்குற்றமும் ஒருங்குடையரா தலின் 'வன்கண்ணாரில்' என்றார் என்ற நயம் சிறப்புடையது. *பரிமேலழகர்* இவையனைத்தும் அடங்க 'ஆவன செய்தார்க்கு ஆகாதன செய்தலின் இங்ஙனம் கூறினார்' என்றல் சிறப்புடைய தரயினும் அவர் கண்ட உரைப் போக்கிற்கு ஒத்தது.

4 சீவகசிந்தாமணி. 2842; 5 ஆவன—உண்டி மருந்து உறையுள் 6 சன்னாசி—துறவி முதலியவுபகாரங்கள். 7 கடினசித்தம்—கல்மனம்.

தறுகண்மை—'அஞ்சவேண்டியவற்றிற்கு அஞ்சாமை' என்க.

ஒ) மேற்கோள் பகுதி:

சுவாமி: நல்வினை தீவினையானதற்கு மேற்கோள். (இ. கொ.81)

28.7. புறங்குன்றி கண்டனைய ரேனும் அகம்குன்றி
மூக்கில் கரியார் உடைத்து. (உஎஎ)

அ) மணக்.: புறத்தே குன்றி நிறம்போன்ற தூய வேடத்தராய் இருப்பினும், அகத்தே குன்றி மூக்குப் போலக் கரியராய் இருப்பாரை உடைத்து இவ்வுலகம் என்றவாறு.

இஃது அறிஞர், தவத்தவரை வடிவுகண்டு நேர்படார் என்றது.

ஆ) பரிதி.: எ—து வேஷதாரிகளாய் மனத்திலே வெகு ஆசை உள்ள வரும், குன்றி மணியுஞ் சரி என்றவாறு.

ஈ) காளி.: தாம் புறத்துக்கொண்ட தவக்கோலத்தால் பிறர்க்குக் குன்றிகண்டாற் போல்வதோர் செப்மையுடையராயினும் மற்ற அகத்தால்அக்குன்றியினது மூக்கினைக் கண்டாற் போலக் கரிய தன்மையரை உடைத்து இவ்வுலகு என்றவாறு.

உ) பரிமேல்.: குன்றியின் புறம்போல[1] வேடத்தால் செம்மை உடையவராயினும், அதன் மூக்குப்போல மனம் இருண்டிருப்பாரை உடைத்து உலகம்.

குன்றி ஆகுபெயர்;[2] செம்மை கருமை என்பன பொருளின்கண் நிறத்தைவிட்டுச் செப்பத்தினும் அறியாமையினும் சென்றன வாயினும் பண்பால் ஒத்தலின் இவை பண்புவமை. ''கூழின் மலி மனம் போன்றிருளாநின்ற கோகிலமே''[3] என்பதும் அது.

இராமா.: புறங்குன்றிகண்டனையரேனும் — குன்றிமணியின் புறத்தைப்போல வேடத்தினாலே செம்மையுடையவராயினும், குன்றிமூக்கினகங்கரியாருடைத்து—அதன் மூக்கைப்போல மனமிருண்டிருப்பவரையுடைத்திவ்வுலகம், எ—று.

குன்றியினிறத்தைக்குன்றியென்றது ஆகுபெயர். செம்மை கருமைகள் உவமிக்கப்படும்பொருளிலே நிறத்தைவிட்டுச்

---

1. 'குன்றியின் புறத்தைக் கண்டாற் போல' என்றும் பாடமுண்டு.
2. குன்றி என்னும் கொடியின்பெயர், அதன் சினையாகிய மணிக்கு ஆகி, அதன்பெயர் மணியின் சிவப்பாகிய பண்பிற்காதலால் இருமடியாகுபெயர், குன்றி என்பதை மணியின் பெயராகவே கொண்டு, அதன் சிவப்பு நிறத்தைக் குன்றி என்றார் என எண்ணிப் பொருளாகு பெயர் என்பர் கோ.வ.
3. திருக்கோவையார்., 322.

செப்பத்திலுமஞ்ஞானத்திலுஞ் சென்றனவாயினும்பண்பாலொத் திருத்தலாற் பண்புவமை.

ஊ) *கவிராசர்*: குன்றிமணியின் மேலே இருப்பது போலே சிவப்பாய் நல்லவேஷத்தைத் தரித்தாலும், குன்றிமணியின் அடியிலே கருத்திருக்கிறாப் போலே மனத்திலே கபடமாய் இருக்கிறபேர்களும் உண்டு[4] என்றவாறு.

ஏ) *பழைய?*: குன்றி விதைபோல, வேடப் பலிப்பாயி[5]னும்,நெஞ்சம் குன்றியின் மூக்குக் கறுப்புப் போல இருக்கும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

உரைகள் அனைத்தும் ஒத்த கருத்தின ஆயினும், *இராமலிங்கர்* 'அகம் குன்றி மூக்கின் கரியருடைத்து' என்பதற்குக் காணும் நயம் மிகச் சிறந்தது. 'குன்றியின் மூக்கு அதன்முளையுள்ள இடம். மனிதனுடைய மனத்திலிருந்துதான் எண்ணங்கள் தோன்றுகின்றன. குன்றியின் மூக்கைப் போல மனம் கருமையாயின் (அஞ்ஞானமாயின்) அம்மனத்தினின்று தோன்றும் எண்ணங்களும் அப்படித்தானே இருக்கும்' என்கிறார்.

மு. ரா. அரு. 'மூக்கின்கரியாரை உடைத்து உலகு' என்றது மெய்த் துறவிகள் சிலரிருந்தாலும் பொய்த்துறவிகளை உடையது. பூமி என்றது பெரும்பான்மை பற்றிக் கூறியதாம். 'குன்றிக் கண்டனையர்' *வ.உ.சி.*, *தருமர்*, *தாமத்தர்* கொண்ட பாடம் என்பர் வ.உ.சி.

ஒ) ஒப்புமைப் பகுதி:

மூக்கிற் கரியார் உடைத்து:

மந்தரை யுரையெனும் கடுவின்மட்கிய
சிந்தையில் இருண்டது —*கம்பராமா.*,1934

மைக்கரு மனத்தொடு வஞ்சன் —*கம்பராமா.*,3095

மையறக் கரிதென் றெண்ணு மனத்தினான் —*கம்பராமா.*,9298

மைபொதி விளக்கே யென்ன மனத்தினுட் கறுப்புவைத்து
—*பெரிய.மெய்ப்பொரு*

மூக்கிற் கரியர் உளரென நாயனார்
தூக்கிய குறளின் சொற்படி.... —*மனோன்.*,2:1.268—269

4. குன்றிமணி காம்பின் பகுதியால் மேலே இருப்பதும் கருப்பும், கீழே இருப்பதுசிவப்பும் ஆம் ஆயினும் உருண்டையாயிருப்பதால் மாறிக்கூறினராதல் வேண்டும்.

5 வேடப்பலிப்பு--வேடப் பொருத்தம்.

ஓ) மேற்கோள் பகுதி:

சுவாமி: கண்டனையரேனும்; ஏனும் என்பதற்கு ஆனாலும் எனப் பொருள் எழுதி வாளாபோயினர் என மறுப்பர். (இ.கொ.86)

28.8. *மனத்தது மாசாக மாண்டார்நீர் ஆடி*
மறைந்தொழுகும் மாந்தர் பலர். (உஎஅ)

உரைப்பகுதி:

அ) மணக்.: மாசு மனத்தின்கண் உண்டாகவைத்து, மாட்சிமைப் பட்டாரது நீர்மையைப் பூண்டு, பொருந்தாத இடத்திலே மறைந்து ஒழுகும் மாந்தர் பலர் என்றவாறு.

இது பலர்க்குக் கூடா ஒழுக்கம் உண்டாகும் என்றது.

ஆ) பரிதி.: எ—து மனத்திலே மாசாகிய குற்றம் பெருகி[1] மாண்டா ராகியிருக்கவும், மார்கழித் தீர்த்தம் என்றும், மகாதீர்த்தம்[2] என்றும் ஆடி அதிலே மறைந்தொழுகு மாந்தரும் உண்டு என்றவாறு.

ஈ) காளி.: எ—து தன்மனத்துள்ள துறவறநெறிக்குக் குற்றமாகிய வற்றைப் புறமே உலகத்தார் கண்டுமதிக்கும்ாறு மாட்சிமைப்பட பலகாலும் நீராடி, தமதுள்ளத்துக் கிடந்த மாசானது உயிர்க்குப் புலப்படாமல் அதனை மறைத்து இங்ஙனம் கூடா ஒழுக்கத்தினை ஒழுகுமானிடர் உலகத்துப் பலர் என்றவாறு.

உ) பரிமேல்.: மாசு தம்மனத்தின் கண்ணதாக, பிறர்க்குத் தவத் தான் மாட்சிமை உடையராய் நீரில் மூழ்கிக்காட்டி, தாம் அதன் கண்ணே மறைந்துசெல்லும் மாந்தர் உலகத்துப் பலர்.

மாசு—காம வெகுளி மயக்கங்கள். அவை போதற்கன்றி மாண் டாரென்று பிறர் கருதுதற்கு நீராடுதலான், அத்தொழிலை அவர் மறைதற்கு இடனாக்கினார். இனி மாண்டார் நீராடி என்பதற்கு மாட்சிமைப்பட்டாரது நீர்மையை உடையராய் என உரைப்பாரும் உளர்[3] இவை மூன்று பாட்டானும் அவ்வொழுக்கம் உடையாரது குற்றமும், அவரை அறிந்து நீக்கல் வேண்டும் என்பதும் கூறப் பட்டன.

இராமா.: மாசுமனத்ததாக — குற்றந்தம்மனத்திலிருக்கத்தக் கதாக, மாண்டார்நீராடி—மாட்சிமையுடையவராகத்தம்மைக் காட்டி, மறைந்தொழுகு மாந்தர்பலர்—தவவேடத்திலெ மறைந்துநடப்பவருலகத்திற்பலர், எ—று.

---

1 மாண்டார்—மாட்சிமைப்பட்டார்.

2 மகாதீர்த்தம் மாகதீர்த்தம் என்றிருத்தல் வேண்டும். மகாதீர்த்தம்—மாசிமாதத்து மத்தில் ஆடும் நீர். மகாதீர்த்தம்—பெருநீர் கடல்போல்வது.

3 மணக்குடவர் இல்வாறு உரைப்பர்.

குற்றம் காமவெகுளிமயக்கங்கள். அக்குற்றநீங்குதற்கன்றித் துறந்தாரென்று பிறர்நினைத்தற்கு நீராடுதலால் அத்தொழிலும் வேடமுமவர்மறைதற்கு இடமாக்கினார். இனிநீர் என்பதைக்குணமாக்கி மாட்சிமைப் பட்டவருடைய குணமுடையவராயெனினும் அமையும். இவைமூன்றுபாட்டாலும் அவ்வொழுக்கமுடையவரது குற்றமுமக்குற்றமறிந்தவரை நீக்கல் வேண்டுமென்பதுங் கூறப்பட்டன.

ஊ) *கவிராசர்*: மனத்திலே கபடத்தை வைத்துக்கொண்டு தபவேஷத்தைப் போட்டுக் கொண்டு பிறர் தன்னை மதிக்கத்தக்கதாக நீரிலே முழுகிக்காட்டி கள்ள ஆசாரம் செய்கிறவர்கள் உலகத்திலே பலபேர்கள் (எ—று.)

ஏ) *பழைய* 2: மாசு தன்மனத்தின் இருக்கப் பிறர் தவமுடையவன் என்று நன்கு மதிக்க, மாட்சிமையுடைய நீரிலே மூழ்கித் தம்மைத் தவவேடத்தினாலே மறைத்துத் திரியும் மாந்தருலகத்துப் பலர்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'நீராடி'

'நீர்மையைப் பொருந்தி' *மணக்.*; மார்கழித் தீர்த்தம், மாகதீர்த்தம் என்றும் ஆடி' *பரிதி.*; 'பலகாலும் நீராடி' *காளி.*; 'நீரில் மூழ்கிக் காட்டி' *பரிமேல்., கவிராசர், பழைய2, கா.சு.*

'மாண்டார்நீர் ஆடி' காமவெகுளி மயக்கங்கள்போதற்கு அன்றி மாண்டார் என்று பிறர் கருதுதற்காக நீராடி' என விளக்கம் தருவர் *பரிமேலழகர்.* 'பெரியோர்களின் இயல்பை நடித்து' *இராமலிங்கனார்*; பெரியோர்களின் தன்மையைப் பூண்டு' குழந்தை; 'தவத்தான் மாட்சிமைப்பட்டவரைப் போல நீரில் முழ்கி' *சொ.த.*; *வ.உ.சி.*, 'மாண்டார் நீர் ஆடி-மாட்சிமைப்பட்ட தவத்தினர் மூழ்கும் தூய ஆறுகளில் மூழ்கி'' என்பர்.

'மறைந்தொழுகும்' 'பொருந்தாத இடத்திலே மறைந்து' *மணக்* ; 'நீராடி அதிலே மறைந்து' *பரிதி.*; 'மனமாசு பிறர்க்குப் புலனாகாவண்ணம் மறைத்து' *காளி.*; 'தவத்தின் மறைந்து' *பரிமேல்.*; மறைவாகத் தவறி' *கா.சு.*; 'மறைந்து நடக்கும்' *மு வ.*; 'தமது வேடத்தினும் புறஒழுக்கத்தினும் மறைந்து' *சொ.த.*

ஆசிரியர்கள் மாறுபடும் இடங்கள் இவ்விரண்டே. புறந்தூய்மை நீரான் அமைவது போல மனந்தூய்மை அமையாமையானும் 'ஆடி' என்பதற்கேற்ப நீர்-தண்ணீர் எனப் பொருள் கோடலே சிறந்தது. 'நீர் பலகால் மூழ்கல்' தாபதவாகையாயினும் அதனாற் பயனில்லை என்று கூறப்பட்டது.

ஓ) ஒப்புமைப்பகுதி:

மனத்தது மாசாக:

.... மாசிலா
அகத்து மாண் புடையவர்க் கரிய தில்லையே —*சூளா.*, 210

காம முரிற் கணிகையரோடன்ன
தூய்மை யுண்மையிற் றோற்றங் கரந்தவட்
சேம மாவகைச் செல்கமற் றென்பதும்
வாம நூ லின் மறைபொருளல்லவோ —*நீலகேசி.*, 244

உள்ளத்தி னுள்ளே யுணர்வெனுந் தீர்த்தநீர்
மெள்ளக் குடைந்துநின் றாடார் வினைகெடப்
பள்ளமும் மேடும் பறந்து திரிவரிக்
கள்ள மனமுடைக் காசினி யோரே —*அருமந்*

.... பிழைப்பில் செய்தவம்
வருந்தினான்... ... . —*கம்பராமா.*, 1497
ஒல்க வித்தவத் துத்தமன் .... —*கம்பராமா.*, 1500

முற்றும்:

துறவுகொண்ட பிக்கு நன்னெறியில் நடக்காமல் பொய்யாகத் துறவுகொண்டு தலையை மழித்துக் கொண்டதாலேயே துறவியாக மாட்டார். ஆசை அவர்களை விடாதபடியால் அவர் எப்படித் துறவி யாவார்? —*தம்மபதம்*, தம்மட்டவர்க்கம், 9

ஓ! தூதனே! உன்னுடைய சடைமுடியினால் என்ன பயன்? உன்னுடைய மான் தோலினால் என்ன பயன்? உன்னுடைய மனத்தில் ஆசை குடிபிடித்திருக்கிறது. உன்னுடைய உடம்பை மட்டும் சுத்தம் செய்வதனால் என்ன பயன்?
—*தம்மபதம்*, பிரமாணவர்க்கம், 12

28.9. கணைகொடிது யாழ்கோடு செவ்விதாங் கன்ன
வினைபடு பாலால் கொளல். (உஎகூ)

உரைப்பகுதி:

அ) *மணக்.*: செவ்விய கணை கொடுமையைச் செய்யும்; கோடிய யாழ் செவ்வையைச் செய்யும்; அதுபோல, யாவரையும் வடிவு கண்டறியாது அவரவர் செய்யும் வினையின் பகுதியாலே அறிந்து கொள்க என்றவாறு.

ஆ) *பரிதி* : எ—து அம்பு செவ்வையாயிருந்தும் கொலை விளைத்தது; யாழ் கோணியிருந்தும் இன்பம் விளைத்தது. அதுபோலே

தவத்தார், வேஷங்கண்டு கொள்ளவேண்டாம்; அவரவர் ஞான நெறியுறுதியை அறிந்துகொள்க என்றவாறு.

ஈ) *காளி*.: எ—து உலகத்துக் கணையினது [1] உருபு சாலச் செவ்விதாயினும், மற்று அதன் வினை சாலக்கொடிது. யாழினது உருபு சாலக் கோட்டமுடைத்தாயினும் மற்று அதன் வினைவழி சாலச் செவ்விது. அவ்விடத்தவ்விடத்து ஈண்டும் தன் குற்றந் தெரிந்த கூடா ஒழுக்கத்தையும் மற்ற தனினின்றும் தெரிந்துணரும் இடத்து அத்தன்மையாகிய வினைவிடுபகுதியால்[2] தெரிந்து கொள்க. மற்றுருபின் பகுதியால் கொள்ளற்க என்றவாறு.

உ) *பரிமேல்*.: அம்பு வடிவால் செவ்விதாயினும், செயலால் கொடிது; யாழ் கோட்டால்[3] வளைந்ததாயினும், செயலால் செவ்விது, அவ்வகையே தவஞ்செய்வோரையும் கொடியர் செவ்வியர் என்பது, வடிவால் கொள்ளாது அவர் செயல்பட்ட கூற்றானே அறிந்து கொள்க.

கணைக்குச் செயல் கொலை. யாழுக்குச்செயல் இசையால் இன்பம் பயத்தல். அவ்வகையே செயல் பாவமாயின் கொடியர் எனவும், அறமாயின் செவ்வியர் எனவும் கொள்க என்பதாம். இதனால் அவரை அறியுமாறு கூறப்பட்டது.

> *இராமா*.: கணைகொடிது—அம்பானதுவடிவினாலே செவ்விதாயிருந்தாலுஞ்செயலினாலேகொடுமையையுடையதாம், யாழ் கோடுசெவ்விது—வீணையானது வடிவினாலே கோணலாயிருந்தாலுஞ்செயலினாலே செப்பத்தையுடையதாம், ஆங்கன்ன வினைபடுபாலாற் செவ்வியர்கொடியரென்றறிந்து கொள்க, எ—று.
>
> அவர்செயல்பாவமாயிற் கொடியரெனவும், அறமாயிற் செவ்வியரெனவுங் கொள்கவென்பதாம். இதினாலேயவரை யறியுந்திறங்கூறப்பட்டது.

ஊ) *கவிராசர்*: அம்புசெவ்வையாய் இருந்தாலும் வெகு கொடுமையைச் செய்யும் யாழ் வளைந்திருந்தாலும் நல்ல இசையைக் கொடுக்கும்; அப்படிப்போல, தபசு பண்ணுகிறவர்களையும் வடிவினாலே நல்லவர்கள் பொல்லாதவர்கள் என்று எண்ணாமல், அவர் செய்கைகளினாலே நல்லார் பொல்லார் என்று அறியவேண்டும் என்பதாம்.

---

1 உருபு—வடிவு. 'உருபு என்றதனால் அப்பொருள் பயக்கும் பிழம்பு, வடிவு, பிண்டம் என்பனவும் கொள்க' என்னும் தொல். சொல்.,24 தெய்வச்சிலையார் உரை. இவை ஒரு பொருளனவாதலைக் குறிப்பதாலும் உணரலாம்.

2 வினைவிடுபகுதியால்—வினையினால் வெளிப்படுத்தப்பட்ட.

3 கோடு—யாழின் தண்டு.

ஏ) *பழைய 2*: அம்பு வடிவாற் செவ்விதாயினும், செயலாற் கொடிது; யாழ் வடிவாற் கோணலாயினும், செயலாற் செவ்விது; அவ்வகை போலத் தவவேடம் கொண்டு கொடிது செய்வாரையும், தவவேடம் கொடிதாகத் தவம் செய்வாரையும் செயலால் அறிந்துகொள்க.

மல்லர்: அம்பு செவ்வையாயிருந்தாலுங் கொடுமை உடைத்தது தானே; வீணை கோணலாயிருந்தாலும் இன்பம் உடைத்தது தானே; அப்படிப் போலவே அவனவனுக்கு உண்டான குணங்களுக் குத் தக்க மனுஷரை எண்ணிக்கொள்ள வேண்டியது, எ-று.

அம்பு பார்வைக்கு நல்ல ரூபமாயிருந்தாலும் கொடுமையான தொழிலைச் செய்கிறதினாலே கொடிது என்கிறது; வீணை பார்வைக்குக் கோணலாயிருந்தாலும் இன்பமான தொழிலைச் செய்கிறதினால் இனிது என்கிறது. அப்படிப்போல ஒருவன் ஞான வேஷம் எடுத்துக்கொண்டாலும் ஞானத்து ஏலாத காரியங்களைச் செய்தல் அஞ்ஞானி என்று எண்ணவேணும்; ஞானிவேஷமில்லா தவன் ஞானத்துக்கு ஏற்க நடந்தால் அவனை ஞானி என்று எண்ண வேணும் என்பது கருத்து.

கணை-அம்பு; கொடிது-கொடுமையுள்ளது; யாழ்-வீணை; கோடு-கோணல்; செவ்விது-அழகுள்ளது; ஆங்கு-அப்படி; அன்ன-உவமைச்சொல்; வினை-செயல்; படு-படும்; பால்-குணம்; கொளல்-எண்ணிக் கொள்ளுதல்.

28.10. மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்த தொழித்து விடின். (உ௮0)

உரைப்பகுதி:

அ) *மணக்.*: தவத்தினர்க்குத் தலையை மழித்தலும்[1] நீட்டலும்[2] வேண்டா; உலகத்தார் கடிந்தனவற்றைத் தாமும் கடிந்து விடுவாரா யின் என்றவாறு.

இது வேடத்தால் பயனில்லை; நல்லொழுக்கமே வேண்டும் என்றது.

ஆ) *பரிதி.*: எ—து முண்டிதமும் சடையும் வேண்டாம்; மூன்று வகை ஆசையை விடுவானாகில் என்றவாறு.

ஈ) *காளி.*: எ—து நெஞ்சினால் துறவறம் பேணக் கருதுவார் வெறுந்தலை முண்டித்தலும் சடைவளர்த்தலும் மற்று உம்மையால் தண்டு தரித்தலும் துவராடையுடுத்தலும் பிறவுமாகிய புறக்கோலம்

1 மழித்தல்—மொட்டையடித்தல்; முண்டிதம் என்பதும் இதுவே.
2 நீட்டல்—சடையல்லது முடிவளர்த்தல்;

புனைய வேண்டுவது இல்லை. உலகத்து உயர்ந்தோராகிய தமது உணர்வினாலும் தாங்கற்றுணர்ந்த நூலினாலும் இவை இவை தகா என்று ஒரீஇயவற்றை[3]த் தாமும் அவ்வாறு ஒழித்துவிடின் என்றவாறு.

இனி மற்றிவ்வாறன்றி முன்னம் துறவு பூண்டு ஒழுகுவானும் அங்ஙனம் ஒழுகுகின்றது மறந்து இடங்[4]கண்டுழி பிறன்பொருள் கவரக்கருதும் எனில், முன்புதான் ஒழுகிப் போந்த ஒழுக்கமும் கெட்டுப் பெரிதும் குற்றம் தங்குமாதலால் இதன் பின்னரே அதன் தகாமையை அறிவிக்கின்றது.

உ) *பரிமேல்.*: தவஞ்செய்வார்க்குத் தலைமயிரை மழித்தலுஞ் சடையாக்கலுமாகிய வேடமும் வேண்டா, உயர்ந்தோர் தவத்திற்கு ஆகாது என்று குற்றங்கூறிய ஒழுக்கத்தைக் கடிந்துவிடின்.

பறித்தலும்[5] மழித்தலுள் அடங்கும்; மழித்தல் என்பதே தலைமயிரை உணர்த்தலின், அது கூறாராயினார். இதனால் கூடாவொழுக்கம் இல்லாதார்க்கு வேடமும் வேண்டா என அவரது சிறப்புக் கூறப்பட்டது.

> *இராமா.*: மழித்தலும்— தவஞ்செய்வோர்க்குத் தலைமயிரைச் சிரைத்தலும், நீட்டலும். அதனைச்சிரையாமலே சடையாக்கி நீளச்செய்தலும் வேண்டா—ஆகிய வேடங்கள்வேண்டாதனவாம், உலகம்பழித்தது—உயர்ந்தோர் தவத்திற்கு ஆகாதென்று குற்றங்கூறியநடையை, ஒழித்துவிடின்— நீக்கிவிடுவராயின், எ—று.
>
> மழித்தல், தலைமயிரை மொட்டையடித்தல். இதினாலே தவவிரோதமான செயல்களை விட்டுவிட்டவர்க்குவேடம் வேண்டாவென்று அவர் சிறப்புக் கூறப்பட்டது.

ஊ) *கவிராசர்*: தபசு பண்ணுகிறவர்களுக்குத் தலைமயிரைச் சிரைத்து மொட்டையாக்குகிறதும் சடையாக்குகிறதும் செய்ய வேண்டாம் என்பதாம். பெரியோர்கள் தபசுக்கு ஆகாதென்று ஜிநாகமத்துச்[6] சொன்னவைகளைத் தாங்களும் கடிந்து விடுகிறதே செய்ய வேணும் (எ—று.)

ஏ) *பழைய*2: 'விடல்' பாடம். மொண்ணைத் தலையாகவும் வேண்டா; சடைத்தலையாகவும் வேண்டா. உயர்ந்தோர் தவத்திற்கு ஆகாது என்று குற்றம் கூறிய ஒழுக்கத்தை ஒழித்துவிடல்.

---

3 ஒரீஇயற்றை—நீக்கியவற்றை 4 இடம்—காலமும் இடனுமாகிய வாய்ப்புக்கள்;

5 பறித்தல்—தலைமயிரை ஒன்றொன்றாகப் பிடுங்கிக் களைதல் இது சமண மரபு.

6 ஜிநாகமம்—சைனர்களின் நூல்.

மல்லர்: சடையை வளர்க்கவுந் தலை மொட்டையாக்கவுந் தேவையில்லை. பெரியவர்கள் தவசுக்கு ஆகாத காரியங்களைச் செய்யாது போனால், எ -று.

குற்றங்களை நீக்கி ஞானத்துக்கு ஏற்க நடவாதே போனால் சடை வளர்க்கிறதிலேயுந் தலைமொட்டையாக்கிறதினாலேயும் இது முதலான தவவேஷங்களிலே சாரமில்லை என்பது கருத்து.

மழித்தல்—மொட்டையாக்குதல், நீட்டல்—சடைநீட்டல், உலகம்—லோகம்; பழித்தல்—குறைசொல்லுதல்; ஒழித்தல்—விடுதல்; விடின்—விட்டால்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'உலகம் பழித்தது' என்பதற்கு உயர்ந்தோராகிய தமதுணர்வானும், நூலறிவானும் இவை இவை தகா என ஒதுக்கியன என்னும் *காளிங்கர்* விளக்கம் சிறந்தது. ஏனைய பகுதிகள் எல்லாருக்கும் ஒத்தவை.

ஒ) ஒப்புமைப்பகுதி:

முற்றும்:

வீடுவேண்டிவி ழுச்சடை நீட்டல் மெய்ம்
முடு கூறையின் முடுதல் வெண்டலை
ஒடு கோடல் உடுத்தல்என்று இன்னவை
பீடி லாப்பிற விக்கு வித்து என்பவே *சீவக.,1427*

நீட்டிய சடையமாகி நீர்மூழ்கி நிலத்திற் சேர்ந்து
வாட்டிய வுடம்பின் யாங்கள் வரகதி விளைத்து மென்னின்
காட்டிடைக் கரடி போகிக் கயமுழ்கிக் காட்டி னின்று
வீட்டினை விளைக்க வேண்டும் வெளிற்றுரை விடுமின்—என்றான்.
—*சீவக.,1431*

பெரியவாட் டடங்கண் செவ்வாய்ப் பிறர்மனை பிழைக்கு மாந்தர்
மரீஇயவாய்ப் புறஞ்சொற் கூர்முள் மத்திகைப் புடையும் அன்றி
ஒருவர்வா யுமிழப் பட்டதம்பலம் ஒருவர் வாய்க் கொண்டு
அரியவை செய்ப வையத் தாண்பிறந் தார்க ளன்றே —*சீவக.,2821*

போர்த்தல்உடை நீக்குதல் பொடித்துகள் மெய்பூசல்
கூர்த்தபனி யாற்றுதல் குளித்தழல்ணிற்றல்
சார்த்தரிடு பிச்சையர் சடைத்தலைய ராதல்
வார்த்தையி வைசெய்தவ மடிந்தொழுக லென்றான். —*குண்டல.,20*

.... முண்டித்து நீட்டிய முறையால்
வீடு பெற்றவர்... ... ... —*கம்பராமா.,6346*

துறவு கொண்ட பிக்கு நன்னெறியில் நடக்காமல் பொய்யாத்துறவு கொண்டு தலையை மழித்துக் கொண்டதாலேயே துறவியாக மாட்டார். ஆசை அவர் களை விடாதபடியால் அவர் எப்படித் துறவியாவார். —*தம்மபதம்*, தம்மட்ட வர்க்கம்.,9.

ஓ! தூதனே! உன்னுடைய சடைமுடியினால் என்ன பயன்? உன்னுடையமான் தோலினால் என்னபயன்? உன்னுடையமனத்தில் ஆசை சூடு பிடித்திருக்கிறது உன்னுடைய உடம்பை மட்டும் சுத்தம் செய்வதனால் என்னபயன் — *தம்ம பதம்*, பிரமாண வர்க்கம்.,12.

28. கூடாவொழுக்கம்

	வஞ்ச	வானுயர்	வலியில்	தவமறைந்து	பற்றற்றேம்	நெஞ்சில்	புறங்குன்றி	மனத்தது	கணைகொடிது	மழித்தலும்
மணக்.	6	5	3	4	8	7	2	1	10	9
பரிதி.	1	3	5	4	6	2	7	9	8	10
பரிப்.	—	—	—	—	—	—	—	—	—	—
காளி.	1	6	4	2	8	5	3	9	7	10
பரிமேல்.	1	2	3	4	5	6	7	8	9	10

28—வது அதிகாரம் முற்றிற்று.

29. கள்ளாமை

அ) *மணக்.*: கள்ளாமையாவது யாதொரு பொருளையும் களவிற் கொள்ளாராதல்.

ஆ) *பரிதி.*: கள்ளாமையாவது கபட புத்தியை விடுதல் என்றவாறு.

இ) *பரிப்.*: மேல் இன்பங் காரணமாக மறைந்தொழுகாமை கூறினார். இது பொருள் காரணமாக மறைந்து ஒழுகலான் அதன் பிற் கூறப்பட்டது. இது முதலாகக் கொல்லாமை ஈறாகக் கூறுகின்ற அறங்களெல்லாம் இல்லறத்தின் நின்றார்க்கும் உரியவாகக் கொள்ளப்படும்.

உ) *பரிமேல்.*: அஃதாவது பிறருடைமையாயிருப்பது யாதொரு பொருளையும் அவரை வஞ்சித்துக் கொள்ளக்கருதாமை. கருதுதலும் செய்தலோடு ஒத்தலின், கள்ளாமை என்றார். இல்வாழ்வார்க்காயின் தமரோடு விளையாட்டுவகையால் அவரை வஞ்சித்துக் கோடற்கு இயைந்த பொருள்களை அங்ஙனங் கொள்ளினும் அமையும். துறந் தார்க்காயின் அதனைக் கருதியவழியும் பெரியதோர் இழுக்காம் ஆகலின், இது துறவறமாயிற்று.[1] புறத்துப் போகாது மங்கி ஒரு தலைப்பட்டு உயிரையே நோக்கற்பாலதாய அவர்மனம்[2] அஃதொழிந்து புறத்தே போந்து பஃறலைப்பட்டு[3] உடம்பின் பொருட்டுப் பொருளை நோக்குதலேயன்றி, அது தன்னையும் வஞ்சித்துக் கொள்ளக் கருதுதல் அவர்க்குப் பெரியதோரிழுக்காதல் அறிக. இவ்வாறு வாய்மை முதல் கொல்லாமையீறாய நான்கு அதிகாரத்திற்கும் ஒக்கும். பொருள்பற்றி நிகழுங் குற்றத்தை விலக்கு

---

1. களவு என்னும் சொற்கேட்டு களவு தீது என்பது பொருந்தாது. களவும் நன்றாதலை அன்பின் ஐந்திணை என்னும் இறையனார் அகப்பொருள் உரை காண்க.
2. இந்திரியங்கள் வாயிலாகப்புலன்களிற் செல்லாமல்.
3. பஃறலைப்பட்டு—பல்தலைப்பட்டு—பலவிடங்களிற் சிதறி.

கின்றதாகலின், இது காமம் பற்றி நிகழ்வதாய கூடாஒழுக்கத்தின் பின் வைக்கப்பட்டது.

இராமா.: அதாவது, பிறருடைமையாயிருக்கின்ற யாதொரு பொருளையும் அவரை வஞ்சித்துக்கொள்ளநினையாமை. இல்லறத்தார்க்காயின் இதுவிளையாட்டின் பொருட்டுத் தமது சுற்றத்தோடு ஒரோரிடத்தமையுமாயினுந் துறந்தோர்க்குப்பிறர் பொருளைநினைத்தலும் பெருங்குற்றமாதலாலிது துறவறமாயிற்று. புறத்திலே செல்லா மலடங்கியுயிரையே நோக்க வேண்டிய அவர்மனம்புறஞ்செல்லுதலேகுற்றமாம். அன்றியும் பிறர்பொருளையும் வஞ்சித்துக்கொளக்கருதுமாயினதுபெருங் குற்றமெனக் காண்க. பொருளைப்பற்றி வருங்குற்றம்விலக்குதலாகலின்இது காமம் பற்றிவருங் கூடாவொழுக்கத்தின்பின் வைக்கப்பட்டது.

ஊ) கவிராசர்.: அஃதாவது பிறருடைமையாய் இருப்பது யாதொரு பொருளையும் அவரை வஞ்சித்துக் கொள்ளக் கருதாமை. நினைத்தலும் செய்தலோடு ஒக்கும். இல்வாழ்கிற சம்சாரியானாலும், சுற்றத்தார்களுடனே விளையாட்டிற்காகவும் ஒரு பொருளைத் திருடி வைக்கிறதும் பாபத்திற்குக் காரணமாதலால், அதுவும் செய்யல் ஆகாது. தபசியான பேர்களுக்குக் களவை நினைத்தாலும் பாபம் வரும். ஆதலால் களவு ஒருத்தருக்கும் ஆகாது என்றவாறு.

ஏ) பழைய 2.: அஃதாவது பிறர் பொருள் யாதொன்றினையும் வஞ்சனை செய்து கொள்ளக் கருதாமை.

மல்லர்: அஃதாவது பிறத்தியார் பொருளை வஞ்சினையாக எடுத்துக் கொள்ளக் கருதாமை.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

ஆசிரியர் வருங்குறளில் 'கள்ளாமைகாக்க தன்நெஞ்சு', 'உள்ளத்தால் உள்ளலும் தீதே' என்பராதலின், பரிமேலழகர் 'கள்ளாமை— கள்ளக் கருதாமை' எனப் பொருள்கண்டு 'நினைத்தலும் செய்தலோடொக்கும்; ஆதலின், கள்ளாமை' என்றார் என ஏதுவுங்காட்டுவர். கா.சு., சொ.த. போன்றாரும் இங்ஙனமே எழுதினர்.

மணக்குடவர் பரிதியார் போன்றார் 'களவிற் கொள்ளாராதல்', 'கபட புத்தியை விடுதல்' எனவே பொருள் கண்டனர். பரிமேலழகர் இல்வாழ்வார்க்காயின் விளையாட்டுவகையான் வஞ்சித்துக் கோடலுமாம் என்பர். பரிப்பெருமாள் 'இதுமுதல் கொல்லாமையீறாகக் கூறுகின்ற அறங்கள் எல்லாம் இல்லறத்தினின்றார்க்கும்

உரியவாகும், என்பர். சொ.த 'அரசொடுபட்டு 'நிரைகோடலும் பிறவும் மறநிலையறமாய் கடியப்படாதாகலின் இதுதுறவுக்கே யுரித்து' என்பர். 'இல்லறத்தான் உதவி கிடைக்காமற் போனால் பசிக்கொடுமையால் திருடத்தோன்றும் அப்போதும் இன்றியமை யாமை கருதியும் கள்ளக் கருதக்கூடாது' என்பர் இராமலிங்கனார். 'கள்ளக்கருதாமை' என்றஉரையும், அதற்குப் பரிமேலழகர் கூறும் காரணங்களும் உலகியலை ஒத்தனவாதலான் ஏற்புடையதாம்.

வ.உ.சி., மணக்குடவர், பரிதியார் இவர்களை ஒத்துக் 'கள்ளாமை—திருடாமை' எனஉரை காண்பர், 'இவ்வதிகாரம் இல்லற வியலுக்கேஉரியது' என்பர்.

29.1. எள்ளாமை வேண்டுவா னென்பான் எனைத் தொன்றுங்
கள்ளாமை காக்கதன் நெஞ்சு. (உ அக)

உரைப்பகுதி:

அ) மணக். :பிறரால் இகழப்படாமையை வேண்டுவான் இவன் என்று சொல்லப்படும் அவன், யாதொரு பொருளையும் களவில் கொள்ளாமல் தன் நெஞ்சைக் காக்க என்றவாறு.
இது களவு ஆகாது என்றது.

ஆ) பரிதி. : எ—து: பரசமயத்தார்[1] தந்த வசை இகழாமல் வேண்டுமாகில் கபடுள்ளது விடுக என்றவாறு.

ஈ) காளி.: எ - து அறநூலாலும் சான்றோராலும் எஞ்ஞான்றும் இகழாமை வேண்டுவான் என்பான் ஒருவன் உலகத்து யாதானும் ஒன்றினையும் தனது நெஞ்சமானது கள்ளாத வண்ணம் காக்க; எனவே அதனை யாண்டும் செல்லாமை மீட்க என்றே பொருள் என்றவாறு.

எள்ளாமை என்பது இகழாமை.

உ) பரிமேல். : வீட்டினை இகழாது விரும்புவான் இவன் என்று தவத்தோரான் நன்குமதிக்கப்படுவான் யாதொரு பொருளையும் பிறரை வஞ்சித்துக் கொள்ளக் கருதாவகை தன்னெஞ்சினைக் காக்க.

எள்ளாது என்னும் எதிர்மறை வினையெச்சம் எள்ளாமை எனத் திரிந்து நின்றது. வீட்டினை இகழ்தலாவது காட்சியே அளவை யாவது என்றும், நிலம் நீர் தீ வளி எனப் பூதம் நான்கே என்றும்,

1 பரசமயத்தார் — புறச்சமயத்தார்;

அவற்றது புணர்ச்சி விசேடத்தால் தோன்றிப் பிரிவான் மாய்வதாய உடம்பின் கண்ணே அறிவு, மதுவின்கண் களிப்புப்[2] போல வெளிப் பட்டழியும் என்றும், இறந்தவுயிர்பின் பிறவாது என்றும், இன்பமும் பொருளும் ஒருவனால் செய்யப்படுவன என்றும், சொல்லும் உலோகாயத[3] முதலிய மயக்க நூல்[4]களைத் தெளிந்து, அவற்றிற்கு ஏற்ப ஒழுகுதல், ஞானத்திற்கு ஏதுவாய மெய்ந்நூற் பொருளையேனும் ஆசிரியனை வழிபட்டன்றி அவனை வஞ்சித்துக்கொள்ளின், அதுவும் களவாம் ஆகலின், 'எனைத்தொன்றும்' என்றார். நெஞ்சு கள்ளாமல் காக்க எனவே, துறந்தார்க்கு விலக்கப்பட்ட கள்ளுதல் கள்ளக் கருதுதல் என்பது பெற்றாம்.

இராமா.: எள்ளாமை வேண்டுவானென்பான் - (முத்தியை இகழாமலே விரும்பப்பட்டவனென்று தவத்தோரால் மதிக்கப் படுபவன், எனைத்தொன்றும்-- யாதொரு பொருளையும், கள்ளாமைகாக்கதன்னெஞ்சு - பிறரைவஞ்சித்துக் கொள்ள நினை யாவகைதன் மனத்தைக்காக்க வேண்டும். எ - று.

முத்தியென்பது வருவிக்கப்பட்டது, இகழாமல் முத்தியை விரும் புதலாவது, உலகாயதமுதலிய மயக்கநூல்களைக் கற்றுமயங் காமல் முத்தியையேவிரும்புதலாம். ஞான நூற்பொருளையா யினும் ஆசிரியனை வஞ்சித்துக் கொளின் அதுவுங்களவாதலா லெனைத் தொன்றுமென்றார். கள்ளுதல் திருடுதல்.

ஊ) *கவிராசர்*: மோட்சவீட்டை இகழாமல் வேண்டுவான், இவன் என்று தவத்தோரால் நன்றாய் எண்ணப்படுபவன் யாதொரு பொரு ளையும் பிறரை வஞ்சித்துக்கொள்ளக்காரணம், காரியம் என்றிரண்டு விதக் களவையும் நினையாமல் இருக்கிறவன் (எ—று).

ஏ) *பழைய 2*: தன்னை ஒருவராலும் இகழ்ச்சிசெய்யாமல் இருக்க விரும்புவான். யாதொருபொருளையும் பிறரை வஞ்சித்துக் கொள்ளக் கருதாவகை தன்நெஞ்சினைக் காக்க.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'எள்ளாமை வேண்டுவான்

'பிறரால் இகழப்படாமையை வேண்டுவான், *மணக்*.; 'பர சமயத்தார்தந்தவசை இகழாமல்வேண்டுமாகில்' *பரிதி*.; 'அறநூலா னும் சான்றோராலும் எஞ்ஞான்றும் இகழாமையை வேண்டுவான்'

2. களிப்பு — மயக்கம்.
3. உலோகாயதம்மெய்யுணர்வு பெறாமல் கண்டு கேட்டுற்றறியும் இன்பங்களையே வீடு என்று கருதுபவர்கள்.
4. தேக ஆன்மவாதி இந்திரிய ஆன்மவாதி முதலியோர் கொள்கைகள்.

பரிமேல்.; 'இகழ்ச்சி வராமல் இருக்க வேண்டுபவன்' இராமலிங்கனார். பரிமேலழகர் 'ஒருவரே வீட்டினை இகழாது விரும்புவான்' என உரை எழுதி எள்ளாமை பண்பாதலைக் கருதி, 'எள்ளாது என்ற எதிர் மறைவினை எச்சம் எள்ளாமை எனத் திரிந்தது' என்று தம் முரைக்கு இலக்கண அரண்கோலினர்.

எள்ளாமை—பிறர் இகழாமையை என்பதே நேரியபொருள். அஃதும் பிறன்பழிப்பதின்றாயின் நன்று என்றதற்கு ஏனைத் துறவறமோ பிறனாற் பழிக்கப் படுவதின்றாயின் நன்று என உரை கண்ட பரிமேலழகர், ஈண்டு எள்ளாமை—வீட்டினை இகழாது, வேண்டுவான்—வீடுபெற விரும்புவான் எனச் சில சொல் வருவித்து எழுதித் திசை திருப்பியது இயல்துறவாதல் கருதியோ என எண்ணத்தூண்டுகிறது.

வ.உ.சி. 'கள்ளாமை'யை இல்லறத்தார்க்குரிய நெறியாகக் கொண்டமையின் 'எள்ளாமை' என்பதற்குப் 'பிறர் இகழாது இருத்தல்' எனப்பொதுமையிற் கூறினார். பிறரனைவரும் தாம்கொண்ட இயல்பாகுபாட்டிற்கேற்ப 'தவத்தோர்' எனப் பொருள் கண்டனர்.

ஏதோ காரணம்பற்றித் தம்பொருளையும் போகத்தையும் வெறுத்து வந்தார்க்குப் பின்போகம் பழைய வாசனையாற் பற்ற அதற்கு இன்றியமையாத பொருளைத்தேட முடியாமையால் கள்ளக் கருத்து உண்டாகும். அக்கருத்து 'உலகம் இகழும்' என்று எண்ண இல்லையாம் ஆதலின் நெஞ்சைக் காக்க என்றார்.

ஒ) ஒப்புமைப் பகுதி:

கள்ளாமை காக்க:

களவாயின யாவையுங் கள்ளன்மின் —வளையா., 17

முற்றும்:

மனமொருத்தன் வசப்படு மேலவன்
பினைவருத்தும் பிறப்பை யடைந்திடான்
மனமொருத்தன் வசப் படாதோடு
நனிபிறப்பிடை நாளுஞ் சுழல்வனே
—பிரபுலிங்கலீலை, சாதகாங்கவிதி., 10

ஓ) மேற்கோள்பகுதி:

மயிலை.: 'தன்னை எள்ளாமை வேண்டுவான் என்பான்...கள்ளாமை காக்கதன்நெஞ்சு' என உருபுச் சொற்கள் எஞ்சவந்தனவும் வினையும் வினைக் குறிப்புமாய் அடங்கலின் வினையெச்சமேயாம் என்பதற்கு மேற்கோள். (நன்.359)

29.2. உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக் கள்ளத்தால் கள்வேம் எனல். (உஅஉ)

உரைப் பகுதி:

அ) மணக்.: பிறன் பொருளை நெஞ்சினால் நினைத்தலும் தீதாம்; ஆதலால், அதனை மறைவினாலே கள்வேம் என்று முயலாது ஒழிக என்றவாறு.

இது களவு தீது என்றது.

ஆ) *பரிதி.*: 'கொள்வோம்' பாடம். எ-து. தவம் செய்வார்க்குப் பத்தர்கள்[1] இரங்கிக் கொடுக்கும் பொருள் அன்றியிலே, ஒரு திருப்பணிபோலே காட்டிவாங்குதல் கனவிலும் நினைப்பதல்ல என்றவாறு.

ஈ) *காளி.*: எ-து துறவோனாகிய ஒருவன் பிறனொருவன் வழங்கிய பொருளையும் விரும்பாமல், நெஞ்சினால் நினைத்தலும் தீதே; பிறன் பொருளைக் கள்ளத்தாற் கள்வோம் என்று கருதுதல் என்றவாறு

உ) *பரிமேல்.*: 'கள்ளத்தாற் கொள்வேம் எனல்'-பாடம். குற்றங்களைத் தந்நெஞ்சால் கருதுதலும் துறந்தார்க்குப் பாவம்; ஆதலால் பிறனொருவன் பொருளை அவன் அறியா வகையால் வஞ்சித்துக் கொள்வேம் என்று கருதற்க.

உள்ளத்தால் என வேண்டாது கூறினார். அவர் உள்ளம் ஏனையோர் உள்ளம் போலாது, சிறப்புடைத்து என்பது முடித்தற்கு, உள்ளலும் என்பது இழிவு சிறப்பும்மை. அவ்விகுதி வியங்கோளெதிர் மறைக்கண் வந்தது.[2] இவை இரண்டுபாட்டானும் இந்நடைக்குக்[3] களவாவது இது என்பதூஉம், அது[4] கடியப்படுவது என்பதூஉம் கூறப்பட்டது.

> *இராமா.*: உள்ளத்தாலுள்ளலுந்தீதேபிறன்பொருளை-துறந்தோர்பிறன்பொருளைமனத்திலேநினைப்பதுந்தீதாம். (ஆதலால்) கள்ளத்தாற் கள்வேமெனல்-வஞ்சனையினாலே திருடுவோமென்றுவாயினாலுஞ்சொல்லாதொழிக,எ-று.
>
> தவஞ்செய்வோர்தம்முயிரை நாடாது உலகப்பொருளை நினைப்பது குற்றமதன்மேலும்நினைத்துடன்பட்டு வாயாற்

1 பத்தர்கள்—அன்பர்கள்; 2. அவ்விகுதி வியங்கோல் எதிர்மறைக்கண் வந்தது 196-ஆம் குறளில் தொகுப்புரையில் காண்க.
3 இந்நடைக்கு— இத்துறவற ஒழுக்கத்திற்கு.
4 அது—பிறன் பொருளைக் களவு செய்ய நினைத்தல்.

சொல்லுதல் பெருங்குற்ற மெனக்கிடத்தலால் அவ்வாறு சொல்லாதொழிகவென்றார். நினைத்தல் குற்றமுஞ்சொல்லுதல் பெருங்குற்றமுமாய் முடிதலிற் செயல் சொல்லாதொழிந்தார். இதனிற்பொருளென்பது இருமருங்குஞ்சென்று பொருள்படுதலால் தாப்பிசைபொருள் கோள். இதன்கருத்துவிளங்கிற்று.

உ) *கவிராசர்*: துறந்தவர்கள் பொல்லாத காரியங்களை மனத்திலே நினைத்தலும் பாவம்; ஆகையால், பிறர்பொருளை அவர்களறியாமல் வஞ்சனை பண்ணி எடுத்துக் கொள்ள வேணுமென்று நினையாமல் இருக்கவேணும், (எ-று).

ஏ) *பழைய 2*: மனத்தினாலே நினைத்தலும் பொல்லாது; பிறனொருவன் பொருளைக் களவினாலே களவுசெய்து கொள்வேம் என்று கருதற்க.

மல்லர்.: களவை மனசிலே நினைத்தலும் பாவமாயிருக்கிறதினால் பிறத்தியார் பொருளை வஞ்சனையாக எடுத்துக்கொள்ளுவேன் என்கிற நினைவை முதலாய் நினைக்கவேண்டாம், எ-று.

துறந்தவனுக்கு களவாமல் இருக்கிறதும் தனது களவின் நினைவு முதலாய் ஆகாது என்பது கருத்து.

உள்ளம்—மனம்; தீது—குற்றம்; பிறன்—பிறத்தியான்; கள்ளம்-வஞ்சனை; கள்வேம்—கள்ளுவோம்; கள்ளல்—களவு.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக்குடவர், இக்குறட்பாவில் 'பிறன்பொருளை' இடைநிலை தீவகமாகக் கருதி 'உள்ளத்தால் உள்ளலும் தீதே;(அதனை) கள்ளத்தாற் கள்வேம் எனல்'; என இருதொடராகக் கொண்டு பொருள் காண்பர். *பரிதியார்* 'கள்ளத்தால்— ஒருதிருப்பணி போலே காட்டி' எனப்பொருள் கொள்வர். இவர்கருத்து 'துறவியைத் தாங்குகிறவன் மனமுவந்து வலியகொடுக்கும் பொருளையன்றி, கோயில்குளம் அன்னசத்திரம் அறச்சாலை கல்விநிலையம் என்றுபணிகள் பலவற்றைக் காட்டி வாங்குதலைக் கனவில் நினைப்பதுகூடத்தவறுஎன்பது.

காளிங்கர் 'பிறன் ஒருவன் கொடுக்கும் பொருளை விரும்பாமல், கள்ளத்தாற் கொள்ள நினைத்தலும் தீது' என்பர். இவர் கருத்து 'துறவிதானீட்டுதலும் ஈட்டிய பொருளையும் பழம்பொருளையும் நுகர்தல்கூடாது. துறந்தார்க்குத் துணையான இல்லறத்தான் அவ்வப்போது கொடுக்கவாங்கி உண்டலே வேண்டும்' என்பதாம்.

பரிமேலழகர், 'துறவிக்குக் குற்றங்களை மனத்தால் நினைத்தலும் பாவம்; ஆதலால் பிறன்பொருளைத் திருடற்க' என்பர். *கா.சு* வும் அங்ஙனமே.

சொ.த. 'துறந்தார் உள்ளம் ஏனையோர் உள்ளம் போலாது சிறப்புடைத்து' என்ற *பரிமேலழகர்* உரைக்குறிப்புக்கு, 'துறவறம் உள்ளத்தையே பற்றி நிகழ்வதாகலின் அதன்சிறப்புணர்த்த உள்ளத்தால் உள்ளலும்தீதே' என்றார் எனநயந்தருவர்.

'கள்வேம் எனல்—வஞ்சித்துக் கொள்வோம் என்றுகருதற்களன'; 'எனல்'—என்னற்க, இதைஎதிர்மறை வியங்கோள் வினைமுற்றாகக் கொண்டார்கள் *பரிமேல்., மணக்., பரிதி.,* ஆகியோர்.

காளிங்கர், 'பிறன்பொருளைக் கள்ளத்தாற் கள்வேம் எனலை' —'உள்ளத்தால் உள்ளலும் தீதே' எனஒரே தொடராகக் கொண்டுரைப்பர். இவருரையின் வண்ணம் 'எனல்' தொழிற்பெயர். ஏனையோர் இருதொடராகக் கொண்டு, 'எனல்' என்பதை 'எதிர்மறை வியங்கோள்' எனக்கொள்வர்.

குழந்தை 'எனல்— எதிர்மறை வியங்கோள்வினைமுற்று' என்பர்

இருதொடராக்கினும் ஒரேதொடராக்கினும் குறட்கருத்துமாறாமையான் இருதொடராக்கி இலக்கண உதவியை நாடுவதினும் *காளிங்கர்* போல ஒரேதொடராகக் கோடல் எளியது. ஆனால் பிறன் தானாகக் கொடுப்பதை விரும்பாமல் (*காளிங்கர்*) 'திருப்பணியைக் காட்டிக் கள்வேம் எனல்' என்பன வருவித்துரைக்கப் பட்டனவே, இயைபுடைத்தெனின் கொள்க.

'கள்வேம் எனல்' *தருமர்* பாடம்; 'கொள்வேம் எனல்' *நச்சர்* பாடம்; 'கொள்வோம்' *தாமத்தர்* பாடம் என்பர் *வ.உ.சி.*; இவர் பாடம் 'கொள்வேம் என' என்பது.

ஒ) ஒப்புமைப்பகுதி:

முற்றும்:

மனத்தினாலும் பிறர்பொருளை வௌவவெனவே சிறிதேனும்
நினைத்திடாமை கள்ளாமை — *இலிங்க*

ஓ) மேற்கோள் பகுதி:

காரிரத்ன.: பாவிக அலங்காரத்திற்கு மேற்கோள். (மாற.251).

29.3. களவினால் ஆகிய ஆக்கம் அளவிறந் தாவது போலக் கெடும். (உ அரு)

உரைப்பகுதி:

அ) மணக்.: களவிற்கொண்ட பொருளால் ஆகிய ஆக்கம், மென்மேலும் மிருவது போலக்கெடும் என்றவாறு.

இது பொருள் நிலையாது என்றது.

ஆ) *பரிதி.*: எ—து கபடத்தினால்[1] பெற்ற செல்வம் ஆகிறாப் போலே அழிந்துபோம் என்றவாறு.

இ) *பரிப்.*: அளவிறப்பு—மிகுதி.

ஈ) *காளி.*: எ—து தமது உரவினான்[2] ஆகிய ஆக்கமன்றி பிறர் பொருளைக் களவினால் விரும்பிய ஆக்கம் உளதாகில் 'அப்பொழுதைக்கு ஆவதுபோலக் காட்டி, பின்பு விளையும் காலத்து உயிர்க்கேடும் பொருட்கேடும், உறுப்புக்கேடும் என இவை முதலான கேடும் தந்து பின்பு நரகத்தில் தள்ளும் என்றவாறு.

உ) *பரிமேல்.*: களவினால் உளதாகிய பொருள் வளர்வது போலத் தோன்றித் தன் எல்லையைக் கடந்துகெடும்.

ஆக்கத்திற்கு ஏதுவாகலின் ஆக்கம்[3] எனப்பட்டது, எல்லையைக் கடந்து கெடுதலாவது தான் போங்கால் பாவத்தையும் பழியையும் நிறுத்திச்செய்த அறத்தையும் உடன்கொண்டுபோதல். அளவறிந்து என்று பாடம் ஓதி, அவர் பயன்கொள்ளும் அளவு அறிந்து அவ்வளவிற்கு உதவாது கெடும் என்று உரைப்பாரும் உளர்.

> *இராமா.*: களவினாலாகியவாக்கம் — களவுசெய்தலாலாகிய செல்வமானது, ஆவதுபோல—வளர்வதுபோலத்தோன்றி, அளவிறந்துகெடும்—தானின்றவெல்லையைக்கடந்துகெடும்,எ—று. எல்லையைக்கடந்துகெடுதலாவது, தான்போம்போது பாவத்தையும் பழியையும்வைத்து முன்செய்ததருமத்தையுமுடன் கொண்டுபோவதாம்.

ஊ) *கவிராசர்*: களவினால் வருகிறபொருள் விருத்தி ஆகிறாப் போல இருந்து வகையறக் கெட்டுப்போம்; (எ—று).

எ) *பழைய*:2 களவினால் உண்டாகிய செல்வம் வளர்வது போலத் தோன்றி யாதுமில்லை என்னக்கெடும்.

மல்லர்: களவாண்டு ஆகிற பிரயோசனம் அதனுடைய எல்லை கடந்தால் போலும் அழிவு கொண்டுவிடும், எ—று.

வைக்கோலிலே பற்றியிருக்கிற நெருப்பு வைக்கோல் அளவிலே நில்லாமல் அதனுடைய எல்லை கடந்து கிட்டயிருக்கிற எல்லாத்தையும் சுடுமே அப்படிப்போல களவினால் வந்தபொருள் அழிந்து போவதும் அல்லாமல் அழிகிறபோது தன்னுடைய அளவிலே நில்லாமல் கடந்து களவில் அல்லாமல் சம்பாதித்த பொருளுக்கும் அழிவு கொண்டுவிடும் என்பது ஒரு கருத்து.

களவினால் வந்த பிரயோசனம் தான் கொண்டிருக்கிற பாவம் என்கிறதே அல்லாமல் தனக்குப் பிரத்தியோகமாய் இருக்கிற

---

1 கபடம்—வஞ்சனை; 2 உரவு—வலிமை; ஆக்கம்—காரியவாகுபெயர்.

புண்ணியங்களுக்குக் கூட அழிவு கொண்டுவிடும் என்பது வேறு கருத்து.

ஆக்கம்—இலாபம்; இறத்தல்—மிகுத்தல்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக்., பரிதி., போன்றோர் இக்குறள் சொல்லாட்சி கிடந்த முறையிலேயே 'அளவிறந்து ஆவதுபோலக்கெடும்' என்றனர். *பரிமேலழகர், காளிங்கர், கா.சு.. சொ.த.* போன்றோர் 'அளவிறந்து' என்ற எச்சத்தைக் 'கெடும்' என்பதோடு கூட்டி, 'களவினான் ஆகிய ஆக்கம் ஆவதுபோல அளவிறந்துகெடும்' என்றனர். முன்னவர்கள் கருத்து 'திருட்டுச்செல்வம் எல்லைகடந்து வளர்வது போலத் தோன்றினால் அழிந்துபோம்' என்பதுதான். பின்னவர்கள் கருத்து 'ஆவதைக் காட்டிலும் அழிவது மிகுதியாகும்' என்பது.

காளிங்கர், 'விளையுங்காலத்து உயிர்க்கேடு, பொருட்கேடு, உறுப்புக்கேடு முதலான கேடுகள்' எனவிளக்கமுந்தருவர். *பரிமேலழகர்* 'பழியையும் பாவத்தையும் உளவாக்கி நரகத்திலும் தள்ளும்' என்பர். *கவிராசரும், பழைய உரை2ம்,* 'களவுசெய்த பாவத்தால் கேடுவரும்' என்பர். *மு.வ.* 'புதுவெள்ளம் வந்து பழைய வெள்ளத்தையும் அடித்துப் போனதுபோல இயல்பாக இருக்க வேண்டிய அளவையுங் கடந்து கெடும்' என்பர். *மு.கோ.* 'செல்வம் ஆவதுபோல இவன்கெடும்' என்பர் இதற்கேற்ற சொல்லமைதி குறளில்உண்டேற் கொள்ளலாம்.

சொ.த. 'அளவிறந்து' என்பதற்கு 'இல்லறத்தார்க்கு நன்மை விளைப்பதாக இருக்கும் செல்வம், துறவிக்கு தீமைவிளைக்கும்' என ஏனையோர் காணாத ஒருநயம் உரைப்பர். இது இயலை ஒட்டிக் கொணர்ந்த கருத்தாகும்.

இராமலிங்கனார் 'திருட்டுத் தொழிலால் வரக்கூடிய செல்வம்' எனஉரையும், பொழிப்புங் கூறி, விளக்கத்தில் 'களவாட எண்ணும் எண்ணத்தால் ஆனசெல்வம். அதுமுழுதும் கைக்குவந்த செல்வம் அல்ல. ஒன்றிரண்டு இடங்களில் திருடிய பழக்கத்தால் மேன்மேலும் திரட்டக்கூடிய அளவில் அளவிறந்து காணப்படும் செல்வம்' என எழுதுவர். இது 'கள்ளாமை' என்பதற்குத் 'திருடக் கருதாமை' என எழுதிய உரைகளைப் பின்பற்றி எழுதியதின் விளைவாகும்.

மேலும் 'அளவிறந்து கெடுதற்கு, இழந்தவர் தேடிப்பிடித்தால் பழைய செல்வத்தையும் பலபேரிடம் திருடிய செல்வத்தையும் அரசு கவரும்' என்றநயம் உலகியல் அனுபவத்தை ஒட்டி யுரைத்ததாகும். இத்தனைக் கற்பனை ஓட்டங்களுக்கும் இடந்தருகிறது இக்குறள்.

மேலும் வ.உ.சி. 'கள்வேம் என' எனப்பாடம் திரித்து 'திருட்டுப் பிறரிடம் சொல்லாமலே நிகழ்வது ஆதலின், எனல் என்றபாடம் சிறவாது' என்பர். வள்ளுவர் கண்டபாடம் அதுவேயாயின் இவ்வுரை சிறந்தது.

ஒ) ஒப்புமைப் பகுதி:

முற்றும்:

அல்லது செய்வார் அரும்பொருள் ஆக்கத்தை
நல்லது செய்வார் நயப்பவோ? ஒல்லொலிநீர்
பாய்வதே போலும் துறைவகேள் தீயன
ஆவதே போன்று கெடும் —*பழமொழி*, 173

29.4. கள்வின்கண் கன்றிய காதல் விளைவின்கண் வீயா விழுமம் தரும். (உ௮௪)

உரைப்பகுதி:

அ) *மணக்.*: களவின்கண்ணே மிக்க ஆசை பயன்படும் காலத்துக் கேடில்லாத நோயைத்[1] தரும் என்றவாறு.

இது நரகம் புகுத்தும் என்றது.

ஆ) *பரிதி.*: எ—து கபட புத்தி இருக்கையிலே எத்தனை தன்ம தானம் பண்ணினாலும், உவர்நிலத்தில்[2] இட்ட பயிராம் என்றவாறு.

ஈ) *காளி.*: எ—து இது நமக்குத் தகாது என்று கருதாது, களவின் மாட்டு அழுந்திய ஆசையானது, விளைவிடத்து எஞ்ஞான்றும் ஒழியாத நரகத்துள் வீழ்ந்து அழும் துன்பத்தைத் தரும் என்றவாறு.

உ) *பரிமேல்.*: பிறர்பொருளை வஞ்சித்துக் கோடற்கண்ணே மிக்க வேட்கை, அப்பொழுது இனிதுபோலத் தோன்றித்தான் பயன் கொடுக்கும்பொது தொலையாத இடும்பையைக் கொடுக்கும்.

கன்றுதலான்[3] எஞ்ஞான்றும் அக்களவையே பயில்வித்து அதனால் பாவமும் பழியும் பயந்தே விடுதலின், 'வீயாவிழுமம் தரும்' என்றார். இவை இரண்டுபாட்டானும் அது கடியப்படுதற்குக் காரணம் கூறப்பட்டது.

இராமா.: களவின்கட்கன்றிய காதல்—பிறர்பொருளை வஞ்சித் துக்கொள்வதிலேமிகுந்த இச்சையானது, விளைவின்கண்—

---

1 கேடில்லாத நோய்—நிரயநோய்;

2 உவர்நிலம்—உப்புநிலம். உப்புநிலத்திற் பயிர் கருகிச் சாமேயன்றிப் பயன்தராது என்பது கருதிக் கூறியதாம்.

3 கன்றுதலான்—காதல் மிகுதலால்.

தான்பயனைத்தரும்போது, வீயாவிழுமந் தரும்—நீங்காத துன்பத்தைத்தரும், எ—று.

அந்த இச்சைமுதிர்தலாலெப்போதுங்களவுசெய்யப்பழக்கி அதனாலேபாவமும்பழியும் வருதலால்நீங்காத துன்பந்தருமென்றார். இவையிரண்டுபாட்டாலுமதனை நீக்குதற்குக்காரணங் கூறப்பட்டது.

ஊ) கவிராசர்: பிறன் பொருளைத் திருடிக் கொள்கிறபோது, சந்தோஷமாய் இருக்கும். அந்தப் பாபம் வருகிறபோது வெகுதுக்கமாய் இருக்கும்; (எ—று).

ஏ) பழைய2: பிறர் பொருளைக் களவினாலே கொள்ள எழுந்த ஆசை, அப்போது இனிதுபோலத் தோன்றி, அப்பாவம் விளையும் போது நீங்காத் துன்பத்தைக் கொடுக்கும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

பரிதியுரை கருத்து வகையிற் கூட இக்குறட்கு ஏற்புடையதாக இல்லை. 'களவின் கட் கன்றிய காதல்—கபட புத்தி' எனக் கருதினாலும் 'எவ்வளவு தானதருமம் பண்ணினாலும் உவர்நிலத்திலே இட்ட வித்தாம்' என்ற கருத்து இயைபுடையதன்று. தீயநெறியால் வந்த பொருளால் தானம் முதலிய செய்யின் புண்ணியம் பொருளுடையார் மேலும், திருடியதால் வரும்பாவம் தன்மேலுமாகும். உவர்நிலத்திட்ட பயிர் போல ஒன்றும் விளையாமற் போகாது; தீமைவிளையும்; ஆதலான் என்க.

'கன்றியகாதல்' 'மிக்க ஆசை' மணக்.; அழுந்திய ஆசை' காளி.; 'மிக்க வேட்கை' பரிமேல்.; கவிராசரும், பழைய உரையும் 'கன்றிய' என்றதற்குப் பொருள் காணாது விட்டன. 'முற்றிய ஆசை' கா.சு., சொ.த., மு.வ.

'வீயா விழுமம்' 'கேடில்லாதநோய்'மணக்.; 'எஞ்ஞான்றும் ஒழியாத நரகத்துள் வீழ்த்தும்' காளி.; 'பாவம் விளையும்போது நீங்காத துன்பம் தரும்' பழைய2.; 'பாபம் வருகிறபோது வெகு துக்கமாயிருக்கும்' கவிராசர்; இராமலிங்கனார் 'பலமுறை தண்டிக்கட்பட்டாலும் அந்தத்திருட்டுப்பழக்கம் விடாது; அதனால் ஒழியாத துன்பம் தரும்' என்பர். இங்ஙனம் கருத்தைக்காணும் வகையில் அவரவர்களுடைய உலகியல் அனுபவம் உதவியிருப்பதைக் காணலாம். இவற்றுள் சிறந்த உரை குறட்பாவில் உள்ள சொல்லமைதிக்கு ஏற்பப் புறஞ்செல்லாஉரையே சிறந்தது எனலாம்.

மு.ரா.அரு. 'சுகம் போல என்றதனால் நியாய வழியால் கிடைத்த பொருளால் வந்த சுகம் ஆகாது' என்பர்.

ஓ) ஒப்புமைப் பகுதி:

'விளைவின்கண் வீயா விழுமம்தரும்':

வினைப்பயன் விளையுங்காலை உயிர்கட்கு
மனப்பேரின்பமும் கவலையும் காட்டும் —*மணி., பவத்திறம்., 62—63*

முற்றும்.

முளரிமுக நாகமுளை யெயிறுழுது கீற
அளவில்துயர் செய்வரிவண் மன்னரத னாலும்
விளைவரிய மாதுயரம் வீழ்கதியுள் உய்க்கும்
களவுகட னாகக் கடிந்திடுதல் சூதே —*சீவக., 2870*

களவினாகிய காரறி வுள்ளன் மின்
விளைவில் வெவ்வினை வீவில் கதிகளுள்
உளைய உள்ளழித் தோன்றல வேதனை
வளைய வாங்கி வருத்தம் உறுக்குமே
—*சூளாமணி., (புறத்திரட்டு 308)*

பீடில் செய்திக ளாற்கள வில்பிறர்
வீடில் பல்பொருள் கொண்ட பயனெனக்
கூடிக்காலொடு கைகளைப் பற்றிவைத்து
ஓடலின்றி உலையக் குறைக்குமே —*வளை., 31*

... ...களவின் மீட்சி
உலைதலில் பெருமை திட்ப முறுவலி யொழிந்ததாயும்
—*யசோதர. 243:3—4*

(எதிர்மறையால் ஒத்த பொருள்)

29.5. அருள்கருதி அன்புடைய ராதல் பொருள்கருதிப் பொச்சாப்புப் பார்ப்பார்கண் இல். (உஅரு)

உரைப்பகுதி:

அ) மணக்.: அருளைக் குறித்து உயிர்மீது அன்புடையராய்ஒழுகுதல் பொருளைக் குறித்துப் பிறரது மறவியைப்[1] பார்ப்பார்மாட்டும் இல்லை என்றவாறு.

இஃது அருளும் அன்பும் இல்லையாம் என்றது.

ஆ) பரிதி.: எ-து பிறவா நெறி வேண்டி அன்புபெறுங்கருத்தை அறியார் மூன்றுவகை ஆசை மிகுத்துப் பொய் நெறியிலே நிற்பார் என்றவாறு.

---

1 மறவி—மறதி.

ஈ) *காளி.*: எ-து 'பொய்ச்சாப்பு' பாடம். அனைத்துயிர்க்கும் ஒப்ப நிகழ்வதோர் அருளினைக் கருதி, அவ்வுயிர்கள்மாட்டு அன்பு பெரிதுடையராவோம் என்பது பிறன் பொருளை முழுதும் வவ்வ, கருத்திற் காவற் குறிக்கோள் முறைமையை இகழ்ந்து, அதனால் மகிழ்ச்சியுடையார்க்கு ஒருநாளும் இல்லை என்றவாறு.

பொய்ச்சாப்பு என்பது இகழ்ச்சி.

உ) *பரிமேல்.*: அருளினது உயர்ச்சியை அறிந்து அதன்மேல் அன்புடையராய் ஒழுகுதல் பிறர்பொருளை வஞ்சித்துக்கொள்ளக் கருதி அவரது சோர்வு பார்ப்பார்மாட்டு உண்டாகாது.

தமக்குரிய பொருளையும் அதனது குற்றம் நோக்கித்[2] துறந்து போந்தவர், பின் பிறர்க்குரிய பொருளை நன்குமதித்து அதனை வஞ்சித்துக்கோடற்கு அவரது சோர்வு பார்க்கும் மருட்சி[3]யரானால், அவர்மாட்டு, உயிர்கண்மேல் அருள்செய்தல் நமக்கு உறுதியென்று அறிந்து அவ்வருளின் வழுவாது ஒழுகும் தெருட்சி[4] கூடாது என்பதாம்.

இராமா.: அருள்கருதி — அருளினதுமேன்மையையறிந்து, அன்புடையராதல் அதன்மேலன்புடையராகநடப்பது. பொருள் கருதி-பிறருடைய பொருளை வஞ்சித்துக்கொள்ள நினைத்து, பொச்சாப்புப்பார்ப்பார்கணில்-அவர்மறந்திருக்குஞ் சோர்வுப் பார்ப்பரிடத்தில்லை, எ-று.

குற்றம் விளைப்பதை நோக்கிவெறுப்புண்டாகித்தமக்குரிய பொருளையும் நீக்கித்தவஞ்செய வந்தவர் பின்புபிறர்க்குரிய பொருளைவிரும்பியதை வஞ்சித்துக்கொள்ளச் சோர்வுபார்க்கு மஞ்ஞானமுடையரானால், மற்றவுயிர்களிடத்து அருள்செய்வது தன்நன்மையென்றறிந்து அந்த அருளினிடத்துக்குற்றமில் லாமலே நடக்கின்றஞானமவர்க்கில்லையென்பதாம்.

ஊ) *கவிராசர்*: அருளினது பெருமையை அறிந்து அன்புடையவர் களாய் நடக்கிறது பிறர் பொருளை வஞ்சித்துக்கொள்ள நினைக்கிற வர்களுக்குகில்லை. (எ—று).

பழைய2: அருளைக் கருதி யாவர்மேலும் அன்புடையராகுதல், பொருளைக் கருதி, அதனைக் களவு கொள்ள அப்பொருளுடையார் வைத்து மறப்பதனைப் பார்க்கும் அவரிடத்தில்லை.

---

2 குற்றம் நோக்கல்— 'நிறைசெல்வம் நீரிற்சுருட்டும் நெடுந்திரைகள்' போல்வது என்றும், பொருளை ஈட்டுவது, அதனைக்காப்பதூஉ, அழிப்பதும் முதலியன பெருந் துன்பத்திற்கு ஏதுவாம் என்று உணர்தல்.

3 மருட்சி—மயக்கம். 4 தெருட்சி—தெளிவு.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

அருள் கருதி அன்புடையராதல்:

'அருளைக் குறித்து உயிர்மீது அன்புடையராதல்' *மணக்.: குழந்தை*
'அருளினைக் கருதி அவ்வுயிர்கண்மாட்டு அன்புடையராதல்' *காளி.,*
'அருளினைக் கருதி யாவர் மேலும் அன்புடையராதல்' *பழைய1:*
அருளினது உயர்ச்சியை யறிந்து அன்புடையராய்,ஒழுகுதல்' *பரிமேல்.*
சொ.த.கா.சு.;
அருளினது பெருமையை யறிந்து அன்புடையராக நடக்கிறது'
கவிராசர்;
அருள் கருதி யாவர் மேலும் அன்புடையராயிருத்தல்' *பழைய2;*
'பிறவாநெறி வேண்டி அன்பு பெருங் கருத்து' *பரிதி.;*
'அருளின் நன்மையைக் கருதிப் பிறரிடம் அன்புடையராயிருத்தல்'
சி.இ.
'அருளை விரும்பி அன்புள்ளவர்களாகும் முயற்சி' *இராம.:*
'அருளைப் பெரிதாகக் கருதி அன்புடையவராக இருத்தல்' *மு.வ.*

'பொச்சாப்பு'

'மறவி' *மணக்.;* 'இகழ்ச்சி' *காளி.;* 'சோர்வு' *பரிமேல்., சொ.த கா. சு., மு.வ. பரிதி., குழந்தை.*

இவர்களில் '*அன்புடையார்*' என்பதற்குப் 'பிற உயிர்கள்மேல் யாவரிடத்தும் அன்புடையராதல்' என உயிர்கள் மேல் அன்புடைய ராதலை *மணக்குடவர்* முதலிய பலரும் கூறுவர். 'அருளின்மேல் அன்புடையராதல்' எனப்*பரிமேலழகர்* முதலியசிலர் கருதுகின்றனர்.

காளிங்கர் கூறும் உரை 'அருள் என்பது அனைத்துயிர்க்கும் ஒப்ப நிகழ்த்துவது என்றும், அதனையடைவதே துறவின் குறிக்கோள் என்றும், அது பிறன்பொருளை வவ்வக் கருதுவாற்கு இல்லை' என்றும் கூறுகிறது.

பரிதி வழக்கம் போலக் கருத்துப் பொருளே காண்பர்.

அருளுக்காக உயிர்கண்மீது அன்பு செய்வது என்பது, அருள் என்பது அன்பின் குழவி என்பதையும், அவ்வருளும் 'பொருள் என்னும் செவிலியாலேயே' வளரத்தக்கது என்பதையும் எண்ணி, அதனால் பிறன்பொருளைக் கவர்ந்து வளர்த்தல் கூடாது. பிறர் மனமுவந்து கொடுக்க அதனைக் கொண்டு அனைத்துயிரும் தம்முயிர் போற்பேணும் அருளுள்ளத்தை வளர்த்தல் தகும் என்பதையும் விளக்குவது காளிங்கர் உரை. ஆதலால் இவ்வுரை ஏனையோர் உரையிலும் தெளிந்ததாகும்.

'பொச்சாப்பு' தருமர், நச்சர் பாடம் என்பர் வ.உ.சி.; காளிங்கர் பாடமும் அதுவாதல் காண்க.

29.6. அளவின்கண் நின்றொழுகல் ஆற்றார் களவின்கண் கன்றிய காத லவர் (உஅசு)

உரைப் பகுதி:

அ) *மணக்.*: களவின்கண்ணே மிக்க ஆசையை உடையவர் நேரின்[1] கண் நின்று ஒழுகுதலைச் செய்யமாட்டார் என்றவாறு.

இது நேர்செய்யமாட்டார் என்றது.

ஆ) *பரிதி.*: எ—து தவநெறியிலே நிற்கமாட்டார் கபடபுத்தியிலே மிகுந்தவர் என்றவாறு.

இ) *காளி.*: எ—து தமக்கு ஒத்த நீதியின் மரபிலே நின்று ஒழுகுதலை அறியார்; யாரோ எனில், களவின்மாட்டு அழுந்திய காதலை[2] உடையோர் என்றவாறு.

உ) *பரிமேல்.*: உயிர் முதலியவற்றை அளத்தலாகிய நெறியின்கண் நின்று, அதற்கேற்ப ஒழுகமாட்டார்; களவின்கண்ணே மிக்க வேட்கையை உடையார்.

உயிர் முதலியவற்றை அளத்தலாவது[3] காட்சி முதலாகச் சொல்லப்பட்ட அளவைகளான் உயிர்ப்பொருளையும் அதற்கு அநாதியாய் வருகின்ற நல்வினை தீவினைக்குற்ற விளைவுகளையும், அவற்றான் அது நாற்கதியுள் பிறந்து இறந்து வருதலையும், அது செய்யாமல் அவற்றைக் கெடுத்தற்கு உபாயமாகிய யோக ஞானங்களையும், அவற்றான் அஃது எய்தும் வீட்டினையும், அளந்து உள்ளவாறு அறிதல். இதனை ஆருகதர் தருமத்தியானம் என்ப. அதற்கு ஏற்ப ஒழுகுதலாவது அவ்வளக்கப்பட்டனவற்றுள் தீயனவற்றின் நீங்கி நல்லனவற்றின்வழி நிற்றல்.

> *இராமா.*: களவின்கட் கன்றிய காதலவர்—களவிலே மிகுந்த ஆசையை யுடையவர், அளவின்கணின்றொழுகலாற்றார்—உயிர்முதலியவற்றை யளப்பதாகியவழியிலேநின்று அதற்குப் பொருந்தநடக்கமாட்டார். எ—று.
>
> அளத்தலாவது, பிரத்தியட்சமுதலாகச் சொல்லப்பட்ட பிரமாணங்களால் உயிரையும், அதற்குஅநாதியாய் வருகின்ற குற்றத்தைத் தரும் வினைவிளைவுகளையும், அவ்வினைகளால்

1 நேர்—நேர்மையானவழி; 2 அழுந்திய காதல்—முற்றிய காதல்.

3 அளத்தல்—காட்சி, கருத்து, நூல் என்ற மூன்றானும் உயிர் முதலியவற்றை வரையறை செய்து உள்ளவாறு அறிதல்.

அந்தவுயிர் நால்வகைகதிகளிலே பிறந்திறந்து வருவதையும், அதுசெய்யாமலவற்றைக் கெடுப்பதற்கு உபாயமாகிய யோக ஞானங்களையும், அவற்றாலடையு முத்தியையும், அளந்து உள்ளபடியறிதல், அதற்குப்பொருந்தநடத்தலாவது, அப்படி யளக்கப்பட்டவைகளில் தீயவைகளை விட்டு நீங்கி நல்லவைக ளோடு கூடிநிற்பது.

ஊ) *கவிராசர்*: சீவனுக்கு ஈடேற்றமாகிய[4] விரத சீலங்களிலே நின்று நடக்கமாட்டார் களவு செய்கிறதில் வெகு ஆசையை உடைய வர்கள் (எ—று).

ஏ) *பழைய2*: தமக்குள்ள பொருளுக்குத் தக்க செலவின்கண் அளவை அறிந்து அடங்கி வாழமாட்டார், களவினிடத்து மிகுந்த ஆசையுடையார்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

இக்குறட்பாவில் '*அளவின்கண்*' என்பதற்கு உரைகாண்பதில் அனைவரும் சிறிது மாறுபடுகின்றனர். 'நேரின்கண்' *மணக்.*; 'தவநெறியிலே' *பரிதி.*; 'தமக்கு ஒத்த நீதியின் மரபிலே' *காளி.*; 'உயிர் முதலியவற்றை அளத்தலாகிய நெறியின்கண் அதாவது உயிர்ப்பொருள்களின் அறம்—மறங்களையும் அவற்றின் பயனையும் உள்ளவாறு உணர்தல்' என விளக்கமுந் தருவர் *பரிமேலழகர்*. 'தமக்குரிய வரம்பின்கண் நின்று அதாவது அப்பொருள் உண்மை யியல்புகளை ஆய்ந்து அந்நெறிக்கண் நிற்றல்' *வரதராசர்*. இவற் றுள் 'மரபு' அல்லது 'வரம்பு' என்ற உரை சிறந்ததாகும்.

களவின்கண் கன்றிய காதலுண்டாதற்குக் காரணம் அளவின் கண் ஒழுகாமையே என்பது இக்குறட்பாவின் குறிக்கோளாகவும், அளவுக்குத் தம்விருப்பம்போல பல கருத்துக்களைக் கூறுதல் இயைபின்றாம்.

மு.ரா.அரு., பரிமேலழகரை ஒட்டிப்பொருள் தருவர். விளக்கத் தில் ''உயிர்களுக்கு உள்ள குற்றங்களாவன —அநாதியாகத் தொடர்ந்துவரும் நல்வினை தீவினைகளாகிய துன்பங்களும், அத் துன்பங்களால் மேன்மேலும் வரும்பிறப்பிறப்புத்துன்பங்களுமாம்.''

குணங்களாவன மேற்கூறிய குற்றங்களை நீக்கும் யோக ஞான மும் அவ்விரண்டால் மோட்சமடைதலுமாம். நல்வினையும் துன்பம் என்றது எதனாலெனில் அதுவும் பிறவிக்குக் காரணமாதலான் என்க. எனவே நல்வினையும் தீவினையும் சமம் என்பது காண்க. இக்கருத்துக்கொண்டே இருவினை ஒப்பு வந்தால் மலபரிபாகம் வருமென்று சித்தாந்த சாத்திரங்கள் கூறும். ஆதலால் இவ்வி

4 ஈடேற்றம்—உயர்தல்.

ரண்டும் அற்றவரே பிறப்பிறப்பு நீங்கி மோக்ஷமடைவர் என்பது உண்மைநூலின் முடிவு'' என்பர்.

இதில் ஞானத்தால் பிறப்பறுதலேயன்றி பிறப்புறுதல் இல்லாமையும் அதனால் அது வினையாகாமையும் 'இருவினை ஒப்பு' இஃதல்லாமையும் சிவஞானபோத மாபாடியம் கண்டுதெளிக. மேலும் பிறவிக்கேதுவாம் நல்வினைகள் வேள்வியும் தானமும் எண் வகைச் சித்திகளை விரும்பிச் செய்யும் யோகமுமாம் என்க. ஞானத்தின் வாயிலான சரியாயோகங்கள் ஞானத்தைப் பயந்து ஞானத்தால் ஏகனாகி இறைபணி நிற்க வீட்டின்பமே விளையும் என்பது.

பழைய உரைகள் 'வருவாய்க்கு மிகச் செலவழிப்பது களவு செய்தற்கு ஏதுவாகும்' என்ற கருத்தில் உரைக்கும். இது இயல்—அதிகாரப் பொருட்கு இயைபின்மை தெளிக.

29.7. களவென்னும் காரறி வாண்மை அளவென்னும்
ஆற்றல் புரிந்தார்கண் இல். (உஅஎ)

உரைப்பகுதி:

அ) *மணக்.*: களவாகிய பொல்லா அறிவுடைமை நேராகிய பெருமையைப் பொருந்தினார் மாட்டு இல்லை என்றவாறு.

இது நேரறிந்தவர் களவு காணார் என்றது.

ஆ) *பரிதி.*: எ—து களவாகிய அஞ்ஞானம்[1] விசாரித்ததில், அளவாகிய யாக்கை நிலையாமை கண்டாரிடத்து இல்லை என்றவாறு.

இ) **காளி.**: எ—து துறவுநெறி உடையார் மாட்டு யாதானும் ஒரு காரணத்தால் ஒரு கால் ஒரு களவியல் கருதத்துணியுமாயின் மற்றது பெரிதும் அறிவின்மை ஆகலான் மற்றக் களவினைக் கருதுகின்ற அறியாமையானது அளவு என்கின்ற நன்னெறியுடையார் மாட்டு எஞ்ஞான்றும் இல்லை என்றவாறு.

உ) *பரிமேல்.*: களவு என்று சொல்லப்படுகின்ற இருண்ட அறிவினை உடையராதல்; உயிர் முதலியவற்றை அளத்தல் என்னும் பெருமையை விரும்பினார்கண் இல்லை.

இருள் மயக்கம். காரியத்தைக் காரணமாக உபசரித்துக் 'களவு என்னுங் காரறிவாண்மை' என்றும், காரணத்தைக் காரியமாக்கி[2] 'அளவு என்னும் ஆற்றல்' என்றும் கூறினார்.[3] களவும்

---

1 அஞ்ஞானம்—அறியாமை; 2 'காரியமாக வுபசரித்து' என்றும் பாடமுண்டு

3 களவென்னுங் காரறிவு என்பதில் காரறிவு காரணம். களவு காரியம் என்றும், 'அளவு என்னும் ஆற்றல்' என்பதில் அளவு காரணம். ஆற்றல் காரியம் என்றும் அறிக. இவற்றுள் முன்னது காரியங்காரணமான உபசாரம், பின்னது காரணம் காரியமான உபசாரம் என்க.

துறவும் இருளும் ஒளியும் போலத் தம்முள் மாறாகலின், ஒருங்கு நில்லா[4] என்பது, இவை மூன்று பாட்டாலும் கூறப்பட்டது.

இராமா.: களவென்னுங் காரறிவாண்மை—களவென்று சொல்லப்படுகின்ற இருண்ட அறிவினது ஆட்சி, அளவென்னுமாற்றல்—மேற்சொல்லியவற்றையளக்கும் அளவென்று சொல்லப்பட்ட வல்லமையை, புரிந்தார்கணில்—விரும்பினவரிடத்தது உண்டாகாது எ—று.

இருள், மயக்கம். களவென்னுங் காரறிவென்றதில், காரறிவு காரணம். களவுகாரியம். அளவென்னுமாற்றலென்றதில்அளவு காரணம். ஆற்றல்காரியம். என்னெனின், காரறிவினாலேகளவு செய்தலும் அளவினாலே வலிமை யுண்டாதலுமாமாதலாலென்க. இருளும் ஒளியுமொன்றுபட்டு நில்லாதது போலக் களவுந் தவமுமொன்று பட்டுநில்லாதென்பது இவை மூன்று பாட்டாலுஞ்சொல்லப்பட்டது.

ஊ) *கவிராசர்*: களவு எனப்பட்ட கபடமனசு அளவறிந்தார்களிடத்தில் இல்லை. (எ—று).

ஏ) *பழைய 2*: களவென்று சொல்லப்படுகின்ற மயக்கவடிவினை உடையராதல், நன்மை தீமை, பிறப்பு இறப்பு, பந்தம் வீடு என்னும் அளவையை அளத்தல் என்னும் பேரறிவினை விரும்பினாரிடத்து இல்லை.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

காரறிவாண்மை:

'பொல்லா அறிவுடைமை' *மணக்.*; 'கபடமனசு' *கவிராசர்*, 'அஞ்ஞானம்' *பரிதி.*; 'பெரிதும் அறிவின்மை' *காளி.*, 'மயக்கவடிவினராதல்' *பழைய 2*; 'இருண்ட அறிவினையுடையராதல்' *பரிமேல்.*, *சொ.த.*, *குழந்தை*, 'அறிவுமயக்கம்' *கா.சு.*, '(காரணமான) மயங்கிய அறிவினையுடையராயிருத்தல்' *மு.வ.*, 'இருண்ட மனப்பான்மை' *இராம.*

'அளவு என்னும் ஆற்றல்'

'நேராகிய பெருமை' *மணக்.*; 'அளவாகியயாக்கை நிலையாமை' *பரிதி.*, 'அளவென்கின்ற நன்னெறி' *காளி.*, 'உயிர் முதலியவற்றை அளத்தல் என்னும் பெருமை' *பரிமேல்.*, *சொ.த.*, 'வரம்பினுள்' நிற்றலாகிய திறமை' *கா.சு.*, 'தமது எல்லையுள் நின்றொழுகுவார்' *வ.உ.சி.*, 'அளவறிந்து வாழ்தலாகிய ஆற்றல்' *மு.வ.*, 'அளவு என்ற வல்லமை' *இராம.*

4 ஒருங்கு நில்லா—ஒரு சேர நில்லா.

இவ்வுரைகள் வருவிக்கும் சொற்களால் வேறுபடினும் கருத்தால் மாற்றமில்லாதன எனலாம். ஆயினும் 'அளவு என்னும ஆற்றல்', 'களவென்னும் காரறிவாண்மை' இவற்றிற்கு இலக்கணமும் காட்டி, இயைபும் விளக்கமும் கூறும் பரிமேலழகர் உரை சிறந்தது.

ஓ) ஒப்புமைப்பகுதி:

களவென்றும் காரறிவாண்மை:

களவினாகிய காரறிவு —தூளா.,

ஒ) மேற்கோள் பகுதி:

இளம்.: கள்ளாமையாவது பிறர்க்குரிய பொருளைக் களவினால் கொள்ளாராதல் என்பதற்கு மேற்கொள். (தொல். பொருள். 75.)

நச்சி.: ஓருயிர்க்கு இடர்வந்துழித் தன் உயிரைக் கொடுத்துக் காத்தலும் அதன் வருத்தம் தனதாக வருந்துதலும், பொய்யாமை கள்ளாமை முதலியனவும் ஆம் என்பதற்கு மேற்கோள். (தொல். பொருள். 76.)

29.8. அளவறிந்தார் நெஞ்சத்து அறம்போல நிற்கும்
களவறிந்தார் நெஞ்சில் கரவு. (உ-அ/அ)

உரைப்பகுதி:

அ) மணக்.: நேர் அறிந்தவர் நெஞ்சத்து அறம் நிற்குமாறு போல நிற்கும்; களவு அறிந்தவர் நெஞ்சில் வஞ்சகமும் என்றவாறு.

இது களவு காண்பாரைப் பின்பு களவினின்று தவிர்த்தல் முடியாது என்றது.

ஆ) பரிதி.: எ—து யாக்கை நிலையாமை கண்டவர் மனத்தில் தன்மம் போலே, நிலை பெற்று நிற்கும் களவாகிய கவடும்[1] களவறிந்தாரிடத்து என்றவாறு.

இ) காளி.: எ—து நீதியினொத்த மரபு உணர்ந்தோர் உள்ளத்துத் துறவறமாகிய அறம் குறிக்கொண்டு நிற்குமாப் போல் நிலை நிற்கும்; அது யாது எனில், களவினையறிந்தோர்மாட்டு நாகமானது என்றவாறு.

கரவு என்றது களவு என்று சொல்லுவாரும் உளர்.

உ) பரிமேல்.: அவ்வளத்தலையே பயின்றவர் நெஞ்சத்து அறம்

1 கவடு—வஞ்சனை;

நிலைபெற்றாற் போல நிலைபெறும், களவையே பயின்றவர் நெஞ்சத்து வஞ்சனை.

உயிர் முதலியவற்றை அளந்து அறிந்தார்க்குத் துறவறம் சலியாது[2] நிற்கும் என்பது இவ்வுவமையால் பெற்றாம். களவோடு மாறின்றி நிற்பது இதனாற் கூறப்பட்டது.

இராமா.: களவறிந்தார்நெஞ்சிற்கரவு—களவையே பழகினவர் நெஞ்சிலே வஞ்சனையானது, அளவறிந்தார் நெஞ்சத்தறம் போலநிற்கும்—முன்சொன்ன அளவைகளிலே பழகினவர்மனதில்தருமம் நிலைநிற்பதுபோல நிலைநிற்கும், எ—று.

அளவை. பிரமாணம். உயிர்முதலியவற்றையளந்தறிவாரிடத்துத் துறவறநிலைநிற்குமென்பது உவமையாற்பெறப்பட்டது. களவோடு மாறுபடாமல்நிற்பது இதனுற்கூறப்பட்டது.

ஊ) *கவிராசர்*: உலகம் முதலானவற்றைப் பிரமாணங்களால்[3] அறிந்தவர்கள் நெஞ்சிலே தர்மம் நிலையாய் இருக்கிறாப் போல, களவையே பயின்றவர் நெஞ்சிலே வஞ்சனையும் நிலையாய் இருக்கும்; (எ— று).

ஏ) *பழைய 2*: கதி[4]யளவையைஅறிந்து அதற்கேற்ற அறஞ்செய்ய வேண்டும் என்னும் அவர்நெஞ்சின் அறம்போல நிற்கும், களவையே பயின்றவர் நெஞ்சத்து வஞ்சனை.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

இக்குறட்பாவிலும் 'அளவு'

'நேர்', 'யாக்கை நிலையாமை', 'நீதியின் ஒத்த மரபு', 'அளவற்ற தீயசெயல்கள்', 'உயிர்முதலியவற்றை அளத்தல்' என *மணக்.*, *பரிதி.*, *காளி.*, *கவிராசர்*, *பரிமேலழகர்* முறையே கூறுவர். பிற்கால உரைகளில் 'தமது எல்லையுள் நின்றொழுகுவார்' *வ.உ.சி.*, 'உயிரின் குணங்குற்றங்களை அளந்து பழகிவந்தவர்' *மு.ரா.அரு.*, 'பொருள்களின் தன்மையை அளந்தறிந்தவர்கள்' *கா.சு.*; 'நியாயத்தைப் பயின்றவர்' *சொ.த.*;' 'வாழ்க்கையின்அளவு' *மு.வ.*; 'நேர்மையின் அளவு' *அரசுமணி*; 'அறநெறிகளின் அளவுகள்' *சி.இ.*;'துறவுக்கு ஏற்ற அளவு பற்றறுதல், பசிக்குப்பிறரிடம் வாங்கியுண்ணுதல் முதலியன' என்பர் *இராமலிங்கனார்*. இங்ஙனம் பல பொருள்களில் ஆளப்படுவதைப் பார்க்கிறோம். இவருள் *பரிமேலழகர்* 'உயிர் முதலியவற்றை அளந்தறிதல்' என உயிர்—உலகம்

2 சலியாது—அசையாது 3 பிரமாணங்களால்—காட்சி முதலிய அளவைகளால்,

4 கதி—மனித கதி முதலான நிலைகளின் அளவு.

— இறை முதலிய முப்பொருள் ஆய்வில் செலுத்துகிறார். *பரிதியார்* 'தத்தம் வாழ்நாளின் அளவறிந்து யாக்கையின் நிலையாமையை யறிந்தவர்கள் எப்போதும் அறத்தையே சிந்தித்தலால் அவர்கள் மனத்து அதுவே நிலைபெறும்' என்கிறார். *மணக்குடவரும்*, காளிங்கரும் கருதுவன பொதுமையினின்று கருதுவ அனைத்தையும் உள்ளடக்கி நிற்பன. 'பொருள்களின் தன்மையை அளந்தறிந்தவர்கள்' என்ற பின்னுரைகள் 'பொருள் நிலையாதது, அதன் தன்மையை உணர்ந்தவர்கள் கைத்துண்டாம் போழ்தே கரவாதறம் செய்வர்' என்ற நோக்கைப் பயப்பது. வாழ்க்கையின் அளவு என்னும் உரை துறவை ஒரு வாழ்க்கையாகக் கொண்டாலும் பொருள் அதற்கு இன்றியமையாததாகாமல், துறந்தார்க்குத் துணையாகும் இல்லறத்தானையே எதிர்நோக்கியிருப்பது துறந்தாரியல்பாதலின், இவ்வுரை ஆய்வுக்குரியதாகும். இயல்துறவாயிருத்தலின் தாம் மேற்கொண்ட துறவுக்கேற்ற நிலையறிந்து என்ற கருத்துடைய உரையே சிறந்தது எனலாம்.

இதுபோன்றே 'அறம்' என்ற சொல்லும் பலநோக்குடையதாகப் பிறர் உரையான் அறியப்படுவதாயினும் துறவறம் சலியாது நிற்கும் என்ற கருத்தைப் பெறுவிக்கின்ற *பரிமேலழகருரை* சிறந்தது. 'கள்ளாமையாகிய அறம்' எனக்கொள்ளின் பின்னடியால் 'களவறிந்தார் நெஞ்சிற்கரவு நிற்கும்' எனப்படுதலின் ஈண்டு 'அறம் என்றது பொதுவகையான் துறவி மேற்கொள்ள வேண்டிய எல்லா நன்மைகளையும் உணர்த்தும்' என்பதே சிறந்ததாகும். துறவிக்குக் கள்ளாமை மட்டும் அறமாகாது. கள்ளுதல் காரணமாக நிசழும் பழிபாவங்களனைத்துமின்றிப் புகழுக்கும் புண்ணியத்திற்கும் பயன்படுவதனைத்தும் கொள்ளக்கூடும் என்பதாம். வருங்குறளில் 'அளவல்ல செய்தாங்கே வீவர்' என்ற பகுதிக்குத் 'துறவிக்கு ஏலாதன' என்றே பொருள் கொள்ளக் கிடப்பதையும் உன்னுக.

ஒ) ஒப்புமைப் பகுதி:

குத்திரஞ் செய்தலிற் கள்வனாதல் அறிப —முதுமொழி.17

29.9. அளவல்ல செய்தாங்கே வீவர் களவல்ல
மற்றைய தேற்றா தவர். (உஅகூ)

உரைப்பகுதி :

அ) மணக் : நேர் ஆகாதன செய்து அவ்விடத்தே கெடுவார். களவு அல்லாத மற்றைய அறங்களைத் தெளியாதவர் என்றவாறு.

இது கள்வாரை அரசர் கொல்வர் என்றவாறு.

ஆ) *பரிதி.*: எ—து தவத்திற்கு ஏலாத காரியஞ்செய்து நரகத்திலே வீழ்வர்; கபட புத்தியல்லது, ஞானவழியை அறியாதார் என்றவாறு

ஈ) *காளி.*: எ—து செய்யத்தகும் தகவுகேடாகிய[1] மிகை நடைகளைச்[2] செய்து அப்பொழுதே கெடுவர்; யாவரோ எனில் களவல்லனவாகிய நன்மரபுகளைத் தெளியாதவர் என்றவாறு.

உ) *பரிமேல்.*: அவ்வளவல்லாத தீயநினைவுகளை நினைத்தபொழுதே[3] கெடுவர்; களவல்லாத பிறவற்றை அறியாதவர்.

தீயநினைவுகளாவன பொருளுடையாரை வஞ்சிக்குமாறும், அவ்வஞ்சனையால் அது கொள்ளுமாறும், கொண்ட அதனால் தாம் புலன்களை நுகருமாறும் முதலாயின நினைத்தலும் செய்தலாகில் 'செய்து'[4] என்றும்[5], அஃது உள்ள அறங்களைப் போக்கிக் கரந்த[6] சொற்செயல்களைப் புகுவித்து, அப்பொழுதே கெடுக்குமாகலின், 'அங்கே வீவர்' என்றும் கூறினார். மற்றையவாவன துறந்தார்க்கு உணவாக ஓதப்பட்ட காய் கனி கிழங்கு சருகு முதலாயினவும், இல்வாழ்வார் செய்யும் தானங்களும் ஆம். தேற்றாமை[7] அவற்றையே நுகர்ந்து அவ்வளவான் நிறைந்திருத்தலை அறியாமை, இதனால் கள்வார் கெடுமாறு கூறப்பட்டது.

> *இராமா.*: களவல்லமற்றைய தேற்றாதவர்—களவல்லாத பிறவற்றை யறியாதவர். அளவல்ல செய்தாங்கேவீவர்—அந்த அளவை யல்லாத தீய நினைவுகளை நினைத்து அப்பொழுதே கெடுவர், எ—று.
>
> தீய நினைவுகளாவன, பொருளுடையவரைவஞ்சிக்கும்விதமும், அந்தவஞ்சனையால் அப்பொருளைக் கைக்கொள்ளும்விதமும், அப்படிக் கொள்ளப்பட்ட பொருளைத் தாமநுபவிக்கும்விதமும், முதலியவாம். அளவல்லநினைத்தென்னாது செய்தென்றார் நினைத்தலுஞ்செய்தலாமென்பது கருதி. அந்த நினைப்புமுன்னிருந்த தருமங்களையும்போக்கிமறைந்தசொல்லையும்போக்கி மறைந்த சொல்லையும் மறைந்த நடையையும் வரப்பண்ணியப் பொழுதே தம்மைக் கெடுக்குமாதலின் ஆங்கே வீவரென்றார். மற்றையவாவன துறந்தார்க்கு உணவாகிய காய்கனி கிழங்கு முதலாயினவும், இல்லறத்தார் செய்யுந்தானதருமங்களுமாம். தேற்றாமை, அந்தக்காய்கனி முதலாயினவற்றைப் புசித்து

---

1 தகவு கேடு—தகுதியின் அழிவு.
2 மிகைநடை—முற்றும் பொருந்திய ஒழுக்கம் தீயவொழுக்கம்.
3 'நினைத்து' என்றும் பாடமுண்டு.
4 'நினைத்தலுஞ் செய்தலோடொக்குமாகலின் செய்து என்றும்' என்னும் பாடமுண்டு.
5 116—ஆம் குறளின் விசேடவுரையை இணைத்து எண்ணியதன்விளைவு.
6 கரந்த—வஞ்சனையான; 7. தேற்றாமை—தெளியாமை.

அதினாலே திருத்தியடைந்திருப்பதையுணராம். இதினாலே களவு செய்வோர் கெடுங்கேடுகூறப்பட்டது.

ஊ) *கவிராசர்*: களவு செய்ய அறிந்தவர்கள் அந்தப் பொல்லாத நினைவுகளை நினைத்தபோதே கெடுவார்கள். (எ—று),

ஏ) *பழைய 2*: அளவல்லாத தீய செயல்களைச் செய்து உடனே கெடுவர். களவல்லாத மற்ற செயலை அறிந்து தெளியாதவர்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக்., *பரிதி.*, *காளிங்கர்*, *பழைய2* முதலிய உரையாசிரியர்கள் 'களவல்ல பிறமற்றைய' என்பதற்குக் 'களவல்லாத நற்செயல்களை' எனவும் 'களவல்ல பிறவற்றை' எனவும் உரைப்பதால் 'களவு ஒன்றுதான் அவர்களால் செய்ய இயலும், நல்ல செயல்களைச் செய்ய அறியார்' என இருவகைக் கருத்துக்களையுந் தந்து இரண்டும் உடன்பாட்டுவகையானும் எதிர்மறையானும் ஒரு கருத்தைப் பயப்பனவாக இருப்பதை யறியலாம். *பரிமேலழகர்* 'மற்றைய' என்பதற்குக் 'காய்கனிதானம்' எனல் ஏற்புடையதன்று.

மணக்., பரிதி., காளி., *பழைய உரை 2* முதலிய அனைவரும் 'தெளியாதவர்' 'அறியாதவர்' எனத் தன்வினையாகவே உரைகாண்பர். *வ.உ.சி.*யும் அப்படியே. அதனால் 'தேற்றாதவர்' என்பது பிறவினை வாய்ப்பாடாதலின் 'தேறாதவர்' என்ற பாடமே சிறந்தது என்பர்.

29.10. கள்வார்க்குத் தள்ளும் உயிர்நிலை கள்ளார்க்குத்
தள்ளாது புத்தேள் உலகு. (உகഠ)

உரைப்பகுதி:

அ) *மணக்.*: பிறர்பொருளைக் கள்வார்க்கு உயிர்நிலையாகிய வீடு பெறுதல் தப்பும்; கள்ளாதார்க்குத் தேவர்உலகம் பெறுதல் தப்பாது என்றவாறு.

இது கள்வார் முத்தி பெறுதலும் இலர்; கள்ளாதார் சுவர்க்கம் பெறாமையும் இலர் என்றது.

ஆ) *பரிதி.*: எ—து கபடியர்க்கு[1] அற்பாயுசுவாய் சுவர்க்கமில்லை; களவில்லாதார்க்குத் தீர்க்காயுசு உண்டாய் மறுமைக்கும் சுவர்க்கம் உண்டு என்றவாறு.

---

1 கபடியர்—வஞ்சகர்;

ஏ) காளி.: எ—து அருளுடைமை முதலாக வருகின்ற அதிகாரப் புறநடைக் கருத்தாகிய துறவியற்றுவார் இடையிலே களவு இயற்றுவாராயின் முத்தியினை நீங்குவார். அதனால் களவு இயற்றாது இத்துறவு இயற்றுவார்க்குக் கடவுளர் யாவரும் சான்றோராதலால் அதனை நீக்கார்; தாமும் அதற்கு அருளுதவி செய்வார் என்றவாறு.

உயிர்நிலை என்பது முத்தி.

உ) பரிமேல்.: களவினைப் பயில்வார்க்குத் தம்மின் வேறல்லாத உடம்பும் தவறும், அது செய்யாதார்க்கு. நெடுஞ்சேணதாகிய[2] புத்தேள் உலகும் தவறாது.

உயிர் நிற்றற்கு இடனாகலின், உயிர்நிலை எனப்பட்டது. சிறப்பு உம்மைகள் இரண்டும் விகாரத்தால் தொக்கன. இம்மையினும் அரசனால் ஒறுக்கப்படுதலின் 'உயிர் நிலையும் தள்ளும்' என்றும், மறுமையினும் தேவராதல் கூடுதலின் 'புத்தேளுலகுந் தள்ளாது' என்றுங் கூறினார். ''மற்றது தள்ளினுந் தள்ளாமை நீர்த்து''[3] என்புழியும் தள்ளுதல்[4] இப்பொருட்டாதலறிக. இதற்குப் பிறவாறு உரைப்பாரும் உளர். இதனால் இருவர் பயனும் ஒருங்கு கூறப்பட்டது.

இராமா.: கள்வார்க்குத் தள்ளுமுயிர்நிலை— களவுசெய்வார்க்குத் தம்மோடு கூடிநின்றே வேறாகாததேகமுந் தவறிப்போம், கள்ளார்க்குத் தள்ளாது புத்தேளுலகு— அதுசெய்யாதவர்க்குத் தம்மின்வேறுபட்டு நெடுந்தூரத்திலிருக்கின்ற தேவருலகமுந் தவறாது, எ—று.

தேகமுமுலகமு மென்றவுயர்வுசிறப்பு உம்மைகளிரண்டும் செய்யுள் விகாரத்தால் தொக்குநின்றன. கள்வார் இம்மையில் அரசனாலே கொல்லப்படுதலாலும், கள்ளார்மறுமையிலே தேவராகப்பிறப்பதுகூடுமாதலாலும், தள்ளுமென்றுந் தள்ளாதென்றுங்கூறினார். தள்ளுதல்தவறுதல். இதினாலேயிருவர் பயனுங் கூறப்பட்டது.

ஊ) கவிராசர்: களவு செய்கிறவர்களுக்குத் தங்கள் உடம்பும் துணிந்துபோம்;[5] களவு செய்யாதவர்க்குத் தேவலோகம் தப்பாமல் வரும். (எ—று.)

ஏ) பழைய 2: களவினைச் செய்வார்க்குத் தம்மின் வேறல்லாத உடம்பும் தள்ளப்படும்; களவு செய்யாதவர்க்குத் தேவருலகும் தள்ளப்படாது.

2 நெடுஞ்சேணதாகிய—மிகத்தொலைவிலுள்ள தாகிய.

3 596வது குறள்; 4 தள்ளுதல்—தவறுதல்; 5 துணிந்துபோம்-- வெட்டுண்டுபோம்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'கள்வார்'

'கபடியர்', 'களவியற்றுவார்', 'களவினைப்பயில்வார்' என்றெல்லாம் உரை காண்பர் முறையே *மணக்குடவர்* முதலிய ஆசிரியர்கள். 'களவு செய்து பழகி விடுவார்' என்பர் *மு.ரா.அரு.* களவு பழகுவார்க்கு, களவாண்ட அளவு ஆசை அமையாமையின் தற்போது வந்ததை அடிநிலைத் தொடக்கமாக வைத்து பெருந் திருட்டை எதிர்நோக்கியே, அவர்கள் வாழ்வு கழிதலின் பழகுவார்க்கு என்ற உரைகள் சிறந்தன.

'உயிர்நிலை'

'உயிர்நிலையாகிய வீடு பேறு' *மணக்.*, 'சுவர்க்கம்' *பரிதி.*; *காளிங்கர், மணக்குடவரை* ஒட்டி 'முத்தி என்பர். 'தம்மின் வேறல்லாத உடம்பு' *பரிமேல்., கவிராசர்*, பழைய உரை 2. 'அன்பின் வழியதுயிர்நிலை' 'உண்ணாமையுள்ளது உயிர்நிலை' என்ற குறட்பகுதிகளில் 'உயிர்நிலை' என்பது உடம்பையே உணர்த்துவதாகக் கருதப்படுதலின் ஈண்டும் அங்ஙனம் கோடலேதக்கதாம்.

'புத்தேளுலகு'

'தேவருலகு' *மணக்., காளி., பரிதி., பரிமேல்.*, அனைவரும். குழந்தை 'புதிய நகரம் என்பது பொருள்' என்பர். இக்குறட் கருத்து கள்வார்க்குக் கிடைத்த உடம்பும் கெடும். கள்ளாதார்க்குக் கிடைக்க வேண்டிய வானுலகும் வலிதிற்கிட்டும் என்பது.

'தள்ளும்'

'தப்பும்' *மணக்.*; 'நீங்கும்' காளி.; 'தவறிப்போம்' கா.சு., முதலிய அனைவரும் கூறுவர்.

'உயிர்நிலை தள்ளும் என்பது உடலும் தவறும் என்பதைக் காட்டிலும், வேண்டாதாரைப் புறந்தள்ளுதல் போல உடல்களவுமுதலிய தீயன செய்து தனக்கு இருமையினும் தண்டனை வாங்கிக் கொடுக்கும் உயிரைப் புறக்கணிக்கும். கள்ளாதார் இம்மையில் யாரானும் புறக்கணிக்கப்படாமற் போற்றப்படுவதோடு மறுமையில் வானுலகில் வானவராலும் வரவேற்கப்படுவர்' என்ற கருத்தமைய *அருணாசலக் கவிராயர்* தரும் உரைமிகநயமுடையது. உயிர்நிலையாகிய உடலும் அஃறிணை. புத்தேளுலகும் அங்ஙனமே, அவை தள்ளும் தள்ளாது என்றதில் 'புத்தேளுலகு' என்பதை ஆகுபெயராகக்கொண்டு 'தேவர் எனப்பொருள் கொள்ளுதலும் ஆம். உயிர்நிலைக்கு அங்ஙனமும் கொள்ளுதல்ஏலாது ஆகவேஇது அணிபட செய்யாதனவற்றைச் செய்தனபோலக் கூறுவதோர் புலனறிமரபு என்க.

ஓ) ஒப்புமைப்பகுதி:

முளரிமுக நாகமுளை எயிறுழுது கீற
அளவிறுயர் செய்வர்இவண் மன்னரத னாலும்
விளைவரிய மாதுயரம் வீழ்கதியுள் உய்க்கும்
களவுகட னாகக் கடிந்திடுதல் சூதே —சீவக.,2870

ஓ) மேற்கோள் பகுதி:

நச்சி.: கள்வார்க்குத் தள்ளும், நான்காம் வேற்றுமை வாய்பாடு களில், பகைப் பொருளுக்கு உதாரணம். (தொல்.சொல்.77.)

மயிலை.: ‘பொருட்டு முறையாதியின் இதற்கு இதுஎனல்பொருளே’ என்பதில் ஆதி என்றதனால் நான்காம் வேற்றுமை ஏனைய வேற்று மைகள் போல அளவுபட்ட பொருண்மைத்தன்றிவரும் அவையும் இதற்கு இஃதுஎன்பதுபட உரைத்துக்கொள்க என்பதற்கு மேற்கோள். (நன். 297)

29. கள்ளாமை

	எள்ளாமை	உள்ளத்தால்	களவினால்	களவின்கண்	அருள்கருதி	அளவின்கண்	களவென்னும்	அளவறிந்தார்	அளவல்ல	கள்வார்க்குத்
மணக்.	1	2	4	5	7	8	9	10	6	3
பரிதி.	10	9	3	2	8	6	4	5	7	1
பரிப்.	—	—	—	—	—	—	—	—	—	—
காளி.	8	2	10	3	7	5	1	6	4	9
பரிமேல்.	1	2	3	4	5	6	7	8	9	10

29—வது அதிகாரம் முற்றிற்று.

30. வாய்மை

அ) *மணக்*.: வாய்மையாவது பொய் சொல்லாமை.

ஆ) *பரிதி*.: வாய்மையாவது சத்தியமே சொல்லுக என்றவாறு.

உ) *பரிமேல்*.: அஃதாவது மெய்யினது தன்மை. பெரும்பான்மையும்[1] காமமும் பொருளும் பற்றி நிகழ்வதாய பொய்ம்மையை விலக்கலின், இது கூடாவொழுக்கம் கள்ளாமைகளின்பின் வைக்கப்பட்டது.

> இராமா.: அதாவது, மெய்யினதுதன்மை, இதுபெரும்பாலுங் காமமும் பொருளும் பற்றிநடப்பதாகிய பொய்மையை விலக்குதலாலிது கூடாவொழுக்கங் கள்ளாமைகளின் பின்வைக்கப்பட்டது.

ஊ) *கவிராசர்*: அஃதாவது காமமும் பொருளும் வேண்டிப் பொய் சொல்லுகிறதை விலக்கி, சத்தியமாய் இருக்கிற நன்மையைச் சொல்லுகிறது.

ஏ) *பழைய*2: அஃதாவது, பொய் சொல்லாமை.

மல்லர்: அதாவது சத்தியவாக்கு உடையவனாய் இருக்கிறது.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'பொய் சொல்லாமை' 'சத்தியமே சொல்லுதல்' 'மெய்யினது தன்மை' 'சத்தியமாயிருக்கிற நன்மையைச் சொல்லுதல்' 'மெய் சொல்லுதல்' என முறையே *மணக்*., *பரிதி*., *பரிமேல்*., *கவிராசர்*, *கா.சு*., *சொ.த*. முதலியவர்கள் கூறுவர். 'பொய்ம்மைக்கு மறுதலையான மெய்ம்மை' என்பர் தேவநேயர்.

'வாயின் தன்மை வாய்மை; உள்ளத்தின் தன்மை உண்மை,

---

1 கூடா ஒழுக்கம் காமத்தாலும் களவு பொருளாசையாலும் உண்டாம்; பொய் பேசுதல் பெரும்பான்மையாகக் காமத்தாலாவது பொருளாசையாலாவது உண்டாம் என்க. (கோ.வ.)

மெய்யின்செயல் தூய்மை மெய்ம்மை என முக்கரணங்களாலும் நிகழும் சத்தியம் தனித்தனியேயிருப்பினும் இடைக்கண்ணதாகிய வாய்மை என்பதிலேயே முன்னதாகிய உண்மையையும் பின்னதாகிய மெய்ம்மையையும் அடக்கி வழங்குதல் பெருவழக்கானமையின் வள்ளுவரும் இங்ஙனம் கூறுகிறார்' என்பர் இராமலிங்கனார்.

பொய்மை மனமாசுகளை மறைக்கவும், தீச்செயல்களை மறைக்கவுமே நிகழ்வதாகலின், நினைப்பையும் செயலையும் தூயனவாக்க வாய்மை பயன்படுகிறது. இவ்வாய்மை உள்ளத்தின் காரியமாயும், மெய்யின் செயற்குக் காரணமாயும் இருத்தலின் இடைநின்ற வாய்மையால் ஏனையிரண்டையும் குறித்துத் துறவியலுக்குமிகச் சிறப்பான அறமாகவும், ஏனையோர்க்கும் இன்றியமையாத அறமாகவும் கருதப்படுவது வாய்மை என்க.

குழந்தை 'பொய்மை பெரும்பான்மையும் பொருள் பற்றி நிகழும்' என்பர். அதனினும் பொருளும் இன்பமும் பற்றி நிகழும் என்ற கருத்து ஏற்புடையது.

'வள்ளுவர் கூறும் வாய்மை பிறருக்கு ஒரு சிறிதும் தீமை விளைவிக்காததும் நன்மையே பயப்பதுமாகிய சொற்களைச் சொல்லுதல் என்பது. இவைகளை இணைத்து எண்ணும்போது பொய்ம்மை வாய்மைகள் தன்னலம் பற்றாதனவும் பிறருக்குத் துன்பம் விளையாதனவுமான சொற்களைச் சொல்லுதல் எனப்பயனைக் கொண்டு துணிக என்பது பெறப்படும். இது இல்லறத்திற்கு முற்றமுடிவதரிதாகலின் துறவறத்திற்கேயுரியது' எனக் காரணமும் கூறுவர் சொ. த. இதனை 37வது அதிகாரமாகக் கொள்வர் குழந்தை.

30.1. வாய்மை எனப்படுவ தியாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல். (உ. ௬௧)

உரைப் பகுதி:

அ) மணக்.: பொய் சொல்லாத மெய் என்றுசொல்லப்படுவது யாது என்று வினவின், பிறர்க்கு யாதொன்றாலும் தீமை பயவாத சொற்களைச் சொல்லுதல் என்றவாறு.

வாய்மை யாது என்றார்க்கு, இது கூறப்பட்டது.

ஆ) பரிதி.: எ—து உண்மையே சொல்வதற்குச் சரி; யாவர்க்கும் தோஷவார்த்தை[1] சொல்லாமல் இருப்பது என்றவாறு.

---

1. தோஷ வார்த்தை—குற்றம் பொருந்திய சொல்.

ஈ) *காளி.*: எ—து வாய்மை என்று சான்றோரால் எடுத்து ஏத்தப் படுவது[2] யாதோ எனில் தமது நாவினால் யாதானும் ஒன்று தமக்கும் பிறர்க்கும் ஒரு தீங்கும் இல்லாதனவாகிய தூய சொற்களைச் சொல்லுதல் என்றவாறு.

வாய்மை என்பது மெய்ம்மை.

உ) *பரிமேல்.*: மெய்ம்மை என்று சிறப்பித்துச் சொல்லப்படுவது யாது என்று வினவின், அது பிறிதோருயிர்க்குத் தீங்கு சிறிதும் பயவாத சொற்களைச் சொல்லுதல்.

தீமை யாதொன்றும் இலாத என இயையும், எனப்படுவது என்பது 'ஊரெனப்படுவது உறையூர்' என்றாற் போல நின்றது. இதனால் நிகழ்ந்தது கூறல் என்பது நீக்கப்பட்டது. அதுதானும், தீங்கு பயவாதாயின் மெய்ம்மையாம், பயப்பின் பொய்ம்மையாம் என்பது கருத்து.

இராமா.: வாய்மையெனப்படுவது-மெய்மையென்று சிறப்பித்துச் சொல்லப்படுவது, யாதெனின் — எதுவென்றுவினாவினால், யாதொன்றுந்தீமையிலாத — யாதொருதீமையுமில்லாத சொற்களை, சொலல்—சொல்லுதலாம். எ—று.

அந்தச் சொல்லுதல் தீங்குதராதாயின் மெய்மையாம். தரின் பொய்மை யென்பது கருத்து. இதனாலே நடந்தது சொல்லுதல் மெய்மையென்பது நீக்கப்பட்டது.

ஊ) *கவிராசர்*: மெய் என்று சொல்லுகிறது எது என்று கேட்டால், பின்னை ஒரு சீவனுக்குச் சற்றும் பொல்லாங்கு வாராத சொற்களைச் சொல்லுதல்; (எ—று).

ஏ) *பழைய ?*: மெய்ம்மை என்று சிறப்பித்துச் சொல்லப்படுவது யாதென வினவின், அது பிறிதொருயிருக்குச் சிறிதும் தீங்கு வாராத சொற்களைச் சொல்லுதல்.

ஐ)) தொகுப்பும் குறிப்பும்:

உரையாசிரியர்கள் கருத்தனைத்தும் 'வாய்மையைப் பயனைக் கொண்டறிக' என்பதால் மாறுபாடு இல்லாதன. 'எனப்படுவது'— 'மேன்மக்களாற் சிறப்பிக்கப்பட்டு, ஞான ஒழுக்கத்தோடு ஒத்த இயல் பிற்றாகலானும், பழி பாவமின்மையானும் சிறப்பிக்கப்பட்டது' என விளக்கந்தருவர் *சொ.த.*

மு.ரா.அரு. 'இதனால் நடந்ததைச் சொல்லுதல் மெய் என்பது மறுக்கப்பட்டது.

2 ஏத்தப்படுவது—போற்றப்படுவது.

வ.உ.சி. 'தீமை யாதொன்றும் இல்லாத சொலல்—குற்றமற்ற உயிர்க்குத் தீங்கு யாதொன்றையும் பயவாத சொற்களைச் சொல்லுதல். இக்குறள் வாய்மைக்கு விலக்கு.

ஒ) ஒப்புமைப் பகுதி:

வாய்மை:

மலைதலின் வாய்மை யார்க்கும் வாய்மொழி
மதிப்பை ஆக்கும் —யசோ., 243

ஓ) மேற்கோள்பகுதி:

நச்சி.: பொய்யாமைக்கு மேற்கோள். (தொல். பொருள். 76.)

இராம்.: பொய்யாமையாவது தீமைபயக்கும்சொற்களைக் கூறாமை என்பதற்கு மேற்கோள். (தொல். பொருள். 75.)

30.2. பொய்ம்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின். (உகூஉ)

உரைப்பகுதி:

அ) மணக்.: பொய்யும் மெய்யோடு ஒக்கும்; குற்றம் தீர்ந்த நன்மையைப் பயக்கும் ஆயின் என்றவாறு.

ஆ) பரிதி.: எ—து பொய்யும் மெய் சொல்லுதற்கு ஒக்கும்; நன்மையைக் கொடுக்குமாகில் என்றவாறு.

இ) பரிப்.: மேற்தன்நெஞ்சறிவது பொய்யற்க வென்றார். அதனைப் பொய்யாது சொல்லுங்கால் தீமை பயப்பனவும் உள; அதனைப் பட்டாங்குக்[1] கூறாது மறைத்துச் சொல்ல நன்மை பயக்குமாயின்.

ஈ) காளி.: இவர் உரை பரிதியார் உரை போன்றதே.

உ) பரிமேல்.: பிறர்க்குக் குற்றம் தீர்ந்த நன்மையைப் பயக்குமாயின், பொய்ம்மைச் சொற்களும் மெய்ம்மைச் சொற்களின் பாலவாம்.

குற்றந் தீர்ந்தநன்மை—அறம்; அதனைப் பயத்தலாவது கேடாதல் சாக்காடாதல் எய்த நின்றதோருயிர் அச்சொற்களின் பொய்ம்மையானே அதனின் நீங்கி இன்புறுதல், நிகழாதது கூறலும் நன்மை பயவாதாயின் பொய்ம்மையாம்; பயப்பின் மெய்ம்மையாம் என்பது கருத்து. இவை இரண்டுபாட்டானும் தீங்கு பயவாத நிகழ்ந்தது கூறலும், நன்மை பயக்கும் நிகழாதது கூறலும் மெய்ம்மை எனவும் நன்மைபயவாத நிகழாதது கூறலும் தீங்கு

1 பட்டாங்கு —நிகழ்ந்தவாறு (உள்ளவாறு)

பயக்கும் நிகழ்ந்தது கூறலும் பொய்ம்மை எனவும் அவற்றது இலக்கணம் கூறப்பட்டது.

இராமா: புரைதீர்ந்த—குற்றமற்ற, நன்மை பயக்குமெனின்—நன்மையைத் தருமாயின், பொய்ம்மையும் வாய்மையிடத்த—பொய்மொழிகளுமெய்மொழிகளினிடத்திலே சேரும், எ—று.

குற்றந்தீர்ந்த நன்மையாவது தருமம். அதைத்தருதலாவது, கேடாயினுஞ்சாவாயினும் பொருந்தி நின்றதோருயிர் அந்தப் பொய்மொழிகளாலே யவற்றின் நீக்கி யின்பத்தை யடைவது. நடவாததைச் சொல்லுதலும் நன்மை தராதாயின் பொய்மையாம், தருமாயின்மெய்மையாமென்பது கருத்து. இவையிரண்டு பாட்டாலும் நன்மை தருகின்ற நடந்தது நடவாதது சொல்லுதலிரண்டும் மெய்மை யென்பதும். தீமை தருகின்ற நடந்தது நடவாதது சொல்லுதலிரண்டும் பொய்மையென்பதும், விளக்கி யவற்றி னிலக்கணங்கூறப்பட்டது.

ஊ) *கவிராசர்:* குற்றமில்லாத நன்மையை உண்டாக்குகிறதானால் பொய்யான வார்த்தையும் மெய்யாம் (எ—று).

ஏ) *பழைய 2:* குற்றம் தீர்ந்த நன்மை உண்டாகின் பொய்ச் சொல்லும் மெய்ச் சொல்லின் பாலவாம்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'புரைதீர்ந்த நன்மை'

'குற்றம் தீர்ந்த நன்மை' *மணக்.*; 'நன்மை' *பரிதி.*; 'பக்தியும் பாவமும்' *தக்கீரர்*; ஏனையோர் அனைவரும் 'குற்றந்தீர்ந்த நன்மை' யெனவே பொருள் காண்பர். *பரிமேலழகர்* 'குற்றந்தீர்ந்த நன்மை—அறம்' என்பர்.

புரைதீர்ந்த நன்மைக்கு விளக்கமும்எடுத்துக்காட்டுந் தரும் வகையில் உரைகளிற் காணப்படும் மாற்றங்கள். 'கேடாதல் சாக்காடாதல் எய்த நின்றதோருயிர் பொய்ம்மையான் அதனினீங்கி இன்புறுதல்' *பரிமேலழகர்*. 'நோயுற்றுக்கிடப்பான் ஒருவன் தன்னிலையை ஐயப்பட்டுப் பக்கத்தில் இருப்பவனை நான் பிழைப்பேனா என்று வினாவிய இடத்து, அவன் உண்மைநிலையுரைப்பானாயின் நோயாளியின் நோய் மிகலாம் அல்லது பத்துநாள் கழித்து இறப்பவன் பயத்தான் அன்றே இறக்க நேரலாம். மறைத்துக் கூறின் மருந்து முதலான பிறகாரணங்களாலும் மனத்துணிவாலும் பிழைக்க நேரின்அப்பொய் பொய்யாகாது' என்பர் *சொ.த.*

'இருவர் கலகம் விளைத்து ஒருவனையொருவன் அடிக்கவரும் போது அடிக்கு அஞ்சி வந்தவன் நம்மிடம் அடைக்கலம் புக,

அவனை மறைப்பதற்காகப் பொய் சொல்லலாம்.அது பொய்யாகாது என்பர் குழந்தை, *வை.மு.கோ.* 'பழிபாவங்களைத் தராத தருமத்தைக் கொடுக்குமாயின்' என உரைகண்டு, 'ஆயிரம் பொய் சொல்லி ஒரு தாலியைக் கட்டு' என்ற பழமொழிக்கு இணங்கத் திருமணப் பொருட்டுச் சொல்லும் பொய்யும் மெய்யேயாம்' என்பர், ***இராமலிங்கனார்.*** 'ஒரு தாய் பல பொய்களைச் சொல்லித் தன் பிள்ளைக்கு மருந்தூட்டுவது போல' என்பர். *தேவநேயர்* 'எவருக்கும் எவ்வகைத் தீங்கும் இழப்பும் விளைக்காத நற்பயன். இது வழிப்பயணி ஒருவர் தாம் செல்லும் ஊர் எவ்வளவு தொலைவில் உள்ளது என வினவின் அவர் அஞ்சி ஒதுங்காதவாறு அண்மையில் உள்ளது' என்றலும், நோயாளி தன்னிலையை வினாவியவழி 'நேற்றைக்கு இன்று முக்காற்பகுதி குணம்; நாளை சரியாய் விடும்' என்றலும், விக்கலைத் தடுக்கத் திடுக்கிடும் செய்தி ஒன்றைப் படைத்து மொழிதலும் 'போல்வன' என்பர். இவற்றால் களவு கொலை செய்து வருபவனை மறைத்துவைத்துக் காணேன் என்றல் போல்வன அரச தண்டனைக்கும் நாட்டு நலனுக்கும் தீமையாதலின் அவை போல்வன தீமை செய்தவனுக்கு நன்மையாயினும் நீதிக்குமாறாதலின் அப்பொய் பொய்யேயாதலோடன்றிக் கொலைஞனுக்குத் துணைநின்ற குற்றமும் உண்டாம் என்பது.

மேலும் 'நன்மையாயின் கொலையை மறைத்தலும் வாய்மையாமே எனின், அது பீடாநிமித்தமாதலின் ஆகாது' என்ற *நீலகேசியுரையும்* ஈண்டு எண்ணுதற்குரியது. (*நீலகேசி*, 326)

ஒ) ஒப்புமைப் பகுதி:

பொய்ம்மையும் வாய்மையிடத்த:

உய்யக் கொள்வன் எனச்சொல்லி யுள்ளத்தால்
கையிற் காட்டல் கரவுள தாமெனில்
பொய்சிதைத்த தென்சொலிப் பெயர்ந்துரை
பொய்யுரைத் திலன் என்றல் பொருந்துமோ —*நீலகேசி* 326.,

ஒருத்தனை யவ்வாறு அழிக்க வேண்டினால் எமக்குக் கைகாட்டியும் நிலங்காட்டியும் வஞ்சனையால் கொல்ல வேண்டுவதில்லை; என்னை?

—நீல. (உரை) மொக்கலவாதச்சருக்கம்., 60

வலியன்.... ......உண்டு *கம்பராமா.*,2193

உம்மையின் மறுமை தன்னில் உறுபயன் இரண்டும் பார்க்கின்
இம்மையில் விளங்கும் யார்க்கும் அவரவர் இயற்கையாலே

மெய்ம்மையே ஒருவர்க்குற்ற விபத்தினை மீட்குமாகில்
பொய்ம்மையும் மெய்ம்மை போலப் புண்ணியம் பயக்குமாதோ
—*வில்லி* பதினைந்தாம்.,24

பொய்யுரை புகலிற் றீமையாம் என்னப் புகன்றனர் புலமைநன் குணர்ந்தோர்
ஐயநுண் மருங்குற் செய்யவாய் மகளிர் புலவியிலந் தணராவி
உய்யுமென் புழியில் லாவினையளிக்கு மிடத்தினி லோடரிநெடுங்கண்
தையலார் மனத்திற் பொய்ம்மையும் மெய்ம்மை தன்னினும்விழுமிதா மன்றே
—*காசிகாண்டம்.*

ஓ) *மேற்கோள்பகுதி:*

குணசா: மூன்றாம் எழுத்து ஒன்றிவந்த எதுகைக்கு மேற்கோள். (*யா.கா.43*)

யா.வி.உரை: மூன்றும் எழுத்து ஒன்றிய எதுகைக்கு மேற்கோள். (சூ,36)

நீலகேசி உரை: 'உய்யக்கொள்வன் எனச்சொல்லி உள்ளத்தால் கையில் காட்டல் கரவு உளதாம் எனில்' என்பதன் உரையில் ஒருத்தனைஅவ்வாறு ரக்ஷிக்கவேண்டினால் எமக்குக் கைகாட்டியும் நிலம் காட்டியும் வஞ்சனையால் சொல்லவேண்டுவதில்லை; என்னை? ''பொய்மையும்......எனின்'' என்பது எம்மோத்தாதலால் பிராணி பீடாநிவர்த்தியர்த்தமாகப் பொய் உரைத்தலும் ஆவது ஆதலின் என்பது. நன்மை வேண்டிப்பொய் சொல்லுவதாயின் நன்மை வேண்டிக் கொலை முதலாயினவும் ஆமோ எனில், நன்மையாவது சீவன்கட்குப் பீடை புகுதாமல் வர்த்தித்தலாதலின் கொலை முதலாயின ஜீவன்கட்குப் பீடாநிமித்தமாதலின் ஆகாது என்பது. (326)

30.3. தன்நெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும். (உகூரு)

உரைப்பகுதி:

அ) மணக்.: தன்நெஞ்சு அறிந்ததனைப் பொய்யாது சொல்லுக; பொய்ப்பனாயின், தன் நெஞ்சுதானே தன்னை ஒறுக்கும் என்றவாறு.

சுடுதலாவது அதனால் பிறர்க்கு உளதாகும் தீமையைக் கண்டு 'என்செய்தோம் யாம்' என்று வருந்துவித்தல். இது பொய்யாமை வேண்டும் என்றது.

ஆ) *பரிதி.:* எ—து மன மறிந்து பொய்யைச் சொல்ல வேண்டாம் சொன்னானாகில் ஆத்மா விதனப்படும்[1]; அது ஏது எனில், வாக்கு

1 விதனப்படும் — துன்பப்படும்;

என்கிற புலன் பொய்சொல்ல நாம் நரகத்துக்கு ஏதுவாகிறோம் என்று, நின்ற புலன்கள் விதனப்படும் என்றவாறு.

ஈ) *காளி.*: எ—து வாய்மையானது இத்துணைப் பெருமையாதலான் தான் சொல்லுவது ஒன்றினைப் பிறர் அறியாது வாய்மையாகக் கருதினரேனும் மற்றிது பெரிதும் குற்றமாதலால் தனது நெஞ்சு அறிவதாக எஞ்ஞான்றும் பொய்யற்க; என்னை எனின், அவ்வாறு பொய்த்தபின் உள்ளறிகருவியாகிய தன்னெஞ்சுதானே தன்னைச் சுடும் என்றவாறு.

உ) *பரிமேல்.*: ஒருவன் தந்நெஞ்சு அறிவதொன்றனைப் பிறர் அறிந்திலர் என்று பொய்யாது ஒழிக[2]. பொய்த்தானாயின் அதனை அறிந்த தன் நெஞ்சே அப்பாவத்திற்குக் கரியாய்[3] நின்று தன்னை அதன் பயனாய துன்பத்தை எய்துவிக்கும்.

நெஞ்சு கரியாதல் 'கண்டவர் இல்லெனவுலகத்துள் உணராதார் தங்காது தகைவின்றித் தாஞ்செய்யும் வினைகளுள் நெஞ்சறிந்த கொடியவை மறைப்பவு மறையாவாம் நெஞ்சத்திற் குறுகிய கரி இல்லையாகலின்[4] என்பதனாலும், அறிக. பொய் மறையாமையின், அது கூறலாகாது என்பது இதனால் கூறப்பட்டது,

காரி.: பொய்த்தபின் — பொய்த்தானாயின் எனச் செயின் என் வினை எச்சவாய்ப்பாடாய் முடிந்தால் 'பின்முன்கால் கடை[5] என்னும் சூத்திரத்திற் கேற்பப் பின் என்பதோர் வாய்ப்பாடு பெற்ற வினையெச்சம் என்க.

> *இராமா.*: தன்னெஞ்சறிவது ஒருவன் தன் மனமறிவதாகிய வொன்றை-பொய்யற்க (பிறரறிந்திலரென்றுமறைத்தும்)பொய் சொல்லாதொழிக, பொய்த்தபின்—பொய்சொன்னானாயின், தன்னெஞ்சே தன்னைச்சுடும்—(அதையறிந்திருந்து) தன்மனந் தானேயந்தப் பாவத்திற்குச் சாச்சியாகநின்று அவனைச்சுடும். எ—று.
>
> சுடுதலாவது, அப்பாவத்தின்பயனாகிய துன்பத்தையவனுக்குப் பொருத்துவிப்பது. பொய் மறைபடாததலாவது சொல்லலாகாதென்பது இதனாற் சொல்லப்பட்டது'.

ஊ) *கவிராசர்*: ஒருவன் தந்நெஞ்சு அறிந்தவற்றைப் பிறர் அறியார்கள் என்று பொய் சொல்ல வேண்டாம். பொய் சொன்னால் அதனை அறிந்த தன்நெஞ்சே தன்னைச்சுடும்.

---

2 பொய்யா தொழிதல் — மறைத்துப்பேசாமை.

3 கரியாய் — சாட்சியாய்; 4. கலி., 125: 1—4; 5. தொல். சொல். 226.

ஏ) *பழைய 2*: ஒருவன் தன் நெஞ்சறிவது ஒன்றினைப் பிறர் அறியார் என்று பொய்யாது ஒழிக; பொய்த்தானாயின் தன்னெஞ்சே அப்பாவத்திற்குச் சாட்சியாய் நின்று. தன்னை அப்பாவம் விளையும் போது துன்பத்தினால் சுடும்.

மல்லர்: உன்னுடைய நெஞ்சு அது பொய் என்றறிந்து பொய் சொல்லாதே; அது என் என்றால் சொன்னதுக்குப் பிறகு உன் நெஞ்சு தானே உன்னை வாதிக்கும், எ—று.

நெஞ்சறிந்து பொய் சொன்னால் அதுக்குச் சாட்சியாய் இருந்து நெஞ்சு பொய் சொன்னவனுக்கு எப்போதும் அந்தக் குற்றத்தின் அவலட்சணத்தைச் சொல்லிக் காட்டுகிறபடியினால் வாதினை செய்யும் என்பது கருத்து பொய்யற்க —பொய்சொல்ல வேண்டாம்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

''பிறர்நலம்பெறப்பாவத்தொடும் பழியொடும் படாத பொய்யும் மெய்யாம் எனவே யாண்டும் நன்மை பயக்கும் எனின் பொய் கூற லாம் என்பது கருத்தன்று; இது தன்னலத்திற்காகவும், தற்சேர்ந்தார் பழிபாவங்களை மறைக்கவும் மனமறிந்த ஒன்றை மறைத்துப் பேசலாகாது. பேசின் நெஞ்சே சுடும்'' என எச்சரிக்கிறது.

காளிங்கர் 'பொய் சொல்வானது பொய்யைச் சொலல் வன்மையால் கேட்டார் மெய்யே என்று கருதினராயினும், அச்சொல் லால் பிறர்க்கு விளையுந் தீமைகளைக் கண்டு பொய் சொன்னவன் நெஞ்சமே சொன்னவனைச் சுடும்' என்று கருதுகிறார். *பரிமேல ழகரும்* இவர் கருத்தை ஒட்டி உரைப்பர்.

'சுடும்' என்பதற்கு *மணக்குடவர்* 'ஒருவன் பொய்சொல்ல' அதனால் பிறவுயிர்கள் படும் தீமையைக் கண்டு நாம் என்ன செய்து விட்டோம் என்று கழிவிரக்கப்படச் செய்தல்' என்பர். *பரிதியார்* 'ஆன்மா துன்பப்படும் வாக்குப் பொய்சொல்ல ஏனைய கருவிகார ணங்கள் வாக்கினால் நாம் நரகத்துன்பத்தையடைய இருக்கிறோ மே என்று ஏனைய புலன்கள் விசனப்படுதல்' என்பர். தேவநேயர் மனச்சான்று குத்திக் காட்டிக்காட்டி வருத்துவதேயன்றித் தெய்வம் சான்றாக நின்று பொய்யையம்பலப்படுத்தி அரச தண்டனையையும் தெய்வக் கோபத்தையும் கூடத் தரும்' என்பர்.

கவிராசர்: 'தன்னைச் சுடுதலாவது பொய் பேசிய பாவத்தால் நிரயத்துன்பத்தை நுகரும்போது நெஞ்சுகூட நின்றனுபவிக்கும்' என்பர். இவ்வுரை அத்துணைச்சிறப்பினதன்று. நிரயத்துன்பத்தை உயிரே அனுபவிப்பது. எடுத்த தேகத்திலே தொழிற்பட்டு உயிருக்கு

தவிய கரணங்கள் அதாவது அகப்புலன்கள் தேகம் கழிய உடன் கழிவன ஆதலால் அவை நிரயம் புகுவதில்லை என்க.

இவ்வுரைகளுள், சுடும் என்பதற்கு *மணக்குடவர்* தரும் விளக்கமும் உரையும் பொருந்துவனவாம். *பரிதியார்* கூறிய 'ஆன்மாவிதனப்படும்' என்பதும் ஏற்புடையது. நெஞ்சு கருவியாய்த் தனக்கென்று அறிவிலாதது. அது சுடும் என்றல் ஆன்மா வருந்த, அதன் விளைவால் கழிவிரக்கப்படுதலே ஏற்புடையது ஆதலின் இருவருரையும் இணைந்து ஏற்புடைய வாகின்றன.

வ.உ.சி, இக்குறட்பாவை முதற்பாவாகக் கொண்டனர், 'தன்னெஞ் சறிவது பொய்யற்க' அவர்பாடம்.

ஒ) ஒப்புமைப் பகுதி:

'தன்நெஞ்சறிவது பொய்யற்க':

''அறிகரி பொய்த்தல் ஆன்றோர்க் கில்லை'' —*குறுந்.,* 184

''அறிகரி பொய்த்தலின் ஆகுமோ அதுவே'' —*நற்.,*196:9

''நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்'' —*உலகநீதி*

முற்றும்:

''கண்டவர் இல்லென உலகத்துள் உணராதார்
தங்காது தகைவின்றித் தாம்செய்யும் வினைகளுள்
நெஞ்சறிந்த கொடியவை மறைப்பினும் மறையாவாம்
நெஞ்சத்துக் குறுகிய கரி இல்லை யாகலின்'' —*கலி.,*125: 1—4,

''தன்னைத் தன்நெஞ்சம் கரியாகத் தான் அடக்கில்
பின்னைத்தான் எய்தா அறனில்லை'' —*அறநெறி.,*207

ஓ) மேற்கோள்பகுதி:

மயிலை: 'கேட்குந போலவும்' என்னும் சூத்திரத்தில் இயற்றுந போலவும் என்பதற்கு மேற்கோள். (408)

சங்கர: இவரும் அதற்கே எடுத்துக்காட்டுவார். (நன். 409)

30.4. உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன். (உகூச)

உரைப்பகுதி:

அ) மணக்:. தன் நெஞ்சினால் பொய்யை நினையாது ஒழுகுவனாயின், உலகத்தார் நெஞ்சினுள் எல்லாம் உளனாவன் என்றவாறு.

இது பொய்யை நினையாதாரை எல்லாரும் போற்றுவார் என்றது.

ஆ) *பரிதி*.: எ-து மனம் பொருந்த மெய் சொல்லுவானாகில் சர்வேசுவரனுக்கு[1] நிகராகையால் உலகத்தார் ஆத்துமாவில் இருப்பன்[2] என்றவாறு.

ஈ) *காளி*.: எ-து ஒருவன் தனதுவாக்கினால்சொல்லுஞ்சொல்லானது மனத்தினும் பிழையாமையே வாய்மைக்கு இலக்ஷணமாகலால் மற்றங்ஙனம் உரைப்பதனை உள்ளத்தால் பிழையாது உரைத்து ஒழுகும் எனின் மற்றிவன் உலகத்துச் சான்றோராகிய உயர்ந்தோர் உள்ளத்துளெலாம் உளன். எனவே இவரது அருட்குறிப்பு[3] எஞ்ஞான்றும் உடையது என்றவாறு.

உ) *பரிமேல்*.: ஒருவன் தன் உள்ளத்திற் கேற்பப் பொய்கூறாது ஒழுகுவானாயின், அவன் உயர்ந்தோர் உள்ளத்தின்கண் எல்லாம் உளனாம்.

உள்ளத்தால் என்பது வேற்றுமை மயக்கம்.[4] பொய் கூறாது ஒழுகுதலாவது மெய் கூறி ஒழுகுதல். அவனது அறத்தினது அருமை நோக்கி[5] உயர்ந்தோர் எப்பொழுதும் அவனையே நினைப்பர் என்பதாம். இதனால் இம்மைப்பயன் கூறப்பட்டது.

> *இராமா*.: உள்ளத்தாற்பொய்யாதொழுகின்— ஒருவன்தன்மனத்திற்கு ஏற்கும்படிபொய்சொல்லாமல் நடப்பானாயின், உலகத்தார்—உயர்ந்தோருடைய, உள்ளத்துளெல்லாமுளன்— மனங்களிலே யெல்லாமிருப்பான், எ—று.
>
> உள்ளத்தாலென்றவிடத்து ஆலுருவுமயங்கிநின்றது, உள்ளத்துக்குப் பொருந்த வெனக் குவ்வுருபுமதனதுநேர்ச்சிப்பொருளுந் தொக்குநிற்றலின், பொய் சொல்லாததருமத்தினருமைநோக்கி யுயர்ந்தோரவனையெப்பொழுதும் நினைப்பரென்பது கருத்து. இதனா லிம்மைப்பயன் சொல்லப்பட்டது.

ஊ) *கவிராசர்*: ஒருவன் தன் மனத்திற்கேற்கப்பொய்யாமல்இருந்தானாகில் அவன் பெரியோர்கள் மனசுகளிலே எல்லாம் இருப்பான், (எ—று).

ஏ) *பழைய 2*: ஒருவன் தன் உள்ளத்துக்கேற்பப் பொய் சொல்லாமல் நடப்பானாயின், அவன் உயர்ந்தோர் உள்ளத்து எல்லாம்இருப்பன்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'உள்ளத்தாற் பொய்யாது ஒழுகின்'

---

1 சர்வேசுவரன்-முழு முதற்கடவுள்.
2 ஆத்துமாவில் இருத்தல்- உணர்வு வடிவாய் உயிரான் நினைக்கப்படுதல்.
3 அருட்குறிப்பு-கருணைக்குறிப்பு; 4. தொகுப்பும் குறிப்பும் காண்க,
5 'அவன் தவத்தினது அருமை' எனவும் பாடம்.

'தான் நெஞ்சினால் பொய்யை நினைக்காமல் ஒழுகினால்' *மணக்.*; 'மனம்பொருந்த மெய் சொன்னால்' *பரிதி.*; 'வாய்ச்சொல் மனத்தினுமிழையாமலிருத்தல்' *காளிங்கர்*; 'உள்ளத்திற்கு ஏற்பப் பொய் கூறாமலிருப்பானாயின்' *பரிமேலழகர், கா சு, சி. இ.*, அனைவரும் கூறுவர்.

இராமலிங்கனார் இக்குறட்பாவின் போந்த கருத்தாக 'மனச்சாட்சிக்கு மாறாக நடக்காதவன் ஒருபொய் சொன்னாலும், அதன் விளைவு புரைதீர்ந்த நன்மையாகவே இருக்கும். ஆதலால் தீமையே விளையாது; ஆதலால் அவன் என்ன சொன்னாலும் அது சத்தியம் எனப் பாராட்டி ஒப்புவர்' என்று உரைப்பர். இவர் உரைப்போக்கின் வண்ணம் உள்ளத்துள் உண்மை—எல்லாரும் இவன் சத்தியவான் என ஒப்புந்தன்மை என்பது கருத்தாகப் போதரும் என்க. *பரிதியார்* 'மனச்சான்றிற்கு மாறின்றி ஒழுகுபவன் கடவுளுக்கு நேரானவன்; ஆதலால் உலகத்தில் உயிருக்குயிராக எங்கும் இருப்பன்' என்கின்றார். இது உள்ளம்—ஆன்மா என்பதனைச் *சிவஞானபோதத்தானும்* அறியலாம். *மணக்குடவர் பரிமேலழகர்* போன்ற உரையாசிரியர்கள் 'உலகியல் நிலையை ஒட்டி உலகம் என்பது உயர்ந்தோர் மேற்றேயாதலின் உயர்ந்தோர் உள்ளத்தில் எல்லாம் உளன். அதாவது போற்றப்படுவான்' என்றனர். *பரிதியார்* 'மனமறியப் பொய் பேசாதிருத்தல் பெரிய தெய்வத்தன்மை. அதனால் எல்லாவுயிர்களிடத்தும் உயிருக்குயிராக இருப்பான்' என்று உயர்த்திக் கூறுகிறார். இயைந்தன கொள்க.

''உள்ளத்தாற் பொய்யா தொழுகின்'' என்பதனைப் *பரிமேலழகர்* 'உள்ளத்திற்கு ஏற்பப் பொய்யாது ஒழுகின்' எனப்பொருள் கண்டு 'மூன்றாம் வேற்றுமையுருபு நான்காம் வேற்றுமைப் பொருளில் வந்த வேற்றுமை மயக்கம்' என்பர். *மணக்குடவர்* 'நெஞ்சினால் பொய்யை நினைக்காது ஒழுகின்' என மூன்றனுருபு கருவிப் பொருளில் வருவதாக உரை காண்பர். பரிதி, மனச்சான்றிற்கு மாறின்றி ஒழுகுபவன்' எனப் *பரிமேலழகரை* ஒட்டியுரைப்பர். இவர் உரைகளோடு உள்ளத்தான்—உள்ளத்தோடு அதாவது மனத்தொடு பொருந்த ஒழுகின் என ஆன் உருபு உடனிகழ்ச்சிப் பொருளதாகக் கொண்டும் உரை காணலாம்.

உள்ளம் ஒரு கருவி. அது பொருள்களை உள்ளவாறு உணரும்; உரைக்கும் போதும் அங்ஙனமே உரைக்கும்; அப்போது உயிரைப் பற்றிய தன்னலவுணர்ச்சி அல்லது சூழ்நிலை அதனை மாற்றிச் சொல்ல வைக்கும். அங்ஙனமாகாமல் செயலும் சிந்தையும் ஒத்துரைத்தால் அது பெரும் பயன் தருவதாம் என்ற கருத்தினதாம் உரைகள் யாவும் சிறந்தனவே என்பது.

இப்பகுதிக்கு 'துறவறத்தார்க்கு வாய்மை பொய் சொல்லக் கருதாமை' என்பது பெறப்படும் என்ற கோ. வ. விளக்கம் பாராட் டிற்குரியது. கருதுதலும் அவர்கட்குக் கூடா ஒழுக்கமாதலின்.

வ.உ.சி. 'உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளன்' எனப் பொதுமையிற் கொள்வர். உள்ளம்—உள்ளச்சான்று; ஆகுபெயர்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளன்:

தாவர சங்கம மென்னுந் தன்மைய
யாவையு மிரங்கிடக் கங்கை எய்தினான் —கம்பராமா., 2391

30.5. மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானஞ்செய் வாரின் தலை. (உகூரு)

உரைப் பகுதி:

அ) *மணக்.*: மனத்தோடே கூட மெய் சொல்லுவனாயின், தவத் தோடே கூடத் தானஞ்செய்வாரின் தலையாவான் என்றவாறு.

இஃது எல்லா நன்மையும் பயக்கும் என்றது.

ஆ) *பரிதி* 'தனத்தொடு' பாடம். எ—து மனமும் வாக்கும் கூடிச் சத்தியமே சொல்வானாகில் தனத்தாலே தசதானம்[1] பண்ணுவாரி லும் பெரியன் என்றவாறு.

ஈ) *காளி.*: எ-து மற்று இங்ஙனம் மனத்தொடு கூடிய வாய்மை யானது சான்றோர் செய்யுந் தவத்தினும் தானத்தினும் சாலத் தலை மைப்பாடு உடைத்து என்றவாறு.

உ) *பரிமேல்.*: ஒருவன் தன் மனத்தோடு பொருந்த வாய்மையைச் சொல்வானாயின்; அவன் தவமும் தானமும்[2] ஒருங்கு செய்வாரினும் சிறப்பு உடையன்.

மனத்தொடு பொருந்துதல் மனத்திற்கு ஏறுதல். புறமாகிய மெய்யால் செய்யும் அவற்றினும் அகமாகிய மனமொழிகளால் செய்யுமது பயனுடைத்து[3] என்பதாம்.

இ்ராமா.: மனத்தொடுவாய்மைமொழியின்—ஒருவன்தன்மனத் தொடு பொருந்தமெய்சொல்லுவானாயின், தவத்தொடுதானஞ் செய்வாரிற்றலை—தவமுந்தானமுமொருமிக்கச் செய்வாரினு மவன்சிறந்தவன், எ—று.

---

1 தசதானம்—பத்துத்தானம். அவை: உப்பு, எள்ளு, நெய், நெல், பசு, பூமி, பொன், ஆடை, வெல்லம், வெள்ளி என்பன.

2 'தவத்தொடு தானமும்' என்றும் பாடம்.

3 மனத்தொடு வாய்மை மொழிபவன் தவத்தின் பயனிலும் தானத்தின் பயனிலும் சிறந்த பயனை எய்துவான் என்பது.

மனதொடுபொருந்துதல், மனத்திற்குஒத்திருத்தல், புறமாகிய தேகத்தாற்செய்யுஞ்செயல்களிலும் அகமாகிய மனமொழிகளாற் செய்வது பயனுளதென்பதாம்.

ஊ) *கவிராசர்*: ஒருவன் தன் மனத்துக்குச் சரி போக மெய் சொல்லு வானாகில் அவன் தபசும் தானமும் பண்ணுகிறவர்களைப் பார்க்கி லும் பெரியவன், (எ—று).

ஏ) *பழைய 2*: ஒருவன் தன் மனத்தொடு பொருந்த வாய்மையைச் சொல்வானாயின் அவன் தவமும் தானமும் செய்வாரினும் சிறப்பு டையனாம்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

பழைய உரைகளுள் *காளிங்கர் உரை* தெளிவானது. 'மனம் பொருந்தி வாய்மையே சொல்லின் அதன்பயன் தானம் தவம் செய்வ தாலாய பயனினும் பெரிது' என்ற கருத்தைப் பயக்கிறது. ஏனை யோர் உரைகளிலிருந்து இக்கருத்தைச் சுற்றியும் வலிந்தும் கருத வேண்டியிருப்பதைக் காணலாம். மனத்தொடு-மனத்திற்கு மாறு படாமல். மனத்தொடு பொருந்த என்றே உரைகாண்பார்கள் கா சு. முதலிய அனைவரும்.

தானம் தவம் இரண்டனியல்பையும் 'தானந் தவ மிரண்டுந் தங்கா' (19)என்ற *குறளுரையிற்* காண்க தானம் இல்லறத்தாற்கும் தவம் துறவிக்கும் உரிய செயலாதல் காண்க. மனம்பொருந்த வாய்மையே பேசின் அதன் பயன், தவஞ் செய்யும் துறவி எய்தும் பயனினும், தானம் செய்யும் இல்லறத்தான் எய்தும் பயனினும் சிறந்தது என்பதால், வாய்மை துறவிற்குச் சிறப்பிற் சிறப்பான ஒழுக்கமாகவும் இல்லறத்தாற்குச் சிறந்த ஒழுக்கமாகவும் கொள்ளப் பெறுதல் வேண்டும் எனக் குறித்தவாறாம்.

வாய்மை தலையாயதற்குப் *பரிமேலழகர்* 'தானம் தவம் புற மாகிய மெய்யாற் செய்வன. அவற்றினும் அகமாகிய மனமொழிக ளாற் செய்யும் வாய்மை தலையாயிற்று' எனக் காரணங்காட்டுவர். இதனை ஒட்டிச் சொ. த. வும் கூறுவர். 'மனம் பொறிவழிப் போகாது தடுத்தலே தவம்' ஆதலின், அதுவும் அகச்செயலாதற்குரித்து என்றும் எண்ணுக.

'உள்ளத்தாற் பொய்யா தொழுகின்' 'மனத்தொடு வாய்மை மொழியின்' என்ற இருகுறட்பாக்களும் ஒரே நோக்குடையன வாதலை முற்காலப் பிற்கால உரைகள் அனைத்தாலும் காண்கி றோம். ஆயினும் 'பொய்யாதொழுகின்' என்பது 'சொல்லும் செயலும் மெய்ம்மையுடனிருத்தலையும்' 'மனத்தொ வாய்மை மொழியின்'

என்பது 'நினைப்பும் மொழியும் நேர்மையாக இருத்தலையும் குறிப்பன' எனச் சொல்லமைதியாற் காணலாம். 'உள்ளம்—மனம்' என்பது இலக்கிய உலகில் ஒருபொருட்கிளவியே ஆயினும் மெய்ப்பொருளியலில் உயிரின் அறிவாற்றல், பொருள்களைச் சென்று பற்றும் போது மனம் என்றும், பற்றிய பொருளின் வேறுபாட்டுணர்வுகளை உள்ளுகிறபோது உள்ளம் எனவும் பெயர்பெறும் என்று கூறப்பெறுகிறது. பொய்யாதொழுகின் எனினும் மெய்கூறின் என்றே பொருள். அங்ஙனமே, வாய்மை மொழியின் என்பதற்கும் அதுவே பொருள். ஒன்று எதிர்மறை வாய்பாட்டான் வலியுறுத்துக் கூறியது. மற்றொன்று உடன்பாட்டு முகத்தான் உரைத்தது. இரண்டற்கும் பயன் வேறாதல் சிந்தனைக்குரியது. பொய்யாது ஒழுகின் பொய்மையும் வாய்மையிடத்ததுமாக மதிக்கப்பெறும். பிறர் நலமே கருதிய பொய்யாமை உலகத்தார் உள்ளத்தில் இடம்பிடிப்பதற்கும். *அரிச்சந்திரன்* போல வாய்மை கூறித் தனக்குத் தீமையேவரினும் மனம் பொருந்திய வாய்மை கூறலின் பயன் தானம் செய்தலால் வரும் விண்ணுலக இன்பத்தினும், தவஞ்செய்தலான் வரும் பேரின்பத்தினும தலையாயதாம் என எண்ணத் தோன்றுகிறது. சிந்தித்துத் தேர்க.

வ.உ.சி. 'அகத்துறவியினும் சிறந்தவன்' எனக்கருத்துரைப்பர்.

ஓ) ஒப்புமைப்பகுதி:

'தவத்தொடு தானம்':

தானம் தவமிரண்டும் —*குறள்*, 19
தவமெளிது தானமரிது —*ஏலாதி*, 3
தவத்தொடு தானம் —*அறநெறி*., 143

முற்றும்:

வாய்மையுடைமை வனப்பாகும்—தீமை
மனத்தினும வாயினும் சொல்லாமை மூன்றும்
தவத்தின் தருக்கினார் போல் —*திரிகடுகம்*., 78
... ... மாதவ மறத்தொடும் —*கம்பராமா*., 97
ஒன்று மெய்ம்மை சிதைத்து —*கம்பராமா*., 4376

ஓ) மேற்கோள் பகுதி:

நச்: மனத்தொடு வாய்மை மொழியின்: இதில் ஒடு ஆன் ஆயிற்று. தொல். சொல்.75

மயிலை: மூன்றாம் வேற்றுமை ஒடு உருபிற்கு மேற்கோள். (நன்296)

சங்கர: மனத்தொடு வாய்மை என்ற குறளில் ஒடு உருபு உடன் நிகழ்வதாக்கின. ஏற்புழிக்கோடலான் இவ் உருபிற்கு உடன் நிகழ்ச்சிப்பொருள் ஒன்றுமே கொள்க. (நன்.297)

30.6. *பொய்யாமை அன்ன புகழில்லை எய்யாமை*
எல்லா அறமும் தரும். (உ௯௬)

உரைப்பகுதி:

அ) *மணக்.*: பொய்யாமை—பாடம். பொய்யாமையை உடையன் என்பதனோடு ஒத்த புகழ் வேறொன்று இல்லை; பொய்யாமை யானது அவன் அறியாமல் தானே எல்லா அறங்களையும் கொடுக் கும் ஆதலான் என்றவாறு.

ஆ) *பரிதி.*: எ—து சத்தியத்தைப் போலே புகழில்லை; இந்த நிலை மையிலே நிற்பானாகில் சிவபுண்ணியம்[1] பசுபுண்ணியம்[2] எல்லாம் உண்டாம் என்றவாறு.

இ) *பரிப்.*: இது மேற்றானத்தினும் தவத்தினும் நன்றென்றார், அஃதாமாறு.

ஈ) *காளி.*: எ—து ஒருவர்க்கு வாய்மையை ஒத்ததோர் வன்புக ழில்லை; இனிமற்று அதனினும் அரியது ஒன்று உண்டாவது யாதோ எனில், யான் வாய்மைக்குணமுடையேன் என்று மதித்தி ர.மையும் உடையனாயின்; மற்று அதுதான் வருந்தாதிருக்க எல்லா அறத்தின் பயனையும் தரும் என்றவாறு. எய்யாமை என்பது முயலாமை; அறியாமை என்பாரும் உளர்.

உ) *பரிமேல்.*: ஒருவனுக்கு இம்மைக்குப் பொய்யாமையை ஒத்த புகழ்க்காரணம் இல்லை; மெய்வருந்தாமல் அவனுக்கு எல்லா அறங்களையும் தானே கொடுக்கும்.

புகழ் ஈண்டு ஆகுபெயர். இல்லறத்திற்குப் பொருள் கூட்டல் முதலியவற்றானும் துறவறத்திற்கு உண்ணாமை முதலியவற் றானும் வருந்தல் வேண்டுமன்றே, அவ்வருத்தங்கள் புகுதாமல்[3] அவ்விருவகைப் பயனையும்[4] தானே தரும் என்பார், 'எய்யாமை எல்லா அறமும் தரும்' என்றார்.

இராமா.: எய்யாமை—(மறுமையிலே) சரீரவருத்தமில்லாமல், எல்லா வறமுந் தரும் — எல்லாத்தருமங்களையுந்தானேதரும், (ஆதலால்) பொய்யாமையன்ன புகழில்லை— (இம்மைக்கு) பொய்சொல்லாமையையொத்த புகழாகிய காரணமொருவ னுக்கு வேறேயில்லை, எ.று.

---

1 சிவபுண்ணியம்-சிவனைக் குறித்துச் செய்யும் புண்ணியங்கள். இவை திருக்கோயி கட்டுதல் முதல் வலம்புரிதல், வழிபடுதல் வரை உள்ள புண்ணியங்கள்.

2 பசுபுண்ணியம்-உயிர்களுக்குச் செய்யும் புண்ணியங்கள். அவை அந்தணர்க்கு அன்னம்: வறியர்க்குச் சோறு. வேள்வி ஆசிரியருக்கு ஆடை முதலியன கொடுத்தல்.

3 புகுதாமல்-புகாமல், 'து' சாரியை; 4 இருவகைப்பயன்-இம்மை மறுமைப்பயன்.

புகழாகியகாரணத்தைப் புகழென்றது ஆகுபெயர். இல்லறத்திற் குப் பொருள் தேடுதல்காத்தல் முதலியவற்றாலும் துறவறத் திற்கு உண்டிசுருக்குதல் நோய் முதலிய பொறுத்தலாலும் வருத்தப்படவேண்டும், அப்படி வருத்தப்படாமலே யந்த விருவ கைத் தருமப்பிரயோசனங்களையுந் தானே தருமென்று சொல் லவந்தவர் எய்யாமை யெல்லாவறமுந் தருமென்றார்.

ஊ) கவிராசர்: ஒருவனுக்குப் பொய் சொல்லாமல் இருக்கிறதைப் போலக் கீர்த்தியில்லை. அந்தச் சத்திய விரதமே மறுமைக்கு வேண் டிய செல்வங்களைக் கொடுக்கப்பட்ட சகல தருமங்களையும் கொடுக்கும், (எ-று).

ஏ) *பழைய* 2: ஒருவனுக்கு இம்மையிற் பொய் சொல்லாமைக்கு நிகரான புகழில்லை; மறுமைக்கு மெய்வருந்தாமல் எல்லா அறங் களையும் தரும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

எய்யாமை எல்லா அறமும் தரும்:

(அவன்) அறியாமல் தானே எல்லாஅறங்களையும் கொடுக்கும் என்பதை 'எய்யாமை—அறியாமை' எனப்பொருள் கண்டனர் *மணக் குடவர்*. 'எய்யாமையே அறியாமையே' (தொல்.சொல்.342நூற்பா) என்பது தொல்காப்பிய நூற்பாவாதலானும், சங்ககால வழக்கு 'எய்யாமையொடு இளிவு தலைத்தருமென' (*நற்*,,284) எனவும், ''எய்யாமையலை நீயும் வருந்துதி'' (*அகநா*.,2/2) எனவும் பல ஆட்சியுண்மையானும் எய்யாமை என்னும் எதிர்மறைச்சொல்லே உரிச்சொல்லாதற் சிறப்புடையதாதலானும் வள்ளுவர் நூற்கு இலக்கணம் தொல்காப்பியமே யாதலானும் இப்பொருள் கொண்ட னர் இவர்; *மு.வ*. வும் அங்ஙனமே. *காளிங்கர், பரிமேலழகர், பரிப் பெருமாள், பழைய* 2, *கா.சு., சி.இ* , *தேவநேயர், இராமலிங்க னார்*, முதலியோர் 'மெய்வருந்தாமல் முயலாமல்' எனப்பொருள் கண்டனர். 'எய்த்தல்'— நினைத்தல், வருந்துதல், முயலுதல் என்ற பொருளில் வந்தது பிற்கால வழக்குப்போலும். *பொருநராற்றுப் படையில்* 'எய்த்தமெய்யேன் எய்ப்பேனாகி' (வரி., 69)குறுந் தொகையில் 'எய்த்த இப்பணையெழில் மென்தோள்' (பா.,129 வரி 5-6) என்பனவாகிய வழக்குண்மையான் சங்க இலக்கியங் களிலேயே 'இளைத்தல்', 'வருந்துதல் என்னும் பொருளில் வழங்கு வதும் காண்க. 'வெளிப்படு சொல்லே கிளத்தல் வேண்டா' ஆகலால் இளைத்தல், வருந்துதல் பொருளில் வருவன வெளிப்படுசொல் என விடுத்தனர் போலும் எனக் கொள்ளின் காளிங்கர்கொள்ளும்உரையும் தொன்மையானதாகலாம்.

குழந்தை 'எல்லா அறமும் எய்யாமை தரும்' எனக் கூட்டி எல்லா அறங்களையும் ஒழியாமல் தரும்' என்று உரைப்பர். 'எய்யாமை—ஒழியாமை— தவறாமை' என்பர். *காளிங்கர் மணக்குடவர்* கண்ட உரையை வேறுரையாக உடன் பட்டும் கூறுவர். *வ.சுப.மா.* '(பொய்சொல்ல) அறியாமை' எனப்பொருள் கொள்வர்.

அவனை அறியாமலே அறங்கள் வந்து சேரும் என்பதை வருந்தாமல்(முயலாமல்)' என்ற பொருளையும் தருதலான் தொல் மரபு பற்றிய *மணக்குடவர்* உரையே சிறந்தது.

வ.உ.சி. 'பொய்யாமை எல்லா அறமும் தரும்' பாடம்.

ஓ) ஒப்புமைப் பகுதி:

'பொய்மை...எல்லா அறமும் தரும்':

வாய்மையின் வழாஅது மன்னுயிர் ஒப்புநர்க்கு
யாவதும் உண்டோ எய்தா அரும்பொருள்
—*சிலம்பு* காடுகாண்., 158-159

மெய்யுரைவி ளங்குமணி மேலுலக கோபுரங்கள்
ஐயமிலை நின்ற புகழ் வையகத்து மன்னும் —*சீவக.*,2869
... . புகழ் பொதிந்த மெய்யே போல் —*கம்பராமா.*, 4578
.... பொய்ம்மை யுரைத்திலன் —*கம்பராமா.*, 9242
வாய்கடிந்து அறத்தின் வாழ்வார் —*பெரிய., திருநீல.*, 2

30.7. பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று. (உகூஎ)

உரைப்பகுதி:

அ) மணக்.: பொய்யாமையைப் பொய்யாமல் செலுத்துவனாயின்[1], பிற அறங்களைச் செய்தல் நன்றாம்; அல்லது தீதாம் என்றவாறு.

ஆ) *பரிதி*:. எ—து பொய்யாமையாகிய சத்தியத்தை மறவாமல் நடத்துவானாகில், தன்மம் செய்யாமல் இருந்தாலும் நன்று என்றவாறு.

இ) *பரிப்* : இது பொய்பட ஒழுகுவனாயின் தவம் செய்தாலும் பயன் படாது என்றது.

ஈ) *காளி*: எ-து பொய்யாமையாகிய வாய்மையைச் செலுத்தும் இடத்து இடையிடையே பொய்புகுந்து வழங்காமல் நடத்தவல்ல

1. பொய்யாமல் செலுத்துதல்—தவறாமல் செலுத்துதல்;

னாகில், அதுவே அறம். இதற்கு வேறாகிய பாவங்களை மேற்கொண்டு செய்யாமையாகிய தவிர்தலை[2] உடைய செயல்களே நன்று என்றவாறு.

செய்யாமை செய்யாமை என்றது ஒருவன் அறம் செய்யக் கருதும் இடத்துப் பொய்யுரைகளாகிய பாவங்களையும் தவிருவான் என்பது பொருள் ஆயிற்று என அறிக என்றவாறு.

இப்படியின்றி இடையே பொய்புகின் அறமும் நன்றாகாது என்றவாறு.

உ) *பரிமேல்.*: ஒருவன் பொய்யாமையே பொய்யாமையே செய்ய வல்லனாயின், அவன் பிற அறங்களைச் செய்யாமையே செய்யாமையே நன்று.

அடுக்கு இரண்டனுள் முதலது இடைவிடாமைமேற்று: ஏனையது துணிவின்மேற்று[3], பல அறங்களையும்[4] மேற்கொண்டு செய்தற்கு அருமையால் சில தவறின் குற்றப்படுதலின் அவை எல்லாவற்றின் பயனையும் தானே தரவற்றாய[5] இதனையே மேற்கொண்டு தவறாமற் செய்தல் நன்று என்பார். 'செய்யாமை செய்யாமை நன்றெ'ன்றார். இதனை இவ்வாறன்றிப் பொய்யாமையைப் பொய்யாமல் செய்யின் பிற அறஞ்செய்கை நன்று எனப் பொழிப்பாக்கிப் பொய் கூறின் பிற அறஞ்செய்கை நன்றாகாது என்பதுஅதனாற் போந்த பொருளாக்கி உரைப்பாரும் உளர். பிற அறங்களெல்லாம் தரும்பயனைத் தானேதரும் ஆற்றலுடைத்து என மறுமைப்பயனது மிகுதி இவை மூன்று பாட்டானும் கூறப்பட்டது.

காரி.: பக்ஷாந்தரத்துள்[6] 'செய்யாமை செய்யாமை'க்குச் 'செய்கை' பொருள் என்றார்; அது தண்டியலங்காரத்துள் இன்மையது பாவத்திற்கு[7] உதாரணம் காட்டிய 'வாராமை யில்லை வயவேந்தன்' என்பது 'வருவன் வயவேந்தன்' எனப்பொருள் பட்டது போல என்க.

இராமா.: பொய்யாமை பொய்யாமையாற்றின் —ஒருவன் பொய்யாமையைச்செய்யவல்லனாயின். (பொய்சொல்லாதிருக்கப் பெறுவானாயின்). அறம் பிற செய்யாமைநன்று—வெறே தருமங்களைச் செய்யாதிருத்தல் நன்று. எ—று.

---

2 தவிர்தல்—விட்டுவிடுதல். 3 மேற்று—மேலது;

4 பல்லறங்கள் — கொல்லாமை, புலாலுண்ணாமை, ஒழுக்கமுடைமை வாய்மை முதலான பல அறங்கள்.

5 தரவற்றாய--தரவல்லதாகிய; 6 பக்ஷாந்தரம்-- வேற்றுக் கருத்து.

7 இன்மையது பாவத்திற்கு--முயற்கோடு, ஆகாயப்பூ என்றும் இல்லாமை போன்றது இன்மையுள் இன்மை.

பொய்யாமை பொய்யாமை செய்யாமை செய்யாமையென்னு மடுக்குளிரண்டினுள்முன்னையது இடையறாமை யென்னும் பொருளிலும்பின்னையதுதுணிவென்னும்பொருளிலுமடுக்கி நின்றது பலதருமங்களையுஞ்செய்வதற்கு அருமையாதலாற் சிலதவறின் குற்றமாம். ஆதலாலவையெல்லாவற்றின்பயனையுமிது தானே தரவல்லதாகிய பொய்யாமையை மேற்கொண்டுதவறாமற்செய்வது நன்றென்று சொல்லவந்தவர், அறம் பிற செய்யாமை செய்யாமை நன்றென்றார். இதனையிவ்வாறன்றிப் பொய்யாமையைப் பொய்யாமற்செயின், பிறவறஞ்செய்கை நன்றெனப் பொழிப்புரையாக்கிப் பொய் சொன்னாற் பிற தருமங்களைச் செய்தல் நன்றாகா தென்பது அதனாற்கிடைத்த பொருளென்று உரைப்பாருமுண்டு. எல்லாத் தருமங்களையும் செய்த பயனை யிப்பொய்யாமை யென்னு மொருதருமமே தரவல்லதென மறுமைப்பயனதுமிகுதியிவைமூன்று பாட்டாலுஞ் சொல்லப்பட்டது.

ஊ) *கவிராசர்:* ஒருவன் பொய்யாமையாகிய சத்திய விரதத்தையே தப்பாமல் செய்யவல்லவனானால் அவன் பின்னை வேறுதருமங்களைச் செய்ய வேண்டாம். பல தருமங்களையும் செய்கிற வருத்தத்தினாலே சில தப்பினால் குற்றம்படும் ஆதலின் சகல தருமங்களையும் கொடுக்கப்பட்ட சத்தியத்தைச் சொல்ல வேணும் என்பதாம்.

ஏ) *பழைய 2:* ஒருவன் பொய்சொல்லான் என்னும் சொல் பொய்யாமல் இருக்க வல்லானாயின், அவன் புண்ணியம் செய்யாமல் தானே புண்ணியமாம்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக். 'பொய்யாமை பொய்யாமை ஆற்றின்' என அடுத்துவந்த பொய்யாமையை மையீற்று வினைஎச்சமாகக் கொண்டு பொய்யாமையாகிய அறத்தைப் பொய்த்துப் போகாமல் செய்யவல்லனாயின் பிற அறங்களைச் செய்யாமை நன்றாம்'. ஆற்றின் — என்ற செயின் என்னும் வாய்பாட்டு வினைஎச்ச ஆற்றலால் பொய்யாமையின் அருமையையும் சிறப்பையும் விளக்கி, 'பொய்யாதிருந்தாற்றான் இவன் செய்யும் பிற அறங்கள் நன்மை யாகும் இல்லையேல் தீயவாம்' எனக் கருத்துக்கொண்டனர். 'பிறஅறம் செய்யாமை செய்யாமை நன்று' என்பதில் 'செய்யாமை' அடுக்குத் துணிவுப் பொருளையே காட்டினமை காண்க. ஐம்பெரும்பாதகங்களையும் செய்துவருபவன் ஒருவன், அறிவு திருந்தி என்னால் எல்லாப் பாவங்களையும் ஒரு சேர நீக்கஇயலாது. நீங்கள் சொன்னால் ஏதாவது ஒன்றை மட்டும் நீக்குவேன் என்றானாக, ஆசிரியர் சிந்தித்துப்

பொய் ஒன்றனையும் ஒழித்தாற் போதும் என அவன் நாளடைவில் எல்லாப் பாவங்களிலிருந்தும் நீங்கி உய்ந்தான் என்றதொரு கதையும் உண்டு. இதன் கருத்து, பொய்யே எல்லாப் பாவங்கட்கும் நிலைக்களன் அது நீங்கின் பாவங்கள் அனைத்தும் இல்லையாம். அதுபோலப் பொய்யாமை ஒன்றிருப்பின் வேறு அறமே வேண்டாம். எல்லா அறப்பயன்களும் தாமேவரும் என்றது. இக்கருத்தையுட் கொண்டே மணக்குடவர் பிற்பகுதிக்குக் கருத்துப்பொருள் கண்டனர். அவர் கருத்து அறமே செய்ய வேண்டாம் என்பதன்று; செய்யும் அறங்கள் எல்லாம் பயனைத் தருவதாகும் என்பதே.

பரிதி, இரண்டாவது 'பொய்யாமைக்கு—மறவாமல்' எனப் பொருள் கண்டனர்.

காளிங்கரின் உரைநடைப்போக்கும் அவர் கருதும் முடிபும் ஓர்ந்து தேர்ந்துகொள்ளும் தன்மைத்தாதலைக் காணலாம். 'பொய்யாமை—பொய்யாமையாகிய, பொய்யாமை—வாய்மையை ஆற்றின்—(செலுத்துமிடத்து இடையிடையே பொய்புகுந்து வழங்காமல்) நடத்த வல்லனாகில், அதுவே அறம்; செய்யாமை செய்யாமையே நன்று—செய்யத்தகாதவைகளாகிய பாவங்களைச்செய்யாதிருத்தலே நன்று' என்பது. 'பொய்யா விரதம் பூண்டவன் நடுநடுவே எப்படியோ பொய்கலந்து விடாமல் எச்சரிக்கையுடன் நடந்து வந்தால் அதுவே அறம். செய்யக்கூடாத பாவங்களைச் செய்யாதிருப்பதே நல்லது' என்னும் கருத்தினது. இவர் உரையோட்டம் 'ஒருவன் பொய்யாமை அறம் நன்று எனவே ஏனைய பாவங்களைச் செய்தாலும் இப்புண்ணியத்தால் அது ஒழிந்துபோம்' என்று எண்ணுதல் கூடாது பொய்யாமை வேண்டும் அத்துடன் செய்யாதன செய்யாமையும் வேண்டும் என்னும் கருத்தைப் பயந்து பொய்யாமையை வலியுறுத்தி 'வாய்மையைத் துணையாக்கிக்கொண்டு மயங்கிச் செய்யும் பாவங்களையும் தவிர்க்க' என்கிறது. இவர் கருத்தில் 'செய்யாமை செய்யாமை' என்பது வெறும் அடுக்குத் தொடர் அன்று; செய்யாமைகளை அதாவது பாவகன்மங்களையும் செய்யாமற்றவிர்தல் என்பதாம். இதனை நன்கு விளக்குவது இவருடைய விளக்கக்குறிப்பு.

பரிமேலழகர் வேற்றுரையாகக் கூறியன *மணக்குடவர்பரிதியார்* உரைகள். இதனை *நுண்பொருண்மாலை* ஆசிரியர் 'செய்யாமையைச் செய்யாமை நன்று;. அதாவது செய்யத்தகுவனவற்றைச் செய்க' என்பது பொருள் என விளக்கமும் *தண்டியலங்கார* மேற்கோளும் தந்தனர். இது அடுக்கன்று என்பதை இலக்கணக்கொத்து ஆசிரியரும் விளக்குவர். (இல. கொ. கு. 121 உரை). *மணக்குடவர்* கருத்து 'செய்யாமைகளைச் செய்யாதிருத்தலே நன்று' என்பதும் 'செய்வனவற்றைச் செய்யும் போதும் அவை நன்றாதல் பொய்யா

மையைப் பொய்யாமை ஆற்றிய வழியே' எனப் பொருள்படுவ தாய்ப் பொய்யாமையையே சிறப்பிப்பதாம்.

'பிற அறங்கள் தரும்பயனைப் பொய்யாமை தானேதரும் ஆற்ற லுடையது' என்னும் *பரிமேலழகர்*, 'அறங்கள் பலவாய், அவற்றுள் ஒன்றாய்ப் பொய்யாமை இருக்கும் போது இதுவே எல்லாப்பயனை யும் தரும் பிற அறம் வேண்டா எனின், அறங்களைப் பலவாகப் பகுத்தலாற் போந்த பயனின்றாய்விடும். பாவங்கட் கெல்லாம் அடியாய்ப் பொய்மையிருந்து அவற்றை வளர்த்தல் போலப் பொய் யாமை எல்லா அறங்கட்கும் அடியாய் அவற்றைச் சிறப்பிக்குமாத லான் பொய்யாமை நிலைக்க அதனை வழியாகக் கொண்டு ஏனைய அறப்பயன்களனைத்தும் தானே வந்து சேரும் என்றவாறாம் என்று 'அறம்பிற செய்யாமை செய்யாமை நன்று' என்பதற்கு வரையறை செய்ததாம் என்க.

சொ. தண்டபாணியார், பரிமேலழகருரையை எடுத்துக்காட்டி, 'வாய்மையுடையார் பிறவறங்களைச் செய்யின் அவை தீதாம் என்பது போதருதலின் அது பொருந்துமாறு காண்கிலேம்' என மறுப்பர்.

கா.சு. 'வாய்மையில் தவறாது ஒழுகுபவன், அதனையே கடைப்பிடித்தொழுகினாற் போதும். பிற அறம் செய்யவேண்டா. இதுவே பொய்யாமையைத் தொடர்ந்து நடத்த ஏதுவான வழி என்றும், வாய்மையைக் கடைப்பிடிப்பான் ஒருவன் பிற அறங்களைச் செய்தலை விடாமை சிறந்ததே' என்றும் கூறுவர். இவையும் *பரிமேல ழகர் காளிங்கர்* கருத்தாதல் காண்க.

இராமலிங்கனார் 'பொய்யாமை யறத்தைத் தவறாமல் காத்தல், வேறு அறம் ஒன்றும் செய்யாதிருப்பதே நல்லது' என்பர். இது எடுத்த அதிகாரத்திற்கு ஏற்றந் தருவதாயினும், அறம்பல வகுத்த அமைப் பைப் பயனற்றதாக்குகிறது. இதுவே *வள்ளுவர்* உள்ளமாயின் அன்புடைமை முதல் அவாவறுத்தலீறாகப் பல அறங்களை விதந்தி ருக்கமாட்டார். ஆகவே தித்திப்பு முதலான ஏனைய சுவைகளையும் மிகுவிப்பது உப்பாதல்போலப் பொய்யாமையே ஏனைய அறங்கட் கும் அறப்பயனுக்கும் ஒளியூட்டுவது என்பதே கருத்தாதல்வேண்டும்.

மு.ரா. அரு., பொய் சொல்லாதிருத்தலாகிய அறமுடைய வனுக்கு மற்றைத் தருமங்கள் செய்தல் நல்லதாகும். அத்தருமம் இல்லாதவனுக்கு மற்றைத் தருமங்கள் செய்தல் நல்லதாகாது' என்பது வேறோர் உரை.

வ.உ.சி. 'பொய்யாமை பொய்யாமை' 'செய்யாமை செய் யாமை' என்ற இரண்டு எதிர்மறைகள் ஒருடம்பாட்டுப் பொருளைத்

தந்தனவாகக் கொண்டு மணக்குடவர் கருத்தையே தழுவி எழுதுவர்.

ஆகவே வாய்மை வழுவாது செய்யப்படும் அறங்களே பயன்படுவன என்ற கருத்தமைந்த உரைகளே ஏற்புடையன ஆகலாம். வாய்மைக்கும் மிகுந்த சிறப்புரைத்ததாகும் என்க.

ஒ) ஒப்புமைப்பகுதி:

'பொய்யாமை பொய்யாமை ஆற்றின்':

புலவூண் துறந்து பொய்யா விரதத்து
அவல நீத்தறிந் தடங்கிய கொள்கை
மெய்வகை யுணர்ந்த விழுமியோர் குழீஇய —*சிலம்பு.,* 10:15—17

வாய்மையில் வழாது மன்னுயிர் ஓம்புநர்க்கு
யாவதும் உண்டோ எய்தா அரும்பொருள் —*சிலம்பு.,* 11:158—159

.... அரும் புகழ் கெடுத லஞ்சி
நொடியலோ செழுத்தும் பொய்யை............—*சீவக.,* 2911.

மனையின் மெய்யெனு மாதவம் புரிந்தவன்...... —*கம்பரா.,* 2801
பொய்கடிந்து அறத்தின் வாழ்வார் —*பெரியபு., திரு நீல.,* 2

ஓ) மேற்கோள்பகுதி:

காரிரத்ன: பாவிக அலங்காரத்திற்கு மேற்கோள். (*மாற.* 251)
சுவாமி: 'அடுக்கல்லவையும் அடுக்கவை போல் வரும். அவ் அடுக்கு அணியினுள் அளவிலை என்க' என்றதற்கு மேற்கோள்.

(*இ.கொ.* 121)

சுப்பிரமணிய: தெளிவு என்னும் குணவலங்காரத்தில் கௌடர் நெறிக்கு மேற்கோள். (*தண்டி.* 17.*உரை.*)

30.8. புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை வாய்மையாற் காணப் படும். (உகூஅ)

உரைப்பகுதி:

அ) மணக்.: 'நீரால்' பாடம். உடம்பு தூயதாதல் நீரினாலே அமைந்துவிடும்; மனத்தின் தூய்மை மெய் சொல்லுதலினாலே அறியப்படும் என்றவாறு.

ஆ) பரிதி.: எ—து உடம்பின் அழுக்கைச் சலம் சுத்தம் பண்ணும்; மனத்தில் சுத்தம் சத்தியவாக்கிய[1] சுத்தம் என்று காட்டும் என்றவாறு.

1 சத்தியவாக்கியம் —மெய்ச்சொல்.

இ) *பரிப்.*: இது மேற் செய்த தவமும் பயன்படாது என்றார். அதற்குக் காரணம் என்னை என்றார்க்கு அவர் மனந்தூய்மை யானே என்றது.

ஈ) *காளி.*: எ—து ஒருவன் தனது புறமாகிய உடல்தூய்மை நீரினாலே தூய்மையுறும். மற்று அகத்தூய்மையானது அவ்வக மாகிய உள்ளத்தினின்றும் புலப்படுகின்ற சொல் அறநெறி வழுவாமையாகிய வாய்மையான் அறியப்படும் என்றவாறு.

உ) *பரிமேல்.*: ஒருவனுக்கு உடம்பு தூய்தாந்தன்மை நீரானே உண்டாம்; அதுபோல மனந்தூய்தாந்தன்மை வாய்மையான் உண்டாம்.

காணப்படுவது உள்ளதாகலின், உண்டாம் என்று உரைக்கப் பட்டது. உடம்பு தூய்தாதல் வாலாமை[2] நீங்குதல். மனம்தூய் தாதல்—மெய்யுணர்தல். புறந்தூய்மைக்கு நீரல்லது காரணமில்லா தாற்போல, அகந்தூய்மைக்கு வாய்மையல்லது காரணமில்லை என்றவாறாயிற்று. இதனானே துறந்தார்க்கு இரண்டு தூய்மையும் வேண்டும் என்பதூஉம் பெற்றாம்.

> *இராமா.*: புறந்தூய்மை நீரானமையும்- ஒருவனுக்குச் சரீர பரிசுத்தஞ் சலத்தினாலேயுண்டாகும், அகந்தூய்மை வாய்மை யாற் காணப்படும் — (அதுபோல) மனப்பரிசுத்தம் மெய் சொல்லுதலாலுண்டாம், எ—று.
>
> காணப்படுவது உள்ளதாகலின் உண்டாமென்றுரைக்கப்பட்டது. உடம்புபரிசுத்தமாவது அழுக்குநீங்குவது. மனம்பரிசுத்தமாவது மெய்யுணர்வது. சரீரபரிசுத்தத்துக்கு நீரின்றியமையாதது போலவே மனப்பரிசுத்தத்துக்கு மெய்மையின்றியமையாதென் பதாயிற்று, ஆகவேதுறவறத்தோர்க்கு இருவகைப்பரிசுத்தங் களும் வேண்டுமென்பது பெறப்பட்டது.

ஊ) *கவிராசர்*: ஒருவனுக்கு உடம்பு சுத்தமாகிறது நீரினாலே யாம். மனது சுத்தமாகிறது வாய்மையாகிய மெய்சொல்லுகிறதி னாலே உண்டாம்; (எ—று).

ஏ) *பழைய 2*: ஒருவனுக்கு உடம்பு சுசியாகுதல்[3] நீரினாலே அமையும். அப்படிப்போல மனம் சுசியாகுதல் பொய் சொல்லாமல் இருப்பதனால் அமையும்.

மல்லர்: எ—து உடம்பினுடைய சுத்தம் தண்ணீரினால்; மனசின் சுத்தம் சத்திய வாக்கினால் காணப்படும், எ—று,

2 வாலாமை—தூயது அன்மை: 'வாலாமை நாள் நீக்கியபின்றை' (சிலம்பு) என்பது போல.
சுசியாகுதல்—தூயதாதல்.

உடம்பு சுத்தமாய்க் காண்கிறதுக்குத் தண்ணீர் காரணமாய் இருக்கிறாப்போலே ஒருவன் மனசிலே கவடுஎன்கிற அசுத்தமில்லை என்கிறதுக்கு அவனுடைய மெய்மொழிகள் காரணமாய் இருக்கும் என்பது கருத்து.

புறம்—உடம்பு; தூய்மை—சுத்தம்; அமைதல்—உண்டாதல்; அகம்—மனம்; வாய்மை—மெய்மை.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'அகந்தூய்மை வாய்மையாற் காணப்படும்' என்பதற்கு *மணக்.*, *பரிதி.*, *காளி.*, உரைகள் 'மனநிலையை வாய்மையாகிய சொல்லால் அறியலாம்' என்ற கருத்திற் செல்கின்றன. *பரிமேலழகர்* 'காணப்படும்' என்பதற்கு 'உண்டாம்' எனப் பொருள் கூறிக் 'காணப்படுவது உள்ளதாகலின் உண்டாம் என்றுரைத்தாம்' என விளக்கம் கூறினர். *வள்ளுவர்* காணப்படும் என்பதனைத் 'தெரிந்து கொள்ளப்படும்' 'உண்டாகும்', 'அறிந்து கொள்ளப்பெறும்' என்னும் பொருள்களிற் பயின்றுள்ளார். நீராடிய உடனே புறந்தூய்மை தானே அமையும். அத்துணை எளியதன்று அகந்தூய்மை. வாய்மையால் சிறிது சிறிதாகப் பயிற்சி வன்மையால் விளைதல் கூடும். ஆதலால் அமையும் என்னாது காணப்படும் என்றார். நீர்பலகால் மூழ்கிப் புறத்தைத் தூய்மை செய்தல் துறவிக்கு இலக்கணமாதல் போல வாய்மையால் அகத்தூய்மை செய்து பழகுதலும் வேண்டும் என்பதாம். இதனால் துறவுக்கு அகத்தூய்மை புறத்தூய்மை இரண்டும் வேண்டப்படுவதாம் எனப் *பரிமேலழகரும்*, பழைய உரை 2ம், *சொ.த.*வும்கூறுதல் சிறந்த கருத்தாகும்.
வ.உ.சி. 'நீரால்' *தாமத்தர்* பாடம் என்பர்.

ஒ) ஒப்புமைப் பகுதி:

***'அகம்தூய்மை வாய்மையால்'*:**

நிறந்தூய்தா நீரினால் வாய்தூய்தாம் பாகாற்
பறைந்து போய் மெல்கோலாற் பல்லெலாந் தூயவாம்
புறந்தூய்மை செய்தக்கால் புரிவுள்ளந் தூய்தாமேல்
அறந்தூய்மை கணிகையர்க்கே யாற்றவு முளதாமால் —*நீலகேசி.*,278

வாய்மையே தூய்மையாக ....
பூசனை ஈசனார்க்குப் புரிந்தவி போக்கி னோமே —*அப்பர். பொது* ,4

வாய்மையு மரபுங் காத்து மன்னுயிர் துறந்த வள்ளல்
தூயவன் .... —*கம்பராமா.*, 4122

வாய்மை யென்னும் ஈதன்றி வையகம்
தூய்மை யென்னும் ஒன்றுண்மை சொல்லுமோ? —*கம்பராமா.*, 257,

சேய்மை யண்மையின் உயிர்க்கொரு துணையெனச் சிறந்த
வாய்மை யாலகந் தூய்மையாம் மற்றிலைப் புறத்தை
தூய்மை செய்வது நீரலாற் சொல்லின் வேறுளதோ?

—அரிச்சந்திரபுராணம்

30.9. எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு. (௨௯௯)

உரைப்பகுதி:

அ) *மணக்.*: சான்றோர்க்கு எல்லா அறத்தினாலும் உண்டான ஒளியும் ஒளி அல்ல; பொய்யாமையால் உண்டான ஒளியே ஒளியாகும் என்றவாறு.

இது பொய்யாவிளக்குச் சான்றோர்க்கு இன்றியமையாது என்று கூறிற்று.

ஆ) *பரிதி.*: எ—து எல்லா விளக்காவன தானம், தன்மம், கல்வி, ஞானம், பூசை என்பன. இந்த விளக்கிலும் பொய் சொல்லாததே விளக்கு என்றவாறு.

ஈ) *காளி.*: இவர் உரைப்பகுதி சிதைந்துள்ளது.

உ) *பரிமேல்.*: புறத்திருள் கடியும் உலகத்தார் விளக்குகளெல்லாம் விளக்காகா; துறவான் அமைந்தார்க்கு விளக்காவது மனத்திருள் கடியும் பொய்யாமையாகிய விளக்கே.

உலகத்தார் விளக்காவன ஞாயிறு, திங்கள், தீ என்பன. இவற்றிற்குப் போகாத இருள் போகலின், 'பொய்யாவிளக்கே விளக்கு' என்றார். அவ்விருளாவது அறியாமை. பொய்யாத விளக்கு என்பது குறைந்து நின்றது. பொய் கூறாமையாகிய விளக்கு என்றவாறு.[1] இனி இதற்குக் கல்வி முதலியவற்றான் வரும் விளக்கமெல்லாம் விளக்கமல்ல, அமைந்தார்க்கு விளக்கமாவது பொய்யாமையான் வரும் விளக்கமே என்று உரைப்பாரும்[2] உளர்.

இராமா.: எல்லா விளக்கும் விளக்கல்ல-வெளியிருளைப் போக்குகின்றவுலகத்துவிளக்குகளெல்லாம் விளக்குகளல்லவாம். சான்றோர்க்குப் பொய்யாவிளக்கேவிளக்கு — துறவறத்தோர்க்கு மனத்திருளையோட்டுகின்ற பொய் சொல்லாமையாகிய விளக்கே விளக்காம். எ—று.

---

1. பொய்யா விளக்கு — பொய் கூறாமையாகிய விளக்கு. பெயரெச்சத்தைப் பண்புத்தொகையாகக் கோடல் வடநூல் வழக்கு ஆதலால் இங்ஙனம் விரிக்கப்பெற்றது.

''சில பெயரெச்சமும் சிலவினைத் தொகையும்
இரு வகை யுவமையும் வண்ணச் சினைச் சொல்லும்
பண்புத் தொகை யெனப் பகரும்/வடநூல்.''

--இல.கொ.

2. இவ்வாறு உரைப்பவர் பரிதியார் ஆவார்.

உலகத்துவிளக்குகளாவன, சூரியன் சந்திரன் அக்கினியென்பன. இவற்றினுக்குப் போகாத மனத்திருள் போதலாற் பொய்யா விளக்கே விளக்கென்றார். மனத்திருள் அஞ்ஞானம். பொய்யாத வென்னும் பெயரெச்சம் பொய்யா வெனக் கடைக்குறைந்து நின்றது. இனியிதற்குக் கல்வி முதலியவற்றால் வரும் விளக்க மெல்லாம் விளக்கமல்ல சான்றோர்க்குப் பொய்கூறாமையால் வரும் விளக்கமேவிளக்கமென்றுரைப்பாருமுண்டு.

ஊ) *கவிராசர்*: வெளியிலே இருக்கிற இருளைப் போக்கடிக்கிற தான விளக்குகள் எல்லாம் விளக்காகா. பெரியோர்களுக்கு (விளக் ாவது)மனத்திலே இருக்கிற இருளைக் கடியப்பட்ட பொய்யாமை யாகிய விளக்கே விளக்காம்; (எ—று).

எ) *பழைய 2.*: புறத்திருள் நீக்கும் விளக்கெல்லாம் விளக்காகக் கொள்ளார் அறிவுடையவர்கள். அவர்கள் விளக்கு யாது என்றால் மனத்திருள் நீக்கும் பொய்யாத விளக்கே விளக்கு எனக் கொள்வரா

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'எல்லா விளக்கும்'

''எல்லா அறத்தினாலும் உண்டாகிற ஒளியும்'' *மணக்.*;

'தானம் தன்மம் கல்வி பூசை முதலான எல்லா விளக்கும்' *பரிதி.*,

'வெளியிருளைப் போக்குகிற விளக்குகள்' *கவிராசர்.*

'புறத்திருள் போக்கும் விளக்குகள்' *பழைய உரை*2:

'உலகத்தார் விளக்குகள்' *பரிமேலழகர்.*

'வெளியிருளைப் போக்குகிறஞாயிறும் திங்களும் தீயும்முதலான விளக்குகள் எல்லாம்' *கா.சு.*, *தேவநேயர்.* *சொ.த.*

இவருள் தானம் தவம் கல்வி முதலானவற்றை விளக்கங்களாகக் கூறியவர்கள் 'நெஞ்சத்து எல்லா விளக்கும்' எனக்கூட்டி அகவிளக் குக்கு அகவிளக்காவனவற்றை உவமை கூறி ஒழித்துக் காட்டினார் எனவும், புற விளக்கைக் கொண்டு அகவிளக்காகிய பொய்யா மையை விளக்கினார் என்றும் கொள்க. இவற்றுள் அகவிளக்குக ளாகிய தானம் கல்விகளைக்கொண்டு அகவிளக்காகிய வாய்மையை அளந்து காட்டுதல் சிறப்புடைத்தாதல் காண்க.

மு.ரா.அரு. வேறுரை அறிவுடையார்க்குக் கல்வி முதலிய வற்றால் வரும் விளக்கமெல்லாம் விளக்கமல்ல. பொய்சொல்லா மையான் வரும் விளக்கமே விளக்கம். விளக்கம்—எல்லோரும் புகழ்ந்தெடுத்துப் பேசுதல்'.

வ.உ.சி. 'விளக்கு — ஒளி' இவர் கருத்தில் 'உண்ணான் ஒளி

நிறான்' என்புழிப் போல 'ஒளி—பலரான் அறியப்பெறும் புகழ்' விளக்கம் ஒளி ஆகும்.

ஒ) ஒப்புமைப் பகுதி:

'பொய்யா விளக்கே விளக்கு':

புகழ்செய்யும் பொய்யா விளக்கு —நான்மணி., 22

பொய்யானாவதனாற் புகழ்வார்கள் மனத்தினுள்ளே
மெய்யே நின்று எரியும் விளக்கே ஒத்த தேவர் பிரான் —சுந்தரர் கழிப்பாலை., 9

.... மெய்ம்மைத் துணையின்மை—கம்பராமா., 1997,

ஓ) மேற்கோள்பகுதி:

குணசாகரர்: இடையின எதுகைக்கு மேற்கோள். (யா.கா. 437)

யா.வி. உரை: இடையின எதுகைக்கு மேற்கோள். (—சூ. 37.)

நச்.: இடையின எதுகைக்கு மேற்கோள். (தொல்..செய். 94.)

30.10. யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற. (கூ00)

உரைப்பகுதி:

அ) மணக்.: யாம் மெய்யாகக் கண்டவற்றுள் மெய் சொல்லுதல் போல நன்றாய் இருப்பனவேறு யாதொன்றும் இல்லை என்றவாறு.

இஃது எல்லா அறமும் இதனோடு ஒவ்வாது என்று அதனைத் தலை கூறிற்று என்றது.

ஆ) பரிதி.: எ—து ஆத்மாவைச் செனனத்திலே[1] தள்ளாமல் திருவடியிலே சேர்ப்பது சத்தியவாக்கியம் அன்றி, வேறொன்றும் கண்டிலேம். அசத்தியம்[2] சொன்ன தன்ம புத்திரன் நரகங் கண்டான், சத்தியம் சொன்ன அரிச்சந்திரன் பரமேசுவரன் ஸ்ரீ பாதம் கண்டு சிவலோகம் சேர்ந்தான் என்றவாறு.

ஈ) காளி.: இவர் உரை பரிதியார் உரை போன்றதே.

உ) பரிமேல்.: யாம் மெய்நூல்களாகக் கண்ட நூல்களுள், யாதொரு தன்மையானும் வாய்மையின் மிக்கனவாகச் சொல்லப் பட்ட பிற அறங்கள் இல்லை.

---

1 செனனம் — பிறப்பு; 2. அசத்தியம் — பொய்;
2 இங்ஙனம் உணர்ந்துவன் காரிய ஆகுபெயர் என்க.
3 இறையவர் — கடவுளர்;

மெய்யுணர்த்துவனவற்றை 'மெய்' என்றார்.[3] அவையாவன தங்கண் மயக்கமின்மையின் பொருள்களை உள்ளவாறு உணரவல்ல ராய்க் காம வெகுளிகளின்மையின் அவற்றை உணர்ந்தவாறே உரைக்கவும் வல்லராய இறைவர்,[4] அருளான் உலகத்தார் உறுதி எய்துதற் பொருட்டுக் கூறிய ஆகமங்கள்[5]. அவை எல்லாவற்றினும் இஃதொப்ப முடிந்தது என்பதாம். இவை மூன்று பாட்டானும் இவ் வறத்தினது தலைமை கூறப்பட்டது.

இராமா.: யாமெய்யாக்கண்டவற்றுள் — நாம்மெய் நூல்களாகக் கண்ட நூல்களுக்குள்ளே, எனைத் தொன்றும்—யாதொருதன்மை யினாலும்' வாய்மையினல்ல—சத்தியத்தின் மிக்கவைகளாகச் சொல்லப்பட்ட, பிறவில்லை—வேறுதருமங்களில்லை, எ—று.

மெய்ம்மையுணர்த்து நூல்களை மெய்யென்றது ஆகுபெயர். மெய் நூல்களாவன, தம்மிடத்து மயக்கமில்லாததினாலே பொருள் களையுள்ளபடியே யுணரவல்லவராகிக் காமக் குரோதங்க ளில்லாததனாலே யறிந்தபடியே சொல்லவும் வல்லவராகி யிறைவனுடைய அருளினாலே யுலகத்தார் நன்மை பெறுதற் பொருட்டுச் சொல்லிய ஆகமங்களாம். அந்த ஆகமங்களெல் லாவற்றிலுமிதுவே மிக்க நலமுடைய தென்பது ஒத்திருந்தது. இவை மூன்று பாட்டாலும் இந்தத் தருமத்தின் உயர்வு கூறப் பட்டது.

ஊ) *கவிராசர்*: நாம் கண்ட மெய் நூல்களான சகல சாஸ்திரங்களி லேயும் சத்தியத்தைப் பார்க்கிலும் அதிகமாகச் சொல்லப்பட்ட தருமம் ஒன்றுமில்லை என்றவாறு. மெய்ந்நூல்களாவன காமம், வெகுளி, மயக்கம் என்று சொல்லப்பட்ட முக் குற்றங்களும் பிறப்பு, பிணி, மூப்பு, சாக்காடு என்பனவும் இல்லாத சுவாமியாலே[6] செய் யப்பட்ட நூல்கள் என்பதாம்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

ஏ) *பழைய 2*: யாமெய்யாக் கண்ட பொருள்களுள் ஒரு பொருளு மில்லை; பொய்யாத பொருளே பொருள்.

'வாய்மையின் அல்ல பிற இல்லை' எனச் சொற்சிதைவு செய்து 'வாய்மையல்லாத பிறவற்றை' என்பர் *மணக்.*, *பரிதி*. முதலி யோர்.

'வாய்மையின் நல்ல பிற' எனக்கொண்டு 'மிக்கனவாகச் சொல் லப்பட்ட பிற அறங்கள்' என்றனர் *பரிமேலழகர்*, *பழைய உரை 2*, *கவிராசர்* முதலியோர்.

---

5 ஆகமங்கள் — இறைவனிடமிருந்து வந்தவை. அவை அவ்வச் சமயத்தார்க்கு உரிய அவ்வவ்வாகமங்கள்.

6 சுவாமி—இறைவன்.

''மெய்யுணர்த்தும் நூல்கள்' என்றனர் *பரிமேல்., கவிராசர், சொ.த.* முதலியோர். 'நாம் உண்மையாகக் கண்டவற்றுள்' என வாளாவிருந்தனர் *மணக்குடவர்.* எடுத்துக்காட்டாக அரிச்சந்திரன் முதலானோர் கதையைக் காட்டி நிறுவுவர் *பரிதியார்.* 'நிலை பெற்ற பொருளாக நாம் ஆய்ந்து கண்டவற்றுள்' என்பார் *கா.சு.* 'நாம் அறிந்த உண்மைகளுக்குள்' என்பர் *இராமலிங்கனார்.*

இவற்றுள் ஆகமச் சான்று கொண்டு ஆய்ந்து துணிந்த நிலையினும் தன்னறிவால் ஆய்ந்து கண்ட உண்மைகளுள் என்ற மணக்குடவர், கா.சு. போன்றோர் உரை சிறந்தன. இவை ஆகம அளவையோடு காட்சி கருதல் முதலிய மூன்றளவைகளானும் ஆய்ந்து கண்ட உண்மையாதலின் என்க.

மு.ரா.அரு. மெய்யாக் கண்டவற்றுள் — உள்ளதையுள்ளபடியே அறியப்பட்ட மெய் நூல்களில் பார்க்கும்போது மெய்நூல்கள் — மயக்க நீங்கிய இறைவன் அருளாற் சொன்ன ஆகமங்கள்.

வ.உ.சி. 'வாய்மையின் நல்ல எனைத்து ஒன்றும் இல்லை' எனக் கூட்டிப் பொருள் கொள்வர். இக்குறள் 'ஒன்றாக நல்லது' என்னும் குறள் தள்ள வேண்டிய மறங்களில் தலையாயதைக் கூறியது. இது கொள்ள வேண்டிய அறங்களில் தலையாயதைக் கூறுகிறது. என்பர்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

முற்றும்:

வாய்மையின் வழாது மன்னுயி ரோம்புநர்க்கு
யாவது முண்டோ எய்தா அரும்பொருள் —*சிலம்பு., 11:158-159.*

மெய்த்திறம் வழக்கு நன்பொருள் வீடெனும்
இத்திறந் தத்தம் இயல்பினிற் காட்டும்
சமயக் கணக்கர் *மணி., 1:11—13.*

மெய்த்திறம்—மெய்ம்மையை யுணர்த்துவனவாகிய நூல்கள்

வென்றி வாள்புடை விசித்து மெய்ம்மைபோல்
என்றுந் தேய்வுறா .. .. —*கம்பராமா., 336.*

ஓ) மேற்கோள்பகுதி:

அடியார்க்: 'வாய்மையின் வழாது மன்னுயிர் ஓம்புநர்க்கு யாவதும் உண்டோ எய்தா அரும்பொருள்' 'யாமெய்யா......பிற' எனவும், 'கொல்லான் .. .. தொழும்' எனவும் உட்கொண்டவாறு எனக் கொள்க. (*சிலப். காடுகாண்.* 158-9.)

30. வாய்மை

	வாய்மை	பொய்ம்மையும்	தன்நெஞ்சு	உள்ளத்தால்	மனத்தொடு	பொய்யாமை அன்ன	பொய்யாமை	புறந் தூய்மை	எல்லா	யாமெய்யாக்
மணக்.	3	4	1	5	6	7	8	9	10	2
பரிதி.	1	2	9	4	3	5	7	8	6	10
பரிப்.	—	4	—	—	—	7	8	9	—	—
காளி.	1	9	4	2	3	5	7	6	8	10
பரிமேல்.	1	2	3	4	5	6	7	8	9	10

30—வது அதிகாரம் வாய்மை முற்றிற்று.

31. வெகுளாமை

அ) *மணக்.*: வெகுளாமையாவது, வெகுளுதற்குக் காரணம் உள்ள இடத்தும், வெகுளாராதல்.

ஆ) *பரிதி.*: வெகுளாமையாவது, வாக்கினால் பொய் சொல்லாதது போலே, மனத்தினால் குற்றமாகிய கோபத்தையும் விடுக என்றவாறு.

உ) *பரிமேல்.*: அஃதாவது சினத்தைச் செய்தற்குக் காரணம் ஒருவன் மாட்டு உளதாய இடத்தும் அதனைச் செய்யாமை. இது பொய்ம்மை பற்றி நிகழ்வதாய வெகுளியை விலக்கலின், வாய்மையின் பின் வைக்கப்பட்டது.

இராமா.: அதாவது, கோபத்திற்குக்காரணம் ஒருவனிடத்துண்டான போதும் அது செய்யாதிருத்தல். இதுபொய்பற்றி நடப்பதாகிய கோபத்தை விலக்குதலால் வாய்மையின் பின்வைக்கப் பட்டது.

ஊ) *கவிராசர்*: அஃதாவது ஒருவன் மேலே கோபம் வந்தவிடத்தில் அந்தக் கோபத்தை அடக்கிக் கொண்டு அவன்மேலே பகை வையாமல் இருக்கிறது.

ஏ) *பழைய2*: அஃதாவது கோபம் இல்லாமல் இருப்பது; வெகுளி செய்யாமை எனக் கொள்க.

மல்லர்: அதாவது காரணம் உண்டானாலும் இல்லாதே போனாலும் ஒருவரையும் கோபித்துக் கொள்ளாமலிருக்கிறது.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

வெகுளுதற்குக் காரணம் வாய்மை யாகவே இருந்தாலும், வெகுளாதிருத்தல்' என்பர் *மணக்.*; 'பொய்,வாக்கின் குற்றமாய்த் துறவியால் விலக்கப் பெற்றது போல மனக்குற்றம் வெகுளி; அதனையும் துறக்க வேண்டும்' என்பர் *பரிதி.*; 'சினப்பதற்குரிய காரணம் இருந்தும், சினவாமை' என்று விளக்கந்தந்த *பரிமேலழகர்*

அடுத்து 'வெகுளி பொய்ம்மை பற்றியே நிகழும்; அதனை விலக்கு வது இவ்வதிகாரம்' என விளக்கந்தருவர். துறவியிடம் உள்ள உண்மையான குறைகளை ஒருவன் கூறின் அது பற்றியும் துறவிக்குச் சினம் மூளுதல் கூடுமாதலின் பொய்ம்மைபற்றித்தான் வெகுளி நிகழும் எனல் ஏலாமை தெரிக.

கா.சு. 'சினங்கொள்ளக் காரணமிருந்தாலும் சினவாமை' எனப் பொதுவகையிற்கூறுதல் காண்க. *சொ.த.* 'உற்றநோய் நோன்றல் தவமாதலால் பிறரால் துன்பம் நேர்ந்துழியும் சினவாமையும் அங்ஙனம் சினப்பராயின் குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி கணமேயுங் காத்தலரிதாகையால் கேடுபயத்தல் ஒருதலை;அது அருளுக்கு இழுக்காதலானும், வெகுளல் துறவுக்கு இயையாததொன்றாம்' என்பர். அதிகாரமுறை வைப்பிற்கு இவர்ஒருபுதிய காரணம்கூறுவர். 'யாதொன்றும் தீமையிலாத சொலல் வாய்மையாதலின் வெகுளப் பட்டார்க்குத் தீமை பயக்கும் வெகுளியை அடுத்த அதிகாரத்தால் தடுத்தார்' என்பர்.

இராமலிங்கனார் 'வெகுளி யாருக்கும் கூடாது. சிறப்பாகத் துறவிக்குக்கூடாது ஆதலால் துறவில் இடம்பெற்றது' எனஇயல் இயைபு மட்டும் காட்டி அதிகார முறை வைப்பினைக் காட்டிற்றிலர்.

கவிராசர் 'கோபங்கொள்ளாமையோடு, கோபிக்கப் பட்டவன் மீதுபகை கொள்ளாமலும் இருப்பது' என்பர். பகைமை என்பது இடையீடுபடாத கோபமேயாதலின் அதனையும் விலக்க வேண்டும் என்றனர் போலும்.

31.1. செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான் அல்லிடத்துக்
காக்கின்என் காவாக்கால் என். (கூ0க)

உரைப்பகுதி:

அ) *மணக்.*: தனக்கு இயலுமிடத்தே வெகுளாதவன் வெகுளாதவனாவான்; இயலாவிடத்தில் அதனைத் தவிர்ந்ததனாலும் பயனில்லைத்தவிராததனாலும் பயனில்லை என்றவாறு.

இது வெகுளாமையாவது வலியவன் வெகுளாமை என்றது.

ஆ) *பரிதி.*: எ—து தனக்குக் கை செல்லுமிடத்தில் சினங்காட்டாது ஒழிக; தனக்குக் கை செல்லா இடத்திலே சினம் காட்டினாலும் காட்டாவிடினும் பிரயோசனம் இல்லை என்றவாறு.

ஈ) *காளி.*: இவர் உரை பரிதியார் உரை போன்றதே.

உ) *பரிமேல்.*: தன்சினம் பலிக்கும் இடத்து அதனை எழாமல் தடுப்பானே அருளால் தடுப்பானாவான். ஏனைப் பலியாத இடத்து அதனைத்தடுத்தால் என்? தடாது[1] ஒழிந்தால் என்.

செல்லிடம் அல்லிடம் என்றது தவத்தால் தன்னின் மெலியாரையும் வலியாரையும். வலியார் மேல் காவாவழியும்[2] அதனான் அவர்க்கு வருவதோர் தீங்கின்மையின் காத்தவழியும் அறனில்லை என்பார், 'காக்கின் என் காவாக்கால் என்' என்றார். இதனான் வெகுளாமைக்கு இடம் கூறப்பட்டது.

> *இராமா.*: செல்லிடத்துக்காப்பான்—தன்கோபம் பலிக்கத்தக்க விடத்திலதைத் தலையெடாமலேதடுத்துக்காப்பவனே, சினங்காப்பான்—அருளினாலேதடுத்துக் காப்பவனாவான், அல்லிடத்து—பலியாதவிடத்து, காக்கிலென் காவாக்காலென்—அதனைத் தடுத்துக்காத்தாலென்காவா தொழிந்தாலென்ன, எ—று.
>
> செல்லிடம் அல்லிட மென்றது மெலியாரையும் வலியாரையும் வலியார்முன்கோபத்தைக்காவாத போதும் அதினாலேயவர்க்கு வருவதொரு தீங்கில்லாததினாலே காத்தபோதுந் தருமமில்லையென்று சொல்லவந்தவர், காக்கிலென் காவாக்காலென் என்றார். இதினாலேகோபஞ் செய்யாமைக்கு இடங் கூறப் பட்டது.

ஊ) *கவிராசர்*: 'காக்கிலென்' பாடம். தன் கோபம் பலிக்கிறவிடத்திலே அந்தக்கோபம்வாராமல் தடுக்கிற தயையுடையவனாய்த் தடுக்கிறது. தன் கோபம் செல்லாதவிடத்திலே அந்தக் கோபத்தைப் பொறுத்தாலென்ன பொறாவிட்டால்[3] என்ன? (எ-று.)

ஏ) *பழைய* 2: 'காக்கிலென்' பாடம். தன் கோபம் செல்லுமிடத்துக் கோபத்தினைத் தடுப்பவனே (அதனைக்) காப்பவன்; கோபம் செல்லாவிடத்துத் தடுத்தால் என்ன? தடாது ஒழிந்தால் என்ன?

ஐ) தொகுப்பும்குறிப்பும்:

'செல்லிடம், அல்லிடம்' என்பதற்கு அதிகார இயைபும், இயல் இயைபும் நோக்கிப் பரிமேலழகர் 'தவத்தான் மெலியார்—வலியார்' என்று ரை காண்பர். ஏனையோர் பொதுவகையாற் கூறுவர்.

'காக்கில் என்' அல்லிடத்துக் காத்தமையால் தான் வருந்தாத் தன்மையையும்காவாது வெகுளியைச் செலுத்தியமையான் அவரால் துன்பத்தையும் பயனாக அடைவாராதலைச் 'செல்லா இடத்துச் சினந் தீது' என வருங்குறளாற் கூறுவதானும் 'காக்கிலென்காவாக்கால் என்' என்றது 'நீவாழ்ந்தால் என்ன' 'கெட்டால் என்ன' என்பது போல வெறுப்பாற் கூறிய இகழுரை என்க. பயனின்று என்பதன்று.

[1] தடாது—தடுக்காமல்; [2] காவாவழியும்—செல்லாது காவாதஇடத்தும்.
[3] பொறாவிட்டால்—பொறுக்காத விடத்து.

'செல்லிடத்திற், அல்லிடத்திற்' தருமர் பாடம் என்பர் வ.உ.சி. 'காக்கிலென்' என்பர் மு.ரா.அரு., வ.உ.சி. பாடம்.

ஒ) ஒப்புமைப் பகுதி:

'சினம் அல்லிடத்துக் காக்கின் என்':

"... ....சுருக்குக செல்லாவிடத்துச் சினம்" —நான்மணி., 87

'செல்லிடத்துக் காப்பான்':

அல்லுநண் பகலு நீங்கா யனங்கநீ யருளிற் றீர்ந்தாய்
செல்லுமென் றெளிவந் தோர்மேற் செலுத்தலுந் தீமைதாமோ
—கம்பராமா., 4315

31.2. செல்லா இடத்துச் சினம்தீது செல்லிடத்தும் இல் அதனின் தீய பிற. (கூ0உ

உரைப்பகுதி:

அ) மணக்.: இயலாவிடத்துச் சினந்தீது; இயலுமிடத்தினும் அதில் தீதாக இருப்பன பிற இல்லை என்றவாறு.

ஆ) பரிதி.: எ—து தனக்குச் செல்லா இடத்தும்சினம் பொல்லாது. தனக்குச் செல்கிற இடத்தும் சினம் பொல்லாது என்றவாறு.

இ) பரிப்.: இது இயலாத இடத்து இம்மையிலே தீதாயினும் இயலு மிடத்து மறுமையிலே தீதாம் ஆதலான் எவ்விடத்தும் தவிரவேண்டும் என்றது.

ஈ) காளி.: இவர் உரை பரிதியார் உரை போன்றதே.

உ) பரிமேல்: ஒருவன் வெகுளி தன்னின் வலியார்மேலெழின் தனக்கே தீதாம், மற்றையெளியார் மேலெழினும் அதனில் தீயன பிற இல்லை.

செல்லா இடத்துச்[1] சினம் பயப்பது இம்மைக்கண்அவரான்வரும் ஏதமே,[2] ஏனையது[3] இம்மைக்கண் பழியும் மறுமைக்கண் பாவமும் பயத்தலின், 'அதனில்தீயன பிறஇல்லை[4] என்றார். ஓரிடத்தும்[5] ஆகாது என்பதாம்.

இராமா.: செல்லாவிடத்துச் சினந்தீது. ஒருவன் தனக்கு வலியார் மேற்கோபத்தைச் செலுத்துவானாயினது அவனுக்கே தீமைதரும். செல்லிடத்தும்—அதனைச் செலுத்தத்தக்க மெலியா

---

1 செல்லா இடம்—செலுத்த இயலாத இடம். அதாவது தன்னின் வலியாரிடம்.
2 ஏதம்—குற்றம்.
3 ஏனையது—செல்லும் இடம். அதாவது தன்னின் மெலியார் இடம்.
4 'இல்லதனிறி றீயபிற' என்றும் பாடமுண்டு.
5 ஓரிடத்தும்—செல்லிடம் அல்லிடம் என்னும் இரண்டனுள் ஓரிடத்திலும்.

ரிடத்தும், இல்லதனிற்றீயபிற —அதுபோற் கொடுமையை யுடையனவேறேயில்லை. எ.று.

வலியாரிடத்திற் செய்தகோபம் இம்மையிலே தருவன. அவரால் வருந்துன்பங்களே. எளியாரிடத்திற் செய்தகோபம் இம்மையிற் பழியும் மறுமையிற் பாவமுந் தருமாதலா லதனிற்றீய பிறவில்லையென்றார். கோபமோரிடத்து மாகாதென்பதாம்.

ஊ) *கவிராசர்:* ஒருவன் கோபம் தன்னிலும் பலவானிடத்திலே எழுந்தால், தனக்கே கேடுவரும். எளியார்மேல் கோபம் எழுந்தாலும் தனக்கே கேடாம்; (எ—று).

ஏ) *பழைய 2:* வலியவர், எளியவர் யாவரிடத்தும் கோபத்தை ஒழிக. ஒருவற்குத் தீயனவெல்லாம் அதனால் உண்டாம்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக்., பரிமேல்., முதலியோர் 'செல்லிடத்துச் சினந்தீதாதற்கு'— 'இம்மைக்கண்பழியும் மறுமைக்கண் பாவமும் பயக்கும்' என விளக்கங் காண்பர். குழந்தை 'உலகப்பழிப்பிற்கு ஆளாவது' ஒன்றையே உரைப்பர்; இராமலிங்கனாரும் இங்ஙனமே கூறுவர். ஏனையோரிடம் கருத்து மாற்றம் இல்லை வ.உ.சி. 'செல்லா இடத்துச்சினம் தீமையைப் பயப்பது இம்மைக்கண்' என்றும், 'செல்லிடத்துச் சினம் தீமைபயப்பது மறுமைக்கண்' என்றும் உரைப்பர்.

ஒ) ஒப்புமைப் பகுதி:

'செல்லா இடத்துச் சினம்':

செல்லா விடத்துச் சினம் —*நான்மணி.,87*

முற்றும்

வல்லோற் சினந்து தக்கன் நொந்தான் வலிகொண்டே
அல்லல் விளைத்தும் அழிந்தான் சுயோதனன்பின்
செல்லா விடத்துச் சினந்தீது செல்லிசுத்தும்
இல்லத னிற்றீயபிற. —*இன்னிசை இருநூறு, அதி.,*

செல்லா விடத்துச் சினந்தீது செல்லிடத்தும்
இல்ல தனிற்றீயது என்க இன்னிலையே —*வள்ளலார், நெஞ்சறிவுறுத்தல். 433*

31.3. மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய
பிறத்தல் அதனான் வரும். (கூ0கூ)

உரைப்பகுதி:

அ) *மணக்.:* வெகுளியை யார்மாட்டும் செய்தலை மறக்க; தீயன பிறத்தல் அவ்வெகுளியானே வருமாதலான் என்றவாறு.

இது வெகுளாமை வேண்டும் என்றது.

ஆ) *பரிதி*.: எ-து யாரிடத்திலும் கோபத்தை விடுக; விடாதுஒழியில், பொல்லாங்கு[1] கோபம் முன்னிலையாக வரும் என்றவாறு.

இ) *காளி*.: யாவர்மாட்டும் ஒருவன் வெகுளியை மறத்தலே காரிய மாவது; என்னை எனின், தனக்கு எல்லாத் தீயனவும் தோன்றுதல் மற்று அவ்வெகுளியானே வரும் ஆதலால் என்றவாறு.

உ) *பரிமேல்*.: யாவர் மாட்டும் வெகுளியை ஒழிக; ஒருவர்க்குத் தீயன எல்லாம் உளவாதல் அதனான் வரும் ஆகலான்.

வலியார், ஒப்பார், எளியார் என்னும் மூவர்மாட்டும் ஆகாமை யின் 'யார் மாட்டும்' என்றும், மனத்தால் துறந்தார்க்கு ஆகாதன வாகிய தீச்சிந்தைகள் எல்லாவற்றையும் பிறப்பித்தலின்தீயபிறத்தல் 'அதனான் வரும்' என்றும் கூறினார்.

> *இராமா*.: மறத்தல்—மறக்கக்கடவது, வெகுளியையார்மாட்டும்-கோபத்தை யாவரிடத்தும், தீயபிறத்தல்— ஒருவனுக்குஎல்லாத் தீங்குகளுமுண்டாதல், அதனான்வரும் அக்கோபங்காரணமாக வருமாதலால், எ—று.
>
> வலியாரெளியார்ஒப்பார் என்னும் மூன்றிடத்து மாகாததினாலே யார்மாட்டு மென்றும், மனத்தாலே எல்லாப்பற்றுக்களையும் விட்டவர்க்கு ஆகாத தீயநினைப்புகளையெல்லாம் பிறப்பிக்கு மாதலால் தீய பிறத்தலதனால் வருமென்றுங் கூறினார்.

ஊ) *கவிராசர்*: எல்லாரிடத்திலேயும் கோபத்தைச்செய்யப்போகாது. அந்தக் கோபத்தினாலே எல்லாப் பொல்லாப்பும் வரும் எ—று.

ஏ) *பழைய 2*: வலியவர், எளியவர் யாவரிடத்தும் கோபத்தை ஒழிக. ஒருவற்குத் தீயனவெல்லாம் அதனால் உண்டாம்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'தீய பிறத்தல்'

'தீயன பிறத்தல்' *மணக்*., 'பொல்லாங்கு கோப முதலியன' *பரிதி*., 'தீய அனைத்தும்' *காளி*. ஏனையோரும் இக்கருத்துப்பட உரைப்பர். *பரிமேல்*., 'தீய சிந்தைகள்'; வெகுளி மனமாகாதாத லின் 'தீயசிந்தை' என்ற உரை சிறந்தது. 'மறத்தல்—வியங்கோள் வினைமுற்று' என்பர் *பரிமேலழகர்*, 'தல்லீற்று வியங்கோள்' என்பர் *தேவநேயர்*. *தொல்காப்பியர்* வியங்கோளீறு கூறாராயினும், 'செப்பும் வினாவும் வழால் ஓம்பல்' என்பன முதலியவற்றால் உடம்பொடு புணர்த்துக் கூறியவதனால் அல், ஆல் ஈறுகள் கொள்ளப்படும் என்றார் *சேனாவரையர்*. *கல்லாடனார்* 'இயற்கைப் பொருளையிற் றெனக் கிளத்தல் என்பது அல்லீறே' என்பர். ஆகவே "தல்லீற்று

---

1 பொல்லாங்கு--தீமை.

வியங்கோள்' தொல்காப்பிய உரையாசிரியர்கள் காலத்துக்கொள்ளப் பெறவில்லை போலும்.

ஒ) ஒப்புமைப் பகுதி:

முற்றும் :

செற்ற மிகந்தொரீஇக்கதிகள் நல்லுருக் கண்டனிர் —வளையா.,23

மாறிநின்றவரையும் வணங்கின் அல்லது
சீறிநின் றவருயிர் செருப்ப தில்லையே —சூளா.,54

உளையா வறம்வற் றிடவூழ் வழு வுற்ற சீற்றம்
விளையாத நிலத்துனக் கெங்ஙன் விளைந்த தென்றான்
—கம்பராமா.,1820

....பிறரைச் சீறினோன் —கம்பராமா .,2283

அன்றியுந் துயரத் திட்டா யமரரை யரக்கர்க் கெல்லாம்
வென்றியுங் கொடுத்தா யென்னைக் கெடுத்ததுன் வெகுளி யென்றான்
—கம்பராமா.,7048

ஆதலால் வெகுளியே பகை நமக்கெலாம்
தீதெலாம் வினையினார் தீக்கதிப் பெயும்
காதலால் தம்மையும் ஒருகணத் துளே
ஏதிலார் ஆக்கும் இஃது இகழத்தக்கதே —மேரு.,217

31.4. நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்
பகையும் உளவோ பிற. (க0௪)

உரைப்பகுதி:

அ) *மணக்.*: நகுதலையும் மகிழ்தலையும் கெடுக்கின்ற சினத்தைப் போல, பகையாய் இருப்பனவும் வேறுசில உளவோ என்றவாறு.

இஃது இன்பக்கேடு[1] வரும் என்றது.

ஆ) *பரிதி.*: எ-து முகத்தில் சிரிப்பும் மனத்தில் களிப்பும் கொல்லு கின்ற சினத்திலும், தனக்கு வேறே பகை வேணுமோ? சினமே அமையும் என்றவாறு.

இ) *காளி.*: நகையாகிய முகமலர்ச்சியும் உவகையாகிய மனமகிழ்ச்சி யும் இவை இரண்டினையும் கொன்றுவிடுவதாகிய சினத்தைப் போல வேறு சிலபகையும் உளவோ? எனவே இதனைப் போல இவ்வுல கத்துப் பெருங்கேடு செய்ய வல்லனவாய் இருப்பன சில பகையும் இல என்று பொருளாயிற்று என்றவாறு.

உ) *பரிமேல்.*: துறந்தார்க்கு அருளானுளவாய முகத்தின்கண் நகை யையும்மனத்தின்கண் உவகையையும் கொன்றுகொண்டு எழுகின்ற

1 இன்பக்கேடு—அடைகின்ற இன்பத்திற்கு நேரும் தடை
2 அதனின்—சினத்தைக் காட்டிலும்

சினமேயல்லது, அதனின்[3] பிறவாய பகைகளும் உளவோ இல்லை.

துறவால் புறப்பகை[3] இலராயினும் உட்பகையாய்நின்று அருள் முதலிய நட்பினையும் பிரித்துப் பிறவித் துன்பமும் எய்துவித்தலான், அவர்க்குச் சினத்தின் மிக்க பகை இல்லை ஆயிற்று. இவை மூன்று பாட்டானும் வெகுளியது தீங்கு கூறப்பட்டது.

> *இராமா.*: நகையு முவகையுங் கொல்லுஞ் சினத்தின்" (அருந்தவர்க்கு) அருளினாலுண்டான முகத்தினிடத்துநகையையும் மனத்தினிடத்துண்டானமகிழ்ச்சியையுங் கெடுத்துஎழாநின்ற கோபத்தைக்காட்டிலும், பகையுமுளவோ பிற-வேறுபகைகளுமுண்டோ இல்லை எ-று.
>
> தவத்தால்வெளிப்பகையில்லாதவராயினும் உட்பகையாய்நின்று நற்குண முதலியசிநேகங்களை யெல்லாம் பிரித்துப் பிறவித் துன்பத்தை யடைவித்தலால் சினத்தின் மிக்க பகைவேறில்லையாயிற்று. இவை மூன்றுபாட்டாலுங்கோபத்தினது தீங்கு கூறப்பட்டது.

ஊ) *கவிராசர்*: முகத்திலே நகையையும் மனத்திலே சந்தோஷத்தையும் கெடுக்கப்பட்ட கோபத்தைப்போலப் பகையாவது ஒன்றில்லை எ-று.

ஏ) *பழைய 2*: பிறருக்கும் தன்னிடத்தில் வரும் நகையையும், உவகையையும் கொன்றுவிடும்; ஆதலால் தன்னிடத்தில் வரும் கோபமே தனக்குப் பகையாம்; அதனில் பெரிய பகை யாதும் இல்லை.

மல்லர்: முகத்தின் சந்தோஷத்தையும் மனசின் மகிழ்ச்சியையும் கெடுக்கிற கோபம் என்கிற உளப் பகையாளிக்கு மிஞ்சின பிறப் பகையாளிகள் உண்டோ இல்லை எ-று.

துறந்தாருக்குப் பிறத்திப்பட்ட பகையாளிகள் எத்தனை பொல்லாப்புச் செய்தாலும் அவர்களுடைய பிரதான நன்மையாகிற ஞானத்தைக் கெடுக்கமாட்டார்கள். சினமோ என்றால் முகத்தினும் மனத்தினும் சீரழித்து ஞானிகளுக்குப் பிரதான லட்சணமாய் இருக்கிற அருளை அழிக்கிறதினால் அவர்களுடைய ஞானத்தைக் கெடுக்கும் என்கிறதினால் எல்லாப்பிறபகையும் பார்க்கக்கோபம் என்கிற உளப்பகை அவர்களுக்குப் பொல்லாதது என்பது கருத்து.

நகை-சிரிப்பு; உவகை, மனமகிழ்ச்சி; கொல்லல்-கெடுத்தல்; சினம்-கோபம்; உளவோ-உண்டோ; பிற-பிறத்திப்பட்ட.

---

3 புறப்பகை--வெளிப்பகை அவை துறவிக்குத் தீங்கு நினைக்கும் பகைவர்கள்

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'முகத்தில் நகையும், மனத்தில் சிரிப்பும்' என்னும் பரிதியார் உரையும் காளிங்கர் உரையும்சிறந்த விளக்கமாவன, நகை—சிரிப்பு. இது மனத்தில் நிறைந்த மகிழ்ச்சியால் முகத்தில் வெளிப்படும் மெய்ப்பாடு. மகிழ்ச்சி—மனத்தின் நிறைவான் எய்தும் மலர்ச்சி.

ஒ) ஒப்புமைப் பகுதி:

'கொல்லுஞ் சினம்':

முங்கிலிற் பிறந்த முழங்குதீ முங்கிலின் முதலறமுடிக்குமா போலத்
தாங்கருஞ் சினத்தீ தன்னுளே பிறந்து தன்னுறுகிளையெலாந்தகிக்கும்
ஆங்கதன் வெம்மை யறிந்தவர் கமையா லத்தனையுள்ளடக்கவு மடங்கா
தோங்கிய கோபத் தீயினை யொக்கு முட்பகையுலகில் வேறுண்டோ

—கம்பராமா

ஓ) மேற்கோள் பகுதி:

பெருந்: நிகழ்காலத்து அடைமொழிக்கு மேற்கோள்.

(வீரசோ. 164. உரை)

31.5. தன்னைத்தான் காக்கின் சினம்காக்க காவாக்கால் தன்னையே கொல்லும் சினம். (௩0௫)

உரைப் பகுதி:

அ) *மணக்* : ஒருவன் தன்னைத்தான் காக்க வேண்டுவனாயின், சினம் தோன்றாமல் காக்க; காவானாயின், சினம் தன்னையே கொல்லும் என்றவாறு.

இஃது உயிர்க்குக் கேடு வரும் என்றது

ஆ) *பரிதி*: எ-து தன் ஆத்மாவை ரட்சிக்க[1] வேணுமாகில், சினங் காப்பான்; அல்லது, தன்னைச் சினங் கொல்லும் என்றவாறு.

ஈ) *காளி* : 'இவர் உரை பரிதியார் உரை போன்றதே '

உ) *பரிமேல்*: தன்னைத் தான் துன்பம் எய்தாமல் காக்க நினைத் தானாயின், தன் மனத்துச் சினம் வாராமல் காக்க; காவானாயின், அச்சினம் தன்னையே கெடுக்குங் கடுந்துன்பங்களை எய்துவிக்கும்.

'வேண்டிய வேண்டியாங் கெய்தற்'[2] பயத்ததாய தவத்தைப் பிறர்மேல் சாபம் விடுதற்காக இழந்து அத்தவத் துன்பத்தோடு[3]

---

1 ரட்சிக்க—காக்க; 2 குறள். 265.

3 இழந்த அத்துன்பத்தோடு, என்றும் பாடமுண்டு. உண்டி சுருக்கல் கோடைக்கண் வெயினிலை நிற்றல் முதலியவற்றால் வருந்துன்பம்.

பழைய பிறவித் துன்பமும்[4] ஒருங்கு எய்தலின், 'தன்னையே கொல்லும்' என்றார். ''கொல்லச் சுரப்பதாம் கீழ்''[5] என்புழிப் போலக் கொலைச்சொல் ஈண்டுத் துன்பமிகுதி உணர்த்தி நின்றது.

இராமா.: தன்னைத்தான்காக்கின்-(ஒருவன்துன்பம்வாராமலே) தன்னைக்காக்கநினைப்பானாயின், சினங்காக்க-தன்மனத்திலே கோபம் பாராமலே காக்கக்கடவது, காவாக்கால்-காக்க மாட்டானாயின், தன்னையே கொல்லுஞ் சினம்-அந்தக்கோபம் அவனையே கொடியதுன்பங்களையடைவித்துக்கெடுக்கும் எ று. பிறரைச்சபித்தற்காக அரிய பயனைத் தருந்தவத்தை யிழந்து அந்தத் தவத்துன்பத்தோடுபழைய பிறவித்துன்பத்தையுமொரு மிக்க அடைதலாலே தன்னையே கொல்லுமென்றார். கரும்பு போற் கொல்லப் பயன்படுங் கீழ் என்றாற்போலக்கொலைச் சொல் இங்கே துன்பமிகுதியைக் காட்டி நின்றது.

ஊ) *கவிராசர்*.: தன்னைத் துக்கப்படாமல் இருக்கக் காத்துக்கொள்ள வேணும் என்று நினைத்தால் தன் மனத்திலே கோபம் வாராமல் காக்கவேணும். கோபம் வந்தால் அது தன்னைத்தானே கெடுக்கும் என்றவாறு.

ஏ) *பழைய உ*.: தன்னைத் துன்பம் இல்லாமல் தான் காக்கவேண்டும் என்றால், மற்றொன்றும் காக்கவேண்டா; கோபத்தை மாத்திரம் காக்க; காவானாயின் தன்னையே கொல்லும் தன்கோபம்.

மல்லர்.: தனக்குத் துன்பம் வாராத படிக்குத் தன்னைக் காத்தலால் தன்னிடத்திலே கோபம் வாராதபடிக்குக் காத்துக் கொண்டே இருக்கவேணும். காக்காதே போனால் தனக்குத் தானே அந்தக் கோபம் வாதினை செய்யும் எ-று.

கோபமாவது ஞானத்தைக் கெடுக்கிறபடியினாலே அஞ்ஞானிகளுக்கு உண்டான துன்பங்கள் எல்லாம் கொண்டுவந்துவிட்டு வாதினை செய்யும் என்பது கருத்து.

காக்கில்—காத்தால்; சினம்— கோபம்; காவாக்கால் — காக்காதே போனால்; கொல்லல்—கெடுத்தல்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

பரிமேலழகர் 'சினம் தன்னையே' என்பதற்குத் 'தவத்தை இழத்தற்றுன்பத்தோடு பிறவித்துன்பமும் தரும்' என விளக்கமும் தருவர்.

4. தன்னைப் பற்றியும் பிறவுயிர்களைப் பற்றியும் தெய்வத்தைப் பற்றியும் வரும் பிறவித் துன்பங்கள்.
5 நாலடி., 279.

சொ.த. தன்னுயிர் வீடுபெறுதலை யழித்தல்' என்பர். 'கோபம்' பகைவன் செய்யக்கூடிய காரியங்களைச் செய்துவிடும்' என்பர் இராமலிங்கர். சினம் புறப்பகையை வளர்த்தும், இங்ஙனம் சினந் தோமே என்று கழிவிரக்கப்படச் செய்தும் வருத்திக்கொண்டே யிருக்கும் எனல் தக்கது.

ஒ) ஒப்புமைப் பகுதி:

''தன்னைத்தான் காக்கின் சினங்காக்க'':

.... மல்லல் பெறத்
தன்னைத்தான் காக்கின் சினம்காக்கின் என்றதனைப்
பொன்னைப்போல போற்றிப் புகழ்ந்திலையே''
—வள்ளலார், நெஞ்சறிவுறுத்தல்.,434

உள்ளங் கவர்ந்தெழுந் தோங்கு சினங்காத்துக்
கொள்ளுங் குணமே குணமென்க'' — நன்னெறி

31.6. சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும் ஏமப் புணையைச் சுடும். (கூ0கூ)

உரைப்பகுதி:

அ) மணக்.: சினம் என்று சொல்லப்படுகின்ற நெருப்புதான் துன்பக்கடலில் அழுந்தாமல்[1] தன்னைக் கரையேற விடுகின்ற நட்டோராகிய புணையைச்[2] சுடும் என்றவாறு.

சேர்ந்தாரைக் கொல்லி—நெருப்பு; இது காரணக்குறி. இது சினம் தன்னை அடுத்தாரைக் கொல்லும் என்றது.

ஆ) பரிதி.: எ—து தனக்குச் சேர்ந்தபேரை அகலப்பண்ணுகின்ற[3] கோபம் என்னும் நெருப்பு தனக்கு உறவானாரைக் கொல்லும் என்றவாறு.

இ) காளி.: எ—து உலகத்துச் சான்றோரால் கொடியனவற்றுள் மிகவுங் கொடியது இது என்று எடுத்துச் சொல்லப்பட்ட அடைந் தாரைக் கொல்லியாகிய கொடுந்தீயானது மற்று இத்துறவோர்க்குத் துணையாகிய அருளும் பொறையும் ஆசாரமும் முதலிய சேமமாகிய தெப்பத்தைச்[4] சுட்டுவிடும் என்றவாறு.

உ) பரிமேல்.: சினம் என்னும் நெருப்பு, இடமானவரையே[5] யன்றி அவர்க்கு இனமாகிய ஏமப்புணையையும் சுடும்.

---

1 அழுந்தாமல்—மூழ்கிப் போகாமல்; 2 புணை—தெப்பம்;
3 அகலப்பண்ணுகின்ற—நீக்குகிற; 4 சேமமாகிய தெப்பம்—பாதுகாப்புத் தெப்பம்.
5 இடமானவர்—தான் பற்றுதற்கு இடமாக இருப்பவர்கள்.

சேர்ந்தாரைக்கொல்லி என்பது ஏதுப்பெயர்[6], தான் சேர்ந்த இடத்தைக் கொல்லுந் தொழிலது என்றவாறு. சேர்ந்தாரை என உயர்திணைப்பன்மைமேல்வைத்து ஏனை நான்குபாலும் தம்கருத்தோடு கூடிய, பொருளாற்றலால்[7] கொண்டார்; ஈண்டு உருவகஞ் செய்கின்றது துறந்தார் சினத்தையே ஆகலின், சினமென்னும் நெருப்பு என்ற விதப்பு,[8] உலகத்து நெருப்புச் சுடுவது தான் சேர்ந்த இடத்தையே, இந்நெருப்புச் சேராத இடத்தையும் சுடுமென்னும் வேற்றுமை தோன்ற நின்றது. ஈண்டு இனம் என்றது முற்றத் துறந்து தவஞானங்களால் பெரியராய்க் கேட்டார்க்கு உறுதிமொழிகளை இனியவாகச் சொல்லுவாரை. உருவகை நோக்கிச் சுடும் என்னுந் தொழில் கொடுத்தார் ஆயினும், அகற்றும் என்பது பொருளாகக் கொள்க. ஏமப்புணை ஏமத்தை உபதேசிக்கும் புணை, இனம் என்னும் ஏமப்புணை என்ற ஏகதேசவுருவகத்தால் பிறவிக் கடலுள் அழுந்தாமல் வீடு என்னுங் கரையேற்றுகின்ற என விரித்துரைக்க. எச்சவும்மை விகாரத்தால் தொக்கது. தன்னையும் வீழ்த்து எடுப்பாரையும் அகற்றும் என்பதாம்.

காரி.: சேர்ந்தாரைக் கொல்லி என்பது, தான் சேர்ந்த இடத்தைக்கொல்லும் தொழிலது என விரியும், வடநூலாரும் தீக்கு 'ஆசிருதவரி' என்று ஏதுப்பெயர் கூறுவர்.

இராமா.: சினமென்னுஞ் சேர்ந்தரைக் கொல்லி—கோபமென்னும் நெருப்பானது, (தனக்கு இடமாகியவரைச் சுடுவதுமன்றி) இன மென்னும்—அவருக்கினமாகிய, ஏமப்புணையைச் சுடும்—இரட்சகத் தோணியையுஞ் சுடும் எ—று.

சேர்ந்தாரைக் கொல்லியென்பது நெருப்புக்குக் காரணப் பெயர்.

---

6 ஏதுப் பெயர்—காரணப்பெயர், உறுப்பாற்றலால் பொருளையுணர்த்தி வரும் பெயர் அதாவது, சேர்ந்தாரை என்னும் நிலைமொழியும் கொல்லி என்னும் வருமொழியும் இணைந்த ஆற்றலால் அது சேர்ந்த இடத்தைக் கொல்வது என்னும் பொருளை யுணர்த்தியவாறு காண்க. உறுப்பாற்றலில் உள்ள ஆற்றலாவது விரல் என்னுஞ் சொல் ஆகு பெயராய் நகத்தை உணர்த்தாது விரலையே உணர்த்தினாற் போல்வது, அதுபோல உறுப்பாற்றல் என்பதில் உறுப்பாற்றல் என்பதில உறுப்பாகிய சேர்ந்தார் கொல்லி என்னும் சொற்கள் தத்தம் இயற்கையான பொருளையே உணர்த்துதல் என்பர் பிரயோகவிவேக நூலார்.

7 பொருளாற்றல்—பொருட்கண்ணுள்ளவன்மை. இங்குச் 'சேர்ந்தாரை' என்னும் பலர்பால் ஏனைய ஆண்பால் முதலியவற்றிற்கும் உபலக்கணமானவாறு போல்வது. ஒருமொழி ஒழிதன் இனங்கொள வருவது உபலக்கணமாம். இதனை 'சிலை வளைத்து வென்றான்' 'சிலையால் ஆலயம் செய்தான்' என்பவற்றுள் கல்லையும் வில்லையும் உணர்த்தாது வில்லையும் கல்லையும் முறையே உணர்த்தியமையே பொருளாற்றல் என்பர் இலக்கணக்கொத்து நூலோர். 'சொல்லாற்றலாற்றோன்றுவதும், பொருளாற்றலாற்றோன்றுவதும் வேறொராற்றான் கருதவல்லவை முதலியவற்றால் பெறப்படுவது என்னும் தருக்க சங்கிரகதீபிகையுரை.

8 விதப்பு — சிறப்பித்து எடுத்துச் சொல்லுகை. சினமென வாளா கூறாது அதனைச் சேர்ந்தாரைக் கொல்லி என விதந்தவாறு காண்க.

இங்கே யுருவகஞ்செய்தது, தவஞ் செய்வோர் கோபத்தையா தலால் அந்த நெருப்பு உலகத்து நெருப்புப் போலாகாமல்தான் சேராத விடத்தையுஞ் சுடுமென்கின்ற வேற்றுமை தோன்ற நின்றது. இங்கே இன மென்றது, எல்லாப் பற்றுக்களையும் பற்றறவிட்டுத்தவஞானங்களாலே பெரியோராகிக் கேட்டார்க்கு உறுதியாகிய நன்மொழிகளை யினிமையாகச் சொல்லுவாரை. உருவகவலங்காரநோக்கிச்சுடு மென்னுந்தொழில் கொடுத்தாரா யினும் ஏமப்புணையை நீக்கு மென்பது பொருளாகக் கொள்க. ஏமப்புணையையும்என்னுமெச்சவு ம்மைவிகாரத்தாற்றொக்கது. தன்னையும் வீழ்த்து எடுப்பாரையும் விலக்கும் என்பது கருத்து.

ஊ) *கவிராசர்*: கோபம் என்கிற நெருப்பு தன்னைச் சேர்ந்தவனைக் கொல்லுகிற தல்லாமல் அவனுக்கு இனமான பேரையும் கெடுத்துப் பகை யாக்கும் (எ—று.)

ஏ) *பழைய 2*: சினம் என்னும் நெருப்பு தனக்கு இன்பமானவரையே அன்றி, தன்னைச் சேர்ந்தவர்க்கு இனமாகிய ஏமப்புணையைச் சுடும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

,*இனம் என்னும் ஏமப்புணை*' என்ற தொடர்க்கு உரை காண்பதில் உரையாசிரியர்கள் வேறுபடுகின்றனர்.

'தான் துன்பக்கடலில் அழுந்தாமல் கரையேறவிடுகிற நட்டோ ராகிய புணை' என்பர் *மணக்*..'தனக்கு உறவானாரைக் கொல்லும்' *பரிதி*., 'துறவோர்க்குத் துணையாகிய அருளும் பொறையும் ஆசாரமும் முதலிய சேமத் தெப்பத்தைச் சுடும்' என்பர் *காளி*.; 'தனக்கு இடமானவர்களையேயன்றிஅவர்கட்குஇனமான ஏமப்புணையையும் சுடும். ஈண்டு இனம் என்றது பற்றறத் துறந்து தவஞானங்களான் மிக்குக் கேட்டார்க்குக் உபதேச நன்மொழிகளை' யுதவும் பெரியோர் களை என விளக்கமும் தருவர். இவ்விளக்கம் *மணக்குடவர்* உதவப் பெற்றதாம். *கவிராசர்*உரை 'தன்னைக் கெடுப்பதல்லாமல் தன் னைச்சேர்ந்த இனமானபேர் எல்லாரையும் கெடுக்கும்' என்றுகூறும். *பழைய2*ம் அப்படியே.*மணக்குடவர்*உரை' தன்னைத்துறவிற்புகுத்தி. துறவுக்காலத்தே அவ்வப்போது தோன்றும் ஒழுக்கக்கேடுகளாகிற இடர்களைத் தாண்டும் உபாயமுங் கூறித் துன்பக்கடலிலிருந்து கரைசேர்க்கிற தன் குருநாதர், உடன்தவம் பயில்வோர்' இவர் களைக் குறிப்பது.

பரிதி., 'உறவானாரை என்பதற்குத் துறவொழுக்கத்திற்கு

உறவானாரை எனக்கொண்டு மணக்குடவர் கருத்தையே கருத்தாகக் கொண்டனர்.

காளிங்கர், வ.உ.சி. கூறும் உரை 'சேமப்புணை— தவிக்குங் காலத்துத் துணையாகப் பிடித்துக் கரைசேரப்பயன்படும் பாதுகாப் பானபுணை (LIFE BOAT) எனலாம். 'துறவியின் மனம், விட்டபற்றுக் காரணமாக நிலைகுலைந்து துன்பக்கடலிற் சிக்குண்டபோது உயிர் காக்கும் ஏமப்புணையாக இருப்பன அருளும் பொறையும் ஆசாரமும். வெகுளித்தீ அவற்றையும் கெடுக்கும்' என்ற நயத்தை நல்குகிறது.

பரிமேலழகர் தரும் விளக்கம், 'துறவிக்கு வழிகாட்டும் பெரியாரையும் அழிக்கும்' என்பது. வழிகாட்டுவோர் வழியைப் பின்பற்று வோரினும் பெரியராய்த் தவஞானங்களாற் சிறந்திருப்பர்' என்பதை அவரே குறிப்பிடுகிறார். 'அல்லிடத்துக் காக்கில் என்? காவாக்கால் என்?' என்பது போல'இவன் சினத்தால் அவர்கட்கு அழிவும்இல்லை ஆக்கமும் இல்லை. இவனிலைக்கு இரங்கிப் பரிவதூஉம் சான்றோர் கடன் என்பதுபோலப் பரிந்து நன்னிலையில் மீட்டும் நிறுத்த முயல் வர். ஆதலால் அவரை ஏமப்புணை' என்றார். ஆயினும் இவன் வெகுளி அவரைச் சுடாமை ஒருதலை. ஆதலால் அருள்பொறை ஆசாரம் ஆகிய ஏமப்புணையை வெகுளித்தீ சுட்டு அக்குணங்கள் இவன்மாட்டு இல்லாமலே செய்யும்என்று கருதியிருக்கிறார்எனலாம். சிறந்தன கொள்க.

கா.சு. 'சினந்தவர்க்குச் சுற்றமாய் இருப்பாரையும் சுடும்' என்பது. இதன் கருத்து. துறவிக்குச் சுற்றமாவார் யாரும் இன்மை யின் வழிகாட்டும் ஞானசுற்றத்தையே குறித்தனர் எனலாம் சி.இ. உரை தனக்குத் துணையாக உள்ளவரையும் சுடும்எனப் பொதுமை யின் நிற்பது. குழந்தை உரையும் அதுவே.

சொ.த. 'சினம் தனக்கு இடமானவரையும் அவர்க்குத் துணை யான அருள் முதலியவற்றையுமேயன்றி, அவர்க்குப் பாதுகாவலாக விளங்கும் பெரியோரையும் சுடும்'. *காளிங்கர், மணக்குடவர்* கருத்து களை இணைத்துத்தருவர். மேலும் 'நல்லுரை கூறுவாரைப்புணை' என்றதன் பொருத்தங்களை விதப்பர். சினம்இனம் என்னும் புணை யைச்சுடும் என்றாலே கருதியபொருள் நிரம்புவதாகவும் சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி என்ற விதப்பு, 'வேண்டியாது விளைக்கு மாற்றையும்' விளக்குவர்.

'சுடும்' என்பதற்கு 'அழிக்கும்' 'சுடும்' என்றே பொருள் கண்டனர் *மணக்குடவர் காளிங்கர்* முதலியோர். *பரிமேலழகர்* 'இனம்' என்பதற்கு 'ஞான ஒழுக்கங்களிற் சிறந்தார்' எனப்பொருள் கண்டமையின் 'அகற்றும்' என்றனர்.

ஔ) ஒப்புமைப் பகுதி:

'சினம் என்னும் ......கொல்லி,:

சினக்கொ டுந்திறற் சீற்றவெந் தீயினால் —கம்பராமா.,2465

கேட்டலும் வெகுளி வெந்தீக்கிளர்ந்தெழ —கம்பராமா.,5775

திருகு வெஞ்சினத் தீநிகர் சீற்றமும் —கம்பராமா.,9330

செவ்வியனாய்ச் செற்றுச் சினங்கடிந்து வாழ்வினிதே —இனியவை.,37

முற்றும்

அன்றியுந் துயரத் திட்டா யமரரை யரக்கர்க் கெல்லாம்
வென்றியுங் கொடுத்தா யென்னைக் கெடுத்ததுன் வெகுளி
யென்றான் —கம்பராமா.,7048

மூங்கிலிற் பிறந்த முழங்கு தீ மூங்கில்
முதலற முறுக்குமா போலத்
தாங்கரும் சினத்தீ தன்னுளே பிறந்து
தன்னுறு கிளையெலாம் தகிக்கும் —உத்தர இலவன்.,29

ஓ) மேற்கோள் பகுதி:

காரிரத்ன: மாட்டேறில்லா உருவகத்திற்கு மேற்கோள்.
(மாற.120,உரை)

31.7. சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று. (கOஎ)

உரைப்பகுதி:

அ) மணக்.: நிலத்தெறிந்தான்—பாடம். சினத்தைப் பொருளாகக் கொண்டவன் கெடுதல், நிலத்தெறிந்தவன் கை தப்பாமல் பட்டது போலும் என்றவாறு.

இது பொருட்கேடு வரும் என்றது.

ஆ) பரிதி.: எ—து கோபத்தைப் பொருளென்று கொண்டார்க்குக் கேடுவருவது தப்பாது; அது எப்படி என்றால், நிலத்தில் அடித்த கை தப்பாதது போல் என்றவாறு.

ஈ) காளி.: எ—து இம்மை மறுமை இரண்டினையும் கெடுப்பதாகிய சினத்தைப் பொருளெனவே கைக்கொண்டவனது கேடானது சிறிதும் தப்பாது என்பது எங்ஙனமெனில் நிலத்தை இலக்காகக்[1] குறித்துக் கொண்டு மற்று அந்நிலத்தின்கண் கண் புதைத்து எறியினும் கை பிழையாது என்றவாறு.

---

1 இலக்காக— இலட்சியமாக;

உ) *பரிமேல்.*: சினத்தைத் தன்னாற்றல் உணர்த்துவதோர் குணம் என்று தன்கண் கொண்டவன் அவ்வாற்றல் இழத்தல், நிலத்தின் கண் அறைந்தவன் கை அந்நிலத்தை உறுதல்[2] தப்பாதவாறு போலத் தப்பாது.

வைசேடிகர்[3] பொருள்[4], பண்பு[5], தொழில்[6], சாதி[7] விசேடம்[8] இயைபு[9] என்பனவற்றை அறுவகைப் பொருள் என்றாற்போல, ஈண்டுக்குணம் 'பொருள்' எனப்பட்டது. பிழையாதற்று என்பது குறைந்து நின்றது. இவை மூன்றுபாட்டானும் வெகுண்டார்க்கு வரும் தீங்கு கூறப்பட்டது.

இராமா.: சினத்தை—கோபத்தை, பொருளென்று—தன்வல்லமையைக் காட்டுகின்றகுணமென்று, கொண்டவன்—தன்னிடத்தில் வைத்தவன், கேடு—பின்பு அதினாலேகெடுவது, நிலத்தறைந்தான்கை—நிலத்திலே யறைந்தவனுடைய கையானது, பிழையாதற்று—அந்த நிலத்திற்படுவது தப்பாததுபோலத் தப்பாது, எ—று.—பொருளிடங்காலஞ்சினைகுணந்தொழிலென்ற ஆறையும்பொருளென்றுவழங்கலால் இங்கே கோபமென்னுங் குணத்தைப்பொருளென்றார். பிழையாதவற்றென்பதுபிழையாதற்று எனக் குறைந்து நின்றது. இவை மூன்றுபாட்டாலுங் கோபஞ் செய்தோர்க்கு வருந்தீங்கு கூறப்பட்டது.

ஊ) *கவிராசர்*: கோபத்தை நமக்குப் பொருள் என்று நினைத்துக்

---

2 உறுதல் —அடைதல்.

3 வைசேடிகர்—பொருள்களில் விசேஷத்தை ஒப்புக்கொள்ளும் கொள்கையினர். விசேடம் நித்தப் பொருளில் இருப்பனவாய், அப்பொருள்கள் வேறு வேறாய் இருப்பதை உணர்த்துவது என்கிறது தருக்கசங்கிரகம். வைசேடிகம் காணாதார் கண்ட நியாயமதம். இது பண்டைப் பொருள் என்றதால் சினம் என்னும் பண்பு வள்ளுவரால் சினமென்னும் சொல்லி எனப் பொருளாகக் கொள்ளப் பெற்றமை காண்க.

4 பொருள்—பொதுமையிற் பொருட்டன்மையுடையதும், குணமுடையதும் பொருளெனப்படும்.

5 பண்பு--குணத்தன்மையைப் பொதுமையில் உடையதும், பொருள் தொழில் இவற்றின் வேறாயதும் பண்பு அல்லது குணம் எனப்படும். உருவம் ரசம் முதலியன குணமாம்.

6 தொழில்--கருமத் தன்மையை, பொதுமையினுடையதும், புடைபெயர்ச்சி வடிவினதும் தொழில் எனப்படும். அவை அசைவு, எழுச்சி, விழ்தல் முதலாயினவாம்.

7 சாதி--நித்தியமாய் ஒன்றாய்ப்பல பொருள்களிலும் ஒரு தன்மைத்தாக விளங்குவதாய் இருப்பது சாதி அல்லது சாமாநியம் எனப்படும்.

8 விசேடம்--இதனின் இது வேறு எனப் பிரித்தறியும் புத்தி மாத்திரத்திற்கு ஏதுவாய் நிற்பது விசேடம் அல்லது சிறப்பு எனப்படும்.

9 இயைபு--சினை-முதலுக்கும், குணம்-குணிகட்கும், சாதி-சாதியையுடையதற்கும் செயலுக்கும்-செய்வோனுக்கும். சிறப்பு-- நித்தியப் பொருள்களுக்கும் உள்ள சம்பந்தம் இயைபு எனப்படும். இயைபு ஒற்றுமைச் சம்பந்தம். சமவாயம் என்பன ஒரு பொருட்கிளவிகள்.

கொண்டவனுக்குக் கேடு வருகிறது, தரையை அடித்தவன் கை தப்பாமல் நிலத்திலே படுகிறாப்போலத் தப்பாமல் கேடுவரும்,. (எ—று).

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'பொருள் என்று கொண்டவன்'

'பொருளாகக் கொண்டவன்', 'பொருள் எனவே கொண்டவன்', 'தன்னாற்றல் உணர்த்துவதோர் குணம் என்று கொண்டவன்' என முறையே *மணக்.*, *பரிதி.*, *காளி.*, *பரிமேல்.*, உரைப்பர். *பரிமேலழகர்* 'சினமாகிய குணத்தைப் பொருள் என்றல் வைசேடிகர் மதம்' என மேற்கோளும் காட்டுவர். *தேவநேயர்* பொருளல்லவரைப் பொருளாகச்செய்யும் என்புழிப் போலச் சினம் என்னும் பண்பு பொருள் எனப்பட்டது' என்பர். *குழந்தையும்*, *பரிமேலழகரை* ஒட்டிக் 'குணம்' என்றே கூறுவர். *கா.சு.* 'கோபத்தைக் கருவியாகக் கொண்டவன்' என்பர். ஒரு வல்லமை என்று பாராட்டுகிறவன் என்னும் *இராமலிங்கர்* கருத்தும் குணமாகவே பொருள் காண்பதால் வைசேடிகர் மதமும் குணம் முதலிய ஆறனைப் பொருள் என்னும் என ஆட்சிகாட்டியது குற்றமாகாது. ஆதலால் அனைவரும் சினமாகிய குணத்தைப் பொருள் என்பதில் மாறுபாடிலராதலைக் காணலாம். இது பொருட் கேடு வரும் என்ற மணக்குடவர் கருத்து. 'பொருளைப் பொருளாக எண்ணாமல் சினத்தைப் பொருள் என்று கருதினவன் அச்சினத்தாற் பொருட்கேடுறுவன்' என்பதைக் கருதியதன் விளைவு ஆகலாம்.

மு. ரா அரு. நிலத்தையடித்தவன் கை புண்படுதல் போல, கோபஞ்செய்தவன் துன்புறுவன் என்பர்.

ஒ) ஒப்புமைப் பகுதி:

முற்றும்:

கதம்எனும் பொருண்மையிலர் —*கம்பராமா.*, 3860
தீண்டி னார்தம்மைத் தீச்சுடு மனைர் தீ
ஈண்டு தங்கிளை யோடு மெரித்திடும் —*சீவக.*,250

31.8. இணரெரி தோய்வன்ன இன்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று. (௩0அ)

உரைப்பகுதி:

அ) மணக்.: தொடர்வுபட்ட[1] நெருப்பு மேன்மேலும் வந்துற்றாற்போல, ஒருவன் தனக்கு இன்னாதவற்றைப் பலகால் செய்யினும் கூடுமாயின், வெகுளாது ஒழிதல் நன்று என்றவாறு.

1 தொடர்வுபட்ட -- தொடர்ந்து பற்றிய.

மேல்வலியவன் பொறுக்க வேண்டும் என்றார். அவன் பொறுக் குங்கால் தீமை செய்யினும் பொறுக்க வேண்டும் என்றார்.

ஆ) *பரிதி*.: எ—து பூங்கொத்தை அக்கினியில் இட்டாற் போலே ஒருவர் தனக்குப் பொல்லாங்கு செய்தாலும் அவ்விடத்தும் கோபம் விடுகை நன்று என்றவாறு.

ஈ) *காளி*.: 'இவர் உரை பரிதியார் உரை போன்றதே.'

உ) *பரிமேல்*.: பலசுடரை உடைத்தாய பேரெரி வந்து தோய்ந்தா லொத்த இன்னாதவற்றை ஒருவன் செய்தானாயினும், அவனை வெகுளாமை ஒருவற்குக் கூடுமாயின் அது நன்று.

இன்னாமையின் மிகுதி தோன்ற 'இணரெரி' என்றும், அதனை மேன்மேலுஞ் செய்தல் தோன்ற 'இன்னா' என்றும், அச்செயல் முனிவரையும் வெகுள்விக்கும்[2] என்பது தோன்றப் 'புணரின்' என்றும் கூறினார். இதனான் வெகுளாமையது நன்மை கூறப்பட்டது.

இராமா.: இணரெரி —பலசுடர்ச்சிகைகளையுடைய பெருந்தீயா னது, தோய்வன்ன-தன்னைவந்து தீண்டினதையொத்த, இன்னா செயினும்...துன்பங்களையொருவன்செய்தானாயினும், புணரின் வெகுளாமை- அவனைக்கோபஞ் செய்யாதிருக்கக் கூடுமாயின், நன்று அது—நன்று, எ-று.

துன்பத்தின் மிகுதிதோன்ற இணரெரியென்றும். மேன்மேலுஞ் செய்தல் தோன்றத் துன்பங்களென்றும், அச்செயல் பொறை யுடைத்தவத்தோரையுங் கோபிக்கச் செய்யுமென்பது தோன்ற வெகுளாமை புணரினென்றுங் கூறினார். இதனாற் கோபஞ்செய் யாமையினது நன்மை சொல்லப் பட்டது.

ஊ) *கவிராசர்*: மெத்த எரிகிற நெருப்பிலே விழுந்தாற்போல் ஒத்த பொல்லாங்குகளை ஒருவன் செய்தாலும் அவனைக் கோபித்துக்கொள் ளாமல் இருக்கிறதே நல்லது (எ-று).

ஏ) *பழைய* 2. கொழுந்துவிட்டு எரியும் நெருப்பில் தோய்ந்தால் ஒத்த[3] துன்பத்தை ஒருவன் செய்தானாயினும், கோபம் வந்து அடை யாமல் இருப்பதே நன்று.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'இணர்எரி'

'தொடர்புபட்ட நெருப்பு' மணக்.; 'பூங்கொத்தை அக்கினியில் இட்டால் போலும் பொல்லாங்கு' *பரிதி*., *காளிங்கர்*; 'பலசுடரை

2 வெகுள்விக்கும் -- சினத்தை உண்டாக்கும்.
3 தோய்ந்தால் ஒத்த -- முழுகினாற் போன்ற.

யுடைய பேரெரி' *பரிமேல்.*; 'மெத்த எரிகிறநெருப்பு' *கவிராசர்*; 'கொழுந்து விட்டெரியும் நெருப்பு' *பழைய 2, குழந்தை, இராம.* 'கொத்தான நா உள்ள பெருந்தீ' *தேவநேயர்.*

'வெகுளாமை புணரின் நன்று' எனக் கூட்டியுரைப்போர், *பரிதி. பழைய 2, கவிராசர், காளிங்கர்* முதலியோர்.

புணரின்: 'புணரின் வெகுளாமை நன்று' என நிரல்படக் கொண்டு 'கூடுமாயின் நன்று' எனப் பொருள் காண்பர் *மணக்.*: ஈண்டு புணரின் என்ற செயின் என்னும் வாய்பாட்டுச் சொல் வெகுளாமையது அருமை விளக்கி நின்றது.

இவ்வுரைகளில் *நன்னூல்* விருத்தியுரையில் (*நன்.*சூ. 360ல்)[1] இசை எச்சமாக உரையாசிரியர் கொள்ளும் கருத்துக்களை இக்குறள் மேற்கோட்பகுதியுட் காணலாம்.

மு. ரா. அரு. 'புணரின் என்பதற்குத் 'தன்னால் கோபஞ் செய்யப் படுவார் தன்னிடம் வந்து தாம்முன் செய்தது குற்றம் என்று வணங்கிவந்தால் அவரைக் கோபியாதிருத்தல் நல்லது' எனவும் கூறுவர். இவ்வுரை சிறப்பன்று என்க என்பர்.

வ. உ. சி. 'புணரின்—வெகுளப்பட்டவர் தன்பால் வந்து சேரினும்' என்பர்.

ஏ) ஒப்புமைப் பகுதி:

'துன்பத்துக்குத் தீ':

கட்டழல் எவ்வம் —*சீவக.*, 366

காயெரி யுற்றன ரனைய கௌவையர் —*கம்பராமா.*, 1876

தீயெரி செவியில் வைத்தனைய தீயசொல் —*கம்பராமா.*, 2230

புண்மே னுழையத் துடிக்கின் றனன் போற்பு ரண்டாள் —*கம்பராமா.*, 3636

புண்டி றந்ததி லெரிநு ழைந் தாலெனப் புகைவான் —*கம்பராமா.*, 5188

1. *சங்கர*:- பிற உயிர்க்கு இன்னா செயின், அவை பிழையாது தமக்கு வருதல் கருதித் தம்மாட்டு அன்பும், பிற வுயிர்கண்மாட்டு அருளும் இன்னாசெய்தலான் மேன்மேல் வளரும் பிறப்பிறப்பான் அச்சமும், நம்மால் இன்னாசெய்யப்பட்டாரை நாமடைந்து இரத்தல் கூடினுங் கூடும் அதனால் யார் மாட்டும் இன்னா செய்யக் கடவே மல்லேம் என்னும் வருங்கால உணர்ச்சியும் இலராய் ஒருவர் தன்னால் ஆற்றக் கூடாத இன்னாதனவற்றைத் தன்கட் செய்தாராயினும் அவர் தமக்கு வேண்டுவதோர் குறை முடித்தல் கருதி நாணாது தன்னை யடைந்தாராயின் அவர் செய்த இன்னாமை கருதி அவரை வெகுளாது அவற்றை மறந்து அவர் வேண்டுங் குறை முடித்து, முன்செய்த இன்னாமையால் அவர் கூசி ஏகுதல் தவிர்தற்குக் காரணமாகிய மெய்ப்பாடு முதலியன தன்கட்குறிப்பின்றி நிகழ அவர்க்கு இனியனாயிருத்தல் தன் சால்புக்கு நன்றென நால்வகைச் சொற்களுள் வேண்டுவன எல்லாந்தந்து அகலங்கூற வேண்டி இசை எச்சம் ஆம் என்க (நன் .சூ.360.)

'இன்னா செயினும் புணரின் வெகுளாமை'

பெரியதப் புநராயினும் பகைவர்
பணிந்து திறைபகரக் கொள்ளுகை —பதிற்.,1723

இரப்பச் சிறியவா இன்னாசெயினும்
பிறப்பினான் மாண்டார் வெகுளார் —பழமொழி.,310

.... பொறையின் ஆற்றலால்
மூண்டெழு மெகுளியை முதலின் நீக்கினா
ஆண்டுறை அரக்கரால் அலைப்புண் டாரரோ —கம்பராமா.,2729

ஓ) மேற்கோள்பகுதி:

மயிலை: 'இணரெரி தோய்வன்ன' என்ற இக்குறள் பிறர் இன்னா செயினும் தான்வெகுளாமை நன்றுஎன எஞ்சிய பெயர்கொண்டு முடி தலில் பெயரெச்சமாயிற்று. (நன்.359) சங்கர: பிற உயிர்க்குஇன்னா செய்யின், அவை பிழையாது தமக்கு வருதல் கருதித் தம்மாட்டு அன்பும், பிற வுயிர்கண்மாட்டு அருளும், இன்னாசெய்தலான் மேன் மேலும் வளரும் பிறப்பிறப்பின் அச்சமும், நம்மால் இன்னாசெய்யப் பட்டாரைநாமடைந்து இரத்தல் கூடினுங் கூடும் அதனால்யார்மாட் டும்இன்னாசெய்யக் கடவேமல்லேம் என்னும்வருங்காலஉணர்ச்சியும் இலராய் ஒருவர் தன்னால் ஆற்றல் கூடாத இன்னாதனவற்றைத் தன்கட் செய்தாராயினும் அவர்தமக்கு வேண்டுவதோர் குறை முடித் தல் கருதி நாணாது தன்னையடைந்தாராயின் அவர்செய்த இன் னாமை கருதிஅவரை வெகுளாது அவற்றை மறந்து அவர் வேண் டுங் குறை முடித்து, முன்செய்த இன்னாமையால் அவர் கூசி ஏகுதல் தவிர்தற்குக் காரணமாகிய மெய்ப்பாடுமுதலியன தன்கட் குறிப்பின்றி நிகழ அவர்க்கு இனியனா யிருத்தல் தன் சால்புக்கு நன்றென நால் வகைச் சொற்களுள் வேண்டுவன எல்லாந்தந்து அகலங்கூறவேண்டி நிற்பன இசையெச்சம் ஆம் என்க.

(நன்.சூ.360.)

பேரா. (தொல்.பொருள்.277)

31.9. உள்ளிய தெல்லாம் உடனெய்தும் உள்ளத்தால்
உள்ளான் வெகுளி எனின். (கூ0கூ)

உரைப்பகுதி:

அ) மணக்.: 'உள்ளிய வெல்லாம்' பாடம், தன் நெஞ்சினால்வெகுளி யை நினையானாகில், தான் நினைத்தன எல்லாம் ஒரு காலத்தே கூடப்பெறுவன்[1] என்றவாறு.

1 கூடப்பெறுவன் - அடையப்பெறுவன்.

ஆ) *பரிதி*.: எ—து நினைத்த காரியம் எல்லாம் கைகூடும்; மனத்திலும் கோபம் விடுவானாகில் என்றவாறு.

இ) *பரிப்*.: இது நினைத்தன பெறும் என்றது.

ஈ) *காளி*.: 'உள்ளிய வெல்லாம்' பாடம். இவ்வெகுளியைத் தனது நெஞ்சத்தாலும் கருதாது எஞ்ஞான்றும் ஒடுங்கிய உள்ளத்தானாமாயின் மற்று அவன் கருதிய எல்லாம் ஒக்கஎய்துவன்;எனவே ஈண்டு தன்துணையாகக் கீழ் சொல்லிய அருள் முதலியவற்றாலும் குறைபாடு இன்றி அளவில்லாத இன்பம் எய்துவன் என்பது பொருள் என்றவாறு.

இனி அத்துறவோர்க்குச் சினம் இன்மையால் சிறக்கும் செய்தியானது ஆற்றலால் பிறர்க்கு இன்னாதனவற்றைச் செய்யாது தம் போல நோக்கித், தவம் ஆற்றுதல் அன்றே; அதனால் இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றன.

உ) *பரிமேல்*.: தவஞ் செய்யுமவன், தன் மனத்தால் வெகுளியை ஒருகாலும் நினையானாயின் தான் கருதிய பேறு எல்லாம் ஒருங்கே பெறும்.

உள்ளத்தால் என வேண்டாது கூறிய அதனான், 'அருளுடையுள்ளம்' என்பது முடிந்தது.[2] அதனால் உள்ளாமையாவது அவ்வருளாகிய பகையை வளர்த்து அதனான் முற்றக்கடிதல்.[3] இம்மை மறுமை வீடு என்பன வேறுவேறு திறத்தனவாயினும், அவையெல்லாம் இவ்வொன்றானே எய்தும் என்பார் 'உள்ளியது எல்லாம் உடன் எய்தும்' என்றார். இதனான் வெகுளாதார்க்கு வரும் நன்மை கூறப்பட்டது.

> *ராமா*.: உள்ளத்தானுள்ளான்வெகுளியெனின்—மனதினாலேயொருவன் கோபத்தைநினையானாயின், உள்ளியதெல்லாம்—நினைத்தபேறுகளையெல்லாம், உடனெய்தும்—உடனேயொருமிக்கப் பெறுவான் எ-று.
>
> உள்ளத்தாலெனவேண்டாது சொன்னதினாலே அவ்வுள்ளம் அருளுடையதென்பதுதோன்றநின்றது. அம்மனத்தாலுள்ளாமையாவது, அந்தஅருளாகிய சினப்பகையைவளர்த்ததினாலேயச் சினமுழுமையும் நீக்கிவிடுதல். இம்மையின்பம் மறுமையின்பம் வீடுஎன்பன. வேறுவேறுகுணங்களையுடையனவாயினும் அவையெல்லாமிந்தவொன்றினாலே யடையப்படுமென்றுசொல்ல

[2] வேண்டாக் கிளவி வேண்டியது விளைக்குமாதலின் அருள் உள்ளம் என்றதாம்
[3] முற்றக்கடிதல்--முழுதும் நீக்குதல்.

வந்தவர் உள்ளியதெல்லாமுடனெய்துமென்றார். உள்ளியதெல் லாமென்றது பன்மையினொருமைவந்த பால்வழுவமைதி. இதினாலேகோபஞ்செய்யாதவர்க்குவரும் நன்மை கூறப்பட்டது

ஊ) *கவிரசர்*: தன் மனத்திலே நினைத்ததெல்லாம் நினைத்தபடியே வந்து கூடும் மனத்திலே கோபத்தை நினையாமல் இருந்தால் என்றவாறு.

ஏ) *பழைய 2*: நினைத்தவை எல்லாம் உடனே வந்து கைகூடும் மனத்தினால் கோபத்தை நினையானாகில்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக்குடவர் 'தான் நினைத்தன எல்லாம்' எனப் பொருள் கோடலால் இவர் கொண்ட பாடம் 'உள்ளிய எல்லாம்' என்றிருக்க லாம். 'கருதிய எல்லாம்' என எழுதும் காளிங்கரும் இத்தகையரே எனற்கு இழுக்கின்று. நன்னூற்குப் பழைய உரை மயிலைநாதர் காண்டிகையுரை. அவர் இப்பகுதியை எடுத்துக்காட்டி 'அஃறிணைப் பன்மையுடன் ஒருமை மயங்கியது' என்றலின் அவர்காலத்திலேயே உள்ளியதெல்லாம்' என்ற பாடம் வந்து விட்டது போலும்.

சினத்தால் தவம் அழியும் என்பது மரபு. சினத்தை மனத்தாலும் நினையாதவனுக்குந் தவம்குறையாமை மட்டுமேயன்றி வளரவும் செய்யும், அதனால் எண்ணிய எண்ணியாங்கு எய்தலாம் என்பது. *பரிமேலழகர்* வேறு கூறுதல் காண்க. *சொ. த.* 'ஒருவன் ஒன்றைஉள் ளானாதல் அதற்குமாறாய ஒன்றை உள்ளுதலானன்றி ஆகாது; ஆதலால் வெகுளிக்குமாறாகிய அருளை எண்ண வெகுளி தோன் றாது' என விளக்கமும் தருவர். எண்ணிய எண்ணியாங்கு எய்தலாம் என்பதும் இதற்கு அரணாவது. 'வாயாற் சொலல்' என்பதுபோல 'உள்ளத்தால் உள்ளலும் தீதே' என்றது துறவி குற்றங்கள் அனைத் தையும் நினைப்பிலேயே களைய வேண்டியதன் இன்றியமையாமை உணர்த்திற்று எனலுமாம்.

ஒ) மேற்கோள்பகுதி:

மயிலை: அஃறிணைப் பன்மையுடன் ஒருமை மயங்கியதற்கு மேற் கோள். (நன். 379.)

தெய்வச்: தொல்— சொல். 59.

சிவஞான; கம்ப. விருத்தி. பக். 9.

31.10 இறந்தார் இறந்தார் அனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை. (௩௧௦)

உரைப்பகுதி:

அ) *மணக்.:* சினத்தை மிகுத்தார் செத்தாரோடு ஒப்பர்; அதனை ஒழிந்தார் எல்லாப் பொருளையும் துறந்தாரோடு ஒப்பர் என்றவாறு.

இது வெகுளாதார் பெரியர் என்றது.

ஆ) *பரிதி.:* மாண்டார்க்குச் சரியான சினத்தைத் துறந்தார்க்கு நிகரானது, தொண்ணூற்றாறு தத்துவத்தையும்[1] உடலோடே இருக்கையிலே 'புளியம்பழமும் ஓடும்போலே' துறந்தார் நிகராம் என்றவாறு.

இ) *பரிப்.:* இது வெகுளாதார் பெரியர் என்றது.

ஈ) *காளி.:* 'இவர் உரை பரிதியார் உரை போன்றதே.'

உ) *பரிமேல்.:* சினத்தின்கண்ணே மிக்கார் உயிருடையராயினும் செத்தாரோடு ஒப்பர், சினத்தைத் துறந்தார் சாதல் தன்மையராயினும் அதனை ஒழிந்தார[2]ளவினர்.

மிக்க சினத்தை உடையார்க்கு[3] ஞானம் எய்துதற்குரிய உயிர் நின்றதாயினும் கலக்கத்தான் அஃதெய்தாமை ஒருதலையாகலின்[4], அவரை இறந்தார் அனையர் என்றும், சினத்தை விட்டார்க்குச் சாக்காடு எய்துதற்குரிய யாக்கை நின்றதாயினும், ஞானத்தான் வீடு பெறுதல் ஒருதலையாகலின், அவரை வீடுபெற்றாரோடு ஒப்பர்[5] என்றும் கூறினார்.[6] இதனான் அவ்விருவர்[7] பயனும் ஒருங்கு கூறப்பட்டது.

---

1 தொண்ணூற்றாறு தத்துவம்-தொண்ணூற்றாறு மூலப்பொருள்கள், அவையாவன ஆன்மதத்துவம்-௨௪, நாடி-௧௦, அவத்தை-௫, மலம்-௩, குணம்-௩, மண்டலம்-௩ பிணி-௩, விகாரம்-௮, ஆதாரம்-௬, தாது-௭, வாயு-௧௦, கோசம்-௫, வாயில்-௯ ஆக ௯௬ இவற்றின் விரிவைக் கட்டளை நூற்களிற் காண்க.

2 அதனை ஒழிந்தார்-சாதற்றன்மையின் நீங்கிய சீவன்முத்தர். சீவன்முத்தரும் எடுத்த உடலுக்கு உள்ள பிராரத்த கன்மம் தொலையும் வரையில் இடையூறின்றி இனிது வாழ்வர். அதுபோலச் சினம்விட்டவரும் வாழ்வர் ஆதலின் இங்ஙனம்கூறியதாம்.

3 சினமானது மனத்திலிடத்தெழும் விருப்பத்திற்குத் தடையுண்டாய போது உண்டாவதாம். சினம் தமோகுண வியாபாரமாதலின், அது சத்துவகுணமுடையராக இருக்கும் நித்தார்க்கு ஆகாதாயிற்று. ஆகவே மிக்க சினத்தையுடையார் கலக்கமின்றிய சத்துவ குணமுடையராய் இருத்தல் காண்க;

4 ஒருதலை—துணிவு.

5 'துறந்தார் துணை' என்றும் பாடமுண்டு.

6 'துறந்தார்' துணை பன்மை ஒருமை மயக்கம்' என்பது வை மு.கோ., கோ.வ., பதிப்பில் பரிமேலழகர் உரையாகக் காணப்படுகிறது.

''இரு கண்ணும் சிவந்தது' என்பதில் 'சிவந்தது' என்பது அஃறிணை ஒருமையாய் இருந்து பன்மைக்கு வினையாய் இருத்தலின் ஒருமை பன்மை மயக்கமாயிற்று. துணை என்பது அங்ஙனம் அன்று

7 அவ்விருவர்—சினமுடையார் அஃது இலாதார்.

இராமா.: இறந்தார்—கோபத்திலேமிக்கவர், இறந்தாரனை யார்—(உயிருடையவராயினும்) செத்தவரோடொப்பர், சினத்தைத்துறந்தார்—கோபத்தை நீக்கினவர், (சாங்குணமுடையவராயினும்) துறந்தார்துணை—அந்தச்சாக்காட்டை யொழிந்தோரளவினராம், எ—று.

மிகுந்தகோபமுடையவர்க்குஞானமடைதற்குரிய உயிரிருந்ததாயினுங்கலக்கத்தினாலேயதை யடையக்கூடாமைநிச்சயமாதலால், அவரை யிறந்தாரனையரென்றும், கோபத்தை விட்டவர்க்குச் சாவுக்குரிய தேகமிருந்ததாயினும் ஞானத்தினாலே முத்திபெறுவது நிச்சயமாதலால், அவரை முத்திபெற்றவரோடொப்பரென்றுங்கூறினார். இதினாலே அவ்விருவர் பயனுமொருமிக்கச் சொல்லப்பட்டது.

அ) *கவிராசர்*: அதிகமான கோபத்தை உடையவன் உயிருடனே இருந்தாலும் செத்தவனோடு ஒப்பான். கோபத்தைக் கடிந்தவன் சாகிறவனேயானாலும் நெடுங்காலம் இருக்கிறவனோடு ஒக்கும் (எ—று).

ஏ) *பழைய2*: கோபத்தை உடையவர் செத்தவரோடு ஒப்பர்; கோபத்தை விட்டு நீங்கினவர் துறவறத்தை உடைய பெரியரோடு ஒப்பர்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'இறந்தார்' என்பதற்கு 'மிகுத்தார்' எனப்பொருள் கொண்டு 'சினத்தை மிகுத்தார்க்கு யாரும் பகையாதலின் எப்போதும் எந்த வகையிலும் உயிருக்கு இறுதி நேரக்கூடுமாதலின் செத்தாரோடொப்பர். சினத்தைவிட்டவர் எல்லாவற்றையும்துறந்தாரோடொப்பர்' என்பர் மணக்குடவர். இவ்வியல் துறவறவியல்; இதிற் கூறப்படும் அறங்கள் யாவும் துறவிகட்குரியன. ஆகவே துறந்தாரோடு என்றலாற் போந்த பயன் யாது? என்ற சிந்தனை எழுதல் இயல்பே. ஆதலால் இவருரையும் ஆய்விற்குரியதே.

பரிதியார். 'இறந்தார் அனையராகிய சினத்தைத் துறந்தார்(க்கு)துணை துறந்தார் (ஆம்) 'எனக்கூட்டிப்பொருள் கண்டிருப்பர் எனத்தோன்றுகிறது. இங்ஙனமாயின் முதற்கண் உள்ள 'இறந்தார்' என்ற சொல்லை எதனுடன் கூட்டிப் பொருள் கண்டிருப்பர் என்பதறியக் கூடாமையின் விடுத்தனர் எனவே துணியத் தோன்றுகிறது. இவருரையாற் போந்த கருத்து 'சினத்தைத்துறந்தார் மாண்டார்க்கு நிகராவர் அவர்களுக்கு நிகர் பற்றின்றி வாழும் சீவன் முத்தராகிய துறந்தாரே என்பதாகிறது. 'தொண்ணூற்றாறு தத்துவங்களின்

காரியமாகிய உடலோடும் இருந்தே அவற்றின் நீங்கியிருக்கும் ஆன்மசுத்தி நிலையிலிருப்பவர்களே துறந்தார். சினத்தை விட்டவர் அவர்கட்குத் துணையாக அதாவது நிகராக மதிக்கப்படுவர்' என்பதாம்.

பரிமேலழகர், 'துறந்தார் என்பதற்கு வீடுபெற்றார்' எனப் பொருள்கண்டு 'சினத்தை விட்டவன் வீடுபெற்றானே யாவன் எனத் துணிவுபற்றிக் கூறியவாறாம்' என்பர். இவ்வுரையும் வலிந்து கோடலே யாவது உணர்க. ஆதலால், சினத்தான் மிக்கார் இறந்தாரோடொப்பர். 'சினத்தைத் துறந்தார்க்கு சினத்தைத் துறந்தாரே துணை. வேறொருவருமிலர்' என்று உரை காணின் நேர்மையும் அதிகார இயைபும் உடையதாதலைக் காணலாம். இதன் கருத்து 'சினமுடையவன் செத்தவனுக்கு ஒப்பாவான்; சினத்தை விட்டவனுக்குச் சினத்தை விட்டவனே துணையாவதன்றி வேறு சமமில்லை' என்பதாம்.

ஓ) *மேற்கோள்பகுதி:*

காரிரத்ன: பாவிக அலங்காரத்திற்கு மேற்கோள். *மாற* 251

31. வெகுளாமை

	செல்லிடத்துக்	செல்லா	மறத்தல்	நகையும்	தன்னைத்தான்	இனமென்னும்	இனத்தைப்	இணரெரி	உள்ளிய	இறந்தார்
மணக்.	2	4	1	8	—	—	7	3	9	10
பரிதி.	3	2	8	7	4	6	5	9	10	1
பரிப்.	—	4	—	—	—	—	—	—	9	10
காளி.	3	2	7	6	4	9	5	8	10	1
பரிமேல்.	1	2	3	4	5	6	7	8	9	10

31—வது அதிகாரம் வெகுளாமை முற்றிற்று.

32. இன்னா செய்யாமை

அ) *மணக்.*: இன்னாசெய்யாமையாவது தமக்கு இன்னாதவற்றைப் பிறர்க்குச் செய்யாமை. இது வெகுளி மறந்து நிகழ்வது ஒன்றாதலின், அதன்பின் கூறப்பட்டது.

ஆ) *பரிதி.*: இன்னாசெய்யாமையாவது, முனி கோபத்தினாலே ஒருவரைச் சபிக்க ஒண்ணாது[1] என்றவாறு.

உ) *பரிமேல்.*: அதாவது தனக்கு ஒருபயன் நோக்கியாதல், செற்றம்[2] பற்றியாதல், சோர்வ[3]ானாதல் ஒருயிர்க்கு இன்னாதவற்றைச் செய்யாமை. இன்னாசெய்தல் வெகுளி[4] யொழியவும் நிகழும் என்பது அறிவித்தற்கு, இது வெகுளாமையின்பின் வைக்கப்பட்டது.

ஊ) *கவிராசர்*: அஃதாவது, தனக்கு ஒருபலனை நோக்கியாதல் கோபம் பற்றியாதல் ஒரு சீவனுக்கும் பொல்லாப்புச் செய்யாமல் இருக்கிறது.

ஏ) *பழைய 2*: அஃதாவது, பொல்லாத செயல்களைச் செய்யாமல் இருப்பது.

மல்லர்: அதாவது ஒருத்தருக்குப் பொல்லாப்புச் செய்யாமலிருக்கிறது.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

பரிதி., *கவிராசர்*, *பழைய 2* 'கோபத்தால் பிறவுயிர்கட்குத் துன்பம் செய்யாமை' என முன்னதிகாரத்தோடு இயைபுறுத்திக் கூறுவர்.

---

1 ஒண்ணாது —பொருந்தாது; 2 செற்றம்—கோபம்; 3 சோர்வு—மறதி;
4 வெகுளி—கோபம்.

மணக்., *பரிமேலழகர்* 'வெகுளி மறந்து அதாவது வெகுளியன்றியும் ஏதோ பயன் நோக்கியும், சோர்வானும் இன்னாமை செய்யுமாதலின்' என இயைபு காட்டுவர்.

கா.சு., *குழந்தை* 'யாது காரணம் பற்றியும் இன்னாசெய்யாமை' என்பர். *சொ.த* 'செற்றம் பற்றி நிகழும் இன்னாமையை வெகுளாமையானும்; பயன் நோக்கி நிகழும் துன்பத்தைப் புலால் உண்ணாமையானும் இவற்றுடன் மறவியானும் நிகழும் துன்பத்தைக் கொல்லாமையானும் ஓதியும் அவற்றிடைப் பொதுப்படநிற்பனவற்றை இதனால் ஓதுகின்றார்' என்று விளக்கந் தந்து 'இவ்வதிகாரத்தான் பயனோக்கியும்–செற்றம் பற்றியும் —மறவி பற்றியும், பொதுவகையானும் இன்னாமை செய்யாமையைக் கூறுகிறார்' என்று கருத்தும் உரைப்பர். மேலும் 'பின்வருங்குறள்களில்முதற்குறள் பயன்நோக்கியஇன்னாசெய்தலையும், இரண்டாம்குறள் செற்றம்பற்றிச்செய்தலையும், மூன்றாங்குறள் காரணமின்றிச் செய்தலையும், விலக்கி, நான்காம் குறளில் இன்னா செய்தார்க்கு நாம் இன்னசெய்யலாம் என்பதையும், ஐந்தாம் குறளான் மறவியான் இன்னாசெய்தலையும் விலக்கி அடுத்த மூன்று பாடல்களானும் பொதுவகையான் இன்னா செய்யாமையும் கடைசி இரண்டு குறட்பாவில் இன்னாசெய்தலான்வரும் கேடுகளையும் கூறுகிறார்' என்பர்.

தேவநேயர், 'பகைபற்றியாவது, பயனோக்கியாவது, விளையாட்டாவது, கவனமின்மையானாவது ஒருயிர்க்கும் ஒருதீங்கும் செய்யாமை' என்பர். அதிகார இயைபாகச் 'சினமில்லாதபோதும் இன்னாசெய்தல் நிகழக்கூடும் ஆயினும் பகைபற்றி நிகழ்வதே பெரும்பான்மை. பகை என்பது வெகுளியின் நீட்சி ஆதலால் அதனை விலக்குதற்கே இது வெகுளாமையின்கண் வைக்கப்பட்டது' என்பர்.

இராமலிங்கனார், 'இது எவ்வுயிர்க்கும் தீங்கு செய்யாமையைக் குறிக்குமாயினும் மற்ற மனிதர்களுக்குத் தீங்கு செய்யாமையே முக்கியமாகக் கொண்டது. இது துறவிக்குக் கட்டாய விதி. இல்லறத்தானுக்கு நல்லறம்' என்பர். இவர் கருத்து 'பிறவுயிர்க்குத் தீங்கு செய்யாமை புலாலுண்ணாமையானும், மக்கட்குத்தீங்கு செய்யாமை கொல்லாமையானும் விலக்கப்படுதலின் இவ்வதிகாரம் ஏனைய வழியான் வரும் தீங்குகளையும் உணர்த்தும்' என்பர்.

வ.உ.சி. 'பிறவுயிர்களுக்குத் துன்பங்கள் செய்யாதிருத்தல்' என்பர்.

இன்னாசெய்யாமை வேறு; கொல்லாமை, புலால் உண்ணாமை முதலியன வேறு. கொல்லுதல் முதலிய ஊன் உயிர் வேறு செய்தல்

துன்பம், துன்பமென நுகரப்பெறுதல் உயிரும்உடலும் கூடியவழியே ஆதலால், இன்னா செய்யாமை என்பது மனமுள்ள உயிர்கள் துன்பம் என நினைத்து நுகர்ச்சிக் காலத்து வருந்தச் செய்யாமை என்பதே கருத்தாம், கொன்றாலோ கொலைத்தொழிலின் முடிவு உடலையும் உயிரையும் வேறுபிரித்தலாக முடிதலின் அப்போது இன்னாவாகக் கருதப்பெறுதற்கு இடமேயின்றென்க. ஆதலால் பிறன் மெய்ம்மனங் களால் வருந்தச் செய்யும் செயல்களே இன்னாவாம் என்க. ஆதலாற் சிறந்தது கொள்க.

32.1. சிறப்பீனும் செல்வம் பெறினும் பிறர்க்கின்னா
செய்யாமை மாசற்றார் கோள். (௩௧௧)

உரைப்பகுதி:

அ) *மணக்* : மிகுதியைத் தருகின்ற செல்வத்தைப் பெறினும் பிறர்க்கு இன்னாதவற்றைச் செய்யாமை குற்றமற்றார் கோட்பாடு என்றவாறு.

இது பழிவாராத செல்வம் பெறினும் தவிரவேண்டும் என்றது.

ஆ) *பரிதி*.: எ—து எட்டுவகைப் போகந்[1] தருகின்ற செல்வம் பெற்றாலும், பிறர்க்கு விதனஞ்[2] செய்யாமை இருப்பது நல்லோர் கொள்கை என்றவாறு.

ஈ) *காளி*.: எ—து மறுமைக்கு முத்தியையும் இம்மைக்குச் செல்வத்தையும் பெறினும் தன் நெஞ்சு அறியத் துயருறுவதைப் பிறர்க்குச் செய்யாது ஒழிதல் உட்குற்றமற்ற உணர்வு[3]டையத் துறவோரது நெஞ்சின் கோட்பாடு என்றவாறு.

சிறப்பு என்பது முத்தி. செல்வம் என்பது திரு.

உ) *பரிமேல்*.: : யோக[4]மாகிய சிறப்புத்தரும் அணிமா முதலிய

1 எட்டுவகைப் போகம் -- பெண், ஆடை, அணிகலன், உணவு, வெற்றிலை பாக்கு, நறுமணப் பொருள், பாட்டு, பூஅமளி.

2 விதனம் -- துன்பம். விசனம் என்பதன் திரிபு.

3 உட்குற்றமற்ற உணர்வு -- அழுக்காறு அவா வெகுளி மயக்கம் முதலான மனத்தைப் பற்றி நிகழும் குற்றங்களின் நீங்கிய ஞானம்.

4 யோகம் -- இடைபிங்கலைகளைத்தடுத்து நடுநாடியாகிய சுழுமுனையில் மூச்சுக் காற்றை இயக்கி ஐம்புலன்வழிச் செல்லாது மனத்தை நிறுத்தி, மனத்தை ஒரு முகமாக்கி, ஆறு ஆதாரங்களை, அந்த ஆதாரங்களில் விளங்கும் தெய்வம், சக்கரங்கள் இவற்றை அறிந்து அசபாமந்திர செபத்தால், அத் தெய்வங்களைத் தன்முகமாக்கி, பிரமரந்திரமாகிய உச்சித்துளையின் வழியாக மதிமண்டலத்துப் பெருகிவரும் அமுதத்தை உண்டு திளைத்துப் பேரொளிப் பிழம்பைத் தியானிப்பதே யோகம். இதன் விரிவையும் பயனையும் திரு மூலத்திருமந்திரத்து யோகப் பகுதியான் உணர்க.

5 அணிமா -- அணிமா, மகிமா, கரிமா, லகிமா, பிராப்தி, பிராகாமியம், ஈசித்வம், வசித்வம், என்ற எட்டுமாம். இவற்றைச் சித்தி என்றும் கூறுவர். இவற்றின் விளக்கத்தைக் கடவுள் வாழ்த்து 9ம் குறளிற் காணலாம்.

செல்வங்களைப் பிறர்க்கு இன்னா செய்து பெறலாமாயினும்; அதனைச் செய்யாமை ஆகமங்கள்[6] கூறியவாற்றான் மனம் தூயாரது[7] துணிவு எ-று.

உம்மை பெறாமைமேற்று[8] சிறப்புடையதனைச்சிறப்பு[9] என்றும், அதன் பயிற்சியான் வாயுவை வென்று[10] எய்தப்படுதலின் எட்டுச் சித்திகளையும் 'சிறப்பீனும் செல்வம்' என்றும், காமம் வெகுளி மயக்கம் என்னும் குற்றங்கள் அற்றமையான் மாசற்றார் என்றும் கூறினார். இதனால் தமக்கு ஒருபயன் நோக்கிச் செய்தல் விலக்கப் பட்டது.

ஊ) *கவிராசர்*: பெரிதாகிய செல்வங்களைப் பெறலாமாயினும் பிறருக்குப் பொல்லாங்குகளைச் செய்யாமல் இருக்கிறது குற்றமற்ற பெரியவர்கள் செயல் எ—று.

ஏ) *பழைய 2*: யோகமாகிய சிறப்புத்தரும் அணிமா, மகிமா முதலாகிய செல்வங்களைப் பெறலாமாயினும், பிறர்க்குப் பொல்லாது செய்து பெறுதல் ஆகாது என்று ஒழிவது மாசற்ற பெரியோர் கொள்கை.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

சிறப்பு ஈனும் செல்வம்'

மிகுதியைத் தருகின்ற செல்வம் என்னும் மணக்குடவர் கருத்து அளவால் மிகுதியைத் தருகின்ற செல்வமா? மிகுதியான் மிக்கவை என்பது போலச் செருக்கைத் தருகின்ற செல்வமா? குற்றமேசெய்யத் தூண்டுகின்ற செல்வமா? என்று பலபொருள் உணர்வைப் பயப்ப தாய் மயங்க வைத்தலாய் முடிகிறது. இவ்வையத்தைப் 'பழிவராத செல்வம்' என்ற கருத்துரைப்பகுதி போக்கிக் 'குற்றந்தராத செல்வம்' என்ற கருத்தையே வலியுறுத்துகிறது.

'சிறப்பு'

எட்டுவகையான போகம்' என்பர் *பரிதி*, *'முத்தி'* *காளி.*, யோகமாகிய சிறப்புத்தரும் அணிமா முதலான எண்வகைச் செல்வங் கள்' *பரிமேல்.*; *பழைய2*; *சொ.த.*'பெரிதாகிய செல்வம்' 'பெருமை தரும் செல்வம்' *கா.சு.*

---

6 ஆகமங்கள்-வினையின் நீங்கி விளங்கிய முனைவன் கண்ட முதல் நூல்கள்.

7 மாசற்றார் யாவர்க்கும் எனவும் பாடம்.

8 உம் பெறாமைமேற்று—இது எதிர்மறைப்பொருளில் வந்தது என்பதாம்.

9 சிறப்புடையதனைச் சிறப்பு-எபலது பண்பின் பெயர். அதனையுடைய பொருளுக்கு ஆனது பண்பாகுபெயர். கருத்தாவாகுபெயர் என்பாரும் உளர். விடாத இலக்கணை என்பர்.

10 வாயுவை-வடநூலார் வாயுவை வெல்லுதலாவது இடது மூக்கின் வழியாக உள்ளுக்கு இழுத்தலும், வலது மூக்கின் வழியாக வெளிவிடுதலும், நடுநாடியின் வழியாக நிறுத்து தலும் ஆகிய பூரக-ரேசக-கும்பகங்களைச் செய்து மூச்சுக் காற்றை யடக்கி ஆளுதல், இதனைப் பிராணாயாமம் என்பர் யோக நூலார்.

'மாசற்றார்'

'குற்றமற்றார்' மணக்., 'நல்லோர்' பரிதி., 'உட்குற்றமற்ற உணர்வுடைத் துறவோர்—குற்றமற்றோர்' கா.சு., தேவநேயர், 'சிறப்பைத் தரும் பெரிய செல்வத்தைப் பெறக்கூடுமாயினும் பிறரை வருந்தச் செய்யாமை பெரியோர் கொள்கை' என்பர்.

மு.ரா.அரு. 'சிறப்பீனும் செல்வம்—எல்லாரானும் நன்கு மதிக்கப்படுஞ் செல்வம்' என்பர். நன்கு மதிப்பும் செல்வமும் துறவிகட்கு வேண்டாதன. ஆதலால் இப்பொருள் இயலுக்கு இயைபுடைத்தாயிற்று என்க.

வ.உ.சி. 'மாசற்றார் கோள் இன்னாசெய்யாமை' என இயைத்துப் பொருள் காண்பர்.

இராமலிங்கனார் 'வீடு பெறுகின்ற செல்வம்' என்ற பொருளே தக்கது. அணிமாதி சித்திகளைச் சொல்லுதல் கூடாது. அணிமாதிகள் வீடுபேற்றை நோக்கச் சிற்றின்பம். அவை துறவின் குறிக்கோளாகா எனப் *பரிமேலழகரை* மறுப்பர். 'எத்தகைய சிறப்புக்களைத் தரும் செல்வத்தைப் பெறுவதாயினும் பிறரைத் துன்புறுத்தியடையக்கூடாது என்பது மாசற்றார் கொள்கை என்பதுதான் பொருத்தம்' என்பர். இதனால் துறவியும் செல்வம் பெறத்தக்கவன் என்பது பெறப்படுதலின் இயலுக்கு இயைபுடையதாவது எங்ஙனம் என்று எண்ணத் தோன்றுகிறது 'முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னால் முடியும்' (*திருக்கோவை.*,) என்பது போலத் துறவிகட்கும் செல்வம் தேவை. இன்னா செய்து பழியொடுபடுவதாயின் அது கூடாது என்ற கருத்தினைப் பயப்பது *இராமலிங்கர்* உரை இது சிறந்த கருத்தாகும்.

ஒ) ஒப்புமைப் பகுதி:

'பிறர்க்கின்னா செய்யாமை'

> ''தான்கெடினும் தக்கார் கேடெண்ணற்க எஃபதனை
> ஊன்கொடுமையுரைத்தானஃ துணர்ந்திலனே யாகாதோ'' —*நீல.*, 181

32. 2. *கறுத்தின்னா செய்தவக் கண்ணும் மறுத்தின்னா செய்யாமை மாசற்றார் கோள்.* (௩௧௨)

உரைப்பகுதி:

அ) மணக்.: 'செய்தவன் கண்ணும்' பாடம். தாஞ்செய்த குற்றத்தினாலே வெகுண்டு, இன்னாதவற்றைத் தமக்குச்செய்தவன் மாட்டும் தாம் அதற்கு மாறாகப் பின்பு இன்னாதவற்றைச் செய்யாமை குற்றமற்றார் கோட்பாடு என்றவாறு.

ஆ) *பரிதி.*: எ—து தனக்கு ஒருவர் மனங்கன்றப்[1] பொல்லாங்கு செய்தால் அவனுக்குத் தான் பொல்லாங்கு செய்யாமை இருப்பது நல்லோர் கொள்கை என்றவாறு.

ஈ) *காளி.*: 'செய்தவர் கண்ணும்' பாடம்.

எ—து ஒருவர் தம்மாட்டுச் சினந்து இன்னாதனவற்றைச் செய்தவர்மாட்டும் தாம் பெயர்த்து அவர்க்கு இன்னாதன செய்யாமை உள்ளழுக்கற்று[2] உணர்வுடைய துறவோரது கோட்பாடு என்றவாறு.

உ) *பரிமேல்.*: தம்மேற்செற்றம்[3] கொண்டு ஒருவன் இன்னாதவற்றைச் செய்தஇடத்தும்[4] மீண்டு தாம் அவனுக்கு இன்னாதவற்றைச் செய்யாமையும்[5] அவரது துணிவு.

இறந்தது தழீஇய எச்சவும்மை விகாரத்தால் தொக்கது. அவ்வின்னாதவற்றை உட்கொள்ளாது விடுதல் செயற்பாலது என்பதாம்.

ஊ) *கவிராசர்*: 'செய்தவர் கண்ணும்' பாடம். கோபத்தினால் தனக்குப் பொல்லாத காரியங்களைச் செய்தவனுக்குத் தான் திரும்பவும் பொல்லாத காரியங்களைச் செய்யாமல் இருக்கிறது குற்றமற்றவர்கள் செயல் (எ—று.)

ஏ) *பழைய 2*: தம்மேல் கோபம்கொண்டு ஒருவன் இன்னாதவற்றைச் செய்தவிடத்தும் தாம் அவனுக்குப் பொல்லாதவற்றைச் செய்யாமல் இருப்பது மாசற்ற பெரியோர் கொள்கையாம்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'தான் துன்புறுத்தியதற்குப் பதிலாக ஒருவன் தனக்குத் துன்பஞ் செய்யின், அதற்கு எதிராகத்தான் செய்யாமை' என்னுங் கருத்தினது *மணக்.* உரை.

ஏனையோர் உரைகள் பிறன் செய்த தீமைக்கு எதிராகத் தான் செய்யாமை' என்கின்றன. எதிருக்கு எதிராகச் செய்யின் நாம் செய்தோம் அவனும் செய்தான் அதற்கும் மாறுசெய்வோமாயின்

---

1 மனங்கன்ற—மனம் வருந்த; 3 செற்றம்—சினம்.

2 உள்ளழுக்கற்று—மனமாசுகளாகிய அழுக்காறு முதலியன இன்றி.

4 இன்னாதவற்றைப் புறங்கூறிப்பழிதூற்றியதேயன்றி இன்னாதவற்றைச் செய்தவிடத்தும் என முற்கூறிய புறங்கூறல் முதலியவற்றைத் தழுவி நிற்றலின் 'செய்தவக் கண்ணும்' என்பதில் உள்ள உம்மை இறந்தது தழீஇய எச்சவும்மை.

5 இன்னாதவற்றைச் செய்யாமையும் என்றிருக்கவேண்டிய உம்மை செய்யுள் விகாரத்தான் தொக்கது. அவ்வும்மை இன்னா செய்தார்க்கு மறுத்தும் இன்னாசெய்யவே மனம் நினைக்குமாதலின் அங்ஙனம் நினையாமையேயன்றிச் செய்யாமையும் கோள் எனப்பொருள் தருதலின் இறந்தது தழீஇய எச்சவும்மை எனப்பட்டது. நினைப்பின் பின்னிகழ்வதே செய்தலாதலி இக்கருத்தைத் 'துன்பந் தருவனவற்றை மனத்திற் கொள்ளாது விடுவது செய்யத்தக்கதுஎன்பதாம்' என்ற கோ.வ. விளக்கமும் வலியுறுக்கும்.

எதிருக்கு எதிர் என்ற முறையில் வரம்பின்றிப்போம் என்ற முறையில் இன்னாசெய்யத் தோன்றாமலும் இருக்கலாம். காரணமின்றி ஒருவன் நமக்குத் தீமை செய்யின் வெகுளி தோன்றி இன்னா செய்யவே தோன்றும். அப்போதும் செய்தல் கூடாது என்ற கருத்தமைந்த ஏனையோர் உரைகளே சிறந்தன.

'தம்மேற் செற்றங்கொண்டு

தம்மாட்டுச் சினந்து என்ற காளிங்கர். பரிமேலழகர் உரையமைதி 'பிறன் செற்றங் கொள்ள ஏது என்னை என்று விளக்காமையான், இன்னா செய்ததற்குச் செய்வதாக இல்லாமல் அறியாமை, திரிபுணர்ச்சி, செருக்கு இவற்றாலும் விளைந்ததாகலாம் அஞ்ஞான்றும் இன்னா செய்யாமையே மாசற்றார் கோள் என்பது கருதக்கிடத்தலின் மணக்குடவர் மனக்கோளை மறுத்தே இவர்கள் உரைத்தனர் எனக் கருதலாம்.

'மறுத்தின்னா செயின் வருங்குற்றமிவை' என்ற விளக்கம் மு.ரா அரு. 'தாமும் அவரொடு ஒத்தவராகிக் காம வெகுளி மயக்கமாகிய முக்குற்றம் அற்றவர் என்ற பெயர் அகலுதலால் வரும் குற்றம்' என்பர்.

வ.உ.சி. 'செய்தவற் கண்ணும்' தருமர், மணக்குடவர், தாமத்தர் பாடம் என்பர், 'செய்தவக்கண்ணும்' பரிமேலழகர், நச்சர் பாடம் என்பர். மேலும் 'செய்தவக் கண்ணும்' பாடத்தில் அகரச்சுட்டு வேண்டாததொன்று ஆகலானும், மறுத்து எனப் பின்னர்க் கூறுதலானும், 'செய்தவற் கண்ணும்' என்ற பாடமே சிறந்தது எனக் கூறித் தாமும் அதே பாடத்தைக் கொண்டார்.

எச்சவும்மை விகாரத்தாற்றொக்கமைக்கு அடிக்குறிப்பு எழுதும் கோ.வ. 'செய்யாமையும் என்றவும்மை பிறர்க்கின்னா செய்யாமையே யன்றி என்பதைத் தழுவி நிற்றலின் இறந்தது தழுவிய எச்சவும்மையாயிற்று' என்பர். இவர் கருத்து சிறப்பினும் செல்வம் பெறினும் பிறர்க்கின்னா செய்யாமை மாசற்றார் கொள்கையாம் அதுவேயன்றிக் கறுத்தின்னா செய்யினும் மறுத்தின்னா செய்யாமையும் அவர் கொள்கை யாம் என்னுங் கருத்தினது. ஆனால் அதிகாரம் 'இன்னாசெய்யாமையே' ஆதலின் முதற் குறளிற் கூறியதைப் பின்னரும் எச்சத்தாற் பெறவைத்தல் மரபும் அன்று. வழக்காறும் அன்று. அன்றியும், முதற் குறள் பெறுதற்கரிய பெற்றாலும் இன்னா செய்யற்க என்றது; இக்குறள் பழிக்குப்பழி தீர்த்தற்காகவும் செய்யற்க என்றது. ஆதலால் தொக்கவும்மை அதனைத் தழுவியதாகக் கூறுதலைக் காட்டிலும், 'அவ்வின்னாதவற்றை உட்கொள்ளாது விடுதல் செயற்பாலது' என்ற பரிமேலழகர் உரைக்

குறிப்பையும், மனத்திற் கொள்ளாமல் 'விடுவது செய்யத்தக்கது' என்ற கோ.வ. விளக்கமும் உம்மையாற்றமீஇய பொருள் கறுத்துச் செய்த இன்னாமையை மனத்தில் எண்ணாமையே கோள் என்ற கருத்தைத் தருவதால் எண்ணுதற்குரியது.

கறுத்து—பகைமை கொண்டு அதாவது நாம் ஏதோ தீமை செய்திருக்க அதனை மனத்தில் வைரமாக வைத்துக்கொண்டிருந்து அதற்கு எதிராக அவன் இன்னா செய்தவிடத்தும் என்பது இராமலிங்கனார் கருத்து. சொ.த. முதலியோர் கருத்தும் இதுவே,

குழந்தை 'செய்தவக் கண்ணும்' என்ற பழம்பாடத்தை 'செய் தவற்கண்ணும்' எனத் திருத்தி 'வெகுண்டு தமக்குத் துன்பஞ் செய்த வனிடத்தும்' என்பர்.

ஓ) ஒப்புமைப் பகுதி:

முற்றும்:

நேர்த்தின்னா மற்றவர் செய்தக்கால் தாமவரைப்
பேர்த்தின்னா செய்யாமை நன்று — *நாலடி.*, 67

கருத்தாற்றித் தம்மைக் கடியசெய் தாரைப்
பொறுத்தாற்றிச் சேறல் புகழால் — *பழமொழி*, 19

கூர்த்துநாய் கவ்விக் கொளக்கண்டும் தம்வாயால்
பேர்த்துநாய் கவ்வினார் இங்கில் —*பழமொழி*, 370

தீர்வரு மின்ன நம்மைச் செய்யினுஞ் செய்ய சிந்தைப்
பேரரு ளாளர் தத்தம் செய்கையிற் பிழைப்பதுண்டோ
கார்வரை நிறுவித் தன்னைக் கனலெழக் கலக்கக் கண்டும்
ஆர்கலி யமர ருய்ய வமிழ்துபண் டளித்த தன்றே —*கம்பராமா.*, 6617

என்ன தீமை விரிழைத் தாரவன்
சொன்ன சொல்லின தல்லது தூய்மையோள் *கம்பராமா.*,—10219

32.3. செய்யாமல் செற்றார்க்கும் இன்னாத செய்தபின்
உய்யா விழுமம் தரும். (௩௧௩)

உரைப் பகுதி:

அ) மணக்.: 'செய்யாமை' பாடம். தானொரு குற்றம் செய்யா திருக்கத், தனக்கு இன்னாதவற்றைச் செய்தவர்க்கும், இன்னாதவற் றைச் செய்யின், அஃது உய்வில்லாத[1] நோயைத்தரும் என்றவாறு.

இது காரணமின்றி இன்னாதன செய்தவர்க்கும் பொல்லாங்கு செய்தலைத் தவிரவேண்டும் என்றது.

---

1 உய்வில்லாத—தப்பிப் பிழைக்க இயலாது;

ஆ) *பரிதி*.: எ—து தானொருத்தற்குப் பொல்லாங்கு செய்யாதிருக்கையிலே, தன்மீது கோபித்தார்க்குத் தான் மீண்டும் இன்னாதனவற்றைச் செய்தாராயின், அது பிழைப்பில்லாத[2] நரகந்தரும் என்றவாறு.

ஈ) *காளி*.: எ—து தாம் பிறர்க்கு ஓர் இன்னாமை முன்னம் செய்யாதிருக்க, தம்மைவந்து செறுத்தவர்க்கு, தாம் பெயர்த்து இன்னாதனவற்றைச்செய்தானாயின் தமக்கு உய்ந்து[3] கரையேறுதற்கு அரிதாகிய பெருந்துன்பத்தைத் தரும் என்றவாறு.

உ) *பரிமேல்*.: 'செய்யாமற்' பாடம். தான் முன்பு ஓர் இன்னாமை செய்யாதிருக்கத் தன்மேல் செற்றங்கொண்டவர்க்கும்[4] இன்னாதவற்றைத் துறந்தவன் செய்யுமாயின், அச்செயல் அவனுக்குக் கடக்க முடியாத இடும்பையைக்[5]கொடுக்கும்.

அவ்விடும்பையாவது தவம் இழந்து பழியும் பாவமும் எய்தல்.

ஊ) *கவிராசர்*: தான் ஒருவனுக்குப் பொல்லாத காரியங்களைச் செய்யாமலிருக்க, தன்மேல் கோபம்கொண்டு பொல்லாத காரியங்களைச் செய்தால் அது அவனுக்கு ஒரு காலத்திலேயும் தீராத துக்கத்தையும் கொடுக்கும்; (எ—று.)

எ) *பழைய* 2: 'செய்யாமை' பாடம். தாம் முன் ஓர் பொல்லாது செய்யாது இருக்கத் தம்மேல் பொல்லாது செய்தவர்க்கும், துறவறம் உடையவன் பொல்லாது செய்யுமாயின், அச்செயல் பின்னவனுக்குக் கடக்கமுடியாத துன்பத்தைக் கொடுக்கும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'செற்றார்'

'இன்னாதவற்றைச் செய்தவர்' *மணக்*.. குழந்தை; 'தம்மைக் கோபித்தவர்' *பரிதி*.; 'தம்மைச் செறுத்தவர்' *காளி*.; 'செற்றங் கொண்டவர்' *சொ. த*., 'பகைமைகொண்டு தீங்கு செய்தவர்' தேவநேயர்

இவ்வுரைகள் 'செற்றார்' என்பது 'சினந்தார்' என்ற பொருளையே தருவன ஆயினும் *மணக்குடவர்*, குழந்தை முதலிய சிலர் 'சினத்தலின் காரியமான இன்னா செய்தார்' எனப் பொருள் கண்டனர். செயலிற் காட்டாது செற்றங் கொண்டிருப்பவற்கும் துறந்தார் தீமை செய்தல் கூடாது. செய்யின் அது தப்ப இயலாத பெருங்கேடுகளைத் துறவிக்குத் தரும் என்ற உரை சிறந்ததாகும்

2 பிழைப்பில்லாது—தப்பிப் பிழைக்க இயலாது.
3 உய்ந்து—நீங்கி ஈடேறி; 4 'தன்னைச் செற்றார்க்கும்' எனவும் பாடமுண்டு.
5 இடும்பை—துன்பம்.

'உய்யா விழுமம்'

'கடக்க முடியாத துன்பம். அஃதாவது பிறர் தன்னை அகாரண மாகத் துன்பஞ் செய்தாரோடு ஒன்றாக்கி அவமதித்துப் பேசுதல்' என விளக்கந் தருவர் *மு. ரா. அரு.*

வ.உ.சி. 'செய்யார் மற்செற்றார்க்கும்' எனப் பாடங்கொண்டு 'செற்றார்க்கும் இன்னாத செய்யார், செய்தலின் உய்யா விழுமந் தரும்' எனக் கொண்டு கூட்டி, 'அறிவுடையார் பகைவர்க்கும் துன்பந் தருஞ் செயல்களைச் செய்யார். இன்னா செய்த பின் அச் செயல் தப்பமுடியாத துன்பத்தைக் கொடுக்கும்' ஆதலான் என உரை காண்பர்.

மேலும், துறந்தார் பிறர்க்கு இன்னா செய்யார் என்பது யாவரும் அறிந்த உண்மை. அதனைச் செய்யாமல் என மீண்டும் விதத்தல் வேண்டா. பிறர்க்குத் தீங்கு நினையாத துறந்தார் மேற் பிறர் செற்றங்கொள்வது இயற்கைக்கு மாறு. ஆதலால் 'செய்யார் மன்' என்ற பாடமே ஆசிரியர் கொண்ட பாடம் ஆம் என்பர்.

'செய்யாமை' *தருமர், மணக்குடவர், தாமத்தர், நச்சர்* பாடம் என்பர் *வ.உ.சி.*

இராமலிங்கனார் 'செற்றார்க்கும் செய்யாமல் இன்னாத செய்த பின் உய்யாவிழுமந் தரும்' எனக் குறட்பாவைச் சிதைத்துக்கூட்டி, 'பகைவனாயினும் ஒரு தீங்கும் செய்யாமலிருக்கும்போதே துறவி தீங்கு செய்வானாயின், அச்செயல் அவனுக்குத் தப்பமுடியாத தீவினையைக் கொடுக்கும்' என உரை காண்பர். கருத்தாக 'அவர் கள் பகைவர் என்பதற்காக மட்டும் இன்னா செய்தல் கூடாது' என்பர் செற்றார் என்பது யாதாயினும் ஒரு காரணத்தால் தன்னாற் சினக்கப்பட்டாரையும், தன்னைச்சினந்தாரையுமே குறிக்கும் சொல். சினம் நீடிப் பகையாதலின் செற்றார்—பகைவர் எனக்கொள்ளினும் அவர் முன்பு தீமை செய்தவர் என்பதையே குறிக்கும். ஆகவே அவர் கள் ஒருதீமையும் செய்யாதிருக்கும்போது என்பது இயைபுடைய கருத்தாகாது. ஆதலால் 'செய்யாமல் செற்றார்க்கு' என நிரலே கொண்டு தானொரு குற்றமும் செய்யாதிருக்கத் தன்னைச் செற்றார் மாட்டும் துறவி தீமை செய்தலாகாது' என்ற *பரிமேலழகரும்* அவர் போன்றார் உரையுமே சிறந்தனவாகும். தான் தீமை செய்யாத போதே தன்னைச் செற்றானை ஒறுத்தல் இயல்பாக அதனையும் அடக்கியாளுதல் துறவின் சிறப்பை மிகவுயர்த்துதல் காண்க.

32.4. இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்து விடல். (௩௧௪)

உரைப்பகுதி:

அ) *மணக்.*: இன்னாதன செய்தாரை ஒறுக்குமாறு[1] என்னை எனின், அவர் நாணும்படியாக நல்ல நயமுடையவற்றைச் செய்து விடுக என்றவாறு.

இஃது ஒறுக்கும் நெறி கூறியது.

ஆ) *பரிதி.*: எ-து தனக்குப் பொல்லாங்கு செய்தார்க்கு அவர் நாணுதல் பிறக்கும்படியாக அவர்க்கு நன்மை செய்வது தகுதி என்ற வாறு.

ஈ) *காளி.*: எ-து துறவோர்க்கு இன்னாதனவற்றைச் செய்தாரை ஒறுத்தலாவது யாதோ எனில், தமது பெருமையின் நிலைமைகண்டு பற்று அவர் தாமே நாணுமாறு தாம் அவர்க்கு நல்லருளே செய்து விடல் என்றவாறு.

நயம் என்பது ஒழுக்கம்.

உ) *பரிமேல்.*: தமக்கின்னாதவற்றைச் செய்தாரைத் துறந்தார் ஒறுத்தலாவது, அவர் தாமே நாணுமாறு அவர்க்கு இனிய உவகை களைச் செய்து அவ்விரண்டனையும்[2] மறத்தல்.

மறவாவழிப் பின்னும் வந்து கிளைக்கும்[3] ஆகலின், மறக்கற் பாலவாயின. அவரை வெல்லும் உபாயம் கூறியவாறு. இவை மூன்றுபாட்டானும் செற்றம் பற்றிச் செய்தல் விலக்கப்பட்டது.

ஊ) *கவிராசர்*: தமக்குப் பொல்லாங்கு செய்தவர்களைத் தண்டிக் கிறதாவது அவர்கள் தாங்களே வெட்கித் தலையை இறக்கிக் கொள்ளத்தக்கதாக அவர்களுக்கு நன்மையையே செய்துவிட வேணும் என்றவாறு.

ஏ) *பழைய 2*: தமக்குப் இன்னாதவற்றைச் செய்தாரைஒறுத்த லாவது, அப்பொல்லாது செய்தவர் நாணும்படி அவர்க்கு இனிய உதவி நன்மைகளைச் செய்து, அவர் செய்த இன்னாதவற்றையும் ஒறுத்தலையும் மறக்க.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

செய்தார்க்குச் செய்யாதிருத்தல் அருமையில் அருமை. ஆதலால் நீயும் திருப்பி இன்னா செய்ய வேண்டின் மனத்தை மாற்றி இனிமை யைச் செய். அது இன்னா செய்து நீ அடைய இருக்கிற நிறைவைக்

1 ஒறுக்குமாறு—வருந்தும்படி; 3 கிளைக்கும்—தோன்றும்,

2 அவ்விரண்டனையும்— அவர் தமக்குச் செய்த தீமைகளையும்தாம் அவருக்குச் செய்த நன்மைகளையும் ஆகிய இரண்டையும்.

காட்டிலும் பதின்மடங்கு நிறைவை உனக்கு அளிக்கும். அவனுக்கு நாணத்தை யளிக்கும். அவன் நாணுவதால் வரும் நிறைவும் உனக்குண்டு. அதற்கு மேலும் அவன் இன்னா செய்தால் நாம் இனிய செய்து அவனை நாணச் செய்தோம் என்ற கருத்துள்ள வரை யில் வேற்றுமையுணர்ச்சியும் உளதாம் ஆதலால் 'விடுக'—மறந்து விடுக என்றது. இக்குறட்பா இன்னா செய்தார்க்கும் இனிய செய்து அவரை நாணச் செய்க என்னுங் கருத்தினதன்று. பொருட்பாலில் பொதுவாக மக்கட்கு அறமாகச் சால்பை உரைக்கும்போது 'இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால் என்ன பயத்ததோ சால்பு'' என்னும் வள்ளுவர் முற்றத்துறந்த துறவிக்கு இன்னாசெய்தாரை ஒறுத்தல் எண்ணமும் அதன் பயன் இன்னாசெய்தானை நாணச் செய்தலும் எனின், அது சிந்தனைக்குரியதாம் அன்றே! துறவியின் வெகுளி தடைபட்ட வெள்ளம்போல எங்காவது உடைத்துக்கொண்டு பெருந்தீமை விளைப்பதற்குமுன் நீரை மதகுவழியாகத் திறந்து விடுவதுபோல, இன்னாசெய்தமையான் விளைந்த சினமனத்தைத் தம் தவஒழுக்கத்தால் அருள் மனமாசுமாற்றிச் சினச்செயலை இனிய செய்தலாக மாற்றுக அதுதான் துறவியின் இயல்புக்கேற்றது என்னும் வள்ளுவர் துணிபு மக்களின் பொதுநிலையான பண்பிற்கு ஏற்ப, அதுவே அவனுக்கு நாணம் தரும். அதனால் உள் மனநிறை வும் உண்டாம் என்றதாம். இது கவிச்சுவைபடக் கூறிய அளவே யாம் என்பதை 'விடுக' என்ற வியங்கோள் விளக்கும்.

'நன்மையே செய்துவிடல்' *தாமத்தர் பாடம் என்பர் வ.உ.சி.*

ஒ) ஒப்புமைப் பகுதி:

''நாண நன்னயம் செய்துவிடல்'':

காஞ்சியூரன், கொடுமை கரந்தனள் ஆகலின்
நாணிய வருமே —*குறுந்.*, 10: 4—5

முற்றும்:

உபகாரஞ் செய்ததனை ஓராதே தங்கள்
அபகாரம் ஆற்றச் செயினும்—உபகாரம்
நேர்த்தின்னா மற்றவர் செய்தக்கால் தாமவரைப்
பேர்த்தின்னா செய்யாமை நன்று —*நாலடி.*, 67

தாம் செய்வ தல்லால் தவற்றினால் தீங் கூக்கல்
வான்தோய் குடிப்பிறந்தார்க் கில் —*நாலடி.*, 69

''தீர்வரு மின்ன றம்மைச் செய்யினுஞ் செய்ய சிந்தைப்
பேரரு ளாளர் தத்தஞ் செய்கையிற் பிழைப்ப துண்டோ
கார்வரை நிறுவித் தன்னைக் கனலெழக் கலக்கக் கண்டும்
ஆர்கலி யமர ருய்ய வமிழ்துபண் டளித்த தன்றே'' —*கம்பராமா.*, 667

இவ்வறிவீனர்களை மன்னித்துப் (அவர்செய்த இன்னாதவற்றைப்) புறக்கணித்துவிட்டு
நன்மையை ஏவிவிடுவீராக —குர்ஆன்., 7:19௯

32. 5. அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தந்நோய்போற் போற்றாக் கடை. (௩௧ரு)

உரைப்பகுதி:

அ) *மணக்.:* 'தன்னோய்போல்' பாடம். பிறிதோருயிர்க்கு உறும் நோயைத் தனக்கு உறும் நோய் போலக் காவாத இடத்து, அறிவுடையனாகிய அதனால் ஆகுவதொரு பயன் உண்டாகாது.

இஃது அறிவுடையார் செய்யார் என்றது.

ஆ) *பரிதி.:* எ-து துறவுநெறி பொருளைக் கொண்டிருக்கவல்லவன் பிறர்நோவை[1]யும் தன்நோவு என்று போற்றுவானாகில் அவன் கேடிலாத கதி[2]யினை அடைவன் என்றவாறு.

ஈ) *காளி.:* எ-து துறவுநெறி ஒழுக்கத்துத் துய்ய அறிவி[3]னர் பிறிதுயிர்க்கு வருவதோர் இடரையும் தமது இடர்போலத் தேர்ந்து குறிக்கொள்ளாதவிடத்துத் தம் அறிவினால் மேலாவதோர் ஆக்கம் உண்டோ எனவே அஃது இல்லை என்றவாறு.

உ) *பரிமேல்.:* துறந்தார்க்கு உயிர் முதலியவற்றை உள்ளவாறு அறிந்த[4] அறிவினான் ஆவதொரு பயன் உண்டோ, பிறிதோர் உயிர்க்கு வரும் இன்னாதவற்றைத் தம் உயிர்க்கு வந்தனபோலக் குறிக்கொண்டு[5] காவாவிடத்து.

குறிக்கொண்டு காத்தலாவது நடத்தல், இருத்தல், கிடத்தல், நிற்றல், உண்டல் முதலிய[6] தந்தொழில்களானும் பிறவாற்றானும்[7] உயிர்கள் உறுவனவற்றை முன்னே அறிந்து உறாமல்[8] காத்தல். இது பெரும்பான்மையும் அஃறிணைக்கண் நுண்ணியவுடம்புடையவற்றை[9]ப்பற்றி வருதலின் பொதுப்படப்'பிறிதினோய்'என்றும், மறப்பான் அது துன்புறினும் நமக்கு இன்னாசெய்தலாம் என்று அறிந்து

1. நோவு—துன்பம்; 2. கேடிலாத கதி— அழியா நிலை;
3. துய்ய அறிவு—தூய ஞானம். குறிப்புப் பெயரெச்சம்.
4. குறள் 286 பரிமேலழகர் விசேடவுரை காண்க; 5. குறிக்கொண்டு—கவனம் வைத்து'
6. முதலிய--என்றதனால் தண்ணீர் கவர்தல், காறியுமிழ்தல், நெருப்பு மூட்டல் ஆகிய இவற்றையுங் கொள்க.
7. பிறவாற்றானமை--பொய் கூறியாவது உயிர்களைப் பாதுகாத்தல், தன்னால் இயன்றவரை ஒருயிர்க்குப் பிறிதோர் உயிரால் தீங்குவராமல் காத்தல் முதலியன,
8. உறாமல்--அடையாமல். 9. நுண்ணியவுடம்புடையவற்றை--எறும்பு, ஈ, புழு, பூச்சி முதலிய சிறிய உடம்புடையன,

காத்தல் வேண்டும் ஆதலின் அது செய்யாவழி அறிவால் பயனில்லை[10] என்றும் கூறினார். இதனால் சோர்வால் செய்தல் விலக்கப்பட்டது.

ஊ) *கவிராசர்*: துறந்து வருத்தப்பட்டு அறிந்த ஞானத்தினாலே பலன் என்ன உண்டாம், பிற உயிர்க்கு வருகிற பொல்லாங்கைத் தன்னுயிருக்கு வந்ததுபோலப் பார்த்துப் பரிகரியாமல் இருந்தால். (எ-று.)

எ) *பழைய 2*: புண்ணிய பாவம் அறிந்த அறிவினால் ஆவதொடு பயன் உண்டோ? பிறிதோர் உயிருக்கு வரும் பொல்லாதவற்றைத் தம் உயிர்க்கு வந்ததுபோலக் குறிக்கொண்டு காவாதவிடத்து.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

பழைய உரைகள் யாவும், 'பிறிதின் நோய் தம்நோய்போல் காத்தற்குக்' கூறும் பகுதிகளால் ''பிறவுயிரும் தம்முயிர்போற் பேணி உள்ளே உவக்கின்றார்'' நிலையிலிருந்து காணப்பெற்றவை. இதன்போந்த கருத்து 'உடம்புகள்தோறும் உயிர்கள் பலவாயினும் அவைகளுக்குவரும் இன்பதுன்பங்களாகியவினைப்பயன்களனைத்தும் ஒரு தன்மையனவேயாதலால் அவை துன்பத்தால் வருந்துங்காலத்து நோயினின்றும் அவற்றைக் காக்கவேண்டும். காத்தலே அறிவு. காவாத அறிவாற் பயனில்லை' என்பதாகும். துறவிதான் செற்ற முதலிய காரணமாகப் பிறவுயிர்கட்குத் தீயசெய்யாமையே அறிவாம் என்பது மட்டுமின்றி, அவ்வுயிர்கள் முன்முன்செய்த வினைகட்கு ஈடாகத் துன்பம் எய்தியவழி அத்துன்பங்கள் எல்லாம் தன்னால் வந்தனஎன வாளா இராது வினையான் வருந்துன்பங்களையும் நீக்க வேண்டும். அங்ஙனம் நீக்காதிருத்தல் கூடாது; அதுவும் இன்னா செய்தலேயாம் என்பது. வினைக்கு விளைவாய் வினையின் வந்ததாயினும் அதனை அறிஞர் அகற்றல் வேண்டும். அகற்றாமையும் இன்னா செய்தல் ஆம் என்பது. இதனால் வினையின் விளைவாய பிறவுயிர்களின் துன்பத்தையும் தன்னுயிர்க்கு வந்ததுபோலக் கருதிக் காக்க முற்படவேண்டும். வினையின் விளைவால் அது படுந்துன்பத்தை யறிந்த துறவி அதனைத் தானே அனுபவிப்பதுபோன்று வருந்துவனாயின் தான்பிறவுயிர்க்கு இன்னா செய்தற்கு எழுச்சியே யுண்டாகாது. அங்ஙனம் காக்க எனவும் கருதியவாறாம்.

'தன்னோய்' *மணக்குடவர், தாமத்தர்* பாடம் என்பர் **வ.உ.சி.**

---

10. 'அறிவினான் ஆகுவதுண்டோ' என்றும் பாடமுண்டு.

ஒ) ஒப்புமைப் பகுதி:

பிறிதின் நோய் தந்நோய் போல் போற்றுதல்:

பிறர்நோயும் தந்நோய் போல் போற்றி அறனறிதல்
சான்றவர்க் கெல்லாம் கடன் —*கலி.*, 139:2-3

தண்குடை வெம்மை விளைந்தது இதுவென்கொல் —*சிலப்.*, 19:15.

ஆருயிர் வருத்தங் கண்டால் அருள்பெரி தொழுகு கண்ணால்
ஒருயிர்போல நெஞ்சத்துருகி நைந்துய்ய நிற்றல்
வார்யின் வதங்கட் கெல்லாம் அரசநல் வதமாம் அதற்கே
சார்துணையாகக் கொள்க தகவுமத் தயவும் என்றான் —*யசோ.*, 247.

இவ்வுலகில் எவ்வுயிரும் எம்முயிரின் நேர் என்று
அவ்விய மகன்று அருள்சுரந்து உயிர்வளர்க்கும்
செவ்விமையின் நின்றவர் ... ... —*யசோ.*, 272.

பிறரிடை இன்னா இயற்றிடில் தமக்குப் பிழைப்பற எய்துமென் பதனை
அறிகுந ரறிஞர் ஆதலாலுயிர்கள் அனைத்தையும் தம்முயிர் போல
நெறியினிற் கருத லினியவா மைந்து புலனையு நெறியலா வழியிற்
பொறியினிற் செலுத்தா தடக்கல்நன் குணர்ந்த புலமையோர் ஒழுக்கெனப்
புகல்வார் —*காசிகாண்டம்.*

ஓ) மேற்கோள்பகுதி:

குணசாகரர்: அம்மை என்னும் வனப்புக்கு மேற்கோள்.
(*யா.கா.*45—)

யா.வி.உரை: ,, ,, ,, (சூ—95)

32.6. இன்னா எனத்தான் உணர்ந்தவை துன்னாமை
வேண்டும் பிறன்கட் செயல். (௩௧௬)

உரைப்பகுதி:

அ) *மணக்.*: தான் இன்னாதன இவை யென்று அறிந்தவற்றைப் பிறற்குச் செய்தலை மேவாமை[1] வேண்டும் என்றவாறு.

இஃது இன்னாசெய்யாமை வேண்டும் என்றது.

ஆ) *பரிதி*: எ—து தன் மனத்திற்குப் பொருந்தாத பொல்லாங்கு[2] தனக்கு வேண்டாதார்க்கும் செய்வானல்லன் என்றவாறு.

---

1. மேவாமை—விரும்பாமை 'மேவன செய்தொழுகலான்' (குறள். 1073)
2. பொல்லாங்கு—தீமை.

இ) *பரிப்*: இஃது இன்னாசெய்யாமை வேண்டும் என்றது.

ஈ) *காளி*: எ—து ஒருவன் தனக்கு இன்னாதன எனத் தான் அறிந்தனவற்றைப் பிறர் மாட்டுச் செய்தலை அடையாமை வேண்டும் என்றவாறு.

துன்னாமை என்பது அடையாமை.

உ) *பரிமேல்.*: இவை மக்கட்கு இன்னாதன என அனுமானத்தால்[3] தானறிந்தவற்றை, பிறன்மாட்டுச் செய்தலை மேவாமை துறந்தவனுக்கு வேண்டும்

இன்பத்துன்பங்கள் உயிர்க்குணமாகலின், அவை காட்சியளவையான்[4] அறியப்படாமை அறிக. அறமும் பாவமும் உளவாவது மனம் உளனாய வழியாகலான் உணர்ந்தவை என்றார்.[5]

ஊ) *சவிராசர்*: பொல்லாத காரியம் என்று அறிந்தவற்றைப் பிறருக்குச் செய்யாமல் இருக்க வேண்டும். (எ—று)

ஏ) *பழைய 2*: அறிவினால் இது பொல்லாது என்று அறிந்தனவற்றைப் பிறர்க்குச் செய்தலை மேவாமை துறவறம் உடையவர்க்கு வேண்டும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'இன்னாதன இவை எனத் தான் அறிந்தவற்றை' என்பர் *மணக்*, *காளிங்கர்*. 'தன்மனத்திற்குப் பொருந்தாத பொல்லாங்கு' என்பர் *பரிதி*. இவர்கள் மூவரும் தனக்குத் துன்பம் ஆவன இவை என்பதைத் தானே நுகர்ச்சி வாயிலாக அறிந்திருப்பான், அத்தகைய துன்பங்களைப் பிறர்க்குச் செய்யாமை வேண்டும் என்ற கருத்தினர்.

பரிமேலழகர் இன்னாது என அனுமானத்தால் அறிந்தவை என்றனர், துன்ப இன்பங்கள் உயிர்க்குணங்கள் ஆதலின் அவை காட்சியளவையான் அறிய இயலாதன; ஆதலால் அனுமானத்தான் என்றனர் என விளக்கமும் தருவர் இவர் கருதுவது, பிறர்க்குத் தான் துன்பம் செய்ய அதனால் அவர்கள் படும் துன்பங்களை இவர் நேரே அறியமுடியாது, அனுமானத்தால்தான் அறிய இயலும் என்பதாற்போலும். ஆனால் ''தன்னுயிர்க்கின்னாமை தானறிவான்'' (318) என்ற குறளால் தனக்குத்துன்பமாவனவற்றை அனுபவமாகிய காட்சியளவையான் அறிதலின் அதனை ஒழித்துத் தான்

---

3. அனுமானத்தால்--கருதல் அளவையால்.
4. காட்சியளவை--ஐம்பொறிகளானும் அறியப்படும் அறிவு, அஃது அல்லாதது அளவையாகிய அனுமான கருதல் அளவை. இம்மலைத் தியுடைத்து புகையுண்மையால் என்பது போல.
5. அறம் பாவம் என்பன மனத்தொடுபட்ட நல்வினை தீவினைகளின் விளைவு. இதனைப் 'புத்தி பூர்வக கர்மம்' என்பர்.

பிறர்க்கின்னா செய்ய அதன் விளைவாகிய துன்பத்தை அனுமானத்தால் அறிந்தவன் என்றனராதல் வேண்டும். இன்னா இவை என நூல்கள் விதித்தனவும் செய்யக்கூடாது ஆதலின் அனுமானத்தானும் நூலளவையானும் என்றும் எண்ணலாம் எனத்தோன்றுகிறது. இவ்வகையில் *பரிமேலழகர்* உரை பயனுடையது எனலாம். *திருக்குறள் எளியவுரை, தெளிவுரை, குழந்தையுரை, செ.த.* முதலியனவும் *மணக்குடவருரையை* ஒட்டியே செல்கின்றன. *இராமலிங்கனார்* உரை 'தீங்குதரும் என்று தான் உணர்கிற செயல்களைப் பிறருக்குச் செய்யுங் குற்றத்தைச் சேராதிருக்கவேண்டும்' என்று உரைகண்டு, 'துன்னாமை-நெருங்காமை, மனமொழிமெய்களான் நெருங்காமை' என விளக்குவர். இதில் ஏனையோர் கருத்தே முடிவாகக் கிடைத்தல் காண்க. *தேவநேயர்* 'பட்டறிவானும் உணர்ச்சியானும் உண்மை என்றறிந்தவைதாம் உணர்ந்தவை' என்பர். பட்டறிவு தன்னுயிர்க்கின்னாமை என்ற குறளாற் பிற்கூறப்படுதலின்ஈண்டு அஃதொழிந்தவற்றையே கொள்ளலாம். 'துன்னாமை-அடையாமை' என்பர் *காளிங்கர்.*

ஓ) ஒப்புமைப்பகுதி:

முற்றும்:

தனக்கின்னா இன்னா பிறர்க்கு — *பழமொழி*

வினைப்பயன் ஒன்றின்றி வேற்றுமை கொண்டே
நினைத்துப் பிறர்பனிப்பச் செய்யாமை வேண்டும் *பழமொழி 266.*

தன்னுயிர் தான்பரிந் தோம்பு மாறுபோல்
மன்னுயிர் வைகலும் ஓம்பி வாழுமேல்
இன்னுயிர்க் கிறைவனாய் இன்ப மூர்த்தியாய்ப்
பொன்னுயி ராய்ப்பிறந் துயர்ந்து போகுமே — *சீவக., 3107.*

32.7. எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம்
மாணாசெய் யாமை தலை (௩௧௭)

உரைப்பகுதி:

அ) *மணக்:.* 'மனத்தானும்' பாடம். யாதொன்றாயினும் எல்லா நாளும் யாவர் மாட்டும் இன்னாதவற்றை மனத்தினாலும் செய்யாமை நன்று என்றவாறு,

ஆ) *பரிதி.*: 'மனத்தானும்' பாடம். எ—து ஆரளவிலும்[1] பொல்லாங்கு செய்யாமல் மனத்தாலும் பொல்லாங்கு நினையாமல் இருப்பது தலைமை என்றவாறு.

இ) *காளி.*: 'மனத்தானும்' பாடம். எ—து ஒருவன் உலகத்து யாவர்க்கும் எஞ்ஞான்றும் எத்துணையும் சிறிதாயினும் இன்னாதவற்றைத் தன் மனத்தினாலும் கருதுதல் செய்யாமையும், வாக்கினாலுரைத்தல் செய்யாமையும், காயத்தாற்[2] செயல் செய்யாமையுமே தலைமைப் பாடாவது என்றவாறு.

உ) *பரிமேல்.*: மனத்தோடு உளவாகின்ற இன்னாத செயல்களை எக்காலத்தும் யாவர்க்கும் சிறிதாயினும் செய்யாமை தலையாய அறம்.

ஈண்டு மனத்தான் ஆகாதவழிப் பாவம் இல்லை என்பது பெற்றாம். ஆற்றலுண்டாய காலத்தும் ஆகாமையின் 'எஞ்ஞான்றும்' என்றும், எளியார்க்கும் ஆகாமையின் 'யார்க்கும்' என்றும், செயல் சிறிதாயினும் பாவம் பெரிதாகலின் 'எனைத்தானும்' என்றும் கூறினார்.

ஊ) *கவிராசர்*: மனசுக்குச் சரிபோகாமல்[3] பொல்லாததாயிருக்கிற செயல்களை எக்காலத்தும் யாவருக்கும் சிறிதும் செய்யாமல் இருக்கிறதே முந்தின தருமம்; (எ—று).

ஏ) *பழைய 2*: மனமறிந்து பொல்லாதவற்றை எக்காலத்தும் யாவரிடத்தும் சிறிதாயினும் செய்யாமல் இருப்பது தலைமையாகிய அறம்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'எனைத்தானும்'

'யாதொன்றாயினும்' *மணக்.*; 'எத்துணையும் சிறிதாயினும்' *காளி.* *பரிமேல்.*, *கா.சு.*, *சொ.த.* முதலிய அனைவரும். 'எனைத்து' என்னும் வினா அடியாகப் பிறந்த குறிப்புமுற்று எத்தன்மைத்தாயினும் எனப் பண்பையுணர்த்தியும் எவ்வளவிற்றாயினும் என அளவையுணர்த்தியும் வரும். ஈண்டும் அளவையுணர்த்துவதாகக் கருதினர் உரையாசிரியர்கள் அனைவரும்.

'மனத்தானாம்' *பரிமேலழகர்*, *நச்சர்* கொண்ட பாடம் என்றும், அது பொருத்தமான பொருள் தாராமையின் 'மனத்தானும்' எனப் பாடம் கொள்ளப் பட்டது எனவும் பரிமேலழகரை மறுப்பர் *வ.உ.சி.*

---

1 ஆரளவிலும்—எவருக்கும்; 2. காயத்தால்—உடலால்;
3. சரிபோகாமல்—ஒத்துப்போகாமல்.

'மனத்தானும்' என்று பாடங்கொண்டவர்கள் *பரிமேலழகர்* நீங்கிய ஏனைய உரையாசிரியர்கள். 'மனத்தானாம் மாணா' என்றவர் *பரிமேலழகர்*. இவர் இங்ஙனம் கோடற்குத் 'தன்னெஞ்சறிவது பொய்யற்க', 'நெஞ்சறிகுற்றப்படின்', 'மனத்தொடுவாய்மை மொழியின்' என்ற *வள்ளுவர்* ஆட்சிகள் உதவினவாதல் வேண்டும். 'மனத்தானும்' என்ற பாடங்கண்டவர்களில் *காளிங்கர்* 'மனத்தானும்' என்றமையால் 'ஒருங்கெண்ண உடலாலும் உரையாலும் செய்யாமை தலை' என உபலக்கணத்தான் உரைப்பர். 'செய்யாமை' எனக் காயத்தின் வினையால் கூறினும் மனத்தால் நினைத்தலைச் செய்யாமையும், உரைத்தலைச் செய்யாமையும், உடலாற் செய்யாமையும் எனக் கொள்ளுதலுமாம்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

முற்றும்:

''எந்தை எந்தை யேவிவ் வேழுதிரை வளாகத் தியார்க்குஞ்
சிந்தையாற் செய்கை யாலோர் தீவினைசெய்தி லாதாய்''

கம்பராமா., 4187.

32. 8. தன்னுயிர்க் கின்னாமை தானறிவான் என்கொலோ
மன்னுயிர்க் கின்னா செயல். (௩கஅ)

உரைப்பகுதி:

அ) *மணக்.*: தன்னுயிர்க்கு உற்ற இன்னாமையை உயிரில்லாப் பொருள்கள் போல அறியாது கிடத்தலன்றித் தான் அறியுமவன், பின்னைப் பிறவுயிர்க்கு இன்னாதவற்றைச் செய்கின்றது யாதினைக் கருதியோ என்றவாறு.

ஆ) *பரிதி.*: எ-து தன் ஆத்மாவுக்குப் பொல்லாங்கு வருகின்றபோது தான் விதனப் படானோ? அப்படியே, தான் ஒருத்தருக்கும் பொல்லாங்கு செய்யக்கடவனல்லன் என்றவாறு.

ஈ) *காளி.*: எ-து தன்னுயிர்க்குச் சில இன்னாதனவற்றைத் தான் அறிந்து ஒழுகுவான் இனி மற்று உலகத்துப் பிறந்து இறந்து இங்ஙனம் நிலைபெற்று வருகின்ற உயிர்கட்குத் தான் சில இன்னாதன செய்யுஞ் செயல் என்னை கொல்லோ என்றவாறு.

உ) *பரிமேல்.*: பிறர் செய்யும் இன்னாதன தன்னுயிர்க்கு இன்னாவாந்தன்மையை அனுபவித்து அறிகின்றவன், நிலைபேறுடைய பிறவுயிர்கட்குத் தான் அவற்றைச் செய்தல் என்ன காரணத்தான்?

இவ்வாறே இவை பிற உயிர்க்கும் இன்னா என்பது[1] அனுமான[2]த்தான் அறிந்து வைத்துச் செய்கின்ற இப்பாவம்[3] கழுவப் படாமை[4]யின், இன்னாதன யான் வருந்தப் பின்னே வந்து வருத்தும் என்பது ஆகமத்[5]தானும் அறிந்து ஒழியற்பாலன என்பது தோன்றத் 'தான்' என்றும், அத்தன்மையான் ஒழியாமைக்குக் காரணம் மயக்கம் என்பது தோன்ற 'என்கொலோ' என்றும் கூறினார். இவை மூன்றுபாட்டானும் பொதுவகையான் விலக்கப்பட்டது.

ஊ) *கவிராசர்*: பிறர் செய்த பொல்லாப்பைத் தான் அனுபவித்து அறிந்தவன் தன்னைப் போல் ஒத்த உயிர்களுக்குத் தான் பொல்லாங்கு செய்கிறது. என்ன காரியம்? (எ—து).

ஏ) *பழைய 2*: பிறர்செய்யும் பொல்லாதன தன் உயிர்க்குப் பொல்லாதன என்று தானறிந்தவன் என்ன காரணத்தினாலோ நிலை பெற்ற பிற உயிர்கட்குத் தான் பொல்லாதன செய்தல்?

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'இன்னா எனத் தான் உணர்ந்தவை' என்ற (316) குறளும் 'தன்னுயிர்க்கின்னாமை' என்ற இக்குறளும் கருத்தால் ஒன்று போலக் காணப்படினும் முன்னையது இன்னாமையைத் தன் போல ஆறறிவுடைய பிறனுக்குச் செய்யாமையையும், இக்குறள் தன்னுயிர்க்கின்னாமையை உணர்ந்தவன் பிறவுயிர்கட்கு இன்னா செய்தலாகாது என்பதையும் உணர்த்துதலின் வேறுபட்டது. முன்னையது மக்கட்கு இன்னா செய்தலை விலக்கியது. பின்னையது பிறஉயிர்கட்கு அதாவது மக்களல்லாத உற்றறிவது முதல் மாவு முதலான ஐயறிவுடையன வரையுள்ளவற்றிற்கு இன்னா செய்தலை விலக்கியது என்க.

ஒ) ஒப்புமைப் பகுதி:

முற்றும்:

விளைப்பயம் ஒன்றின்றி வேற்றுமை கொண்டு
நினைத்துப் பிறர்பணிப்பச் செய்யாமைவேண்டும்
புனப்பொன் னவிர்சுணங்கிற் பூங்கொம்ப ரன்னாய்
தனக்கின்னா இன்னா பிறர்க்கு — *பழமொழி, 126*

---

1. இக்குறட்பாவோடு 'இன்சொலினிதீன்றல் காண்பானெவன் கொலோ, வன்சொல் வழங்குவது' (99) என்பதனையும் இணைத்து எண்ணுக.

2. அனுமானம்—கருதல் அளவை, ஈண்டு நாம் அடிப்பதால் இவ்விலங்கு வருந்துவது பிறர் நமக்குச் செய்த துன்பத்தால் வருந்துவதுபோலத் தானே எனக்கருதுதல்.

3. 'பாவம்' என்றும் பாடம். 4. கழுவப்படாமையின்-நீக்கப்படாமையின்.

5. ஆகமம்-நூலளவை.

இறப்ப நுமக்கடுத்த எவ்வநோய் யாவும்
பிறர்க்கு மஃதாமென்று கொண்மின் உறக்கருதி
அவவாறு மக்குறுதி யெண்ணுதிர் நீர் எல்லார்க்கும
அவ்வாறே யெண்ணல் அறம். —பாரதவெண்பா

தன் உயிர் தான் பரிந்து ஓம்புமாறு போல்
மன் உயிர் வைகலும் ஓம்பி வாழுமே —சீவக., 3107

ஓ) மேற்கோள் பகுதி:

நச்.: 'அருளொடு புணர்தலாவது ஒருயிர்க்கு இடர்வந்துழித் தன் உயிரைக் கொடுத்துக்காத்தலும் அதன் வருத்தம் தனதாக வருந்துதலும், பொய்யாமை கள்ளாமை முதலியனவும் ஆம். இக்கருத்து நிகழ்ந்தபின்னர் துறவுள்ளம் பிறத்தலின் இதுவும் அறவெற்றியாயிற்று. இதில் இக்குறள் பிற உயிர்களின் வருத்தம் தனதாக வருந்துதலுக்கு மேற்கோள்: (தொல். பொருள். 76)

பெருந்: சாந்தச் சுவைக்கு மேற்கோள். (வீரசோ. 170. உரை)

சுப்பிர: (தண்டி. 70. உரை)

யா.வி.உரை: இரண்டடியான் வந்த வெண்பாச் சிறுமைக்கு மேற்கோள் (சூ.32) எதுகை முதற்றொடையான் வந்த இனக்குறள் வெண்பாவிற்கு மேற்கோள். (சூ.59)

32.9. பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும். (சூ கக௯)

உரைப்பகுதி:

அ) *மணக்.:* பிறர்க்கு இன்னாதவற்றை முற்பொழுது செய்யின் தாமே பிற்பொழுது தமக்கு இன்னாதனவாய் வரும்; மற்றொருவன் செய்யாமல் என்றவாறு.

இன்னாதன செய்ததனால் வருங்குற்றம் என்னை என்றார்க்கு இது கூறப்பட்டது.

ஆ) *பரிதி:* எ—து தான் ஒருத்தர்க்குப் பொல்லாங்கு செய்வானாகில் அந்தப் பொல்லாங்கு தனக்கே பிறகு வரும்; ஆகையால் ஒருவர்க்கும் பொல்லாங்கு செய்ய வேண்டாம் என்றவாறு.

ஈ) *காளி.:* எ—து ஒருவன் பிறர்க்கு இன்னாதனவற்றை முற்காலத்துத் தான் செய்யுமாயின் தமக்கு இன்னாதனவும் செய்த அக்கருமத்

தின் பயன் பிற்காலத்துத் தானே வந்து எய்தும்; அதனை ஒருவர்க்கும் ஒழித்தல்[1] அரிது என்றவாறு.

முற்பகல் பிற்பகல் என்றது முற்காலம் பிற்காலம் என்றது.

உ) *பரிமேல்.:* துறந்தவர் பிறர்க்கு இன்னாதவற்றை ஒருபகலது முற் கூற்றின்கண் செய்வாராயின், தமக்கு இன்னாதன அதன் பிற் கூற்றின்கண் அவர் செய்யாமல் தாமேவரும்.

முற்பகல் பிற்பகல் என்பன பின் முன்னாகத் தொக்க ஆறாம் வேற்றுமைத் தொகை.[2] தவமழிதலின், அங்ஙனம் கடிதினும் எளிதினும்[3] வரும்; அதனால் அவை செய்யற்க என்பதாம். இனித் 'தானே வரும்' என்பது பாடமாயின், அச்செயல்தானே தமக்கு இன்னாதனவாய் வரும் என உபசாரவழக்காகி[4] ஆக்கம் வருவித்து உரைக்க.

ஊ) *கவிராசர்:* 'தானே' பாடம். ஒருவன் பிறவுயிர்களுக்குப் பொல்லாத காரியத்தைக் காலத்தால் செய்தால் அவனுக்குப் பொல்லாங்கு அந்திக்குத்[5] தானே வரும். (எ—று.)

ஏ) *பழைய 2:* பிறர்க்கு முன்பகல் துன்பம் செய்தானாயின், தமக்குப் பின்பகல் அந்தத் துன்பமே வரும்.

மல்லர்: பிறத்தியாரிடத்திலே பொல்லாப்புடைய முந்தின பங்கு செய்தால் தனக்குப் பொல்லாப்புடைய பிந்தின பங்கு தானே வரும். எ—று.

பொல்லாப்புச் செய்ததுக்குப் பொல்லாப்பு வருதல் நிச்சயமாகையில் பிறத்தியாருக்குப் பொல்லாப்புச் செய்தல் என்கிற முந்தின பங்கு செய்தால் பொல்லாப்பு வருதல் என்கிற பிந்தின பங்கு அவர்களால் வராதே போனாலும் எந்தவிதத்திலேயானாலும் அவசியம் வரும் என்பது கருத்து.

பிறர்—பிறத்தியார்; பகல்—பங்கு; செய்தல்—செய்தால்; முற்—முன்; பிற்—பின்.

---

1 ஒழித்தல்—நீக்குதல்.

2 பகலினது முன்-முற்பகல், பகலினதுபின்-பிற்பகல் பகல் என்னும் நிலைமொழியாகவும், முன்பின் என்பன வருமொழியாகவும் நின்று ஆறாம் வேற்றுமைப் பொருளில் வரும் தொடர்மாறி வந்தமையின் முன்னிருக்க வேண்டியது பின்னும், பின்னிருக்கவேண்டியது முன்னுமாக வந்த ஆறாம் வேற்றுமைத் தொகையாயிற்று. இங்ஙனம் வருவது இலக்கணப் போலியாம்.

3 கடிதினும் எளிதினும்—விரைந்தும் எளிமையாகவும்,

4 பிறர்க்கு இன்னா செய்தலால் தமக்கு இன்னாதனவரும் என்னாது பிறர்க்குச் செய்யும் இன்னாதனவே தமக்கு இன்னாதனவாய் என்று காரணத்தைக் காரியமாகக் கூறிய உபசார வழக்காம்.

5 அந்திக்கு—மாலையில்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'முற்பகல்—பிற்பகல்' என்றவற்றை, 'முற்காலம்—பிற்காலம்' எனவும், 'முற்பொழுது பிற்பொழுது' எனவும் உரை கண்டனர் *மணக்; காளி., பரிதி.,* முதலியோர். *பரிமேலழகர்* 'பகலினது முற்கூறு; அதன் பிற்கூறு; என உரை செய்து 'பகலினதுமுன்—பகலினதுபின்' எனத் தொகையை விரித்து 'முன்பின்னாகத் தொக்க ஆறாம்வேற்றுமை' என்பர். *சொ. த.* 'முன்னாகிய பகல் பின்னாகிய பகல்' எனக் கொண்டு 'பண்புத் தொகை' என்பர்.

'தானேவரும்' 'தாமேவரும்' என இருவகைப்பாடமும் உண்டு. 'பிறர்செய்யாமல் கேடு தாமேவரும்' 'பொல்லாங்கு தாமே வரும்' என்பர் *பரிதி, காளி.,* முதலியோர். *பரிமேலழகர்* 'துன்புறுத்தப்பட்டார் செய்யாமல் தாமாகவே வரும்' என்று இன்னாதசெயலை வினைமுதலாக்கிக் கூறுவர். 'கூட்டுபவனின்றி அக்கருமத்தின் பயன் தானாகவே வரும்' என்பர் *காளிங்கர்.*

'செய்பவன் இல்லாமலே செய்வினை வரும்' என்பர் *மணக்குடவர்.* 'செய்பவன் இல்லாமல் வினை ஏது? அது எப்படி வரக்கூடும்? என்ற ஐயத்தைக் 'கருமத்தின் பயன் பிற்காலத்துத்தானே வரும்' என்பதால் *காளிங்கர்* போக்குகிறார். *சொ. த.* 'தாமே வரும் வரும்' என்றது .வருதலின் விரைவையும் எளிமையையும் குறித்தது' என்பர். ஆகவே 'முற்பொழுதில் ஒருவன் ஒருவனுக்கு இன்னா செய்யின் அதன்பயன் பிற்பொழுதிற்றானே வரும்' என்ற *மணக்.* உரை தெளிவானது. 'பகலே நாள் ஒரு முகூர்த்தம்' என்பது நிகண்டு. ஆதலின் பகல் என்பது காலப் பொதுப்பெயர்.

'தமக்கு இன்னா' *பரிமேல்., மணக்.,* பாடம். 'தானேவரும்' *தாமத்தர், தருமர்* பாடம். 'தமக்கு' என்பதாற் குறிக்கப்படுவோர் யார் எனச் சொல்ல இயலாமையான் 'தனக்கு' என்பதே வள்ளுவர் கொண்ட பாடமாகும் என்பர் *வ. உ. சி.*

ஒ) ஒப்புமைப் பகுதி:

முற்றும்:

முற்பகற் செய்தான பிறன்கேடு தன்கேடு
பிற்பகற் காண்குறூ உம் பெற்றியகாண் —*சிலப்., 21:3*

நெடியது காண்கிலாய் நீயளியை நெஞ்சே
கொடியது கூறினாய் மன்ற—அடியுளே
முற்பகல் கண்டான் பிறன்கேடு தன்கேடு
பிற்பகற் கண்டு விடும் —பழமொழி நானூறு 130.

முற்பகல் செய்வினை பிற்பகல் உறுநரின் —பெருங். 1. 56: 259

முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் —கொன்றை

முன்னைச் செய்வினை இம்மையில் வந்து மூடுமாதலின்
—சுந்தரர், திருபுறம்.,7.

செற்றொருவரைச் செய்த தீமைகள்
இம்மையே வரும் திண்மையே —சுந்தரர், திருப்புறம்புயம்., 4

முற்பக லோர் பழி முடிக்கின் மற்றது
பிற்பகல் தமக்குறும் பெற்றி யென்னவே—கந்த, 2 ஆம்நாள் சூரபன், 366.

ஒ) மேற்கோள் பகுதி

பெருந்: பிறநூல் முடிந்தது தானுடம்படுதலுக்கு மேற்கோள் (வீரசோழி. 180. உரை

காரிரத்ன: பாவிக அலங்காரத்திற்கு மேற்கோள். (மாற. 251.

சிவஞான: வினை முதற்பொருள் 'இன்னா தாமே வரும்' என செயப்படுபொருட்கண் வந்தது. நன். 299)

சுவாமி: இன்னா தாமே வரும் எனச் செயப்படு பொருள் தேற்றத்தோடு வினை முதலாய்ச் செய்யப்படு பொருள் குன்றிய வினை கொண்டது. (இ.கொ.26)

சுப்பிர: தெளிவு என்னும் குண அலங்காரத்திற்கு மேற்கோள். (தண்டி. 17. உரை)

32.10. நோயெல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர். (௩௨0)

உரைப்பகுதி

அ) *மணக்*.: இக்காலத்து நுகர்கின்ற துன்பமெல்லாம் முற்காலத்துப் பிறர்க்குத் துன்பம் செய்தார்மாட்டே உளவாம்; ஆதலால், இக்காலத்துப் பிறர்க்குத் துன்பத்தைச் செய்யார் வருங்காலத்துத் தமக்குத் துன்பம் வராமையை வேண்டுபவர் என்றவாறு.

ஆ) *பரிதி*: எ-து ஒருவர்க்குத் தான் செய்த விதனம், பின்பு தனக்கு வருகிறபடியினாலே, ஒருவர்க்குத் தாங்கள் விதனஞ்செய்யார் என்றவாறு.

அது எப்படி என்றால், பிரம்மராட்சதன் ஒரு ராசாவின் மகளைப் பற்றிநின்று சந்தியாவந்தனை[1] செய ஆற்றங்கரையிலே

1. சந்தியாவந்தனை—காலை மாலைகளிற் செய்யப்பெறும் கடவுள்வழிபாடு.

வந்து நின்றளவில் பிராமணப் பிள்ளையின் பிள்ளை வாசிக்கின்றவனுக்கு அன்றைப் பாடம் இந்தக்குறள் ஆகையால் அவன் முக சுத்தி பண்ணவந்தவன், இந்தக்குறளைப் பாடமாகச் சொல்லிக் கொண்டு வந்தான். இத்தை பிரம்மராட்சதன் கேட்டுத் தானொரு பிராமண வடிவாய் இந்தப் பிள்ளை வாய்ப்பாடத்தை இரண்டு பிரகாரங்கேட்டு 'நாம் இராசாவின் மகளை நோய் செய்தோமே; தமக்கு அந்த விதனம் பிறகே வரும்' என்று அஞ்சி, இந்தப் பிள்ளை முன்னிலையாக ராசகுமாரத்தியை விட்டுப்போச்சு என்றவாறு.

ஈ) *காளி*.: எ-து துன்பமானவை எல்லாம் பிறர்க்குத் துன்பம் செய்வார்மாட்டு உள்ளழுந்தவே[2] வந்து விளையும்; ஆதலால் பிறர்க்கு இனியது நோக்கி, என்றும் தாம் ஒரு நோய் செய்வது இலர்; யாரோ எனில் தமக்குத் துன்பத்து இன்மையை விரும்புவோர் என்றவாறு.

உ) *பரிமேல்*.: இன்னாதன எல்லாம் பிறிதோருயிர்க்கு இன்னாதன செய்தார் மேலவாம்; அதனால் தம்முயிர்க்கு இன்னாதன வேண்டாதார் பிறிதோருயிர்க்கு இன்னாதன செய்யார்.

உயிர்நிலத்து[3] வினைவித்திட்டார்க்கு விளையும்[4] அதுவேயாகலின், நோயெல்லாம் நோய் செய்தார் மேலவாம் என்றார். இதுசொற்பொருட்பின் வருநிலை[5]. இவை இரண்டுபாட்டானும் அது செய்தார்க்கு வரும் தீங்கு கூறப்பட்டது.

ஊ) *கவிராசர்*.: பொல்லாத வியாதி முதலானவை எல்லாம் பிறவுயிர்களுக்குப் பொல்லாங்கு செய்தார் மேலேயாம். அதனாலே தனக்குப் பொல்லாங்கு வேண்டாதவர்கள் பிறவுயிர்களுக்கும் பொல்லாங்கு செய்யாமல் இருக்க வேண்டும். எ-று,

ஏ) *பழைய 2*: நோய்கள் எல்லாம் பிறர்க்கு நோய்செய்தவர் மேலே வந்தேறி வருந்தும்; ஆதலால், அதனை அறிந்து தம் உயிர்க்கு நோய்வேண்டாதார் பிறிதோர் உயிருக்கு நோய் செய்யார்.

மல்லர்: பொல்லாப்புச் செய்தவன் பேரிலே பொல்லாப்பு எல்லாம் விழுகிறது நிச்சயமாகையில் பொல்லாப்பில்லாமலிருக்க ஆசையாய் இருக்கிறவன் பிறத்தியாருக்குப் பொல்லாப்பு செய்யான், எ—று.

பிறத்தியாருக்குப் பொல்லாப்புச் செய்தால் தனக்குப் பொல்லாப்பு வருகிறதுக்குக் காரணமாயிருக்கிறதினால் தனக்குப் பொல்

2. உள்ளழுந்தவே—மனம் பதிய; 3. 'உவர்நிலத்து' என்றும் பாடம் உண்டு.

4. சீவக. 2762. 5. இச்செய்யுளுள் 'நோய்' என்பது 'துன்பம்' 'துன்பந்தருவது' என்ற பொருளில் பின்வரும் வருதலின் சொல்பொருள் பின்வருநிலை அணியாயிற்று.

லாப்பு வாராதபடிக்குப் பண்ணவேணுமானால் அதுக்குக் காரணமாயிருக்கிற பிறத்தியாருக்குப் பொல்லாப்புச் செய்தலைத் தவிரவேணும் என்பது கருத்து.

நோய்—துன்பம்; இன்மை-இல்லாமை; வேண்டல்—விரும்புதல்'

ஐ) தொகுப்பும் குறிப்பும்

இக்குறள் தன்னலத்தை விரும்பியாவது பிறர்க்குத் தீமை செய்யற்க என்கின்றது, இக்குறளின் அமைப்பு பொதுமையிற் றெளிவுடையதாதலின் கருத்து வேற்றுமைக்கு இடமேயில்லை.

''நோய் செய்வார்'' *தருமர்* பாடம் என்பர் *வ.உ.சி.*

ஒ) ஒப்புமைப் பகுதி:

முற்றும்:

உயிர்நிலத்து வினைவித்திட்டார்க்கு அவ்வினையே விளையும் என்றார்
—*சீவக. முத்தி.,* 164)

ஆய்வினை யுடைய ராகி யறம்பிழை யாதார்க் கெல்லாம்
ஏய்வன நலனே யன்றி யிறுதிவந் தடைவ துண்டோ
மாய்வினை யியற்றி முற்றும் வருணன்மேல் வந்தசீற்றம்
தீவினை யுடையோர் மாட்டே தீங்கினைச் செய்ததன்றே
—*கம்பராமா.,* 6797.

32. இன்னா செய்யாமை

	சிறப்பீனும்	கறுத்தின்னா	செய்யாமல்	இன்னாசெய்	அறிவினான்	இன்னா எனத்	எனைத்தானும்	தன்னுயிர்க்	பிறர்க்கின்னா	நோயெல்லாம்.
மணக்.	4	2	3	10	6	1	5			9
பரிதி.	4	6	5	9	10	1	8	2	3	4
பரிப்.	—	—	—	—	—	1	—	—	—	—
காளி.	8	3	7	9	10	1	6	4	2	5
பரிமேல்.	1	2	3	4	5	6	7	8	9	10

32—வது அதிகாரம் இன்னா செய்யாமை முற்றிற்று.

33. கொல்லாமை

அ) மணக் : கொல்லாமையாவது யாதோருயிரையும் கொல்லாமை. இது வெகுளி முதிர்ந்துழி நிகழ்வதொன்றாதலின், அதன்பின் கூறப்பட்டது.

ஆ) பரிதி: கொல்லாமையாவது, ஒருவர்க்குத் தான் பொல்லாங்கு செய்ததும், ஒருயிரைக் கொல்லுவதும் நிகராம்[1] என்றவாறு.

ஏ) பரிமேல்.: அஃதாவதுஐயறிவுடையனமுதல்ஓரறிவுடையனஈறாய உயிர்களைச்[2] சோர்ந்துங் கொல்லுதலைச் செய்யாமை. இது மேற்கூறிய அறங்களெல்லாவற்றினுஞ் சிறப்புடைத்தாய்க் கூறாத அறங்களையும் அகப்படுத்துநிற்றலின்[3] இறுதிக்கண் வைக்கப்பட்டது.

ஊ) கவிராசர்: அஃதாவது, ஓரறிவுடைய உயிர் முதலாக ஐயறிவுடைய உயிர் இறுதியாகச் சொல்லப்பட்ட ஏழுவித உயிர்களையும் கொல்லாமல்இருக்கிறது. இது சகல தருமங்களிலும் பெரிய தருமம் ஆனபடியினாலே சகலமான பேரும் கொல்லா விரதத்தையே கைக்கொண்டு[4] நடக்க வேண்டும்.

ஏ) பழைய 2: அதாவது, ஓரறிவுடைய உயிர்முதலாக யாதோருயிரையும் கொல்லாகாது என்றது.

மல்லர்: அஃதாவதுஉயிருள்ள வஸ்துக்களுக்குஉயிர்ச்சேதம் பண்ணாமலிருக்கிறது.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக்.: 'இது வெகுளி முதிர்ந்துழி நிகழ்வதாகலின் அதன்

1 நிகராம்—சமம் ஆகும்.

2 ஐயறிவுடையன முதல் ஓரறிவுடையன ஈறாய உயிர்கள்—ஐயறிவுடையன பொறிகள் ஐந்தாலும் அறியும் மனவுணர்வை உடைய மக்கள் முதல் முறைமுறையே உற்றறியும் அறிவாகிய ஓரறிவை மட்டும் உடைய உயிர்களைக் கொல்லாமையாம். இவற்றின் விரிவையும் தடைவிடையையும் தொல்காப்பியமரபியலிலும் நன்னூல் 'விருத்தியுரையிலும் காண்க.

3 அகப்படுத்துநிற்றல்—உட்படுத்தி நிற்றல்; 4 கைக்கொண்டு—மேற்கொண்டு.

பின்வைக்கப்பட்டது' என்பதால் இவ்வதிகாரம் வெகுளாமையின் பின்னிருந்திருக்கக்கூடுமோ? என்ற ஐயம் எழுந்தது. 'இன்னா செய்யாமை' அதிகாரத்தலைப்பில் உள்ள 'வெகுளி மறந்து நிகழ்வது ஒன்றாதலின் அதன்பின் (வெகுளாமையின்பின்) வைக்கப் பட்டது' என்ற இவர் எழுத்துக் குழப்பத்தைத் தருகிறது. ஆதலால் அதன்பின் என்பதற்கு வெகுளியை மறந்து நிகழ்வதாகிய இன்னா செய்யாமையின் பின் எனக் கருத்துக் கோடல் ஓரளவு அமைதியாக லாம் இதே விளைவு பரிமேலழகர் அதிகார இயைபிலும் காணப் படுகிறது. இப்பகுதி ஆய்வுக்குரியது.

பரிதி. தரும் 'பொல்லாங்கு செய்ததும் ஒருயிரைக் கொல்வதும் நிகராம்' என்ற உரை இன்னா செய்தலையும் கொலையையும் ஒத்த குற்றங்களாகக் கருதுவது வெகுளாமையினை அடுத்தடுத்து இன்னா செய்யாமையையும் கொல்லாமையையும் வைத்தற்குக் காரணமா குமோ என்று எண்ணச் செய்கிறது. இவைகளை இணைத்து எண் ணும்போது வெகுளாமையடுத்து இன்னாசெய்யாமையும் கொல்லா மையும் ஒருவிதத்தில் முளைத்த ஈரிலை போன்றதாகலாம். *சொ. த*. 'விரதங்களனைத்தினும் செய்தற்கரியதாதலின் விரதப்பகுதியின் ஈற்றில் கூறப்படுகிறது இன்னாசெய்தல் கொல்லாமற் கொல்லுதலா தலின் அதனை முன் விலக்கிக் கொல்லுதலைப் பிற் கூறினார்' என அதிகார இயைபு கூறுவர்.

தேவநேயர் 'பொதுமக்கள் ஈரறிவு முதல் ஆறறிவு வரை எவ்வு யிரையுங் கொல்லாமையும், துறவியாயின் சிறப்பாக இறுதிக்கட்டத் தில் ஓரறிவுயிரையுங் கொல்லாமையும் ஆம்' என்பர்.

இராமலிங்கனார், 'துறவி தற்காப்புக்காகக் கூடப் பிறவுயிரைக் கொல்லக் கூடாது என்பதனால் கொல்லாமை துறவிற் சொல்லப் பட்டது' என்பர்.

33.1 அறவினை யாதெனின் கொல்லாமை கோறல்
பிறவினை எல்லாம் தரும். (௩௨௧)

உரைப்பகுதி:

அ) *மணக்*.: நல்வினை யாது எனின், கொல்லாமை; கொல்லுதல் எல்லாத் தீவினைப்பயனையும் தரும் ஆதலால் என்றவாறு,

இஃது அறத்தொழிலாவது கொல்லாமை என்றது.

ஆ) *பரிதி*.: எ—து தன்ம நெறியாவது கொல்லாமை; கொலை செய்கை தன் ஆத்மாவுக்கு எல்லாவிதனமும் தரும் என்றவாறு.

ஈ) *காளி*.: எ—து இருவினைப்பயனையும் கொண்ட வையத்து அறவினைக்குச் சிறந்தது யாதோ எனில் யாதானும் ஒன்றினையும் கொல்லாமை; ஆதலால் ஒன்றினைக் கொல்லுதலாகின்ற இது பாவமாகிய எல்லாத்தீவினையும் தரும் என்றவாறு.

உ) *பரிமேல்*.: அறங்களெல்லாமாகிய செய்கை யாது என்று வினவின் அஃது ஓருயிரையுங் கொல்லாமையாம், அவற்றைக் கொல்லுதல் பாவச் செய்கைகள் எல்லாவற்றையும் தானே தரும் ஆதலான்.

அறம் சாதியொருமை[1] விலக்கியது ஒழிதலும் அறஞ்செய்தலாம் ஆகலின், கொல்லாமையை 'அறவினை' என்றார்.[2] ஈண்டுப் 'பிறவினை' என்றது அவற்றின் விளைவை கொலைப்பாவம் விளைக்குந் துன்பம் ஏனைப் பாவங்களெல்லாங்[3] கூடியும் விளைக்க மாட்டா என்பதாம். கொல்லாமை தானே பிற அறங்களெல்லாவற்றின் பயனையும் தரும்என்று மேற்கோள்[4] கூறி, அதற்குஏது எதிர்மறைமுகத்தால் கூறியவாறாயிற்று.

ஊ) *கவிராசர்*: தருமமாகிறது யாதெனில் ஒரு சீவனையும் கொல்லாமல் இருக்கிறதாம். சீவன்களைக் கொல்லுகிறது சகலமான பாவங்களையும் கொடுக்கும். (எ—று)

ஏ) *பழைய* 2: தன்மமாகிய செயல் யாதெனவினவில் அது யாதோர் உயிரையும் கொல்லாமையாம்; அவற்றைக் கொல்லுதல் பாவச் செயல் எல்லாவற்றையும் தரும் ஆதலால்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'*பிறவினை எல்லாம் தரும்*' என்பதற்கு மணக்குடவர் 'எல்லாத் தீவினைப் பயனையும்,என்றனர். 'எல்லாவிதனமும் தரும்' என்றனர் பரிதி. 'எல்லாத் தீவினையையும் தரும்' என்றனர் காளிங்கர். கவிராசரும், பழைய உரைகாரரும் இப்பகுதிக்கு உரைகாணாது விட்டனர். பரிதி., 'விதனம்'என்றது மணக்குடவர் பரிமேலழகரைப்

1. அறம்சாதி ஒருமை—ஒருமைப்பாலும் பன்மைப்பாலும் உணர்த்தும் விகுதிகளன்றித் தானே பன்மைப் பொருளையும் உணர்த்தும் சொல். ஈண்டு அறம் என்பது பன்மை பணர நிற்றல் காண்க. இதனை வடநூலார் சாதி ஏகவசனம் என்பர்.

2. அறவினை யாதெனிற் கொல்லாமை: நோன்பு என்பதுவே கொன்று தின்னாமை, அழுக்காறாமை முதலாக விலக்கியவற்றைச் செய்யாமையே நல்வினை செய்தல் என்பது இ. கொ.

3. ஏனைப்பாவங்கள்—பிறர்மனை நயத்தல், கள், சூது, திருடுதல், வெஃகுதல் முதலாயின.

4. மேற்கோள்.-எனினும் பிரதிக்ஞை எனினும் ஒக்கும்: மேற்கோளாவது பக்கத்தைத் துணிபொருளுடையதாகக் கூறுவது. ஈண்டு கொல்லாமை பட்சம், கொல்லாமையறம் அனைத்தறங்களின் பயனையும் தரும் என்பது துணி பொருள். கொல்லாமைக்கு எதிர்மறை கோறல்.

போலப் பிறவினைகளின் பயனாகிய விதனம் அல்லது துன்பத்தையே கூறியதாம். ஆதலால் உரைமாற்றம் இல்லை எனலாம்.

'கொல்லுதல்-கொல்லாமை:எதிர்மறைவினையாகலான் கோறல் பிற தீவினைப் பயன்களைத் தருவதோடு நல்வினைப் பயன்களனைத் தையும் அழித்துவிடும்' என்ற தேவநேயர் விளக்கம் நயமான பகுதி. கொல்லுதல் இன்னாசெய்தல் முதலான பாவங்களையும் உடன் கொண்டது; கொல்லாமை அருளுடைமை முதலிய பலவகையான தன்மங்களையும் கொண்டது ஆதலால் கொல்லாமை அறப்பயன் அனைத்தையும் ஒருங்குதரும் என்றதும், கோறல் பிறதீவினைப்பயன் களனைத்தையும் தரும் என்றதும் மிகச் சிறந்த பயனாம்.

௭) மேற்கோள் பகுதி:

அறவினையாதெனின் கொல்லாமை கோறல்:

கொலை கூடவரும் அறம்கொள் என்மின் —வளை., 17.

விலகுடன் விளங்கவுயிர் சீர்த்திநிலை கொள்ளின்
நிலையில்கதி நான்கினிடை நின்றுதடு மாறும்
அலகில்துயர் அஞ்சினுயி ரஞ்சவரும் வஞ்சக்
கொலையொழிமின் என்றுநனி கூறினரறிந்தார் —வளை., 34.

கொன்ற வன்னே கொடியனென உலகங்கூறு மதனாலும்
ஒன்ற நூலா ருரைகளோ டொப்பமுடியு மதனாலும்
இன்றி னின்றும் இதுவொழிதி ராயின்னுங்கட் கிருமைக்கு
நன்றி தென்றான் வெந்நகரம் புகுதல் விலக்கு நாவினான் —நீல., 39

நிந்தனை நறவமு நெறியி லூன்களுந்
தந்தன கண்டிலென்... ... ... —கம்பராமா., 6589

௭) மேற்கோள் பகுதி:

இளம்: கொல்லாமையாவது யாதொன்றையும் கொல்லாமை என்பதற்கு மேற்கோள். (தொல். பொருள். 75)

பெருந்: தொகுத்துக் காட்டலுக்கு மேற்கோள். (வீரசோ. 180.)

காரிரத்தின: பாவிக அலங்காரத்திற்கு மேற்கோள். (மாற. 251.)

சுவாமி: ''கொல்லாமை தரும்'' எனத்தொழிற்பெயர்க் கருத்தா. (இ. கொ. 26) கொல்லாமை என்புழிச் செய்யாமை என்னும் மறையைச் செய்தல் என்னும் விதியாகவே துணிந்தது. (இ. கொ. 122)

33.2. பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை. (கூஉஉ)

உரைப்பகுதி:

அ) *மணக்.*: பல்லுயிர்களுக்குப் பகுத்து உண்டு அவற்றைப் பாது காத்தல், நூலுடையார் திரட்டின அறங்களெல்லாவற்றினும் தலை யான அறம் என்றவாறு.

இஃது எல்லாச் சமயத்தாருக்கும் நன்று என்றது.

ஆ) *பரிதி.*: எ—து பெற்ற செல்வத்தைப் பகுத்து உண்டு தன் உயிர் போல எல்லா உயிரையும் பார்த்துக் காத்தல் தலைமையானகாரியம் என்றவாறு.

ஈ) *காளி.*: எ—து தனக்குள்ளதுகொண்டு பலர்க்கும் பகுத்து ஊட்டி, தானும் உண்டு, அனைத்துயிர்களையும் கொலைபுரியாது பாதுகாத் தலே பெரிது என்று அனாதியில்[1] பல அறநூல்கண்டவரும், முனிவர் அனைவரும் சிறந்த நல்லறம் இவை இவை என்று எண்ணி முடித் தவை எல்லாவற்றினும்சாலத்தலைமைப்பாடு உடைத்துஎன்றவாறு,

இவன் இடாமையால் பிறர் சாவினும் கொலையாம் என்பது கருத்து.

உ) *பரிமேல்.*: உண்பதனைப்பசித்த உயிர்கட்குப் பகுத்துக்கொடுத்து உண்டு ஐவகை உயிர்களையும்[2] ஓம்புதல், அறநூலுடையார் துறந் தார்க்குத் தொகுத்த அறங்கள் எல்லாவற்றினும் தலையாய அறம்.

பல்லுயிரும் என்னும் முற்றும்மை விகாரத்தால் தொக்கது, ஓம்பு தல்-சோர்ந்துங் கொலைவாராமல் குறிக்கொண்டு காத்தல். அதற்குப் பகுத்து உண்டல் இன்றியமையா உறுப்பாகலின்[3] அச்சிறப்புத் தோன்ற, அதனை இறந்தகாலவினையெச்சத்தால் கூறினார். எல்லா நூல்களிலும் நல்லன எடுத்து எல்லார்க்கும் பொதுப்படக்கூறுதல் இவர்க்கு இயல்பாகலின் ஈண்டும் பொதுப்பட நூலோர் என்றும், அவரெல்லார்க்கும் ஒப்ப முடிதலான் இது தலையாய[4] அறம் என்றும் கூறினார்.

---

1. அனாதியில்—தொன்றுதொட்டே.
2. ஐவகைஉயிர்கள்—முன் அதிகார விளக்கத்து உரைக்கப்பட்டது,
3. உண்பதற்கு நீராடுதல் உறுப்பாதல் போல, பல்லுயிர் ஓம்பற்குப் பகுத்துண்ணல் அங்கமாயிற்று என்க.
4. 'இது தலை' என்றுங் கூறினார் பாடம்,

ஊ) **கவிராசர்**: தான் சம்பாதிக்கின்றதைச் சாஸ்திரத்தில் உபதேசித்த பேருக்குப் பகுத்துக் கொடுத்து ஐவகை உயிர்களையும் காக்கிறது சாஸ்திரங்களை அறிந்தபேர் சொன்ன தருமங்களுக்கெல்லாம் தலையான தருமம். (எ—று)

ஏ) *பழைய 2*: உண்பதனைப் பசித்த உயிர்கட்குப் பகுத்திட்டுப் பல உயிர்களையும் வருத்தப்படாமற் காத்தல், தருமநூலுடையார் தொகுத்துச்சொன்ன தன்மத்துளெல்லாம் தலைமையான தன்மமாம்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

இக்குறள் உணவைப் பகிர்ந்துண்டு உயிர்களைப் பாதுகாத்தல் வேண்டும் என்கிறது. இது 'ஈகை'யில் இடம்பெறலாம். ஈண்டு இடம் பெறுதல் இயைபுடையதாமோ எனின், கத்தி முதலிய கருவிகளாற் கொல்லுதலைப்போல, உண்ணாமையால் உயிர்களை இறக்க விடுவதும் கொலையாம் என்பார் இங்ஙனம் கூறினர் என்க.

தான் குத்திவெட்டிக்கொல்வதுதான் கொலை என்று எண்ணிவிடக்கூடாது. தன்னிடம் உணவுப்பொதியிருக்க, அவற்றைப் பகிர்ந்தளித்து உண்ணாமல்—தானே உண்டுவிட்டு உயிர்களையுயிர்துறக்க விடுதலும் பாவமாம் என்பார். இங்ஙனம் சொல்லினார் என்க.

இதனால் பொருளின்மையால் உயிர்கள் வருந்தப்பார்த்திருத்தல் மட்டும் பாவம் ஆகாது. உணவின்றி அவைகள் உயிர்துறக்கத் துடித்தலைக்காண்டலும் பாவமாம். அதனால் பகிர்ந்தளித்துஉண்க என்றவாறாம்; அங்ஙனம் உண்ணாமை கொலை எனின் இது கொல்லாமையின் இடம் பெறத்தக்கதாதலைக் காண்க.

'பல்லுயிர்க்கும்' என்றதால் மக்கள் உயிரையேயன்றி 'வாடிய பயிரைக்கண்ட போதெல்லாம் வாடினேன்' என்பதுபோல எல்லாவுயிர் களையும் ஓம்புதலே துறவுக்குரிய அறம் என்பதாம்.

'நூலோர்'

'*சமயத்தார் அனைவர்க்கும்*' *மணக்.*; '*அநாதியில் பலநூல் கண்டவர்களும் முனிவர்களும் எண்ணிமுடித்த எல்லா அறநூல்களிலும்*' *என்பர் காளிங்கர்.*

இராமலிங்கனார் 'தனக்குள்ள உணவில் பிறருக்கும் பகுத்துக் கொடுத்து உண்டு பலவுயிர்களையும் காப்பது நூல் எழுதினவர்கள் திரட்டிச் சொன்ன எல்லா அறிவுகளிலும் என்று கூறி இதுவரை அறிந்த அனுபவங்களிலிருந்து சேர்க்கப்பட்ட அறிவுகளில் எல்லாம் சிறந்தது' என விளக்கமும் தருவர். இவர் உரைப்போக்கு மக்களு

யிர்க்கே கொடுத்தலைக் குறிக்கிறது. மற்றையோர் உரைகள் புல் முதல் மக்களீறான அனைவர்க்கும் பகுத்தளித்தலைக்குறிக்கின்றன. இதுவும் துறவிக்குச் சிறந்ததாகும்.

ஒ) ஒப்புமைபகுதி:

'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்':

செல்வத்துப் பயனே ஈதல் —புறநா., 189:7

உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே —புறநா., 18:19

மணங்கமழ் பாக்கத்துப் பகுக்கும்
வளங்கெழு தொண்டி —அகநா., 10:12

... ... விழுத்தகை யவர்கள் அல்லாற்
பட்டது. பகுத்துண் பாரிப் பார்மிசை யில்லை கண்மர் —சீவக., 2925

உயிர்கள் ஓம்புமின் ... ... —வளையா., 23.

தீதிகந்து லைவகு பாத்துண்ணும் ஒருவனும் —திரி., 70.

33. 3. ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று. (௩௨௩)

உரைப்பகுதி:

அ) மணக்.: இணையின்றாக[1] நல்லது கொல்லாமை; அதன் பின்பே அணைய[2], பொய்யாமையும் நன்று என்றவாறு.

இது சொல்லிய அறத்தினும் பொய்யாமை நன்று; அதினும் நன்று கொல்லாமை என்றது.

ஆ) பரிதி.: எ-து தன்மநெறி எல்லாம் ஒன்றாகத்திரட்டியது அது; எது எனில் கொல்லாமை என்று அறிக; அதினும் பெரியது பொய் யில்லாமை என்றவாறு.

ஈ) காளி.: எ-து அனைத்தறங்களிலும் தனக்கு இணையின்றித் தானேயாகச் சிறந்தது யாதோ எனில், கொல்லாமையாகிய அறம் ஒன்றுமே; அதனால் இனிக்கொல்லாமை மேற்கொண்டு ஒழுகுவா னொருவன் இனி இதன்பின் செய்யவேண்டுவதும் ஒன்றுண்டு: அஃதாவது எஞ்ஞான்றும் பொய்யாமையைத் தப்பாமல் குளிக்கொள் ளல். அங்ஙனம் குறிக்கொண்டால் அது சாலத் தகைமையுடைத்து என்றவாறு.

---

1 இணையின்றாக—ஒப்பு இல்லையாக; 2 அணைய—சேர.

உ) பரிமேல்.: நூலோர் தொகுத்த அறங்களுள், தன்னோடு இணைப்பது இன்றித் தானேயாக நல்லது கொல்லாமை; அஃதொழிந்தால் பொய்யாமை அதன் பின்னே நிற்க நன்று.

நூலோர் தொகுத்த அறங்கள் என்பது அதிகாரத்தான் வந்தது[3] அதிகாரம் கொல்லாமையாயினும், மேல் 'பொய்யாமை யாற்றின்[4]' எனவும் 'யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை'[5] எனவும் கூறினாராகலின், இரண்டு அறத்துள்ளும் யாது சிறந்தது என்று ஐயம் நிகழுமன்றே; அது நிகழாமைப் பொருட்டு, ஈண்டு 'அதன் பின்சாரப் பொய்யாமை நன்று' என்றார்[6]. முற்கூறியது வலியுடைத்தாகலின் அதனைப் பின்சார நன்றென்றது, நன்மைபயக்கும்வழிப் பொய்யும் மெய்யாயும், தீமை பயக்கும் வழி மெய்யும் பொய்யாயும் இதனைப் பற்ற அது திரிந்து வருதலால்[7] என உணர்க. இவை மூன்றுபாட்டானும் இவ்வறத்தினது சிறப்புக் கூறப்பட்டது.

ஊ) கவிராசர்: சாஸ்திரங்களிலே சொன்ன தருமங்களிலே முந்தின தருமமாவது கொல்லாத தருமமே. அந்தத் தருமத்தின் பிறகுபொய் சொல்லாமல் இருக்கிறது நல்லது; (எ-று).

ஏ) பழைய 2.: ஒப்பில்லாத நன்மையானது கொல்லாமை; அப்படி நின்ற பின்பு நன்மையாவது பொய் சொல்லாமை.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக்குடவர், பரிமேலழகர், கவிராசர், பழைய 2, கா.சு., சொ.த., சி.இ. உரைகள் தனிச்சிறப்புடையன; 'கொல்லாமை' அதனையடுத்து எண்ணத்தக்கது 'பொய்யாமை' என்ற கருத்தை வழங்குகின்றன. *பரிமேலழகர்* இம்முடிபுக்கு ஏற்ற ஏதுவுங்காட்டி நிறுவுவர். *பரிதி*. 'தன்மநெறிகளை எல்லாம் ஒன்றாகத் திரட்டியது கொல்லாமை; அதினும் பெரியது பொய்சொல்லாமை' என்பர்: இவ்வுரையால் இவர் கொண்ட பாடம் 'மற்றது பின்சாராப் பொய்யாமை நன்று' என்றிருக்கலாமோ என்ற ஐயந் தோன்றுகிறது.

தேவநேயர், வாய்மை யதிகாரத்துப் பொய்யாமையைத் தலைமையாகக்கூறி, இவ்வதிகாரத்திற் கொல்லாமையைக் கூறுதல்

3 முன் 2ம் குறளில் வந்த 'நூலோர் தொகுத்தவற்றுள்' ஒன்றாக நல்லது என வருவித்து முடித்தது அதிகாரத்தான் வந்தது. சொல் வருவித்து முடிக்கும் வகையுள் முதலாவதாகக் கூறுவர் இ.கொ.கு., 89.

4 குறள் 297, 5 குறள் 300.

6 முற்கூறிய விதியிலும் பிற்கூறியது வலியுடைத்து என்பது ஒரு நியாயம். அதனை ஒட்டியுரைத்ததாம்,

7 இதனைப்பற்ற அது திரிந்து வருதலான்—'திரிந்து வருதலான்' என்றும் பாடமுண்டு.

முரணாதோ? எனின்' எனவிதந்து. 'சொல்வடிவான அறங்களிற் பொய்யாமை கூறிய ஆசிரியர் ஈண்டுச் செயல்வடிவான அறங்களில் கொல்லாமை கூறினார். அவ்விரண்டையும் ஒப்ப எண்ணும்போது மக்கட்கேயுரிய வாய்மையினும் எல்லாவுயிர்கட்கும் உரியது கொல் லாமை எனக் கண்டனர்' என்பர் இதில் வாய்மை மக்களுக்கே உரியது எனல் ஏனைய உயிர்கள் பொய்-மெய் எனப் பகுத்துணர மாட்டாமைப்பயன்பொருந்துவதாம். கொல்லாமையும் இது நன்மை அறம் என்று உணரத்தக்க மக்களுயிர்க்கே உரியதென்பதே ஏற் புடைத்தாம்.

காளிங்கர் 'ஒன்றாக நல்ல கொல்லாமையை மேற்கொண் டொழுகுகிறவன் அதன் பின் பொய்யாமையை மேற்கொள்ளவேண் டும்' என்பர். இவர் கருத்து கொல்லாவறம் நிலைபெறப் பொய்யா மையைத் தப்பாமல் மேற்கொள்கஎன்பதாம். இதுஓரளவு சிந்தனைக் கேற்றது; கொல்லாமை நிலைக்கப் பொய்யாமை வேண்டும்; பொய்த்தல் நிகழுமாயின் அதன்வழியாகக் கொலை முதலிய மாபாத கங்கள் தொடரும் என்றகருத்தினதாய் வேற்றுநயம் பயப்பதாகிறது

வ. சுப. மா. 'கொல்லாமைக்கு முதலிடந்தர வேண்டி முன்னர் முதலிடங்கொடுத்த பொய்யாமைக்கு நிலைபிறக்கிச் சொல்லும்' உரைகளை மறுத்து 'கொல்லாமைக்குச் சார்பான பொய்யாமையே காண் நாம் மெய்யாக்கண்டவற்றுள் நல்லது என்றவாறாம்' ஆத லால் இக்குறள் பொய்யாமை கொல்லாமைகட்கிடையே ஏற்றத் தாழ்வு கற்பிக்க வந்ததாகாது' என்பர்.

ஆகவே இதன்கருத்து 'மணியணியில் உள்ளிருக்கும் மணி போலக் கொல்லாமையின் பின் பொய்யாமை சாரக் கொல்லாமை ஒன்றாக நல்லதாகும்' என்பதாகும். பின் வருங்குறளுரையிற் *பரிதியார்* 'பெரியோராவார் ஒரு உயிர்வதை செய்யாமலும் பொய் சொல்லாமலும் மாங்கிஷம் புசியாமலும் இருப்பவரே' எனப் பொய் சாராமையே கொல்லாமைக்கு உயர்வளிப்பதுபோலக் கூறுதல் காண்க.

ஒ) ஒப்புமைப் பகுதி:

அருள்:

மெய்யி னின்றபின் வேள்வியும் வேண்டுமோ —*கம்பராமா.,* 1512

பேர்கெழு சிறப்பின் வந்த பெரும்புகழ் நிற்ப வையன்
தார்கெழு திரடோ டந்த புகழினைத் தழுவி யென்பார் —*கம்பராமா.* 1675

விழையேன் விழைவா வருண்மையம் மையினின்று
இழையேன் ... ... —*கம்பராமா.,* 4308.

உலகுடன் விளங்சவுய சீர்த்திநிலை கொள்ளின்
நிலையில்கதி நான்கினிடை நின்றுதடு மாறும்
அலகிறுய ரஞ்சினுயி ரஞ்சவரும் வஞ்சக்
கொலையொழிமி னென்றுநனி கூறினரறிந்தார் — வளை., 34

ஒன்றாக நல்லது உயிரோம்பல் —அறநெறி., 82

33. 4. நல்லா றெனப்படுவ தியாதெனின் யாதொன்றும்
கொல்லாமை சூழு நெறி. (௩௨௪)

உரைப்பகுதி:

அ) *மணக்.*, நல்லவழி என்று சொல்லப்படுவது யாது எனின், அது யாதோர் உயிரையும் கொல்லாமையைச் சிந்திக்கும் வழி என்றவாறு

இது நன்னெறியாவது கொல்லாமை என்றது.

ஆ) *பரிதி.*, 'நல்லார்' பாடம் எ-து பெரியோர் இவர் என்றது ஒரு உயிர்வதை செய்யாமலும் பொய் சொல்லாமலும், மாங்கிஷம் புசியாமலும், கோபந்தவிர்தலும், செபம் தவம் தானதன்மஞ்செய்தலும் ஆகிய குணங்கள் உடையாரே என்றவாறு.

இ) *காளி.*, எ-து உலகத்துத் தவநெறிகள் பலவற்றினும் சிறந்த நன்னெறிகள் என்று நூல்களால் எடுத்துச் சொல்லப்படுவன யாவையோ எனில், யாதானும் ஒன்றினையும் கொல்லாமையைக் கருதுநெறி ஒன்றுமே என்றவாறு.

உ) *பரிமேல்.*: மேற்கதி[1] வீடுபேறுகட்கு நல்ல நெறி என்று சொல்லப்படுவது யாது என்று வினவின் அஃது யாதோர் உயிரையும் கொல்லாமையாகிய அறத்தினைக் காக்கக்கருதும் நெறி.

யாதொன்றும் என்றது, ஓரறிவுயிரையும் அகப்படுத்தற்கு. காத்தல் வழுவாமற் காத்தல். இதனால் இவ்வறத்தினை உடையதே நன்னெறி என்பது கூறப்பட்டது.

ஊ) *கவிராசர்*: மோக்ஷம் பெறுகின்றதற்கு நல்லவழி யாதெனில் யாதொரு சீவனையும் கொல்லாமல் இருக்கிறதே நல்ல நெறிः (எ-று).

ஏ) *பழைய 2*: கதி[2] தரும் வீடுபேறு பெறுதற்கு நல்வழியாதென வினவில், யாதோர் உயிரையும் கொல்லலாகாது என்னும் நியமத்தினிற்பது[3] ஆகும்.

1 மேற்கதி—சுவர்க்கம் முதலிய கதிகள். 2 கதி—பேறு
3 நியமித்நினிற்பது - முறையின் நிற்பது.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

நல்லாறு'

'நல்லவழி' *மணக்.*; தவநெறிபலவற்றுள் நல்லநெறி' *காளி.*; 'யாதொன்றும் கொல்லாமை சூழும்நெறி மேற்கதி வீடு பேறுகட்கு நல்லநெறி' *பரிமேல்.*;

இவருள் *பரிமேலழகர்* 'மேற்கதியை இணைத்திருப்பதால் மேற்கதி இந்திரன் முதலிய இறையவர்பதங்கள். இதனால் வேள்விக்கட் கொலையையும் தவிர்த்தல் துறவுக்கு உரியது' என்பது இவர் கருத்தாதல் புலப்படுகிறது. அன்றியும் துறவி வேள்வியாற்றுதற்குரியன் அல்லனாதலானும், அவனால் வேண்டப்பெறுவது இந்திரன் முதலிய இறையவர்பதங்கள் அன்மையும் ஆய்ந்து மேற்கதி என்பது *பரிமேலழகர்* கருத்தாதல் இயலாமையின் ஏடெழுதுவோர் பாடங்கேட்டார்களின் இணைப்பாதல் கூடும். 'வேண்டேன் புரந்தரன் மாலயன் வாழ்வு' என்பதுதான் உண்மைத்துறவியின் உள்ளக்கிடக்கை.

ஒ) ஒப்புமைப்பகுதி:

கொல்லாமை சூழு நெறி:

கொலலாமை நன்று — *சிறுபஞ்ச.*, 51

உலகுடன் விளங்கவுயர் சீர்த்திநிலை கொள்ளின்
நிலையில்கதி நான்கினிடை நின்று தடு மாறும்
அலகிறுய ரஞ்சினுயிரஞ்சவரும் வஞ்சக்
கொலையொழிமி னென்றுநனி கூறின ரறிந்தார் — *-வளை.*, 34

எல்லா விரத மியல்பொக்கு மாயினும்
அல்லா விரத மனையா யவர்கட்குக்
கொல்லா விரதங் குடைமன்ன வாமெனின்
வெல்லா வகையில்லை வீங்கெழிற் றோளாய் — *-சூளா.*, 2092

ஓ) மேற்கோள் பகுதி:

மயிலை: 'ஒன்றொழி பொதுச்சொல்' என்ற சூத்திரத்தில் செப்பத்தால் பொருள் தருவன எல்லாம் வெளிப்படை என்றதற்கு மேற்கோள். (*நன்.* 268)

33.5. *நிலையஞ்சி நீத்தாருள் எல்லாம் கொலையஞ்சிக்*
கொல்லாமை சூழ்வான் தலை. (கூடு)

உரைப்பகுதி:

அ) *மணக்.*: மனைவாழ்க்கையில் நிற்றலை அஞ்சித் துறந்தவர்

எல்லாரினும் கொலையை யஞ்சிக் கொல்லாமையைச் சிந்திப்பான் தலைமை உடையவன்; இல்வாழ்க்கையில் நிற்பினும் என்றவாறு.

இஃது எல்லாத்துறவினும் நன்று என்றது.

ஆ) *பரிதி.*: எ—து ஆக்கை நிலையாமை அறிந்து, துறந்தாரினும் கொல்லாவிரதம் கொண்டவன் பெரியன் என்றவாறு; அது எப்படி என்றால் உயிர் நிலையில்லை என்று பிற உயிரைப்பார்த்துக் காத்தவன் பெரியவன் என்றவாறு.

(ஈ *காளி.*: எ—து வினைவழி எய்திவருகின்ற பிறவித்தன்மையை அஞ்சிப் பிறவாமைக்குக் காரணமாகிய தவநெறிஇயற்றுவார் எல்லாரினும் மற்று இக்கொலைத் தொழிலை உயிரழிவு என்று அஞ்சி மற்று இதனால் எஞ்ஞான்றும் கொல்லாமையைக் குறிக்கொள்பவனே பெரிதும் தலைமைப்பாடு உடையவன் என்றவாறு.

உ) *பரிமேல்.*: பிறப்புநின்ற நிலையை அஞ்சிப் பிறவாமைப் பொருட்டு மனைவாழ்க்கையைத்துறந்தார் எல்லாருள்ளும் கொலைப் பாவத்தை அஞ்சிக் கொல்லாமையாகிய அறத்தை மறவாதவன் உயர்ந்தவன்.

பிறப்பு நின்ற நிலையாவது, இயங்குவ[1] நிற்ப[2] என்னும் இருவகைப் பிறப்பினும் இன்பமென்பது ஒன்று இன்றி, உள்ளனவெல்லாம் துன்பமேயாய நிலைமை. துறவு ஒன்றேயாயினும், சமயவேறுபாட்டால் பலவாம் ஆகலின், 'நீத்தாருளெல்லாம்' என்றார். இதனான் இவ்வறம் மறவாதவன் உயர்ச்சி கூறப்பட்டது.

ஊ) *கவிராசர்*: சம்சார நிலைக்குப் பயப்பட்டு பிறவாமை வேண்டித் துறந்தவர்களுள் எல்லாம் கொல்லுகிறதற்குப் பயப்பட்டுக் கொல்லாத தருமத்தைக் கைக்கொண்டு நடக்கிறவனே பெரியவன்; (எ-று)

ஏ) *பழைய 2*: பிறவித்துன்பத்துக்கு அஞ்சி இல்லறத்தைவிட்டுத் தவஞ்செய்யத் துறவறமானவர்க்கு எல்லாம் நன்மை உடையவன் யாதென்னில், கொலை செய்யும் பாவத்துக்குப்பயந்து கொல்லாமல் நியமமாய் நிற்பவனே தலைமையான நன்மையுடையவன் (ஆவான்)

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'நிலையஞ்சி'

'மனைவாழ்விற்கு அஞ்சி' *மணக்.*; 'சம்சாரநிலைக்கு அஞ்சி' *கவிராசர்*; 'யாக்கையின் நிலையாமை நிலைக்கு அஞ்சி' *பரிதி*.

1. இயங்குவ— அசையும்பொருள்கள். 2. நிற்ப—அசையாப் பொருள்கள்.

'வினைவழி வருகின்ற பிறவித்தன்மைக்கு அஞ்சி' **காளி.**; 'பிறப்பு நின்ற நிலைமையை அஞ்சி' பரிமேல்; 'பிறப்பின் துன்பநிலைமை உணர்ந்து பயந்து' கா.சு.; 'பிறவியிற் கட்டுண்டு நிற்றலை அஞ்சி' சொ.சு.; 'வாழ்க்கையின் தன்மையைக் கண்டு அஞ்சி' மு.வ.; செந்துறைமுத்து; 'பிறவிநிலைக்கு அஞ்சி அதற்கு அஞ்சுதலாவது இருதிணையிலும் எல்லையின்றிப் பிறந்தறிந்து பிணிமூப்பு எய்திப் பசியும் பகையும் உடல்நோவுங் கொண்டு உழலுதல்' **தேவநேயர்**; 'உலகத்துன்பங்கட்கு அஞ்சி' இராமலிங்கனார்; 'தீமை நிலைக்கு அஞ்சி' குழந்தை; 'உலகநிலையாமையை அஞ்சி' **சி.இ.**

இவர்கள் அனைவரும் 'நிலை-நிற்றல்' அல்லது 'நிலைமை' எனப்பொருள் கண்டு அதன் சார்புகளைவிரித்து எழுதும் வகையில் பெரிதும் வேறுபடுகின்றனர். இவருள் மனைவாழ்க்கையை யஞ்சித் துறந்த என்பது வாழத் தெரியாமையால் விளையுந் துறவு எனவும் கருதப்பெறுமாதலின் 'யாக்கை உலகம் இவற்றின் நிலையாமைக்கு அஞ்சி' என்ற உரைகளும், துறவியின் இலக்குப் பிறவியற்றுப் பெருநிலைபெறுதலேயாதலின் 'பிறவிக்கு அஞ்சி' என்ற உரைகளும் சிறந்தன.

பரிமேலழகர் பிறப்பு நின்ற நிலைக்குத் தரும் விளக்கத்துள் 'இயங்குவ நிற்பவான இருவகைப்பிறப்பினும் இன்பமேயில்லாமல் உள்ளன எல்லாம் துன்பமேயான நிலை' என்பது கருத்து. நல்வினை தீவினையாகிய இருவகை வினைப்பயன்களையும் நுகரவே விளைவது பிறப்பாகலானும், அவற்றுள் ஒன்று இன்பமாகலானும், 'இருள் சேரிருவினையும் சேரா' என்னுங் குறளுரையில் 'நல்வினை பிறத்தற்கேதுவாதற் குற்றம் ஒன்றுமேயுடையதாய் எடுத்தபிறவியில் இன்பமே பயப்பது' எனப்பரிமேலழகரே கருதுதலானும் 'மானுடன் முதல் உளவறு பிறப்பூடும் சேருமின்பமொன்றில்லை என்பது பிரத்தியக்கமாம்' என்ற வைராக்கிய சதகமுடிவு பிராரத்தவினையாக வரும் இன்பத்தை மறுத்ததன்று. அது சிற்றின்பமாய்ப் பேரின்பை நாடும் துறவிக்கு ஏலாமையானும் அவனுக்கு வைராக்கியம் பிறத்தல் வேண்டியும் கூறியதாம் என்க. வருங்குறளிலும் பரிமேலழகர் 'மிகப்பெரிய அறஞ்செய்தார் அதன் பயனை அனுபவிப்பார்' என்றல் காண்க. உள்ளன எல்லாம் இன்பமேயில்லாமல் துன்பமேயான நிலை என்பது சிந்தனைக்குரியதென்க.

சமய வேறுபாட்டால் துறவுவேறாதல் துறவுக்குரிய சடங்குகளும் ஒழுக்கங்களும் வேறுபடுதல். 'கொன்றதை உண்ணலாம்' என்ற பௌத்த பிக்குவின் துறவு சைனத் து ;வியாலும், ஏனையோராலும் வெறுக்கப்படுதல் போல' கோ.வ. 'துறவு ஒன்றாயினும் அறியாமை,

ஆற்றாமை, தொழிற் கேடு இவற்றால் மூன்றாகிப் பின்பு வைராக்கியம் ஞானம், ஞான வைராக்கியம் என நான்காம் என்று *பரிவிராஜ* கோபநிடதம் கூறுவதை எடுத்துக்காட்டுவர்.

'கொலையஞ்சி'

'கொலையான் விளையும்பாவத்திற்கு அஞ்சி' எனத்தொழிலாகு பெயராக நின்றது. 'சூழ்வான்-சிந்திப்பான்' *மணக்.*; 'சூழ்க் கொள்பவன் மறவாதவன் எனப்பல உரைகளைக்காண்பார் ஆயினும் சூழ்தல் ஆராய்தலாதலின், கொலைப்பாவம் மாற்றான்போல எவ்வெவ்வகையாக வருதல் கூடும் என்பதனை நுணுகி ஆய்தலைச் செய்வான் என்ற பொருள் சிறக்கும்.

மணக்குடவர்உரை 'எல்லாத்துறவோரினும் கொல்லாமை சூழும் இல்வாழ்வான் தலைமையுடையவன்' என்னும் கருத்தினது. துறவியலில் இல்வாழ்வான் தலையாதல் கூற வேண்டாமை கருதத்தக்கது.

ஒ) ஒப்புமைப்பகுதி :

முற்றும்:

கொன்றான் நுகரும் கொடுமையை யுண்ணினைந்த
தன்றே யொழிய விடுவானேல் — என்றும்
இடுக்கண் எனவுண்டோ இல்வாழ்க்கைக் குள்ளே
படுத்தாளுந் தன்னைத் தவம். —*அறநெறி., 61*

33.6. கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாள்மேல்
செல்லா துயிருண்ணுங் கூற்று. (௩௨௬)

உரைப்பகுதி

அ) *மணக்.*: கொல்லாமையை விரதமாக[1]க்கொண்டு ஒழுகுமவன் வாழ்நாளின்மேல், உயிருண்ணும் கூற்றுச் செல்லாது என்றவாறு.

ஆ) *பரிதி.*: எ-து கொல்லாவிரதம் நிலைபெற்றவன் மேலே யமன் வர அஞ்சுவான் என்றவாறு.

ஈ) *காளி.*: எ-து கொல்லாமையாகின்ற சிறந்த அறத்தினைத் தன்னிடத்து என்றும்கொண்டு இடைவிடாது நடாத்துகின்றான் யாவன்? அவனது வாழ்நாள்மேல் சென்று அடராது[2] மற்று ஏனை உயிர் உண்ணும் கூற்றானது என்றவாறு.

---

1. விரதமாக-நோன்பாக; 2. அடராது-வருத்தியடையாது.

உ) *பரிமேல்.*: கொல்லாமையை விரதமாக மேற்கொண்டு ஒழுகுவானது வாழ்நாளின் மேல், உயிர் உண்ணுங்கூற்றுச் செல்லாது.

மிகப்பெரிய அறஞ்செய்தாரும் மிகப்பெரிய பாவஞ்செய்தாரும் முறையானன்றி இம்மைதன்னுள்ளே அவற்றின் பயன் அனுபவிப்பர் என்னும் அறநூல் துணிபுபற்றி' இப்பேரறஞ்[3] செய்தான் தானும் கொல்லப்படான்; படானாகவே அடியிற்கட்டிய வாழ்நாள் இடையூறு இன்றி எய்தும் என்பார், 'வாழ்நாள்மேல் கூற்றுச் செல்லாது' என்றார். செல்லாதாகவே காலம் நீட்டிக்கும், நீட்டித்தால் ஞானம் பிறந்து உயிர் வீடுபெறும் என்பது கருத்து. இதனான் அவர்க்குவரும் நன்மை கூறப்பட்டது.

ஊ) *கவிராசர்*: கொல்லாமையாகிய விரதத்தைக் கைக்கொண்டு நடக்கிறவனுடைய ஆயுளை எமன்கொண்டு போகமாட்டான்; (எ-று).

ஏ) *பழைய 2*: கொல்லாமையை விரதமாக மேற்கொண்டு நடப்பவன் வாழ்நாளின் மேல் உயிருண்ணும் கூற்று செல்லாது.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'கூற்றுச் செல்லாமைக்கு' *மணக்குடவர்* காட்டும் காரணம், 'பிறவாமை உண்டாம் ஆதலால் கூற்றுச் செல்லாது' என்பது. 'யமன் அஞ்சுவான்' என்பர் *பரிதி.*; *பரிமேல்*; *மணக்.*, கருத்துக்கே விளக்கம் வாயிலாக நம்மை அழைத்துச் செல்வர். 'கொல்லாதவனுக்குப்பாவத்தான் ஆகும் ஆயுள் குறைவு இல்லை' என்பர் *கா.சு.*

சொ.த., *பரிமேலழகரை* ஒட்டி விளக்கந்தந்து 'கொல்லாமையிற் சிறந்த துறவிக்குரிய இம்மைப்பயன், உரிய காலம் வரை வாழ்ந்து ஞானம் பெறுதல்' என்றும், 'மறுமைப்பயன் வீடுபேறு' என்றும் கூறுவர்.

இராமலிங்கனார் 'கொல்லாமை மேற்கொண்டொழுகுமவனுடைய வாழ்நாள்மேல் உயிரை வதைத்து மென்று தின்னுகின்ற எமன் வாரான்' எனப்பொழிப்புத்தந்து, 'கொல்லும் போது அதனுடல் பதைபதைத்துத் துடிதுடித்துத் தவிக்கிறது' அதுபோலவே இவனையும் எமன் துடிதுடிக்கக் கொன்றுதின்னுவன். பிற உயிர்களைத் துடிக்கச் செய்தலால்வந்த பாவங்கள் மரண காலத்தில் இவனையும்

3. இப்பேரறம் - கொல்லாமை.

துடிக்கச்செய்யும். கொல்லாமை சூழ்வாற்கு அத்துன்பங்கள் இல்லை என்பதாம்' எனக் கருத்துக்கொணருவர்.

இவ்வுரைகளையும் குறளமைதியையும் நோக்கும் போது, கொல்லா விரதம் பூண்டவனுக்கு அகாலமரணம், அதாவது, கொல்லப்படுதல் முதலியவற்றால் நிகழும் மரணம் இல்லை என்றேனும் மீட்டும் பிறவியில்லாமையால் எமனுக்கு வேலையேயில்லை என்றேனும் கருத்தைப் பயக்கும் உரைகள் கொள்ளத்தக்கன ஆகலாம்.

ஓ) ஒப்புமைப்பகுதி:

முற்றும்:

வேள்விவாய்க் கண்படுத்தும் வெவ்வினைசெய் யாடவர்கை
வாளின்வாய்க் கண்படுத்தும் வாரணத்தின் ஈருரிபோல்
கோளிவெற்பு களிரிவாய்க் கண்படுத்தும் இன்னணமே
நாளுலப்பித் திட்டார நமரலாதார் எல்லாம் *சீவக.,* 2888

கூற்ற மில்லையோர் குற்றம் இலாமையால் -*கம்பராமா.,* 70

ஓ) மேற்கோள்பகுதி:

நச்.: யானையின் பசுந்தோல் பிறர் உடம்பில் பட்டால் கொல்லும் என்று உணர்க. 'கொல்லாமை ... ... கூற்று' என்றார் பிறரும். (*சீவக.* 2787.)

சுவாமி: 'கொல்லாமை மேற்கொண்டு ஒழுகுவான்' மறைச்சொல் விதிப்பொருள் தந்தது. (இ.கொ. 77.)

33.7. தன்னுயிர்க் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை. (௩௨௭)

உரைப்பகுதி:

அ) மணக்.: தன்னுயிர் நீங்கிலும் செய்யாது ஒழிக; தான் பிறிது ஒன்றினுடைய இனிய உயிரை விடுக்கும்[1] தொழிலினை என்றவாறு.

உயிர்க்குக் கேடு வருங்காலத்து நோய்க்கு மருந்தாகக் கொல்லுதல் குற்றம் அன்று என்பார்க்கு, இது கூறப்பட்டது.

ஆ) பரிதி.: எ-து தன்னுயிர் துறக்கும் காலமாகினும், இது பிழைக்கும் என்று, ஆடு, கோழி, பன்றியினைப் பிரார்த்தனை[2] செய்வான்

1. விடுக்கும்-ஒழிக்கும், விடும் என்பதன் பிறவினைவாய்பாட்டுச் சொல்,
2. பிரார்த்தனை-கடவுளர்க்கு நேர்த்தி செலுத்துவதாக வேண்டிக்கோடல்.

அது ஏது எனில், அந்தப் பிரர்ணனாலே, தன் பிராணன் பிழைப்பதா வது தீனக்குள்ள வாணாள்[3] தப்பாதே தான் வீண்பாவம் எய்த வேண்டாம் என்றவாறு.

ஈ) *காளி*.: எ-து. பிறிதொன்றுவந்து தன்னுயிரை விடுவிப்பதாயி னும் தான் மற்று அதன் பொருட்டாக வெகுண்டு இனிய அவ்வுயிரின் காரணம் கொலைவினை அஞ்சும் பண்பின்றாகிய வினையினைச் செய்யற்க என்றவாறு.

உ) *பரிமேல்*.: அது[4] செய்யாவழித் தன்னுயிர் உடம்பின் நீக்கிப் போம் ஆயினும், தான் பிறிதோர் இன்னுயிரை அதன் உடம்பின் நீக் கும் தொழிலைச் செய்யற்க.

தன்னை அது கொல்லினும் தான் அதனைக் கொல்லற்க என் றது, பாவம் கொலையுண்டவழித் தேய்தலும் கொன்றவழிவலுத்தலும் நோக்கி இனித்தன்னுயிர் நீப்பினும் என்பதற்குச் சாந்தியாகச் செய் யாதவழித் தன்னுயிர் போமாயினும் என்று உரைப்பாரும் உளர்[5]; பிற செய்தலும் ஆகாமையின், அஃது உரையன்மையறிக.

ஊ) *கவிராசர்*: தன்பிராணன் போனாலும் தான் பிறிதொரு சீவ னைக் கொல்லாமல் இருக்கவேணும்; (எ-று).

ஏ) *பழைய* 2: தன்னுயிரை அது நீக்கச் செயினும், தான் பிறிதின் உயிரை நீக்கலாகாது; ஆதலால் உயிரைநீக்கும் கொடிய உயிர்களை யும் கொல்லாது ஒழிக என்றது.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக்குடவர் உரை 'நோய்க்கு மருந்தாகக்கூட உயிர்க்கொலை கூடாது' என்னும் கருத்தினது. பரிதியார் உரை 'இறுதி வருங் காலத்தில் சாந்தியாக ஆடு கோழிகளைப் பலிகொடுத்தலை விலக் கும்' கருத்தினது. *மு. வ.*, இராமலிங்கனார் இவர்களும் இக் கருத்தினரே.

காளிங்கர், பரிமேலழகர் உரைகள் 'பிற உயிர்கள் தன்னைக் கொல்லவரினும் தற்காப்புக்காகவும் கொல்லுதலை விலக்குவன,' *கா.சு.*, சொ. த. இவர்களும் இக்கருத்தினரே.

---

3. வாணாள்-வாழ்நாள். மரூஉமொழி.
4. அது-பிறிதொரு பிராணியைக் கொல்லுதல்.
5. இவ்வாறு உரைப்பவர் பரிதியார்

தேவநேயர் 'பிறிதின் உயிர்நீக்கும் வினை தன்னுயிர் காக்கப் பிறிதோருயிரைக் கொல்லுதல், மருந்துக்காகக் கொல்லுதல் தன்னைத் துரத்திவரும்போது தற்காப்புக்காகக் கொல்லுதல் என மூன்றாம் என்றும், எந்நிலையிலும் கொல்லாமையே சிறந்தது' என்றும் கூறுவர். குழந்தை 'நோய்க்கு மருந்தாகவும் உடல்வலிக்காகவும் ஊனுண்ணக் கொல்லுதலை விலக்குவது இக்குறள்' என்பர். உடல்வலிக்காக உண்ணப் புலாலுண்ணாமையில் விலக்கப்பட்டமை காண்க. மணக்குடவர் 'நீங்கினும்' என உரை காண்பதால் பாடம் 'நீங்கினும்' எனக் கொண்டிருப்பரோ எனத் தோன்றுகிறது.

ஒ) ஒப்புமைப்பகுதி:

முற்றும்:

''என்னுயிர் நீத்தவேனும் யானுயிர்க் குறுதிசூழாது
என்னுயிர்க் கரணம்நாடி யானுயிர்க் கிறுதிசெய்யின்
என்னை யிவ்வுலகு காவல் ... *யாசோ. 139*

ஓ) மேற்கோள் பகுதி:

பெருந்தே: மறுத்தலுக்கு மேற்கோள். (*வீரசோ- 180 உரை*).

33.8. நன்றாகும் ஆக்கம் பெரிதெனினும் சான்றோர்க்குக்
கொன்றாகும் ஆக்கம் கடை. (௩௨௮)

உரைப்பகுதி:

அ) மணக்.: நன்மையாகும் ஆக்கம் பெரிதேயாயினும் ஒருயிரைக் கொன்று ஆகின்ற ஆக்கம் உயர்ந்தோர்க்கு ஆகாது என்றவாறு.

இது பெரியோர் வீடுபேற்றை விரும்பிக் கன்மத்தை[1] விடுத்தலால், வேள்வியின் வரும் கொலையும் ஆகாது என்றது.

ஆ) பரிதி.: எ-து ஒரு உயிரைக் கொன்றால், இதனாலே ஆக்கம் வரும் என்றாலும், அப்படிப் பெற்ற செல்வமும் சடுதியிலே[2] கெடும் என்றவாறு.

இ) காளி.: எ-து ஒன்றின் கொலையானது எக்காலமும் கேடின்றி இனிதாகிய ஆக்கத்தைப் பெரிதும் பயக்கும் என்று அறநூல் சொல்லினும் துறவோர்க்கு ஒன்றினையும் கொன்றாகுவதோர் ஆக்கம் சாலக் கடை[3] என்றவாறு.

---

1. கன்மம் —வினை; 2. சடுதியிலே -விரைவில் 3. சாலக்கடை-மிகுதியும் கடையானது

இனி மற்று இத்துறவோர்க்குக் கொல்லாமை என்னும் குறிக்கோள் உண்டாயிற்று. உடம்பும் உயிரும் உடன்வாழு நிலை அழிதல் அஞ்சி அன்றே; இதனால் அது காரணமாகக் கொண்டு அனைத்து வகைப் பட்ட உடம்பும் உயிரும் வினைவழி வினைவழிப் பிறந்துவருகின்ற நிலையாமையைத் தேர்தலும் அவரது நிலைக்கு உரித்தாகலான், மற்று இதன் பின்னரே அதனை[4] அறிவிக்கின்றது.

உ) *பரிமேல்*: தேவர் பொருட்டு வேள்விக்கண் கொன்றால் இன்ப மிகுஞ் செல்வம் பெரிதாம் என்று இல்வாழ்வார்க்குக் கூறப்பட்ட தாயினும், துறவான் அமைந்தார்க்கு ஒருயிரைக் கொல்லவரும் செல்வம் கடை.

இன்பமிகும் செல்வமாவது தாமும்[5] தேவராய்த் துறக்கத்துச் சென்று எய்துஞ் செல்வம். அது[6] சிறிதாகலானும், பின்னும் பிறத் தற்கு ஏதுவாகலானும், வீடாகிய ஈறிலின்பம் எய்துவார்க்குக்[7] 'கடை' எனப்பட்டது. துறக்கம் எய்துவார்க்கு ஆமாயினும் வீடுஎய்து வார்க்கு ஆகாது என்றமையின், விதிவிலக்குகள்[8] தம்முள் மலை யாமை விளக்கியவாறாயிற்று. இஃது இல்லறமன்மைக்குக்

---

4. அதனை--நிலையாமை என்ற அடுத்த அதிகாரத்தை; 5. வேள்வி செய்த தாமும்

6. அது--சுவர்க்கவின்பம்; 7. யான் எனது என்னும் விடுதலாகிய முடிவில்லாத இன்பத்தை அடைவார்க்கு; 'தியவசுரர் பகையுண்டு செற்ற மார்வ மிகவுண்டு,நோயுண் டனங்கனாருண்டு நோய்கட் கெல்லாந் தாயான, காய முண்டு கைதொழவேன் டினரு முண்டு கற்பத்தே, மாயுந் தன்மை யுண்டானால் வானோர்க் கென்னை வளனுண்டே' என்று கூறியுள்ளவாறு சுவர்க்கவின்பம் உண்மையாகப் பார்க்கு மிடத்துத் துன்பமய மாகவே யிருத்தலின். அது(சுவர்க்கவின்பம்)கடையாயிற்றெனக.

8. விதிவிலக்குகள்--வேள்வியினிடத் தொன்றனைக் கொல்லுதல் இல்லறத்தார்க்கு விதியாயும் துறவறத்தார்க்கு விலக்காயுமிருத்தலின், விதிவிலக்குகள் தம்முள் மாறுபடவில்லையென்க. ஒரு காரியத்தில் பிரவிருத்தியை உண்டுபண்ணும் வாக்கியம் விதியெனப்படும். அது சுவர்க்கத்தில் விருப்பமுடையான் சோதிஷ்டோமஞ் செய்யக் கடவன் என்றாற்போல்வது. ஒரு காரியத்தில் நிவிர்த்தியையுண்டுபண்ணும் வாக்கியம் விலக்கெனப்படும். அது கள்ளுண்டல் கூடாது என்றாற்போல்வது. இங்கு இல்லறத் தான் வேள்வி புரியக்கடவன் என்பது விதி; துறவறத்தான் வேள்வி புரியாதிருக்கக் கடவன் என்பது விலக்கு இல்லறத்தார்க்கு வேள்விபுரிதல் சிறப்பாயும் துறவறத் தார்க்கு அது செய்யாதொழில் சிறப்பாயும் இருக்கின்றனவென்க. மனுதர்ம சாஸ் திரம் சந்நியாச தருமத்தைக் கூறுமிடத்துத் ''தேவர், இருஷி, பிதிரக்களிடத்தில் மூன்றுகடனுடன் மனிதன் பிறக்கிறான். அவற்றுள், யக்ஞயத்தால் தேவர்களுக்கும், பிள்ளைபெறுவதாற் பிதிர்க்களுக்கும், வேதமோதுவதால் இருஷிகளுக்கும் கடனைத்தீர்த்துச், சோதிட்டோம முதலிய யாகங்களைச் சக்திக்குத் தக்கவாறு செய்து பின்பு மோட்சத்திற்குபயோகமான சந்நியாசத்தில் மனம் வைத்தல் வேண்டும்'' என்றும், ''ஹிம்சை செய்யாமையாலும், இந்திரியங்களுக்கு விஷயப் பற்றில்லாமையாலும், நித்திய கர்மானுஷ்டானஞ் செய்வதாலும், சாந்தராயணாதி தவஞ்செய்வதாலும், பெரியோர்க ளிவ்வுலகத்தில் மோட்சத்தைச் சாதிக்கிறார்கள்'' என்றும் கூறுவதுமிங்கு நன்கு சிந்திக்கத்தக்கதாம். இம்முறைமறியாது 'நன்றாகு மார்க்கம்' என்னு மிக்குறள் சமணமதத்திற்குச் சார்பாய் உள்ளதென்று கூறுவாரு முளர்.

காரணம்[9]. இவை இரண்டுபாட்டானும் கொலையது குற்றம் கூறப் பட்டது.

ஊ) *கவிராசர்*: தேவர்கள் பொருட்டாக யாகத்திலே சீவனைக் கொன்றால் வெகு செல்வம் வரும் என்று சொன்னாலும் அறிவுள்ள வர்களுக்குப் பாவம் வந்து கடையான பிறப்பிலே பிறப்பிக்கும். (எ-று.)

ஏ) *பழைய* 2: தேவர் பொருட்டு வேள்விக்கட் கொல்லுதல் இன்ப மிகுஞ்செல்வம் பெரிதாம் என்று இல்வாழ்வார்க்குக் கூறப்பட்டதாயி னும் துறவறமுடைய பெரியோர்க்கு ஓருயிரைக் கொன்றதனால் வரும் செல்வம் கடையாம்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'துறவிக்கு வேள்வியை ஒழித்ததாகக்' கருதுபவர்கள் *மணக்.*, *பரிமேல்.*, *கா.சு.*, *சொ.த*, *மு.வ.*, *சி.இ.*, முதலானோர். *காளிங்கர்* பொதுமையிற்' கருதுகிறார்.

'சான்றோன்' என்பதற்குத் 'துறவிகள்' எனப் பொருள்கொள் வர் ஏனைய உரையாசிரியர்கள் அனைவரும். *இராமலிங்கனார்* 'துறவறம் பூண்டவர்கள் அனைவரும் துறவிகள் அல்லர். இக்குறள் துறவி சான்றோனாவதற்கு வழிகூறுகிறது. விரதங்களை முடித்தவன் தான் சான்றோன்; அத்துடன் துறவறம் மேற்கொள்ளாத இல்லறத் தானும் சான்றோனாக இருக்கலாம். ஆதலால் சான்றோன் துறவி எனப்பொருள் கொள்ளுதல் தவறு. உயர்குணமுடையோர் அல்லது மேலோர் எனவே பொருள்கோடல் தகும்' என்பர். துறவொழுக்கத் தில் விரதம் ஞானம் இரண்டனுள் விரதங்களாகிய இயம நியமங் களின் இறுதிவரை வந்தோர்—நிலையாமையுணர்ந்து நிலையினவா கிய நிலைகளைத் துறவு மெய்யுணர்வு அவாவறுத்தல்களால் எய்த இருக்கும் ஞானப்பயிற்சியுடையாரைத் துறவி எனற் கிழுக்கின்று என எண்ணியே தொல்லாசிரியர்கள் 'துறவிகள்' என்றனர் போலும்.

9. இஃது (கொன்றாகு மாக்கங் கடையாதல்) இல்லறமல்லாமைக்குக் காரணமாமென்க. எனவே அது துறவறத்திற்குக் காரணமாயிற்று. எங்ஙனமெனின், வேள்வியாற் சித்திக்கும் சுவர்க்கவின்பத்தைக் கடையாகக் கொண்டவன் தலையாய வின்பம் யாதென விசாரித்து. அதனால் தலையாய வின்பத்தைப் பெறுவதற்பொருட்டு, அதற்குச் சாதனமான துறவறத்தை மேற்கொள்ளுதலினென்க. இம்மையின் பத்தையேயன்றிச் சுவர்க்க வின்பத்தையும் கடையாகக் கொள்ளுதலை இகபரபோக விராகமென்பர் சான்றோர்.

ஓ) ஒப்புமைப்பகுதி:

'கொன்றாகும் ஆக்கம் கடை':

கொலை கூடிவரும் அறம் கொள்ளன்மின் —வளை., 17

உயிர்க ளோம்புமின் ஊன்விழைந் துண்ணன்மின்
செயிர்க ணீங்குமின் செற்ற மிகந்தொரீஇக் —வளை., 23

முற்றும்:

உழக்கேயுண்டு படைத்து ஈட்டிவைத்து இழப்பார்க்கும் சிலர்கள்
வழக்கே எனில் பிழைக்கேம் என்பர் சுந்தரர். திருக்கே., 4

நன்குணர்ந்தார் என்பெறினும் கொல்லார் இயைந்து —சிறுபஞ்ச., 47

33.9. கொலைவினையர் ஆகிய மாக்கள் புலைவினையர் புன்மை தெரிவார் அகத்து (௩௨௯)

உரைப்பகுதி:

அ) *மணக்.*: கொலைத் தொழிலினை உடையாராகிய மாக்கள் பொல்லாமையை ஆராய்வாரிடத்து, தொழிற்புலையாராகுவர்[1] என்றவாறு.

இவரை உலகத்தார் கன்மசண்டாளர்[2] என்று சொல்லுவார்.

ஆ) *பரிதி.*: எ-து கொலை செய்வாரும், புலையரும் நிகராம்; பாவத்தின் சொரூபமாவது[3] புலையர் என்றவாறு.

ஈ) *காளி.*: எ—து கொலைத்தொழில் உடையராகிய மாக்கள், 'கடையாயின புலையரினும் இவரே புலைத்தொழில் உடையவர்' என்று சொல்லப்படுவார்; நூல்முறைமையான நூல்களில் குற்றங்கள் ஆராயும் சான்றோரிடத்து என்றவாறு.

உ) *பரிமேல்.*: கொலைத் தொழிலை உடையராகிய மாந்தர், அத்தொழிலின் கீழ்மையை அறியாத நெஞ்சத்தாராயினும், அறிவார் நெஞ்சத்துப் புலைத்தொழிலினர்.

கொலைவினையர் என்றதனான், வேள்விக்கண் கொலையன்மை அறிக. புலைவினையர் என்றது தொழிலால் புலையர் என்றவாறு. இம்மைக்கண் கீழ்மை யெய்துவர் என்பதாம்.

---

1. தொழிற்புலையர்
2. கன்மசண்டாளா } செயலால் இழிந்தோர்.
3. சொருபம்—சிறப்பியல்பு.

ஊ) *கவிராசர்:* கொலைத்தொழிலை உடைய மனுஷர்கள் குற்றங் களைத் தெரிந்தவர்களுக்குப் புலையர்களாம் (எ-று.)

ஏ) *பழைய 2:* கொலைத் தொழிலையுடைய மாந்தர் பெரியகுலமா யினும் புலைவினையுடைய கீழ்மக்களாம் அதன்பாவம் தெரிந்த வர்க்கு.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'இவரைக் கன்மசண்டாளர் என்று உலகம் சொல்லும்' என்ற *மணக்குடவர்* உரைக்குறிப்பு கொல்லாமையையும் அருளையுமே குறிக்கோளாகக் கொண்ட துறவி நிலைமாறிக் கொலை செய்வானா யின் அவன் நிலையில் துறவியாயினும் அதற்குரிய நியமத்தின் நில் லாமையால் சண்டாளனாகிறான் என்பதாகும்.

காளிங்கர், 'கொலைசெய்வான் இயற்கையே புலையன். துறவி யாகியும் கொலை செய்வானாயின் புலையரிற் புலையன்' என்னுங் கருத்துப்பட உரை சொல்லுகிறார்.

அவமதிப்பும் ஆன்றமதிப்பும் இரண்டும் மிகைமக்களால் மதிக்கற் பாலவாகலின் புன்மை தெரிவாராகிய உயர்ந்தோரால் இவர் புலை யரிற் புலையர் எனப்படுவார் என்றவாறாம்.

பரிமேலழகர் 'துறந்தும் கொலைசெய்வார் அக்கொலையின் கீழ்மையை அறியாத நெஞ்சத்தார் ஆயினும்' என்று வருவித்த உரை மிக நயம் பயப்பது; தன் குறை தனக்குத் தெரியாதாகையான் என்க.

'நன்றாகும் ஆக்கம்' என்ற குறளுரையிலும் 'துறந்தான் அதன் கண்ணும் கொலை செய்தல் கூடாது' என விலக்கியமையின், 'கொலைவினையர் என்றதனான் வேள்விக்கண் கொலையன்மை யறிக' என்றது.

'மாவும் மாக்களும் ஐயறிவினவே' எனப்படுதலின் 'துறந்தும் அருளுடைமை முதல் பல விரதங்களைப் பூண்டும் கொலை செய் தலின் அவனை மாக்கள் என்றது செறல்பற்றிக் கூறியதாம். புன்மை தெரிவாரகத்துப் புலைவினையர் என்றது புன்மையறியாதார் இதனைப் பாராட்டக்கூடும் ஆயினும் இழிதொழிலேயாம்' என்பது.

33. 10. உயிருடம்பின் நீக்கியார் என்ப செயிருடம்பின்
செல்லாத்தீ வாழ்க்கை யவர். (௬௬௦)

உரைப்பகுதி:

அ) மணக்.: ''செயிருடம்பூண் செல்லா'' பாடம். முற்பிறப்பின்கண் உயிரை உடம்பினின்று நீக்கினார் இவர் என்று பெரியோர்கூறுவார்; குற்றமான உடம்பினையும் ஊணுஞ்செல்லாத தீய மனை வாழ்க்கையினையும் உடையாரை என்றவாறு.

இது கொலையினால் வருங்குற்றம் கூறிற்று.

ஆ) பரிதி.: ஏ—து போனசென்மத்திலே கொலை செய்தவர் என்றறிக. வியாதியான சரீரமும் தரித்திரமும் உள்ளபேர் என்றவாறு.

ஈ) காளி.: 'உயிருடம்பு நீக்கியார்' பாடம். ஏ—து பிற உயிரை அவ்வுடம்பினின்றும் அவற்றின் துயர் கருதாது பிரித்திட்டவர் என்று சொல்லுப சான்றோர்; யாரை எனில் பின்பு தாம்உறும் துயரமானது உடம்பினின்றும் ஒருகாலும் நீங்காத கொடுநரகத்துள் வாழும் வாழ்க்கையினையுடையோரை என்றவாறு.

செயிர் என்பது குற்றம்.

உ) பரிமேல்.: நோக்கலாகா நோயுடம்புடனே[1] வறுமை கூர்ந்து[2] இழிதொழில் வாழ்க்கையினையுடையாரை, இவர் முற்பிறப்பின்கண் உயிர்களை அவை நின்ற உடம்பினின்று நீக்கினவர் என்று சொல்லுவர் வினைவிளைவுகளை அறிந்தோர்.

செல்லாவாழ்க்கை தீவாழ்க்கை எனக் கூட்டுக[3]. செயிருடம்பினர்[4] ஆதல் ''அக்கேபோல் அங்கையொழிய விரலழுகித் துக்கத் தொழுநோய் எழுபவே''[5] என்பதனாலும் அறிக. மறுமைக்கண் இவையும் எய்துவர் என்பதாம். இவை இரண்டுபாட்டானும் கொல்வார்க்கு வரும் தீங்கு கூறப்பட்டது.

---

1 நோக்கலாகா நோயுடம்பு—பார்க்கச்சகிக்காத பெருநோய் முதலிய கொடு நோயுடன் கூடிய உடல்; 2 வறுமைகூர்ந்த—வறுமைமிகுந்த.

3 தீ என்பதனை விசேடணமாகவுடைய வாழ்க்கை யென்றும் விசேஷியத்தைச் செல்லா என்பதனோடுங் கூட்டிச் செல்லாவாழ்க்கையென்று கொள்க. கொள்ளவே, செல்லாவாழ்க்கை யென்றும் தீ வாழ்க்கை யென்றும் கொள்ள வேண்டு மென்பதாயிற்று. செல்லாவாழ்க்கை—வறுமை மிகுந்த வாழ்க்கை; தீ வாழ்க்கை—இழி தொழிலையுடைய வாழ்க்கை. செல்லா வென்பது இங்கு வறுமையையுணர்ந்திற்று. செல்லாமை தரித்திரத்தையும் செல்லல் செல்வத்தையு முணர்த்துதலை நாலடியார் குடிப்பிறப்பில் ''செல்லா விடத்துங் குடிப்பிறந்தார் செய்வன, செல்லிடத்துஞ் செய்யார் சிறியவர்'' என்று கூறுவதனாலுமறிக.

அருளுடைமை முதல்[6] கொல்லாமையீறாகச் சொல்லப்பட்ட இவற்றுள்ளே சொல்லப்படாத விரதங்களும்[5] அடங்கும்; அஃது அறிந்து அடக்கிக் கொள்க. ஈண்டு உரைப்பின் பெருகும்.

ஊ) *கவிராசர்*: சீவன்களைக் கொன்றபேர் பார்க்கப்போகாத வியாதி யுடையவர்களாய்; கைகால் குறைந்து போகிற பெருவியாதியுடைய யோர்களும் நீசமான[7] தொழில்களை உடையவருமாய்ப் பிறப்பார்கள் (எ—று.)

எ) *பழைய 2*: 'என்பர்' பாடம். பார்க்கலாகாதநோய் உடம்புடனே வறுமையாகி இரந்து திரிவாரை இவர் முற்பிறப்பிற் கொலை செய்து உயிர்களை உயிர்வேறு உடம்பு வேறாக்கினவர் என்று சொல்வர். அப்பாவ வினையறிந்த பெரியோர்.

மல்லர்: எ-து குறைந்த உடம்போடே பொறுக்கக்கூடாத துன்பங் களுடனே வாழுகின்றவர்கள் தனக்குரிய உடம்பிலேயிருந்து உயிரை நீக்கிப் போட்டவர் என்று சொல்லுவார்கள் அறிவுடையார்; எ—று.

அறிவுடையான் ஒருவன் குஷ்ட வியாதியினாலாகிலும் இறந்த வியாதியினாலாகிலும் விஷக்கடியினாலாகிலுங் கை கால் விரல்கண் மூக்கு உதடு இது முதலான அவயவங்கள் குறைந்ததுகள் தரித் திரத்தையும் இது முதலான துன்பங்களை அனுபவிக்கிறதைக் கண்டால் இத்தனை கடினமான ஆக்கினை பெரிய பாதகங்களுக்கு வரும் என்கிறதனால் அவனைக் கொலை பாதகனாக்கும் என்று சொல்கிறதுக்கு ஏதுவாயிருக்கும் என்பது கருத்து.

நீக்கியார்—நீக்கினவர்கள், என்பர்—என்பார்கள்; செயிர்— குறை; தீ—பொல்லாதது; வாழ்க்கையவர்—வாழுகிறவர்கள்; செல்லா—செல்லாத.

ஐ) தொகுப்பும் குறிப்பும்

'இப்பிறவியில் தொழுநோய்பற்றிய உடலுடன் உணவு செல்லா மல் இரந்தோ இழிதொழில் செய்தோ வறுமையால் வாடுபவர்கள் முற்பிறவியில் கொலைசெய்தவர்கள் என்றறிக' என்பர் *மணக்குடவர், பரிதியார், பரிமேலழகர், கா.சு., சொ.த., தேவநேயர், குழந்தை* முதலியோர்.

---

4 செயிருடம்பினர்—குற்றமுள்ள உடம்பினர்.

5 நாலடியார், தீவினையச்சம் குறள். 3

6 அருளுடைமை— 25-ஆம் அதிகாரம்.

7 நீசமான—இழிவான.

'ஊண்செல்லா' எனப் பாடம் கொண்டு, 'உணவும் செல்லாத' என மணக்குடவரும், 'செல்லாத் தீவாழ்க்கை—துயரமானது உடம்பைவிட்டு ஒரு காலும் நீங்காதகொடுநரகில் வாழும் வாழ்க்கை' எனக் *காளிங்கரும்* கூறுவர்.

இப்பிறப்பில் எய்தும் துன்பங்களிலிருந்து முற்பிறப்பில் கொலை செய்தவர்கள் என்பதை உணரலாம் என்ற கருத்தமைந்த உரைகளே ஏற்புடையன.

ஒ) ஒப்புமைப் பகுதி:

முற்றும்:

அக்கேபோல் அங்கை ஒழிய விரலழுகித்
துக்கத் தொழுநோய் எழுபவே—அக்கால்
அலவனைக் காதலித்துக் கான்முறித்துத் தின்ற
பழவினை வந்தடைந்தக் கால் —*நாலடி.,123*

33. கொல்லாமை

	அறவினை	பகுத்துண்டு	ஒன்றாக	நல்லா	நிலையஞ்சி	கொல்லாமை	தன்னுயிர்	நன்றாகும்	கொலை வினையர்	உயிருடம்பின்
மணக்.	4	6	3	2	5	7	1	10	9	8
பரிதி.	1	3	2	10	4	9	8	5	6	7
பரிப்.	—	—	—	—	—	—	—	—	—	—
காளி.	1	4	3	8	7	2	9	10	6	5
பரிமேல்.	1	2	3	4	5	6	7	8	9	10

33—வது அதிகாரம் கொல்லாமை முற்றிற்று.

34. நிலையாமை

அதிகாரப்பொருள்:

ஞானம்

பரிமேல்.: இனி அவற்றின்[1] பயனாகிய ஞானங் கூறிய தொடங்கினார். ஞானமாவது[2] வீடுபயக்கும்[3] உணர்வு. அது நிலையாமை முதல் அவாவறுத்தல் இறுதியாக நான்கு அதிகாரத்துள் அடக்கப்பட்டது.

அ) *மணக்.:* நிலையாமையாவது மயக்கத்தினால் தான் என்று நினைத்திருக்கிற யாக்கையும் தனது என்று நினைத்திருக்கின்ற பொருளும் நிலைநில்லாமையைக் கூறல்.

ஆ) *பரிதி.:* நிலையாமையாவது செல்வம், யாக்கை, இளமை இதுகள் நிலையல்ல என்றவாறு.

உ) *பரிமேல்.:* அவற்றுள்[4] நிலையாமையாவது தோற்றமுடையன யாவும் நிலையுதலிலவாம் தன்மை. மயங்கியவழிப் பேய்த்தேரின்[5] புனல்போலத் தோன்றி மெய்யுணர்ந்தவழிக் கயிற்றில் அரவுபோலக் கெடுதலின் பொய் என்பாரும், நிலைவேறுபட்டு வருதலால் கணந்

---

1 அவற்றின்—கொல்லாமை வாய்மை முதலான விரதங்களின்

2 பாலென்பது பசுவின் பாலையே யுணர்த்துவதுபோல ஞானம் என்பது ஏனைப் பாச ஞான—பசுஞானங்களை உணர்த்தாது வீடுபயக்கும் பதிஞானம் ஒன்றையே உணர்த்திற்று.

3 வீடுபயக்கும்—வீடுபயப்பது ஞானமே என்பதனை, ஞானமலது கதி கூடுமோ? (தாயுமானவர்) ''ஞானத்தின்மிக்க அறநெறி நாட்டில்லை'' (திருமூலர்) கூறுவதான் அறிக.

4 அவற்றுள்-நிலையாமை முதலான நான்கனுள்.

5 மயங்கியவழிப் பேய்த்தேரிற் புனல் போலத் தோன்றி மெய்யுணர்ந்தவழிக்கயிற்றிலரவு போலக் கெடுதலின் உலகம் பொய் என்பார் அத்வைத வாதிகள்.

தோறும்[6] பிறந்திறக்கும் என்பாரும், ஒருவாற்றான் வேறுபடுதலும் ஒருவாற்றான் வேறுபடாமையின் நிலையுதலும் நிலையாமையும்[7] ஒருங்கே உடைய என்பாரும் எனப்பொருட்பேற்றி கூறுவார் பல திறத்தராவர்; எல்லார்க்கும் அவற்றது[8] நிலையாமைஉடம்பாடாக லின், ஈண்டு அதனையே கூறுகின்றார். இஃது உணர்ந்துழியல்லது பொருள்களின் பற்றுவிடாதாகலின், இது முன்வைக்கப்பட்டது.

உஉ) *கவிராசர்*: அஃதாவது தோற்றமாய் இருக்கப்பட்ட செல்வம், புத்திரர், உறவின் முறையார், பெண்சாதி, ஆடை, ஆபரணம் முதலானவைகள் நில்லா என்று அறிகிறது. இவைகளை நிலையென்று நம்புகிறது கானலைத் தண்ணீர் என்று நம்புகிறது போலாகும். புத்திரமித்திர களத்திராதிகளை[9] நன்றாய் விசாரித்துப் பார்த்தால் ஒன்றும் நிலையாய் இருக்கிறது இல்லை. இவைகளை நிலை அல்ல என்று அறிந்ததல்லாமல் ஞானம் பிறவாது. ஞானமாகிய அறிவு பிறந்தால் அல்லாமல் பற்றுவிட்டு நீங்கி விடுபெறமுடியாது. ஆதலால் சகலவஸ்துக்களையும் நிச்சயம் அல்ல என்று எண்ணவேண்டும் (எ—று.)

ஏ) *பழைய 2*: அஃதாவது தோற்றமுடையன யாவையும் நில்லாது இறந்துபோம் என்றது.

மல்லர்: அதாவது இவ்வுலோகத்திலே யுண்டானது எல்லாம் நிற்கிற தில்லை என்று அறிகிறது.

ஐ) *தொகுப்பும் குறிப்பும்*:

நூல்களாலும் ஆன்றோர் ஆளுமையாலும் விலக்கியனஒழிதலும், வேண்டுவன செய்தலுமாகிய விரதத்தின் பயன் தெளிந்த அறிவைப் பெறுதல். அங்ஙனம் தெளிந்த அறிவே ஞானம். அதனை நிலையாமை முதலாக அவா அறுத்தல் இறுதியாக நான்கதிகாரங்களால் உணர்த்துவர் ஆசிரியர். வீடுபெறுதற்குக் காரணம் முற்கூறிய விரதவழி நிற்றலும் இங்ஙனம் கூறிய ஞானநெறியிற் பயிற்றும் ஆதலின் அதனைக் கூறுகின்றார்.

'தோற்றமுள்ளன எவற்றிற்கும் நிலையாமையும் இயல்பு. அதனை உள்ளவாறு உணர்தலே நிலையான பொருள் எது? என்று

---

6 சித்தாந்த வாதிகள்; 7 நிலையுதலும் நிலையாமையும்
7 உலகம் சத்தியம் என்னும் ஏனைய சமயவாதிகள்.
8 அவற்றது-தோற்றம் உடையவற்றின்,
9 புத்திரமித்திர களத்திராதிகளை—புதல்வர் நண்பர் மனைவி முதலானோர்.

ஆய்ந்து அதனையடையத்தூண்டும் முயற்சி. இம்முயற்சி கைவரின், பொருள்களின்மீதுள்ள பற்றகலும்' என்பதைப் *பரிமேலழகர்* உரைக் குறிப்பு உதவுகிறது. *மணக்குடவர்* முதலிய தொல்லாசிரியர் மூவரும் 'உடலும், உடைமையும், இளமையும் நிலைத்தன அல்ல' என்பதில் ஒத்த கருத்தினராவர். *கா.சு.* முதலிய பிற்கால உரையாசிரியர்களிற் சிலரும் அதிகார இயல்பு சுருக்கி உரைப்பர். அவற்றுள் **சொ.த.** அதிகார இலக்கணம் *பரிமேலழகருரைக்கு* நல்லதொரு விளக்கமாக அமைவது.

34.1. நில்லா தவற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை. (௩௩௧)

உரைப்பகுதி:

அ) *மணக்:* நில்லாத பொருள்களை நிலைநிற்பன என்று நினைக் கின்ற புல்லிய அறிவுடைமை[1] இழிந்தது என்றவாறு.

எனவே பொருள்களை உள்ளவாறு காண ஒட்டாத[2] மயக்கத்தைக் கடிய வேண்டும்[3] என்றவாறாயிற்று.

ஆ) *பரிதி:* எ—து நில்லாத யாக்கையை நிற்கும் என்று கருதுவது புல்லறிவு என்று சொல்லப்படும் (எ—று.)

ஈ) *காளி:* எ—று இவ்வுலகத்தின்கண் உண்மை நோக்கில் யாவை யும் நிலையாவாயிருக்க அங்ஙனம் நில்லாதனவற்றை நிலை யுடையன என்று கருதும் அறியாமை, இயல்பு உணர்வோருக்கு எஞ்ஞான்றும் சாலக்கடை[4] என்றவாறு.

உ) *பரிமேல்.:* நிலையுதலிலவாகிய பொருள்களை நிலையுதலுடைய என்று கருதுகின்ற புல்லிய அறிவினை உடையராதல், துறந் தார்க்கு இழிபு.

தோற்றமுடையவற்றைக் கேடில என்று கருதும் புல்லறிவால் அவற்றின்மேல் பற்றுச்செய்தல் பிறவித் துன்பத்திற்கு ஏதுவாகலின், அது வீடெய்துவார்க்கு இழுக்கென்பது இதனால் கூறப்பட்டது. இனிப் புல்லறிவாளர் பெரும்பான்மையும் பற்றுச்செய்வது சிற்றின் பத்துக்கு ஏதுவாகிய செல்வத்தின் கண்ணும் அதனை அனுபவிக்கும் யாக்கையின் கண்ணுமாகலின், வருகின்ற பாட்டுக்களான் அவற்றது[5] நிலையாமையை விதந்து[6] கூறுப.

---

1 புல்லிய அறிவுடைமை—அற்பஅறிவுடைமை; 2 காணாஒட்டாத-காணச்செய்யாத
3 கடியவேண்டும்--நீக்கவேண்டும்: 4 சாலக்கடை-மிக இழிவானது.
5 அவற்றது.-செல்வம், உடல் இவற்றினது; 6 விதந்து--எடுத்துக்கூறி.

ஊ) *கவிராசர்:* நிலையில்லாத புத்திர மித்திரா களத்திராதிகளையும் செல்வங்களையும் நிச்சயம் என்றும், தனக்கு உதவும் என்றும் நினைக்கிறவர்கள் அறிவில்லாத மூடர்கள்; (எ—று.)

ஏ) *பழைய.:* நில்லாத பொருள்களை நிலையென்று நினைந்து ஆசை பற்றும் புல்லறிவாண்மை மேலான அறிவன்று கீழ்ப்பட்ட அறிவாம்.

மல்லர்:. நில்லாத காரியங்களை நிக்கும் என்று நினைக்கிறதுக்கு ஏதுவான புத்திக் குறைகளை உடையவனாயிருக்கிறது பாதகன் ஒப்பு (எ—று.)

இந்த லோகத்துச் செல்வங்கள் என்றைக்கும் நிக்கும் என்று நினைத்தால் அதின் பேரிலே பற்றுதலாயிருக்கிறதுக்குஏதுவாகையில் துறந்தவன் இச்சைகள் முகாந்திரமாக வருந் துன்பங்கள் எல்லாம் அனுபவிப்பான் என்கிறதினால் இப்படிப்பட்ட கொஞ்ச புத்தி அவனுக்கு வெகுகேடு என்பது கருத்து.

நிலையின்—நிலையுள்ள காரியங்களோடே, கூடின்—இன்பம். கூட்டம்; உணர்தல்—படித்தல்; புல்—இகழ்ச்சிக் குறிப்பு; அறிவாண்மை—அறிவு; கடை—குற்றம்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'நில்லாத யாக்கையை' என 'யாக்கையை' மட்டும் விதந்து கூறும் *பரிதியார்* உரை இக்குறட்கு உரையாகாது. இக்குறள் 'யாக்கை செல்வம் இளமையாகிய அனைத்தின் நிலையாமையையும் பொதுவகையான் உணர்த்துதலை' ஏனையோர் உரைகளாலும், பின்வரும் குறட்பாக்களாலும் துணியலாம்.

'இயல்புணர்வோர்-பொருட்பெற்றியுணர்வோராகிய துறந்தார்' என்பது *காளிங்கர்* கருத்துப்போலும், 'பொருள்களின் நிலையாமையைச் சிற்றறிவினரும் உணர்வர் அதுதானும் அறியாமை புல்லறிவு' என நயம் காண்பர் *சொ.த.*

மெய்யுணர்தலில் வரும் பொருளல்லாதனவற்றைப் பொருளென்றறிதல் மெய்ப்பொருளல்லாதவற்றை மெய் என்றுணர்தலாகிய மயக்கம். ஈண்டுக் கூறியது தோன்றி நின்றழியும் தன்மையாகிய பொருள்களை நிலைத்தன என்றறிதல். இரண்டுக்கும் வேறுபாடுண்மை காண்க.

தேவநேயர் 'பொருள்களின் வளர்ச்சி மாற்றம் தேய்வு அழிவு களைக்கண்டும் நிலையாமையை உணராதார்' என விளக்கந்தருவர். 'நிலையாமை உணர்வுதான் ஞானத்தின் தொடக்கநிலை' என்பர் இராமலிங்கனார்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

'நில்லாதவற்றை நிலையின என்றுணரும் புல்லறிவாண்மை':

சாதலும் பிறத்தல்தானும் தம்வினைப் பயத்தினாகும்
ஆதலும் அழிவுமெல்லாம் அவைபொருட்கியல்பு கண்டாய்
நோதலும் பரிவுமெல்லாம் நுண்ணுணர்வின்மை யன்றே
பேதைநீ பெரிதும் பொல்லாய் பெய்வளைத் தோளி என்றான் —சீவக.

ஒழிந்த பிறவற னுண்டென்பா ருட்க
அழிந்து பிறரவாம் வம்பப் பொருளை
இழந்து சிறிநானும் எய்தா தொழிந்தார்
அழிந்து பெருந்துயர் நோய்க் கல்லாப்பவரே'' —வளை., 36,

''போதர உயிர்த்த ஆவிபுகவுயிர்க் கிற்ற தேனும்
ஊதிய மென்றுகொள்வர் உணர்வினான் மிக்கநீரார்
ஆதலா னழிதன் மாலைப் பொருள்களுக் கழிதல்வேண்டா
காதலா னமுது மென்பார் கண்நனி களைய லுற்றார்'' —குண்டல., 7

''அழிவரும் அரசியல் எய்தி ... ...'' —கம்பராமா., 2298

''நின்றும் சென்றும் வாழ்வன யாவும் நிலைவாய்ப்
பொன்றும் என்னும் மெய்ம்மை உணாந்தாய் புலையாடற்கு
ஒன்றும் உன்னாய் ....'' —கம்பராமா., 3351

''பொய்த்தன்மைத் தாயமாயப் போர்வையை மெய்யென்று ணெ்ணும்
வித்தகத்தாய வாழ்வு வேண்டிநான் விரும்புகில்லேன்''
சுந்தரர். ஆரூர்., 9

''நிலையா எனச்சொல்லி நேர்ப பொருள்தூய
மலையோ ரனைய நன்மாட மெடுப்ப'' —நீல., 253

''எரிபுரை எழிலதாய இளந்தளி ரிரண்டு நாளில்
மரகத வுருவம் எய்தி மற்றது பசலை கொண்டு
சருகலை யாகி வீழ்ந்து சரிந்துமண் ணாதல் கண்டும்
வெருவிலர் வாழ்தும் என்பார் வெளிற்றினை விலக்கலாமோ''
—சூளா., 1847

34.2. கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று. (௩௩௨)

உரைப்பகுதி:

அ) *மணக்.*: கூத்தாட்டுக்[1] காண்டற்கு அவைக்கூட்டம் திரண்டாலொக்கும் பெருஞ்செல்வத்திரளும்; அந்த அவை எழுந்து போனாற்போலும் அது பேர்மாறும், (என்றவாறு.)

ஆ) *பரிதி.*: எ—து சந்தையிற் கூட்டம் நாலுபேரும் ஆறுபேறும் வந்து சந்தையில் காரியங் கண்டு மீண்டு போவார்கள்; அப்படியல்ல செல்வம். எப்படியென்றால், கூத்தாடல் பார்க்க நாலு பேரும் ஆறு பேறும் வந்து கூத்துக்கண்டு, கூத்துக் குலைந்த போது[2] ஒருக்காலே பிரிந்து ஓடுவார்கள். அதற்கு ஒக்குமே செல்வத்தின் கூட்டம், எப்படி என்றால் இவன் செய்த புண்ணியத்திற்குத் தக்கதாக இலட்சுமி இருப்பாள்; இவன் தவசு மாறி, இலட்சுமி போன பின்பு அக்கினி, கள்ளர், இராசா, ஆறு இவையிற்றினாலே செல்வம்போம்; இது அறிந்து உள்ளபொழுதே தன் மஞ்செய்வான் என்றவாறு.

ஈ) *காளி.*: எ—து கூத்து என்பதோர் காரணமாக, மக்கள் ஈட்டம்[3] வந்து கூடினாற்போலச் சிறிது நல்வினை என்பதோர் காரணமாகப் பொருளீட்டம் வந்துளதாய், மற்றும் கூத்து ஒழிவின் பின்னரே மக்கட்கூட்டம் பிரிந்தாற்போலச் செய்தவத்து இறுதிப் பின்னரே மற்று அப்பொருள் அழிந்து ஒழிதலும் அத்தன்மைத்து என்றவாறு.

விளிதல் என்பது ஒழிதல். குழாம் என்பது கூட்டம்.

உ) *பரிமேல்.*: ஒருவன் மாட்டுப் பெரிய செல்வம் வருதல் கூத்தாடுதல் செய்கின்ற அரங்கின்[4]கண் காண்போர்குழாம் வந்தாற்போலும்; அதனது போக்கும் அக்கூத்தாட்டு முடிந்தவழி அக்குழாம் போயினாற் போலும்.

பெருஞ்செல்வம் எனவே துறக்கச் செல்வமும் அடங்கிற்று. போக்கும் என்ற எச்சவும்மையான், வருதல் என்பது பெற்றாம்[5]. அக்குழாம் கூத்தாட்டுக் காரணமாக அரங்கின்கண் பல்திறத்தால் தானே வந்து, அக்காரணம் போயவழித் தானும் போமாறு போல,

---

1 கூத்தாட்டு-கூத்தாடுதல். ஆட்டு—ஆடு என்னும் முதனிலைதிரிந்த தொழிற்பெயர்.
2 குலைந்தபோது-கலைந்தபோது; 3 ஈட்டம்-கூட்டம். 4 அரங்கு-மேடை,
5 'போக்கும்' என்ற இறந்தது தழீஇய எச்சவும்மை முன்னர்ச் சிறிது சிறிதாக வந்தமையைக் காட்டுவது;

செல்வமும் ஒருவன் நல்வினை காரணமாக அவன்மாட்டுப் பல்திறந் தால் தானே வந்து, அக்காரணம் போயவழித் தானும்[6] போம் என்ற தாயிற்று.

ஊ) *கவிராசர்:* ஒருவனுக்கு ஐசுவரியம் வருகிற(போது) கூத்தாடு கிற இடத்திலே மனிதர் வந்து கூடுகிறாப்போல வந்து கூடும்; ஐசுவரியம் போகிறபோது கூத்து முடிந்தவுடனே அந்த மனிதர்கள் எல்லாம் ஒரு கணத்திலே போனாற்போலப் போம் (எ—று.)

ஏ) *பழைய 2:* ஒருவரிடத்துப் பெருஞ்செல்வம் வருதல், கூத்தாடு மிடத்துக் காண்போர் கூட்டம் வந்து கூடியது ஒக்கும்; அச்செல்வம் போவதும் அக்கூத்தாட்டுக் காணபோர் கூத்து முடிந்த உடனே கலைந்து போவதனை ஒக்கும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

கூத்தரங்கில் வந்துகூடும் கூட்டத்திற்கும், அதுபோமாற்றிற்கும் *மணக்குடவர்* உரையைக் காட்டிலும் *பரிதி., காளி., பரிமேல்.* உரைகள் மிக விளக்கமாகவும் நயமாகவும் கருத்துக்களை வழங்கு கின்றன. 'பெருஞ்செல்வம்' எனவே 'துறக்கச் செல்வமும் அடங்கும்' என்ற *பரிமேலழகர்* உரை, துறக்கச் செல்வம் சிறிதுசிறிதாக வந்து சேர்வதும் இல்லை; கழிவதுமில்லை; பசுபுண்ணியம் மிகுந்தவழி மறு பிறப்பில் விண்ணுலகில் ஒருசேர வந்து இயையும்; புண்ணியம் உலர்ந்துழி மீண்டும் கன்ம பூமியில் தள்ளும்; ஆதலால் அவர் கருத்து விளக்கிற்றிலது. இதனாலேயே தேவநேயர் 'எத்துணைச் செல்வமும் கெடும்' என்றற்குப் 'பெருஞ்செல்வம் என்றார்' என்றனர் போலும்.

பரிதியார், 'அறிந்து பொருள் உள்ளபோதே தன்மம் செய்வான்' என்றது 'தன்மஞ்செய்து புகழீட்டி வாழுக' என்னும் கருத்தினதன்று. *பட்டினத்தடிகள்* 'செல்வநிலையாமையை உணர்ந்து அனைவருக்கும் வாரி வழங்கிவிட்டு, பொருட்பற்றையுந் துறந்து உள்ளத்துறவு பூண்டது போலத்துறக்க' என்பதே கருத் தாம். துறவிக்குப் புகழும் அகப்பற்றை விளைக்குமாதலின் என்க.

ஒ) ஒப்புமைப் பகுதி:

வந்துபோதலுக்குக் கூத்தாட்டு உவமை':

கோடியர் நீர்மை போல முறைமுறை
ஆடுநர் கழியுமிவ் வுலகம் *புற.,* 29:23—24

6 தானும்--செல்வமும்.

பிறந்தவர் சாதலும் இறந்தவர் பிறத்தலும்
உறங்கலும் விழித்தலும் போன்றது ஆதலின்
நல்லறஞ் செய்வோர் நல்லுல கடைவர்
அல்லறம் செய்தார் அருநர கடைவர் —*மணி*.,16:86 – 89

ஓ) *மேற்கோள் பகுதி*:

மயிலை: கூத்தாட்டு அவைக்குழாத்து வரவு எற்று அற்று அவர் பெற்ற பெருஞ்செல்வத்து வரவு என எதிர்மறை எச்சம். (நன்.359.)

சுவாமி: ''செய்வி என் வினையுள் செய்வினை சிலவே'' என்பதற்கு போக்கும் அது விளிந்தற்று என்பது உதாரணம். (இ.கொ.72)

34.3. அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்
அற்குப[1] ஆங்கே செயல். (௩௩௩)

உரைப்பகுதி:

அ) *மணக்*.: நில்லாத இயல்பை உடைத்துச் செல்வம். அதனைப் பெற்றால், அப்பொழுதே நிற்பனவாகிய அறங்களைச் செய்க என்றவாறு.

நிலையாமை மூன்று வகைப்படும். செல்வ நிலையாமை, இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை என.

ஆ) *பரிதி*.: எ—து செல்வம் ஒரு இடத்தில் தங்காது; தன்னிடத்தில் செல்வம் வந்த போதே தன் ஆத்மாவுக்குத் தங்கும்படியாக அன்ன தானம்[2] செய்வான் என்றவாறு.

ஈ) *காளி*.: எ—து உலகத்து யாவரும் அறியச் செல்வமானது நிலையாத இயல்பினை உடைத்து; மற்று அச்செல்வத்தைத் தம்கைத்து உளதாகப் பெற்றால் அதனால் நிலை பேறுடையவாகிய மறுமைக் காரணங்களையும் அப்பொருள் பெற்ற அப்பொழுதே செய்க என்றவாறு.

'அற்கா இயல்பிற்று' என்பது நிலையாத இயல்பிற்று. அற்குப என்பது நிலை பெறுவன.

---

1 அற்குப-நிலைப்பன. வினையாலணையும் பெயர்; 2 அன்னதானம்-உணவு ஈதல்

உ) *பரிமேல்.*: நில்லாத இயல்பினை உடைத்துச் செல்வம்; அதனைப் பெற்றால், அதனால் செய்யப்படும் அறங்களை அப்பெற்றபொழுதே செய்க.

அல்கா என்பது திரிந்து நின்றது.[3] ஊழுள்ள வழி அல்லது துறந்தாரால் பெறப் படாமையின் 'அதுபெற்றால்' என்றும், அஃதில்வழி[4] நில்லாமையின் 'ஆங்கே' என்றும் கூறினார். அதனால் செய்யப்படும் அறங்களாவன பயனோக்காது செய்யப்படும் கடவுட் பூசையும் தானமும் முதலாயின. அவை[5] ஞானவேதுவாய் வீடுபயத்தலின், அவற்றை 'அற்குப' என்றும் 'செயல்' என்றும் கூறினார். இவை இரண்டுபாட்டானும் செல்வ நிலையாமை கூறப்பட்டது.

ஊ) *கவிராசர்*: நில்லாத இயல்பினை உடையது செல்வம். அந்தச் செல்வத்தைப் பெற்றபோதே அதனால் செய்யப்பட்ட தருமங்களைச் செய்துகொள்ள வேண்டும் (எ-று.)

ஏ) *பழைய 2*: நில்லா இயல்பினையுடையது செல்வம். அதனைப் பெற்றால் அதனால் செய்யப்படும் புண்ணியங்கள் உடனே செய்து கொள்க.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

உரையாசிரியர் அனைவருமே 'ஆங்கே' என்பதற்கு 'அப்பெற்ற பொழுதே' 'அப்பொழுதே' என விரைவு காட்டுகின்றனர். அடுத்த கணத்து நிகழ்வது தெரியக் கூடாமையாலும், புண்ணில் பட்ட நஞ்சு போலச் செல்வம் வந்தபோதே தானதருமஞ் செய்து தொலைக்கா விட்டால் இருந்து ஒட்டிப் பழகியதால் 'நூற்றுக்குமேலே ஊற்று ஊற்றுக்கு மேலே பற்று' என்ற பழமொழிப்படிப் பற்று மிகுமாதலானும் விரைவு காட்டினர் என்க.

'பெற்றால்' என்பது செயின் என் வாய்ப்பாட்டுவினைஎச்சம், துறந்து பொறி புலன் களையடக்கியாளப்பழகுகிறவனுக்குப்பொருள் பெறும் வாய்ப்பேயிராது; இவனிடம் தந்த செல்வம் அறப்பணிக்கே ஆகும் என்ற நம்பிக்கையால் இல்வாழ்வார் பலர் வலியத் தாமே கொடுக்க முன் வருவர். அங்ஙனம் பெற்றால் அதனையும் வைத்து வட்டிக்கணக்குப்பார்க்க வேண்டாம்; கொடுத்து நிலையான துறவின் வழியாக வீடு பெறுக என்றவாறாம். *பரிதி.* 'தன் ஆன்மாவுக்குத்

---

3 அல்குதல்-நிலைத்தல். தொழிற்பெயர். இதன்பகுதி அல்கு. இது செய்யுள் விகாரத்தான் அற்கு என ஆகி, எதிர்மறை ஆகார இடைநிலை பெற்று அற்கா என்றாயிற்று. அற்கா என்பது ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

4 அஃதில்வழி-அந்த நல்லூழ்.

5 அவை-பயன் கருதாது செய்யும் கடவுட்பூசை முதலியன.

தங்கும்படியாக அன்னதானம் செய்க' என்பர். நிலையான பிற அறங்கள் செய்தால் அவை புகழ்த்தூண்களாக நீள நின்று செருக்கை விளைக்குமாதலின், 'அவ்வப்போது அனைத்துயிர்க்கும் தேவைப் படும் பசிமருந்து உதவுக' என்றனர். அன்னதானப் பயன் ஆன்மா வுக்குத் தங்குமாதலின்.

ஓ) ஒப்புமைப்பகுதி:

'அற்கா இயல்பிற்றுச் செல்வம்':

கிழவர் இன்னோர் எனனாது பொருள்தான்
பழவினை மருங்கின் பெயர்பெயர்பு உறையும் —கலி.,21:10

முல்லை முகைசொரிந்தாற் போன்றினிய பாலடிசில் மகளிரேந்த
நல்ல கருணையா வாள்வாயும் பொற்கலத்து நயந்துண்டார்கள்
அல்ல லடைய அடகிடுமின் ஒட்டகத்தின் அயில்வார்க் கண்டும்
செல்வம் நமரங்காள்! நினையன்மின் செய்தவமே நினைமின் கண்டீர்
—சீவக., 2623

வண்ணத் துகிலுடுப்பின் வாய்விட் டழுவதுபோல் வருந்து மல்குல்
அண்ணாச் சிறுகூறை பாகமோர் கைபாக முடுத்து நாளும்
அண்ணாந் தடகுரீஇ யந்தோ வினையேயென் றழுவாட் கண்டும்
நண்ணன்மின் செல்வம் நமரங்காள்! நல்லறமே நினைமின் கண்டீர்
—சீவக.,2625

வெள்ளம் மறவி விறல் வேந்தர் தீத்தாயம்
கள்வரென் றிவ்வாறில் கைகரப்பத் தீர்ந்தகலும்
உள்ளில் உறுபொருளை யொட்டா தொழிந்தவர்
எள்ளும் பெருந்துயர்நோய் எவ்வம் இகப்பவோ வளை—35

மஞ்னல் சிறிதாய் மயக்கம் பெரிதாகிப்
புன்மை யுறுக்கும் புரையில் பொருளை வளை.,37

கச்சையங் கடகரிக் கழுத்தின் கண்ணுறப்
பிச்சமும் கவிகையும் பெய்யும் இன்னிழல்
நிச்சயம் அன்று... ... ... —கம்பராமா.,1424

வாள்களாகி நாள்கள் செல்ல —திருச்சந்த.,112

முற்றும்

துகடீர் பெருஞ்செல்வந் தோன்றியக்கால் தொட்டுப்
பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க

அகடுற யார்மாட்டும் நில்லாது செல்வம்
சகடக்கால் போல வரும் —நாலடி., 2

யானை எருத்தம் பொலியக் குடைநிழற்கீழ்ச்
சேனைத் தலைவராய்ச் சென்றோரும்—ஏனை
வினையுலப்ப வேறாகி வீழ்வர்தாம் கொண்ட
மனையாளை மாற்றார் கொள —நாலடி., 3

துக்களயில் காய்பிறவிக் கான்கடப்பத் தூயநெறிப்
புக்கார்க் குறிற்பொன் புயனிழல்போ லாம்பயன்
அற்கா வியல்பிற்றுச் செல்வமதுபெற்றால்
அற்குப ஆங்கே செயல் —இன்னிசை இருநூறு அதிகா—15—6

நில்லாது செல்வம் நிலவார் உடம்பு அடைந்தார்
செல்லார் ஒருங்கென்று சிந்தித்து—நல்லார்
அருளுளம் புரிகுவ ராயின்
இருளறு சிவகதி எய்தலோ எளிதே யா.வி., 55 (மேற்)

அரையது துகிலே மார்பினது ஆரம்
முடியது முருகு நாறும் தொடையல்
புடையன பால்வெண் கவரியின் கற்றை
மேலது, மாலை தாழ்ந்த மணிக்கால் தனிக்குடை
முன்னது முரசு முழங்குந் தானை
இந்நிலை இனைய செல்வத் தீங்கிவர்
யாவ ரேயோ தேவ ரல்லர்
இமைப்பதும் செய்தனர் மாந்த ரேஎன
மயக்கம் நீங்கக் களிற்றுமிசை வந்தனர்
நெருந லின்றிவர் பசிப்பிணி காய்தலின்
உணங்கிய துணியும் உடுத்து
மாசுமீப் போர்த்த யாக்கையொடு
தாமே ஒருசிறை இருந்தனர் மன்னே —ஆசிரியமாலை

334. நாளென ஒன்றுபோல் காட்டி உயிரீரும் வாள துணர்வார்ப் பெறின். (௩௩௪)

உரைபகுதி:

அ) *மணக்.*: நாளென்பது இன்பந் தருவதொன்று போலக்காட்டி உயிரை ஈர்வதொரு[1] வாளாம்; அதனை அறிவாரைப் பெறின், என்றவாறு.

---

1 ஈர்வது--அறுப்பன;

இஃது உயிரீரும் என்றமையால், இளமை நிலையாமை கூறிற்று.

ஆ) *பரிதி.*: எ--து நாளெனப் பேர் பெற்றிருக்கிற உயிர் அறுக்கும் ஈர்வாள் அறிவின் கண்ணால் பார்த்தால் ஈர்வாளாம்; அல்லது, ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி முதலாக என்று தோன்றும் நாள் என்றவாறு.

ஈ) *காளி.*: எ--**து** உலகத்தோர்க்கு நாளென்றுகொண்டு வேறே ஒன்றுளதுபோல் ஒருநெறி காட்டிச் செல்கின்றது யாதோ எனில் மற்றது மரத்தினது உருபு வேறுபட்டுக் கழியுமாறு அதனை ஈர்ந்து கொல்லும் ஈர்வாளாம்; எவ்விடத்து எனில் இதன் உண்மைப் பாட்டினை உற்றுணர்வாரைப் பெற்ற இடத்து என்றவாறு.

உ) *பரிமேல்.*: நாளென்று அறுக்கப்படுவதொரு காலவரையறை போலத் தன்னைக் காட்டி ஈர்ந்து செல்கின்ற வாளினது வாயது உயிர்; அஃது உணர்வாரைப் பெறின்.

காலம்என்னும் அருவப்பொருள்[2] உலகியல் நடத்தற்பொருட்டு ஆதித்தன்[3] முதலிய அளவை[4]களால் கூறுபட்டதாக வழங்கப்படுவ தல்லது தானாகக் கூறுபடாமையின் ‘நாளென ஒன்றுபோல்’ என்றும், அது தன்னை வாளென்று உணரமாட்டாதார் நமக்குப் பொழுது போகாநின்றது என்று இன்புறுமாறு நாளாய் மயக்கலின் ‘காட்டி’ என்றும், இடைவிடாது ஈர்தலான் ‘வாளின்வாயது’ என்றும், அஃது ஈர்கின்றமையை உணர்வார் அரியராகலின் ‘உணர்வார்ப்பெறின்’ என்றும் கூறினார். உயிரென்னும் சாதி ஒருமைப்பெயர் ஈண்டு உடம்பின் மேல்நின்றது[5]. ஈரப்படுவது அதுவே யாகலின். வாள் என்பது ஆகுபெயர். இனி இதனை நாளென்பதொரு பொருள்போலத் தோன்றி உயிரை ஈர்வதொரு வாளாம் என்று உரைப்பாரும் உளர்[6]. என என்பது பெயரன்றி இடைச்சொல்லாகலானும், ஒன்றுபோற் காட்டி என்பதற்கு ஒரு பொருட்சிறப்பின்மையானும், அது என்பது குற்றியலுகரம் அன்மையானும், அஃது உரையன்மை அறிக.

---

2 அருவப்பொருள்--உருவமில்லாத பொருள்.

3 ஆதித்தன் முதலிய அளவை--சூரியன், சந்திரன், வெள்ளி முதலிய விண்மீ[illegible]கள். இவற்றைக் கொண்டு காலத்தை அளத்தல் தொன்மை மரபாகலின் இவற்றை அளவை என்பதாம்.

4 ‘வாளது’ என்றும் பாடமுண்டு.

5 காலமாகிய வாளால் அறுக்கப்படுவது உருவில்லாத உயிரன்று; உயிரின் நிலைக்களனாகிய உடலே. ஆதலால், உயிருக்கு இருப்பிடமான உடலை உயிரென்றது தானியாகு பெயராம்.

6 உரைப்பவர் மணக்குடவர், இவர் உரையை மூன்று காரணங்காட்டி மறுத்தலைக் காண்க.

ஊ) *கவிராசர்*: நாழிகை, நாள், மாதம், வருஷம் என்று சொல்லப் பட்டது ஆதித்தனுடைய பிரமாணத்தினாலே[7] அந்த நாள் என்கிறதைக் காட்டி உலகத்திலேயுள்ள சீவன்களுடைய சரீரங் களை வாளாலே அறுத்துக் கொண்டு போகிறான் என்று எண்ணிக் கொள்வார்கள் அறிவுள்ளோர்கள் (எ—று.)

ஏ) *பழைய 2*: நாளென்று எண்ணப்படுவதோர் காலம்போல ஒன்று தோன்றி உயிர்வாழும் வாழ்க்கையை அறுக்கும் வாளாயிற்று; அதனை அறியார்; அறிவாராயின் அது கொல்லும் வாளென்று அறிவார்.

மல்லர்: எ—து நாள் என்கிறது தன்னைப் பொழுதின் அளவறுக்கிற ஒரு மாத்திரை போலே காண்பிக்கிறது. ஆனால் அதன் காரியத தைக் கண்டுபிடித்தால் உயிரை அறுக்கிற இருள் வாளாயிருக்கும், (எ—று.)

நாளுக்குநாள் மனுஷருடைய ஆயுசு குறைந்து போகிறாப் போலே நாளானது மனுஷனுடைய ஆயுசைப் போக்கும் என்பதாகை யால் ஆயுசு நில்லாது என்பது கருத்து.

ஈர்தல்—அறுத்தல்; உணர்தல்—அறிதல்; பெறின்—பெற்றால்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'உணர்வார்ப்பெறின் நாளென்பது உயிரீரும் வாளாம் என்பது' *மணக்*.; இவ்வுரை நாளை, வாளாக உருவகிக்கிறது. அதிகாரம் *நிலையாமை*. அதிலும் இக்குறள் யாக்கை நிலையாமை உணர்த்து வது. *மணக்குடவர்* 'யாக்கையின் இளமை நிலையாமையை யுணர்த்துவது' என்பர். எங்ஙனமாயினும் இவ்வுரையமைப்பு கருத்துப் பொருளாக இளமை நிலையாமையை யுணர்த்துமேயன்றி நேரே நிலையாமையை உணர்த்துவதாக இல்லை. இவர் கொண்ட பாடம் 'நாளென்பது' என்பது. இன்பந் தருவது ஒரு பொருளைப் போலக் காட்டி ஈர்ந்து துன்பந்தரும் வாளாகும் என்பது.

பரிதி., 'அறிவாற் காணின், நாள் உயிரறுக்கும் ஈர்வாள் அறியாதார்க்கு நாள்; நாளே யாம்' என்பர்.

காளிங்கர் 'உலகமக்களுக்கு நாள் என்ற பெயரோடு ஒருவழி காட்டிவிட்டு, உண்மையில் வாளாக இருக்கிறது உணர்வாரைப் பெற்றவிடத்து' என்பர்.

---

7 ஆதித்தனுடைய பிரமாணத்தினாலே--சூரியகதியின் அளவையினாலே.

இம்மூவர் உரையிலும் நாள் எழுவாய், வாள் பெயர்ப் பயனிலை. இதன் முடிவு இளமை நிலையாமையை அல்லது யாக்கை நிலையாமையை உணர்த்த வேண்டுமாயின் 'உயிர்ஈரும் வாள்' என்றதன் பொருளைக் கண்டு சொல்ல வேண்டும்.

பரிமேலழகர் 'உயிர் வாளின் வாயது' என உயிரை எழுவாயாக்கி, வாயது என்ற குறிப்பு முற்றைக் கொண்டு முடித்து, உயிர் எடுத்த இவ்வுடல் நிலையாது என நிலையாமையறிவை நேரே கருத வைக்கிறார். தங்கருத்தை நன்கு விளக்க 'நாளென ஒன்றுபோல்' 'காட்டி' 'வாளின் வாயது' என்ற தொடர்கட்கு எழுதும் விளக்கம் மிகச்சிறந்தது.

பரிமேலழகரால் மறுக்கப்படும் உரை *மணக்குடவரதே* என்பதை அவர் எடுத்தாளும் தொடரே காட்டும். அங்ஙனமின்றி 'நாளென ஒரு பொருள் போலத் தோன்றிக் கொண்டிருப்பது உயிரீரும்வாள். நாளும் வாளாவது அறிவாரது ஆராய்ச்சியைப் பெறுமாயின்' என்ற *வ.உ.சி* யுரையும் 'நாளை' எழுவாயாக்கி 'வாளைப்' பெயர்ப்பய னிலையாக்கியே செல்கிறது. ஆதலால் இதுவும் *மணக்குடவரை* ஒட்டியதெனற்கு ஐயமின்று. இவரும் *மணக்குடவர்* கொண்ட பாடத்தையே கொண்டிருப்பதும் இதற்குச் சான்று. இவைகளை எண்ணும்போது, நிலையாமையை நேரே யுணர்த்தும் 'உயிர் (உடம்பு) வாளின் வாயது' என்ற கருத்தை வழங்கும் உரையே சிறந்தது எனலாம். *பரிமேலழகர்* கருத்தை ஒட்டியே *தெய்வச்சிலையாரும்* இக்குறளையே காட்டி 'என' என்ற இடைச்சொல் பெயர் குறித்து நின்றது எனலும் காண்க. (*தொல் சொல்.*, 254 *உரை*)

கா.சு. 'அது—காலத்தின் மெய்த்தன்மையை உணர்வார்ப் பெறின், அது—காலம், நாளென ஒன்று போல் காட்டி—நாள் என்ற சிறுஅளவுகோல் போலத் தன்னைக்காட்டி, உயிர்—உயிர் உடம்பில் தங்குங்காலமாகிய ஆயுளை ஈரும்வாள்(ஆகும்)' என முடிப்பர். இவ்வுரை தெளிவானதாயினும் நாள் வாள் என்னும் முடிபினதாய், *மணக்குடவர்* உரை போலக் கருத்துவகையான் நிலையாமையைக் குறிக்கிறது.

சொ. த., பரிமேல்., 'போல—உயிர்வாளது' எனக்கூட்டிப் பொருள் காண்பர்.

பரிமேலழகர் மறுப்புரையாலும் *தெய்வச்சிலையார்* குறிப்பானும் *மணக்குடவர்* கொண்ட பாடம் 'நாளென ஒன்றுபோல் காட்டி'

என்று தானிருந்திருக்கிறது. பரிமேலழகர் மறுப்புரைகண்டு வ.உ.சி. 'நாளென்பது ஒன்றுபோல்' என மணக்குடவர் உரைப்பதிப்பில் திருத்தியுள்ளார் என்று தெரிகிறது. அன்றியும், நாளென ஒன்றுபோற் காட்டி—நாளென ஒரு பொருள்போல் தோற்றிக் கொண்டிருப்பது உயிரீரும்வாள் எனக் 'காட்டி' என்பதை வழிகாட்டிபோல வினையடியாகப் பிறந்த இகரவீற்றுப் பெயர்ச் சொல்லாக் கொண்டு எழுவாயாக்கி 'காட்டிவாள்' என முடித்து மணக்குடவரோடு ஒத்த முடிபுமட்டும் கண்டு வேறுரை தருவர். இவையனைத்தினும் 'உணர்வார்ப்பெறின்' என்பதற்கியைய அஃது என்ற சொல் வருவித்தாராயினும் உயிர் வாளதாம் என நிலையாமைப் பொருளைத்தரும் உரை சிறத்தல் காண்க.

ஒ) ஒப்புமைப் பகுதி:

காலம்—வாள்:

வாள்போல் வைகறை வந்தன்றால் —குறுந்., 157:4

'நாளென ஒன்றுபோற் காட்டி உயிரீரும் வாள்'

தோற்றஞ்சால் ஞாயிறு நாழியா வைகலும்
கூற்றம் அளந்துநும் நாளுண்ணும்—ஆற்ற
அறஞ்செய்(து) அருளுடையீர் ஆகுமின் யாரும்
பிறந்தும் பிறவாதார் இல்
நாலடி., 7

வைகலும் வைகல் வரக்கண்டும் அஃதுணரார்
வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர்
வைகலும் வைகற்றம் வாழ்நாண்மேல் வைகுதல்
வைகலை வைத்துணரா தார்
—நாலடி., 39

பிறந்துநாம் பெற்ற வாணாள் இத்துணை என்ப தொன்றும்
அறிந்திலம் வாழ்து மென்னும் அவாவினுள் அழுந்து கின்றாம்
சறந்துகூற் றுண்ணும் ஞான்று கண்புதைத் திரங்கின் அல்லால்
இறந்தநாள் யாவர் மீட்பார் இற்றெனப் பெயர்க்க லாமே —சீவக., 2616

அமைத்தநா ளென்னும் நாகம் விழுங்கப்பட்டது —சீவக., 2617

கோள்வலைப் பட்டுச் சாவாங் கொலைக்களங் குறித்துச் சென்றே
மீளினும் மீளக் காண்டும் மீட்சியொன் றானுமில்லா
நாளடி யிடுதறோன் றும் நம்முயிர் பருகுங் கூற்றின்

வாளின் வாய்த் தலையைவைப் பாக்குச் செய்கின்றோம்
—வாழ்கின்றோமா —குண்டலகேசி.,10

வாள்களாகி நாள்கள் செல்ல —திருச்சந்தவிருத்தம்.,112

கருவிடை வந்த ஒருநாள் தொடங்கி
மறவா மறவி முறைபிறழ் போழ்வாய்
அயிற்றலை யன்ன எயிற்றிடைக் கிடந்து —கோயில் நான்மணி.,8.5-7

ஓ) மேற்கோள் பகுதி:

தெய்வச்: நாளென ஒன்றுபோல் காட்டி என்றவழி, என என் இடைச் சொல் பெயர் குறித்து நின்றது. (தொல். சொல் 254.

34.5. நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை மேற்சென்று செய்யப் படும். (௩௩௫)

உரைப்பகுதி:

அ) *மணக்.*: நா வழங்காமல் செறுத்து[1] விக்குளானது மீதூர்ந்து[2] வருவதன் முன்னே, நல்வினையை மேல்விழுந்து செய்யவேண்டும், என்றவாறு.

இஃது உயிரானது கழிவதன்முன்னே நல்வினையைச் செய்ய வேண்டும் என்றது.

ஆ) *பரிதி.*: எ--து நாக்குக் குழறி விக்கலும் வருமுன்னே, அறம் செய்வான்; பின்னை வசமல்ல; பொன்னும் பொரி விளங்காயாம் என்றவாறு.

ஈ) *காளி.*: எ—து யாக்கையின்கண் உயிர்நிலையாமை இயல்பு; ஆதலால், தமது நாவினைச் செற்றுக்கொண்டு விக்குளானது மேற் போந்து கழிவதன்முன்னே நல்வினைக்கண்ணே நெஞ்சு ஒருப்பட்டு மற்று அதனைக் காயத்தினாலும் மனத்தினாலும் வாக்கினாலும் மேலாகிய துறவறத்தின்கண் நின்று ஒழுகப்படும் என்றவாறு.

உ) *பரிமேல்.*: உரையாடாவண்ணம் நாவை அடக்கி விக்குள் எழுவதற்கு முன்னே; வீட்டிற்கேதுவாகிய அறம் விரைந்து செய்யப் படும்.

1 செறுத்து— (தொண்டை) அடைத்து; 2 மீதூர்ந்து— மேலெழும்பி.
3 இது ஒரு பழமொழி. பொரிவிளங்காய் வறுத்த சிறுபயற்றம் மாவும், வெல்லப்பாகுங் கூட்டிச் செய்யப்பெறும் உருண்டைவடிவான ஓர் தின்பண்டம். நாள் கழியுமாயின் போற்றப்படும் பொன்னும் பொரிவிளங்காய் உருண்டைபோல உண்டு தொலைக்கப் பெறும். ஆதலால் நல்வினையை உடனே செய்க என்பது கருத்து.

மேல்நோக்கிவருதல் ஒருதலையாகலானும், வந்துழிச் செய்தலே யன்றிச் சொல்லலும் ஆகாமையாலும் வாராமுன் என்றும், அதுதான் இன்னபொழுதுவரும் என்பது இன்மையின் மேற்சென்று என்றும், கூறினார். மேற் சேறல்--மண்டுதல்[5]. நல்வினை செய்யுமாற்றின்மேல் வைத்து நிலையாமை கூறியவாறு.

ஊ) *கவிராசர்*: பேசவொட்டாமல் நாவை அடக்கி விக்கல் பிறக்கிறதுக்கு முன்னே மோட்சத்துக்குக் காரணமாகிய நல்ல தருமங்களைச் செய்ய வேண்டும் (எ—று.)

ஏ) *பழைய 2.*: பேசப்படாமல் நாக்கு விழுந்து விக்கல் எடுக்கும் முன்னே கதி[4] பெறுவதற்கு ஏதுவாகிய நல்லறங்கள் செய்யப்படும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

இக்குறட்பாவில் 'மேற்சென்று செய்யப்படும்' என்பதற்கு *மணக்குடவர்*, 'மேல் விழுந்து செய்ய வேண்டும்' என்றும், காளிங்கர் 'மேலாகிய துறவறத்தின்கண்ணே நின்று' என்றும் கூறுவர். *பரிமேலழகர்* 'விரைந்து செய்யப்பெறும்' என்று கூறுவர். இந்த மூன்றுரையுள் *பரிமேல்*. *காளி*. உரையைக் காட்டிலும் *மணக்குடவர்* உரை சிறந்தது. 'மேல்விழுந்து' என்பது மிகவிரும்பத்தக்கதொரு பொருளை வழங்கும் போது, பலர் முந்த அவர்களையும் முந்திக்கொண்டு அவர்கள்மீது விழுந்தடித்துக்கொண்டு வாங்குவது போல அறஞ்செய்தற்கண்ணே இடையூறுகள் அடுக்கிவரினும் அவையனைத்தையும் வென்று மேற்சென்று செய்யவேண்டும் என்ற பொருளைத் தருவது ஆதலின். இதனையடுத்தது 'விரைந்து' என்னும் உரை.

மரண காலத்தில் வயிற்றுமேற்பக்கம் சுருங்க. மூச்சுக்குழாய்களைக் கோழை யடைத்துக்கொள்ள, மேனோக்கி எழும் மூச்சு கோழையை வெளித்தள்ள, காற்றை அடக்கி அடக்கி திரட்டித் தேக்கி விடும்போது விளைவது விக்கல். விக்கல் எழும்போது உயிர் வாயுவே தேக்கப்படுவதால் ஒலிக்காற்று வெளிப்படாமற்போகும். அது வெளிப்படாமற் போக முயன்று பேசத்தொடங்கின் நாக்குழறும் அல்லது பேசமுடியாமலே போகும். அது தான் 'நாச்செற்று' என்பதால் உணர்த்தப்பெறுவது. விக்கல் எழுவதால் விளைவது நாவடைத்தல் ஆதலின் 'விக்குள் நாச்செற்று மேலெழாமுன்' என்

4 கதி — அடையத்தக்கதாகிய வீடுபேறு.
5 மண்டுதல் — நெருக்குதல். அதாவது விக்கல் கண்டு தொண்டையடைத்துக் கொள்ளுதல்,

றார். இத்துணையும் மரணகால நிகழ்ச்சி என அறிக. விக்கல் இயற்கையான் எழுவதும் உண்டு. நீர்வேட்கை, உயிர் தாங்க இயலாத கார்ப்பு வேறு சில ஏதுக்களாலும் நிகழ்வதுண்டு. அவற்றி னின்று மீளலாம்; இதில் மீட்சியே இல்லை என்க. இந்த இயல்பை நன்குணர்ந்த வள்ளுவர். இத்தகையநிலை வருங்காலம் இன்ன தென்று யாரும் அறியமாட்டாமையின் மேற்சென்று செய்யப்படும் என்ற விளக்கம் சிறந்ததாயிற்று.

ஒ) ஒப்புமைப் பகுதி:

முற்றும்:

பேரஞர் இடும்பை எல்லாம் பிளந்திடும்; பிறப்பு நீக்கும்;
ஆரமிர்து அரிதிற் பெற்றாம், அதன்பயன் கோடல் தேற்றாம்.
ஒருமைம் பொறியும் ஓம்பி யுளபகல் கழிந்த பின்றைக்
கூற்றெரி கவரும் போழ்திற் கூடுமோ குறித்த எல்லாம் —சீவக., 377

வேற்கண் மடவார் விழைவொழிய யாம்விழையக்
கோற்கண் ணெறிகாட்டக் கொல்கூற் றுழையதா
நாற்ப திகந்தாம்; நரைத்தூ தும் வந்ததினி
நீத்த றுணிவா நிலையா திளமையே —வளை.,40

இளமை நிலையாவா வின்பமு நின்றவல்ல
வளமையு மஃதேபோல் வைகலுந் துன்பவெள்ள
முளவென நினையாதே செல்கதிக் கென்றுமென் றும்
விளைநில முழுவார்போல் வித்துவீர் செய்துகொண்மின் —வளை.,41

கனைகொள் இருமல் சூலைநோய் ... ...
எய்திவந்து நலியாமுன் ... ...கோவலூர்
வீரட்டானஞ் சேர்துமே சம்பந்தர் கோவலூர்.,4

புறந்திரைந்து நரம்பெழுந்து நரைத்திநீ யுரையால் தளர்ந்து
அறம்புரிந்து நினைப்பது ஆண்மை அரிது காண்
—சுந்தரர் திருப்புறம்.,3

வைத்தநாள்வரை எல்லை குறுகிச் சென்று
எய்த்திளைப்பதன் முன்னம் அடைமினோ
வைத்த பாம்பணை யான்திரு வேங்கடம் —திருவாய் 3,3:10

34.6. நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு. (௩௩௬)

உரைப்பகுதி:

அ) *மணக்.*: ஒருவன் நேற்று உளனாயிருந்தான், இன்று இல்லையாயினான் என்று சொல்லும் பெருமையை இவ்வுலகம் உடைத்து என்றவாறு.

இது யாக்கை நிலையாமை கூறிற்று.

ஆ) *பரிதி.*: எ—து நேற்றிருந்தான் இன்று செத்தான் என்னும் பெருமை உண்டு உலகுக்கு என்றவாறு.

ஈ) *காளி.*: எ—து ஒருவன் நேற்று இருந்தவன் நேற்று இல்லை என்றும், இன்று இருந்தவன் இன்று இல்லை என்றும் உரைக்கப்பட்ட நிலையாமையின் பெருமையுடைத்து இவ்வுலகம் ஆதலால், மற்று இக்காயம்[1] இறப்பதன்முன்னர் பிறப்பறுத்தற்கு எய்துவதாகிய துறவறம் இயற்றுக[2] என்பது கருத்தாயிற்று என்றவாறு.

மற்று இவ்வுலகத்து உடலும் உயிரும் பொருளும் நிலையாமை தெரிந்த பெரியோர் இங்ஙனம் வருகின்ற பிறவியை அஞ்சித் துறவு இயற்றுவரன்றே வீட்டின்பங்கருதி, மற்று அதனால் இதன்பின்னரே அறிவிக்கின்றது அதனை.[3]

உ) *பரிமேல்.*: ஒருவன் நெருநலுளனாயினான்; அவனே இன்று இல்லையாயினான் என்று சொல்லும் நிலையாமை மிகுதியுடைத்து இவ்வுலகம்.

ஈண்டு உண்மை பிறத்தலையும், இன்மை இறத்தலையும் உணர்த்தி நின்றன. அவை பெண்பாற்கும் உளவாயினும் சிறப்புப்பற்றி ஆண் பாற்கே கூறினார்[4]. இந்நிலையாமையே உலகின் மிக்கது என்பதாம்.

ஊ) *கவிராசர்*: ஒருவன் நேற்று இருந்தான் இன்று செத்துப் போனான் என்று சொல்லுகிற பெருமையை உடையது உலகம் (எ—று.)

---

1 காயம்—உடல்; 2 இயற்றுக—மேற்கொள்க.

3 அதனை என்றது துறவு என்ற அடுத்த அதிகாரத்தை

4 சிறப்பு என இவர் கருதுவது பெண்பாலைக்காட்டிலும் ஆண்பாலர் பாலுள்ள கல்வி அறிவு ஆற்றல் அஞ்சாமை முதலியவற்றையே எனக.

ஏ) பழைய 2: நேற்றொருவனிருந்தான்; அவன் இன்றைக்குச் செத்தான் என்னும் பெருமையுடையது இவ்வுலகம்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக்குடவர், பரிதியார், பரிமேலழகர், மூவரும் ஒத்த கருத்தினர். *காளிங்கர்* 'நேற்றிருந்தான் நேற்றில்லை; இன்றிருந் தான் இன்றில்லை என்றும் உரைக்கப்பட்ட நிலையாமையின் பெருமையுடைத்து' என்பர். இவர் 'நெருநல் உளன் ஒருவன் நெரு நல் இல்லை; இன்று உளன் ஒருவன் இன்று இல்லை' என்று கூட்டிப் பொருள் கண்டிருப்பர் போலும். *மணக்குடவர்* போன்றோர் உரைகள் 'ஒருநாள் நிலைபெறுதலையுணர்த்த' *காளிங்கர்* உரை 'தோன்றிய அன்றேயிருக்கும்' என ஒருநாள் கூட நிலையாது என்பதைத் தெரிவிக்கிறது. பிற்கால உரைகள் *மணக்குடவர்* முதலாயினோரை ஒட்டியே செல்கின்றன.

பரிமேலழகர் 'உண்மை பிறத்தலையும் இன்மை இறத்தலையும் உணர்த்தி' என்பது இயையுமாயினும், குழவிப்பருவத்திறப்பு சிறு பான்மையாதலானும், குழவியை அஃறிணைச் சொல்லானன்றி ஒருவன் என உயர்திணை வாய் பாட்டான் வழங்கல் மரபன்மை யானும் நேற்றிருந்தான் இன்றிலனாயினன் என இளைஞரையும் முதியோரையும் பற்றிக்கூறுவதே மரபாதலானும் பரிமேலழகருரை சிறப்பிலது என்பர். குழவிச்சாக்காடும் உளவாயினும் குழவியை ஒருவன் என்றல் மரபன்மை சிந்திக்கத்தக்கதொன்றுதான்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

நெருநல் உளனொருவன் இன்றில்லை:

பேரஞர் இடும்பை எல்லாம் பிளந்திடும் பிறப்புநீக்கும்
ஆரமிர்து அரிதிற் பெற்றாம் அதன்பயன் கோடல் தேற்றாம்
ஒருமைம் பொறியும் ஒம்பி யுளபகல் கழிந்த பின்றைக்
கூரெரி கவரும் போழ்திற் கூடுமோ குறித்த எல்லாம் —*சீவக.,377*

இறந்தனர் என்பதல்லால் யாவரும் இன்றுகாறும்
மறந்துயிர் வாழாநின்றார் இல்லையால் —*சூளா.,1848*

நிலையிலா உடம்பு எள்வாழ்க்கை —*யசோ.,249*

இன்றுளார் நாளையில்லை எனும் பொருள்
ஒன்றும் ஓராது உழிதரும் ஊமர்காள் —*அப்பர் காட்டுப்பள்ளி.,9*

மின்னின் நிலையில மன்னுயிர் யாக்கைகள் —திருவாய்., 1:2:2

பிறந்தார் பெயருந்தன்மை பிறரால் அறிதற் கெளிதோ
—கம்பராமா., 1729

பொன்றுதல் ஒருகாலத்தும் தவறுமோ புதுமைத்தன்றோ
இன்றுளார் நாளைமாளவார் புகழுக்கும் இறுதியுண்டோ
—கம்பராமா., இந்திரசித்து., 10

ஈண்டு நாளு மிளமையு மென்றிவை
மாண்டு மாண்டு பிறிதுறு மாலைய
வேண்டு நாள்வெளி தேவிளிந் தாதலினி
யாண்டு வாழ்வ திடருழந் தாழ்தியே —கம்பராமா., 5282

நெருநல் உளன் ஒருவன் என்னு நெடுஞ்சொல்
மருவும் குறட்பா மறந்தார் —திருவருட்பா., நெஞ்., 467

முற்றும்

நெருநல் உளன்ஒருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் உலகெனப் பேசும்
தெய்வப் புலவர் திருவாக் கின்படி
எத்திறத்தவரும் இறந்து ஒழிந்தனரே —திருப்போரூர் ஆற்றுப்படை.,

ஒ) மேற்கோள் பகுதி:

சிவஞான: உண்டுபோ லின்றாதல் இத்துணைப் பொழுது நசிக்கு மென்றறியவாராது நெடுங்காலம் நிலைபெறுவனபோலத் தோன்றிக் காலம் வந்துழி அங்ஙனே கடிதில் மறைந்து போதல். 'நெருநல்...... உலகு' என்று ஓதியதும் இதுபற்றி என்க.

(சிவஞானபோ. சூ. 6. அதி. 1.)

34.7. ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப
கோடியும் அல்ல பல. (௩௩௭)

உரைப்பகுதி:

அ) மணக்.: ஒரு பொழுதளவும் தம்முயிர் நிலைநிற்கும் என்பதனை அறியாராயிருந்தும், தமது வாழ்நாளைக் கோடியுமல்ல, பலவாகக் கருதுவர் உலகத்தார், என்றவாறு.

மேல் ஒருநாள் உளனானவன் பிற்றை ஞான்று செத்தான் என்றார்; ஈண்டு ஒரு பொழுதளவும் உயிர்நிலையாகாது என்றார்.

ஆ) *பரிதி*.: எ—து ஒருபொழுதும் ஆக்கை நிலைநிற்கும் என்பது அறிவில்லை; இந்தச் சீவனுக்கு வேண்டின மூன்றாசையில் அப்பரந்த எண்ணிக்கை கோடியும் அல்ல என்றவாறு.

ஈ) *காளி*.: எ—து இமைப்பொழுதளவில் சாதலும் பிறத்தலும் உயிர்களின் நிலையாமைக்கு இயல்பு எனினும் இவற்றின் இடைப்படு காலம் பெரிதாம் எனில் மற்றது தானும் உடம்பொடு உயிர்வாழுங் காலம் ஒருபொழுதும் ஒருமாத்திரமும் துணிதல் அறியார்; மற்ற இதன் நிலைமை இவ்வாறாயினும் அளவிறந்த காலமெல்லாம் இருந்து வாழ்வதற்குச்செய்து கொள்ளக் கருதுவன ஒருகோடியுமல்ல பின்னும்பல; எனவே இக்கருத்துக்கொண்டு உண்டு வாழ்தல் அரிது என்றவாறு.

உ) *பரிமேல்*.: ஒருபொழுதளவும் தம்முடம்பும் உயிரும் இயைந்திருத்தலைத் தெளிய மாட்டார்; மாட்டாதுவைத்ததும், கோடியளவுமன்றி அதனினும் பலவாய நினைவுகளை நினையாநிற்பர் அறிவிலாதார்.

இழிவு சிறப்பு உம்மையால் பொழுது என்பது ஈண்டுக் கணத்தின் மேல்நின்றது.[1] காரணமாகிய வினையினளவே வாழ்தற்கும் அளவாகலின், அஃதறியப்படாதாயிற்று[2]. பலவாய நினைவுகளாவன பொறிகளான் நுகரப்படும் இன்பங்கள் தமக்கு உரியவாமாறும்,[3] அதற்குப் பொருள் துணைக்காரணமாமாறும், அது தம் முயற்சிகளான் வருமாறும், அவற்றைத் தாம் முயலுமாறும், அவற்றிற்குவரும் இடையூறுகளும், அவற்றை நீக்குமாறும் நீக்கி அப்பொருள் வடைக்கூட்டுமாறும், அதனைப் பிறர் கொள்ளாமல் காக்குமாறும், அதனான் நட்டாரை ஆக்குமாறும், நள்ளாரை அழிக்குமாறும், தாம் அவ்வின்பங்கள் நுகருமாறும் முதலாயின. அறிவிலாரது இயல்பின் மேல்வைத்து நிலையாமை கூறியவாறு, இனிக் கருதுப என்பதனை அஃறிணைப்பன்மைப் பெயராக்கி உரைப்பாரும் உளர்[4].

1 பொழுது என்பது யாண்டு. மதி, நாள், கணம், நொடி முதலிய கால வேறுபாடுகள் அனைத்தையும். பொதுப்பெயராயினும் 'பொழுதும்'என்ற உம்மையால்கணத்தையே உணர்த்திற்று.

2 அஃது—உடலழியும் காலம். வினைபோகமே யொரு தேகம் ; வினைதான் ஒழிந்தால் தினைப்போதளவும் நில்லாதாகலின் இங்ஙனம் கூறியதாம்.

3 உரியவாதல்—உயிருக்கு உரியவாய் இன்பதுன்ப நுகர்ச்சியை அளித்து அறிவின் கண்ணதாய் இருத்தல். 4 மணக்குடவர், காலிங்கர் இங்ஙனம் உரைப்பர்.

ஊ) *கவிராசர்.*: தம்முடைய உடம்பும் உயிரும்கூடி ஒரு நாளாகிலும் இருக்கும் என்கிறதை நிச்சயமாக அறியார், தாங்கள் நினைக்கிறது கோடியுமல்லாமல் பின்னையும் அதிகமாக நினைப்பார்கள் (எ-று.)

ஏ) *பழைய* 2.: ஒருபொழுது அளவாகிலும் தாஞ் சாகாமலிருந்து வாழ்வதனை அறிய மாட்டார். அவரெண்ணும் எண்ணம் கோடியுமில்லை; அதனினும் பெரிதாம்.

மல்லர்.: ஒரு கணத்தளவிலே உயிரோடு இருப்பன் என்று நிலையாமையை அறியாதவர்கள் கோடிக்குள்ளேயும் அடங்கார். வெகுயோசனை பண்ணுகிறவர்கள் (எ-று.)

சாவு என்றைக்கு வரும் என்று ஒருத்தருக்குந் தெரியாதபோதே இவ்வுலகத்திலே எப்போதும் இருக்கத்தக்கவனைப் போலே இவ்வுலகத்துச் செல்வங்கள் பேரிலே இத்தனை ஆசையும் விசாரமுமாயிருக்கிறது தனிக்குறைச்சல் என்பது கருத்து.

அறியார்—அறியாதவர்கள். கருதல்—நினைத்தல்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'ஒருபொழுதும் வாழ்வதறியார்' *-மணக்., பரிதி., காளி., பரிமேல்.*, போன்றோர். 'ஒருபொழுதுகூட அதாவது ஒருநாள்கூட உயிர் நிலைநிற்கும் என்பதனை அறியார்' என உரை காண்பர். 'ஒருகணமும் வாழ்வதறியார்' என்பர் *சொ.த.*; 'ஒருநொடிப் பொழுதும் அறியார்' என்பர் *தேவநேயர்*. இதற்கு, 'வாழ்வது ஒருபொழுதும் அறியார்' எனக்கூட்டி இந்த உயிர் இந்த உடலோடு எவ்வளவு நாள் வாழக்கூடும் என்பதனை ஒருபோதும் அறிய மாட்டார்கள். ஆனால் நினைந்து எண்ணுவன எண்பது கோடி எண்ணங்கள் எனலுமாம்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

'ஒருபொழுதும் வாழ்வ தறியார்'

யாரறிவார் சாநாளும் வாழ்நாளும் *—சம்பந்., சாய்க்காடு.,3*

இறப்பெனு மெய்ம்மையை யிம்மை யாவர்க்கும்
மறப்பெனு மதனின்மேற் கேடுமற் றுண்டோ *—கம்பராமா.,1419*

ஓ) மேற்கோள்பகுதி:

காரிரத்தன.; பாவிக அலங்காரத்திற்கு மேற்கோள். (*மாற*. 251)

34.8. குடம்பை தனித்தொழியப் புள்பறந் தற்றே
உடம்போ டுயிரிடை நட்பு. (கூகூ அ)

உரைப்பகுதி:

அ) *மணக்.*: கூடு தனியே கிடக்கப்புள்[1]ளும் பறந்து போனாற் போலும்; உடம்போடு உயிர்க்கு உள்ள நட்பு என்றாறு.

மேல் ஒருபொழுது என்று காலங் கூறினார்; ஈண்டு உயிர் நினைத்த பொழுது போம் என்றார்.

ஆ) *பரிதி.*: எ-து பட்சி முட்டையிட்டு வாழ்கிற கூடும் முட்டையும் போலும் உடலும் உயிரும்; ஆகையினாலே, யாக்கை உள்ள பொழுதே தன்மம் செய்வான் என்றவாறு.

ஈ) *காளி.*: எ-து இவ்வுலகத்துக் குருவி முதலிய பறவையானது தான் வாழும் கூடு தன்னை யின்றித் தனித்து ஆங்கு ஒழியப் பறந்து போகிய அத்தன்மைத்தே; மற்று யாதோ எனின் உடம்போடு உயிரின்கண் உளதாகிய உறவுபாடு[2] என்றவாறு.

குடம்பை என்பது புள் இயற்றும் கூடு.

உ) *பரிமேல்.*: முன் தனியாத முட்டை தனித்துக் கிடப்ப அதனுள் இருந்த புள்ளுப் பருவம் வந்துழிப் பறந்து போன தன்மைத்து, உடம்பிற்கும் உயிர்க்கும் உளதாய நட்பு.

தனித்து ஒழிய என்றதனான், முன் தனியாமை பெற்றாம். அஃதாவது கருவும் தானும் ஒன்றாய்ப் பிறந்து வேறாந்துணையும் அதற்கு ஆதாரமாய்[3] நிற்றல்; அதனால் அஃது உடம்பிற்குவமை யாயிற்று. அதனுள்வேற்றுமையின்றிநின்றே பின் புகாமல்போகலின் புள் உயிர்க்குவமை ஆயிற்று. முட்டையுள் பிறப்பன பிறவும் உள வேனும், புள்ளையே கூறினார். பறந்துபோதல் தொழிலான், உயிரோடு ஒப்புமை எய்துவது அதுவேயாகலின்[4], நட்பு என்பது ஈண்டுக் குறிப்புமொழியாய்[5] நட்பின்றிப் போதல் உணர்த்தி நின்றது. சேதனமாய்[6] அருவாய் நித்தமாய உயிரும், அசேதனமாய் உருவாய் அநித்தமாய உடம்பும் தம்முள்மாறாகலின், வினைவயத்தால் கூடியதல்லது நட்பில என்பது அறிக. இனிக்குடம்பை என்பதற்குக்கூடு என்று

---

1 புள்—பறவை; 2 உறவுபாடு-உறவு மிகுதல்.
3 ஆதாரமாய்--தாங்கும் நிலைக்களஞ்சி; 4 அதுவேயாகலின்- புள்ளே ஆதலால்.
5 குறிப்புமொழி--நேர்பொருளையன்றிச் சொல்வோன் குறிப்பால் எதிரான பொருளைத் தருவது. 6 சேதனமாய்--அறிவுடைப்பொருளாய்;

உரைப்பாரும் உளர்[7]; அது புள்ளுடன் தோன்றாமையானும், அதன் கண் அது மீண்டும் புகுதல் உடைமையானும், உடம்பிற்கு உவமை யாகாமை அறிக.

காரி.: நட்பு என்பது ஈண்டுக் குறிப்புமொழியாய் நட்பின்றிப் போதல் உணர்த்தி நின்றது; கல் கறித்து நன்கு அட்டாய் என்பதும் அது.

ஊ) *கவிராசர்*: முட்டையுடனே கூடியிருக்கிற உயிர் பக்குவம் வந்த போது அந்த முட்டையைப் போட்டுவிட்டுப் பறந்து போனாற்போலே சரீரத்தில் இருக்கிற சீவனும் அந்தச் சரீரத்தை விட்டுப்போம் [எ-று]

எ) *பழைய 2*: முன் தனியாகாத முட்டை தனித்துக் கிடப்ப, அதனுள்ளிருந்த புள் பருவம் வந்த உடனே பறந்துபோம் தன்மைத்து, உடம்பிற்கும் உயிருக்கும் கலந்திருந்த நட்பு.

மல்லர்: எ—து குருவியானது முன்னே முட்டையோடே ஒன்றாயிருந்து பிறகு முட்டை தனியாயிருக்கப் பண்ணி அதைவிட்டுப் பறக்குமே அப்படித்தானேயிருக்கும் உடம்புக்கும் உயிருக்கும் உண்டான உறவு எ-று.

குருவி முட்டையோடு ஒன்றாயிருந்து பறக்கிற பருவம் வந்தால் அப்போதே அதைவிட்டுப்பறந்து திரும்பி முட்டைக்குள்ளே நுழையத் தக்கதில்லை என்கிறதுபோல, உயிரானது உடம்போடு ஒண்ணாயிருந்தாலுஞ் சாகிற பருவம் வந்தால் உடம்பைவிட்டு அப்பாலே போய்த் திரும்பி உடம்புக்குள் புகுதத்தக்கது இல்லை என்கிறதினால் மனுஷருடைய உடம்புக்கு நிலையில்லை என்பது கருத்து.

குடம்பை-முட்டை; தனித்தல்-தனியாயிருக்கப்பண்ணுதல்; புள்-குருவி; அற்று—உவமைச்சொல்; இடை—இடம்; நட்பு—சினேகம்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'குடம்பை'

'முட்டை' என்பவர்கள் *பரிமேல்.*, *கா.சு.*, தேவநேயர், குழந்தை, *சி.இ.*, *இராம.*; 'கூடு' என்பவர்கள் *மணக்.*, *காளி.*, இருவரும். 'முட்டையும் கூடும்' என்பர் *பரிதியார்*.

பரிமேலழகர் 'கூடு' எனல் பொருந்தாமைக்கு, 'கருவும் தானும் ஒன்றாய்ப் பிறந்து பின்பு வேறாந்துணையும் அதற்கு ஆதாரமாய் நில்லாமையானும், பிரிந்தபின் மீட்டும் அதனுட் புகாமையானும்

7 உளர் என்றது மணக்குடவரையும், காளிங்கரையும் என்க.

உவமையாகாது' என இருகாரணம் காட்டி மறுப்பர். இதற்குத் துணைசெய்வன 'தனித்தொழிய பறந்தற்று' என்ற வள்ளுவர் வாயுரையே என்பர்.

சொ. த. 'முட்டையாயின், முட்டையிலிருந்து குஞ்சு வெளிப் பட்டவுடன் பறந்தா போகிறது; இல்லையே சிலபலநாள் கழித்து இறகு முளைத்துத்தானே புள்பறக்கிறது ஆதலால் முட்டை உடம் பிற்குவமையாகாது.

முட்டையுருச்சிதையாமல் புள் அதினின்று நீங்குவதில்லை; உயிர் உடலுறுப்புச் சிதையாமலே பிரிகின்றதே எனல்.

'கூடுவிட்டிங்காவிதான் போயினபின்' எனவும் 'அலங்கலஞ் சினைக்குடம்பைபுள்ளெனப் புலம்பெயர் மருங்கிற் புள் பறந்தாங்கு' (*அகநா.*,112) எனவும் 'சேர்க்கை மனனொழியப்புட்பறந்தற்றே' (*நாலடி.*,30) எனவும், ''வீ நுழை குடம்பையும் தானெனுங் கொள் கைத்து'' எனவும் முன்னும் பின்னும் உள்ள நூற்சான்றுகள் 'கூடு' என்றே கருதுகின்றன எனல். இத்துணைச் சான்றுகளைக்காட்டி மறுப்பர்.

ஆயின் பிரிந்தபறவை மாலையிற் கூட்டில் புகுகின்றன என *அகநா.*, போன்ற நூல்கள் கூறுகின்றனவே அதுபோல உயிர் மீளவும் உடலொடு கூடுகின்றனவா எனின் வந்து புகாமை பெரும் பாலும் வழக்காயினும், பரகாயபிரவேசம், துஞ்சினாரை எழுப்புதல் போன்ற செயல்கள் சிறுபான்மை நிகழ்தலை மறுக்கவும் முடியாதே; ஆதலால் கூடு என்பதாற் போந்த இழுக்கில்லை எனல்.

ஈர்க்கும் கொம்பும் சுள்ளியும் நாரும் பஞ்சும் கூடிப் பின்னப்பற்ற கூடு உடலுக்கு உவமையாதலே சிறப்புடைத்தெனல். இவற்றால் குடம்பை கூடெனவே கொள்க என ஏதுக்காட்டித் தம் கொள்கையை நிறுவுவர். இவைகளை இணைத்து எண்ணும்போது, கூடு எனலே சிறந்ததாம். மேலும் முட்டை உருச்சிதைந்துதானே பறவை வெளியாகிறது. உடல் உறுப்பு சிதைந்தா உயிர் போகிறது? இல்லையே! யாக்கையைக்கூடு என்பதே இலக்கிய மரபு. இவற்றா னும் குடம்பை—கூடு எனலே சிறப்பு.

கூடு—நார்—சிறுகழிகள் தழை பஞ்சு இவற்றால் ஆயதுபோல உடம்பும் என்பு நரம்பு தோல் மயிர் இவற்றால் யாக்கப்பட்டது. இதனாலும் கூடெனல் இயைபுடைத்தாதல் காண்க.

மேலும் பிற்கால ஆய்வுரைகளாகிய *செந்தமிழ்*, தொகுதி 21 பக்., 30 முதலியவற்றானும் 'கூடு' எனவே வலியுறுத்தப்பெற்ற வாறு அறிக.

ஒ) ஒப்புமைப் பகுதி:

'உடம்போ டுயிரிடை நட்பு':

விட்டுயிர் போகு மாறும் ... ... —சீவக.,1097

உடம்பொடு முயிரிடை மிடைந்த வொற்றுமை —நீலகேசி.,64

உடம்போடு உயிரிடை நட்பறியாதார் —திருமந்2148

முற்றும்:

... ... பராரை\
அலங்க லஞ்சினைக் குடம்பை புல்லெனப்\
புலம்பெயர் மருங்கிற் புள்ளெழுந் தாங்கு\
மெய்யிவண் ஒழியப் போகி யவர்\
செய்வினை மருங்கிற் செலீஇயர்இன் உயிரே —அகநா.,113:23—27

கேளாதே வந்து கிளைகளாய் இல்தோன்றி\
வாளாதே போவரான் மாந்தர்கள்—வாளாதே\
சேக்கை மரனொழியச் சேணீங்கு புட்போல\
யாக்கை தமர்க்கொழிய நீத்து —நாலடி.,30

விடம்பயில் எயிற்றர வுரியும் வீநுழை\
குடம்பையும் தானெனுங் கொள்கைத் தேகொலோ\
தடம்பயில் கூத்தரின் நடிக்கும் ஐவர்வாழ்\
உடம்பையும் யானென உரைக்கற் பாலதோ —திருவிளை

காண லாம்பர மேகட் கிறந்ததோர்\
வாணி லாப்பொரு ளேயிங்கோர் பார்ப்பெனப்\
பாணனேன்படிற் றாக்கையை விட்டுனைப்\
பூணுமாறுஅறி யேன்புலன் போற்றியே —திருவா.,48

நீளநீங்கிய பறவையின் விண்ணுற நிமிர்ந்தான் —கம்பராமா.,3782

தோட்டொடுந் துதைந்த தெய்வ மரந்தொறுந் தொடுத்த புட்டம்\
கூட்டொடுந் துறக்கம் புக்க ... ... —கம்பராமா., 5578

34.9. உறங்குவது போலும் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு. (கூகூசு)

உரைப்பகுதி:

அ) மணக்.: உறங்குவதனோடு ஒக்கும் சாக்காடு; உறங்கி விழிப்பத னோடு ஒக்கும் பிறப்பு என்றவாறு,

இது போன உயிர் மீண்டும் பிறக்கும் என்பதூஉம், இறத்தலும் பிறத்தலும் உறங்குதலும் விழித்தலும்போல மாறிவரும் என்பதூஉம் கூறிற்று.

ஆ) *பரிதி*.: எ—து நித்திரை போலே மரணம்; விழிப்பது போலே பிறப்பு என்று அறிக என்றவாறு.

ஈ) *காளி*.: எ—து வாழும் யாக்கையில் கரணங்களின் ஒடுக்கம்[1] போலும் மற்று அவ்யாக்கையது இறந்துபாடும்; இனி இதன் கொள்கையுள கரணங்கள் புலப்பட்டு இமைத்து விழித்தாற் போலும் பிறப்பும் என்றவாறு.

உ) *பரிமேல்*.: ஒருவனுக்குச் சாக்காடு வருதல் உறக்கம் வருதலோடு ஒக்கும், அதன்பின் பிறப்பு வருதல் உறங்கி விழித்தல் வருதலோடு ஒக்கும்.

உறங்குதலும் விழித்தலும் உயிர்கட்கு இயல்பாய்க் கடிதின்[2] மாறிமாறி வருகின்றாற் போலச் சாக்காடும் பிறப்பும் இயல்பாய்க் கடிதின் மாறிமாறி வரும் என்பது கருத்து. நிலையாமையே நிலைபெற்றவாறு அறிவித்தற்குப் பிறப்பும் உடன் கூறப்பட்டது.

ஊ) *கவிராசர்*: சீவன்களுக்குச் சாவு வருகிறது நித்திரை வருகிறாப் போலே இருக்கும்; பிறப்பு வருகிறது நித்திரை விழித்துக் கொண்டாற்போலாகும்; (எ—று).

ஏ) *பழைய 2*: ஒருவனுக்குச் சாக்காடு வருதல் உறக்கம் வருதலோடு ஒக்கும்; அதன் பின்பு பிறப்பு வருதலும், உறங்கி விழித்தலோடு ஒக்கும்.

மல்லர்: எ—து மனுஷருடைய சாவு நித்திரைபோலும். மனுஷருடைய பிறப்பு நித்திரைக்குப் பிறகு முழிப்புப் போலும் எ—று.

எப்போதும் உறங்கிறதுக்கும் எப்போதும் விழிக்கிறதுக்கும் அவகாசமில்லாமல் நித்திரையும் விழிப்பும் முறைமுறையாய் வருகிறாப்போலே மனுஷருடைய சாதிசாதிக்குச் சாவும் பிறப்பும் முறைமுறையாய் வருகிறது என்பதினால் சாவிலேயும் பிறப்பிலேயும் நிலையில்லை என்பது கருத்து.

உறங்கல்—நித்திரை செய்தல்; சாக்காடு—சாவு.

---

1 கரணங்களின் ஒடுக்கம்—கண் முதலிய பொறிகளும், மன முதலிய அகக்கருவிகளும் செயலற்று ஒடுங்கியிருத்தல். இது நிகழ்வது உறக்கத்தில் என்க.

2 கடிதின்—விரைவாக.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

அனைவரும் ஒத்த கருத்தினர். உறக்கம்-இளைப்பாற; விழிப்பு-தொழிற்பட; அதுபோல எடுத்த பிறவியிற் பட்ட துன்பஇன்பக் களைப்பை நீங்கிச் செயற்பட கிளர்ந்தெழுதல் பிறப்பும் இறப்பும் என்றபொருளும் இவ்வுவமையாற் கிடைத்தல் காண்க. 'அழிப்பிளைப் பாற்றல்' என்ற சித்தியாரும் காண்க. உறங்குதலும் விழித்தலும் மாறிமாறி நிகழ்வது போலப் பிறப்பிறப்பு மாறிமாறி நிகழ்வதால் நிலையாமையை விளக்கினதாம்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

உறங்கி விழிப்பது போலும் பிறப்பு:

விழித்திமைக்கும் மாத்திரை யன்றோ ஒருவன்
அழித்துப் பிறக்கும் பிறப்பு —*நாலடி.,302*

உறங்கி விழித்தா லொக்கும் இப்பிறவி — *சுந்தரர், நெல்வாயில். 4*

உறங்குவது போலும் என்ற ஒண்குறளின் வாய்மை
மறங்கருதி அன்றோ மறந்தாய் —*திருவருட்பா.,நெஞ்.,466*

முற்றும்:

கட்டுயில் அளந்தர் போலக் கதிகளுள் தோன்றுமாறும்
விட்டுயிர் போகு மாறும் வீடுபெற் றுயருமாறும்
உட்பட உணர்ந்த யானே உள்குழைந் துருகல்செல்லேன்
எட்பக வனைத்து மார்வம் ஏதமே இரங்கல் வேண்டா —*சீவக.,1097*

பிறந்தவர் சாதலும் இறந்தவர் பிறத்தலும்
உறங்கலும் விழித்தலும் போன்றது உண்மையின்
—*மணி., ஆதிரை.,86—87*

... ... வரம்பில் தோற்று மாக்கள்
இறக்குமா றிதுவென் பான்போல் முன்னைநா ளிறந்தான் பின்னாள்
பிறக்குமா றிதுவென் பான்போல் பிறந்தனன் பிறவா வெய்யோன்
—*கம்பராமா., 2065*

ஓ) மேற்கோள்பகுதி:

சுவாமி.: வினைமுற்றுப்பெயர் தொழிற்பெயரில் வந்தமைக்கு 'உறங்குவது' என்பது மேற்கோள். (இ.கொ. 83)

சிவஞான.: சீவியாநிற்பது என்பது 'உறங்குவது போலும்' என்புழிப் போலத் தொழிற்பெயர் மாத்திரையாய் நின்றது.
(சிவஞானபோ.சூ3.அதி.5)

34.10. புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள்
துச்சில் இருந்த உயிர்க்கு. (௩௪௰)

உரைப்பகுதி:

அ) *மணக்.*: தனது அல்லாத உடம்பினுள்ளே ஒதுக்குக் குடியாக[1] இருந்த உயிர்க்குப் போயிருப்பதற்கு இடம் அமைந்தது இல்லேயோ? அமைந்ததாயின், இதனுள் இராது என்றவாறு.

புக்கில் என்பது முத்தி ஸ்தானம்.[2] இது மேற்கூறியவற்றால் உயிர்மாறிப் பிறந்து வரினும் ஊரிடத்தே தவறும் என்பது கூறிற்று.

ஆ) *பரிதி.*: எ—து துச்சில் என்பது ஒருத்தர் அளவிலே ஒதுக்குக் குடியிருத்தல்; இப்படி ஒதுக்குக் குடியிருந்த உயிர் தனக்கென்று ஒருவீடு பெற விசாரிப்பன்[3] என்றவாறு; வீடாவது, மோட்சம் என்றவாறு.

ஈ) *காளி.*: எ—து உடம்புகள்தோறும் குடியிருந்துவருகின்ற உயிர்க்கு மற்று இன்னும் இங்ஙனம் புக்குப்புக்கு ஒழிகின்ற யாக்கை யானது நிலைபெறாது ஐயோதான் என்றவாறு.

இதனால் என்சொல்லியவாறோ எனில் உலகத்து அளவிறந்த காலமெல்லாம் அளவிறந்த யாக்கைகள் தோறும் பிறந்தும் இறந்தும் உழன்று[4] திரிதற்குக் காரணமாகிய பேதமைநீங்கும் உணர்வு பெறுதற்கு உறுதவம் இயற்றும் ஒருப்பாடே இனித்தங்குவது[5] என்று பொருளாயிற்று என்றவாறு.

புக்கில் என்பது புக்குப் போதுகின்ற இல்லம் துச்சிலிருந்து என்பது குடியிருந்து என்றது.

உ) *பரிமேல்.*: வாதம் முதலியவற்றின் இல்லாய உடம்புக்குள் ஒதுக்கிருந்தே போந்த உயிர்க்கு; எஞ்ஞான்றும் இருப்பதோர் இல் இதுகாறும் அமைந்தது இல்லைபோலும்.

அந்நோய்கள்[6] இருக்க அமைந்தஞான்று இருந்தும், வெகுண்டஞான்றுபோயும், ஒருடம்பினும் நிலைபெறாது வருதலால், 'துச்சிலிருந்த' என்றார். பின்புறப்படாது புக்கே விடும் இல் அமைந்த

---

1 ஒதுக்குக்குடியாக—ஒண்டுக்குடித்தனமாக; 2 முத்தி ஸ்தானம்—வீடுபேறடையும் இடம்

3 விசாரிப்பன்—ஆராய்வான்; 4 உழன்று-வருந்தி, 5 'தருவது' என்றும் பாடம்

6 அந்நோய்கள் என்றது வாதபித்த சிலேட்டுமங்களை.

தாயின், பிறர் இல்களுள்[6] ஒதுக்கிராது என்பதாம்; ஆகவே உயிரோடு கூடி நிற்பதோர் உடம்பும் இல்லை[7] என்பது பெறப் பட்டது. இவை ஏழு பாட்டானும், முறையே யாக்கைகட்கு வரைந்த நாள் கழிகின்றவாறும், கழிந்தால் உளதாய நிலையாமையும் அவை ஒரோவழிப் பிறந்த அளவிலே இறத்தலும், ஒரு கணமாயினும் நிற்கும் என்பது தெளியப்படாமையும், உயிர்நீங்கியவழிக் கிடக்குமாறும், அவற்றிற்கு இறப்பும் பிறப்பும் மாறிமாறிவருமாறும் அவை தாம் உயிர்க்குரிய வன்மையும் என்று, இவ்வாற்றால் யாக்கை நிலையாமை கூறியவாறு கண்டுகொள்க.

ஊ) *கவிராசர்*: வாயுபித்தம், சிலேஷ்மம்[8] இவைகளாலே நிலை பெற்ற உடம்புக்குள்ளே இருந்த உயிருக்கு எந்நாளும் இருக்கப் பட்ட ஒரு உடம்பும் இல்லை. எந்த உடலை எடுத்தாலும் சரீரம் நாசமாகிப்போம். சீவனுக்கு நாசமில்லை (எ—று).

ஏ) *பழைய 2*: ஐம்பூத வடிவாகிய உடம்பினுள் ஒதுக்குக்குடியிருந்த உயிர்க்கு எந்நாளும் அழியாமலிருப்பதோர் வீடுகிடைத்தில்லை கொல்லோ?

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'புக்கில்' —என்பதற்கு *மணக்குடவர்* முதல் *பரிமேலழகரீறான* பழையர்கள் 'புகுமிடம்', 'மோட்சம்', 'தனக்கென் உரிய வீடு', 'எஞ்ஞான்றும் இருப்பதோர் இல்' என்றெல்லாம் உரை கண்டனர். *காளிங்கர்* 'நிலைபேறான வீடு அமையவில்லையோ' என்றனர்.

'துச்சில்'

'ஒதுக்குக்குடி' (சிலேட்டும வாதபித்தங்களுக்குச் சொந்தமான) தனக்குச் சொந்தமல்லாத வீட்டிலே உள்ள ஒதுக்குடி' *மணக்.*, *பரிமேல்.*, *கா.சு.*, 'ஒருத்தரளவிலே ஒதுக்குக்குடியிருத்தல்' *பரிதி.*, 'பலவீடுகளில் இருக்கும்குடி' *காளி.*, 'சிறுபொழுது தங்கியிருக்கும் இடம்' என்பர் *சொ. த.*

இவ்வுரைகளாற் போந்த கருத்து:— உயிருக்குக் குறித்தநாள் வரை குடியிருப்பதற்காக ஒதுக்கப்பெற்றவை உடம்புகள். அவை நிலையற்றன; ஆதால் இவ்வுடம்பில் உயிர் உறையும் போதே நிலையான வீட்டைத்தேடிக்கொள்ள மெய்யுணர்வைத் தேடிக் கொள்ளவேண்டும் என்பதாம்.

---

6 பிறரில்—பிறருடைய வீடு? ஈண்டுப் பிறர் என்றது வாதபித்த நோய்களை.

7 'உயிரோடு நிற்பதோருடலும் இல்லை' என்பது 'உடம்பொடு நின்ற உயிரும் இல்லை' என்ற புறநா., 363, வரி. 8 என்ற பாடற்பகுதியை நினைவிற்கொண்டு எழுதியது.

8 சிலேஷ்மம்—உடலில் உள்ள கபக்கூறு.

உயிர்குடியிருக்கத் தந்த உடப்பாகிய வீட்டில், உயிர் எல்லை கடந்து தங்கியே விடாதபடி வாதபித்தசபங்களும் குடிபுகுந்தன. அதனால் யாருக்காக உடல் வடிவைப் பெற்றதோ அவன் (உயிர்) ஒண்டியிருக்க வேண்டியதாயிற்று. ஒண்டவந்த பிசாசு ஊர்ப் பிசாசை ஓட்டிய கதையாய் முடிந்தது. இதுவரை தனதுடல் என்று எண்ணியிருந்த உயிர் நிலையான இடம்தேடும் முயற்சியை மேற்கொள்ள வேண்டியதாயிற்று.

முதற்குறள் பொதுவகையான் நிலையாமையையும் அடுத்த இரண்டு மூன்று குறட்பாக்கள் பொருள் நிலையாமையையும் அடுத்த ஏழுபாக்கள் யாக்கை நிலையாமையையும் உணர்த்துவனவாக அமைத்ததன்நோக்கம் மெய்யுணர்ந்து விடுபெறத் தடையாயிருப்பது யான் என்னும் அகப்பற்றாகிய உடற்பற்றே என்பதையும், பொருட் பற்று, உடற்பற்றை அறாதவண்ணம் இன்பம் என்ற அனுபவத் தான்ஏமாற்றுகிறது. அதனை நீங்கின் முறையே அகப்பற்றும் அற்றுப்போக உண்மைத் துறவு உண்டாம் என்பதையும் உணர்த்துவர் ஆசிரியர்.

ஓ) மேற்கோள்பகுதி:

சிவஞான: புக்கில்போல அன்று என்பது உணர்த்துதற்கு அருந் துயர்க்குரம்பை எனப்பட்டது. அது 'புக்கில்... உயிர்க்கு' என்பதனான் அறிக. (*சிவஞான. சிறப்பு*)

34. நிலையாமை

	நில்லா	கூத்தாட்	அற்கா	நாளென	நாச்செற்று	நெருநல்	ஒருபொழுதும்	குடம்பை	உறங்குவது	புக்கில்
மணக்.	1	3	2	4	5	6	7	8	9	10
பரிதி.	1	10	9	4	8	3	2	6	5	7
பரிப்.	—	—	—	—	—	—	—	—	—	—
காளி.	1	3	4	5	2	10	9	7	8	6
பரிமேல்.	1	2	3	4	5	6	7	8	9	10

34—வது அதிகாரம் நிலையாமை முற்றிற்று.

35. துறவு

அதிகாரப்பொருள்:

அ) *மணக்.*: துறவாவது ஒருவன் தவம் பண்ணாநின்ற காலத்து யாதாயினும் ஒரு தொடர்ப்பாடு உளதாயினும், அதனைப் பற்றறத் துறத்தல். இது மயக்கமற்றார்க்கு வருவது ஒன்றாதலின், அதன் பின் கூறப்பட்டது.

ஆ) *பரிதி.*: துறவாவது நிலையாமை அறிந்தால் மூன்றுவகை ஆசையும் விட்டுத் துறவறத்திலே நிற்கவேணும் என்றவாறு.

உ) *பரிமேல்.*: அஃதாவது புறமாகிய[1] செல்வத்தின்கண்ணும் அகமாகிய[2] யாக்கையின் கண்ணும் உளதாம் பற்றினை, அவற்றது நிலையாமை நோக்கி, விடுதல். அதிகார முறைமையும் இதனானே விளங்கும்.

ஊ) *கவிராசர்*: அஃதாவது புறமாகிய ஐஸ்வரியத்தின் கண்ணும் உள்ளாகிய யாக்கையின் கண்ணும் உண்டாகிய ஆசாபாசங்களை[3] விட்டுத் தபசு பண்ணுகிறது.

ஏ) *பழைய 2*: அஃதாவது, இல்லறம் விட்டுத் துறவறம் கொள்ளுதல், துறவு; எலலாப் பொருளும் விடுதல்.

மல்லர்: அதாவது செல்வங்கள் பேரிலேயும் தன்னுடம்பின் மேலேயும் உண்டான பற்றுதலை விடுகிறது.

---

1 புறம்—துறவுக்குச் செல்வம் புறமாதலின் செல்வத்தைப் புறமென்றார். இது 'எனது' என்னும் பற்று.
2 அகம்—உடலைப்பற்றிய பற்று. 'நான்' என்னும் பற்று.
3 ஆசாபாசங்கள்—ஆசையும் அதன் முதிர்ச்சியாகிய பற்றும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'நிலையாமை உணர்வுமிக்கு ஒருவன் தவம் செய்யுமாயின் அக்காலத்தும் ஏதாயினும் ஒரு தொடர்ப்பாடு தோன்றக்கூடும். அதனையும் பற்றறத்துறக்க வேண்டுவது துறவு' என்பது *மணக்குடவர்* கருத்து. *பரிமேல்., கா.சு.,* முதலிய பின்னோருரைகள் இக்கருத்தை ஒத்தனவேயாம்.

'மூவகை ஆசைகளையும் விடுதல்' என்பது *பரிதியுரை.* மண் பெண், பொன், ஆசைகளே மூவகை ஆசைகளாதலின், இவையனைத்தும் புறப்பற்றே ஆதலின் புறப்பற்றைத் துறத்தலே துறவு என்பது *பரிதி.* கருத்தாகிறது. இவ்வதிகாரத்து ஆறாங்குறளில் 'யானெனது என்னுஞ் செருக்கறுப்பான்' என்று *வள்ளுவரே* கூறுவதால், அகப்பற்றைத் துறத்தலும் ஆசிரியர் கருத்தாதலான் *பரிதியுரை* ஒருபுடைகுறைவுடையதாம் என்க.

பழைய உரை 2, 'இல்லறம்விட்டுத் துறவறங்கொள்ளுதல் என்னும் இவ்வுரைப் பகுதி இதுவரை இல்லறங்கூறியதைப் போலவும் இனித்தான் துறவு கூறத்தொடங்குகிறார். போலவும்' கருத்தை வழங்குகிறது. ஆசிரியர் *துறவியலின்* இன்றியமையாத விரதம் தவ முதலியன கூறி, நிலையாமை ஞானம் கைவந்த நிலையில் துறவு கூறுகிறார் என்பதைச் சிந்திக்க இவ்வுரை ஏற்புடையதன்று போலக் காணப்படுகிறது; ஆயினும் துறவு—எல்லாப் பொருளும் விடுதல் என்ற குறிப்பு ஓரளவு நிறைவு செய்கிறது.

கவிராசர், 'ஐஸ்வரியத்தின்கண்ணும், யாக்கையின்கண்ணும், உண்டாகிய ஆசாபாசங்களை விட்டுத் தபசு பண்ணுகிறது' என்பர். தவம், *துறவியலின்* முதற்பகுதியாகிய விரதங்களில் ஒன்றாக அதிகார முறைவைப்புக் கூறுவதால் தவம்பூண்டு கூடாஒழுக்கங்களைந்து கள்ளாமை முதலிய அறவழி நின்று நிலையாமை ஞானம் கைவரப் பெற்றபின் துறவு கூறப்படுதலின் இவருரை அகப்பற்று புறப்பற்றுக்களைத் துறத்தல் என்ற அளவில் அமைவுடையது என்க.

மு.ரா.அரு. 'புறத்தவாகிய செல்வத்திடத்தும், அகத்தவாகிய உடலிடத்தும் உளவாம் ஆசையை அவற்றின் நிலையாமை கருதித் துறத்தல்' என்பர்.

வ.உ.சி. 'அகப்பற்றுக்களைத் துறத்தல்' என்பர்.

35. 1. யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன். (சூசச)

உரைப்பகுதி:

அ) *மணக்.*: எவன் யாதொன்றினின்றும் யாதொன்றினின்றும் நீங்கினான் அவன் அதனளவு அதனளவு துன்பமுறுதலிலன் என்றவாறு.

ஆ) *பரிதி.*: எ-து மூன்றுவகை ஆசைக்குள்ளே ஏதாகிலும் பற்றற்றால் அதற்குத்தக்க சுகம் உண்டு என்றவாறு.

ஈ) *காளி.*: எ—து உலகத்து மக்கட் பண்புடையான் ஒருவன் இருவினையுள்ளும் தீவினை நீங்கி நூல் நெறிமரபாகிய நல்வினை இயற்றும் அன்றே! மற்று அவை தம்முளும் அரசு பொருள் மக்கள் அமரருலகு[1] என்னும் சிறுசுவை விளைப்பனவாகிய வினைகள் யாதொன்றினின்றும் தொடர்புநீங்கித் துறவிக்கண் சென்றான் மற்று அவன் அந்த அந்தப் பயனைப்பற்றித் துயருறுதல் அதனின் அதனின் இலன்; எனவே அந்த அந்தப்பயன் விளைத்தற்குக் காரணமாகிய அந்தந்த வினைகளின் முயற்சியை உடையனாதல் இல்லையாதலால் அவன் துறவியின்கண் முயல்வானாம் என்று பொருளாயிற்று என்றவாறு.

உ) *பரிமேல்.*: ஒருவன் யாதொரு பொருளின் யாதொரு பொருளின் நீங்கினான்; அவன் அப்பொருளால் அப்பொருளால் துன்பம் எய்துதல் இலன்.

அடுக்குகள் பன்மை குறித்து நின்றன. நீங்குதல்—துறத்தல். ஈண்டுத் துன்பம் என்றது இம்மைக்கண் அவற்றைத்தேடுதலானும்[2], காத்தலானும், இழத்தலானும் வருவனவும், மறுமைக்கண் பாவத்தான் வருவனவுமாய இருவகைத் துன்பங்களையும் ஆம். எல்லாப் பொருளையும் ஒருங்கே விடுதல் தலை, அஃதன்றி ஒரோஒன்றாக விடினும் அவற்றான் வருந்துன்பம் இலனாம் என்பது கருத்து.

ஊ) *கவிராசர்*: ஒருவன் யாதொரு பொருளைவிட்டு நீங்கினான், அந்தப் பொருளாலே அவன் நோகிறதில்லை (எ—று).

ஏ) *பழைய 2*: ஒருவன் யாதொரு பொருளின், யாதொரு பொருளின் பற்றுவிட்டு நீங்கினான், அவன் அப்பொருளினால் வரும் துன்பம் எய்தல் இலன்.

---

1 அமரருலக — தேவர் உலகம்.

2 ‘இப்பகுதி’ ‘ஈட்டலுந்துன்பம்’ என்ற நாலடியார் (280) செய்யுளை நினைவிற் கொண்டு எழுதியது.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக்குடவர் பரிமேலழகர் உரைகள் 'பொருட்பற்று அனைத்தையும் ஒருசேர விடமுடியாதார்க்கு விட்ட அளவு துன்பமில்லை' என்று கூறுவதால், அனைத்தையும் விடுதலே துறவு என்பதை வலியுறுத்துகின்றது. *பரிதியார்* உரை 'மூன்று வகையாசைகளை விடுதல்' என்றது இயையாது என்பதனை மேலே குறித்தாம். *காளிங்கர்* உரை 'பண்புடையான் தீவினைகளைச் செய்யாமல் நீக்கி, நூல்கள் விதிக்கும் நல்வினைகளையே செய்வானாயினும் அந்நல்வினைகளுள்ளும் அரசு அமரருலகவாழ்வு முதலிய சிற்றின்பம் பயவாத நல்வினைகளையே செய்தல் வேண்டும்; அதற்காகத் துறக்க முற்றும் துறக்க இயலாதாயின், துறந்த அளவு துன்பமின்று' என்கிறது. இவ்வுரையுள் வரும் 'துறவின்கண் சென்றான்' என்பது 'இறவியை பார்க்கும் அறிவரியான்' என்பது போல (திருக்கோவையார்). துறவி என்பது துறத்தல் என்ற பொருளைத் தரும் தொழிற்பெயர் என அறிக. 'வி' விகுதி பெற்ற தொழிற்பெயர். இது 'வேண்டேன் புரந்தரன் மாலயன் வாழ்வு குடிகெடினும்' என்பது போலச் சிற்றின்பப் பொருளையும் அவை நிகழும் இடங்களையும் துறத்தலை உணர்த்துதல் காண்க.

பரிதியார் கூறும் 'மூவகையாசையுள் ஏதாகிலும் பற்றற்றால் அதற்குத் தக்க சுகம் உண்டு' என்ற உரையான் இவர்கொண்ட பாடம் 'அதனினதனின் நலன்' என்றிருக்கலாம் எனக் கருதப்பெறுதலும் உண்டு. 'நோதல்...அதனினலன்' என்ற தொடரை 'அதனின் அலன்' எனப்பிரித்தலும், அதனால் நோதல் அல்லாதவனாகிறான் எனப்பொருள் கோடலும், கருத்துரையாகவே எழுதும் *பரிதியார்* 'அதற்குத்தக்க சுகம் உண்டு' என எழுதினார் என்பதும் ஏற்றதாகலாம். 'சுகம்' என்றதால் 'நலம்' எனப் பாடங்கொண்டிருப்பர் என்று கருதவேண்டுவதின்றாம். அன்றியும் *பேரூர் மடத்துத் தெய்வசிகாமணிக்கவுண்டர்* பிரதியில் 'இலன்' என்ற பாடமேயுள்ளது.

ஒ) ஒப்புமைப்பகுதி:

பற்றின் வருவது முன்னது பின்னது
அற்றோ ருறுவ தறிகென் று —*மணி*. 2: 66—67

ஓ) மேற்கோள் பகுதி:

நச்சி.: இக்குறள் அருளொடு புணர்தலின்பின் துறவொழுக்கம் பிறத்தற்கு மேற்கோள். (*தொல். பொருள்*. 76.)

இளம்.: துறவாவது தன்னுடைய பொருளைப் பற்றறத்துறத்தல் என்பதற்கு மேற்கோள். (*தொல். பொருள்*. 75.)

மயிலை.: இக்குறள் யாதனின் யாதனின் நீங்கியான் ஒருவன் நோதல் அதனின் அதனின் இலன் என எஞ்சிய பெயர்கொண்டு முடிதலின் பெயரெச்சமாயிற்று. (நன். 359)

நச்சி., இளம்.: அருளொடு புணர்ந்த அகற்சியில் பிரமசரியக்காப்பின் விளைவுக்கு மேற்கோள். (தொல். பொருள். 75.)

35.2. வேண்டினுண் டாகத் துறக்க துறந்தபின்
ஈண்டியற் பால பல. (௩௪௨)

உரைப்பகுதி:

அ) *மணக்.:* தன்னுயிர்க்கு ஆக்கம் உண்டாக வேண்டின், தன்னுடைமை எல்லாவற்றையும் துறக்க; துறந்தபின் இவ்விடத்தே இயலும் பகுதியின் பல என்றவாறு.

ஆ) *பரிதி.:* எ—து வேண்டின் செல்வம் உண்டாயிருக்கத் துறக்க வேணும்; துறந்தபின், செனனம் இல்லை என்றவாறு.

ஈ) *காளி.:* எ—து முதற்சொன்ன நிலையாமையைக் குறிக்கொண்டு பிறவிக்கு வித்தாகிய வினையும் பயனும் என்பனவற்றை நுமக்கு இயன்ற விடுத்தலை விரும்புவீராயின் அதனையும் முற்சொன்ன உண்மையாகத் துறக்க; இங்ஙனம் துறந்ததற்பின் இவ்விடத்து மற்று அத்துறவற அறமுயற்சியான் ஈண்டு ஆகற்பாலன பல என்றவாறு.

உ) *பரிமேல்.:* எல்லாப் பொருள்களையும் துறந்தால் ஒருவர்க்கு இம்மைக்கண்ணே உளவாம் முறைமையையுடைய இன்பங்கள் பல; அவ்வின்பங்களை வேண்டின், அவற்றைக் காலம்பெறத் துறக்க[1].

அவ்வின்பங்களாவன அப்பொருள்கள் காரணமாக மனமொழி மெய்கள் அலையாது நிற்றலானும், அவை நன்னெறிக்கண் சேறலானும் வருவன. இளமைக்கண் துறந்தான் அவற்றை நெடுங்காலம் எய்துமாகலின், 'உண்டாகத் துறக்க' என்றார். 'இன்பங்கள்' என்பதும் 'காலம்' என்பதும் வருவிக்கப்பட்டன. இம்மைக்கண் துன்பங்கள் இலவாதலேயன்றி இன்பங்கள் உளவாதலும் உண்டு என்பதாம்.

---

1 காலம் பெறத்துறத்தலாவது துறவின்கண்ணேயே நீடித்து நிற்கத் துறத்தல். அதாவது இளமைக்கண் துறக்க என்பதாம். 'நரைவரும் என்று எண்ணி' என்ற நாலடியாரின் 11ம் பாடற் கருத்துப் போல்வது.

ஊ) *கவிராசர்:* சகல வஸ்துக்களையும் துறந்துவிட்டால் அவனுக்கு இம்மையிலே அந்த வஸ்துக்களாலே உண்டாக்கப்பட்ட பலனிலும் பத்துக்கோடி அத்தனைப் பலன் உண்டாம் வறுமையிலே (எ—று).

ஏ) *பழைய 2:* வீடுபேறு வேண்டின், காலம் உண்டாக, இளமையில் துறக்க அப்படித் துறந்தபின் அவர்க்கு இம்மைக்கண் இயல்பாகிய இன்பம் பலவாம்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'தன் உயிர்க்கு ஆக்கம் உண்டாகவேண்டின்' என்ற *மணக்குட வரை* ஒட்டிப் *பரிமேலழகர்* 'இன்பங்களை வேண்டின் துறக்க' என்றனர். *மணக்.*, '(ஆக்கம்) உண்டாக வேண்டின் துறக்க; துறந்தபின் ஈண்டு இயற்பால பல' என்று கூட்டிமுடிப்பர். *பரிமேலழகர்* 'துறந்தபின் ஈண்டு இயற்பால பல; (அவ்வின்பங்களை) வேண்டின், (காலம் உண்டாகத் துறக்க' எனக்கூட்டி 'இளமைத் துறவை' எண்ணவைப்பர். 'மிதுபொருள் இல்லான் கொடையே கொடையாதல் போலப் பொருள் மிகுந்தவனே துறத்தல் வேண்டும் என்றவர் துறந்தபின் ஈண்டியற் பால பல' எவ்வகையினும் பொருத்தியுணர இயலாத உரையை வகுத்தனர் *பரிதி*. இவ்வுலகத்து இயலும் காரியங்கள் பல என்றதனால் 'ஆண்டுச்செனனம் இல்லை' என்ற கருத்துக் கொணர்ந்தனரோ என்று ஐயப்படத் தோன்றுகிறது.

'துறக்க'

'பிறவிக்கு வித்தாகிய வினையும் பயனும் துறக்க' என்பர் *காளி*. 'இம்மைக்கா? மறுமைக்கா? என்று வரைசெய்யாது'உயிர்க்கு ஆக்கம் வேண்டின்' என்ற குறிப்பாலும், மேல்வினைகள் இம்மைக்காமேயன்றித் துறத்தலாகிய இம்மைவினை இம்மைக்காகாமையானும் மறுமைக்கே துறவு பயன்தரும் என்ற துணிவால் பொதுமையிற் கூறினார் *மணக்குடவர்*. அவரைப்பின்பற்றும் *பரிமேலழகரோ* 'துறந்தார் இம்மையிலேயே எய்தும் இன்பங்கள் பலவாம்; அதனால் துறக்க' என்பர். இதனால், பற்றறுகைக்காகப் பற்றற்றான் பற்றினை மட்டும் பற்ற வேண்டிய துறவி. 'விளையும் இன்பங்கள் பல; இன்பங்களை வேண்டின் துறக்க' எனின் அது துறவு ஆகாமையை எண்ணத்தூண்டுகிறது. ஆதலால் ஈண்டு இன்பம் என்பது துறவான் விளையும் மெய்யுணர்வானாய இன்பத்தையே என்க.

துறவினின்று செய்ய வேண்டிய தவஞானங்கள் பல; எடுத்த இப் பிறவியிலேயே வீடுபேற்றை விரும்பினால், 'காலம் உண்டாகத் துறக்க' என்பது *வரதராசபிள்ளை* உரை. இது பொதுமையினும் நில்லாமல் துறவுக்கேற்ற இயைபுடைய உரையாதலைக்காணலாம்.

ஒ) மேற்கோள் பகுதி:

மயிலை.: உய்யவேண்டின் காலமுண்டாகத் துறக்க: துறந்த பின் இப்பிறப்பில் உய்யப் பாலன பல என வினையும் வினைக்குறிப்பும் கொண்டதற்கு மேற்கோள். (நன். 359)

35.3. அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை விடல்வேண்டும் வேண்டிய எல்லாம் ஒருங்கு. (கூசகூ)

உரைப்பகுதி:

அ) *மணக்.:* துறப்பார்க்குப் பொறிகள் ஐந்தினுக்கும் நுகர்ச்சியான[1] ஐந்தினையும் கொல்லுதல் வேண்டும்; அதற்காகத் தாம் விரும்பின எல்லாவற்றையும் ஒருகாலத்திலே விடுதல் வேண்டும் என்றவாறு.

ஆ) *பரிதி.:* எ—து ஐம்புலன்களையும் பொறிவழியிலே செல்லாமல் கெடுக்கவேணும்; ஐம்புலன் உணர்வுகளை விடவேணும் என்றவாறு.

ஈ) *காளி.:* எ—து இனி இதன் உட் கருவியாகிய ஐம்புலன்களையும் துறவுநெறிக்குப் புறவழியாகிய ஐம்பொறிகளின் நுகர்ச்சியைப் பரவாமல் தனது உள்ளத்தால் செறுத்தல்[2] வேண்டும்; மற்று அங்கனம் செறுத்தபின் அவ்வுள்ளந்தான் முன்னின்று விரும்புவதாகிய வேட்கைகளெல்லாம் ஒருதன்மைப்பட விடுதல் வேண்டும்; எனவே அவ்வுள்ளமானது தானும் ஒருவழிப்பட்டு நிற்க வேண்டும் என்பது பொருளாயிற்று என்றவாறு.

உ) *பரிமேல்.:* வீடு எய்துவார்க்குச் செவி முதலிய ஐம்பொறிகட்குரியவாய ஓசை முதலிய ஐம்புலன்களையும் கெடுத்தல் வேண்டும்; கெடுக்குங்கால் அவற்றை[3] நுகர்தற் பொருட்டுத் தாம் படைத்த பொருள் முழுதையும் ஒருங்கேவிடுதல் வேண்டும்.

புலம் என்றது அவற்றை நுகர்தலை,[4] அது மனத்தைத் துன்பத்தானும் பாவத்தானுமன்றி வாராத பொருள்கள் மேலல்லது வீட்டு நெறியாகிய யோகஞானங்களில் செலுத்தாமையின் அதனை 'அடல் வேண்டும்' என்றும், அஃது அப்பொருள்கண்மேல் செல்லின் அந்

---

1 நுகர்ச்சியான ஐந்து-அனுபவிக்கத்தக்க சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐந்து.
2 செறுத்தல்—அடக்கல்; 3 அவற்றை-ஐம்புல இன்பங்களையும்.
4 நுகர்தலாவது ஓசை முதலிய புலன்களைச் செவி முதலிய பொறிகள் அனுபவித்தல்.

நுகர்ச்சி விறகு பெற்ற தழல்போல் முறுகுவதல்லது அடப்படாமை யின், வேண்டிய எல்லாம் 'ஒருங்குவிடல் வேண்டும்'[5] என்றும் கூறினார்.

ஊ) *கவிராசர்*: உடம்பு முதலாகிய ஐந்து பொறிகளுக்கு உரித்தாய் இருக்கிற ஐந்து புலன்களையும் கெடுக்கவேண்டும். அவைகளைக் கெடுக்கும் காலத்து அவற்றாலே அனுபவிக்கிறதற்குத் தாங்கள் தேடின பொருள்களை எல்லாம் ஒருகாலே விடவேண்டும் எ—று.

ஏ) *பழைய 2*: வீடுபேறு பெறுவர்க்கு மெய், வாய், கண், மூக்குச் செவி ஆகிய ஐம்பொறிக்கட் செல்லும் சத்த, பரிச, ரூப, ரச, கந்தம் ஆகிய ஐம்புலன்களைக் கெடுத்தல் வேண்டும்; கெடுக்குங்காலை அப்புலன்கள் அனுபவிக்கும் பொருளையெல்லாம் ஒருமிக்க விடுதல் வேண்டும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக்குடவர், 'பொறிகள் ஐந்தினுக்கும் நுகர்ச்சியாகிய ஐந்து' என்றது. 'மெய்வாய் கண் மூக்குச் செவியாகிய அறிகருவிகள் ஐந்தின் நுகர்ச்சியாகிய சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்பன. அவற்றை அடவேண்டும். அதற்காக நுகர்ச்சிக்கு இடமாகிய பொருள்களையும் உடனேவிடவேண்டும்' என்பர். இவ்வுரையின் விளக்கமே *காளிங்கர் பரிமேலழகருடைய* உரைகள்.

பரிதி உரை, 'புலன்களைந்தையும் பொறிவழிச் செல்லாமல் அடவேண்டும்; புல உணர்வுகளைவிட வேணும்' என்கிறது. சுவை புலன்களே பொறிவழிச்சென்று ஐம்புல உணர்வுகளையடை கின்றன. ஆதலால் புலன்களை யழிக்கவேண்டும். புலனுணர்வுகளை விடவேணும்'என்பதுஇவர் கருத்தாகிறது. 'புலன் என்பது ஒருபண்பு சுவை முதல் ஐந்துமாம் இவை பண்பாதலின் பண்பியான் உடலை விட்டுப் பிரிக்கமுடியாது. பண்பிக்கு அழிவு நேரலாம். பண்புக்கு அழிவில்லை'என்பர் *சிவஞான சுவாமிகள்*(ந.வி.) ஆதலால் ஐந்தன் புலத்தையடல் இயலாது. அடல்வேண்டும் என்றது காரியவடிவில் நின்றதைத் தத்தம் காரணவகையிற் காணுமாறு நிலவச்செய்தல். அதாவது ஊனக்கண்ணிற்குப் புலப்படாமல் உளக்காட்சிக்கு உரிய தாக்குதலாம். பொறிகளால் போகப்பொருளின் மீது படர்தலால் விளைந்த சுவை முதலிய உணர்வுகளையும் ருசிகண்ட பூனை உரியை உரியைத் தாவுதல் போலவும் உள்ளம் போகப்பொருள் களைச் சென்று பற்றி அதனையே எண்ணியிருத்தல் வீடுபேற்றிற்கு இடையூறாகலின் அவையனைத்தையும் ஒருங்குவிடல் வேண்டும்.

5 எரிகிறதைப் பிடுங்கினால் கொதிக்கிறது நிற்றமாப் போல் பொருள்களனைத்தையும் துறந்தால் புலனுகர்ச்சியனைத்தும் குறையும் என்பதாம்.

ஒவ்வொன்றாய்விடில், விட்ட அது மீண்டும் வந்து பற்றி என்றும் இடையூறு விளைவிக்குமாதலின் 'விடல்வேண்டும்' என விதியொடு மரீஇய இலக்கணச் சொல்லில் 'ஒருங்குவிடல் வேண்டும்' என்ற வாறாகும். ஒவ்வொன்றாய் விடுக எனவே விட்ட ஒன்றும் வட்ட மாகி மீளவும் பற்றுமாதலான் இங்ஙனம் கூறியவாறாம்; பொறி புலன்களுக்குள்ள ஒற்றுமை நயம் பற்றி 'பொறிகளின் ஐம்புலத்தை யும் விடல் வேண்டும்' என்றன பிற்கால உரைகள். இவை *மணக் குடவர் பரிமேலழகரை* ஒட்டியே இயங்குவன.

காளிங்கர் உரை பொறிபுலன் மனமாகிய கருவி—காரியம் —கருத்தன் இலக்கணங்களையும் அவற்றின் இயைபையும் நன்கு விளக்குதலின் சிறப்புடையது. ஏனையோர் உரைகள் விடவேண்டு வன எவை என விளக்குதலில் பெரிதும் வேறுபடுகின்றன. *பரிமேல ழகர்* 'நுகர்ச்சிக்காகத் தாம் தேடிவைத்துள்ள பொருள்களை' என்பர். *மணக்குடவர்* 'தாம் விரும்பிய அனைத்தையும்' என்பர். *பரிதி* 'ஐம்புல உணர்வுகளை' என்பர். 'உள்ளம் விரும்புவதாகிய வேட்கைகளை' என்பர் *காளிங்கர்*.

நாலடியார் பின்னர் 'ஐவாய வேட்கையவா நீப்பின்' என்பதால் ஐம்பொறிகளும் ஐம்புலன்களையுடைய போகப் பொருள்களை நுகர, நுகர்ந்ததன் விளைவாய ஐவாய வேட்கை உள்ளத்திலிருக்கும் வகையில் துறவு நிலையாதாகலின் அவற்றையும் ஒருசேர விடுதல் வேண்டும் என்ற உரைகள் சிறந்தன.

ஒ) ஒப்புமைப்பகுதி:

ஐம்புலத்தை அடுதல்:

மெய்வாய் கண் மூக்குச் செவியெனப் பேர்பெற்ற
ஐவாய வேட்கை யவாவினைக்—கைவாய்க்
கலங்காமற் காத்துய்க்கும் ஆற்ற லுடையான்
விலங்காது வீடுபெறும் —*நாலடி.,59*

படநாகந் தோலுரித்தாற் போற்றுறந்து கண்ணவர்மெய் பனிப்ப நோற்றிட்டு
உடனாக ஐம்பொறியும் வென்றார்க்கு உவந்தீதல் தானமாகும்
—*சீவக.,1546*

பேரஞர் இடும்பை எல்லாம் பிளந்திடும் பிறப்பு நீக்கும்
ஆரமிர்து அரிதிற் பெற்றாம் அதன்பயன் கோடல் தேற்றாம்
ஒருமைம் பொறியும் ஓம்பி யுளபகல் கழிந்தபின்றைக்
கூரெரி கவரும் போழ்திற் கூடுமோ குறித்த எல்லாம் —*சீவக.,377*

பொறையு மாற்றலும் பூமியு மேருவு மனையான்
சிறைசெய் சிந்தையன் அந்தமில் பொருள்களைத் தெரிந்தான் —*நீல.,33*

கசட்டுறு வினைத்தொழில் கள்வ ராயுழல்
அசட்டர்கள் ஐவரை அறுவ ராக்கிய
வசிட்டன் … … … … … … … —கம்பராமா.,256

ஐந்தோ டாகிய முப்பகை மருங்கற அகற்றி
உய்ந்து போயினர் —கம்பராமா.,1462

மிடலுறு புலன்கள் வென்ற மெய்த்தவர் —கம்பராமா.,4857

அடக்கி ஐம்புலன்கள் வென்ற தவப்பயன் —கம்பராமா.,4875

ஒருங்கு விடுதல்:

வீடுமின் முற்றவும் ………… —திருவாய்.,1.2:1

35.4. இயல்பாகு நோன்பிற்கொன் றின்மை உடைமை
மயலாகு மற்றும் பெயர்த்து. (௩௪௪)

உரைப்பகுதி:

அ) *மணக்.*: யாதொரு பொருளும் இலதாதல் தவத்திற்கு இயல்பாகும்; பொருளுடைமை மீண்டும் பிறத்தற்குக் காரணமான மயக்கத்தைத்தரும் என்றவாறு.

ஆ) *பரிதி.*: எ—து இப்படியோ என்றும் கண்டு ஆசையைவிடாத போது, ஆசை தொந்திக்கும் [1] என்றவாறு. [2]

ஈ) *காளி.*: எ-து உலகத்துத் துறப்போர் இங்கனம் முழுதுந்துறத்தல் கடனாதலால் மற்று இத்துறவிக்குச்சொல்லப்பட்ட யாதானும் ஒன்றினோடு மறந்தும் ஒருபற்றிலாமையாது? மற்று, இதுவே மரபாகும்; மற்று அது அன்றி இவற்றில் ஒன்றின்கண் மறந்தாயினும் சிறிதோர் பற்றுண்டாயின் அப்பற்றுடைமை பின்னும் பெயர்த்து முன்னமயக்கத்திற்கே காரணமாகும் என்றவாறு.

உ) *பரிமேல்.*: பற்றப்படுவதொருபொருளும் இல்லாமை தவஞ்செய்வார்க்கும் இயல்பாம்; அஃதன்றி, ஒன்றாயினும் உடைமை அத்தவத்தைப் போக்குதலான், மீண்டும் மயங்குதற்கு ஏதுவாம்.

இழிவு சிறப்பு உம்மை விகாரத்தால் தொக்கது. நோன்பு என்பதூஉம் மயல் என்பதூஉம் ஆகுபெயர். பெயர்த்தலான் என்பது திரிந்துநின்றது. நோன்பைப் பெயர்த்தலான் என வேற்றுமைப்படுத்

1. தொந்திக்கும்—கட்டுப்படுத்தும்.
2. 'இப்படி வேறுகண்டு அந்த ஆசையை விடாதபோது ஆசை தொந்திக்கும் என்றவாறு' பாடபேதம்

துக் கூட்டுக. எல்லாப்பொருள்களையும் விட்டு ஒரு பொருளை விடாதவழியும், அதுசார்பாக விட்டன எல்லாம் மீண்டுவந்து தவத்திற்கு இடையீடாய் மனக்கலக்கஞ்செய்யும் என்பது கருத்து. இவை நான்கு பாட்டானும் எனது என்னும்புறப்பற்று விடுதல் கூறப்பட்டது

ஊ) *கவிராசர்.*: தபசு பண்ணிகிறவர்கள் ஒரு பொருளின் மேலேயும் பற்றில்லாமல் துறந்து தபசு பண்ணினால் மோட்சம் அடைவார்கள். இகத்துக்கும் நன்றாய் இருக்கும் பொருள்கள்மேல் ஆசையுடையவனாய் வேஷத்துடனே கூடியிருந்தால் அந்த ஆசையினாலே மயக்கம் வந்து, செய்த தபசும் கெட்டுப்போய் தாழ்ந்தகதியிலே பிறந்து துக்கப்படுவார்கள் (எ—று).

எ) *பழைய* 2: பற்றப்படுவதொரு பொருளும் இல்லாமல் இருப்பது தவம் செய்வார்க்கு இயல்பாகும்; அதுவன்றி, யாதொன்றாயினும் அவரிடத்திருக்கில் அத்தவத்தை அழிக்கும் ஆசைக்கு ஏதுவாம்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'ஒன்றின்மை'

'ஒருபொருளுமிலதாதல்' என்ற *மணக்குடவருரைக்கு* விளக்கமாக அமைந்தது 'பற்றப்படுவதொரு பொருளும் இல்லாமை' என்ற *பரிமேலழகர்* உரை. சொ. த.வும் இங்ஙனமே கூறுவர். *கவிராசர்* 'ஒரு பொருண் மேலும் பற்றின்மை' என்பர். பொருளிருந்தாற்றானே துறவிக்குச் சார்புவகையால் பற்றுண்டாம் எனக் கருதிப் பொருளே இருத்தல்கூடாது என்ற *மணக்குடவர்* உரை கருதத்தக்கது. *பரிதி.* மனத்துறவு பூண்ட ஒரு துறவி கூறுவது போல 'இப்படியோ என்று கண்டும் ஆசையையகற்றாவிட்டால் அவ்வாசை கட்டுப்படுத்தும்' எனக் கூறுவர். 'ஒன்றின்மை நோன்பிற்கு இயல்பாகும்' எனவும், '(ஒன்று) உடைமை நோன்பு(ஐ) பெயர்த்து மற்றும் மயலாகும்' எனவும் சொற் சிதைவு கண்டு பொருள் கூறுகிறார் *பரிமேலழகர்.* இவ்வுரையின் வண்ணம் நோன்பு, நோற்பாரையுணர்த்திப் பண்பாகு பெயராயிற்று. மயல் என்னுங். காரியத்தின் பெயர் அதன் காரணமான பொருளுக்கு காரிய ஆகு பெயராயிற்று.

அங்ஙனமே 'நோன்பிற்கு' என்பதனை 'இயல்பாகும்' என்பதனோடும், 'பெயர்த்து' என்பதனோடும் கூட்டவேண்டியிருத்தலான், முதற்கண் தவஞ்செய்வார்க்கு இயல்பாம் என ஆகுபெயராக்கி நான்கனுருபுப் பொருளிலேயே உரை கண்டனர். 'நோன்பிற்குப் பெயர்த்தலான்' என்பது பொருள் நிரம்பாமையான் நோன்பைப்

பெயர்த்தலான் என நான்கனுருபை இரண்டனுருபாகக் கொண்டு வேற்றுமைப் படுத்தினார். பெயர்த்து என்பதனையும் ஏதுப்பொருள் பெற்ற மூன்றனுருபு பெற்ற தொழிற்பெயர் பெயர்த்து எனத்திரிந்து நின்றது என்றார். இங்ஙனமன்றித் தவஞ் செய்வார்க்கு இயல்பு ஒருபொருளும் இல்லாமையே ஆகும். பொருளுடைமை மீளவும் மயக்கத்தை விளைவிக்கும் என நேரிய பொருளும் காணலாம். இங்ஙனம் கண்டவரே *மணக்குடவர்.*

ஒ) *ஒப்புமைப்பகுதி:*

முற்றும்

சிறையனப் பெடையினோ டுடிச்சே வல்போய்
அறுபத வண்டின மார்ப்பத் தாமரை
உறைவது குழுவினி னீங்கி யோகொடு
கறையற முயல்வதோர் கடவுள் ஒத்ததே —*சீவக.,96*

தாவரு மிருவினை செற்றுத் தள்ளரும்
மூவகைப் பகையரண் கடந்து முத்தியில்
போவது புரிபவர் மனமும் பொன்விலைப்
பாவையர் மனமும்போற் பகையு மற்றதே —*கம்பராமா.,356*

ஓ) *மேற்கோள்பகுதி:*

காரிரத்ன.: பாவிக அலங்காரத்திற்கு மேற்கோள். (*மாற.215*)

சுவாமி.: உயர்ந்த வினைகளெல்லாவற்றினுள்ளும் மிகவுயர்ந்த வினையாவது இரத்தலே என்னும் அறிவுநூல் என்பதற்கு மேற்கோள். (*இ.கொ.80*)

35.5. *மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்கல் உற்றார்க் குடம்பு மிகை.* (௩௪௫)

உரைப்பகுதி:

அ) *மணக்.:* பிறப்பறுக்கலுற்றார்க்கு உடம்பும் மிகையாயிருக்க, மற்றும் சில தொடர்ப்பாடு உளதாவது யாதினைக்கருதியோ? என்றவாறு.

ஆ) *பரிதி.:* எ—து மூன்று வகை ஆசையும்விட்டு என்ன பயன்? தேகம் அன்றோ தபசுக்கு அநேகம் பகையாவது என்றவாறு.

ஈ) *காளி.*: எ—து மற்று இப்பிறவியென்னும் துயரினை மறுத்தலை முயன்றுள்ளார்க்குக் கீழ்ச்சொன்னவை அனைத்திலும் உள்ள தொடர்ச்சியை இனி இது அன்றி வெறும் ஒரு தொடர்ச்சிப்பாடுயாது கொல்லோ? எனவே இதுவன்றி மற்றும் யாதும் இல்லை அஃது யாதோ எனின் தமது உடம்பும் சீவர்க்கு மிகை என்றவாறு.

உ) *பரிமேல்.*: பிறப்பறுத்தலை மேற்கொண்டார்க்கு அதற்குக் கருவியாகிய உடம்பும்[1] மிகையாம், ஆனபின் அதற்கு மேலே இயை பில்லனவும் சில தொடர்ப்பாடு உளவாதல் என்னாம்.

உடம்பு என்ற பொதுமையான், உருவுடம்பும் அருவுடம்பும்[2] கொள்ளப்படும். அவற்றுள், அருவுடம்பாவது பத்துவகை இந்திரிய உணர்வோடும்[3] ஐவகை வாயுக்களோடும்[4] காமவினைவிளைவுக ளோ[5]டுங் கூடிய மனம்; இது நுண்ணுடம்பு[6] எனவும்படும். இதன் கண்பற்று நிலையாமை உணர்ந்த துணையான் விடாமையின், விடு தற்குபாயம் முன்னர்க்கூறுப[7]. இவ்வுடம்புகளால் துன்பம் இடைய றாது வருதலை உணர்ந்து, இவற்றானாய கட்டினை[8] இறைப்பொ ழுதும்[9] பொறாது வீட்டின்கண்ணே விரைதலின், உடம்பு மிகை என் றார். இன்பத் துன்பங்களான் உயிரோடு ஒற்றுமை எய்துதலின், இவ்வுடம்புகளும் யான் எனப்படும். இதனான் அகப்பற்று விடுதல் கூறப்பட்டது.

ஊ) *கவிராசர்*: பிறப்பை அறுத்து மோட்சம் அடையவேண்டும் என்கிறவனுக்குத் தன்உடம்பும் தன்னுடையதல்லாமல் இருக்கை யில். பின்னை ஒருபொருளின் மேலே ஆசை வைக்கிறது என்னபலன் கருதி (எ—று).

ஏ) *பழைய 2*: பிறப்பறுக்க உற்றவர்க்கு மற்றுமொரு தொடர்ச்சி யாகிய பொருள் உண்டோ? இல்லை, உடம்புமாத்திரம் மிகையாம்; அதுவன்றி யாதானும் ஒரு பொருட்டாதல் என்னாம்?

---

1. கருவியாகிய உடம்பும்—நாம்பிறந்ததே வீட்டின்பத்தைப் பெறுதற்கே ஆதலின் உடம்பு பிறப்பிற்கேதுவாகிய மாயையை நீக்கும் கருவி எனப்பட்டது.
2. உருவுடம்பு—பரு உடல்; அருவுடம்பு—நுண்ணுடல்.
3. பத்துவகை இந்திரிய உணர்வு—மெய்வாய்கண் மூக்குச் செவி என்னும் அறிகருவிகளா னும் வாக்கு பாத பாணி பாயு உபத்தம் என்னும் செயற்கருவிகளானும் அறியப் பெறும் ஞானம்.
4. ஐவகை வாயுக்கள்—பிராணன் அபானன் வியானன் உதானன் சமானன் என்பன. பிராணன் ஒன்றே உபாதி வேறுபட்டான் ஐவகைப்பட்டது என்க
5. காமவினைவிளைவு – பொருள்களை விரும்புவதாகிய ஆசையும். நல்வினை தீவினை களான் விளையும் இன்பதுன்பங்களுமாம்; 6- நுண்ணுடம்பு—சூக்தம உடல்.
7. முன்னர் என்றது இவ்வதிகாரத்தின் 10 வது குறளில் சுட்டப்பெறுதலை.
8. கட்டு—பாசபந்தம்; 9. இறைப்பொழுது—கணப்பொழுது.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'உடம்பும் மிகை' என்பதற்குள்ள உரைகளில் 'பிறப்பறுக்கக் கருவியான உடம்பும்' என்ற *பரிமேலழகர்* உரை சிறந்தது. *பரிதி* யுரை கருத்துரை. மிகை—குற்றம். 'அதன் விளைவு பகை. ஆகவே உடல், தவத்திற்குப் பலவகையில் பகையாகும் எனக் கருதிற்று போலும்.

காளிங்கர் உரை 'மற்றும் தொடர்ப்பாடு' என்பதற்குக் 'கீழ்ச் சொன்ன பொருள்களின் தொடர்பு, இந்திரியசுகமான புலனுகர்ச்சித் தொடர்புகளேயன்றி, வேறும் ஒரு தொடர்பு. அது உடம்புத் தொடர்புதான். வேறொன்றும் இல்லை' என்ற கருத்தமையச் செல்கிறது. உரைநடை வேறாயிருப்பினும் முன்னைய *மணக்., பரிமேல்.,* உரைகளை ஒட்டியே செல்வதைக் காணலாம். *கா.சு.* 'பிறப் பறுக்கலுற்றார்க்கு உடம்பே வேண்டாத பொருள். அங்ஙனமாயின் உடலைக்கொண்டு துய்க்கும்ஏனைப்பொருள்களின் தொடர்பு எதற்கு வேண்டும்' என்பர். இதுதெளிவான உரை. *சொ.த.* 'மிகை—சுமை' எனப் பொருள்கண்டு 'வெறும் சுமைகள் வேண்டாம்' என்பர். இதன் முடிபு அகப்பற்றே சுமை. அகப்பற்றாகிய உடம்பிற் பற்றை வளர்க் கும் புறப்பற்றுக்களாற்பயன் என்ன என்பது. இக்குறட்கு எல்லாரும் உரைக்குமுறையிலேயே உரைகண்டு, 'புறப்பற்றையும் கூடாதென விலக்கி, பிறவியறுக்கும் கருவியாகமட்டும் எடுத்தஉடலைப் பயன் படுத்திக்கொள்ளவேண்டும்'எனக்கருதுவர் *இராமலிங்கனார்.* உடம்பு பருவுடம்பும் நுண்ணுடம்பும் என இருவகைப் படுமாயினும் பருவுடம் பின்றி நுண்ணுடம்பு காரியப்படாதாகையான் எது என வரையாது 'உடம்பும் மிகை' என்றனர் வள்ளுவர் எனக்கோடலே சிறந்தது.

ஒ) ஒப்புமைப்பகுதி:

'உடம்பும் மிகை'

வேதமும் வேதியர் அருளும் வெஃகலாச்
சேதனை மன்னுயிர் தின்னும் தீவினைப்
பாதக அரக்கர்தம் பதியின் வைகுதற்கு
ஏதிலென் உடலமும் மிகையென் றெண்ணுவீர் *—கம்பராமா.,3467*

உடற்பொறை துறந்து உயர்பதம் புக்க *—கம்பராமா.,50*

முற்றும்

சையம் பூண்டுச முத்திர நீந்துவான்
உய்யு மேற்றொடர்ப் பாட்டினிங் கியாவையும்

எய்தி னார்சஞு முய்வவென் றோதினான் —சீவக.,1426

புறத்தினும் அகத்தினும் போகத் தொடர்ப்பாடு விட்டு
அறத்திடை யருளினால் ஆருயிரை யோம்பியும்
திறத்துடன் சமிதியும் சிந்தையி னடக்கமும்
திறத்திறத் துணர்ந்துபின் தியான முற்றினார்களே —உத.,362

உண்டியா லுடம்புளதா லுடம்பினால் உணர்வாமென்
றெண்டிசையும் பரந்திசைப்ப வீதுனக்கே தெரியாதோ
தண்டியாய்க் கழியாது தவஞ்செய்த லுறுதியேற்
பண்டியாற் போக்குநின் பஃறொடர்ப்பா டெனச்சொன்னான் —நீல.,282

பொன்னருங் கலனும் தூதும் புறத்துள துறத்தல் வம்பே
நன்னுத லொருத்தி தன்பா கைத்துள நாணுநீத்தான் —கம்பராமா.,1103

மக்களைக் குரவர் தம்மை மாதரை மற்று ளோரை
ஒக்குமின் னுயிரன் னாரை யுதவிசெய் தாரோ டொன்றத்
துக்கமித் தொடர்ச்சி யென்று துறப்பராற் றுணிவு பூண்டோர்
மிக்கது நலனே யாகி வீடுபே றளிக்கு மன்றே —கம்பராமா.,754

ஓ) மேற்கோள் பகுதி:

இளம்.: காமநீத்த பாலினானும் என்பதற்கு மேற்கோள். (தொல். பொருள்.75)

35.6. யானெனை தென்னும் செருக்கறுப்பான் வானோர்க் குயர்ந்த உலகம் புகும். (௩௪௬)

உரைப்பகுதி:

அ) மணக்.: யான்என்றுப் எனது என்றும் நினைக்கின்ற மயக்கத்தை அறுக்கும் அவன், தேவர்க்கு மேலாகிய உலகத்தின்கண்ணே செல்லும் என்றவாறு.

ஆ) பரிதி.: எ—து யான் என்றும், எனது என்றும் சொல்லுகின்ற செருக்கறுப்பான் புகும், வானோர்க்கு உயர்ந்த சிவலோகம் என்றவாறு.

ஈ) காளி.: எ—து இங்குச் சொன்ன உடலும் புலன்களும் உள்ளமும் ஆகிய ஒரு தொகைப் பாட்டினை யான் என்று மயங்கு மயக்கமும், இனி மற்று இதனையும் கீழ்ச்சொன்ன மனை மக்கள் செல்வம் முதலியவற்றையும் எனது என்று மயங்கும் மயக்கமும் என இவ்விரண்டு

மயக்கத்தையும் தேர்ந்து உணர்ந்து செலவறவிடுக்கும்[1] அவனே வானோராகிய கடவுளர்க்கெல்லாம் மேற்பட்ட முழுப்பேரின்பமாகிய முத்தியைப் பெறுவன் என்றவாறு.

உ) *பரிமேல்.*: தானல்லாதவுடம்பை யான் என்றும் தன்னோடியைபு இல்லாத பொருளை எனது என்றுங் கருதி அவற்றின்கண் பற்றுச் செய்தற்கு ஏதுவாகிய மயக்கத்தைக் கெடுப்பான், வானோர்க்கும் எய்தற்கு அரிய வீட்டுலகத்தை எய்தும்.

மயக்கம் அறியாமை, அதனைக்கெடுத்தலாவது தேசிகர்பால் பெற்ற உறுதிமொழிகளானும்[2] யோகப்பயிற்சியானும் அவை யான் எனது அன்மை தெளிந்து, அவற்றின்கண்[3] பற்றை விடுதல். சிறப் பும்மை விகாரத்தால் தொக்கது[4]. இதனான் இவ்விருவகைப் பற்றி னையும் விட்டார்க்கே வீடுளது என்பது கூறப்பட்டது.

ஊ) *கவிராசர்*: தானல்லாத உடம்பைத் தான் என்றும் தன்னோடு கூடாத பொருளை எனது என்றும் கருதி அவற்றினிடத்திலேயே ஆசை உண்டாக்க மயக்கத்தைக் கெடுத்தவன் தேவர்களுக்கும் புகு தற்கு அரிதாகிய மோட்சத்தை அடைவன் (எ—று).

ஏ) *பழைய 2*: தானல்லாத உடம்பைத் தான் என்றும், தனதல்லாத பொருளைத் தனதென்றும் கருதும் செருக்கைக் கெடுப்பான் யாவன்; அவன் வானோர் உலகுக்கும் உயர்ந்த உலகத்தில் புகும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'செருக்கு' —'மயக்கம்'. அதாவது அறியாமை. இச்சொற்குப் பொருள் கூறாது விடுவர் குழந்தை.

'வானோர்க்குயர்ந்த உலகம்'— 'வீட்டுலகம்', 'தேவர்க்கும் மேலாய உலகம்'என்றே கூறுவர்அனைவரும்.'தேவர்க்கும் கிட்டாத உயர்ந்த உலகம்' என்பர் *சி.இ.* 'மேலானவர்க்கெல்லாம் மேலான வனாக மதிக்கப்படுவான்' என்பர் *குழந்தை.* வானோர்—மேலான வர் மறுமை—வீடு, வான், நரகு முதலியன உள, என்பதை நூல் நெறியானன்றி அறியக் கூடாமைகண்ட இவர் இங்ஙனம் கூறுவர். ஆயினும் வள்ளுவர் அனைத்தையும் ஒப்பும் கருத்தினர் என்பதை மனத்துட்கொண்டு உரை காணல் நன்று.

---

1. செலவறவிடுக்கும்— சென்றதும்அற நீக்குதல். அதாவது சென்ற சுவடும் இன்றி விடுத்தல்.
2. உறுதிமொழி—நன்மையைப்பயக்கும்உபதேசமொழி.
3. அவற்றின்கண்--யான் எனது என்னும் இருவகைப்பற்றின் கண்ணும்.
4. வானோர்க்கும் உயர்ந்த உலகம் என்றதில் உயர்வு சிறப்பு. இவ்வும்மை தொக்கது என்றார்.

ஓ) ஒப்புமைப்பகுதி:

'வானோர்க்குயர்ந்த உலகம்':

... ... வானோர்
உலகின்மே லுலகோ ... ... —கம்பராமா.,94

... ... வரம்பிலா உலகு —கம்பராமா.,4199

முற்றும்:

நீர்நும தென்றிவை
வேர்முதல் மாய்த்திறை
சேர்மின் ... ... —திருவாய்.,1.2:3

ஆவுக் காயினு மந்தணர்க் காயினும்
யாவர்க் காயினு மெளியவர்க் காயினும்
சாவப் பெற்றவ ரேதகை வானுறை
தேவர்க் குந்தொழுந் தேவர்க ளாகுவர் —கம்பராமா.,2742

ஔ) மேற்கோள் பகுதி:

வெள்ளி: (முத்தி—பேருரை—பக்கம் 125)

35.7. பற்றி விடாஅ இடும்பைகள் பற்றினைப்
பற்றி விடாஅ தவர்க்கு. (௩௪௭)

உரைப்பகுதி:

அ) *மணக்.:* பொருள்களைப்பற்றி விடாதவரைத் துன்பங்கள் விடாதே பற்றிநிற்கும் என்றவாறு.

இது பொருள்களைத் துறவாக்கால் வினைகெடாது என்றது.

ஆ) *பரிதி.:* எ—து மூன்றுவகை ஆசையும் (இப்படி வேறு கண்டு அந்த ஆசையை விடாதபோது ஆசை தொந்திக்கும் எ—று)துறந்து, தவசு பண்ணும்போது, தவசு சடுதியிலே[1] பலிக்கும்; அல்லது தவசு பலியாது என்றவாறு[2].

ஈ) *காளி.:* எ-து மற்று ஆகிய மனைமக்கள் செல்வம் முதலிய பலபற்றினையும் தமது உள்ளமானது தோய்ந்துகிடக்கின்ற காதலைக்கைக் கொண்டு விடாதிருக்கின்ற. அறிவிலோர்க்கு, எஞ்ஞான்றும்தம்மைச்

---

1. சடுதியிலே—விரைவில்; 2. பலியாது--பயன் விளையாது.

செறியப்[3] பற்றிக்கொண்டு விட்டு நீங்காது; யாவை எனில் பிறவி முதலாகிய துயரங்கள் என்றவாறு.

உ) *பரிமேல்.*: இருவகைப்பற்றினையும் இறுகப்பற்றி விடாதாரை, பிறவித்துன்பங்கள் இறுகப்பற்றிவிடா.

இறுகப்பற்றுதல் காதல் கூர்தல், விடாதவர்க்கு என்பது வேற்றுமை மயக்கம்[4]. இதனால் இவை விடாதவர்க்கு வீடில்லை என்பது கூறப்பட்டது.

ஊ) *கவிராசர்*: அகப்பற்றாகிய தன்உடம்பு முதலியவற்றின்மேல் ஆசையையும் புறப்பற்றாகிய பொருள்மேல் ஆசையையும் ஆகிய இருவகைப் பற்றையும் இறுகப்பற்றின் ஆசையை விடாதாரைப் பிறவித்துன்பம் இறுகப்பற்றி நீங்காது அவ்விருவகைப்பற்றையும் இறுகப் பற்றுதலாவது, அவற்றைவிடாமல் இருக்கிறது. ஆசையை விடாமல் இருக்கிறபேர்களுக்கு மோட்சம் இல்லை (எ—று).

ஏ) *பழைய 2*: அகப்பற்றும் புறப்பற்றும் இறுகப்பற்றி விடாதவர் களைப் பிறவித் துன்பங்களும் இறுகப்பற்றிவிடா.

மல்லர் : பற்றுதலைப் பேணிவிடமாட்டாதவர்களைத் துன்பங்கள் தொடர்ந்துகொண்டு விடாது எ—று.

செல்வங்கள் மேலேயும் தன்னுடம்பின் மேலேயும் பற்றுதலாயி ருக்கிறது. அனேகம் பாவங்களுக்கு ஏதுவாகையில் அந்தப்பற்று தலை விடாதவனை அந்தப் பாவங்களால் வருகிற கேடு ஒருக்கா லும் விடாது என்பது கருத்து.

பற்றல்-பற்றிக்கொள்ளுதல்; விடாஅ—விடாத; இடும்பை—துன்பம்; பற்று—பற்றுதல்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

‘பற்று’

‘பொருள்கள்’ எனப்பொருள் கூறுவர் *மணக்.*, பற்று என்ற முதனிலைத் தொழிற்பெயர் பற்றப்படுவதாகிய பொருள்மேனின் றது. தொழிலாகு பெயர் என்பது இவர் கருத்துப்போலும். ‘மற் றாகிய மனைமக்கள் செல்வமுதலாய பலபற்று’ என்பர் *காளிங்கர்*. ‘மூவகை ஆசை’ *‘பரிதி*. ‘இருவகைப்பற்று’ *பரிமேலழகர்*.

---

3. செறிய—நெருங்க அல்லது சிறுக.
4. விடாதவர்க்கு--விடாதவரை எனப்பொருள்படுதலின் நான்கனுருபாகிய ‘கு’என்பது தன் பொருளிற்றீர்ந்து செயப்படுபொருளில் வந்தது வேற்றுமை மயக்கம்.

'இடும்பைகள்'

'பிறவித்துன்பங்கள்' *பரிமேல்* ; 'பிறவி முதலாய துயரங்கள்' *காளிங்கர்*, பிறவி முதலாய துன்பங்கள் என்றது பிறவித் துன்பமும், அதுபற்றி நிகழ்வனவாகிய வினைகளான் விளையும் துன்பங்களும் என்க.

ஒ) ஒப்புமைப்பகுதி:

முற்றும் :

உற்ற உதிரம் ஒழிப்பான் கலிங்கத்தை
மற்றது தேய்த்துக் கழுவுத லென்னொக்கும்
பற்றினா னாயபாவத்தை மீட்டும்
பற்றொடு நின்று பறைக்குறு மாதே, *வளை., 43*

... ... பெரிய இன்பத்
துறவியார்க் கல்லது துன்பம் நீங்காதென —*சம்பந்தர். ஆரூர்., 5*

தந்தைதாய் தன்னுடன் தோன்றினார் புத்திரர் தாரமென்னும்
பந்தம்நீங் காதவர்க் குய்ந்துபோக் கில்லெனப் பற்றினாயே —*சம்பந்தர். ஆரூர்., 9*

35.8. தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர். (௬௪௮)

உரைப்பகுதி:

அ) மணக்.: பற்றறத் துறந்தார் முத்தியைத் தலைப்பட்டார்; அல்லாதார் மயங்கிப் பிறப்பாகிய வலையிலே அகப்பட்டார் என்றவாறு.

இது மறுமைப்பயன் கூறிற்று.

ஆ) பரிதி.: எ—து ஞானத்தாலே மேற்பட்டவர் மூன்றுவகை ஆசையும் துறந்தார்; ஞானமில்லாதார் மயங்கி ஆசை வலைப்பட்டார் என்றவாறு.

இ) காளி.: எ—து முன்னம் சொன்ன முத்தியின்கண் தலைப்பட்டோர் ஆவார் யாதொன்றின்மாட்டும் யாதும் ஒரு பற்றில்லாதவாறு திருந்தத் துறந்தவரே; மற்று ஏனையாரெல்லாம் அங்கனம் பற்றற மாட்டாது அறிவு மயங்கிப் பிறவியாகிய பெருவலையுள்பட்டு செல்கின்றார் என்றவாறு.

உ) பரிமேல்.: முற்றத்துறந்தார் வீட்டினைத் தலைப்பட்டார்; அங்ஙனம் துறவாதார் மயங்கிப் பிறப்பாகிய வலை[1]யுட்பட்டார்.

1. பிறப்பாகிய வலை—உயிர்களை வீட்டுலகு புகாவண்ணம் தடுத்துநிற்பதால்மயல்வலை எனப்பட்டது என்க.

முற்றத்துறத்தலாவது பொருள்களையும் இருவகை உடம்பி[2] னையும் உவர்த்துப் பற்றற விடுதல்[3]; அங்ஙனம் துறவாமையாவது அவற்றுள் யாதானுமொன்றின்கட் சிறிதாயினும் பற்றுச்செய்தல். துணிவுபற்றித் 'தலைப்பட்டார்'[4] என்றும், பொய்ந்நெறி கண்டே[5] பிறப்புவலையுள் அகப்படுதலின் 'மயங்கி' என்றும் கூறினார்.

ஊ) *கவிராசர்:* சகலமான ஆசாபாசங்களையும் துறந்துவிட்ட பேர்கள் மோட்சத்தை அடைந்தார்கள். ஆசையைத் துறவாத பேர்கள் மயங்கிப்பிறவியாகிய வலையிலே அகப்பட்டார்கள் (எ—று).

ஏ) *பழைய 2:* முற்றத் துறந்தார் மோட்சத்தைத் தலைப்பட்டார். அப்படி முற்றத் துறவாதவர் மயங்கிய பிறப்பாகிய வலையில் பட்டார்.

மல்லர்: எல்லாப் பற்றுதலும் நீங்கப் பண்ணித் துறந்தவர்கள் மோட்சத்தை எதிர்த்தவர்கள். மற்றவர்கள் மயங்கி இச்சைகளுடைய வலையிலே அகப்பட்டவர்கள் எ—று.

எல்லாப் பற்றுதலையும் விட்டவனுக்கு மோட்சத்தை அடைகிறதுக்கு ஒரு விக்கினமில்லாத படியினாலே மோட்சம் அவன் வசமாயிருக்குது என்று சொல்லாமல் பற்றுதலை விடாதவனுக்கு வலைக்குள்ளே அகப்பட்டவனை எங்கும் போகாதபடிக்கு வலை மறிக்குமே. அப்படிப்போல மோட்சத்துக்குப் போறதுக்கு அந்தப் பற்றுதல் தானே தடைபண்ணும் என்கிறதினால் அவன் மோட்சத்தை அடைகிறதுக்கு அவகாசமில்லாமல் கிடப்பான் என்பது கருத்து.

தலைப்படுதல்—எதிர்த்தல்; தீரத்துறந்தார்—முற்றுந் துறந்தவர்கள்; வலைப்படுதல்—சிறைப்படுதல்; மற்றையவர்- மற்றவர்கள்,

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'தீரத்துறந்தார்'

'பற்றறத்துறந்தார்' *மணக்.*; 'முற்றத்துறந்தார்' *சொ.த.*; *பரிமேல்.*; 'திருந்தத்துறந்தவர்' *காளி.*, *வ.உ.சி.*

'தலைப்பட்டார்'

'முத்தியைத் தலைப்பட்டார்' *காளி.*, *மணக்.*; வீட்டினைத் தலைப்பட்டார்' *பரிமேல்.*; 'தலை—கடவுள் தலைவன், கடவுளை யடைந்தார்' *வ.உ.சி.*

---

2. இருவகை உடம்பு—நுண்ணுடலும் பூதஉடலும் என்க.
3. பற்றற விடுதல்—யான் என்னும் பற்றும் அற நீக்குதல் அதாவது உடம்பின்கண்ணும் பற்றறத் துதித்தல்.
4. தலைப்படுவார் என்னாது தலைப்பட்டார் என இறந்த காலத்தாற் கூறியது துணிவு பற்றிய கால வழுவமைதி.
5. 'பொய்ந்நெறி கண்டும்' 'பொய்ந்நெறி கண்டிருந்தும்' என்பனவும் பாடம்.

இவ்வுரைகளில் 'தலைப்பட்டார் 'என்பது ஒரு சொல்லாகக் கொண்டு வீட்டினைத் தலைப்பட்டார். அதாவது சேர்ந்தனர் என்பதே வள்ளுவர் உள்ளம். *மு.வ* 'உயர்ந்த நிலையினர்' என்பர், அதுவும் தலை—தலைமை, தலைப்படுதல்—தலைமையாதல் உயர்தல் என்னும் பொருளதாகும்.

ஒ) *ஒப்புமைப்பகுதி*:

'தீரத்துறந்தார்':

படநாகந் தோலுரித்தாற்போற்றுறந்து கண்ணவர்மெய் பனிப்ப நோற்றிட்டு
உடனாக ஐம்பொறியும் வென்றார்க்கு உவந்தீதல் தானமாகும்
—*சீவக*.. 1546

முற்றுறு பரங்க ளெல்லா முறைமுறை பாசத்தோடும்
பற்றற வீசி யேகி யோகியிற் பிரிவு தீர்ந்த —*கம்பராமா*., 874

முற்றும்:

இன்மை யிளிவர முடைமை யுயிர்க்கச்சம்
மன்னல் சிறிதாய் மயக்கம் பெரிதாகிப்
புன்மை யுறுக்கும் புரையில் பொருளைத்
துன்னா தொழிந்தார் துறவோ விழுமிதே —*வளை*., 37

இறப்பெனும் மெய்ம்மையை இம்மை யாவர்க்கும்
மறப்பெனும் அதனின்மேற் சேடு மற்றுண்டோ
துறப்பெனும் தெப்பமே துணைசெ யாவிடின்
பிறப்பெனும் பெருங்கடல் பிழைக்க லாகுமோ —*கம்பராமா*., 1419

தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றையவர் என்று—நிலைத்தமிழின்
தெய்வப் புலமைத் திருவள்ளுவர் உரைத்த
மெய்வைத்த சொல்லை விரும்பாமல் —*நெஞ்சுவிடு*., 24—25

35.9. *பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் மற்று நிலையாமை காணப் படும்*. (௩௪௯)

உரைப்பகுதி:

அ) *மணக்*.: ஒருவன் யாதொரு பொருளோடும் பற்றற்ற பொழுதே அது பிறப்பை அறுக்கும்[1]. அதனை விடாதபோது நிலையாமை காணப்படும் என்றவாறு.

1. அறுக்கும்—நீக்கும்;

இஃது எல்லாப் பற்றினையும் அறுக்கப்பிறப்பு அறும் என்றது.

ஆ) *பரிதி*.: எ—து மூன்று வகை ஆசையுந் துறந்தபேர்க்குப் பிறப்பு இல்லை. இதில் ஒன்றிரண்டு துறந்தாலும், பிறப்பு உண்டு, கீழ்ப் படுத்தாது மேற்படுத்தும் என்றவாறு.

ஈ) *காளி*.: எ—து இங்கனமே பற்றற்ற இடத்து மற்று அப் பொழுதே அப்பற்றறுதியாகிய[2] நல்துறவு தன்பிறப்பறுக்கும் எனவே முத்தியை எய்தும். மற்று ஏனைய எல்லாம் பற்றோடு வருதலால் அந்தந்தப் பொருள்பற்றி நின்ற நெஞ்சோடும் பிறந்தும் இறந்தும் திரிந்து உழலவேண்டுதலால் இந்த நிலையாமையே எப்பொழுதும் காணப்படும் இவனால்; எனவே, எஞ்ஞான்றும் முத்தியின்பம் காண மாட்டான் என்பது பொருள் ஆயிற்று என்றவாறு.

இனி இவ்வுலகத்து மக்கட் பிறந்தோரில் சிறந்தோராகிய சான்றோர் முன்னர் தம் குலத்தியல்பாகிய இல்லறம் இயற்றிப் பின்னர் மற்றதன் பயனாகிய துறவறமியற்றுதற்கு அதனைமுனிந்து[3] நீத்துப் போந்து[4] துறவறம் இயற்றிய பின்னர் இத்துறவறத்தின் பெரும் பயனாகிய முத்தியின்பத்து முயன்றமைதல் இயல்பாதலால் இதன் பின்னரே மெய்யுணர்தல் என்னும் பெயரினான் அதனை அறிவிக் கின்றது.

உ) *பரிமேல்*.: ஒருவன் இருவகைப்பற்றும் அற்றபொழுதே, அப் பற்றறுதி அவன் பிறப்பை அறுக்கும், அவை அறாதபொழுது அவற் றால் பிறந்து இறந்து வருகின்ற நிலையாமை காணப்படும்.

காரணம் அற்றபொழுதே காரியமும் அற்றதாம் முறைமைப் பற்றி, பற்றற்ற கண்ணே என்றார்[5]. ''அற்றது பற்றெனில் உற்றது வீடு''[6] என்பதூஉம் அதுபற்றி வந்தது.[7] இவை இரண்டுபாட்டா னும் அவ்விருமையும் ஒருங்கு கூறப்பட்டன.[8]

ஊ) *கவிராசர்*: ஒருவன் இரண்டுவகை ஆசையும் அற்றபோதே பொல்லாத பிறப்பை அறுப்பான். அந்த ஆசையை விடாதபோது நிலையில்லாததாகிய பிறவிச் சமுத்திரத்தைக் காண்பான் எ—று.

---

2. பற்றறுதியாகிய—அவாவகற்றுதலாகிய; 3. முனிந்து—சினந்து
4. நீத்துப் போந்து—விட்டு நீக்கி.
5. காரணம் அற்ற போதே காரியமும் அறுதலாவது, எடுத்துக்காட்டாகக் குடத்தின் காரணமான மண்ணும் நெருப்பும் அற்றபோதே இவற்றின் காரியமாகிய புகையொழி தல் போல, இருவகைப்பற்றும் அற்றபோதே அவற்றின் காரியமாகிய புகையும ஒழிதல் போல்வது. பிறப்பிற்குக்காரணம்பற்று. அது ஒழியின் பிறப்பும் அறும என்ற தாம். ஈண்டுக்காரணமூன்றனுள் முதற் காரணத்தை எண்க.
6. திருவாய்மொழி, பதிகம் 2.பா.5.
7. அதுபற்றி— காரணம் அற்றபோதே காரியமும் அறும் முறை.
8. அவ்விருமை— வீடுண்டாதலும் பிறப்புண்டாதலுமாய இருமை.

ஏ) *பழைய 2 :* ஒருவன் இருவகைப்பற்றும் அற்றபொழுதே அப்பற்றற்றது அவன் பிறப்பை அறுக்கும். பற்று அறாதபோது பிறவிக் கடல் காணப்படும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'யாதொரு பொருளோடும் பற்றற்ற பொழுதே' என்ற *மணக்குடவர்* உரை எப்பொருளோடும் எவ்வகையினும் பற்றுக் கூடாது எனப்பற்றின் முற்றறுதியை வலியுறுத்துகிறது. 'மற்று' என்பது வினைமாற்றாய் பற்றறாமையையுணர்த்தியது. இவருடைய சிறப்புக் குறிப்பும் இக்கருத்தையே வலியுறுத்துகிறது.

'ஒன்றிரண்டு துறந்தாலும் பிறப்புண்டு' என்ற *பரிதியார்* கருத்தும் முற்றத் துறத்தலையே வற்புறுத்துகிறது. 'நிலையாமை காணப்படும்' என்பதற்குப் 'பிறப்புண்டு' என்பது நேர்பொருளாகாது. பிறப்புண்டெனின் தோற்றமுண்டேல் மரணம் உண்டு ஆதலின் நிலையாமையே அறியப்படுவதாயிற்று என்பதாம். *காளிங்கர்* உரை இக்கருத்தைத் தெளிய உரைக்கிறது. *காளிங்கருடைய* சிறப்புக் குறிப்புக்கள் பிள்ளைமைத் துறவைப்பேணாமல், இல்லறமிருந்து உவர்ப்புக்கண்டுழி எய்தும் உண்மைத் துறவையே வற்புறுத்துதல் காண்க.

கவிராசபண்டிதர் 'நிலையாமை' என்பதற்கு 'நிலையில்லாத பிறவிச்சமுத்திரம்' என உரை காண்பர்.

இராமலிங்கனார் 'பற்றற்ற கண்ணே என்பதில் 'கண்' என்பது இடம் என்னும் பொருள் தந்து நிலையைக் குறிப்பது' என்றும் 'அப்பொழுதே—உடனே அற்றபொழுதே' என உரை காணக்கூடாது என மறுப்பர். *மணக்குடவர், பரிமேலழகர்* போன்றார் 'வேனிற்கண் பூத்தது' என்புழிப் போலக் காலம் இடமாதல் உண்டாதலின் பற்றற்ற கண்ணே—பற்றற்ற அப்பொழுதே' என்றனராதல் கூடும். 'பற்றறுதி விரைந்து பயன்தரும்' என்பதிற் சிறப்புக் காண்பார் இங்ஙனம் கூறினராதல் வேண்டும். மேலும் கவிஞர் 'அவாவின்மையாகிய பற்றறுதியை இறுதிவரையிலும் காக்கவேண்டும் இல்லையானால் சாம் உள்ள பற்றின் காரணமாகப் பிறப்பு வருதல் கூடும். இறுதிவரை செம்பொருளைப் பற்றி நின்றால்தான் உயிருக்கு மறுபிறப்புண்டாகாது' என்பர்.

இவ்வுரைகளுள் *மணக்குடவர்* போன்றார் உரைகளிற் சிறந்தவற்றை ஆங்காங்குக்கண்ட நாம், தெளிவும், உரைநயமும் உடைமையின் *பரிமேலழகர்* உரைச்சிறப்பை உணருகிறோம்.

ஓ) ஒப்புமைப் பகுதி:

முற்றும்:

பிறந்தோ ருறுவது பெருகிய துன்பம்
பிறவா ருறுவது பெரும்பே ரின்பம்
பற்றின் வருவது முன்னது பின்னது
அற்றோ ருறுவது அறிக —*மணி.*, 2:64—67

துன்பந் தோற்றம் பற்றே காரணம்
இன்பம் வீடே பற்றிலி காரணம் —*மணி.*, 30:186—187

அற்றது பற்றெனின் உற்றது வீடு —*திருவாய்.*, 1—2:5

பற்றவா வேரொடும் பகையறப் பிறவிநோயாய்
முற்றவா லுணர்வுமேல் முடுகினார் அறிவுசென்று
உற்றவா னவனிருந்தி யோகுசெய் தனன்எனில்
சொற்றவா மளவதோ மற்றிதன் தூய்மையே —*கம்பராமா.*, 344

கடலுறு மத்தி தென்னக் கனவரை திரியுங்காலை
மிடலுறு புலன்கள் வென்ற மெய்த்தவர் விசும்பி லுற்றார்
திடலுறு கிரியிற் றத்தஞ் செய்வினை முற்றிமுற்றா
உடலுறு பாசம் வீசா வும்பர்ச்செல் வாரை யொத்தார்
—*கம்பராமா.*, 4857

பற்றினைப் பற்றினாலே பற்றெனப் பற்றினாரைப்
பற்றுதான் இடும்பை நீருள் பரியட்டந் தன்னை ஆக்கும்
பற்றினைப் பற்றிலாமை பற்றெனப் பற்றினாரைப்
பற்றுவிட் டிடும்பை நீருள் பரியட்டம் ஒழிக்கும் கண்டீர் —*மேரு.*, 323

35.10. பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு. (௩௫௦)

உரைப்பகுதி:

அ) மணக்.: பற்றறுத்தாவது பற்றினைப் பற்றுக; அதனைப் பற்றுங்கால், பயன் கருதிப் பற்றாது பற்று விடுதற்காகப் பற்றுக என்றவாறு.

பற்றற்றான் பற்றாவது தியான சமாதி[1]. பின் மெய்யுணர்தல் கூறுதலான், இது பிற்படக் கூறப்பட்டது.

---

1. தியானசமாதி--எண்ணுதலும், எண்ண முதிர்வால் அதுவாயே இருத்தலும்-அதாவது கடவுள்பால் விட்டுவிட்டுச் செல்லும் அந்தக்கரண ஓட்டம் தியானம். அந்தக்கரணங்கள் ஒருமுகமாயிருத்தல் சமாதி.

ஆ) *பரிதி*.: எ—து காரணவுபாதி எழுகாரியத்தில்[2] பற்றற்றான் ஸ்ரீபாதத்தைப் பற்றுக; இந்தப் பற்றினையே உறுதியாய்ப் பற்றுக; ஆத்மாவுக்கு உபாதியாகிய காரியமும் உபாதி ஏழும் விடவேண்டில் என்றவாறு.

ஈ) *காளி*.: எ—து ஒருவர் தமதுள்ளத்தால் பற்றுடையராக வேண்டும் மற்று யாதினை எனின் முன்னஞ்சொன்ன முறைமையின் எப்பற்றும் அற்றோன் யாதோர் இன்பத்தைப்பற்றி நின்றான்; மற்று அதனைத் தானும் உறுதற்கு மற்று இனிமுன்னம் தனது உள்ளத்தினால் முயல்வதாக வந்து பற்றினானன்றே அதன்பயன் முற்றுந் துணையும் அதனை முறுகநின்று[4] முயலுக; யாதற்கோ எனில் மற்றினால் வரும் இன்பம் அன்றி மற்று எப்பற்றும் விடுதற்கு என்றவாறு.

உ) *பரிமேல்*.: எல்லாப் பொருளையும் பற்றி நின்றே பற்றற்ற இறைவன்[5] ஓதிய வீட்டுநெறியை இதுவே நன்னெறி என்று மனத்துக் கொள்க; கொண்டு, அதன்கண் உபாயத்தை அம்மனத்தால் செய்க, விடாது வந்த பற்று விடுதற்கு .

கடவுள் வாழ்த்திற்கு ஏற்ப[6] ஈண்டும் பொதுவகையால் 'பற்றற்றான்' என்றார். பற்றற்றான்பற்று என்புழி ஆறாவது செய்யுட்கிழமைக்கண் வந்தது. ஆண்டுப் பற்று என்றது பற்றப்படுவதனை[7]. அதன்கண் உபாயம் என்றது தியான[8] சமாதிகளை[9]. விடாது வந்த பற்று என்பது அநாதியாய் வரும் உடம்பிற் பற்றினை. அப்பற்று விடுதற்கு உபாயம் இதனால் கூறப்பட்டது.

ஊ) *கவிராசர்*: ஆசையாகிய பற்றை விடுகிறதற்குச் சகல ஆசா பாசங்களையும் அறுத்து விட்ட ஜினேஸ்வரனுடைய[10] பாதங்களையே

---

2. காரணவுபாதிஎழு காரியம்--காரணத்தானாய காரியத்தால் எழுந்த ஏழு காரியங்கள்.
3. உபாதி ஏழு உபாதி--சாத்தியத்திலே வியாபித்துச் சாதனத்தில் வியாபமில்லாதது அது ஏழுவகைப்படும். இவைகளின் விரிவையும் விளக்கத்தையும் தருக்க பரிபாடையுள் 18லும் காண்க.
4. முறுகநின்று—எண்ணம் நிறைவெய்தும் வரை உறுதியாக நின்று.:
5. பற்றிநின்றே பற்றறுதல்--காற்று முதலாகிய நான் குபூதங்களையும் அவற்றின் காரியத்தையும் பற்றி நின்றே பற்றற்றிருத்தல் போல, இறைவன் எல்லாப்பொருள்களையும் பற்றி நின்றே பற்றற்றவன் என்பது,
6. கடவுள் வாழ்த்திற்கு ஏற்ப--சமயச்சார்பின்றிப் பொதுவாகக் கூறிய கடவுள் வாழ்த்திற்கேற்ப
7. பற்றற்றான் பற்று--பற்றற்ற இறைவன் ஓதிய வீட்டுநெறி. இதுகபிலரது பாட்டு என்புழிப்போல் ஆறாம்வேற்றுமைத்தொகை செய்யுட்டற்கிழமைக்கண் வந்தது. இறைவன் ஓதிய வீட்டுநெறி; எழுதாமறையாதலின் தற்கிழமை எனத்துணியப் பெற்றது.
8. தியானம்--கடவுளிடத்து விட்டுவிட்டுச் செல்லும் மன முதலிய அகக்கருவிகளின் ஓட்டம்.
9. சமாதி--மனமுதலியன ஒருமுகப்படுதல்; 10, ஜினேஸ்வரன்--அருகன்.

பற்றாக நம்பி அவர்சொன்ன ஆகம சாஸ்திரத்தின் வழியே நடக்க வேண்டும். அந்தப்படி நடவாவிட்டால் ஆசை அறாது (எ—று).

ஏ) *பழைய*: பற்றுக பற்றற்றான் பற்றினை என்பது, பற்றிக் கொள்ளுக எல்லாப் பற்றுமற்றவன் பற்றினை. எல்லாப் பற்றும் அற்றவன் பற்றாவது அவன்சொன்ன வேதாகமம். அப்பற்றாவது அந்த வேதாகமம் பற்றியது. வேதாந்த சாத்திரம், சித்தாந்த சாத்திரம், இவை வீடுபேறு சொன்னவழி(கள்). பற்றுக பற்று விடற்கு என்பது, அந்த நிலையைப் பற்றிக்கொள்ளுக பிறவிப் பற்று விடற்கு என்றது.

மல்லர்: பற்றுதலில்லாத கடவுள்பேரிலே பற்றுதலைவிடாமல் வை. அந்தப் பற்றுதலை விடாமலே கெட்டியாய் இருக்கப்பண்ணு. பற்று; பற்றுதலை விடுகிறதுக்கு அடைமானமாக என்றவாறு.

பொன்னை அறியாதவன் இரும்புமேலே பிரியமாய் இருப்பான். ஆனால் அப்பொன்னுடைய அருமை அறிந்தாப்போலே பொன் மேலே ஆசைவைப்பான். அதுதவிரப் பொன்னுடைய நன்மைகளை மென்மேலும் அறிந்து பொன்னுடைய ஆசை வாதிக்கிறதுக்கு அளவாக இரும்புமேலே இருந்த ஆசை குறைந்துபோம். அப்படிப்போல மெய்யறியாமையால் லோகத்துச் செல்வங்கள்மேலே பற்றுதலாயிருக்கிறவன் கடவுள் மேலேயல்லாமல் மற்றெல்லாம் நில்லாது என்கிற மெய்யறிந்தானைப் போலே கடவுள்பேரிலே பற்றுதல் வைக்க வேண்டியது. மீளவும் பற்று பற்றுதல் மென்மேலும் குறைந்துபோய் முழுதிலும் விட்டுப்போறதுக்கு அடையாளம் எனக் கடவுளின் நன்மைகளை மென் மேலும் தியானித்தறிந்து அவர் பேரிலே வைத்த பற்றுதலை மென்மேலும் வாதிக்கப் பண்ணினால் பற்று பற்றுதல் எல்லாம் விட்டுப்போம் என்பது கருத்து.

பற்றுதல் — பற்றிக்கொள்ளுதல்; பற்றற்றான் — பற்றுதல் இல்லாதவன்; பற்று—பற்றுதல்; விடற்கு– விடுகிறதுக்கு.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'பற்று அற்றான்'

'பற்றறுத்தான்' என்னும் மணக்குடவர் உரை பற்றிருந்தமையையும் அதனை அறுந்தன்மையையும் உணர்த்து தலின் நீத்தாரையுணர்த்துவதாகிறது.

'காரண உபாதி எழு காரியத்தில் பற்றற்றான்' என்னும் பரிதியுரை காரணத்தின் உபாதியால் (எழுகின்ற காரியத்தில் பற்றற்றான்) என்னும் கருத்தினது. உபாதி—சாத்தியத்திலே வியாபித்துச் சாதனத்தில் வியாபகமில்லாதது (தர்க்கபரிபாஷை.,18). சாத்யம்—காரியம். சாதனம்—காரணம். காரண உபாதி—குடத்திற்கு மண்,

திகிரி, குயவன் போல்வார். குடம் சாத்ய மாகிய காரியம். காரணங்களின் உபாதியால் எழுகின்ற குடம் போல்வனவாகிய காரியப் பிரபஞ்சத்தில் பற்றுக்கொள்ளாமை என்பதாம்.

மணக்., பரிதி., பரிமேல்., முதலியோர் உரைகள் 'பற்றற்றான் பற்று' என்பதற்குப் 'பற்றற்ற இறைவன் மீது செய்யும் பற்று' என்னும். *காளிங்கர்* 'பற்றற்றான் எந்த இன்பத்தைப் பற்றி நின்றானோ அதனைத்தானும் உறுதற்கு உரைத்து நின்று முயலுக' என்பர். இவர் கருத்து 'பற்றற்றான் பற்றினைப் பற்றியதால் இன்பம் விளைகிறது. அத்துடன் ஏனைய பற்றுக்கள் அறுகின்றன' என்பது.

'பொருள்களனைத்தையும் பற்றி நின்றே அவற்றிற் பற்றுக் கொள்ளாத இறைவன்' என்கின்ற *பரிமேலழகர்* உரை *பரிதியார்* உரைக்கு விளக்கம் போல்வது. 'பற்று—பற்றப் படுவதாய வீட்டு நெறி' என்பர் *பரிமேலழகர்*.

பொறிவழிச்சென்று புலன்களைப் பற்றுவதையே இயல்பாக கொண்ட மனம், ஒன்றையும் பற்றாது நில்லாது; ஆகலின் பற்றற்றான் பற்றினைப் பற்றி உலகப்பற்றை விடுக என்றவாறாம். 'பற்றற்றான் பற்று—பற்றற்றான் மீது செலுத்தப்பெறும் பற்றாகிய தியானசமாதிகள்' என்பவர் *பரிமேலழகர்*. 'பற்றற்றான் எதன்மீது பற்றுச்செலுத்துகிறானோ அதனைப் பற்றுக' என்பர் *காளிங்கர்*. இவர் உரை தெளிவிலதுபோற் காணப்படினும் பற்றற்றான் என்பது துறவுபூண்ட ஞானியரையும், அவர் பற்றும்பற்று—இறைவனையும் உணர்த்தி இறைவன் மீது பற்றுக் கொள்க என்னும் கருத்தினதாதல் காண்க.

கவிராசர் உரை 'பற்றற்றான்—ஆசாபாசங்களை அறுத்துவிட்ட ஜினேஸ்வரன்; பற்று—அவனுடைய சீபாதங்களில் வைத்த பற்று' என்கிறது.

'பற்றுவிடற்கு—உடம்பிற் பற்றினை விடுதற்காக' *பரிமேலழகர்*. ஆன்மாவுக்கு உபாதியாகிய காரியமும் (பிரபஞ்சமும்) உபாதி ஏழும்—கரணங்களும், மனமும் கருவிகளுமாகிய இவற்றின் உபாதியாகிய பற்றுக்கள் அவை ஏழு.

மணக்குடவர் '(பயன்கருதிப்பற்றாது)பற்றுவிடற்காகப் பற்றுக' என்பர். இவ்வுரை காமியப் பயன்கருதி இறைப்பற்றுக் கொள்ளற்க. வீடுகருதிச் செய்க என்பதாம்.

பற்றுவிடற்குப் பற்றுதலும் காமியப் பயனே ஆதலான் அது துறவுக்கிழுக்காதே எனின் ஆகாது. பற்றுவிடுதலே பயனாகிய துறவு ஆதலான் என்க.

ஒ) ஒப்புமைப் பகுதி:

முற்றும்:

உற்ற உதிரம் ஒழிப்பான் கலிங்கத்தை
மற்றது தோய்த்துக் கழுவுதல் என்னொக்கும்?
பற்றினா னாகிய பாவத்தை மீட்டும்
பற்றொடு நின்று பறைக்குறு மாறே —*வளை.,43*

மணஞ்சேரி, பற்றாக வாழ்பவர் மேல்வினை பற்றாவே
—*சம்பந்தர், மணஞ்சேரி.,10*

திருஆப்ப னூ ரானைப்பற்றும் மனமுடை யார்வினை
பற்றறுப் பாரே —*சம்பந்தர், ஆப்பனூர் 1*

பலவும் பயனுள்ளன பற்றும் ஒழிந்தோம்
கலவம் மயில்காமுறு பேடையொ டாடிக்
குலவும் பொழில் சூழ்ந்த குரங்கணில் முட்டம்
நிலவும் பெருமானடி நித்தல் நினைந்தே —*சம்பந்தர், குரங்கணில்.,6*

காழி அமர் கோயில்
பற்றானைப் பற்றிநின் றார்க்கில்லை பாவமே—*சம்பந்தர், சீகாழி.,4*

பாடு வாரிசை பல்பொருட் பயனுகந் தன்பால்
கூடு வார்துணைக் கொண்டதம் பற்றறப் பற்றித்
தேடு வார்பொரு ளானவன் செறிபொழில் தேவூர்
ஆடு வான்ஆடி அடைந்தனம் அல்லல் ஒன் றிலமே—*சம்பந்தர்,தேவூர்.,5*

கோழம்பம் பற்றானைப் பற்றுவார் மேல்வினை பற்றாவே
—*சம்பந்தர், கோழம்பம்.,8*

பற்றவன் காண் —*அப்பர்., 76., பதி., 9*

பற்றது பற்றில் பரமனைப் பற்றுமின் —*திருமந்.,298*

பற்றற நாம் பற்றிநின்ற மெய்த்தேவர் தேவர் —*திருவாசகம்.,10:5*

பற்றற நாம்பற்றுவான் பற்றிய பேரானந்தம் —*திருவாசகம், 8:20*

பற்றும் பற்றாங் கதுபற்றி —*திருவாசகம்,34:5*

ஆதி யந்த மரியென யாவையும்
ஓதி னாரல கில்லன வுள்ளன
வேத மென்பன மெய்ந்நெறி நன்மையன்
பாத மல்லது பற்றலர் பற்றிலார் —*கம்பராமா.,3*

ஒட்டிய பகைஞர்வந் துருத்த போரிடைப்
பட்டவ ரல்லரேற் பரம ஞானம்போய்த்

தெட்டவ ரல்லரேற் செல்வ மீண்டெடன
விட்டவ ரல்லரேல் யாவர் வீடுளார் —*கம்பராமா.*,1418

தோய்ந்தும் பொருளனைத்துந் தோயாது நின்ற சுடரே—*கம்பராமா.*2804

செப்பற் கரிய பெருஞ்சீர்த்தி சிவனார் செய்ய கழல்பற்றி
எப்பற் றினையும் அறவெறிந்தார் எல்லைதெரிய ஒண்ணாதார்
மெய்ப் பத்தர்கள்பால் பரிவுடையார் எம்பிரானார் விறன் மிண்டர்
—*பெரிய., விறன்.*,4

எப்பற்றினையும் அறுத்தே றுகைத் தேறு வார்தாள்
மெய்ப்பற் றெனப்பற்றி விடாதவிருப்பின் மிக்கார் —*பெரிய.,மூர்த்தி.*,8

பற்றை எறியும் பற்றுவரச் சார்பாயுள்ள பவித்திரையாம்
—*பெரிய., சண்டே.*11

பற்றாஞ்சுவை யற்றீர் பற்றும் பற்றாங்கது பற்றி —*திருவாய்.*, 508

ஓ) *மேற்கோள் பகுதி:*

பெருந்தே.: சொற்செறிவுடைமையால் *சிலீட்டம்* என்னும்உயிராயின மைக்கு மேற்கோள். (*வீரசோ.* 151 *உரை*)

குணசா.: *தலையாகு மோனைக்கு* மேற்கோள். (*யா. கா.* 43)

யா. வி. உரை: மெய்மிக்கு வந்த செய்யுளுக்கு மேற்கோள். (சூ.2)

35. துறவு

	யாதனின்	வேண்டினுண்டா	அடல்வேண்டும்	இயல்பாகு	மற்றுந்	யானென	பற்றி	தலைப்பட்டார்	பற்றற்ற	பற்றுக.
மணக்.	5	7	1	2	3	9	4	8	6	10
பரிதி.	1	8	6	3	4	5	2	10	9	7
பரிப்.	—	—	—	—	—	—	—	—	—	—
காளி.	1	2	5	7	3	6	3	8	10	9
பரிமேல்.	1	2	3	4	5	6	7	8	9	10

35—வது அதிகாரம் துறவு முற்றிற்று.

36 மெய்யுணர்தல்

அதிகாரப்பொருள்:

அ) *மணக்.*: மெய்யுணர்தலாவது எக்காலத்திலும் எவ்விடத்திலும் அழியாது நிற்கும் பொருள் இது என உணர்தல். இது பற்றறத் துறந்தாரது உள்ள நிகழ்ச்சியாதலான், அதன் பின் கூறப்பட்டது.

உ) *பரிமேல்.*: அஃதாவது. பிறப்பு வீடுகளையும்[1] அவற்றின் காரணங்களையும்[2] விபரீத[3] ஐயங்[4]களானன்றி உண்மையான் உணர்தல். இதனை வடநூலார் தத்துவஞானம் என்ப. இதுவும்[5] பற்றற்றான் பற்றினைப் பற்றியவழி உளதாவது ஆகலின், அக்காரண ஒற்றுமை பற்றித் துறவின்பின் வைக்கப்பட்டது.

ஊ) *கவிராசர்*: அஃதாவது, பிறப்புக்களையும் மோட்சத்தினையும் அவைகளை அடைய வேண்டிய காரணங்களையும் விபரீத வகையாலல்லாமல் உண்மையினாலேயே அறிகிறது. இதனையே தத்வக் ஞானம என்றும் சொல்லுவார் கிரந்த சாஸ்திரக்காரர்[6].

ஏ) *பழைய 2*: அஃதாவது பிறப்பினையும் வீட்டினையும் அவற்றின் காரணத்தினையும் விபரீத உணர்வும் ஐய உணர்வுமின்றி உண்மையால் உணர்தல்.

---

1. பிறப்பு வீடுகளை உணர்தலாவது முறையே பிறப்பினாலாம் துன்பக்கூறுகளையும், விட்டாலாம் இன்பத்தையும அறிதல்.
2. அவற்றின் காரணங்கள்--பிறப்பின் காரணம் அறியாமை என்றும், வீட்டின்காரணம் உண்மை ஞானம என்றும் உணர்தல்.
3. விபரீதம்—ஒன்றையொன்றாக உணர்தல், அது சிப்பியை வெள்ளி என்று வெள்ளியை சிப்பி என்றும் உணர்வதுபோன்றதாம்
4. ஐயம்--உண்மை புணரமாட்டாமையால் இதுவோ அதுவோ என்று ஐயப்படுதல்.
5. இதுவும்--மெய்யுணர்தலும்:
6. கிரந்த சாஸ்திரக்காரர்--நூலாசிரியர்.

மல்லர்: அதாவது காரியங்களுடைய மெய்யான குணங்களை ஆராய்ந்தறிகிறது.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'மெய்யுணர்வு'

'என்றும் உள்ள அழியாத பொருளை உணர்தல். மெய் இவர் பொருளில் பண்புப்பெயராய், அப்பண்பையுடைய பொருளைப் பண் பாகு பெயராய் உணர்த்திற்றாதல் வேண்டும்' *மணக்.*

'ஐயந்திரிபறப்பொருட்பெற்றியைஉள்ளவாறு உணர்தல்'. இவர் நோக்கில் மெய்யுணர்வு உண்மையை அறிதல் என்பது' *பரிமேல்.* *மு.ரா.அரு.*கருத்தும் இதுவே. இவ்விருவருள், *பரிமேலழகர் தத்துவ* ஞானத்தையும்*மணக்குடவர்* கடவுளையும் கருதுகின்றனர் எனலாம்.

'நிலையான பொருளை நுகர்வதால் அறியும் அனுபவ ஞானம்' என்பர் *கா.சு.* இவர் கருத்துப் இறைவனை நோக்கிச் செல்கிறது. மெய் யுணர்தல் உண்மையறிதல். உண்மை எனினும் பொருள் எனினும் ஒக்கும். ஆகவே உண்மையை மனத்தான் அறிதல். அறியலான பொருள்கள் மூன்று. அவை பொறியுணர்வான் அறியப்படும், உலகமும்,பொறியுணர்வால் அறியப்படாமல் மனஉணர்வாலே அறி யப்படும் இறையும், இவ்விரண்டையும் முற்கூறிய இரண்டானும் அறியும் உயிரும் என இவற்றின் உண்மையினை மனவுணர்வால் உணர்தலே மெய்யுணர்வு, பொறியின் வேறாக மனம் உணர்வது யாங்ஙனம் எனின் ஐயுணர்வின்றிக் கனாப்போலத் தானே உணர்வது மனவுணர்வு என்னும் *பேராசிரியர்* உரையால் உணர்க. (தொல். பொருள்.மரபு. ௨ ௭). 'உலகைப் பற்றி ஆய்ந்துகண்டமுடிவு நிலை யாமை. உலகைவிட்டு இறைவனைப் பற்றி உணர்வது மெய் யுணர்வு' என்பர் *சொ. த,*

கத்தி, தானே பொருளை அரியாது, அதுபோலப் பொறிகளாகிய கருவிகள் தாமே உலகை உணரா, உட்கருவியாகிய மனம் பொறி வழிச்சென்று உலகை அறிய உதவுகிறது. அம்மனமும் சடப்பொருள் (அறிவற்ற பொருள்). அதுவும் தானே அறியாது; மனம் வாயிலாகப் பொறிகளாகிய கருவிகளைக்கொண்டு அறிவது ஆன்மசித்சக்தியே. அன்றியும் சடமாகிய மனம், சித்துருவான இறையை ஒருபோதும் அறியாது. உணர்த்த உணரும் சித்தாகிய உயிரின் சித்சக்தியே இயல் பாகவே சித்துருவான இறையை உணரும் என்க. ஆகவே உலகம் தளை. இறை இவற்றை உள்ளவாறு உணர்வது ஆன்மசித்சக்தியே ஆதல் தெளிக.ஆன்மஅறிவாற்றலாகிய இது, உலகு, தளை, இறை இவைகளை உணரும்போது திருவருளையே துணையாகக்கொண்டு

அறிகிறது. ஆதலால் இவர் உரை ஆழ்ந்த சிந்தனைக்கு உரிய தாதல் காண்க. அன்றியும் *பேராசிரியர்* கூறுவதுபோல இறையை மனம் அறியுமாயின், அது கனவுணர்ச்சியாகுமேயன்றி அனுபவ உணர்ச்சியாகாது என்பதனைக் கனவின் இலக்கணம் கூறும். 'ஆன்மா கண்டத்தில் இருக்க மனம் வேலை செய்துகொண்டும் இந்திரியங்கள் பத்தும் வேலையின்றியும் உள்ள நிலை' என *சிவஞானசித்தி* (4:33) கொண்டு தெளிக.

'பிறப்பு மோட்சங்களையும் அவைகளை அடைய வேண்டிய காரணங்களையும் விபரீதமாகஅன்றி உண்மையாகவே அறிவது மெய்யுணர்வு' என்பர் *கவிராசர்*. 'உண்மையை ஆய்ந்து கண்டு உள்ளதை உள்ளபடி அறிதல்' என்பர் *குழந்தை*. 'உண்மைப் பொருளையுணர்தல்' *சி. இ.* 'கடவுள் உயிர்தளை ஆகிய மூன்றன் இயல்புகளையும், உயிருக்குக் கடவுளோடும் உலகத்தோடும் உள்ள தொடர்பு வகைகளையும், ஐம்பூதக் கூறுகள் உடலமைப்பு பிறப்பும் வீடுமாகிய இவற்றின் நிலைமை இவைகளையும் இறைவன் அருளாலும் யோக உணர்ச்சியாலும் உள்ளவாறு உணர்தல். உணரும் முறையில் தாமாக உணர்தலும் உண்டு. கண்டவர் உணர்த்த உணர்தலும் உண்டு என்று உரை கூறிப் பல 'சமயத் தார் கூறும் தத்துவக் கூறுபாடுகளையும் விளக்கித் 'துறவின்பின் இறைவன் உண்மையினை உணர்தல்' என்பர் *தேவநேயர்*. இவர் நோக்கு உலகு இறை தளை ஆகிய மூன்று பொருள்களின் உண்மையை உணர்தல்' என்றாயிற்று. *வள்ளுவர்* நிலையாமை யான், உலகை உள்ளவாறு உணர்தலையும் பற்றறுதலால் தளை களின் நிலையாமையையும் உணர்த்தினாராகலின் எஞ்சியது இறை யைப் பற்றி அறியும் உணர்வே ஆதலின் மெய்ப்பொருளாகிய இறையை அறியும் உணர்வு மெய்யுணர்வு என்றாராதல் காண்க.

'மெய்யான பொருள் எது என்று அறிவினால் ஆய்ந்து, அதனை உயிர் உணர்வது அதாவது ஆன்மா அனுபவிப்பது' என்பர் *இராம லிங்கனார்*.

'மெய்யுணர்தல் என்பதை மெய்யான் உணர்தல் என மூன்றன் தொகையாகவும் மெய்யாகிய உணர்தல் எனப் பண்புத்தொகை யாகவும் கொள்க எனவும், மெய்யையுணர்தல் எனவும் கொள்ள லாம்' எனவும் கூறுவர் *பரிமேலழகர்*. உரைக்கு விளக்கந்தரும் **வை.மு.கோ.** இவற்றுள் மூன்றாம் வேற்றுமைத் தொகையாகக் கொண்டு பொருள் செய்தவர் *பரிமேலழகர்*. 'மெய்யாகிய பொருள் இது என உணர்தல்' என்பர் *மணக்குடவர்*. ஏனையோர் அனை வரும் 'மெய்—மெய்ப்பொருளையுணர்தல்'; இரண்டாம் வேற்று

மைத் தொனகயாகவே சொல்வர். இங்ஙனம் கொள்ளுதலே' சிறந்தது.

36.1. பொருளல் லவற்றைப் பொருளென் றுணரும் மருளானா மாணாப் பிறப்பு. (௩௫௧)

உரைப்பகுதி:

அ) *மணக்.*: பொருளல்லாதவற்றைப் பொருளாகக் கொள்கின்ற மயக்கத்தினாலே உண்டாம் மாட்சிமையில்லாத பிறப்பு என்றவாறு.

இது மெய்யுணருங்கால் மயக்கங் காண்பனாயின், பிறப்புண்டாம் என்றது.

ஆ) *பரிதி.*: எ--து உபதேசநிலை[1] யல்லாதவற்றைப் பொருள் என்று பிடித்த அஞ்ஞானம் செனனம்[2] உண்டாக்கும் என்றவாறு.

ஈ) *காளி.*: எ--து கீழ்ச்சொன்னபடியே மெய்ப்பொருளினைப் பொய்ப் பொருளாகவும் பொய்ப்பொருளினை மெய்ப்பொருளாகவும் மயங்குகின்ற மயக்கத்தினால் வந்துளதாம், யாதோ எனில், ஒருவகையாலும் மாட்சிமை இல்லாத பிறவியானது என்றவாறு.

உ) *பரிமேல்.*: மெய்ப்பொருளல்லவற்றை மெய்ப்பொருள் என்று உணரும் விபரீத உணர்வானே உளதாம் இன்பமில்லாத பிறப்பு.

அவ்விபரீத உணர்வாவது மறுபிறப்பும், இருவினைப்பயனும். கடவுளும் இல்லை எனவும், மற்றும் இத்தன்மையவும்[3] சொல்லும் மயக்கநூல் வழக்குக்களை மெய்ந்நூல் வழக்கு எனத்துணிதல். குற்றி[4]யை மகன் என்றும் இப்பி[5]யை வெள்ளி என்றும் இவ்வாறே ஒன்றினைப் பிறிதொன்றாகத் துணிதலும் அது. மருள், மயக்கம், விபரீத உணர்வு, அவிச்சை என்பன ஒருபொருட்கிளவி. நரகர், விலங்கு, மக்கள், தேவர் என்னும் நால்வகைப் பிறப்பினுமுள்ளது துன்பமேயாகலின், 'மாணாப் பிறப்பு' என்றார். இதனால் பிறப்புத் துன்பம் என்பதூஉம் ஆதற்கு முதற்காரணம் அவிச்சை என்பதூஉம் கூறப்பட்டன.

காரி.: மானாப்பிறப்பு—இன்பமில்லாப் பிறப்பு; நால்வகைப் பிறப்பு—நரகர் விலங்கு மக்கள் தேவர்; இவற்றை வடநூலார் தேவர்மக்கள் திரியக்கு ஸ்தாவரம் என வேறு ஓதுவர்.

---

1 உபதேச நிலை-ஞானாசாரியன் உணர்த்த உரைநிலை; 2 செனனம்-பிறப்பு.
3 இத்தன்மையவும்-ஆகாயம் என்று ஒருபூதம் இல்லை. உயிர் என்பது பூதங்களின் கூட்டுறவு; என்பன போல்வனவும் பிறவுமாம்.
4 குற்றி;-மரக்கட்டை; 5. இப்பி—கிளிஞ்சல்; 6 களத்திரம்—மனைவி;

ஊ) *கவிராசர்*: மெய்ப்பொருள் அல்லாத புத்திரர், மித்திரர், களத்திரம்[6], தனம், தானியம், வஸ்து, ஆபரணங்கள் இவை முதலானவைகளை மெய்யென்று அறியப்பட்ட விபரீத உணர்வி னாலே மயங்கி, பிறப்பினாலே வெகுதுக்கம் உண்டாம்(எ—று).

ஏ) *பழைய 2:* பிறப்பறுக்கமாட்டாத மெய்ப்பொருளல்லவற்றைப் பிறப்பறுக்கும் மெய்ப்பொருள் என்று உணரும் ஐயவிபரீத உணர் வானே உண்டாம் இன்பமில்லாத பிறப்பு.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'பொருள் அல்லாதவற்றைப் பொருள் என்றுணரும் மருள்'

'பொருள் அல்லாதவற்றைப் பொருளென்று கொள்ளுகின்ற மயக்கம்' *மணக்.*; 'மெய்ப்பொருளைப் பொய்ப் பொருளாகவும், பொய்ப்பொருளினை மெய்ப்பொருளாகவும் கொள்கின்ற மயக்கம்' *காளி.*; 'மெய்ப்பொருள் அல்லாதவற்றை மெய்ப்பொருள் என்றுண ரும் விபரீத உணர்வு' *பரிமேல்., தேவநேயர்*; 'உபதேச நிலை யில்லாதவற்றைப் பொருள் என்று பிடித்த அஞ்ஞானம்' *பரிதி.*; 'மெய்ப்பொருளல்லாத புத்திர—மித்திர—களத்திரங்களையும் தனம் தானியம் பொன் பொருள் இவைகளை மெய்யென்று அறிகிற விபரீத ஞானம்' *கவிராசபண்டிதர்*; 'நித்யமான பொருள் எது? என்று ஆராயாமல் சத்யம் அல்லாதவற்றைப் பகவான் என்று உணர்பவன்' *இராமலிங்கனார்.*

பிற்கால உரைகள் பெரும்பாலும் இக்கருத்தை ஒப்புவன எனலாம். ஆனால் இவ்வுரைகளுள் எதுவும் பொருள் இதுஎன்று சுட்டிக்கூறிற்றில. *பரிதி.*, 'மெய்யுணர்வு உபதேச நிலையான் வரத்தக்கது' என்கின்றார். இதனை அடியாகக்கொண்டு தேவநேயர் மெய்ப்பொருள்—கடவுள் அதனைத் தானே யுணர்தலும், உணர்ந் தார் உபதேசிக்க அறிதலும் என இருவகையான் உணரலாம்' என்பர். *இராமலிங்கனார்* உரை மெய்ப்பொருள் சத்யமான பகவான் என்று இறைப்பொருளைச் சுட்டுவது. இது தெளிவானது. 'மருள்' என்பதற்கு விளக்கந்தருகின்ற *பரிமேலழகர்* 'வினையில்லை, கடவுளில்லை, சுவர்க்க நரகம் இல்லை எனப் பேசும் மயக்கநூல் வழக்குகளை மெய்ந்நூல் வழக்கெனத் துணிதல்' என்றனர். இவர் உரையில் பொருளைப் பற்றி நின்ற விபரீத ஞானம் நூலைப் பற்றியாக்கப் பெற்றுள்ளது. இவ்வுரைக்குறிப்பு 'இறையை உணர்ந்து அனுபவித்தலே மெய்யுணர்வு' என்பார் கருத்துக்கு நேரே அரண் செய்யாமை யறிக.

'மருளான்'

'மருளையுடையவன்' எனக்கொள்வர் *குழந்தை*. ஏனையோர் 'மருளான்' என்பதை ஏதுப்பொருளில் வரும் ஆனுருபுபெற்ற பெயராகக் கொண்டனர். இவர் மருளையுடையவன் எனக் கொண்டதேயன்றி 'மாணாப்பிறப்பு—மாணாப்பிறப்பினையுடையன் ஆவன்' எனப் பிறப்பைப் பிறப்பினன் எனவும், 'ஆவன்' என ஒரு வினை வருவித்தும் முடிப்பர். இதனாற் போந்த பயன் யாது என்று ஆய்தல் வேண்டும்.

கவிராசர் கூறும் 'மருளின்' விளக்கம் நிலையாமை என்ற அதிகாரத்தில் பொய் என்று துணியப்பெற்று துறவு என்னும் அதிகாரத்தால் விலக்கப்பட்டவை. அவற்றையே மீண்டும் கருதுதல் அத்துணைச் சிறந்ததன்று. ஆதலால் எஞ்சி நின்ற இறைப் பொருளின் உண்மையை ஆய்வான் மட்டுமின்றி, அனுபவத்தாலும், அறியவேண்டும் என்பதே இவ்வதிகாரத்தான் விளக்கப்பெறுவது. தேவநேயரும் கடவுள் இல்லை உலகம் தானாகவே இயங்குகிறது என்றும், நற்காட்சி நன்ஞானம் முதலியனவே வீடுபேற்றிற்குக் காரணம்; வீடுபேறு ஐங்கந்தங்களும் அறுதல் என்றும் மனம்போன போக்கிற் பிறழவுணரும் திரிபுணர்ச்சியாம். இறைவனையன்றி வீடுபெறுதல் கூடாது. ஆகவே இறைவனையுணர்ந்து நிலைத்து எண்ணுதலே மெய்யுணர்வாம் என்பதும் இக்கருத்திற்கு அரணாகும்.

மற்றும் நான் எனது என்னும் பற்றுக்களைத் துறத்தலான் நிலையாமை ஞானங்கைவரப்பெற்ற உயிர் பொருளிது என்று துணியவேண்டுமாயின் இறைப்பொருளையே துணியும் ஆதலான் மெய்யுணர்வு இறையுணர்வையே குறிப்பது. 'பொருள் சேர்புகழ்' 'இறைமைக் குணங்களிலராயினாரை உடையர் எனக் கருதும் புகழ்கள் பொருள் சேராவாகலான் இறைவன் புகழே பொருள் சேர்புகழெனப்பட்டது' என்னும் உரைப்பொருள்—இறைவன் என்றே கருதுகிறது. இறையை யுணரும் உணர்வே மெய்யுணர்வு. இக்கருத்தினை நல்கும் உரைகளே சிறந்தன. சமயக்கணக்கர் மதிவழி புகாத *வள்ளுவர்* மெய்ப்பொருள் இது என்று பெயரும் உருவும் உரையாது, அவரவர் ஆய்வின் வண்ணம் அவரவர் அமைக என்று கருதிப் 'பொருள்' எனப் பொதுப்படக் கூறி, பொதுமையிற் கூறியதால் பொருளல்லவற்றைப் பொருள் என்று கருதற்க; கருதின் மாணாப்பிறப்பே வரும் என்று எச்சரிக்கவும் செய்தனர். 'உலகப் பொருள்களை உள்ள பொருளாகவே கருதுதல் பிறப்பிற்குக் காரணம்' என்பர் *வ.உ.சி.*

ஒ) ஒப்புமைப்பகுதி:

முற்றும்:

உள்பொருள் இதுவென உணர்தல் ஞானமாம் —சீவக.,2845

மயக்கு நீங்குதல் —வளையா.,25

மருளொடு தெருளுறும் நிலையர் மங்கையர்
தெருளுறும் மெய்ப்பொருள் தெளிந்தி லாரினே —கம்பராமா.,3291

தன்னைத்தா னுணரத் தீருந் தகையறு பிறவி யென்பது
என்னைத்தான் மறையு மற்றைத் துறைகளு மிசைத்த வெல்லாம்
முன்னைத்தான் றன்னை யோரா முழுப்பிணி யழுக்கினமேலே
பின்னைத்தான் பெறுவ தம்மா நறவுண்டு தகைக்கும் பித்தோ
—கம்பராமா.,4465

"பொருளல்லவற்றைப் பொருள் என்று உணரும்":

பொள்ளலிவ்வுடல் பொருள் என்று —சுந்தரர். ஆரூர். தக்கேசி.6

ஓ) மேற்கோள்பகுதி:

இளம்.: பொருளோடு புணர்ந்த பக்கத்திற்கு மேற்கோள்.
(தொல். பொருள்.75)

36.2. இருணீங்கி இன்பம் பயக்கும் மருணீங்கி
மாசறு காட்சி யவர்க்கு. (கூ௫உ)

உரைப்பகுதி:

அ) மணக்.: மயக்கத்தினின்று நீங்கிக் குற்றமற்ற அறிவுடையார்க்கு, அறியாமையாகிய இருள் நீங்க முத்தியாகிய இன்பம் உண்டாம் என்றவாறு.

இது மெய்யுணர்ந்தார்க்கு வினைவிட்டு முத்தி இன்பம் உண்டாம் என்றது.

ஆ) பரிதி.: எ—து அஞ்ஞானமாகிய இருள் நீங்கிப் பேரின்பம் பெருகும்; மாசற்ற தரிசனம் கண்டவர்க்கு என்றவாறு.

ஈ) காளி.: எ—து தமது அறியாமையானது நீங்கி மற்று அளவிறந்த இன்பமானது பயக்கும்; யார்க்கு எனின், மெய்ப்பொருளை வேறொன்றாகவும் வேறொன்றினை மெய்ப்பொருளாகவும்இங்கனம் மயங்கி நின்ற மயக்கம்நீங்கித் தெளிந்த உள்ளத்துக் குற்றமற்ற நல்லறிவுடையோர்க்கு என்றவாறு.

இருள் நீங்கி என்பது தாம் அறியாமை நீங்கி, மருள் நீங்கி என்பது மயக்கம் நீங்கி. மாசு என்பது குற்றம். காட்சி என்பது அறிவு.

உ) *பரிமேல்.*: அவிச்சையின்[1] நீங்கிமெய்யுணர்வுடையராயினார்க்கு, அம்மெய்யுணர்வு பிறப்பினை நீக்கி வீட்டினைக்கொடுக்கும்.

இருள் நரகம். அஃது ஆகுபெயராய்க் காரணத்தின்மேல் நின்றது[2]. நீங்கி எனத் தொடைநோக்கி மெலிந்து நின்றது[3]. நீங்க என்பதன் திரிபு எனினும் அமையும். மருணீங்கி என்னும் வினையெச்சம் காட்சியவர் என்னுங் குறிப்புவினைப்பெயர் கொண்டது. மாசறு காட்சி என்றது கேவலவுணர்வி[4]னை. இதனால் வீடாவது நிரதிசய இன்பம்[5] என்பதூஉம், அதற்கு நிமித்தகாரணம் கேவலப் பொருள்[6] என்பதூஉம் கூறப்பட்டன.

காரி.: நீங்கி எனத்தொடை நோக்கி மெலிந்தது. நச்சினார்க்கினியரும், பெரும்பாணாற்றுப்படையுள், ''காந்தளஞ் சிலம்பிற் களிறு கிடந்தாங்குப் பாம்பணைப் பள்ளி அமர்ந்தோன்''[7] என்பதற்குக் காந்தள் என்பதற்கு ஏற்பப் பாம்பணை என மெலித்தனர் என்க. பிறப்பினை நீக்கி எனப் பிறவினையாக்கியது காண்க. நீங்க என்பதன் திரிபு எனினும் அமையும்.

ஊ) *கவிராசர்*: மெய்யுணர்வாகிய நல்ல நெறிகளையுடையார்க்கு அந்த மெய்யுணர்வு பிறப்பை நீங்கி மோக்ஷமாகிற அனந்த சுகத்தைக்[8] கொடுக்கும் எ—று.

ஏ) *பழைய 2*: அவிச்சையின் நீங்கிய மெய்யுணர்வை உடையார்க்கு அம்மெய்யுணர்வு பிறப்பினை நீக்கி வீட்டினைக் கொடுக்கும்.

மாசற்ற காட்சி; மயக்கம் நீங்கிய ஞானக் காட்சி; நிரதிசயவின்பக் காட்சி எனக் கொள்க.

---

1. அவிச்சை—அறியாமை. அதன் இலக்கணம் இன்னதன்மைத்து என ஒருவராலும் கூற முடியாமை ஒன்றே. இதனை 'இருள்சேர் இருவினை' என்றதன் உரையினும் காண்க.
2. இருள் என்றது இருண்மயமான ஓர் நரகம். அது நரகத்தைப் பயப்பதாகிய பிறப்பை யுணர்த்துதலான் காரியப்பெயர் பிறப்பாகிய காரணத்திற்கு ஆனதால் காரிய ஆகுபெயர்,
3. 'மருள் நீக்கி' என நிற்றற்குரியது 'இருணீங்கி' என்ற எதுகைநயம் நோக்கி 'மருணீங்கி' என நின்றது; 4, கேவலவுணர்வு—இறையுணர்வாகிய மெய்யுணர்வு.
5. நிரதிசய இன்பம்—பேரின்பம், அதிசயம்—வியப்பு. வியப்பு வேறுபாட்டுணர்வால் விளைவது. வேறுபாட்டுணர்வு ஒத்த பொருள்கள் பல இருந்து அவற்றுள் இது வியப்பு அளிப்பது என்றறியும் உணர்வு. வீட்டின்பத்திற்கு ஒத்ததும் மிக்கதுமின்றி தனித்ததாதலின் இங்ஙனம் கூறப் பெற்றது; 6, கேவலப்பொருள் உணர்வு என்றும் பாடமுண்டு
7. பெரும்பாண். ,372—373. 8, அனந்த சுகம்—எல்லையற்ற இன்பம்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக்குடவர் உரை 'மாசற்ற அறிவினையுடையார்க்கு இருள் நீங்க இன்பம் உண்டாம்' என 'இன்பம்' எழுவாய்; (பயக்கும்) 'உண்டாம்' பயனிலையாகக்கூறும். பயக்கும் என்பது செயப்படு பொருள் குன்றாதவினை. அது உண்டாம் எனச் செயப்படு பொருள் இல்லாத வினையாதல் இயைபிலது போல் தோன்றுகிறது. *பரிதியாரும்* 'பேரின்பம் பெருகும்' என்றனர். அதுவும் அங்ஙனமே. *காளிங்கர்* கருதுவது 'இன்பமானது பயக்கும்' என்பது *பரிமேலழகர்* முடிபும் 'வீட்டினைக் கொடுக்கும்' என்பது.

இவைகளைவிடக் குறள்நடை 'மருணீங்கிமாசறு காட்சி, அவர்க்கு இருள் (நீக்கி) நீங்கி (நீங்க) இன்பம் பயக்கும்' என்றிருப் பின் மயக்கறுகாட்சியே அதனையுடையார்க்கு அறியாமைநீக்கி அல்லது நீங்க இன்பத்தைக் கொடுக்கும் எனச் செவ்விய பொருள் ஆசிரியர் நோக்கிற்கு மாறாமல் கிடைக்கக்கூடும். அதிகாரம் *மெய் யுணர்வு*. மருள்நீங்கி (மாசு) அறு காட்சி—மெய்யுணர்வு, மருள் நீக்கி இன்பம் பயக்கும் என வினை முடிபு நேரிதாதல் காண்க, *பரிமேலழகர்* அம்மெய்யுணர்வு இருள்நீக்கி இன்பம் பயக்கும் என இடர்ப்பட்டு எழுவாய் வருவித்து முடிப்பதும் மேலதற்குத் துணை யாதலைக் காண்க. 'காட்சியவர்' என்பதை ஒரு சொல்லாக் கொண் டமையே இவ்விடர்ப்பாட்டிற்குக்காரணம்.

கவிராசரும், *பரிமேலழகரைப்* போன்றே 'அந்த மெய்யுணர்வு' என எழுவாய் வருவித்து முடிப்பர். ஏனைய உரையாசிரியர்களும் இங்ஙனமே, *பரிமேலழகரை* ஒட்டிச் செல்கின்றனர். 'மயங்கித் திரி பாக எண்ணிவிடாமல், குற்றமற்ற நோக்கத்தோடு மெய்ப்பொருளை யறிகின்றவர்கட்கு' என்பர் *இராமலிங்கனார்*. 'காட்சி—நோக்கம். இருள்—அஞ்ஞானம், திரிபுணர்ச்சியாகிய இருள் நீங்கினால் ஞானம் உதயமாகும்' என்பது கருத்து என்பர் *இராமலிங்கனார்*.

'சங்கை முதலிய இருபத்தைந்து குற்றங்கள் நீங்கி நிச்சங்கை முதலிய எட்டு அங்கங்களையுடைய க்ஷாயிகசம்தர்சனம் பெற்ற எதிகள் வீடடைவர்.'

'நரககதி முதலாய நாலுகதியும் நீங்கி' என்பர் *கவிராசர்*. *பரிமேலழகர்* கருத்தின் வண்ணம் இருள் என்பது ஆகுபெயராக இருளையுடைய நரகத்தையும், இன்பம் என்பது வீட்டையும் குறிப்பதாகும்.

'பயத்தல்—உண்டாதல்' 'பூத்தலும் பயத்தலும் உண்டாதற்

பொருள்' சேந்தன் திவாகரம், இஃதறியார் 'கொடுக்கும்' எனப் பொருள் செய்து 'நீங்கி—நீக்கி' எனத் தொடை நோக்கி மெலிந்த தென்பர் எனப் பரிமேலழகரை மறுப்பர் வ.உ.சி,

ஒ) ஒப்புமைப்பகுதி:

முற்றும்

அறிவினாற பெரியநீரார் அருவினை கழிய நின்ற
நெறியினைக் குறுகியின்ப நிறைகட லகத்து நின்றார் *சீவக.,375*

... ... தீவினை யிருள்கள் போகும்
விரிந்தநரல் லறிவின் சோதி ... ... *—சூளா., 203*

மருளில் வண்குரு கூர்வண் சடகோபன்
தெருள் கொள்ளச் சொன்ன ஓராயிரத்துள் *—திருவாய்.,2.10: 11*

தீவினை நல்வினை என்னத் தேற்றிய
பேய்வினைப் பொருள்தலை அறிந்து பெற்றதோர்
ஆய்வினை மெய்யுணர்வு அணுக வாசறும்
மாயையின் மாய்ந்தது மாரிப் பேரிருள் *—கம்பராமா.,4357*

தெருண்டறி வில்லவர் சிந்தையின் முந்தி
இருண்டன மாதிர மெட்டு மிரண்டும் *—கம்பராமா.,3677*

தெளிந்து தீவினையைச் செற்றோர் பிறவியிற் றீர்வர் *—கம்பராமா.,4464*

கற்றுத் துறைபோய காதலற்குக் கற்பினாள்
பெற்றுக் கொடுத்த பெருமகன்போல்—முற்றத்
துறந்தார்க்கு மெய்யுணர்வு தோற்றுவதே இன்பம்
இறந்தவெலாம் துன்பமலா தில் *—தனிக்கவி*

36.3. ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் நணிய துடைத்து. (௩௫௩)

உரைப்பகுதி:

அ) மணக்.: 'நீங்கித்துணிந்தார்க்கு' பாடம். மெய்ப்பொருளை ஐயப் படுதலினின்று நீங்கித் துணிந்தவர்க்கு, இவ்வுகத்திலும் மேலுலகம் நணித்தாம்[1] தன்மை உடைத்து, எ—று.

---

1 நணித்தாம்—அண்மைக்கண்ணதாம்?

துணிந்த அறிவின்கண்ணது எல்லாவுலகும் ஆதலின், அவ்வறிவு உடையார்க்கு உலகம் ஒருங்குதோற்றுதலின், நணித்தாம் என்றவாறு இது மெய்யுணர்வு எவ்விடமும் அறியுமென்றது.

ஆ) *பரிதி*.: எ—து சந்தேகமற உபதேசத்தில் நிலைமை கண்டார்க்குப் பூமியிலே இருக்கையிலே முத்தி பெற்றதற்கு ஒக்கும் என்றவாறு.

ஈ) *காளி*.: எ—து 'நணுமை' பாடம். கீழ்ச்சொன்னபடியே உள்ளமானது உகந்து[2] உணர்ந்த மெய்ப்பொருளை என்றும் இதன் தன்மை என்னைகொல்? என்று உள்ள ஐயப்பாட்டினின்று நீங்கி மற்று அதனை அதுவேயாகத் தெளிந்த பெரியோர்க்கு இவ்வையத்தின் நணுமை[3]போல் வானநணுமை உடைத்து என்றவாறு.

உ) *பரிமேல்*.: ஐயத்தினின்று நீங்கி மெய்யுணர்ந்தார்க்கு, எய்தி நின்ற நிலவுலகத்தினும் எய்தக்கடவதாய வீட்டுலகம் நணித்தாதல் உடைத்து:

ஐயமாவது பலதலையாய உணர்வு. அஃதாவது மறுபிறப்பும் இருவினைப்பயனும் கடவுளும் உளவோ இலவோ என ஒன்றில் துணிவு பிறவாது நிற்றல்; பேய்த்தேரோ புனலோ கயிரோ அரவோ எனத் துணியாது நிற்பதும் அது. ஒருவாற்றால் பிறர்மதங் களைந்து தம்மதநிறுத்தல்[4] எல்லாச் சமயநூல்கட்கும் இயல்பாகலின் அவை கூறுகின்ற பொருள்களும் யாதுமெய்யென நிகழும் ஐயத்தினை யோகமுதிர்ச்சியுடையார் தம் அனுபவத்தான் நீக்கி மெய்யுணர்வாராகலின், அவரை ஐயத்தின் நீங்கித் தெளிந்தார் என்றும், அவர்க்கு அவ்வனுபவ உணர்வு அடிப்பட்டு[5] வரவரப் பண்டை யுலகிய லுணர்வு தூர்ந்துவருமா[6] கலின் அதனைப் பயன்மேலிட்டு வையத்தின் வானம் நணியது உடைத்து என்றும் கூறினார்; கூறவே, ஐயவுணர்வும் பிறப்பிற்குக் காரணமாதல் கூறப்பட்டது.

ஊ) *கவிராசர்*.: மறுபிறப்பும் இருவினையும் கடவுளும் உண்டோ இல்லையோ என்று சந்தேகப்படாமல் உண்டென்று தெளிந்த க்ஷாயிகசம்யக்த்வம்[7] உள்ளவர்களுக்குப் பூமியைப் பார்க்கிலும் இனிமேல் அடையத்தக்க தேவலோகம் பெரியது என்பதாம். சந்தேகப் பட்டால் பிறப்பு இடையறாது என்பதாம்.

---

2 உகந்து--மகிழ்ந்து; 3 நணுமை--அணிமை,
4 தமமதநிறுததல்-தம் கொள்கையை ஏதுக்களானும் எடுத்துக்காட்டாலும் நிலைபெறச்செய்தல். தனாஅநிறுப்பு என்னும் மதம்,
5 அடிபபட்டுவரவர—பல காலும பழகிவர; 6 தூர்ந்துவரும்—நிரம்பும்,
7 க்ஷாயிகசம்யக்த்வம்-நல்ல பொறுமை.

ஏ) *பழைய 2:* ஐயத்தினின்று நீங்கித் தெளிந்து மெய்யுணர்ந்தார்க்குத் தாம் இந்த உலகத்தினும் வானவுலகம் நணித்தாதல் உடைத்து.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்':

'மெய்ப்பொருள் ஐயப்படுதலினின்றும் நீங்கித் துணிந்தவர்' *மணக்.*; 'சந்தேகமற உபதேசத்தின் நிலைமை கண்டார்' *பரிதி.*; இவர் கருத்து மெய்ப்பொருளை உபதேச வாயிலாகத் தான் தெளியவேண்டும் என்பது போலும். உபதேசமாவது தெளிவுடையார் காட்டக்காணுதல். 'உள்ளமானது விரும்பியுணர்ந்த மெய்ப்பொருளை மீண்டும் ஐயுறாதவாறு அதனை அதுவேயாக உணர்ந்தவர்' *காளி.*; துறவு பற்றறவு, நிலையாமை யாதிகளால் மெய்ப்பொருள் இது என்று உணர்ந்த பின்னும், இதன் தன்மை இப்படியோ அப்படியோ என்று ஐயுறாத படி உள்ளவாறே யுணர்ந்த பெரியோர்கள் என்பது இவர் கருத்து. 'பல தலையாய உணர்வினின்றும் நீங்கித் தெளிந்த யோகமுதிர்ச்சியுடையார்' என்பர் *பரிமேலழகர்.*

'மறுபிறப்பு இருவினை கடவுள் முதலியன உண்டோ இல்லையோ என்று ஐயப்படாமல் உண்டென்று துணிந்த க்ஷாயிக சம்யக்த்வம் உள்ளவர்கள்' *கவிராசர்.* 'பல கவர்பட்ட ஐயம் நீங்கித் தெளிந்தார்' என்று உரைத்துக் கவர்படுதற்குப் *பரிமேலழகர்* கூறியதையே விளக்கமாகத் தருவர் *தேவநேயர்.* 'ஐயத்தினீங்கி உண்மைப்பொருளையுணர்ந்தவர்' *குழந்தை.* 'பல சமயநூல்களைக் கற்று அந்தந்த சமயங்கள் கூறும் உண்மைகளுள் எதுமெய் என்ற ஐயம் எழுந்துழி யோகமுதிர்ச்சிகளாலும் தவஞான அனுபவங்களாலும் தெளிந்தார்' *ஜி. வரத.*

'வையத்தின் வானம் நணியது': 'இவ்வுலகத்தினும் மேலுலகம் நணித்தாம்' என உரை எழுதி 'மெய்யுணர்ந்தான் அறிவின் கண்ணதாய் அனைத்துலகும் தோற்றுதலின் நணித்தாம்' என விளக்கமும் தருவர் *மணக்.* இவர்கருத்து சித்தர்க்கும் ஞானிகட்கும் உலகம் அனைத்தும் அவர் அறிவில் தோன்றும் என்ற மரபை ஒட்டியது போலத் தோன்றுகிறது. நணியது என்பதற்கு இதுதானா பொருள்? மெய்யுணர்தற்கு இது பயனாயின் வீட்டின்பத்தைக் காரணவகையாற் கூறியதாகுமா? என்றெல்லாம் எண்ணத்தோன்றுகிறது. 'பூமியிலே இருக்கும் போதே, முத்திபெற்றதற்கு

ஒக்கும்' *பரிதி*. இவர் கருத்து பொறிகள் வழியாகவும் மனம் கருவியாகவும் உணரும் தன்மைகெட்டு வினைவாதனையற்றுப் பொருளையே கண்டு இருக்கும் சீவன் முத்தி நிலையைக் கூறுவது போலும்.

'இவ் வையத்தின் நணுமைபோல வானம் நணுமையுடைத்து' என்பர் *காளிங்கர்*. இவர் கருத்தும் *மணக்குடவர்* கருத்தும் 'வையம் போல வானமும்; அதாவது வீடும் ஓரிடம் அது இன்பமயமானது' என்ற கருத்தினது போலும். பிறவாப்பேறேவீடு எனின். அது ஓரிடமாயின், அங்கே பிறக்கும்போது மலமாயாகன்மபந்தமான உடலையன்றி வேற்றுடலோடு பிறந்து இன்பந்துய்க்கிறான் என்பது நித்ய சூரிகளாய்த் தோன்றி இன்புறும் வைணவவீட்டைக் குறிப்பதாகும். ஆகவே எடுத்ததேகம் உள்ளவரையில் சீவன் முக்தனாக விளங்கித் துன்பமற்ற இன்பத்தை நுகர்தல் வானம் நணியனாதல். தேகம் விழுந்த பிறகு கண்டுணர்ந்து அனுபவிக்கும் செம்பொருளோடு ஒளியுள் ஒளிபோலக் கலந்து விளங்கும் நணியனாதல் என்ற கருத்தினையுடையது எனலாம். வீடும் ஓரிடம் என்பது கருத்தாயின் வானம் பதமாகவே கொள்க. நணித்தாதலை அணுமையில் ஆவதாகவே கொள்க.

உண்மையறிவாளர்க்குப் பக்கத்தில் காணும் பொருளையேயன்றித் தொலைவிலுள்ள பொருளையும் கண்டறியமுடியும். காணக்கூடும் என்பதை விஞ்ஞானிகள்பாலும் காணலாம் என்பர் *குழந்தை*. விஞ்ஞானக் காட்சியும் உலகத்தில் ஒன்றாதலின் அது மெய்ப்பொருட் காட்சியாகாது. உலகநிலையாமையை உணர்ந்து செம்பொருள் காணும் சிந்தனையாளர் மீண்டும் மாயாகாரியமான விஞ்ஞானத்தைக் கண்டுவியவார் என்க.

ஆகவே உண்மை ஞானம் பெற்றார்க்கு வீடடைதல் எளிதாம். வீடு என்றது உயிர் பிறப்பற்று ஒளியுள் ஒளியாய் இருக்கும் நிலையே என்ற கருத்தமைந்த உரைகள் சிறந்தன எனலாம்.

ஓ) ஒப்புமைப் பகுதி:

'ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்' :

ஐயம் நீங்கியெம் அறிவு மதித்தொழுகிய —*பெருங்.*, 4.8:68

முற்றும்:

... ... பிறவியிற் றீர்வர் .... —*கம்ப ராமா.*, 4464

அலங்கலிற் றோன்றும் பொய்ம்மை யரவெனப் பூதமைந்தும்

விலங்கிய விகாரப் பாட்டின் வேறுபா டுற்ற வீக்கம்
கலங்குவ தெவரைக் கண்டா லவரென் பகைவி லேந்தி
இலங்கையிற் பொருதா ரன்றே மறைகளுக் கிறுதி யாவார்
—*கம்பராமா.,4847*

அக்கரை என்னும் அனந்தக் கடலுள் அழுந்தியுந் பேரருளால்
இக்கரை ஏறிஇளைத் திருந்தேன் —*பெரியாழ்.திரு.,5—3:7*

ஓ) மேற்கோள்பகுதி:

சிவஞான: 'ஐயத்தினீங்கி' என நீக்கப்பொருள் நிலைத்திணை, இயங்குதிணை பண்பாதியின் வரும் என்றதில், ஆதி என்றதற்குக் கொண்ட பொருட்கு மேற்கொள். (*நன்.299*)

36. 4. ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. (கூ௱௪)

உரைப்பகுதி:

அ) *மணக்.*: மெய் முதலாகிய பொறிகள் ஐந்தினானும் அறியப்படுவன எல்லாம் அறிந்த விடத்தும், அதனான் ஒருபயன் உண்டாகாது; உண்மையை அறியும் அறிவிலாதார்க்கு எ—று.

ஆ) *பரிதி.*: மெய், வாய், கண், மூக்கு, செவி, இவற்றின் பொறியாவது சோத்திரம் தொக்குசட்சு சிங்குவை ஆக்கிராணம் என்கின்றவிடத்தும்[1] இத்தன்மையரது புலன்களைத் துறந்து பயனென்ன? மெய்யுணர்வாகிய சிவஞானம் அறியாவிடில் என்றவாறு.

இ) *காளி.*: எ—து ஓசை முதலாகிய ஐம்புலன்களைத் தனித்தனி அறிந்து வருகின்ற செவி முதலாகிய பொறி ஐந்தும் மற்றுஈண்டு அருந்தவம் இயற்றி அமருலகு ஆளும் அமரர்க்கும் அவர்அவர் எய்துதல் அரிதாதலால்,சிறிதுநாள் சிற்றின்பத்தாராகிய மக்களாகப் பிறந்தார்க்கு எவ்வாற்றானும் எய்தாது அன்றே அஃதன்றி இவர்க்கு அவை நிறைய எய்தியக் கண்ணும் மற்றுண்டு ஒழிவன ஆதலால் யாதுமொரு பயனில்லையே யார்க்கு எனின் மெய்ப்பொருளை உணரும் உணர்வில்லாத விரகு[2] இல்லார்க்கு என்றவாறு.

உ) *பரிமேல்.*: செல்லப்படுகின்ற புலன்கள்[3] வேறுபாட்டான் ஐந்தா

---

1. முறையேகாது, மெய், கண், வாய், மூக்கு என்னும் ஐம்பொறிகளின் வடமொழிப்பெயர்
2. விரகு—உபாயம். 3. புலன்கள்—பொறிகள் சென்று பற்றும் இடங்கள். அவற்றான் வேறாய உணர்வி—சுவை ஒளி முதலாய ஐந்து அறிவும்,

கியவுணர்வு அவற்றை விட்டுத் தம்வயத்ததாய வழியும், அதனாற் பயனில்லையேயாம்; மெய்யினை உணர்தல் இல்லாதார்க்கு.

ஐந்தாகியவுணர்வு மனம்[4]. அஃதெய்துதலாவது மடங்கி ஒரு தலைப்பட்டுத் தாரணைக்கண் நிற்றல்[5]. அங்ஙனம் நின்றவழியும் வீடுபயவாமையின், 'பயமின்று' என்றார். சிறப்பும்மை எய்துதற் கருமை விளக்கி நின்றது. இவை இரண்டுபாட்டானும் மெய்யுணர் வுடையார்க்கே வீடுளது என மெய்யுணர்வின் சிறப்புக் கூறப்பட்டது.

ஊ) *கவிராசர்*: சக்ஞிபஞ்சேந்திரிய[6]சீவனாகித் தர்மக்ஷேத்திரத்திலே[7] பிறந்தும் நல்ல ஞானமும் தெரிசன[8]மும் இல்லாவிட்டால் பிரயோசனம் இல்லை (எ—று).

ஏ) *பழைய 2*: 'பயனின்றே' பாடம். சொல்லப்படுகின்ற புலன் வேறுபட்டால் ஐந்தாகிய உணர்வும், அவற்றைவிட்டுத் தன்வயத்ததாய வழியும் அதனால் பயன் இல்லை, மெய்யினை உணர்தல் இல்லாதவர்க்கு.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'ஐம்பொறிகளானும் ஐப்புலன்களையும் அறிந்திருந்தாலும்' அப்பொருளின் உண்மையை அறியாவிடின் பயனில்லை' என்ற *மணக்குடவர்* கருத்து, 'பொறிகள் ஐந்தானும் அறியப்படுவன புலன் களைந்து. அவற்றையறிந்திருந்தாலும் ஒருபயனும் இல்லை; வீடு பெறுதற்கு மெய்யுணர்வு வேண்டும்' என்பது.

'மெய் முதலிய இவற்றின் பொறியாவது சோத்திரம் முதலிய இவை என்கின்றவிடத்தும்' என்ற *பரிதியுரை* தென்மொழி—வடமொழி மறுபெயர்களைக் கூறுவதன்றிப் பொருள் விளக்கத்திற்குப் பயன்படாதனவுமாம். மேலும் 'இத்தன்மையாரது புலன்களைத் துறந்து' என்பது ஐம்பொறிகளையும் உடையார் தமது புலன்களைத் துறந்தும் அதாவது பொறிகள் புலன்கள் மேற்செல்லாதடக்கியும் எனப் பலசொல் வருவித்து அவர் கருத்தைச் சாதிக்க வேண்டியுள்ளது.

'இவ்விடத்து இத்தன்மையறிந்து' என்றொரு பாடம் உள்ளது. இப்பாடத்தைக்கொண்டு நோக்கின் சோத்திரம் முதலியவற்றைப் பொறிகளின் மாற்றுப் பெயராகக் கருதாமல் கேட்பது, காண்பது

4. ஐந்தாகியவுணர்வு—பொறிகள் வாயிலாகத் தனித்தனியே உணர்ந்து அந்தந்த வேறு பாட்டுணர்வோடு இருப்பது மனம் என்ற அகக்கருவியாதலின் இங்ஙனம் கூறப்பட்டது.
5. தாரணைக்கண் நிற்றல்—எண்ணெய் ஒழுக்குப்போலஇடைவிடாமல் மனமுதலிய அகக் கருவிகள் ஒருவகைப்பட்டிருத்தல்.
6. சக்ஞிபஞ்சேந்திரிய சீவன்—ஒருங்கிய ஐம்பொறிகளையுடைய ஆன்மா.
7. தர்மக்ஷேத்திரம்—புண்ணியபூமி; 8. தெரிசனம்—காண்டல்.

எனக் காரணங்கருதி அத்தொழிலையுடையது எனக்கருதியிருப் பாரோ என்ற ஐயம் உண்டாகிறது. எவ்வகையினும் இவருரையில் குறட்பாவின் தெளிவைக் காண இயலவில்லை.

காளிங்கர் உரைநடையில் தொடர்கள் மாறியும் சிலசொற்கள் விடுபட்டும் இருக்கலாம் என்று தோன்றுகிறது. ஆயினும் அவர் உரைப்போக்கு, 'தவம்பல செய்து விண்ணுலகாளும் விண்ணவர்க்கும் ஐம்பொறிகளானுகரப்படும் ஐம்புலவின்பங்களையும் (விரும்பியவண்ணம்) அவரவர்களும் எய்துதல் எவ்வாற்றானும் இயலாது; அங்ஙனமாகச் சிற்றின்பம் எய்தும் மக்களுக்கு எப்படிமுடியும்? துறந்தார்க்கு அவை நிறைய எய்தினும், பொறியின்பங்கள் அனைத்தும் நுகர்ந்து கெடுப்பன; நிலைத்தன அல்ல. ஆதலாற் பயன் இல்லை. மெய்யுணர்வார்க்கே இந்நிலையாயின் மெய்யுணரும் விரகு இல்லார்க்கு ஒருபயனும் இல்லை. விரும்பியபடி உண்டுகழிக்கக்கூடிய பயன்கூட இல்லையாம்' என்ற கருத்தினை வழங்குகிறது.

'மற்று உண்டு ஒழிவன' என்பதற்கு 'மற்று ஈண்டு ஒழிவன' என்ற பாடமும் ஏட்டில் காணப்பெறுகிறது. இவ்வுலகத்தேயே அப்பொறியின்பம் ஒழியும்;மறுமைக்காகாது; ஆகையால்,மெய்யுணர்ந்து வீட்டின்பம் எய்துவர் என்ற சிறந்த கருத்தினதாகலால் இப்பாடமே இப்பதிப்பிற் கொள்ளப்பெறுகிறது.

'எய்தியக்கண்ணும்' என்பதற்கு மணக்குடவர், காளிங்கர் போல 'அறிந்த விடத்தும்' எனப் பொருள் காணாது, 'விட்டுத் தன்வயத்த தாயவழியும்' என உரை எழுதி 'அஃதாவது மடங்கி ஒருதலைப் பட்டுத் தாரணைக்கண் நிற்றல்'என விளக்கமும் தருவர் பரிமேலழகர்

'ஐந்தாகிய உணர்வு மனம்' என்பர் பரிமேலழகர். மனம் மெய் முதலியன போலக் கருவியாமே அன்றி உணர்வுடையதாகாது. அஃதுணர்வுடையதெனின் கண் முதலிய கருவிகளும் அவ்வவ்வுணர்வுடையன ஆதல் வேண்டும். அவைகட்கு அஃதின்மையானும் ஆன்ம சிற்சத்தியே மனக்கருவியை இயக்கிப் புறக்கருவிகளின் வாயிலாகப் பொருள்களைப் பற்றி உணர்வையடைகின்றது. பொருள்களைப் பற்றிப் புலன்களாகிற சங்கற்பவிகற்பங்களாகிய தொழிற் பாடுறுவது மட்டும் மனம். நிலையாமை ஞானம் கைவரப் பெற்று அகப்பற்றுப் புறப்பற்றுக்களைவிட்ட ஆன்ம சிற்சத்தி மனத்தைத் தொழிற்படுத்தாது மடங்கி மெய்யுணர்ந்து செம்பொருளையே பற்றி நிற்கும்போது அம்மெய்ப்பொருளன்றி வேறொன்றும் அதற்குப் புலனாகாமையின் அதுவே மெய்யுணர்வாகும். ஆகவே ஆன்மசிற்சத்தி மனத்தைத் தொழிற்படுத்தாத நிலையே மனவடக்கம் அன்றி மனம்தானே அடங்குதலில்லையாம் என்க.குயவன் குடத்தைக் காரியப்படுத்த சக்கரத்தைச் சுழற்றாவிடின் சக்கரம் சுழலுவதில்லை

யாதல் போல என்க(*சிவஞானபோத மாபாடியம், கழகப்பதிப்பு.,* 214ல்காண்க) ஆகவே இக்குறட்பாவுக்கு சங்கற்ப விகற்பங்களாகிய ஐவகையுணர்வை எய்தினும் பயன் இல்லை. மெய்ப்பொருள் ஒன்றையேயுணரும் ஞானமாகிய மெய்யுணர்வே வீடுபேற்றிற்கு வேண்டப்படுவது என்பதாம்.

'ஐம்புலவுணர்ச்சியைத் தம் வயமாகப்பெற்றாலும் மெய்யுணர் வில்லாதார்க்கு நிலைத்த பயன் இல்லை' என்ற*கா.சு.* உரை 'வீடு பெற புலனடக்கமட்டும் போதாது மெய்யுணர்வு இன்றியமையாதது' என்னும் கருத்தினது.

'விலங்கிற்கும் மக்கட்கும் ஒப்பாக உள்ளது ஐம்புலஉணர்ச்சி. மக்கட்கேயுரியதாய் புலனுணர்ச்சியில் மெய்யும் பொய்யும் பகுத்துணர வல்லது மனவுணர்ச்சி; மெய்யுணர்வு இல்லாத வழி மனவுணர்ச்சி இருந்தும் பயனில்லையாம்' என்பது *சொ.த.* உரை. இதுவும், ஆழ்ந்த ஆய்வுக்குரியதாக முன்னர் கூறப்பட்டுள்ளமை காண்க.

'ஐயுணர்வு –ஐம்புலன் மேற்செல்லும் மனம்' என்றேயுரைப்பர் *தேவநேயர்.* ஐ—இறைவன், ஐ+யுணர்வு—மெய்ப்பொருளான இறைவனையறியும் அறிவு. அதனையடைதல் மட்டும் போதாது. உணர்ந்து அனுபவிக்குந் தன்மையும் வேண்டும்' என்பார் *இராமலிங் கனார்.*

உணர்தல் வேறு; உணர்ந்து அநுபவித்தல் வேறு. உணர்தல் பயிற்சி நிலை. தலைவன் தலைவியைக்கண்டான், அவள் மானிடப் பெண்ணே நம்மால் நுகரும் தரத்தினளே என்பதைக் குறிப்பறிவால் உணர்ந்தான். இதுவரை உணர்வு. தலைவியைப் பற்றிய மெய் யுணர்வு. நுகர்ச்சிபுணர்ச்சி. அது உணர்வின் பயனாய் இரண்டறக் கலத்தலின் விளைவு. அதுபோல இறைவனையுணர்தல்தான் மெய் யுணர்வு. அனுபவித்தல் இறையனுபவம், ஐயுணர்வுபொறிகளான் உயிர் உணரும் உணர்வு. பொறிகளான் சுட்டியறியப்படுவனவாகிய உணாவுகள் யாவும் நிலையற்றன; பொய்யாயின என உணர்ந்து என்று முளபொருளை உள்ளவாறு உணர்தல் மட்டும்தான் மெய் யுணர்வு. அனுபவம், வீடுபேறு, அதனை வள்ளுவர் கூறிற்றிலர் எனப் பலரும் உரைத்தனர். ஆகலின் அதுவரை இப்பொருளைக் கொண்டு செல்லுதல் வள்ளுவர்கருத்தன்மை தெளிக.

ஆகவே உரைகளில் 'பொறியுணர்வு அடைந்தாலும் வீடு பேறில்லை. மெய்யுணர்வு ஒன்றே வீடுபேறுதவுவது' என்ற கருத் தமைந்த உரைகளே சிறந்தவை. 'பயனின்றே' *தாமத்தர், மு.ரா.* அரு. இவர்கள் பாடம்.

ஐயுணர்வுகள் தேச காலங்களாற்றடைபடாது ஐம்புலங்களையும் ஐம்பொறிகள் உணர்தல். அஃதாவது கண் முக்காலத்திலும் எல்லாத் தேயங்களிலும் உள்ள பொருள்களைக் காண்டல். அவ்வாறே செவி மூக்கு முதலிய பொறிகளும் காலம் இடையிட்டும், இடமிடையிட்டும் உள்ளவற்றை அறிதல் பிறர் எல்லாம் பொருட்பொருத்தம் இன்றி யுரைத்தார் என இழித்துரைப்பர். இதன் கருத்து இருந்த நிலையி லிருந்தே எங்கும் என்றும் நடப்பனவற்றை அவ்வவ் மனங்களான் அறிதல் என்பதாம். இது வ.உ.சி. உரையும் அதன் விளக்கமும். இவர் கருத்து சித்தர் முனிவர்களைப்போல இருந்த இடத்திலிருந்தே எங்கும் என்றும் நடப்பவற்றை அறிதல்; அதுவும் மெய்யுணர்வில் வழிப் பயனற்றதாம் என்னுங் கருத்தினது.

ஒ) ஒப்புமைப்பகுதி:

''ஐயுணர்வும் எய்தியக் கண்ணும் ...... மெய்யுணர்வு'':

காம னன்னதோர் கழிவனப் பறிவொடு பெறினு
நாம நாற்கதி நலைதரு நெறிபல ஒருவி
வாம னூனெறி வழுவறத் தழுவின ரொழுக
லேம வெண்குடை யிறைவமற் றியாவது மரிதே —*சீவக.*,2753

மெய்ப்பொருள் தெரிதல் ஞானம் —*சூளா.*,201

ஆறினார் பொய்யகத்து ஐயுணர்வெய்தி மெய்
தேறினார் வழிபடும் தென்குடித் திட்டையே —*சம்பந்.*,293-6

அடக்கும்ஐம் பொறியொடு கரணத் தப்புறம்
கடக்கும்வா லுணர்வினுக்கு அணுகும் காட்சியான்'' —*கம்பராமா.*,1955

ஓ) மேற்கோள் பகுதி:

நச்சி.: பொருளொடு புணர்ந்த பக்கம்—பக்கம் என்றதனால் மெய்ப் பொருள் உணர்த்துதலும் கொள்க என்றதற்கு மேற்கோள். (*தொல்.பொருள்*.76.)

இளம்.: பொருளொடு புணர்ந்த பக்கத்துக்கு மேற்கோள். (*தொல்.பொருள்*.75.:)

காரி.: பாவிக அலங்காரத்திற்கு மேற்கோள். (*மாற*.251.)

36. 5. எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு. (௩௫௫)

உரைப்பகுதி:

அ) *மணக்.*: யாதொரு பொருள் யாதொரு தன்மைத்தாயினும், அப் பொருளினுடைய உண்மையைத் தான் உண்மையாகக் காண்பது யாதொன்று அஃது அறிவாம் என்றவாறு.

மெய் என்பதூஉம் அறிவு என்பதூஉம் ஒன்று; என்னை எக் காலத்தும் எவ்விடத்தும் ஒருதன்மையாக அழியாது நிற்றலின், மெய் யாயிற்று; எல்லாப் பொருளையும் காண்டலால், அறிவாயிற்று.

ஆ) *பரிதி.*: எ-து எப்பொருள் எதுசொன்னாலும் அந்தப்பொருளை உபதேசமாகக் காண்பது அறிவு என்றவாறு.

ஈ) *காளி.*: எ—து உலகத்து யாதானும் ஒருபொருள் உண்மை நிக ழாது வேறுபாடுடையதாயினும் அப்பொருளை மெய்யென்றுகருதாது மற்று அப்பொருளை உண்மைப் பொருளாகக் காணவல்லது யாது? மற்று அதுவே ஒருவர்க்கு அறிவானது என்றவாறு.

உ) *பரிமேல்.*: யாதொரு பொருள் யாதோரியல்பிற்றாய்த் தோன்றி னும்: அத்தோன்றியவாற்றைக் கண்டொழியாது அப்பொருளின்கண் நின்று மெய்யாகிய பொருளைக் காண்பதே மெய்யுணர்வாவது.

பொருள்தோறும் உலகத்தார் கற்பித்துக்கொண்டு[1] வழங்குகின்ற கற்பனைகளைக்[2] கழித்து, நின்றவுண்மையைக் காண்பது என்றவா றாயிற்று. அஃதாவது கோச்சேரமான் யானைக்கட்சேஎய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை[3] என்றவழி அரசன் என்பதோர் சாதியும், சேர மான் என்பதொரு குடியும், வேழநோக்கினையுடையான் என்பதோர் வடிவும், சேய் என்பதோர் இயற்பெயரும், மாந்தரஞ்சேரலிரும் பொறை என்பதோர் சிறப்புப்பெயரும், ஒருபொருளின்கண் கற்பனை யாகலின், அவ்வாறு உணராது[4] நில முதல் உயிரீறாகிய தத்துவங் களின் தொகுதி[5] என உணர்ந்து, அவற்றை நில முதலாகத் தத்தம் காரணங்களுள் ஒடுக்கிக்கொண்டு சென்றால்[6], காரண[7]காரிய[8]ங்கள் இரண்டும் இன்றி முடிவாய் நிற்பதனை[9] உணர்தலாம். எப்பொருள்

1. கற்பித்துக்கொண்டு—படைத்திட்டுக்கொண்டு; 2. கற்பனைகள்-படைத்துமொழிதல்
3. மாந்தரஞ்சொலிரும் பொறை என்றும் பாடமுண்டு.
4. அவ்வாறு உணராது—(மெய்யென்று) அப்படியே யறியாமல்.
5. நிலமுதல் உயிரீறாகிய தத்துவங்கள் — மண்முதல் உயிர்கள் இறுதியான நிலைப் பொருட்களின் கூட்டம்.
6. மண்முதலாக அந்தந்த பூதங்களில் அடக்கிக் கொண்டு சென்றால்.
7. பொருட்கள் தோன்ற இன்றியமையாது வேண்டப்படுவதும் துணையாய் இருப்பதும் காரணங்கள். அவை முதற்காரணம் துணைக்காரணம், இவற்றைக் கொண்டு இயற்று வோன் நிமித்தகாரணம்.
8. காரணங்களிலிருந்து தோன்றுவதாய் பரிணாமத்திற்குரியது காரியம்.
9. முடிவாய் நிற்பதனை-ஆத்துமாவினை;

என்ற பொதுமையான் இயங்குதிணையும் நிலைத்திணையுமாகிய பொருள்களெல்லாம் இவ்வாறே உணரப்படும். இதனான் மெய்யுணர்வினது இலக்கணம் கூறப்பட்டது.

ஊ) *கவிராசர்*: சீவாதி பொருள்[10]கள் பலவிதமாக இருந்தாலும், அவற்றுள் சுத்தாத்மஸ்வரூபமும்[11] கேவலக்ஞானமே[12] உபதேயம்[13] ஆகையால், ஞானதரிசன சாரித்திரத்தால்[14] அடையும் மோக்ஷத்தை இச்சிப்பது[15] மெய்யறிவாகும் (எ—று).

ஏ) *பழைய 2*: யாதொரு பொருள் யாதோரியல்பிற்றாய்த் தோன்றும், அத் தோன்றியவற்றைக் கண்டொழியாது அப்பொருளின்கண் நின்று, மெய்யாய பொருளைக் காண்பதே மெய்யுணர்வாவது.

மல்லர்: எ-து எந்தப் பொருளைக் கண்டாலும் எந்த வகையாயிருந்தாலும், அந்தப் பொருளின் மெய்யான குணங்களைக் கண்டுபிடிக்கிறது மெய்யறிதல் எ—று.

ஒரு பொருள் கண்டபோது ஒருகுணமாய்த் தோன்றும்; அக்குணமாய் தோன்றுகிறது என்று கண்டபோது விடாமல் அந்தக் குணம் மெய்யான குணமா? அந்தப் பொருளுக்குச் சொல்லியிருக்கிற காரணம் மெய்யான காரணமா? அந்தப் பொருளிலே சொல்லியிருக்கிற நன்மையும் தீமையும் மெய்யான நன்மையா? மெய்யான தீமையா? என்று ஆராய்ந்து பார்த்தல் மெய்யறிதலாகும் என்பது கருத்து.

எப்பொருள்—எந்தப்பொருள்; எத்தன்மைத்து— எந்தத் தன்மை உடைத்து; ஆயினும் ஆனாலும்; பொருள் (கடைசியிலே)—குணம் என்கிறஅர்த்தமாகும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

பொருள்களில் எது மெய்ப்பொருள் என்று காண்பதுதான் மெய்யறிவு என்கிறது குறள். *மணக்குடவர்* 'உண்மையை அறிவது அறிவு' என்கிறார். பொருளுக்கும் தன்மைக்கும் உள்ள தொடர்பு குணகுணித்தொடர்பு. ஆதலின் இங்ஙனம் கூறினர்போலும். தொடர்ந்து தரும் விளக்கம், 'மெய்—அறிவு, அறிவு அழியாது நிற்றலின் மெய் எனப்பட்டது. எல்லாப் பொருளையும் அறிதலின் அறிவாயிற்று' என்பது. இதனால் தன்மையால் ஒன்றுபோல் தோன்றுவனவும், வேறுபட்டுத் தோன்றுவனவுமாகப் பொருள்கள் பல. அவற்றுள் எது எதனால் மெய்ப்பொருள் எனக்கூடும் என்று தேர்ந்து தெளிவதேமெய்

10. சீவாதி பொருள்கள்-உயிர் முதலான பொருள்கள்
11. ஸ்வரூபம்-சிறப்பியல்பு; 12. கேவலக்ஞானம்-உயர்ந்த அறிவு;
13. உபதேயம்-உபதேசம் 14. சாரித்திரம்-ஒழுக்கம் 15. இச்சிப்பது-விரும்புவது.

யுணர்வு. அங்ஙனமாக உண்மை எனத்தன்மையைத் தேர்வது அறிவாகுமா? என்பது ஆய்தற்குரியது.

பரிதியுரை, தேர்ந்து தெளியும் மெய்யுணர்விற்கு ஏற்றதன்று.

காளிங்கருரை ஒருபொருளைப் பற்றியுலகம் என்ன சொல்லினும் உலகம் சொல்லும் கற்பனையும் உண்மையுங் கலந்த உரைகளில் கற்பனையை ஒதுக்கி: உண்மையைக்கொண்டு அதனை உண்மைப் பொருளாக உணர்வதே மெய்யுணர்வு என்கிறது.

பரிமேலழகர் உரை 'பொருள் எத்தன்மையுடையனவாயினும் காணப்படும் தன்மைகளுள் கற்பனை-உண்மை எவை எனத் தேர்ந்து கற்பனைகளைக் கழித்து உண்மையைக் கொண்டு இதுதான் மெய்ப்பொருள் என்று துணிவதே மெய்யுணர்வு' என்கிறது.

இவ்வுரைகளுள் ஏனையோர் உரைகள் 'தன்மைகளால் மெய்ப் பொருள்' என்று கருதத்தகுவன பல இருக்க 'அவற்றுள் எது மெய் என்று ஒன்றைத் தேர்ந்து தெளிவதே மெய்யுணர்வு' என்னப் *பரிமேலழகர்* 'ஒருபொருளின்கண் கற்பனைகளைக் கழித்து உண்மை கண்டு அதனை மெய் என்று துணிவதே மெய்யுணர்வு' என்பர். இவர்கருத்துக்கு இவர் காட்டும் எடுத்துக்காட்டே சான்றாகும்.

'எப்பொருள் எவ்வியல்புடையதாகத் தோன்றினும் அப்பொரு ளிற்கு உள்ளீடாயுள்ள மெய்ப்பொருளைக் காண்பதேயறிவு' என்பர் *கா.சு.* இவர் எப்பொருள் என்று கருதுவது காட்சிப்பொருளான உலகப் பொருள் பலவற்றை எனத்தோன்றுகிறது. உள்ளீடானபொருள் இறைப்பொருள் எனக் கருதப்படுகிறது போலும். ஆகவே சுட்டியுண ர்ப்படும் பொருளைப் பொருளென்று துணியாமல் அப்பொருளுக்கும் பொருளாயுள்ளதொரு பொருளைத் துணிதலே மெய்யுணர்வு என்பது பெறப்படும்.

சொ.த. உரை தன்மையைப் 'பொருளென் றொழியாது பொய் யான தோற்றமும் மெய்யான பொருளும் கூடிய பொருளை மெய் என்று துணிவதே மெய்யுணர்வு' என்பது. தோற்றத்தை நீக்கி உண்மையை யுணர்தலுக்கு இவர்கூறும் எடுத்துக்காட்டும் ஒரு பொரு ளைப் பற்றி நின்ற கற்பனைகளை விலக்கி உண்மையையுணர் தலையே விளக்குவதாகப் *பரிமேலழகரை* ஒட்டிச் செல்கிறது.

'எப்பொருள்-காட்சிப்பொருளும் கருத்துப்பொருளுமான எந்தப் பொருளும்', மெய்ப்பொருள்-உண்மையான இயல்பு 'எனக்கொண்டு பொருள் என்பது பொருளும் அதனைப் பற்றிய செய்தியும் ஆக இரு வகைப்படும். ஆதலின் அவ்விருவகையினையும் அறியும் முறை மெய்ப்பொருள்முறையும், உண்மைப்பொருட்பாட்டுமுறையும் என இருதிறப்படும்' என்றும் கூறி விளக்கந்தருவர் *தேவநேயர்*.

மு.ரா.அரு. 'பல சமயத்தாருந் தத்தம் கடவுளுக்கும் கூறும் இலக்கணங்கள் எல்லாக் கடவுளுக்கும் ஒத்திருந்தாலும் சிறப்பிலக்கணங்களாகிய பிறப்பு இறப்பு இல்லாதிருத்தல் எந்தக் கடவுளுக்கு இல்லையோ அந்தக் கடவுள் பரம்பொருள் ஆகாது என்று காண்க'' என்பர். இவர் கருத்து 'மெய்ப்பொருள்' என்பதற்கு 'என்றும் உள்ள பொருள்' என்பதாம்.

வ.உ.சி. 'உலகப் பொருள்களின் பெயர் வடிவுகளை விடுத்து அவற்றிற்கு ஆதாரமான உண்மைப் பொருளைக் காண்டலே அறிவென' உலகப்பொருள் வாயிலாக மெய்ப்பொருளைக் காணும் வழியைக் கூறுவர். இக்கருத்தின் நிழல் 'அகரமுதல' என்ற குறட்பாவிலேயே இயங்குவதைக் காணலாம்.

இவ்வுரைகளுள் பொருள்களை அவற்றின் தன்மை எப்படியிருந்தாலும் 'மெய்ப்பொருள் இது என்று உணர்தலே அறிவாம்' என்ற கருத்தமைந்த உரைகள் சிறந்தன.

ஓ) ஒப்புமைப்பகுதி:

மெய்ப்பொருள் காண்பது அறிவு:

மெய்வகை தெரிந்த விழுமியோர் —*சிலப். நாடுகாண்.*, 17

முற்றும்:

மெய்வகை தெரிதல் ஞானம்; விளங்கிய பொருள்க டம்மைப்
பொய்வகை யின்றித் தேறல் காட்சி; யைம்பொறியும் வாட்டி
உய்வகை யுயிரைத் தேயா தொழுகுத லொழுக்கம்; மூன்றும்
இவ்வகை நிறைந்த போழ்தே யிருவினை கழியு மென்றான்

—*சீவக.*, 1436

ஓ) மேற்கோள்பகுதி:

நச்சி.: எப்பொருள் எத்தன்மைத்தாயினும் என வரும் எகர வினாவும் கொள்க. (*தொல். சொல்.* 298)

பெருந்.: விழுமியது பயத்தலுக்கு மேற்கோள். (*வீர. சோ.* 180)

36.6. *கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்*
மற்றீண்டு வாரா நெறி. (௩௫௬)

உரைப்பகுதி:

அ) ***மணக்.:*** இவ்விடத்தே மெய்ப்பொருளை அறிந்து தெளிந்தாரே அடைவார்; மீண்டு இவ்விடத்து வாராத வழியினை, என்றவாறு.
கல்வியறிவால் அறிவை அறியப், பிறப்பறும் என்றது.

ஆ) *பரிதி.:* எ-து ஞானசாஸ்திரமே[1] கற்று, ஈண்டு உண்மை தெரிசித்து[2] நிலைமையிலே நின்றார், பிறவா நெறி பெறுவர்என்றவாறு.

ஈ) *காளி.:* எ-து உயர்ந்தோர் மெய்ப்பொருள் தெரிதற்கு வழங்கிய நூல்களைக் கசடறக்கற்றும் அதனாலே மெய்ப்பொருளைக் கண்டார் எய்துவர்; யாதினை எனில் மறித்து[3] இவ்வுலகத்துவந்து பிறக்க வேண்டாத நெறியினை என்றவாறு.

உ) *பரிமேல்.:* இம்மக்கட் பிறப்பின் கண்ணே உபதேச மொழிகளை அனுபவமுடைய தேசிகர்பால் கேட்டு அதனான் மெய்ப்பொருளை உணர்ந்தவர், மீண்டு இப்பிறப்பின்கண் வாராத நெறியை எய்துவர்.

'கற்று' என்றதனால் பலர்பக்கலினும் பலகாலும் பயிறலும், 'ஈண்டு' என்றதனால் வீடுபேற்றிற்குரிய மக்கட்பிறப்பினது பெறுதற்கு அருமையும் பெற்றாம். ஈண்டுவாரா நெறி—வீட்டுநெறி. வீட்டிற்கு நிமித்தகாரணமாய முதற்பொருளை உணர்தற்கு உபாயம் மூன்று; அவை கேள்வி, விமரிசம், பாவனை[4] என்பன. அவற்றுள் கேள்வி இதனால் கூறப்பட்டது.

ஊ) *கவிராசர்:* இந்த மனுஷப் பிறப்பிலே உபதேச வார்த்தைகளை அனுபவமுடைய குருவினிடத்லே கேட்டதினாலே மெய்யான தத்துவ ஞானங்களை அறிந்தவர்கள் திரும்பவும் இந்த மனுஷப் பிறப்பிலே பிறவாத நெறியையுடைய மோக்ஷவீட்டை அடைவர் (எ—டு).

ஏ) *பழையஉ:* மெய்ந்நூலைக் கற்று, மெய்ப்பொருள் கண்டதேசிகன்[5] பால் கேட்டு, அதனான் மெய்ப்பொருளை உணர்ந்தவர் பிறப்பின் வாராநெறியைத் தலைப்படுவர்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'கல்வியறிவால் அறிவை அறியப்பிறப்பறும்' என்ற மணக்குடவர் உரை முடிபு ''நல்லோன் முதனூற் பொருளுணர்ந்த கட்டறுத்து வீடுபெறும்'' என்ற வெண்பாவை எண்ணச் செய்கிறது. ஏனையோர் உரைகளும் ஒத்த கருத்தின.

கம்பராமாயண சங்கோத்திர விருத்தியில் எழுதும் குறிப்பை

1 ஞானசாஸ்திரம்-மெய்ப்பொருளியல் நூல்கள்; 2 தெரிசித்து-கண்டு; 3 மறித்து-மீண்டு;
4 கேள்வி-ஞானநூல்களை ஆசிரியன் மூலங் கேட்டல். விமரிசம்-ஆய்தல்; பாவனை தெளிந்து நிலைத்து எண்ணுதல். 5 தேசிகன்-ஆசான்.

மேற்காண்க. அதில் கற்றலால் மெய்ப்பொருள் காண்டல். அதனால் வீடுபேறு' என்பர் *சிவஞான சுவாமிகள்.*

'கற்று'

'இவ்விடத்தே மெய்ப்பொருளை அறிந்து' *மணக்.*; 'ஞான சாஸ்திரமே கற்று' *பரிதி.*; 'உயர்ந்தோர் மெய்ப்பொருள் தெரிதற்கு வழங்கிய நூல்களைக் கசடறக் கற்று' *காளி.*; 'உபதேச மொழிகளை யனுபவமுடைய தேசிகர் பாற் கேட்டு பலர் பக்கலிலும் பலகால் பயிறல்' *பரிமேல்.*; 'மெய்யாசிரியன்பால் கற்றற்குரியதை இப்பிறப்பிலே கேட்டறிந்து' *கா.சு.*; 'மெய்யுணரு மாற்றை ஆசிரியர் பாற்கேட்டு *சொ.த.*; 'மெய்ப்பொருட் கல்வியைப் பல்வேறு நிலையினும்பல ஆசிரியர்பாற்கேட்டு' *தேவநேயர்*; 'மெய்ப்பொருள்களை ஆராய்ந்து அறியும் வழிகளைக்கற்று' *இராமலிங்கனார்*; கற்றல்—தாமே கற்றலும், கற்றதனைப் பிறர் சொல்லக் கேட்டலுமாகிய இரண்டுமாம். ''கற்றல் கேட்டலுடையார் பெரியார்'' என்பது *திருஞானசம்பந்தர் தேவாரம்.* 'கேட்டல் சிந்தித்தல் தெளிதல் மூன்றனுள் கேட்டல் கூறியது இக்குறள்' என்பர் *மு.ரா.அரு.* கற்று என்பது குருவின்பாற் கேட்டலையும், மெய்ப்பொருள் காணல் சிந்தித்தல் தெளிதலையும் உணர்த்தலின் இக்குறள் மூன்றையும் கூறுவது எனலே பொருந்துவதாம்.

'ஈண்டு'

'இவ்விடத்தே' *பரிமேல்.*; *மணக்.*; 'இப்பிறப்பிலே' *கா.சு.*; 'உயர்ந்த' எனப் பொருள் கூறி 23ம் குறளுரையிற் கூறியவற்றைக் கொண்டு துணிக' என்பர் *சொ.த.*; *பரிதியார்* குறட்பா நின்ற நிலையே பொருள்கூறி 'ஈண்டுக் கண்டார்' எனக் கூட்டி 'ஈண்டு உண்மை தெரிசித்து நிலைமையிலே நின்றார்' என்பர். ஆகவே உரைகளில் 'ஈண்டுக் கற்று' எனவும், 'ஈண்டுக் கண்டார்', எனவும் கூட்டிப் பொருள் கோடலைக் காணலாம். வருவித்து உரைக்குமாற்றால் ஒவ்வோருரையிலும் ஒவ்வொரு வகையான சிறப்புண்மை உணரப் பெறுகின்றது.

இக்குறட்பாவில் 'ஈண்டு' என்பதற்குச் சிறப்புத் தந்து இவ்வுலகத்திலேயே மெய்ப்பொருளைக் காண்க என்பர் *வ.உ.சி.*

'மற்றீண்டு வாரா நெறி தலைப்படுவர்' என்ற சொல்லமைதி, இதுவீடாகாது. வீட்டையும் நெறியாதலை உணர்த்துதல் காண்க.

ஒ) ஒப்புமைப்பகுதி:

முற்றும்:

இருவகை வினைகளும் இல்லது இவ்வழி
வருவகை யிலாதது —*சூளா.*, 2070

விராவி யளித்தருண் மெய்ப்பொரு ளுக்கே
இராம னெனப்பெய ரீந்தன னன்றே —கம்பராமா., 299

யாவரும் எவையுமாய் இருதுவும் பயனுமாய்ப்
பூவுநல் வெறியுமொத் தொருவரும் பொதுமையாய்
ஆவனீ யாவதென் றறிவினார் அருளினார்
தாவரும் பதமெனக் கருமையோ தனிமையோய் —கம்பராமா., 4169

.... அறிவின் மூழ்கிக்
குளித்தவர் .... —கம்பராமா.,4466

ஊன முற்றிட மண்ணி னுதித்தவர்
ஞான முற்றுபு நண்ணினர் வீடெனத்
தான கற்பகத் தண்டலை விண்டலம்
போன புக்கன முன்னுறை பொன்னகர் —கம்பராமா.5557

.... மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே —திருவாசகம்,1:86—88

அறிவிற் கறிவான தென்னின் மறுபிறப்பு
மற்றீண்டு வாரா நெறி —அறநெறி.,125

ஓ) மேற்கோள் பகுதி:

சிவஞான.: கற்றகாரணத்தால் மெய்ப்பொருள் காண்டலும், காண்டல் காரணத்தால் வாராநெறி தலைப்படுதலும் விளங்கியவாறு காண்க.(*கம்பரா.சங்கோத்—பக்.16.*)

36.7. ஓர்த்துள்ளம் உள்ள துணரின் ஒருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு. (௩௫௭)

உரைப்பகுதி:

அ) மணக்.: உள்ளமானது உள்ளபொருளை ஆராய்ந்து ஒருதலையாக உணருமாயின், பின்னைப் பிறப்புண்டு என்று நினையாது ஒழிக என்றவாறு.

மெய்யுணர்ந்தவர் பிறப்பு உண்டு என்று நினையாது ஒழிக என்றது.

ஆ) பரிதி.:எ—து அறிவின் வெள்ளத்தைத் திருவடியிலே செலுத்துமாகில் அவனுக்குப் பிறப்பு இல்லை என்றவாறு.

ஈ) காளி.:எ—து ஒருவனது உள்ளமானது ஒன்றை மற்றொன்றாகக் கருதி மயங்காது, கீழ்ச்சொன்னபடியே ஓர்ந்துபார்த்து மற்று

இணைஇறந்த[1] தலைமைப்பாடாக[2] உள்ளதனை உள்ளுமாயின் பின்பு பெயர்த்து ஆராயவேண்டாபிறவியினை என்றவாறு.

உ) *பரிமேல்.*: அங்ஙனங்கேட்ட உபதேச ஒருதலை என்பது இணையிறந்த தலைப்பாடு மொழிப் பொருளை ஒருவனுள்ளம் அளவைகளானும் பொருந்து மாற்றானும்தெளிய ஆராய்ந்து அதனான் முதற்பொருளை உணருமாயின் அவனுக்கு மாறிப் பிறப்பு உளதாக நினைக்க வேண்டா.

ஒருதலையா ஓர்த்து என இயையும். அளவைகளும் பொருந்து மாறும் மேலே[3] உரைத்தாம். இதனால் விமரிசம் கூறப்பட்டது.

ஊ *கவிராசர்*: அப்படிக்கேட்ட மெய்ப்பொருளாகிய உபதேசமொழிப் பொருளை மனத்திலே தரித்து நன்றாய் ஆராய்ந்து அதனால் முதற்பொருளான பரப்பிரம்ம சொரூபத்தை அறிந்தவனுக்கு மறு பிறப்பில்லை (எ—று).

ஏ) *பழைய* 2: தேசிகன்பால் கேட்ட உபதேச மொழிப்பொருளைத் தெளிய ஆராய்ந்து உள்ளபடி உள்ளத்தினால் உணர்வானாகில், அவனுக்கு மறுபிறப்பும் உண்டென்று நினைக்கவேண்டா.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

இக்குறட்பாவின் முதலடியின் சொற்களைக் கொண்டுகூட்டிப் பொருள் கொள்ளும் வகையில் ஆசிரியர்கள் மாறுபடுகின்றனர்.

'உள்ளம் உள்ளது ஓர்த்து ஒருதலையா உணரின்' *மணக்.*, *கா.சு.*, குழந்தை; 'உள்ளம் ஓர்த்து ஒருதலையா உள்ளது உணரின்' *காளி.*; 'உள்ளம் ஒருதலையா ஓர்த்து உள்ளது. உணரின்' *பரிமேல்.* *தேவநேயர்*; 'உள்ளது உள்ளம் ஒருதலையா ஓர்த்து உணரின்' *சொ.த.*;'ஓர்த்து உள்ளம் உள்ளது உணரின் ஒருதலையாய்ப் பேர்த்து பிறப்பு உள்ள வேண்டா' *இராம.*; முதற்பகுதியிற் சொல்லைச் சிறிதும் மாற்றாது, பிற்பகுதியில் மட்டும், பிறப்பு பேர்த்துள்ள வேண்டா' என மாற்றிப் பொருள் காண்பர். *வ.உ.சி.*

இங்ஙனம் கொண்டுகூட்டு முறையானும் சொற்பொருள் கொள்ளும் வகையானும் ஆசிரியர்கள் மாறுபடுவர். பொருள் கொள்ளும் வகையால் மாறுபடுவதைக் காணலாம்.

மணக்குடவர் உரை உணருவதில் உறுதியை வற்புறுத்துகிறது' *காளிங்கர்* உரை 'ஒருதலை—தலைமைப்பாடு. இணையற்ற சிறப்பாக உள்ளதை (நித்யப்பொருளை) உள்ள வேண்டும்'

1 இணையிறந்த-ஒப்பற்ற; 2 தலைமைப்பாடாக-சிறந்ததாக.
3 மேலே என்றது அருளுடைமை 2ம் குறட்பாவின் விசேடவுரையில் என்பதாம்.

என்கிறது. பரிமேலழகர் உரை உபதேச மொழிகளை அளவைகளான் ஆய்ந்து துணிய வேண்டும் என எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்பொருள் காண்பதறிவு ஆதலை எண்ணிப் பேசுகிறது. 'உள்ளம் ஒருதலையா ஓர்த்து உணர்தல்—மனங்குவிந்து ஆராய்தல்' என்கிறதுசொ.த. உரை. 'ஓர்த்து—கல்வி கேள்விகளான் ஆராய்ந்து, உள்ளது—என்றுமுள்ள பொருளை, உணரின்—உணர்ந்து அனுபவித்தால், உறுதியாக மறுபடியும் பிறப் பதைப் பற்றி எண்ணவே வேண்டாம்' என்கிறது இராமலிங்கர் உரை. 'ஓர்த்து –(அகத்துள் நோக்கி) ஆராய்ந்து, உள்ளம் உள்ளது உணரின்—உள்ளத்தின்கண் உள்ளதாகிய மெய்ப்பொருளை உணரின், ஒருதலையா பேர்த்து பிறப்பு உள்ள வேண்டா—உறுதியாக மீளவும் பிறப்பினை நினைக்கவேண்டா' என்பது வ.உ.சி.யுரை. இக்குறளின் உயிர்ச்சொல் 'ஒருதலையா' என்பது. அது எங்குச் சேர்க்கப்பெறுகிறதோ அப்பொருளைச் சிறப்பிப்பதால் சிறிது கருத்து மாறுபடுகிறது ஆயினும், மெய்ப்பொருளை ஆய்ந்து கண்டவனுக்குப் பிறப்பில்லை' என்ற முடிவில் மாற்றமின்று.

ஓ) ஒப்புமைப்பகுதி:

முற்றும்:

தெரிஞ்சுற நோக்கினர் செய்த செய்தவம்
அருஞ்சிறப் புதவநல் லறிவு கைதர
விருஞ்சுறப் பற்றிய பிறவி வெந்துயர்ப்
பெருஞ்சிறை வீடுபெற் றனைய பெற்றியார் —கம்பராமா.,2728

ஈர்ந்தநுண் பளிங்கெனத் தெளிந்த வீர்ம்புனல்
பேர்ந்ததொளிர் நவமணி படர்ந்த பித்திகைச்
சேர்ந்துழிச் சேர்ந்துழி நிறத்தைச் சேர்தலால்
ஓர்ந்துணர் வில்லவ ருள்ள மொப்பது —கம்பராமா.,3812

இருவினையும் இடைவிடா எவ்வினையும் இபற்றாதே இமையோ ரேத்தும்
திருவினையும் இருபதந்தேர் சிறுமையையு முறையொப்பத் தெளிந்துநோக்கிக்
கருவினைய திப்பிறவிக் கென்றுணர்ந்தங் கதுகளையும் கடையின் ஞானத்
தருவினையின் பெரும்பகைஞர் ஆண்டுளர்ஈண் டிருந்துமடி
வணங்கற்பாலார் —கம்பராமா.,4579

... ... அறிந்தோர்
ஓரச் சொல்லுவ தொப்பொன்... ... ... —கம்பராமா.,6344

ஓ) மேற்கோள் பகுதி:

மயிலை.: உடம்போடு கூடிய உயிர்க்குணம் ஓர்ப்பு என்பதற்கு மேற்கோள். (*நன்.*451.)

36.8. பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்ப தறிவு. (௩௱௮)

உரைப்பகுதி:

அ) மணக்.: பிறப்பாகிய அறியாமையினின்று நீங்கிப் பிறவாமையாகிய செவ்விய பொருளைக் காண்பது அறிவாம்என்றவாறு.

பிறவாமை சிறந்ததாதலின், சிறப்பு என்னப்பட்டது. தான் பிறந்தானாகவும் செத்தானாகவும் கருதுகின்ற அறியாமையை விட்டுத் தனக்குச் சாவில்லையாகவும், பிறப்பில்லையாகவும் தான் நிற்கின்ற நிலைமையைக் காணவேண்டும் என்றவாறாயிற்று.

ஆ) பரிதி.: எ-து செனன மரண பேதைமை[1]போம்படிக்கு ஞானம் என்னும் சிறப்பைக் காண்பது இயல்பு என்றவாறு.

ஈ) காளி.: 'நீங்கி' பாடம். எ-து. உலகத்து மக்களும் தேவரும் பிறவுமாகிய பிறப்பு என்பது ஒன்றுளது என்று கருதும் அறியாமை நீங்குமாறு உலகத்தோர் நல்லனவாகக் கருதிவருகின்ற யாவையினும் தான்சிறந்தும் மற்றும் தன்னிற் சிறந்தும் பிறிதொன்று இன்மையான் அதுவே சிறப்பு உடையது என்று மறை நூல்களும் மற்றும் பிறவும் இவை முழுதும் உணர்ந்தவரும் முனிவருள்ளிட்டோரும் எடுத்துச்சொல்லுகின்ற மெய்ப்பொருளினை இப்படிக் காண வல்லது யாது மற்று அதுவே அறிவானது என்றவாறு.

பேதைமை என்பது அறியாமை.

உ) பரிமேல்.: பிறப்பிற்கு முதற் காரணமாய அவிச்சை கெட, வீட்டிற்கு நிமித்த காரணமாய செவ்வியபொருளைக் காண்பதே ஒருவர்க்கு மெய்யுணர்வாவது.

'பிறப்பென்னும் பேதமை' எனவும், 'சிறப்பு என்னும் செம்பொருள்' எனவும், காரியத்தைக் காரணமாக உபசரித்தார்[2]. ஐவகைக் குற்றங்களுள்[3] அவிச்சை ஏனைய நான்கிற்கும் காரணமாதல் உடைமையின் அச்சிறப்புப்பற்றி அதனையே பிறப்பிற்குக் காரணமாக்கிக்

1. செனன மரண பேதைமை—பிறப்பு இறப்புகளுக்குக் காரணமான அறியாமை.
2. பிறப்புக்கு முதற் காரணம் அவிச்சையாகிய பேதைமை. பிறப்பென்னும் பேதைமை எனக் காரியத்தைக் காரணமாகவே கூறியதாலும், சிறப்பிற்கு அதாவது முத்திக்கு நிமித்த காரணம் செம்பொருள். அதனைச் சிறப்பென்னும் செம்பொருள் எனக் காரியத்தைக் காரணமாகவே கூறியிருத்தலானும் இது உபசார வழக்கு. பிறப்பென்னும் பேதைமை என்பதனைப் பிரயோக விவேக நூலாரும் 'மருளறுகாரணம்' என்னும் பாட்டுரையில் மேற்கோளாகக் காட்டியிருத்தலைக் காண்க.
3. ஐவகைக் குற்றங்கள்— அவிச்சை அகங்காரம் அவா ஆசை கோபம் என்பர்.

கூறினர். எல்லாப் பொருளினும் சிறந்தது ஆகலால், வீடு சிறப்பு எனப்பட்டது. தோற்றக்கேடுகள் இன்மையின் நித்தமாய், நோன்மையால் தன்னையொன்றும் கலத்தல் இன்மையின்[4] தூய் தாய்த் தானெல்லாவற்றையும் கலந்து நிற்கின்ற முதற் பொருள் விகாரமின்றி, எஞ்ஞான்றும் ஒரு தன்மைத்தாதல் பற்றி, அதனைச் 'செம்பொருள்' என்றார். மேல்[5] 'மெய்ப்பொருள்' எனவும் 'உள்ளது' எனவும் கூறியதூஉம் இதுபற்றியென உணர்க. அதனைக் காண்கையாவது உயிர் தன் அவிச்சை கெட்டு அதனோடு ஒற்றுமை யுற இடைவிடாது பாவித்தல். இதனைச் சமாதி[6] எனவும் சுக்கிலத் தியானம்[7] எனவும் கூறுப. உயிர் உடம்பின் நீங்குங்காலத்து அதனால் யாதொன்று பாவிக்கப்பட்டது[8]. அஃது அதுவாய்த் தோன்றும் என்பது எல்லா ஆகமங்கட்கும் துணிபு ஆகலின். வீடெய்துவார்க்கு அக் காலத்துப் பிறப்பிற்கேதுவாய பாவனை கெடுதற்பொருட்டுக்கேவலப்பொருளையே[9] பாவித்தல் வேண்டுதலான், அதனை முன்னே பயிறலாய இதனின் மிக்க உபாயம் இல்லைஎன்பது அறிக. இதனால் பாவனை கூறப்பட்டது.

ஊ) *கவிராசர்*: பிறப்புக்குக் காரணமான அக்ஞானத்தினால்[10] உண்டாகும் ஆசை கெட்டுப்போக வீட்டிற்கு நிமித்த காரணமாகிய மெய்ப் பொருளைக் காண்கின்றதே அறிவு (எ—று).

எ) *பழைய 2*: பிறப்பிற்கு முதல் காரணமாகிய ஆசை நீங்க மோட்சத்திற்கு நிமித்த காரணமாகிய செவ்விய பொருளைக் காண்பதே உணர்வாவது.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக்குடவர் உரை, 'பிறப்பை அறியாமையாகவும், பிறவாமையைச் செம்பொருளாகவும்' கூறுகிறது. 'தனக்குப் பிறப்பில்லையா

4 நோன்மை-பெருமை. பெருமையுடைய பொருள் தன்னில் ஒன்றும் கலத்திலில்லாதிருக்கும் ஆதலால் இங்ஙனம் கூறப்பட்டது. இதனை பேட்சிக நியாயம் என்பர் வடநூலார். நிரபேட்சை ஒன்றனையும் விரும்பாமை. (சிவாக்ர. பக். 109)

5 மேல் என்றது 355, 35—ஆம் குறட்பாக்களை.

6 சமாதி-தியானிப்பவன் தியானம் என்னும் பேத ஞானம் நீங்கித் தியானிக்கப்படும் பொருள் ஒன்றையே எண்ணிக் காற்றில்லாத விளக்குப் போல அசைவற்று நிற்கும் மன நிலை. (யோக சூத்திரம் 4வது பாதம், 28வது சூத்திரம் பார்க்க.)

7 சுக்கிலத்தியானம்-மதிஞானாவரணீய முதலான ஐவகை மறைப்புக்களும் நீங்கப் பெற்று, சக்குதரிசனாவரணீய முதலான நான்கு காட்சித்தடைகளின் அகன்று தானாந்தராய முதலான ஐவகையிடையீடுகளின்றும் விலகி, பொறிகளா கியகாலாட் படையினை வெல்லும் உபாயமாகிய பரமான்ம பாவனையே சுக்கிலத் தியானம் என்பது. இது சைன மரபு. சிவக., 3081 பார்க்க.

8 இறக்குங்காலையில் எவன் எதனை நினைக்கிறானோ அவன் அந்தப்பாவனையால் அதுவாகத் தோன்றுவன் என்பதை உட்கொண்டு கூறியதாம்.

9 கேவலப்பொருள்-தனித்த பொருள் என்றது பிரமம் எனப்படும் செம்பொருளை. யாதொரு தொடர்புமின்றித்தனித்து விளங்குதலால் பிரமம்கேவலம் எனப்பெற்றது

10 அக்ஞானம்-அறியாமை.

கவும் இறப்பில்லையாகவும் கருதவேண்டும்' என்ற இவர் குறிப்பு இவரது கொள்கை ஏகான்மவாதக் கொள்கையாக இருத்தல் கூடும் எனக் கருதச் செய்கிறது.

பரிதி. உரை 'ஞானமே சிறப்பு. அதனைக் காண்பதே இயல்பு' என்கிறது. *காளிங்கர்* உரை 'உயர்வற உயர்ந்த பொருளே மெய்ப்பொருள்; அதனை வேதமும் அனுபவஞானிகளான முனிவர் களும் இதுவே சிறந்தது என்று கூறுகின்றனர் என அறியும் அறிவே மெய்யுணர்வு என்கிறது.

பரிமேலழகர், காளிங்கரை ஒட்டியே 'நிமித்த காரணமாகிய செம்பொருளைக் காண்பதே மெய்யுணர்வு' என்றனர். மேலும் அவர் சிறப்புரையில் 'தோற்றக்கேடுகளின்மையின் நித்தமாய்............ தூய்தாய், தான் அனைத்திலும் கலந்து விகாரமின்றி நிற்கும் முதற் பொருளே செம்பொருள் மெய்ப்பொருள் உள்ளது என்றெல்லாம் அழைக்கப்படுகிறது' என்றல் இறைப்பொருளையுணர்தலே மெய்யறி வாதலை வலியுறுத்துகிறது.

'ஒருவன் உயிரறிவானது உண்மையை ஆராய்ந்து அதனை நுகர்ச்சியால் உணருமாயின்' என்பது *கா.சு.* உரை: புறப்பொறி களும் மனமாகிய அகப்பொறியும் உணரும் இயல்பற்றன. உயிர் அறிவே உணரும் தன்மையது. அதினும் பொறிகள் அறிதற்கருவி கள். அதனால் இறைப்பொருளை அறிய முடியாது. உயிராகிய அறிவுடைய பொருளும் இறையருள் உணர்த்தினால்தான் இறை வனை யறியும் என்ற கருத்துக்கள் செறிய அமைத்தல் காண்க. *சொ.த.* உரை *பரிமேலழகரை* ஒட்டி விளக்கந்தருவது; 'மற்றும் பிறப்புக்கு முதற்காரணம் பேதைமை. சிறப்பென்னும் வீட்டுக்கு நிமித்த காரணம் செம்பொருள் என்ற குறிப்பு மிகநயம் பயப்பது. நிமித்தகாரணம் என்றமையானே மெய்உணர்வு—இறையுணர்வு ஆயிற்று'.

'பிறக்கும் போதே உடன் பிறந்த அறியாமை நீங்கச் சிறந்த உண்மைப்பொருளைக் காண்பதே அறிவு' என்பது குழந்தையுரை. இவ்வுரைப்போக்கு அறிவு பின்வந்து சேருவதா. சேர்வதாயின் வித்தில் இல்லாதது முளையிற் காணப்படாதவாறு போல அறிவு எங்கிருந்து உண்டாயிற்று? அறிவு இல்லாதபோது அதன் மறுதலை யாய அறியாமை மட்டும் உடன் தோன்றுமா? என்ற ஐயங்களை விளைவிப்பதாய் இவ்வுரையைச் சிந்திக்கத் தூண்டுகிறது.

*பரிமேலழகரைச்*சார்ந்து செல்லும் *தேவநேயர்* உரை பரம்பொரு ளையறிதலும், உள்ளத்தாற் காண்டலும், இரண்டறக்கலத்தலும் எனக்கூறும். *இராமலிங்கனார்* உரை 'பிறப்பென்னும் பேதைமை—

பிறப்பென்கிற அறியாமை. சிறப்பு என்னும் செம்பொருள்—தன்னறிவளவிற் சிறந்ததென்று ஒன்றைக்கண்டு அதைவிட—அதைவிட என்று மேன்மேலும் ஆய்ந்து கொண்டே போனால் இதன்மேற் சிறந்தது ஒன்றில்லை என்ற முடிநிலை எதில் உண்டாகிறதோ அதுவே செம்பொருள். அதனையறிந்து அனுபவிக்கப்பிறவி நீங்கும்' என்பதே. பெரும்பாலான உரைக் கருத்துக்கள், *பரிமேலழகர்* கருத்தை ஒட்டியே செல்வதால் அவர்கருத்து சிறந்தது ஆகும். *வ.உ.சி.* 'பிறப்பீனும் பேதைமை நீங்கிச் சிறப்பீனும்' என்பது *தாமத்தர்* பாடம்; அதனைக்கொண்டு பொருள் தருவர்.

ஒ) ஒப்புமைப் பகுதி:

பிறப்பென்னும் பேதைமை:

பேதைமைத் தாய்வரும் பிறப்பை நீக்குவான் —*கம்பராமா.*,1429

துறத்தல் ஆற்றுறா ஞானமாக் கடுங்கணை தொடர
அறத்த லாதுசெல் லாதுநல் லறிவுவந் தணுகப்
பிறத்த லாற்றுறும் பேதைமை பிணிப்புறத் தம்மை
மறத்த லாற்றந்த மாயையின் மாய்ந்ததம் மாயம் —*கம்பராமா.*, 9697

சிறப்பெனும் பதத்தை இராமனென் பானைப்பற்றிப்
பிறப்பெனும் புன்மையில்லை நினைந்தென்கொல் பெயர்ந்த வண்ணம்
—*கம்பராமா.*,கும்ப. வதை., 132

முற்றும்:

அருஞ்சிறப் பமைவரும் துறவும் அவ்வழித்
தெரிஞ்சுற வெனமிகும் தெளிவு மாய்வரும்
பெருஞ்சிற குளவெனிற் பிறவி யென்னுமின்
விருஞ்சிறை கடத்தலின் இனிய தியாவதே —*கம்பராமா.*, 1420

ஓ) மேற்கோள் பகுதி:

பெருந்.: இது விரியுருவகத்திற்கு மேற்கோள். (*வீரசோ.*160.)

36.9. சார்புணர்ந்து சார்புகெடஒழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய். (௩௫௯)

உரைப்பகுதி:

அ) மணக்.: தன்னைச் சார்வனவற்றை அறிந்து அவையிற்றின் சார்வுகெட ஒழுகுவனாயின், அவ்வொழுக்கத்தினை அழித்துச் சார்தலைச்[1] செய்யா; சாரக்கடவனவாய[2] துன்பங்கள் எ-று.

1 சார்தல்-அடைதல்; 2 சாரக்கடவனவாய-அடையக் கூடியனவாகிய.

சார்பு--வினைச்சார்பு; கெடஒழுகல்-காமம் வெகுளி மயக்கமின்றி மெய்யுணர்ச்சியான்[3] ஒழுகுதல். இஃது உண்மையைக் கண்டு அக் காட்சியைத் தப்பாமல் முடிய நிற்பனாயின் சாரக்கடவதாய் நிற்கின்ற வினை சாராதே விட்டுப்போம் என்றது.

ஆ) *பரிதி.*: எ--து ஆத்மாவுக்குச் சார்பறிந்து செனனத்தைக் கெட வேணும் என்று நிலைபிடிப்பானாகில் இந்த நிலையை அழிக்கமாட் டாது என்றவாறு.

ஈ) *காளி.*: 'சார்வுணர்ந்து சார்வு கெட' பாடம்.எ-து. தனக்கு முத் திச் சார்வாம் முதல்வனையறிந்து பிறப்பிற்குக் காரணமாகிய சார்வு கெடும்படி ஒழுகுவனாயின், மறித்துச்[4]சாரா சார்ந்துவரும் பிறவி நோய்கள் என்றவாறு.

சார்வு என்பது உடம்பு. சார்வுகெட என்பது'யான்' என்றும் 'எனது' என்றும் பற்றி வருகின்ற சார்வுக்கேடு.

உ) *பரிமேல்.*: ஒருவன் எல்லாப்பொருட்கும் சார்பாய அச்செம்பொ ருளை உணர்ந்து இருவகைப்பற்றும் அற ஒழுகவல்லனாயின்; அவ னை முன்[5] சாரக்கடவனவாய் நின்ற துன்பங்கள் அவ்வுணர்வு ஒழுக் கங்களை[6] அழித்துப் பின் சாரமாட்டா.

ஆகுபெயரால் சாருமிடத்தையும் சார்வனவற்றையும் 'சார்பு' என்றார்[7].ஈண்டு 'ஒழுக்கம்' என்றது யோகநெறி ஒழுகுதலை.அஃது இயமம், நியமம், இருப்பு, உயிர்நிலை. மனவொருக்கம், தாரணை தியானம், சமாதி என எண்வகைப்படும்.[8] அவற்றின் பரப்பெல்லாம் ஈண்டுரைப்பின் பெருகும்; யோகநூல்களுள் காண்க. மற்றுச் சார்தரா என இயையும். சாரக்கடவனவாய் நின்ற துன்பங்களாவன பிறப்பு அநாதியாய் வருதலின் உயிரான்அளவின்றிஈட்டப்பட்ட வினைகளின் பயன்களுள் இறந்த உடம்புகளான் அனுபவித்தனவும் பிறந்தவுடம்

---

3 மெய்யுணர்ச்சியான்- மெய்ப்பொருளை உணர்ந்தமையான்.

4 மறித்துச்சாரா-நீங்கிய பிறவி மீண்டும் சாரா; 5 முன்-இனி.

6 அவ்வுணர்வு- செம்பொருளை உணர்ந்த உணர்வு.ஒழுக்கம்- அதனால் இருவகைப் பற்று மற ஒழுகுதல்.

7 'சார்புஉணர்ந்து'என்பதிலுள்ளசார்புஇயங்குவ நிற்பவானஎல்லாப்பொருள்களுக்கும் சார்பான செம்பொருள்'சார்பு கெட' என்பதிலுள்ள சார்பு உயிர்களைச் சார்ந்துள்ள இருவகைப்பற்றுக்கள். ஈரிடத்தும் சார்பு என்னுந் தொழிற்பெயர் ஆகு பெயராய்ச் சாரும்இடத்தையும், சார்ந்தனவற்றையும் உணர்த்துதலான் தொழிலாகு பெயர் என்க,

8 இயமம்: பொய் கொலை களவு காமம் பொருளாசை, இவ்வகையைந்து மடக்கியது இயமம்,
நியமம்:பெற்ற தற் குவத்தல் பிழம்பு நனியுலர்த்தல், கற்பன கற்றல் கழிகடுந் தூய்மை, பூசனைப் பெரும் பயம் ஆசாற் களித்தலொடு, நயனுடை மரபின் நியமம் ஐந்தே.

பான் முகந்து நின்றனவும்[9] ஒழியப் பின்னும் அனுபவிக்கக் கடவனவாய்க் கிடந்தன.[10] அவை விளக்கின்முன் இருள்போல் ஞானயோகங்களின் முன்னர்க்கெடுதலான், அழித்துச் சார்தரா என்றார். இதனை ஆருகதர் உவர்ப்பு என்ப. பிறப்பிற்குக் காரணம் ஆகலான், நல்வினைப்பயனும் நோயெனப்பட்டது. மேல்மூன்று உபாயத்தாலும்[11] பரம்பொருளை உணரப்பிறப்பறும் என்றார். அஃதறும்வழிக் கிடந்த துன்பங்களெல்லாம் என்செய்யும் என்னும் கடாவை ஆசங்கித்து அவை ஞானயோகங்களின் முதிர்ச்சியுடைய உயிரைச் சாரமாட்டாமையானும் வேறு சார்பு இன்மையானும் கெட்டுவிடும் என்பது இதனால் கூறப்பட்டது.

காரி.: அழித்துச் சார என இயையும். 'ஓர்த்துள்ளம்'[12] என்பதனுள், 'ஒரு தலையா ஓர்த்து' என்பதும் அது. சஞ்சிதம் ஆகாமியங்கள் கெடும் என்பதும் பிராரத்துவம் கெடாது என்பதும் காண்க.

ஊ) *கவிராசர்*: ஒருவன் எல்லாப் பொருளுக்கும் முதலாய் இருக்கப்பட்டதருமநெறிகளைஅறிந்துஇருவகைப்பற்றினையும்அறுத்தொழுக வல்லவனாயின் அவனைமுன்சாரக் கடவனவாய் நின்ற தீவினைகள் அந்த ஆசாரங்களைக் கெடுத்து அவனைச் சேரமாட்டா (எ-று).

ஏ) *பழைய 2*: ஒருவன் எல்லாப் பொருட்கும் சார்பாகிய செம்பொருளை உணர்ந்து தன்னைச் சார்ந்த அகப்பற்றும் புறப்பற்றும் கெடஒழுகவல்லனாயின், அவனை முன் சாரவரும் துன்பங்கள் அந்த மெய்யுணர்வினை அழித்துச் சாரமாட்டா.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'சார்பு உணர்ந்து'

'வினைச்சார்புகளை யறிந்து' *மணக்.*; 'ஆத்மாவுக்குச் சார்பு அறிந்து' *பரிதி.*; 'தனக்கு முந்திச் சார்வாம் முதல்வனை யறிந்து'

ஆசனம்: நிற்றல் இருத்தல் கிடத்தல் நடத்தலெனறொத்த நான்கின் ஒல்கா நிலைமையோடின்பம் பயக்கும் சமய முதலிய அந்தமில் சிறப்பினாசனமாகும்
பிராணாயாமம்: உத்தியொடு புணர்ந்த இருவகை வளியும், தந்த மியக்கந் தடுப்பது வளி நிலை
பிரத்யாகாரம்: பொறியுணர் வெல்லாம் புலத்தின் வழாமல், ஒரு நிலைப் படுப்பது தொகை நிலைப்புறனே.
தாரணை: மனத்தினை ஒரு வழி நிறுப்பது பொறையே.
தியானம்: நிறுத்திய அம்மனம் நிலை திரியாமல், குறித்த பொருளொடு கொளுத்தல் நினைவே.
சமாதி: ஆங்ஙனம் குறித்த அம்முதற் பொருளொடு, தான் பிறனாகாற்தகைமது சமாதி.

9 முகந்து நின்றன-பிரார்த்தகன் மங்கள், எடுத்த இவ்வுடம்பால் நுகரத்தக்கன.
10 அனுபவிக்கக் கடவனவாய்க் கிடந்தன-ஆகாமிய சஞ்சித வினைகள்.
11 மூன்று உபாயம்-கேட்டல் சிந்தித்தல் தெளிதல்இவற்றை முறையே வடநூலார்சிரவண மனன நிதித்தியாசனம் என்பர்.
12 குறள் 357.

காளி.; 'எல்லாப் பொருட்கும் சார்பாய அச்செம்பொருளை யுணர்ந்து' *பரிமேல்.*; *கா.சு.*, *மு.ரா. அரு.*; 'தனக்கும் பற்றா வதான செம்பொருளை உள்ளவாறுணர்ந்து' *சொ. த.*

இவற்றுள் *மணக்குடவர், பரிதியுரைகள்* 'அறிய வேண்டியதை அறிக' என வினைகளையும் குறிப்பித்தனவேயன்றி அதிகார இயை பிற்கேற்ற 'மெய்ப்பொருளையுணர்ந்து காக்க' என்னாமையின் இவ் வுரைகளிலும் *காளிங்கர், பரிமேலழகர்* போன்றார் உரைகள் உயர்ந் தனவாம். அதினும் சிறப்பாகத் 'தனக்குச் சார்பான முதல்வன்' என் பதைக் காட்டிலும் 'அனைத்துப் பொருள்கட்கும் சார்பான' எனல் மிகச் சிறந்தது. சேரவிரும்பும் இடமாகிய செம்பொருளை உணர்ந்து என்ற *இராமலிங்கனார்* உரையும், *பரிமேலழகர்* போன்றோர் கருத்தை வலியுறுத்துகிறது.

'சார்வுணர்ந்து சார்வு கெட' என்பது *தருமர்* பாடம் என்பர் *வ.உ.சி.* 'உணரும் சார்பு--நற்சார்பு; கெடுக்கும் சார்பு--தீச்சார்பு என்க. 'தன்னைச் சாரக்கூடிய பொருள்களையறிந்து' *குழந்தை.*

'சார்புகெட கெடுக்கப்படும் சார்பு'—'தன்னைச் சாருப் பொரு ளின் சார்பு என்ற *மணக்குடவர்* 'வினைச்சார்பு' என விளக்கமுந் தருவர். இது பிராரத்த வினையை விட்டு, ஏனைய ஆகாமிய சஞ்சிதங் களையே சுட்டியமை தெளிக.

'செனனத்தைக் கெட' என்ற *பரிதியார்* உரைக்கருத்து வினை யான் வருவதும் வினைக்கு விளைவாவதுமான ஆகாமிய சஞ்சிதங் களையே குறித்தல்காண்க.

'பிறப்பிற்குக் காரணமாகிய சார்வு—யான் எனது என்ற இருவ கைப்பற்றுமாம், என்பது *காளிங்கர்* உரை.

'சார்புகெட'

'இருவகைப்பற்றும் கெட' *பரிமேலழகர், மு.ரா.அரு.* ஏனை யோரும் இங்ஙனமே.

'சேர்ந்துள்ளனவும் சேரக்கூடியனவுமான பற்றுக்கள் கெட' *இராமலிங்கனார்.* சஞ்சித ஆகாமியங்கள் என்றபடி.

'சாரக்கூடிய பொருளின்மேல் பற்றின்றி நடப்பானாயின்' *குழந்தை.*

'பொருட்பற்றைக் கெடுத்து வினைப்பற்றைக் கெடுத்து' என்ப வற்றை விட 'அகப்பற்று புறப்பற்றுக்களைக் கெடுத்து' எனல் சிறந்த தாகும். நிலையாமை ஞானத்தின் முன்னரே, உணர்ந்தவை அவை யே ஆகலான் என்க. *பரிதியார் இராமலிங்கனார்* உரைகள் பிறப்

பறுதற்கு ஆகாமிய சஞ்சிதக்கேடுகள் இன்றியமையாதன; ஆகலால் அவ்வுரைகள் மிகச் சிறந்தனவாகும். ஆனால், துன்பங்கள் அழித்துச் சார்தரா எனப் பின்வருதலால் பற்றறுதியையே வள்ளுவர் கருதினராதல் வேண்டும். ''சார்பு கெட வொழுகல் நலல சமாதியுமாம்'' என்ற *திருக்களிற்றுப்படியார்* பகுதியும் இதனை அரண்செய்தல் காண்க. சமாதி என்பது பற்றற்றான் பற்றினைப் பற்றித் தம்பற்றும் அற்றநிலையே யாதலான் என்க.

ஔ) ஒப்புமைப்பகுதி:

சார்புணர்ந்து சார்பு கெடல்:

பொறியெனும் பெயர வைவாய்ப் பொங்கழல் அரவின்கண்ணே
வெறிபுலங் கன்றி நின்றார் வேதனைக் கடலுள் நின்றார் —*சீவக.,375*

சாறயர்ந்து இறைவற் பேணிச் சார்பறுத்து உய்தியென்று கூறினன்
—*சீவக.,1221*

பிணியறியார்.........சாய்க்காட் டெம்தலைவன்தாள் சேர்ந்தாரே
—*சம்பந்தர், சாய்க்காடு.,1*

நக்க னார்அவர் சார்வலால் நல்கு சார்விலோம் நாங்களே
—*சம்பந்தர், அறையணிநல்லூர்.,8*

உமைச் சார்பவர் வசையறுமது வழிபாடே —*சம்பந்தர், சிறுகுடி.,8*

மாறிமாறிப் பலபிறப்பும் பிறந்தடியை அடைந்து உள்ளந்தேறி
ஈறில் இன்பத் திருவெள்ளம் யான் மூழ்கினன் —*திருவாய்.,2.6:8*

தாயேன் இனியுன் சரணம் தந்தென் சன்மம் களையாயே
—*திருவாய்.5.8:7*

சார் புணர்தல் தானே தியானமுமாம்—சார்பு
கெடவொழுகி னல்ல சமாதியுமாங் கேதப்
படவருவ தில்லைவினைப் பற்று —*திருக்களிற்றுப்., 34*

ஓ) மேற்கோள் பகுதி:

இளம்.: பொருளொடு புணர்ந்த பக்கத்திற்கு மேற்கோள் (தொல். பொருள்.75)

வெள்ளி.: (முத்திநிச்— பேருரை பக். 26.)

36.10. காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய். (௬௬௦)

உரைப்பகுதி:

அ) மணக்.: ஆசையும் வெகுளியும் மயக்கமும் என்னும் இவை மூன்றினது நாமம்போக, வினைபோம் என்றவாறு.

வினைகெடுதற்கு வழி இது என்று கூறுதலான், இது மெய் உணர்தலாயிற்று.

ஆ) *பரிதி*.: எ—து ஆசையும், கோபமும், அஞ்ஞானமும் விட்டால் அச்செனனம் கெடும் என்றவாறு.

ஈ) ***காளி***.: எ—து மற்று இங்குச்சொன்ன மெய்யுணர்வினால் முக்குணங்களின் விகாரம்[1] விரிவாய் மற்று யாவரையும் மயக்கிவருகின்ற அவாவும்சினமும் மோகமும் என்று சொல்லப்பட்ட இவை மூன்றினது பெயரும் உட்படத் தன்கண் இல்லாதவாறு முன்னம் கெடவே, இவற்றின் வழி உளதாக ஒழுகுகின்ற பிறப்பு என்னும் அனைத்து நோயும் கெடும் என்றவாறு.

இனிக் கீழ்ச்சொல்லிய காமம்முதலிய மூன்றினும் காமம் என்பது ஒன்றினை அவாவுதலன்றே,[2] மற்று அஃது எய்தாக்கால் வரும் வெகுளியும், அதனது முதிர்ச்சிக்கண் தனதுள்ளம் மயங்கும் மயக்கமும் என்னும் இவை இரண்டும் பிறவும் நிகழ்வதொன்றனை காமித்தலென்னும்[3] அவாவினாலாதலால் கீழ்ச்சொன்ன மெய்யுணர்விற்குக் காரணமாகிய விவேகம்[4] என்னுந் தெரிந்துணர்வினான் முன்னம் அனைத்திற்கும் காரணமாகிய அவாவினை அறுக்கவே மற்றமெய் யுணர்வு என்னும் பேருணர்வு வந்து வெளிப்படும் ஆதலால் இவ் வுணர்வு இல்லோர்க்கும் இதனது நிகழ்ச்சிக்கேதுவாக அதனை அறிவிக்கின்றது மேலையதிகாரம்.

உ) *பரிமேல்*.: ஞானயோகங்களின்[5] முதிர்ச்சியுடையார்க்கு விழைவு வெறுப்பு அவிச்சை என்னும் இக்குற்றங்கள்மூன்றனுடைய பெயருங் கூடக் கெடுதலான், அவற்றின் காரியமாய வினைப்பயன்கள் உள வாகா.

அநாதியாய அவிச்சையும்[6] அதுபற்றி யான் என மதிக்கும் அகங்காரமும்,[7] அதுபற்றி எனக்கு இதுவேண்டும் என்னும் அவாவும், அதுபற்றி அப்பொருட்கண் செல்லும் ஆசையும், அதுபற்றி அதன்மறுதலைக்கண் செல்லுங்கோபமும்[8] என வடநூலார் குற்றம்

1 முக்குணங்களின் விகாரம்—சாத்துவிகம் இராசதம் தாமதம் மூன்று குணங்களின் வளர்ச்சியாகிய வேறுபாடு; 2 அவாவுதல்—விரும்புதல்; 3 காமித்தல்—விழைதல்.
4 விவேகம்—நன்றிது தீதிது என்று வேறுபடுத்தியுணரும் உணர்வு.
5 ஞானயோகங்கள்—செம்பொருளையறிதலும், சார்தலும்;
6 அநாதியாய அவிச்சை—உயிர்கட்கு இயல்பாகக் கூடவே தொடர்ந்துள்ள அறியாமை.
7 அகங்காரம்—நான் நான் என்னும் முனைப்பு.
8 அப்பொருளை அடைவதற்குத் தடையாயிருப்பவர் மீது உண்டாம் சினமும் என்க.

ஐந்து[9] என்றார். இவர் அவற்றுள் அகங்காரம் அவிச்சைக்கண்ணும் அவாவுதல் ஆசைக்கண்ணும் அடங்குதலான் 'மூன்று' என்றார். இடையறாத ஞானயோகங்களின் முன்னர் இக்குற்றங்கள் மூன்றும் காட்டுத்தீ முன்னர்ப் பஞ்சுத்துய் போலும்[10] ஆகலின், அம்மிகுதி தோன்ற 'இவை மூன்றன் நாமங்கெட' என்றார். இழிவுசிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. கெட என்பது எச்சத்திரிவு.[11] நோய் என்பது சாதியொருமை.[12] காரணமாய அக்குற்றங்களைக்கெடுத்தார் காரியமாகிய இருவினைகளைச்[13] செய்யாமையின் அவர்க்கு வரக்கடவ துன்பங்களும் இல்லை என்பது இதனால் கூறப்பட்டது. முன்கிடந்த துன்பங்களும் மேல் வரக்கடவ துன்பங்களும்[14] இலவாதல் மெய்யுணர்வின் பயனாகலின், இவை இரண்டுபாட்டும் இவ்வதிகாரத்தவாயின. இவ்வாற்றானே மெய்யுணர்ந்தார்க்கு நிற்பன எடுத்தவுடம்பும், அதுகொண்ட வினைப்பயன்களுமே என்பது பெற்றாம்.

ஊ) *கவிராசர்:* ஒருவனுக்கு ஆசையும் கோவமும் மயக்கமும் என்று சொல்லப்பட்ட மூன்று குற்றங்களுடைய பேரும்கூட இல்லாமல் ஒருவனுக்குக் கெட்டால், அந்தக் குற்றங்களாலே வரும் வாதை[15] அவனுக்கு உண்டாகாது (எ—று).

ஏ) *பழைய 2:* காமம் வெகுளி மயக்கம் என்னும் குற்றங்கள் மூன்றின் பெயரும் கெடப் பிறவிநோயும் கெடும்.

மல்லர்: எ—து ஆசை வெறுப்பு மெய்யறியாமை என்கிற மூன்று குற்றங்களின் பெயருங்கூடக் கெடுத்தால் அதுகளைப் பற்றிவருகிற துன்பங்கள் இல்லாதே போகும் எ—று.

ஒரு கிராமத்தை அழித்ததுக்குப் பிறகு அதன் குட்டிச் சுவர்கள் நின்றால் அந்தக் கிராமத்தின் பெயரும் நிற்கும். அதை அடி

---

9 குற்றம் ஐந்து—அவித்தை, அஸ்மிதை, இராகம், துவேஷம், அபிநிவேசம் என்பனவாம். அவித்தை—உயிரல்லாதவற்றை உயிராகமதிக்கும் அறியாமை. அஸ்மிதை—சத்துவகுணம் ஆன்மா. இவ்விரண்டிலும் நான் என்னும் ஒருமை அபிமானம். இராகம்—இன்பத்தையறிந்தவனுக்கு அந்நினைப்பால் இன்ப ஏதுவான பொருள்களிடத்துண்டாகும் இச்சை. துவேஷம்—துன்பப் பட்டவனுக்குத் துன்ப ஏதுவான பொருள்கள் மீதுண்டாகும் வெறுப்பு. அபிநிவேசம்—முற்பிறவிகளில் கண்ட மரண பயத்தால் விளையும் கிலேசம். இவற்றின் விரிவை சருவதரிசன சங்கிரத்துள் காண்க.

10 பஞ்சுத்துய்-பஞ்சினது பிசிர்.

11 கெட என்பது கெடின் என்ற செயின் என்னும் வாய்பாட்டு வினை எச்சத்திரிபாகக் கருதுகிறார் பரிமேலழகர். 'மழை பெய்ய நெல் விளைந்தது' என்பதுபோலக்காரணப் பொருளில் வந்த செயவெனனெச்சமாகக் கருதுவர் சேனாவரையர் முதலான தொல்லசிரியர்கள்.

12 நோய்கள்பலவாயினும் இனம் பற்றி ஒருமையாகவே வழங்கப்படும்என்பது. இதனைச் சாதி ஏகவசனம் என்பர் வடநூலார்.

13 'காரணமாய குற்றங்களைக் கொடுத்தார் காரியமாய வினைகளைச் செய்யாமையின்' என்றும் பாடமுண்டு.

14 முன் கிடந்த துன்பம்-சஞ்சிதகன்மம். வரக்கடவ துன்பங்கள்-ஆகாமிய துன்பங்கள்.

15 வாதை—துன்பம்

யோடே பிடித்து நிலமாக்கிப் போட்டால் கிராமத்தின் பெயரும் அழிந்துபோம். அப்படிப்போல துறந்தவன் இச்சைகளால் வருகிற ஆசையும் கோபத்தினால் வருகிறவெறுப்பும் மெய்யறியாமையினால் வருகிற மயக்குமான மூன்று குற்றத்தையும் அழிக்க வேண்டியது என்கிறதுக்கு லட்சணமாக அவைகளுடைய பெயருங்கூட அழிக்க வேண்டும் என்றதும் அல்லாமல் அவைகளை முழுதும் அழிக்காதே போனால்அவைகளால்வருந்துன்பங்கள் துறந்தவனைத்தொடர்ந்து கொண்டு நிற்கும் என்பது கருத்து. காமம்—ஆசை, வெகுளி—கோபம், மயக்கம்—மெய்யறியாமை, நோய்—துன்பம்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'காமவெகுளி மயக்கங்களின் இயைபும், அவை கெடுதலால் இருவினைத்தொடர்பு அறும்' எனத்தோற்றக் கேடுகளையும் பயனையும் கூறும் *பரிமேழலகர்* உரை விளக்கமானது.

பொருள் அழிந்தால் அப்பொருளின் தன்மை மனத்தளவில் நிலைத்துச் சில நாளிருக்கும். ஒரு குழந்தையிறந்தால் அதன் உருவம் மனக்கண்ணிற் சில ஆண்டு நிற்கும். பின் பிறக்கும் குழந்தை அந்த இடத்தை நிரப்பின் உருவமட்டும் அன்றி அதன் பெயரும், அது செய்த சிறு விளையாடல்களும் மறந்துபோம். மேலும் சில ஆண்டு கழியின் அடியோடு மறந்துபோம். அது போல மெய்யுணர்தலாகிய இறையுணர்வால்—இறையின் இடையறாவுணர்வால் காமமாதிய மூன்றின் பெயருமின்றி மறந்துபோம். அவை மறக்கவே அவை பற்றி வரும் வினைகளும் அடியோடு ஒழியும் என்பது கருத்தாக அனைவராலும் அறிவிக்கப் படுதல் காண்க.

ஒ) ஒப்புமைப்பகுதி:

காமம்:

காமம் இல்லை எனிற் கடுங்கே டெனும்
நாமம் இல்லை நரகமு மில்லையே —*கம்பராமா., அயோ. மந்திரை சூழ்ச்சி*, 21

காமம் வெகுளி:

தருவனத்துள் யானியற்றுந் தவவேள்விக் கிடையூறாத் தவஞ்செய் வோர்கள்
வெருவரச் சென்றடைகாம வெகுளியென........ —*கம்பராமா.*,327

காமவெகுளி மயக்கம்:

யாமேல் உரைத்த பொருள்கட் கெல்லாம்
காமம் வெகுளி மயக்கம் காரணம் —*மணி. பவத்திற.*, 252-253

மூன்றுளகுற்றம் முழுவதும் நலிவன
மான்றிருள் தூங்கி மயங்கிக் கிடந்தன
மூன்றினை நீக்கினர் நீங்கினர் நீக்கார்
மூன்றினுட் பட்டு முடிகின்ற வாறே —திருமந்.,2396

காமம் வெகுளி மயக்கம் இவைகடிந்
தேமம் பிடித்திருந் தேனுக்கு —திருமந்.,2436

காமமும் வெகுளியும் களிப்பும் கைத்தெழு,கோமுனி —கம்பராமா.,227

தாவரு மிருவினை செற்றுத் தள்ளரு
மூவகைப் பகையரண் கடந்த முத்தியில்
போவது புரிபவர் மனமும் பொன்விலைப்
பாவையர் மனமும்போற் பசையு மற்றதே —கம்பராமா.,356

காமம் முதலா, முக்குறும்பற வெறிந்த வினை —கம்பராமா.,2607

காமமுதலுற்றபகை காறளர வாசை
நாமமழி யப்புலனு நல்லறிவு புல்ல கம்பராமா.,4674

முற்றும்:

முக்குற்றம் நீக்க முடியும் அளவெல்லாம்
துக்கத்துள் நீக்கி விடும் —நலாடி.,190

ஐந்தொ டாகிய முப்பகை மருங்கற வகற்றி
உய்ந்து போயினர் —கம்பராமா.,1462

கொடுநாலொ டிரண்டு குலப்பகை குற்றமூன்றும்
கடுஞானம் வெளிப்பட வுய்ந்த துயக்கி லார்போல் —கம்பராமா.,4897

ஓ) மேற்கோள் பகுதி:

நச்சி.: காமம் நீத்தபாலினானும்: அங்ஙனம் துறவுள்ளம் பிறந்த பின்னர் எப்பொருட் கண்ணும் பற்றற்ற மிகுதிக்கு இக்குறள் உதாரணம். (தொல்.பொருள். 77.)

இளம்.: ... ... (தொல்.பொருள். 75.)

சிவஞான.: பஞ்சக்கிலே சத்தை மூன்றாய் அடக்கிக் காமம் வெகுளி மயக்கம் என்றார் வள்ளுவனாரும். (சிவஞானபோ. சூ.2.அதி.2.)

36. மெய்யுணர்தல்.

	பொருளல்	இருணீங்கி	ஐயத்தின்	ஐயுணர்வு	எப்பொருள்	கற்றீண்டு	ஓர்த்துள்ளம்	பிறப்பென்னும்	சார்புணர்ந்து	காமம்
மணக்.	2	7	6	1	3	8	5	4	9	10
பரிதி.	10	2	3	1	5	7	4	6	8	9
பரிப்.	—	—	—	—	—	—	—	—	—	—
காளி.	4	2	8	1	6	5	7	3	9	10
பரிமேல்.	1	2	3	4	5	6	7	8	9	10

36—வது அதிகாரம் ''மெய்யுணர்தல்'' முற்றிற்று.

37. அவாவறுத்தல்

அ) மணக்.: அவா[1]வறுத்தலாவது பொய்ப்பொருள்கள் மேற் செல்லும் ஆசையைத் தவிர்த்தல். முத்திக்குக் காரணமாக மெய்யுணர்தலே அமையுமாயினும், பின்னும் உடம்போடு நிற்றலின் தான் விட்ட பொருள்கள்மாட்டு ஆசைசெல்லின், மீண்டும் பிறப்பிற்குக் காரணமாம்; ஆதலால் இதனைத் தவிரவேண்டுமென்று எல்லாவற்றினும் பின் இது கூறப்பட்டது.

ஆ) *பரிதி*.: அவாவறுத்தலாவது, மூன்றுவகை ஆசையும் விட வேணும் என்றவாறு.

உ) *பரிமேல்*.: அஃதாவது முன்னும் பின்னும் வினைத்தொடர்பு[2] அறுத்தார்க்கு நடுவுநின்ற உடம்பும்[3], அதுகொண்ட வினைப்பயன்களும்[4] நின்றமையின், வேதனை பற்றி ஒரோவழித் துறக்கப்பட்ட புலன்கள்மேற் பழைய பயிற்சி வயத்தான் நினைவு செல்லுமன்றே. அந்நினைவும் அவிச்சை எனப் பிறவிக்கு வித்தாம் ஆகலின், அதனை இடைவிடாது மெய்ப்பொருள் உணர்வான் அறுத்தல். அதிகார முறைமையும்[5] இதனானே விளங்கும்.

ஊ) *கவிராசர்*: அஃதாவது முன்னும் பின்னும் தொடரப்பட்ட வினைத்தொடர்ச்சியை அறுக்கப் பட்டவர்களுக்கு, நடுவுநின்ற உடம்பும் அத்துடன் கூடிய வினையினாலே பிறக்கப்பட்ட ஆசையும் பிறவிக்குவித்தாமாகலின், அதை அறுக்கிறதாம்.

ஏ) பழைய 2: அஃதாவது அவாவினை அறுத்தல்; ஆசையினை அறுத்தல் எனக்கொள்க.

மல்லர்: எ—து தன்னிடத்திலே இச்சைகள் இல்லாத படிக்குப் பண்ணுகிறது.

---

1 அவா—எனக்கு இது வேண்டும் என்னும் விருப்பம்.
2 முன்னும் பின்னும் வினைத்தொடர்பு—சஞ்சித ஆகாமிய வினைகளின் தொடர்பு.
3 நின்ற உடம்பு-வினைகளை உண்டு கழிப்பதற்காக எடுத்த இந்த உடல்.
4 வினைப்பயன்கள்—எடுத்த உடம்பிற்குரிய பிராரத்த கன்மத்தின பயன்.
5 மெய்யுணர்தல் அவாவறுத்தற்குக் காரண காரிய இயைபு பற்றி வைக்கப்பெற்றன என்பது.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'அவா', ஆசை'. 'வேட்கை', 'பற்று' என்பன ஒரு பொருள் சொற்களா? என்பது—பொறிகளின் வாயிலாக மனம் சென்று பற்று தலாற்பற்று; பற்றியபின் உள்நிகழும் விருப்பம் வேட்கை. ஆசை படர்ந்திருப்பது, பற்றிய மனநெகிழ்ச்சி விருப்பமாகச் செயற்பட்டு, விரும்பிய பொருள்மேற் படர்ந்து அதனையடையத்தான் வேண்டும் என்ற முதிர்ந்த நிலைபெற்று, அது தாகமாறும். இது ஆசை என்ற ஒரு பொருளதாயினும் அதன் வளர்ச்சி முறைபற்றிப் பலபெயர்களை யடைகின்றன எனலாம். 'செய்யுண்மருங்கின் வேட்கை' என்னும் சூத்திரவுரையில் *நச்சினார்க்கினியர்* 'வேட்கை—பொருள்கள் மேற் றோன்றும் பற்றுள்ளம்; அவா—அப்பொருள்களைப் பெற வேண்டும் என்று மேன்மேல்நிகழும் ஆசை' என்று கூறுமாற்றானும் அறிய லாம். ஆதலால், *மணக்குடவர்* 'பொருள்கள்மேற்றோன்றும் ஆசை' என்றார். *பரிமேலழகர்* 'புலன்கள் மேற்செல்லும் நினைவு'என்றனர். *பரிதி.*, 'மண் பெண் பொன்னாகிய மூன்றுவகை ஆசை' என்றனர். 'பற்று' என்றார். *கா.சு.*, *இராம.*; 'புலன்கள் மேற்செல்லும் உள் ளம்' என்றனர் *சொ.த.*; 'உடம்புடன் கூடிய வினையால் விளையும் ஆசை' என்பர் *கவிராசர்*.'பேராசை' என்பர் *குழந்தை*. *மு.ரா.*அரு. *பரிமேலழகர்* உரைக்கு விளக்கம் போல அதனை முற்றும் ஒட்டியே எழுதுவர். *வ.உ.சி.* 'ஆசையை ஒழித்தல்' எனப் பொதுவகையான் விளக்குவர்.

இந்த அவா துறவிக்கு கூடாது என விலக்கும் இடமாதலின் நிலை யாமை ஞானங்கைவரப்பெற்றுத் துறந்தார்க்கும் முந்தைய பழக்க வாசனை பற்றி மீண்டும் எழும்: அதனை நீக்குதல் என்ற *மணக் குடவர்*, *பரிமேலழகர்* உரைகள் சிறந்தன.

37.1. அவாஎன்ப எல்லா உயிர்க்குமெஞ் ஞான்றும்
தவாஅப் பிறப்பீனும் வித்து. (௩௬௧)

உரைப்பகுதி:

அ) *மணக்.*: எல்லாவுயிர்க்கும் எல்லா நாளும் கேடில்லாத பிறப்பைக் கொடுக்கும் விதையாவது ஆசை என்று சொல்லுவர் என்றவாறு.

இஃது ஆசை துன்பம் தருதலேயன்றிப் பிறப்பையும் தரும் என்றது.

ஆ) *பரிதி.*: எ—து ஆசையாவது பிராணிகளுக் கெல்லாம் பிறப்பைக் கொடுக்கிற விதையாம் என்றவாறு.

ஈ) *காளி.*: எ—து இவ்வுலகத்து நல்வினைப்பயன்களை அவாவிச்[1] செய்யுமிடத்து நல்லனவும் மற்றிது ஒழிந்தகொலை களவு கள் காமம் குறளை பொய் வஞ்சனை முதலிய தீயனவுமாய் இங்ஙனம்வருகின்ற எல்லா உயிர்க்கும் எக்காலமும் பிறிதொன்றினாலும் கேடில்லாத பிறவியை ஈனும் அவாவாகிய வித்து எனவே இதனைக் கருதற்குக் காரணம் மற்று இது ஒன்றுமே பிறிதில்லை என்றவாறு.

உ) *பரிமேல்.*: எல்லாவுயிர்கட்கும் எக்காலத்தும் கெடாது வருகின்ற பிறப்பினை விளைவிக்கும் வித்து; அவாஎன்று சொல்லுவர் நூலோர்.

உடம்பு நீங்கிப் போங்காலத்து அடுத்த வினையும், அது காட்டுங் கதிநிமித்தங்களும்[2] அக்கதிக்கண் அவாவும் உயிரின்கண் முறையே வந்து உதிப்ப, அறிவை மோகம் மறைப்ப, அவ்வுயிரை அவ்அவா அக்கதிக்கண் கொண்டு செல்லுமாகலான், அதனைப் 'பிறப்பீனும் வித்து' என்றும், கதிவயத்தான் உளதாய அவ்வுயிர் வேறுபாட்டினும்[3] அவை தன்மை திரியும்[4] உற்சர்ப்பிணி[5] அவசர்ப்பிணி[6] என்னும் காலவேறுபாட்டினும் அது வித்தாதல் வேறுபடாமையின் 'எல்லாவுயிர்க்கும் எஞ்ஞான்றும்' என்றும், இஃது எல்லாச் சமயங்கட்கும் ஒத்தலான் 'என்ப'என்றும் கூறினார். இதனால் பிறப்பிற்கு அவா வித்தாதல் கூறப்பட்டது.

ஊ) *கவிராசர்*: எல்லாச் சீவன்களுக்கும் எந்தக்காலத்திலேயும் ஆசை என்னப்பட்டது பிறவிக்கு விதை (எ—று).

ஏ) *பழைய. 2*: எல்லா உயிர்க்கும், எக்காலத்தும், கெடாது வருகின்ற பிறப்பினைக் கொடுக்கும் வித்தாம் என்று சொல்லுவர், எல்லா நூலுடையோரும் அவாவினை.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக்குடவர், பரிதியார், பரிமேலழகர் உரைகள் மாறுபாடில்லாதன. *காளிங்கர்* உரை அதன் நடையமைப்பில் பின்னிச் செறிந்து எளிமையின் பொருள் புலப்படாதனவாயிருப்பினும், 'உயிர்கள் பிறந்து நல்வினைப்பயன்களை விரும்பிச் செய்கின்றன. அப்போது கொலை முதலிய தீவினைகளும் நிகழ்கின்றன. இப்படி வினைகளைச்

---

1 அவாவி-விரும்பி.

2 அது-மேல்வரும் பிறவிக்குரிய வினை. கதிநிமித்தங்கள்-உயிர் சென்றடையும் மனித கதி முதலான வகைகளும், அவற்றிற்குரிய காரணமும்.

3 கதிவயத்தான் விளையும் உயிர்வேறுபாடு-எடுத்த உடம்பிற்கேற்ப உண்டாம் ஊர்வ முதலான உயிர்களின் வேறுபாடு.

4 அவை தன்மை திரியும்-உயிர்கள் எடுக்கும் கதிகளின் இயல்பு வேறுபடும்.

5 உற்சர்ப்பிணி-வாழ்நாள் போக முதலியவற்றால் உலகம் வளர்பிறை போல வளரும் காலம்.

6 அவசர்ப்பிணி-உலகம் வாழ்நாள் முதலியவற்றால் தேய்பிறை போலத்தேயுங்காலம்.

செய்யும் உயிர்களுக்கு எக்காலமும் பிறவியைக் கொடுப்பது அவா என்கின்ற விதை' என்ற விரிந்த பொருளைத் தருகிறது. இத்தனைக்கும் உள்ளீடான பொருள் *பரிமேலழகர்* உரை ஒன்றே. இதனை ஒட்டியுரைப்பர் *கா.சு.*; 'மனிதனுடைய விருப்பம் புலனுகர்ச்சி மேலதாயின் பிறந்தே ஆக வேண்டும்' எனக்கூறுவர் *சொ.த.*; 'உடல் விழுந்த காலத்துச் செய்தவினையும் கதிநிமித்தங்களும் கதிக்கண் அவாவும் உயிரின்கண் முறையே வந்துதிப்பதால் அவாவை வித்தென்றார்' என்பர் ***கவிராசர்***.

'எல்லா உயிர்கட்கும் எப்போதும் உறுதியாகப் பிறவியைத் தருவது ஆசை தான்' என்பர் *இராமலிங்கர்*. 'உயிர் பிரியுங்காலத்து எல்லாவுயிர்கட்கும் எப்போதும் அடுத்து வரும் பிறப்பும் அதில் அவாவும் உயிரின்கண் முறையே தோன்றுதலான் அவா பிறப்பீனும் வித்தாயிற்று' என்பர் *தேவநேயர்*. 'வீடும் வேண்டா விறலின் வைகினார்' 'ஆசையற்ற இடம் மோட்சம்' என்பவற்றைக் கொண்டு விளக்குவர் *மு.ரா.அரு.*

இங்ஙனம் முடிந்த கருத்து ஒன்றேயாயினும் *கவிராசரைச்* சமய நிலை சிறிது வேறுபடுத்தியுள்ளது எனலாம். ஆயினும் *பரிமேலழகர்* தரும் விளக்கம் 'சைன சம்பிரதாயத்தை ஒட்டின'தென்பர் *கவிராசர்*. *பரிமேலழகர்* 'இஃது எல்லாச் சமயங்கட்கும் ஒத்ததாகலான் என்ப' என்றார் என்று சமயப் பொதுமை காட்டுவர்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

'அவா':

ஆர்வவேர் அரிந்து —*சீவக.*,409
பற்றின் வருவது முன்னது —*மணி.*,2.66
ஆர்வ வேரரிந்து அச்சணந்திபோய்
வீரன் தாணீழில் விளங்க நோற்ற பின் —*பாகவதம்*,1—2

'பிறப்பு':

வேட்கையை மிதத்து வித்துப் பிறவி நோய் விளைத்து வீயாத்
தேய்கையிற் கொண்ட தொக்கும் —*சீவக.*,3106
..............மோகத்தால்
பிறக்கை யுங்கடன்............ *கம்பராமா.*,10330

37. 2. வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும். (௩௬௨)

உரைப்பகுதி:

அ) மணக்.: வேண்டுங்கால் பிறவாமையை விரும்புதல் வேண்டும்; அப்பிறவாமை, பொருளை விரும்பாமையை விரும்பத் தானே வரும்

என்றவாறு.

இது பிறவாமையும் இதனாலே வரும் என்றது.

ஆ) *பரிதி*:. எ—து ஒன்றையும் வேண்டக் கடவனல்லன்; வேண்டினனாகில், பிறவா நெறியை வேண்டுவான் அல்லது ஆசையை வேண்டாமலிருந்தானாகிலும் வேண்டினது வரும் என்றவாறு.

ஈ) *காளி*.: எ—து ஒருவர்க்கு யாதானும் ஒன்றையும் விரும்புமிடத்துப் பிறவாமையே விரும்பலாவது; இங்ஙனம் பிறவாமையை விரும்புமிடத்து அவா எவ்வாறும் வருவதில்லை ஆதலால், அவாவினை விரும்பாது ஒழியின் பிறவாமையாகிய முத்தி தானே விரும்பி வந்து எய்தும் என்றவாறு.

உ) *பரிமேல்*:. பிறப்புத்துன்பமாதல் அறிந்தவன் ஒன்றை வேண்டின் பிறவாமை வேண்டும்; அப்பிறவாமை தான் ஒரு பொருளையும் அவாவாமையை வேண்ட அவனுக்குத் தானே உண்டாம்.

அநாதி[1]யாகத் தான் பிறப்புப் பிணிமூப்பு இறப்புக்களால் துன்பமுற்று வருகின்றமையை உணர்ந்தவனுக்கு ஆசை இன்பத்தின்கண்ணேயாகலின் 'பிறவாமையை வேண்டும்' என்றும்[2], ஈண்டைச் சிற்றின்பங்கருதி ஒரு பொருளை அவாவின் அது பிறப்பீனும் வித்தாய்ப் பின்னும் முடிவில்லாத துன்பமே விளைத்தலின் 'அது வேண்டாமை வேண்ட வரும்' என்றும் கூறினார். பிறவாமையின் சிறப்புக் கூறிப் பின் அது வரும் வழி கூறத் தொடங்குகின்றமையின், மற்று வினைமாற்றின்கண் வந்தது[3].

ஊ) *கவிராசர்*.: பிறப்பு துக்கம் என்று அறிந்தவன், ஒரு பொருளை வேண்டு மென்றால், பிறவாமல் இருக்கிறதையே நினைக்க வேண்டும். பிறவாமல் இருக்கிறதற்கு ஒரு பொருளின் மேலேயும் ஆசைவையாமல் இருக்க வேண்டும். ஆசை உண்டானால் பிறப்பு, துன்பம், வியாதி, மூப்பு, மரணங்கள் உண்டாம். ஆசை இல்லாதவனுக்கு மோக்ஷம் உண்டாம்; (எ—று).

ஏ) *பழைய 2*: 'எல்லாத் துன்பத்திலும் பிறவித்துன்பம் பெருந்துன்பம் ஆதலால்,ஒன்றை வேண்டும் காலத்துப் பிறவாமையை வேண்ட

---

1 அநாதியாக— தொன்றுதொட்டு.

2 'பிறப்பெனப் படுவதை கருமப் பெற்றியின்,உறப்புணர்,உள்ளம் சார்பொடு கதிகளின் காரணகாரிய உருக்களில் தோன்றல் பிணி எனப்படுவது சார்பிற் பிறிதாய், இயற்கையிற் திரிந்துடம்பிடும்பை புரிதல், மூப்பென மொழிவது அந்தத்தளவும், தாக்குநிலையாமையின் தாந் தளர்ந்திடுதல், சாக்காடென்ப தருவுத்தன்மை, யாக்கை விழ்கதிர் என மறைந்திடுதல்' மணிமேகலை 30; 95-103, மற்றும் 30;115-118, 130-132—145-146, 167-168 ஆகிய அடிகளிலும் காணலாம்.

3 மற்று என்னும் இடைச்சொல் பிறவாமை என்னும் எதிர்மறை வினையைப்பிறத்தல் என்னும் உடன் பாடாக மாற்றினமையின் வினைமாற்று எனப்பெற்றது.

வேண்டும்; அப்பிறவாமைதான் யாதொரு பொருளும் வேண்டாம் என்பதனை வேண்டத்தானே உண்டாம்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக்குடவர் உரையும், *பரிமேலழகருரையும்* ஒத்த கருத்தின. ஆயினும் *மணக்.*, 'வேண்டுங்கால்' என்பதனை வாளா கூறப் *பரிமேலழகர்* 'பிறப்புத்துன்பம் என்றுணர்ந்தவன் வேண்டின்' என எழுவாய் வருவித்துரைத்தும், அங்ஙனமே 'வேண்டாமை', 'வேண்ட' என்பவற்றிற்குச் செயப்படுபொருள்களை வருவித்தும் விளக்கங் கண்டனர்.

பரிதி. கருத்துப்பொருள்உரைப்பவர். அவருரைச் சொற்பொருளாகக் கொண்டு குறைநிறை கூறுதல் பொருந்தாது. ஆயினும் 'ஆசையை வேண்டாமலிருந்தானாகிலும்சிற்றின்பம்வெஃகி உலகப் பொருள்களை விரும்பாதவனாயின், வேண்டினதுவரும்' என்று கருதுகிறார். இதில் 'வேண்ட—வேண்டியது' எனப் பொருள்படுமாறு இல்லை. ஆகவே இவர் 'வேண்டாமை வேண்டின்' எனப்பாடங் கொண்டு 'வேண்டாமை வேண்டின் அது வேண்டினது வரும்' எனப் பொருள் கொண்டிருப்பர் எனத்தோன்றுகிறது. இத்துணை முயன்றும் போதிய பயனின்மை யறிக.

காளி., பரிமேல்., கா.சு., சொ.த., கவிராசர், தேவநேயர் சொல்லமைப்பால் சிறிது வேறுபாடுடையராயினும் முடிபால் ஒத்தவர்களே.

குழந்தை, 'பிறவாமை—துன்பம்—இல்லாமை' எனப்பொருள் காண்பர். பிறப்பு—பிறப்பான் வரும் துன்பம். அவாவின்மை பிறப்பின்மை. பிறப்பின்மை—துன்பம் இன்மை எனக்கருதினர் போலும். 'பிறப்பிறப்பு பிணி மூப்பின்றிப் பூரணப் பொருளோடு எப்போதுங் கலந்திருத்தலே பிறவாமை' என்பர் *மு.ரா.அரு.* 'வேண்டுங்கால் வேண்டல் பிறவாமை' எனப் பாடங் கொண்டு பழைய பாடங்களை மறுப்பதோடு 'விரும்புங்கால் பிறவாமையை விரும்புக' எனப் பொருள் காண்பர் வ.உ.சி.

இராமலிங்கனார் 'துறவி ஆசைப்பட்டால் பிறவாமைமீது ஆசை கொள்ள வேண்டும்; அதுவும் ஆசையின்மையின் மீது ஆசை வைத்தால் தான் கிடைக்கும்' என்பர். ''ஆசையறுமின் ஆசையறுமின் ஈசனோடாயினும் ஆசையறுமின்'' என்றது போல, பிறவாமையையும் ஆசைப்படாமலிருந்தாற்றான் பிறவாமைவரும் என்னும் கருத்தினது. சிறந்த நயமான கருத்திது. 'பற்றுக பற்றற்றான் பற்றினை.

அப்பற்றினைப் பற்றுவிடற்குப் பற்றுக' என்பது போலச் சொல்லமைதியுடையதிது.

ஒ) ஒப்புமைப்பகுதி:

வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை:

கேட்ப தெல்லாம் பிறவாமை கேட்டொழிந்தேன் —*சுந்தரர்*,
கச்சிமேற்றளி.,2

எங்கோனே உனை வேண்டிக் கொள்வேன் பிறவாமையே —*சுந்தரர்*,
அவினாசி.,3

அளித்தவ ரஞ்சுநெஞ்சி னடைத்தவ ரறிவின் மூழ்கிக்
குளித்தவ ரின்பதுன்பங் குறைத்தவ ரன்றி வேரி
ஒளித்தவ ருண்டுமீண்டிவ் வுலகெலா முணர வோடிக்
களித்தவ ரெய்தி நின்ற கதியொன்று கண்ட துண்டோ
—*கம்பராமா.,4466*

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும். .... —*பெரியகாரைக்கால்.*,60
வீடும் வேண்டா விறலின் விளங்கினார் —*பெரிய.திருக்கூட்.*,8
வேண்டாதென்றும் வேண்டாது மிக்க அன்பு மேவுதலே —*திருவாசக.*
பிரார்த்தனை.,4

வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை என்றமையால்
வேண்டின் அஃதொன்றுமே வேண்டுவது—வேண்டினது
வேண்டாமை வேண்டவரும் என்றமையால் வேண்டிடுக
வேண்டாமை வேண்டும் அவன்பால் —*திருக்களிற்றுப்.*,40

37.3. *வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை*
ஆண்டும் அஃதொப்ப தில். (௩௬௩)

உரைப்பகுதி:

அ) *மணக்.*: அவாவின்மை போல மிக்க செல்வம் இவ்விடத்தில் இல்லை; அவ்விடத்தினும் அதனையொப்பது பிறிதில்லை என்றவாறு.

இஃது இதனின் மிக்கதொரு பொருளும் இல்லை என்றது.

ஆ) *பரிதி.*: எ—து ஆசையற்ற செல்வத்திற்குப் பூலோகத்திலும் தெய்வலோகத்திலும் நிகரில்லை என்றவாறு.

ஈ) *காளி.*: 'யாண்டும்' பாடம், எ—து அவா என்னப்பட்ட யாதொன்

றினையும் விரும்பாமையாகிய இதனை ஒப்பதோர் விழுமிய செல்வம் இவ்விடத்தில்லை அதுவேயும் அன்றி மற்றும் எவ்விடத்தும் அதனை ஒப்பது ஒன்றும் இல்லை என்றவாறு.

உ) *பரிமேல்.*: ஒரு பொருளையும் அவாவாமையை ஒக்கும் விழுமிய செல்வம் காணப்படுகின்ற இவ்வுலகின்கண் இல்லை; இனி அவ்வள வேயன்று, கேட்கப்படுகின்ற துறக்கத்தின் கண்ணும் அதனை ஒப்பது இல்லை.

மக்கள் செல்வமும் தேவர் செல்வமும் மேன் மேல் நோக்கக், கீழாதலுடைமையின்[1] தனக்கு மேலில்லாத வேண்டாமையை 'விழுச் செல்வம்' என்றும், அதற்கு இரண்டுலகினும்[2] 'ஒப்பது இல்லை, என்றும் கூறினார். ஆகம அளவை[3] போலாது காட்சியளவை[4]' எல்லாரானும் தெளியப்படுதலின் மக்கள்செல்வம் வகுத்து முற்கூறப் பட்டது. பிறவாமைக்கு வழியாம் எனவும், விழுச்செல்வமாம் எனவும், வேண்டாமையின் சிறப்பு இவ்விரண்டு பாட்டானும் கூறப்பட்டது.

ஊ) *கவிராசர்*: ஒரு பொருளையும் விரும்பாமையைப் போல் ஒத்த பெரிய செல்வம் இந்த உலகத்திலே இல்லை. துறக்கத்திலேயும் இதற்குச் சரியான விகிதம்[5] இல்லை (எ—று).

ஏ) *பழைய 2*: யாதொரு பொருளும் வேண்டாம் என்னும் பெரும் செல்வம் போல இவ்வுலகத்தில் இல்லை. அதுவன்றி, அவ்வுலகாகிய சுவர்க்கத்தும் அதனை ஒத்த செல்வமில்லை.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'யாண்டும் ஒப்பது இல்' எனப் பாடங்கொண்டு 'எவ்விடத்தும். இல்லை' எனப்பொருள் காண்பவர் *காளிங்கர்*, *கா.சு.*; ஏனையோர் ஆண்டும்' எனப் பிரித்துச் 'சொர்க்கத்திலும்' என்றனர். 'யாண்டும்' என்பதில் 'எங்கும்' என விரிந்த பொருள் நயம் இருத்தல் காண்க. செல்வம் என்பது சிந்தையின் நிறைவே யாதலால் வேண்டாமை யையும் செல்வம் என்றாராயிற்று. 'ஈண்டு' என்ற சுட்டடியாகப் பிறந்த இடப்பெயர்க்கு ஏற்ப 'ஆண்டு' எனப் பாடங்கொள்ளினும், 'யாண்டும்' என்பது அனைத்திடத்தையும் சுட்டி நிற்றல் காண்க. 'ஆண்டும்' *நச்சி.*, *பரிமேல்.*, பாடம். 'ஆண்டும்' ஏனையர் பாடம்

1. இந்திரனாதியர் செல்வத்தை நோக்கத் தேவர் செல்வமும், அவர்கள் செல்வத்தை நோக்க மக்களின் செல்வமும் கீழ்க்கீழாதலைக் கூறியவாறு.
2. இரண்டுலகு - மண்ணுலகும் விண்ணுலகும் 3. ஆகம அளவை - நூலளவை.
4. காட்சியளவை - நேரே காணுதலாகிய அளவை; 5. விகிதம் - பொருள்.

என்பர் வ.உ.சி.

ஓ) ஒப்புமைப்பகுதி

வேண்டாமை (அன்ன) விழுச்செவம்:

ஆர்வமும் செற்றமும் அகலநீக்கிய
வீரனாதலின் விழுமங் கொள்ளான் —*சிலப்.*,10:149—150

நற்றவம் பரவை ஞாலம் நாமுட னிறுப்பின் வையம்
அற்றமில் தவத்திற் கென்றும் ஐயவி யனைத்தும் ஆற்றாது
இற்றென உணர்ந்து நிற்பின் திருமக ளென்றும் நீங்காள்
பற்றொடே நிற்பின் என்றும் திருமகள் பற்றல் செல்லான் —*சீவக.*,2983

கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார் —*பெரிய. திருக்கூட்ட.*,8

ஓ) மேற்கோள் பகுதி:

காரி.: பாவிக அலங்காரத்திற்கு மேற்கோள் (*மாற*. 251.)

37. 4. தூஉய்மை என்ப தவாவின்மை மற்றது
வாஅய்மை வேண்ட வரும். (கூசுச)

உரைப்பகுதி:

அ) மணக்.: ஒருவர்க்கு அழுக்கறுத்தலாவது ஆசை இன்மை; அவ்வாசையின்மை மெய் சொல்லுதலை விரும்பவரும் என்றவாறு.

இது பொருள்மேல் ஆசையில்லாதார் பொய் கூறாராதலின், மெய் சொல்ல அவாவின்மை வரும் என்று அவாவறுத்தற்குக் கருவி கூறிற்று.

ஆ) பரிதி.: எ—து உபதேசமுறுவதில் பெறுவது ஆசையை விடுதல்; உபதேசம் உண்மையாகில் ஆசை வேண்டினது தரும் என்றவாறு.

இ) காளி.: எ—து ஒருவன் மனத்தூய்மை என்று சொல்லப்படுவது யாதோ எனில் யாதொன்றின்மாட்டும் அவா இல்லாமையே; மற்று அவ் அவாவானது இல்லாமைதான் யாதினால் வருவது எனில் மெய்மையை விரும்ப வந்து எய்தும் என்றவாறு.

உ) பரிமேல்.: ஒருவர்க்கு வீடு என்று சொல்லப்படுவது அவாவில்

லாமை; அவ்வவாவில்லாமைதான் மெய்ம்மையை வேண்டத்தானே உண்டாம்.

வீடாவது உயிர் அவிச்சை முதலிய மாசு நீங்குதலாகலின், அதனைத் 'தூய்மை' என்றும்,[1] காரணத்தைக் காரியமாக உபசரித்துத்[2] 'தூய்மை என்பது அவாவின்மை' என்றும் மெய்ம்மையுடைய பரத்தை ஆகுபெயரான் 'மெய்ம்மை' என்றும் கூறினார்.[3] மற்று மேலையது போல வினைமாற்றின்கண் வந்தது.[4] வேண்டுதல்—இடைவிடாது பாவித்தல். அவா அறுத்தல் வீட்டிற்குப் பரம்பரை[5] யானன்றி நேரே ஏது என்பதூஉம் அது வரும்வழியும் இதனால் கூறப்பட்டன.

ஊ) *கவிராசர்*: ஒருவனுக்கு மோக்ஷம் என்று சொல்லப்படுகிறது ஆசையில்லாமை. அந்த மோக்ஷம் வேண்டிச் சத்தியமாய் நடந்தால் தானே வரும் (எ—று).

எ) *பழைய 2*: ஒருவர்க்கு மோட்சம் என்று சொல்லப்படுவது அவா வில்லாமல் இருப்பது. அந்த அவாவில்லாமலிருப்பது, வாய்மை யாகிய மெய்ப்பொருள் விரும்பத்தானே உண்டாம்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

''புறந்தூய்மை நீரானமையும் அகந்தூய்மை வாய்மையாற் காணப்படும்'' என்ற குறட்பாவின் நிழல் இக்குறள். ஆனால் தூய்மையின் பொருள் அங்கும் இங்கும் வேறுபடுகிறது.

'தூய்மை—வீடு, வாய்மை—மெய்ம்மை. அதாவதுமெய்ம்மையுடைய பரம்' என்பர் *பரிமேல்*; *கவிராசரும்* 'தூய்மை—வீடு' என்பர். 'அழுக் கறுத்தல்—மெய் சொல்லுதல்' *மணக்*, 'உபதேசம் உறுவது; வாய்மை வேண்டின் அது தரும்' எனப்பாடமும் கொண்டுகூட்டும் கொண்டு 'வாய்மை உண்மையானதாயின் ஆசை வேண்டினது தரும்' என்ற னர் *பரிதி*.; 'வாய்மை—மெய்மை' *காளி*., *குழந்தை*. இவ்வுரைகளில்

1 தூய்மையையுடைய வீட்டினைத் தூய்மை என்றதுபண்பாகுபெயர்.
2 காரியத்தைக் காரணமாக உபசரித்துஎன்றும்பாடமுண்டு.
3 'மெய்ம்மை' என்னும் பண்புச்சொல் அதனையுடைய பரத்தையுணர்த்தியதாதலின் பண்பின்பெயர் பண்பிக்கு ஆன பண்பாகுபெயராம்.
4 முத்திக்குக் காரணமான அவாவின்மை முன்னர்க்கூறி, அது வாய்மையாகிய மெய்ப் பொருளை இடைவிடாது பாவிக்கப் பாவிக்க அவாவின்மை உண்டாம் என அவா வறுத்தற்கு உபாயங் கூறினமையின் மற்று என்னும் இடைச்சொல் வினைமாற்றின் கண் வந்ததாயிற்று.
5 பரம்பரை- ஒன்றைப்பற்றியொன்றாக வழி வழி வருதல். ஈண்டு அவாவறுத்தலால் ஞானம் பிறக்க அதனால் வீடு பெறலாம் என்பதுபோல ஒன்று ஒன்றற்குக் காரணமாக அது வீட்டிற்குக் காரணம் என்னாமல் அவாவறுத்தலே நேரே வீட்டிற்குக் காரண மாயிற்று என்பதாம்.

'வாய்மை—மெய்ப்பொருள் அதாவது பரம்பொருள்' என்றவர்கள் பரிமேல்.,மு.ரா.அரு.ஆகியோர் ஏனையோர் 'மெய்ம்மை-உண்மை' என்றனர். ஆகவே 'பரம்' என்ற உரை சிறந்தது. 'மெய்ப்பொருள்' எனக் கண்டு கா.சு.வும் கடவுளையே நினைப்பிப்பர். /சொ.த., தேவநேயர் இவர்களும் அங்ஙனமே. இராமலிங்கனார் 'புறந் தூய்மை' என்ற குறட்பொருளையே இதற்கும் உரைப்பர். மற்றும் 'அது வாய்மை வேண்டவரும்' என்பதற்கு 'மனமாசின்மையும் சத்தியமாக நம்பினால் தான்வரும்' என்றுகூறி 'அவா வின்மை யாகியதூய்மையைச் சத்தியமாகநம்ப வேண்டும்' என்பர். இக்கருத்து ஈண்டு ஏற்புடையதேற்கொள்க. 'வேண்ட—கொள்ள' என்னும் பொருளது என்பர் வ.உ.சி

ஒ) ஒப்புமைப்பகுதி:

தூய்மை:

தூயவன் பணியாம்............ —கம்பராமா.,2869

முற்றும்:

வாய்மை யென்னுமீ தன்றி யையகம்
தூய்மை யென்றுமொன் றுண்மை சொல்லுமோ —கம்பராமா.,2578

37. 5. அற்றவர் என்பார் அவாஅற்றார் மற்றையார் அற்றாக அற்ற திலர். (௩௬௫)

உரைப்பகுதி:

அ) *மணக்.*: பற்றற்றவரென்பார் ஆசையற்றவரே; ஆசையறாத வர் பற்றினை அறுத்தாராயினும், ஆசையற்றாரைப்போலப் பற்று தல் இலர் என்றவாறு.

ஆ) *பரிதி.*: செனனம் அற்றார் என்பது அவா அற்றாரை, ஆசை விடாதாரைச் செனனம் விடாது என்றவாறு.

ஈ) *காளி.*: எ—து மற்று ஈண்டுள்ள பொருள் மாடு பெண்டிர் புதல்வர் சுற்றம் நட்டோர் முதலாகிய அனைத்திலும் உள்ள அவா அற்றனர் என்று சான்றோரால் சொல்லப்படுவார் யாரோ எனில் மற்று எப்பற்றும் காரணமாகிய அவாவினை அற்றவரே ஆசையற்ற வராவார்: மற்றையார் துறவு மேற்கொண்டு அவா அறாதார் என்றவாறு.

உ) *பரிமேல்.*: பிறவியற்றவர் என்று சொல்லப்படுவார் அதற்கு

நேரே ஏதுவாகிய[1] அவாவற்றவர்கள்; பிறஏதுக்கள்[2] அற்று அஃதொன்றும்[3] அறாதவர்கள், அவற்றால் சில துன்பங்கள் அற்ற தல்லது[4] அவர்போல்[5] பிறவியற்றிலர்.

இதனால் அவாவறுத்தாரது சிறப்பு விதிமுகத்தானும் எதிர் மறைமுகத்தானும் கூறப்பட்டது.[6]

ஊ) *கவிராசர்*: பிறப்பு பிணி மூப்பு மரணம் ஆகியவற்றை அறுத்த வர் என்று சொல்லப்படுவார்கள் ஆசையை அறுத்தவர்களே. ஆசையை விடாமல் மனைவாழ்க்கை முதலானவைகளைத் துறக்காத பேர் பிறவியை அறாதவர்கள்(எ—று).

எ) *பழைய 2*: பிறவி அற்றவரென்று சொல்லப்படுவர் யாரென்னில், ஆசையற்றவர்கள். மற்றவர்கள் ஆசையிருக்க, எல்லாம் அற்றாலும் அப்படிப் பிறவி அற்றவரல்லர்; சில துன்பமற்றவர்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'அற்றவர்'

'பற்றற்றவர்' ***மணக்.***; 'அவாவினை அற்றவர்' ***காளிங்கர், குழந்தை.*** 'செனனம் அற்றவர்' ***பரிதி.***; பிறவியற்றவர்' ***பரிமேல்., சொ.த., தேவநேயர், வ.உ.சி.***; 'பிறவித்துன்பம் அற்றவர்' ***கா.சு., மு.ரா. அரு.***; 'பிறப்பு பிணி மூப்பு மரணம் அற்றவர்' ***கவிராசர்***; 'துறந்தவர்கள்' ***இராம.***

பற்றற்றவர்எனப்படுபவர்கள் அவாஅற்றவரே என்பது இல்லார் என்பது தன்னளவில் வறியரைக்குறிப்பது போல;அற்றவர் என்பதும் தன்னளவில் அவா அற்றவரையே குறிக்கும் என்பது ஆசிரியர் கருத்து. அதனையுணர்ந்தே *மணக்குடவர்* இங்ஙனம் எழுதினர் என்பர் *உரைவேற்றுமை தந்த சாரங்கபாணியார்.* அது *மணக்குட* வருக்குக் கருத்தாயின் 'அற்றார் என்பவர் ஆசையற்றவரே' என்று எழுதியிருப்பர். 'அவா அற்றார் என்பது ஆசையற்றவரே' என்றது

---

1 நேரே ஏது-என்றது அவா என்ப எஞ்ஞான்றும் யார்க்கும் தவாஅப் பிறப்பீனும் வித்து என்றாராதலின் அவாவறுத்தல் பிறப்பறுதலாகிய வீட்டுலகிற்கு நேரே ஏதுவா யிற்று என்பது.

2 பிறஏதுக்கள் அற்று என்றது துறவறத்திற்கு ஒவ்வாத அருளின்மை, கொலை,களவு புலாலுணவு கூடாவொழுக்கம் விரதமின்மை முதலியன அற்றாலும் என்பதாம்.

3 அஃதொன்றும்- அவா என்பது.

4 அவற்றார் சிலதுன்பங்கள் அற்றதல்லது- அருளின்மை கொலை களவுகளால் வருந் துன்பங்கள் அற்றனவே யல்லது என்க.

5 அவர் போல்-அவாவும் அற்றவர்களைப் போல்.

6 விதிமுகம்- உடன்பாட்டு வாயிலாக.எதிர்மறைமுகம்-எதிர்மறுத்து மொழிவதானும்ா

சிறிது மயக்கத்தை விளைத்தது. அவாவும் ஆசையும் ஒன்றாயிருக்க இங்ஙனம் எழுதியது ஏன்? என அடுத்து வரும் தொடர் ஆசையற்றாரைப் போலப் பற்றறுதல் இலர் என்பது இம்மயக்கத்தை வலுப்படுத்தியது. மணக்குடவர் கருத்து எதுவாயினும் ஆசிரியர் கருத்து இது எனக்காட்டிய உரை வேற்றுமையாசிரியர் கருத்து மிகத்தகுதியுடையது.

'அற்றாக அற்றது'

'பற்றினை அறுந்தாராயினும் ஆசையற்றாரைப்போல' **மணக்.** 'நேர்பொருளன்று' *பரிதி.*; 'துறவு மேற்கொண்டு அவாஅற்றதிலர்'. *காளி.*; 'சிலதுன்பங்கள் அற்றதல்லது அவர் போல் பிறவியற்றது' *பரிமேல்.*; *தேவநேயர்.*; 'முற்றிலும் துன்பத்தினின்றும் நீங்கினவர் *கா.சு.*; 'அப்படியாகத் துறந்து விட்டது' *இராமலிங்கனார்*; 'அவ்வாறாகப் பற்றற்றவர்' *குழந்தை.*

அற்றறுதியாக—முடிந்த முடிபாக என்பதுபோல அற்றாக என்பதற்கு 'முற்றிலும்' என்ற உரையும் இக்கருத்தைப் பயக்கும் *பரிமேல்.*, *தேவநேயர்* உரைகளும் சாலச் சிறந்தன. ஏற்புடையன. 'முழுதும் கெட்டது என்ற பொருளில் சுத்தம்சுத்தமாகக் கேட்டுப் போயிற்று' என்ற வழக்கும் துணை செய்யும். 'சுத்தம்—சுற்றம்' என்பதன் போலி. இவைகளை இணைத்து எண்ணும் போது அற்றவர் என்பார் அவா அற்றவரே. அங்ஙனம் அவாஅறாதவர் முற்றும் துறந்தவரல்லர் என்ற பொருளே ஏற்புடையதாதலைக் காணலாம்.

'அற்றவர் என்பர்' *தாமத்தர்*, *நச்சர்* பாடம் என்பர் *வ.உ.சி.*

37.6. அஞ்சுவ தோரும் அறனே ஒருவனை
வஞ்சிப்ப தோரும் அவா. (௩௬௬)

உரைப்பகுதி:

அ) மணக்.: ஒருவனை வஞ்சனை செய்வது ஆசை; ஆதலால் அதனை அஞ்சுவதே அறம் என்றவாறு.

வஞ்சனை செய்தல்—நன்றி செய்வாரைப் போல முன்னே நின்று பின்னே தீக்கதியுள் உய்த்தல். இஃது ஆசையின்மை வேண்டும் என்றது.

ஆ) பரிதி.: 'அறிவே' பாடம். எ—து ஆசையை நினைத்தபோது பயப்படும் அறிவுடைமை. ஒருவர்க்குக் கொடுக்கின்றபோது வஞ்சனை செய்யும் ஆசை என்றவாறு.

ஈ) காளி.: எ—து இவ்வுலகின் கணத்தோடு பொருந்தி அதனை இறந்த பெரியோனையும், பொருள்கருதி வஞ்சிப்பதே சூழும் நெஞ்சில் அவாவானது. ஆதலால், இதனைப் பெரிதும் அஞ்சத்தகுவ தொன்றாக விசாரியும்.[1] எனவே, அவாவினை என்றும் அணையற்க[2] என்று பொருளாம் என உணர்க என்றவாறு.

உ) பரிமேல்.: மெய்யுணர்தலீறாகிய காரணங்களெல்லாம்[3] எய்தி, அவற்றான்[4] வீடு எய்தற்பாலனாய ஒருவனை மறவி[5]வழியால் புகுந்து பின்னும் பிறப்பின்கண்ணே வீழ்த்திக் கெடுக்க வல்லது அவா; ஆகலான், அவ் அவாவை அஞ்சிக் காப்பதே துறவறமாவது.

ஒரும் என்பன அசைநிலை. அநாதியாய்ப் போந்த அவா ஒரோவழி வாய்மை வேண்டலை ஒழிந்து[6] பராக்கால் காவானாயின்[7], அஃது இடமாக[8] அவனறியாமல் புகுந்து பழைய இயற்கையாய் நின்று பிறப்பினை உண்டாக்குதலான், அதனை 'வஞ்சிப்பது' என்றார். காத்தலாவது வாய்மைவேண்டலை இடைவிடாது பயின்று அது செய்யாமல் பரிகரித்தல். இதனால் அவாவின் குற்றமும் அதனைக் காப்பதே அறம் என்பதூஉம் கூறப்பட்டன.

ஊ) கவிராசர்: பயப்படத்தக்கது ஆசையே. அந்த ஆசை சகல தரும விரதங்களையும் பண்ணினாலும், ஆசையுடையவனாய் இருக்கிறவன் பிறவித் துன்பங்களிலே அழுந்துவான் எ—று.

ஏ) பழைய 2: ஒருவனைப் பிறவித் துன்பத்திலே வீழ வஞ்சனை செய்வது அவா. ஆதலால் அவாவை அஞ்சிக்காப்பது துறவறமே.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'துறந்து வீடுபேறெய்தஇருப்பவனைவஞ்சித்துக் கீழ்ப்படுத்துவது அவா; ஆதலால் அவ்வவாவிற்கு அஞ்சி,எச்சரிக்கையாக, அவா என்னும்வஞ்சனை கெடுக்காதபடிப் பாதுகாப்பதேதுறவறம்'என்ற கருத்துடையதாக நேரிய பொருளைத்தருவது ***மணக்குடவர்*** உரை ***பரிமேல்., சொ.த., தேவநேயர், கா.சு., சி.இ., குழந்தை, இராம*** உரைகளும் இக்கருத்தையே விளக்குவன.

---

1 விசாரியும்-ஆய்ந்து தெளியுங்கள் 2அணையற்க-பொருந்தற்க
3 மெய்யுணர்தற்குரிய காரணங்களாவன- நிலையாமை, துறவு, மெய்யுணர்தல்,அவாவறுத்தல் எனபனவாம்
4 அவற்றான்-முற்கூறிய நிலையாமை முதலான காரணங்கள். 5 மறவி-மறதி.
6 வாய்மைவேண்டலை ஒழிந்து-பரம்பொருளை ஒன்றிய தன்மையான இடைவிடாது பாவித்தலைவிட்டு.
7 பராக்கால் அஜாக்கிரதையால் கவனக்குறையால் எனினுமாம்.
8 அஃதிடமாக-அசாக்கிரதையே வழியாக.

பரிதி., 'அவா அஞ்சுவதுஒரும் அறிவே; எனப்பாடங்கொண்டு, ஆசையை' நினைத்த போது பயப்படும் அறிவுடைமை, 'ஒருவனை வஞ்சிப்பது ஒரும் அவா'—'ஒருவர்க்குக் கொடுக்கிற போது வஞ்சனையைச் செய்யும்' எனக்கூட்டிப் பொருள் தருவர். அவாவால் விளையுந் தீமைகளை எண்ணி அஞ்சும் அறிவுடைமை; ஈகைக்கண் வஞ்சனை செய்யும் அவா என இவர் கருதினர் போலும்; இக் குறளைக் கீழ்க்கண்டவாறு கொண்டுள்ளார்;

1. அறிவுடைமை அவாவை நினைத்தபோது அஞ்சும்
2. ஈகையின்போது ஆசை வஞ்சனை செய்யும்

'அஞ்சுவது ஒரும்' என்றபோது ஒரும் செய்யுமென் முற்று 'வஞ்சிப்பது ஒரும்' என்பதில் ஒரும்—ஓர்ந்துசெய்யும் என்னும் பொருளினதாம்.

காளிங்கர், உரையமைப்பு மிக ஆழ்ந்த கருத்தினது. ஆதலால் அது தெளிவாக விளங்காதது போல தோன்றலாம். ஆயினும், அதன் கருத்து இதுவாகலாம். கொண்டுகூட்டு: அவா அறன் ஒருவனை வஞ்சிப்பது (ஏ) ஒரும் (ஆதலால் அதனை) அஞ்வது ஒரும் என்பது கருத்து.

காளிங்கர் உரைப்போக்கின் கருத்து: 'உலகத்திலே வாழுகின்ற மக்கட் கூட்டத்தோடு இணைந்து வாழ்ந்த நிலைகண்டு விட்டுத் துறந்த பெரியோர்களையும் அவா பொருள் கருதி அவர்கள் உள்ளத்தே தோன்றி அவர்களையும் வஞ்சிக்கவே சூழ்ச்சி செய்யும். ஆதலால் அதனை அஞ்சத்தகுவது ஒன்றாக ஆய்ந்து தெளியுங்கள், எனத் துறந்தோரை எச்சரிக்கின்ற நோக்குடையது.

'கணம்—மக்கட்கூட்டம்'. அறன் என்பது ஈண்டு இயல் நோக்கித் துறவியைக் காட்டியது. பிள்ளைமைத் துறவை ஒப்பாத நிலையில் காளிங்கர் 'உலகின் கணத்தோடு பழகியும் அதனைத் துறந்தவன்' என விதந்து ஓதினார். 'அவா நெஞ்சத்துள் தோன்றி நின்று தீங்கு பல செய்து வெறுத்து ஒதுக்கப்பட்டது ஒன்றாதலின் நெஞ்சிலே தோன்றி' என்றார்.

'ஒரும்' என்பன இரண்டனுள் 'வஞ்சிப்பது ஒரும்' என்பதில் உள்ள 'ஒரும்' என்பது அவாவின் வினையாதலின் செய்யும் என்னும் வாய்ப்பாட்டுப் படர்க்கை வினை முற்று. பின்னது 'ஆய்ந்து தெளிமின்' என்னும் பொருளில் வந்த முன்னிலைப்பன்மை ஏவல் வினைமுற்று. 'அறனே' என்பதில் உள்ள ஏகாரம் 'வஞ்சிப்பதே' என்பதனோடு

பிரித்துக் கூட்டப்பட்டது. உலகியல் அனுபவத்தோடு ஒட்டி எழுந்த உரையாக அமைந்தது இவ்வுரையாகும்.

மு.ரா.அரு. 'பற்றற்றுப் பொறியடக்கி, மனத்தை ஒருவழிப் படுத்தி யோக நிட்டையிலிருந்து மெய்யுணர்தலாகிய காரணத்தைப் பெற்று வீடுபெற நின்ற ஒருவனைமறவி வழியாற்புகுந்து பிறவி யினிடத்துத் தள்ளிக் கெடுக்கவல்லது ஆசை. ஆதலால் ஆசைக்குப் பயந்து வர எட்டாதபடி பாதுகாத்துக் கொள்வதே துறவு' என்பர்.

'அஞ்சுவதோரும் அவாவே' தாமத்தர் பாடம். 'அஞ்சுவதோரும் அறிவே' நச்சர் பாடம் என்பர் வ.உ.சி. இவரும் தாமத்தர் பாடமே கொண்டனர்.

ஒ) மேற்கோள் பகுதி:

'அஞ்சுவதோரும் அறனே'

தெய்வச்.: ஓரும் என்பது அசை நிலைப்பொருள்களில் வரும் இடைச் சொல் (தொல்.சொல்2258)

நச்சி.: ஓரும் அசைநிலை (தொல்.சொல்258)

மயிலை.: ஓரும் என்பது அசை நிலை. இடைச் சொல்லுக்கு மேற் கோள். (நன்441)

சங்கர.: எல்லா இடத்திலும் வரும் இடைச் சொற்களின் உதாரணம் அஞ்சுவதோரும் அறனே என்பது. (நன்441)

37.7. அவாவினை ஆற்ற அறுப்பின் தவாவினை
தான்வேண்டும் ஆற்றான் வரும். (௩௬௭)

உரைப்பகுதி:

அ) மணக்.: ஆசையை மிகவும் போக்குவானாயின், கேடில்லாத வினைதான் வேண்டின நெறியாலேவரும் என்றவாறு.

ஆ) பரிதி.: 'தவவினை' பாடம். எ—து ஆத்மாவுக்கு வினையான ஆசையை விடுப்பானாகில் தவமான காரியந்தான் நினைத்தபடியே வரும் என்றவாறு.

ஈ) காளி.: எ—து அவாவினை ஒன்றின்கண்வளராது, ஒன்றின்கண் தவிராது மற்றவையும் இங்கு செய்தவினை இறுதிக்கண் கெடும் என்பது கருதி. மற்றதனால் கேடில்லாத தேர்ச்சியாகிய

தெளிவுணர்வானது[1] பின்பு ஒரு வருத்தம் இன்றி, தான் நினைத் தாங்கே வந்தெய்தும் என்றவாறு.

ஆற்ற என்பது மிகவும். தவாவினை என்பது கெடாத விசாரம்.[2]

உ) *பரிமேல்.*: ஒருவன் அவாவினை அஞ்சித் துவர[3]க்கெடுக்க வல்லனாயின், அவனுக்குக் கெடாமைக்கு ஏதுவாகிய வினை தான்விரும்பு நெறியானே உண்டாம்,

கெடாமை—பிறவித் துன்பங்களான் அழியாமை. அதற்கு ஏதுவாகிய வினை என்றது மேற்சொல்லிய துறவறங்களை.[4] வினை சாதியொருமை.[5] தான் விரும்புநெறி—மெய்வருந்தா நெறி.[6] அவாவினை முற்ற அறுத்தானுக்கு வேறு அறஞ் செய்யவேண்டா, செய்தன எல்லாம் அறமாம் என்பது கருத்து. இதனால் அவாவறுத் தற் சிறப்புக் கூறப்பட்டது என்றவாறு.

ஊ) *கவிராசர்.*: ஒருவன்ஆசையை நன்றாக அறுத்துவிட்டானாகில், அவனுக்கு ஒரு காலத்திலும் அழியாத வினை[7]யாகிய மோக்ஷம் தப்பாமல் வரும் (எ—று).

ஏ) *பழைய.*: ஒருவனை அவாவானது வஞ்சனை செய்ய வராமல் அவாவை அடியற அறுக்க வல்லனாயின், தவறில்லாத வீடுபேறு தான்விரும்பும் வழியே வரும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

பரிதியார், 'தவவினைதான்வேண்டுமாற்றான்வரும்' எனப்பாடங் கொண்டு, 'தவமான காரியம் தான்நினைத்தபடியே வரும்' எனப் பொருள் கண்டனர். அங்ஙனமே 'வினை அவா ஆற்ற அறுப்பின்' எனக் கூட்டி 'ஆத்மாவுக்கு வினையான ஆசைவிடுத்தால்' என்பர். பாடமாற்றமும் பொருளும் நேரிய முறையிற் கருத்தை விளக்குவன. வருபிறவிக்கு வித்தாதலால் வினை அவாஎன்றனர் எனலாம். 'களை

1 கேடில்லாத தேர்ச்சியாகிய தெளிவுணர்வு-ஒன்றானும் கெடாத-ஆய்ந்து கண்ட தெளிந்த ஞானம்; 2 கெடாத விசாரம் எவற்றாலும் அழியாத ஆய்வு.

3 துவர-முழுதும். 'துவரக் கெட்டு வல்லெழுத்துமிகுமே' (தொல்.எழுத். 310) 'துய்க்க துவரப்பசித்' குறள் 944 என்பன போல.

4 துறவறங்களை-விரதமும் ஞானமும் இவற்றின் வகைகளை.

5 வினைசாதியொருமை-வினை என்றது துறவிக்குரிய வினைகளாகிய விரதஞானங் களாகிய பலவற்றை யுணர்த்திபதால் சாதி ஒருமை

6 மெய்வருந்தாநெறி-உடல் நோகாத வழி. உண்மை ஞானம் பெற்றார்க்கு உன்னுதல், உரைத்தல் முதலான தொழில்கள்ஒன்றும்வேண்டாமல்மெய்ப்பொருட்சார்பு உண்டாம் ஆதலின் இங்ஙனம் கூறப்பட்டது.

7 அழியாத வினை-வீடு பெறுதல் ஒன்றானும் கெடாத வினையாதலின் வீடுபேறு அழியாத வினையாயிற்று.

கட்டவிடத்துப் பயிர் தானே பல்கி வளர்தல்போல, அவாவற்றால் தவவினை தானேவரும்' என்ற நயமும் சிந்திக்கத்தக்கது. ஆனால் இப்பாடத்தில் ஓசை நயம் இல்லாமையும் குறிக்கத்தக்கது. ஏனைய உரையாசிரியர்கள் 'அவாவினை' என்பதற்கு ஏற்ப ஒரூஉ எதுகை நயங் கருதித் 'தவாவினை' என்று பாடங்கொண்டு 'அவன் கெடாமைக்கு ஏதுவாகிய வினை' எனப் பொருள் கண்டனர். 'தவாவினை—அழியாத வினையாகிய மோட்சம்—மோட்சத்தையே வினை' என்பர் *கவிராசர்*.

'கேடில்லாத வினை' எனப் பொதுவகையான் உரைப்பர் *மணக்.*; 'தவமாகிய காரியம்' எனப்பொருள்கண்டு 'தவவினை' எனப்பாடம் கொண்டனர் *பரிதி.*; 'கேடில்லாத தேர்ச்சியாகிய தெளிவுணர்வு' என்பர் *காளி.*; 'கெடாமைக்கு ஏதுவாகிய நன்முயற்சி' *கா.சு.*; 'பிறவி வலையிற்பட்டுக் கெடாமைக்கு ஏதுவாகிய செயல்' *சொ.த.*; 'கெடாமைக்கு ஏதுவாகிய வினை' *பரிமேல்., தேவநேயர்*; 'கெடாத நற்செயல்' *குழந்தை*; 'துன்பமற்ற நிலையாகிய பிறவாமை' *இராம.*

இங்ஙனம் இணைப்புத் தொடரில் மாறுபடினும் அனைவரும் கேடற்ற வினை பிறவாமையே அதாவது வீடுபெறுதலே என்பதில் ஒத்த கருத்தினர்.

காளிங்கர் உரைப்போக்கு அவாவாகிய வினை வளர்வும், தவிர்வும் இல்லாதது; இறுதியில் கெடுவது. அதனால் கேடில்லாத தெளிவுணர்வு முயற்சியின்றியே வரும் என்னுங் கருத்தினதாக முன்னோர் உரையிற் சிறிது மாறுபடுகின்றது எனலாம். கேடற்ற வினை—வீடுபேறு, தவம் என்று ஏனையோர் கருத, இவர் வீடுபேற்றிற்குக் காரணமான மெய்யுணர்வு என்றது அறியத்தக்கது.

ஆகவே 'தவாவினை' என்பதை ஒரு தொடராக்க் கொண்டு வீடுபேற்றிற்குரிய அழியாத முயற்சி விரும்பியவண்ணம் தானே எய்தும் என்ற கருத்தமைந்த உரைகள் சிறந்தன எனலாம்.

37,8. அவாஇல்லார்க் கில்லாகும் துன்பம் அஃதுண்டேல்
தவாஅது மேன்மேல் வரும். (௩௬அ)

உரைப்பகுதி:

அ) மணக்.: ஆசையில்லார்க்குத் துன்பம் இல்லையாகும்; அஃது உண்டாயின் துன்பமானது கெடாது மேன்மேல் வரும் என்றவாறு.

ஆ) *பரிதி.*: ஆசையற்றார்க்குத் துன்பமில்லை; ஆசையுள்ளவர்க்குத் துன்பம் மேன்மேலே வரும் என்றவாறு.

ஈ) *காளி.*: எ—து அவாவின் தன்மை இதுவாகலால் மற்று இவ் வவா ஒன்றும் தமக்கில்லாதார் யாவர் மற்றவர்கட்கு இல்லையாகுந் துன்பமானது; ஆகலால் அஃதுண்டாமாகில் துன்பம் எஞ்ஞான்றும் கெடாதே மேன்மேலும் வந்து எய்தும் என்றவாறு.

உ) *பரிமேல்.*: அவாஇல்லாதார்க்கு வரக்கடவதொரு துன்பமும் இல்லை; ஒருவற்குப் பிறகாரணங்களெல்லாம்[1] இன்றி அஃது ஒன்றும் உண்டாயின், அதனானே எல்லாத் துன்பங்களும் முடிவின்றி இடைவிடாமல் வரும்.

உடம்பு முகந்து[2] நின்ற துன்பம் முன்பேசெய்துகொண்டதாகலின் ஈண்டுத் 'துன்பம்' என்றது இதுபொழுது அவாவால் செய்து கொள்வனவற்றை, 'தவாதுமேன்மேல் வரும்' என்றதனான், மூவகைத் துன்பங்களும்[3] என்பது பெற்றாம். இதனால் அவாவே துன்பத்திற்குக் காரணம் என்பது கூறப்பட்டது.

ஊ) *கவிராசர்*: ஆசையில்லாதவருக்கு வரக்கடவது ஒருதுன்பமும் இல்லை. ஆசையுடைவர்களுக்குச் சகலமான துன்பங்களும் தப்பாது மென்மேலும் வரும் (எ—று).

ஏ) *பழைய2*: அவா இல்லாதவர்க்குப் பிறவித் துன்பமில்லை. அந்த அவா உண்டாகில் பிறவித்துன்பம் தவறில்லாமல் அடுத்தடுத்து மாறிமாறி மேன்மேல் வரும்.

மல்லர்: எ—து இச்சைகளில்லாதவர்களுக்குத் துன்பமில்லாதே போம். அந்த இச்சைகள் உண்டானால் அத்துன்பங்களும் இடை விடாமல் மென்மேலும் வரும் எ—று.

இச்சைகள் பாவங்களுக்கு ஏதுவாயிருக்கிற படியினாலேயும் பாவங்களால் சகல துன்பங்களும் உண்டாகிற படியினாலேயும் வேறு எக்காரணம் இல்லாதேபோனாலும் இச்சைகள் மாத்திரம் உண்டா னால் துன்பங்கள் எல்லாம் வரும் இல்லாதே போனால் ஒரு துன்பமு மில்லை என்பது கருத்து.

---

1 பிறகாரணங்கள்—அவா ஒழிந்த ஏனைய காரணங்கள் அவை கொலை களவு புலால் முதலியன.

2 முகந்துநின்ற—இப்பிறவிக்கென்று ஏற்றுநின்ற

3 மூவகைத்துன்பங்கள்—தன்னானும், பிறவுயிர்களானும் தெய்வத்தானும் என மூவகையான் வருந்துன்பங்கள்.

அவாவு—இச்சை; அஃது—அது; உண்டேல்-உண்டானால் தவல்-குதித்தல்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'அவாவுண்டாயின் இடையறாது மேலும் மேலும் வருகின்ற துன்பம், இதுபோது அவாவால் தேடிக்கொண்டது துன்பம்' என்ற விளக்கத்தால் ஏனையோர் உரையினும் பரிமேலழகர் உரை தெளிவுடையது.

ஒ) ஒப்புமைப் பகுதி:

ஆசைப் படப்பட ஆய்வருந்துன்பங்கள் —*திருமந்திரம்.*

முற்றும்:

ஆக்கி னேன்மனத் தாசையவ் வாசையென்
மூக்கி னோடு முடிய முடிந்திலன்
வாக்கி னாலுங்கள் வாழ்வையும் நாளையும்
போக்கி னேன்கொடி யேனென்று போயினான் —*கம்பராமா.*, 3162

37.9. இன்பம் இடையறா தீண்டும் அவாஎன்னும்
துன்பத்துள் துன்பம் கெடின். (௩௬௯)

உரைப்பகுதி:

அ) மணக்.: அவாவாகிய துன்பங்களுள் மிக்க துன்பம் கெடுமாயின் இன்பமானது இடையறாமல் வந்துமிகும் என்றவாறு.

இஃது இன்பமும் இதனாலே வரும் என்றது.

ஆ) *பரிதி.*: எ—து ஆசையைவிடுவானாகில் இன்பம் மேன்மேல் உயரும். துன்பத்துள் மனமில்லை என்றவாறு.

இ) காளி.: எ—து வீட்டின்பமாகிய முத்தி இடையறாது நிரம்புவதாம்[1], அது யார்க்கோ எனில் எனைத்துவகைப்பட்ட துன்பங்களெல்லாவற்றுள்ளும் மிக்க கொடியதாகிய அவா என்னும் பெரிய துன்பத்துள் துன்பம் கெடின் அவர்க்கு என்றவாறு.

அவாவானது தானும் துன்பத்தைச் செய்து எல்லாத்துன்பத்துக்கும் காரணமாதலால் 'துன்பத்துள் துன்பம்' என்றார்.

1 இடையறாது நிரம்புவதாம்—இடையிடுபடாது நிறைவதாம்.

உ) *பரிமேல்.*: அவா என்று சொல்லப்படுகின்றமிக்க துன்பம் ஒருவற்குக் கெடுமாயின் அவன் வீடு பெற்றவழியேயன்றி உடம்போடு நின்றவழியும் இன்பம் இடையறாது.

'துன்பத்துள் துன்பம்' ஏனைத்துன்பங்களெல்லாம்[2] இன்பமாக வருந்துன்பம். விளைவின்கண்ணேயன்றித் தோற்றத்தின் கண்ணும் துன்பம் ஆகலின், இவ்வாறு கூறப்பட்டது. காரணத்தைக்காரியமாக உபசரித்து 'அவா என்னும் துன்பத்துள் துன்பம்' என்றும்[3], அது கெட்டார்க்கு மனந்தடுமாறாது நிரம்பி நிற்றலான் ஈண்டும்'இன்பம் இடையறாது' என்றும் கூறினார். இனி 'ஈண்டும்' என்பதற்குப் 'பெருகும்'[4] என்று உரைப்பாரும் உளர். இதனால் அவா அறுத்தார் வீட்டின்பம் உடம்பொடு நின்றே எய்துவர் என்பது கூறப்பட்டது.

ஊ) *கவிராசர்*: ஆசை என்னப்பட்ட பெரிய துக்கம் ஒருவருக்குக் கெட்டால், அவனுக்குச்சுகம் குறைவுபடாமல் எந்நாளும் உண்டாம் (எ-று).

ஏ) *பழைய 2*: இன்பம் அழிவில்லாமல் எக்காலமும் வரும்; துன்பத்துள் எல்லாம் பெருந்துன்பமாகிய ஆசைஎன்னும் துன்பம்கெட்டால்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக்., *காளி.*, *குழந்தை*, முதலானோர் 'துன்பங்கெடின் இன்பம் இடையறாது ஈண்டும்' என முடித்தனர். *பரிமேல்.*, *கா.சு.*, *சொ.த.*, *மு.ரா.அரு.*, *தேவநேயர்* முதலானோர் 'ஈண்டும் இன்பம் இடையறாது' எனக்கூட்டி 'அவாவற்றோர்க்கு உடல் வீழ்ந்தபின் அவ்வுயிர் எய்தும் வீட்டுலகத்தில் மட்டும் அன்றி, எடுத்த உடலோடு இருக்கின்ற இங்கும் இன்பம் இடையறாது எனச்சீவன் முத்தி நிலையிலும் உடல்கழிந்த முத்தி நிலையிலும் இன்பம் இடையறாது'என்றனர். இவற்றுள் *பரிமேலழகர்* முதலானோர் உரைகள் சிறந்தமை காண்க. குறட்போக்கிற்கியைய 'இன்பம் ஈண்டும்' என முடித்த *மணக்குடவர்* உரை 'மெய்யுணர்ந்து உடம்பழியும் வரை இன்பமுற்றிருக்கும் சீவன் முத்தி நிலையைக் குறியாமை' காண்க. *சுப்பிரமணிய சாஸ்திரி* 'ஈண்டும்' என்பதற்கே 'இவ்வுலகத்தின் கண்ணும் பேரின்பம் வரும்' என எழுதிப் *பரிமேலழகர்* கருத்தையும், *மணக்குடவர்*

---

2 ஏனைத்துன்பங்கள்—குட்டம் குன்ம முதலிய நோயான் வருந்துன்பம்

3 அவா ஏதுவாக வரும் காரியமாகிய துன்பத்தை அவா என்னுந் துன்பத்துள் துன்பம் என்றமையின் இது காரணம் காரியமாகிய உபசார வழக்கு.

4 பெருகும்—இடையறாது பெருகிக் கொண்டேயிருக்கும்.

தொடரமைப்பையும் இணைக்கின்றார். 'ஈண்டும்' என்பதனை வினைமுற்றாகக்கொண்டு பெருகும் எனப்பொருள் தருவர் **வ.உ.சி.**

ஒ) ஏப்புமைப்பகுதி

'துன்பத்துள் துன்பம்'

> **துன்பத்துள் துன்பம் உழப்பர் துறந்தெய்தும்**
> **இன்பத்து இயல்பறி யாதார்** —*அறநெறி., 133*

37.10. ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே பேரா இயற்கை தரும். (௩௭௦)

உரைப்பகுதி:

அ) *மணக்.:* நிறையா இயல்பி[1]னையுடைய ஆசையை விடுவனாயின், அதுவிட்ட அப்பொழுதே அழியாத இயல்பினைத் தரும் என்றவாறு.

இயல்பாவது என்றும் ஒருபடிப்பட்டது. இது தன்னுடைய உருவத்தைப்பெறும் என்றது.

ஆ) *பரிதி.:* எ—து அளவு காணப்படாத ஆசையை அளவு காண்பானாகில் அறிவு குலையாது[2] இன்பமே வரும் என்றவாறு.

ஈ) *காளி.:* எ—து ஒன்றினாலும் நிரம்பாத் தகுதியுடைய ஆசையை நீக்கவல்லனாயின் மற்று அது அப்பொழுதே எஞ்ஞான்றும் இடைபெயராது[3] ஒருபடிப்பட்ட முத்தியின் இயல்பினைத் தரும் என்றவாறு.

உ) *பரிமேல்.:* ஒரு காலும் நிரம்பாத[4] இயல்பினையுடைய அவாவினை ஒருவன் நீக்குமாயின், அந்நீப்பு அவனுக்கு அப்பொழுதே எஞ்ஞான்றும் ஒரு நிலைமையனாம் இயல்பைக் கொடுக்கும்.

நிரம்பாமையாவது தாமேயன்றித் தம்பயனும்[5] நிலையாமையின் வேண்டாதனவாய பொருள்களை வேண்டி, மேன்மேல் வளர்தல். அவ்வளர்ச்சி[6]க்கு அளவின்மையின், நீத்தலே தக்கதென்பது கருத்து. களிப்புக்கவற்சிகளும்[7] பிறப்புப்பிணிமூப்பு இறப்புக்களும் முதலாயின

---

1. நிறையா இயல்பு—'அல்கா நல்குரவு அவா எனப்படும்' ஆதலின் எவ்வளவு பெற்றாலும் குறைவாகவே தோன்றச் செய்வது அவா என்பதாம்.
2. குலையாது—சிதறாது; 3. இடைபெயராது—இடையில் அழியாது.
4. நிரம்பாத—மனநிறைவடைதல் இல்லாத.
5. தாமேயன்றித் தம் பயனும்—பொருளே யன்றிப் பொருளால் வரும் பயனாகிய சிற்றின்பங்களும்.
6. அவ்வளர்ச்சிக்கு-அப்பொருள்வளர்ச்சிக்கு; 7. களிப்புக்கவற்சிகளும்-இன்பதுன்பங்களும்

இன்றி உயிர் நிரதிசய இன்பத்த[8]தாய் நிற்றலின், வீட்டினைப் 'பேரா இயற்கை' என்றும், அஃது அவா நீத்தவழிப்பெறுதல் ஒருதலையாக லின் 'அந்நிலையே தரும்' என்றும் கூறினார். நன்றாய் ஞானங் கடந்துபோய் நல்லிந் திரியம் எல்லாம் ஈர்த் தொன்றாய்க் கிடந்த அரும்பெரும்பாழ் உலப்பில் அதனை உணர்ந்துணர்ந்து; சென்றாங் கின்பத் துன்பங்கள் செற்றுக்களைந்து பசை அற்றால்; அன்றே அப் போதே வீடும் அதுவே வீடுவீடாமே''[9] என்பதும் இக்கருத்தே பற்றி வந்தது. இந்நிலைமையுடையவனை வடநூலார் சீவன் முத்தன்[10] என்ப. இதனால் வீடாவது இது[11] என்பதூஉம் அஃது அவா அறுத் தார்க்கு அப்பொழுதே உளதாம் என்பதூஉம் கூறப்பட்டன.

ஊ) *கவிராசர்*: ஒரு காலத்திலேயும் நிறையாததாய் இருக்கிற ஆசையைவிட்டால் அவனுக்கு ஒரு காலத்திலேயும் பிரியாத நிலை யாய் எந்நாளும் சரியாய் இருக்கப்பட்ட பெரிய இன்பத்தைக்கொடுக் கும் (எ—று).

எ) பழைய 2: ஒரு காலமும் தணியாத இயல்பையுடைய ஆசையினை ஒருவன் நீக்குமாயின், அவனுக்கு அந்த நிலைமையே நீங்காத இயல்பாகிய மோட்சந் தரும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'அளவு காண்பானாயின்'—அவா எல்லையின்றி படர்ந்து கொண்டே போகாமல் அதனைக்கட்டுப்படுத்துவனாயின், என்றது, அவாவறுப்பானாயின், அதன் பயன் அறிவு (மெய்யுணர்வு) கெடாது. அதனால் இன்பமே வரும் என்பதாம் *பரிதி*யுரை.

'*பேரா இயற்கை*'.

'மாறாத இயல்பையுடைய இன்பம்' *கா.சு.*; 'அழியா இயல் பிற்றாகிய வீட்டின்பம்' *சொ.த.*, *இராமலிங்கனார்*, *தேவநேயர்*.

அவா நீத்த அந்நிலையே வீடுபேற்றைத் தரும். அந்நிலை— அந்த நிலைமையே எனலுமாம். அந்நிலையே என்பதற்கு அப் போதே எனப்பொழுதின் மேற்கூறிப் பின்னர் அந்நீப்பு அல்லது அவா அற்ற நிலையெனச் சொற்கள் வருவித்து முடிப்பதிலும் இப் பொருள் சிறக்குமேற் கொள்க.

---

8. நிரதிசய இன்பம்-தன்னின் உயர்ந்த இன்பம் ஒன்று இல்லாமை.
9. திருவாய்மொழி பதிகம் 8. பா.; 6,
10. சீவன் முத்தன்—ஞானம் அடைந்ததால் பிறப்பிறப்பில்லாதவர்கள்.
11. இது—பேராவியற்கை மோட்சம்.

ஓ) ஒப்புமைப்பகுதி:

ஆரா இயற்கை அவா நீப்பின்:

வேட்கை விரும்பி நுகர்ச்சி ஆராமை — *மணி.,* 30.2:91

... ... சிந்தை வேட்கையினை
யாறுகிற்பின் அமறாலக நுங்கட் கூடியதா மென்றான் — *நீலகேசி.,* 40

முற்றும்:

நின்றபற்று ஆர்வம் நீக்கி நிருமலன் பாதஞ்சேரில்
அன்புவிற் றுண்டு போகிச் சிவகதி யடையலாம் — *சீவக.,* 3105.

சிறுகா லையிலா நிலையோ திரியா
குறுகா நெடுகா குணம்வே றுபடா
உறுகால் கிளர்பூ தமெலா முகிலும்
மறுகா நெறியெய் துவெவ்வா னுடையாய் — *கம்பராமா.,* 2697

பின்னரு முலக மெலாம் பிணிமுதற் பாசம் வீசித்
துன்னருந் தவத்தி னெய்துந் துறக்கம்போற் றோன்றிற் றன்றே
— *கம்பராமா.,* 3266

ஆசைக்கோ ரளவில்லை யகிலமெலாங் கட்டியாளுகினும்
கடன்மீதினிலே ஆணைசெலவே நினைவர் — *தாயுமானவர்*

ஓ) மேற்கோள் பகுதி:

நச்சி.: ''நாலிருவழக்கில் தாபதபக்கமும்'' என்பதில், அவா நீப்பின் என்பதற்கு முயல்வோர் எனப் பொருள் கண்டமைக்கு மேற்கோள். (தொல். பொருள். 75).

37. அவாவறுத்தல்

	அவா என்ப	வேண்டுங்கால்	வேண்டாமை	தூ உய்மை	அற்றவர்	கவ	அவாவினை	அவா இல்லார்க்	இன்பம்	ஆரா
மணக்.	3	9	7	5	4	1	6	2	8	10
பரிதி.	4	5	6	3	1	2	9	7	8	10
பரிப்.	—	—	—	—	—	—	—	—	—	—
காளி.	6	8	3	4	1	5	2	7	9	10
பரிமேல்.	1	2	3	4	5	6	7	8	9	10

37—வது அதிகாரம் ''அவாவறுத்தல்'' முற்றிற்று.
துறவறவியல் முற்றிற்று.

ஊழியல்

உ) பரிமேல்.: இவ்வாற்றான் இம்மை மறுமை வீடு என்னும் மூன்றனையும் பயத்தற் சிறப்புடைத்தாய அறம் கூறினார்; இனிப் பொருளும் இன்பமும் கூறுவார், அவற்றின் முதற் காரணமாகிய ஊழின் வலி கூறுகின்றார்.[1]

---

1 பரிமேலழகர் கருத்தின் வண்ணம் ஊழ் பொருளின்பங்களின் முதற்காரணமாம் என்பது போதரும். அவர் ஈண்டு முதற்காரணம் என்றது முதன்மையான் காரணமாம் என்பதே கருத்தாதலை 'இருவேறுலகத் தியற்கை' (374) என்பது செல்வம் செய்தற்கு முதலாதலையும் 'வகுத்தான் வகுத்த' (377) நுகர்ச்சியாய இன்பத்திற்கு முதலாதலையும் உணரலாம்.

கோ. வ. பரிமேலழகரே 'இயற்றலும் ஈட்டலும்' என்ற குறள் உரையில் பொருள்களாவன மணி பொன் நெல் முதலாயின என்றும், காமத்துப்பால் தொடக்கத்தில் ஈண்டின்பமென்றது ஒரு காலத்து ஒரு பொருளான் ஐம்புலனுகர்தற் சிறப்புடைத்தாகிய காம இன்பத்தினை என்றும் கூறுதலின் ஊழ் பொருளின்பங்களுக்கு முதற்காரணம் ஆகாதென்பது தெளிவாக விளங்கும். முதற்காரணம் ஆயின் நச்சினார்க்கினியர் கூறுவதுபோல முதற்காரணமாகிய ஊழ் பொருளிலும் இன்பத்திலும் ஒற்றுமையுடையதாதல் வேண்டும். மண்ணாகிய முதற் காரணம் குடமாகிய காரியத்தோடு உடனிகழ்வது போல ஊழ் பொருளின்பங்களோடு உடனிகழ்தல் வேண்டும். அங்ஙனம் ஒடுங்குங் காலத்தும் காரியம் தத்தங் காரணத்துள் ஒடுங்க வேண்டும். அங்ஙனம் பொருளின்பங்கள் ஊழில் அடங்காமையும் அறிக. ஆதலால் முதற்காரணம் என்றல் இயையாதென்க. அன்றியும் முதற்காரணமும் ஒரு பொருளாதல் வேண்டும். ஊழோகுணம். குணம்குணியாகிய பொருளைத் தோற்றுவியாது. ஆதலால் முதற்காரணம் ஆகாது என மறுத்துப் பொருளின்பங்களுக்கு ஊழே முதன்மையான காரணம் என்ற அளவிற்றான் கருத்தமைத்தல் வேண்டும் என்ற இவர்கள் முடிபும் மேலதற்குத் துணைசெய்வதாகும்.

38. ஊழ்

அ) *மணக்.*: ஊழாவது முன்பு செய்தவினை பின்பு விளையும் முறை. மேற்கூறிய அறப்பகுதியும் இனிக்கூறுகின்ற பொருட்பகுதியும் இன்பப்பகுதியும் முன்செய்த நல்வினையால் வருதலையும், இவற்றிற்கு மாறான பாவமும் வறுமையும் துன்பமும் தீவினையால் வருதலையும் அறியாதே அவை உலகத்தில் மக்கள் பலர் தமது முயற்சியால் வந்தன என்பரன்றே அதற்காக இது கூறப்பட்டது. ஒருவன் செய்தவினை தனது பயனை வழுவின்றிப் பயத்தல் அறத்தினாகுமாதலான் இஃது அறத்தின் இறுதிக்கண் கூறப்பட்டது,

ஆ) *பரிதி.*: ஊழாவது போன சென்மத்தின் வினைப்பயனைச் சொல்லியது என்றவாறு.

உ) *பரிமேல்.*: அஃதாவது இருவினைப்பயன் செய்தவனையே சென்று அடைதற்கு ஏதுவாகிய நியதி.[1] ஊழ், பால், முறை, உண்மை, தெய்வம், நியதி, விதி என்பன ஒருபொருட் கிளவி. இதுபொருள் இன்பங்கள் இரண்டற்கும் பொதுவாய் ஒன்றனுள் வைக்கப்படாமையானும், மேற்கூறிய அறத்தோடு இயைபுடைமையானும்,[2] அதனது[3] இறுதிக்கண் வைக்கப்பட்டது.

---

1 நியதி—செய்த வினைப்பயன் செய்தவனையே சென்றடைதற்கேதுவாகிய ஒழுங்கு முறை. நியதி முதல் விதி யீறாகக் கூறப்பெற்ற விதியின் பெயர்கள் ஊழையே உணர்த்தும் ஒருபொருட்கிளவியாயினும் அவ்வவற்றின் பதியால் வேறுவேறு காரணத்தான் விளைந்த பெயர்களாய் ஒன்றற்கே பெயராதலை உணர்த்துகின்றன எனலாம்.

2 இல்லறத்தின் பயனும் துறவறத்தின் பயனும் ஊழின் பயனே ஆதலால் அறத்தோடு இயைபுடையதாயிற்று என்க

3 அதனது—அறத்துப்பாலினது

ஊ) கவிராசர்: அஃதாவது ஒருவன் முன்னேசெய்த நல்வினை தீவினை இந்த ஜன்மத்தில் வந்தடைகிறது. அந்தவினையும் தன்னைச் செய்தவனையே வந்தடையும். அது எப்படிப் போல் என்றால், பசுக்கள் திரளாயிருக்கின்ற இடத்திலே ஒரு கன்றைத் தூரவிருந்து விட்டால் அந்தக்கன்று தன் தாயான பசுவையே வந்து சேரும். அதுபோல செய்த வினையும் செய்தவனையே வந்தடையும் என்பதாம் (நாலடி., 101 செய்யுளில் காண்க).

ஏ) பழைய 2: அஃதாவது முன்செய்த நல்வினை, தீவினை அந்த நல்வினை தீவினை செய்தவனை இப்பிறப்பில் வந்தடைதல். நல்வினை வரும் காலத்து இன்பமும், தீவினை வரும் காலத்துத் துன்பமுமாய் வரும் என்றவாறு.

மல்லர்: பழைய காலத்தில் செய்த பாவ புண்ணியங்கள் ஒருத்தன் நினையாத சமயத்திலே பலன் கொடுக்க வருகிறதுக்கு ஏதுவான தெய்வ சித்தம்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

கா. சு. 'இருவினைப்பயன்களும் செய்தவனை நாடி நிற்கு முறைமை'. *சொ. த.* 'நல்வினையும் தீவினையும் ஆகிய இரு வினைப்பயன்களும் அணுவுந்தவறாது சென்றடையும் முறைமை கூறும் இயல். இல்லறமும் துறவறமும் ஊழ் வழியாகி ஊழ்வழியே வந்து ஊழின் முடிவன ஆதலால் இருவகையறங்களுக்குப் பின் வைக்கப்பெற்றது'.

மக்கள் செய்யும் வினைப்பயன் தெய்வத்தை நிமித்த காரணமாக வும், ஊழைத் துணைக் காரணமாகவும் உடைமையின் இவ்வதிகாரத் தலைப்பில் கடவுள் வாழ்த்தும், இறுதியில் ஊழும் நிறுத்தப்பெற்றன எனலுமாம். பொருளின்பங்கட்குக் காரணமாயும் அறத்தின் காரிய மாகியும் நிற்கும் இயைபுநோக்கி அறப்பாலுக்கும் பொருளின்பப் பால்களுக்கும் இடையே வைக்கப்பெற்றது எனலுமாம்.

'அவாவறுத்தலோடு உடனறுவது ஊழ் ஆதலின் அவாவறுத்த லின் பின் வைக்கப்பட்டது' என்பர் குழந்தை. இவரும் 'ஊழியலை நான்காம் இயலாகப் பிரித்து, இது முப்பாலுக்கும் பொதுவாதலின் தனியியலாயிற்று. அறத்தோடு இயைபுண்மையான் அதனையடுத்து வைக்கப்பட்டது' என்பர்.

தேவநேயர், இவரும் ஊழியல் என ஒரியல் கொள்வர். ஊழ்— பழம் பிறப்புக்களில் செய்யப்பெற்ற இருவினைகளின் பயன் செய்த

வனையே சென்றடையும் இயற்கையொழுங்கு' என்று விளக்கி இதன் மறுபெயர்கட்குக் காரணமும் தருவர். 'அதிகார முறைவைப் பிற்காக, இனியாவது நல்வினை வெல்க என ஏவுதற்பொருட்டு அறப்பால் இறுதியினும் ஊழுக்கும் பொருளுக்கும் உள்ள தொடர்பு பற்றிப் பொருட் பாலின் முன்னும் அமைக்கப்பட்டது' என்று இயைபு கூறுவர். இராமலிங்கனார், ஊழின் தோன்று முறையும் பயனும் கூறி வாழ்விற்களித்தலும் தாழ்வில் வருந்துதலும் கூடாது என எச்சரிக்கை செய்கிறது இவ்வதிகாரம் என்பர்.

'நியதி—வினைப்பயன்களைச் செய்தவனை நுகரச்செய்யும் கடவுளால் ஏற்படுத்தப் பெறுகிற விதி' மு.ரா.அரு.; வ.உ.சி. அதாவது விதி என்பர்.

இவ்வுரைகளில் 'ஊழியல்' என இதனை மட்டும் ஓரியலாகக் கருதியவர்கள் மூவர். ஏனையோர் ஓரதிகாரமாகவே கருதினர்.

எங்ஙனமாயினும் பழவினையோ, இம்மையிலே செய்து முதிர்ந்த வினையே அதன் பயனையூட்ட ஊழ்த்து அதாவது முற்றிக் கனிந்து துய்ப்பதாக அமைந்தது ஊழ் எனலாம். முதனிலைத் தொழிற் பெயர் ஆகுபெயராக ஊழ்த்துக்கனிந்த வினைப்பயனை உணர்த்தியது.

38. 1. ஆகூழால் தோன்றும் அசைவின்மை கைப்பொருள்
போகூழால் தோன்றும் மடி. (௩௭௧)

உரைப்பகுதி:

அ) மணக்.: ஒருவனுக்கு ஆக்கங் கொடுக்கின்ற ஊழ் தோற்றினால்[1] முயற்சி தோன்றும்; அழிவு கொடுக்கின்ற ஊழ் தோற்றினால் மடிதோன்றும் என்றவாறு.

இஃது ஆக்கத்திற்கும் கேட்டிற்கும் ஏதுவான முயற்சியும் முயலாமையும் ஊழால் வரும் என்றது.

ஆ) பரிதி.: எ—து ஊழாவது போனசென்மத்தில் செய்த நல்வினை தீவினை என்க; அது இரண்டு வகைப்படும்; அவையாவன ஆகிற ஊழ் என்றும், அழிக்கிற ஊழ் என்றும் எனக் கொள்க. ஆகிற ஊழ் புத்தியைத் தரும்; அழிக்கிற ஊழ் சோம்பினைக்[2] கொடுக்கும். ஆகையால் ஆகிற ஊழைக் கொள்ளும் என்றவாறு:

1 தோற்றினால்—பயன்தரத்தொடங்கினால்; 2 சோம்பு—சோம்பல்.

ஈ) ***காளி.***: எ—து உலகத்து யாவர்க்கும் முன்னின்ற முறைமை[3] யாகுவதோர் ஆகூழினால் அவரவர் நெஞ்சின்கண் தோன்றும் அது யாதோ எனில், அதற்கு ஏற்ற மடியின்மை; இனி இவ்வாறன்றித் தம்மிடத்து எய்திய பொருளும் நீங்கிப் போகுவதோர் போகூழினால் அவரவர் நெஞ்சில் தோன்றும் மடியானது என்றவாறு.

அசைவின்மை என்பது மடியின்மை.

உ) ***பரிமேல்.***: ஒருவற்குக் கைப்பொருளாதற்குக்[4] காரணமாகிய ஊழான் முயற்சி உண்டாகும், அஃது அழிதற்குக் காரணமாகிய ஊழான் மடி[5]யுண்டாம்.

ஆகூழ், போகூழ் என்னும் வினைத்தொகைகள் எதிர்காலத்தான் விரிக்கப்பட்டுக் காரணப்பொருளவாய்நின்றன.[6] அசைவு—மடி. பொருளின் ஆக்க அழிவுகட்குத் துணைக்காரணமாய முயற்சி மடிகளையும் தானே தோற்றுவிக்கும் என்பது கருத்து[7].

ஊ) ***கவிராசர்***: ஒருவனுக்குக் கைப்பொருள் வர்து கூடுகிறதற்குக் காரணம், முன்செய்த புண்ணியத்தினாலே முயற்சியண்டாம். கைப்பொருள் போகிறதற்குக் காரணம், முன்செய்த வினையாலே மனசுவருந்தப் பொருள் போகிறதற்கு மடிவரும் (எ—று).

ஏ) ***பழைய 2***: ஒருவனுக்குச் செல்வமாகும் ஊழினால் தோன்றும் சோம்புதல் இல்லாமல் தொழில்மேல் முயற்சி. ஒருவனுக்குக் கைப் பொருள் போகும் ஊழினாலே தோன்றும் தொழிலின்மேல் சோப்பல்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக்., ***பரிதி.***, **'கைப்பொருள்'** என்பதனை எதனோடுங் கூட்டாதும் உரை தராமலும் விட்டனர். ***பரிமேல்.***, ***கா. சு.***, ***கவி***

---

3 முறைமை-நியதி. இன்னதன்பின் இன்னது பயன் அளிக்கட்டும் என்ற நியதி.
4 கைப்பொருளாதற்கு-செல்வம் உண்டாதற்கு; 5 மடி—சோம்பல்.
6 ஆகு போகு என்பனவினைப்பகுதி என்பது வள்ளுவர்க்கும் பரிமேலழகர்க்கும் கருத்தெனவும் ஆ, போ என்பனவே வினைப்பகுதி என்பது நக்கினார்க்கினியார் நன்னூலார்சருத்தெனவும் இலக்கணக்கொத்து சொல்லும், ஆயின், ஆ,போ என்பனவே வினைப்பகுதி, 'கு' சாரியை, வினைப்பகுதி சாரியை சார்ந்து வருவன ஆகி,ஆக,ஆகல் ஆகிய ஆகியக்கண் முதலான வினைவேறுபாடுகள்.. 'கு'சாரியை யின்றி வந்தவை ஆயினான் ஆவான் போன்ற வினைகள். ஆதலால் ஆகு—போகு என்பன இயற்கைப் பகுதிகளல்ல. குச்சாரியை பெற்ற பகுதிகள். இவை, பிற வினைக்கண் வரும்போது ஆகுபோகு என்பன வல்லொற்றிரட்டி ஆக்கு போக்கு எனவாகிப் பிறவினைப்பகுதியாகும். 'ஆ' 'போ'என்பன தன்வினைக்கண் வரும் பகுதியே யாம் என்க.
7 பொருளாதற்கு முயற்சியும், ஆகாமை மட்டுமேயன்றி உள்ள பொருள் அழிதற்கும் காரணம் சோம்பலும் ஆக அவையிரண்டற்கும் அடிப்படைக்காரணம் ஆகூழும் போகூழும் ஆம் என இக்குறள் வழி வழிக் காரணம் காட்டுகிறது.

ராசர், சொ.த., குழந்தை, தேவநேயர், இராமலிங்கர் அனை வரும் 'கைப்பொருள் ஆகு ஊழ்' எனக் கூட்டிக் 'கைப்பொருள் ஆதற்குக் காரணமான ஊழ்' என்பர். அங்ஙனமே 'போகுஊழ்' என்பதனோடு அஃது என எழுவாயை வருவித்துப் பொருள் முடிப் பர். ஆகவே இவர் 'கைப்பொருள்' என்பதனை இடைநிலைத் தீவகமாகக் காண்பர் போலும். காளிங்கர், 'கைப்பொருள் போகு ஊழ்' என நின்றாங்கு 'கைப்பொருளும் போகூழால் மடிதோன்றும்' என்பர்.

மு.ரா.அரு. 'பொருளாதற்கு முயற்சியும் அஃதழிதற்குச் சோம்ப லும் துணைக் காரணமாகவே ஊழ் முதற்காரணம் என்பதும், சம்பாதிக்கிறவன் நிமித்தகாரணன் என்பது அறிக' என்பர்.

வ.உ.சி. 'கைப்பொருள்' சிங்க நோக்காக நிற்றலின் அது முன்னரும் பின்னரும் கூட்டிப் பொருள் காணப்பெற்றன என்பர். சிங்க நோக்கு என்பது செய்யுளோ நூற்பாவோ முன்னும் பின்னும் தொடர்ந்து நிற்குநிலை. நன்னூல் விருத்தியுரை பொதுவியற்றொ டக்கத்தில் விருத்தியுரையாசிரியர் 'முன்வந்த பெயரியற்கும் வினை யியற்கும் பின்வரும் இடையுரியியல் கட்கும் பொதுவிலக் கணங்களைச் சிங்க நோக்கான் இவ்வியலை இடைநிறீஇக்கூறுவர்' என்றமையானும் காண்க. இதனாற்போந்தது ஓரியலோ, ஒருபாவோ முன்னும் பின்னும் சென்றியைந்து நிற்பதேயன்றிச் சொல்லோ சொற்றொடரோ இடைநின்று இருமருங்கும் இயைவதன்று. இது அணியியலில் இடைநிலைத் தீவகமாவதை ஆண்டுக் கண்டு தெளிக.

'கைப்பொருள் குடும்பச் சொத்தாகவோ அல்லது வைப்புநிதி தாயபாகம் முதலியவாற்றால் கிடைத்தோ கையிலே இருக்கும் பழைய செல்வம். நல்லூழிருந்தால் மடியின்மையால் மேன்மேலும் முயன்று செல்வஞ்சேர்ப்பான். அஃதில்லையாயின் புதிய செல்வம் சேராமை மட்டும் அன்றிக் கையிலிருந்த பழங்காசும் அழியும்' என்ற காளி., உரையே கருத்தாழமும் நயமும் உடையது. இக்குறள் சோம்பலும் அஃதின்மையுமாகிய உடலியல்புக்குக் காரணம் கூறியது.

ஒ) ஒப்புமைப்பகுதி:

ஆகூழால் தோன்றும் அசைவின்மை:

> இரவிதன் புதல்வன்... ...அவன்பாற் செல்வம்
> வருவதோர் அமைவின் வந்தீ —கம்பரா., மராமர., 25

எல்லாம் ஊழைப் பற்றியும் முயற்சியைப் பற்றியும் உண்டா வன்வாம். தொடங்கப்படும் வினைக்குப்பயன் விளைத்தற்கு உரிய சாதனம் வினைப்பயனாகிய ஊழும் இப்பொழுது மேற் கொண்டமுயற்சியும் என இருவகைப்படும்.—சுக்கிர அதி.;1: 9

38. 2. பேதைப் படுக்கும் இழவூழ் அறிவகற்றும்
ஆகலூழ் உற்றக் கடை. (௩௭௨)

உரைப்பகுதி:

அ) மணக்.: கெடுக்கும் ஊழ் தோன்றினால் அறியாமையை உண் டாக்கும்; ஆக்கும் ஊழ் தோன்றினால் அறிவை விரிக்கும் என்ற வாறு.

இஃது அறிவும் அறியாமையும் ஊழால் வரும் என்றது.

ஆ) பரிதி.: எ—து ஆகிற ஊழ் அதிக புத்தியைத் தரும்; அழிக்கிற ஊழ் கெடுபுத்தியைக் கொடுக்கும் என்றவாறு.

ஈ) காளி.: எ—து எய்திய ஆக்கமும் இழத்தற்கு எல்லையாகிய இழவூழ் வந்து எய்தும் எனில் மற்றஃது இழத்தற்கு ஏய்ந்த[1] பேதைமை உளதாக்கும் இனிஅவ்வாறன்றி ஆகலூழ் வந்துற்ற இடத் தால் ஏய்ந்த முயற்சிக்கண் இயல்வதோர்அறிவு இடப்படுத்தும்[2], எனவே துறவறிவும் பிற அறிவும் அவரவருள்ளத்து நிகழ்வது அவை அவற்றுக்கு அமைந்த விதியானே என்பது பொருள் என்றவாறு.

படுக்கும் என்பது உளதாக்கும். அறிவகற்றும் என்பது இடம் படுத்தும்.

உ) பரிமேல்.: ஒருவனுக்கு எல்லா அறிவும் உளவாயினும் கைப் பொருள் இழத்தற்கு ஏதுவாகிய ஊழ் வந்துற்றவிடத்து அஃது அதனைப் பேதையாக்கும்; இனி அவனறிவு சுருங்கியிருப்பினும் கைப்பொருளாதற்கு ஏதுவாகிய ஊழ் வந்துற்றவிடத்து அஃது இதனை விரிக்கும்.

கைப்பொருள் என்பது அதிகாரத்தான் வந்தது. இழவூழ் ஆக லூழ் என்பன இரண்டும் வேற்றுமைத்தொகை[3]. உற்றக்கடைஎன்பது முன்னும் கூட்டப்பட்டது. இயற்கையானாய அறிவையும் வேறுபடுக் கும் என்பதாம்.

1 ஏய்ந்த-பொருந்திய; 2 இடம்படுத்தும்-விரிவாக்கும்.
3 இழவிற்குக் காரணமான ஊழ், ஆதற்குக் காரணமான ஊழ் என நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகைகள். ஏதுப்பொருண்மைக்கண் வந்தது.

காரி.: உற்றக்கடை என்பது முன்னுங் கூட்டப்பட்டது. இழவூழ் ஆகலூழ் என இரண்டும் வேற்றுமைத் தொகை. 'வேற்றுமைத் தொகை' என்றது இழத்தற் கேதுவாகிய ஊழ். ஆதற்கு ஏதுவாகிய ஊழ் என நான்காம் வேற்றுமைத் தொகையை.

ஊ) *கவிராசர்*: ஒருவனுக்குச் சகலமான அறிவும் உண்டாய் இருந்தாலும், கைப்பொருள் இழந்துபோகத்தக்க ஊழ்வினை வந்துற்றால், அந்த அறிவை எல்லாம் மயங்கப் பண்ணுவிக்கும். அறிவு இல்லாமல் இருந்தும், கைப்பொருள் வந்து சேரத்தக்க ஊழ்வினை வந்துற்ற இடத்தில், அவனை அறிவுடையவனாகப் பண்ணுவிக்கும் (எ—று).

ஏ) *பழைய*: 2 ஒருவனுக்கு எல்லா அறிவும் உள்ளனவாயினும், கைப்பொருள் அழிதற்கு ஏதுவாகிய ஊழ்வினை வந்தவிடத்து, அவனைப் பேதையாகச் செய்விக்கும்; ஒருவனை அறிவில்லாமல் இருந்தாலும் அறிவுடையனாகச் செய்விக்கும் கைப்பொருள் உண்டாக்கும் ஊழ்வினை வந்தவிடத்து.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

இக்குறள் அறிவும் அறியாமையும் ஊழான் உறுவன என்கின்றது. 'பேதைப் படுக்கும்' என்பதால் 'அறிவுடைமையே உயிரின் இயல்பு. இழவூழ், அதனை மாற்றியறியாமையில் அகப்படுத்துகிறது' என்ற நயம் காண்க. *பரிதி.*, 'அதிகப்புத்தி அல்லது உறுதியான அறிவைத்தரும்' என்கிறார். இது 'அறிவு அகற்றும்' என்பதன் கருத்துப்பொருள். *காளி.*, 'கைப்பொருள் எய்திய ஆக்கம்' என்பதனை அதிகாரத்தான் போந்ததாக ஈண்டும் இணைத்து எய்திய ஆக்கமும் இழத்தற்கு ஏதுவாகிய இழவூழ்வரின் பேதைமையை உளதாக்கும். ஆகலூழ்வரின் முயற்சியில் இயல்வதோர் அறிவை விரியச் செய்யும் என்று அறிவின் விரிவிற்கும் அறியாமைக்கும் ஊழே காரணம்' என விளக்குவர். இதற்கு மேலும் கைப்பொருள், ஆக்கம் அழிவு முதலாயின இல்லறத்தாற்கு ஆயின் பொருந்தும்; துறவிக்கு இல்லறத்தான் இயைக்க இயைவது என்று கருதியிருக்கிறார். அதற்கும் 'துறவறிவும்—பிறவறிவும் நிகழ்வது அவ்வவற்றிற்கேற்றவிதியான்' என அமைதி காட்டினர். அதனால் இவருரை ஏற்புடையதுஆகும்.

பரிமேலழகர், கவிராசர், மு.ரா. அரு., கா. சு., குழந்தை, சொ.த., இராமலிங்கனார், தேவநேயர் இக்குறளை முன்குறட்பாவோடு இணைத்துக் 'கைப் பொருளாதற்கும் காரணமான அறிவு' எனக் கூறுவர்.

மு.ரா.அரு.' 'ஊழ் விரிந்து பெருகச் செய்தலாவது சோம்பலின்றி முயற்சியை விடாது செய்யச்செய்தல்' என்பர். குறட்பாவில் ஆகலூழ்

இழவூழ் என்ற சொற்களேயிருத்தலானும், 'அதிகாரத்தான் மொழி வருவித்தலாவது' அவற்றுள் 'அ இ உ எ ஒக்குறிலைந்தே; என் புழி நின்ற 'அவற்றுள்'சொல்லைப் பத்துச் சூத்திரத்தும் வருவித்தல் போல்வது' என இலக்கணக்கொத்துரை (சூ. 892) கூறுவதால், முதற்குறளில்(கு. 371) கூறிய கைப்பொருள் என்பது அதிகாரத் தான் ஈண்டுங் கூட்டப்பட்டது என்பதே பரிமேலழகர் கருத்து ஆதலா னும் ஊழ் என்னும் அதிகாரத்தான் வந்தது எனல் வேண்டியதின்று. 'அறிவு அறிவின்மைகட்கு ஊழ் காரணம்' என்னும் மணக்குடவர் உரையே காளிங்கரினும் ஏனையோருரையினும் சிறந்தது. 'அழிவ கற்றும்' என்பது காளிங்கர் பாடம் எனக்கொண்டால் அவர் உரைப் போக்கிற்கு ஒரு சிறிதும் பொருந்திலது.

ஓ) ஒப்புமைப்பகுதி:

இழவூழ்வ அறி: (பேதைப்படுக்கும்)

வினைவிளை காலமாதலின் தேரானாகி —*சிலப். பதி*.,27

வினைவிளை காலம் என்றீர் யாதவர்
வினைவிளை வென்ன .... —*சிலப். பதி*.,37—38

.... விதி விளைவை யோர்வார் —*கம்பராமா*.,3372

அதிசய மொருவரா லமைக்க லாகுமோ
துதியறு விறலியி னின்ப துன்பந்தான்
விதிவய மென்பதை மேற்கொ ளாவிடின்
மதிவலி யான்விதி வெல்ல வல்லமோ —*கம்பராமா*.,3609

மெய்யுற வுணர்வு செல்லா வறிவினை வினையினூக்கும்
பொய்யுறு பிறவி போல............ —*கம்பராமா*.,3644

அழிவினை எய்துவான் அறிவு நீங்கினான் —*கம்பராமா*.,6500

உய்திற னுடையார்க் கன்றோ அறநெறி யொழுக்க முண்மை
—*கம்பராமா*.,7568

ஆவதை யிசைந்தில னழிவ தென்வயின்
மேவுத லுறுவதோர் விதியின் வெம்மையால் —*கம்பராமா*.,8908

.... நலத்தை யோரான் —*கம்பராமா*.,8981

சுட்டிச் சொலப்படும் பேரறிவி னார்கண்ணும்
பட்ட விருத்தம பலவானால்—பட்ட
பொறியின் வகைய கருமம் அதனால்
அறிவினை ஊழே யடும். —*பழமொழி*. 228

38.3. நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை அறிவே மிகும். (௩எ௩)

உரைப்பகுதி :

அ) *மணக்.*: நுண்ணியவாக ஆராய்ந்த நூல்கள் பலவற்றையும் கற்றானாயினும், பின்னையும் தனக்கு இயல்பாகிய அறிவே மிகுத்துத் தோன்றும் என்றவாறு.

மேல் அறிவிற்குக் காரணம் ஊழ் என்றார்; அஃது எற்றுக்கு? கல்வியன்றே காரணம் என்றார்க்கு, ஈண்டுக் கல்வியுண்டாயினும் ஊழானாய அறிவு வலியுடைத்து என்றார்.

ஆ) *பரிதி.*: எ—து சென்மாந்திர வினை[1]யாகிற ஆகிற ஊழ், அழிகிற ஊழைக் கல்வியினாலே வெல்லப்படாது; அது எப்படி என்றால், அழிகிற ஊழாகில், எத்தனை கற்றாலும் அற்பபுத்தி[2]யைக் காட்டும் என்றவாறு.

ஈ) *காளி.*: எ—து நன்னெறி பெறுதற்குக் காரணமாகிய ஞானத்தைத் தரும் நுண்ணிய நூல்கள் பலவற்றையும் கற்றாரேயாயினும், அவ்வளவே தமது ஊழாய் மற்று அதன் பயன் எய்துதற்கு ஓர் ஊழ் முன்னமில்லை எனில், பின்னும் தன் உண்மையறிவே மிகும்; எனவே இந்நெறி அறிதல் இன்றிப் பின்னும் தானனுபவித்தற்குரிய முறைவழி அறிவே மிக்குச் செல்லும். மற்றுஇவ் அறிவு எய்தாது என்று பொருள் என்றவாறு.

உ) *பரிமேல்.*: பேதைப்படுக்கும் ஊழுடையான் ஒருவன் நுண்ணிய பொருள்களையுணர்த்தும் நூல் பலவற்றையும் கற்றானாயினும், அவனுக்குப் பின்னும் தன் ஊழானாகிய பேதைமை உணர்வே மேற்படும்.

பொருளின் நுண்மை நூலின்மேல் ஏற்றப்பட்டது.[3] மேற்படுதல் கல்வியறிவைப் பின்னிரங்குதற்கு ஆக்கிச் செயலுக்குத் தான்முற்படுதல் ''காதன்மிக்குழிக் கற்றவும் கைகொடா ஆதல் கண்ணகத் தஞ்சனம் போலுமால்''[4] என்பதும் அது. செயற்கையானாய அறிவையுங் கீழ்ப்படுத்தும் என்பதாம்.

---

1 சென்மாந்திர வினையாகிற-முற்பிறவிகளின் வினைகளாகிற.
2 அற்பபுத்தி-கீழான புத்தி. அதாவது கயமை.
3 நூற்பொருளின் நுணுக்கத்தை நூலுக்கே ஏற்றி நுண்ணிய நூல் என்றது. இடத்து நிகழ்பொருளின் பண்பு இடத்துக்கேயான உபசார வழக்கும்.
4 சீவகசிந்.,1632.

ஊ) கவிராசர்: அறிவைக் கெடுக்கப்பட்ட ஊழ்வினையுடையவன் ஒருவன், நுண்ணிதாயிருக்கிற பொருள்களையுடைய பலநூல் களைக் கற்றாலும், அவனுக்குப் பின்னையும் தன்வினை வழியே வரப்பட்ட அறிவின்மையே உண்டாம் (எ—று).

எ) *பழைய 2:* பேதைப்படும் ஊழ்வினை உடையான் ஒருவன் நுண் ணிய பொருள்களை அறிவிக்கும் பலநூல்களைக் கற்றானாயினும் அவனுக்குப் பின்னும் தன்ஊழ்வினையினாகிய பேதைமை அறிவே மேற்படும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'கல்வியறிவு முயற்சியான் எய்தும் செயற்கையறிவு. எத்துணை உயர்ந்த நூல்களைப் பயின்றாலும் ஊழ் குறுக்கிடாயின், உள்ள அறிவுதான் இருக்குமேயன்றிப் படிப்பால் விளக்கம் விளையாது' என்ற மணக்குடவர் உரை குறள் முறைவைப்பிற்கும் ஆசிரியர் கருத் திற்கும் மிக ஏற்புடையதாகிறது.

பரிதி. 'ஆகூழ் போகூழ் இரண்டுமே சென்மாந்திர வினைப் பயன் அதனைக் கல்வியாலே வெல்ல இயலாது. அழிகிற ஊழாயின் எவ்வளவு படித்தாலும் அது அற்ப அறிவைத்தான் காட்டும்' என்ற உரை 'போகூழிருப்பின் புதிய படிப்பறிவு பயன்படாது. உள்ள அறிவும் அறியாமையுடையதாகும்' என்பதனைத் தெரிவிக்கிறது. இதில் 'ஆகிற ஊழையும்கூட கல்வியினாலே வெல்லப்படாது' என்ற தொடர் இங்கு ஏற்புடையதாகக் காணப்படவில்லை; 'மாந்தர்க்குக் கற்றனைத்தூறும் அறிவு' என்பதற்கும், 'உலைவின்றி உஞற்றுபவர் ஊழையும் வெல்வர்' என்பதற்கும் மாறுகோடலின்.

காளிங்கர் 'படிப்புப் பயன்படாது என்றால் படிப்பின்பயனை ஊழ்மாறாயின் எய்த இயலாது' என்கிறார். இவர் கருத்து முயற்சிப் பயனைத்துய்த்தற்கு ஊழின் உதவி வேண்டும் என்பதாம்.

கவிராசர், உண்மையறிவு—வினைவழிவரப்பட்ட அறிவின்மை' என்பர். அறியாமை மிகும் என்பது வள்ளுவர் உள்ளமாயின் உண்மையறிவே மிகும் என்பார் ஆதலால் உயிர்க்குள்ள இயற்கைப் பண்பாகிய அறிவுடைமை கல்வியான் வளராது இயற்கைத் தன்மை யிலே இருந்துவிடும் என்பது கருத்தாதல் காண்க.

சொ. த. போன்றார் சிலர் 'உண்மையறிவு—பேதைமையறிவு. ஊழ் உதவியின்றேல் கல்வியறிவு உற்றுழி உதவாமற்போம்' என்பர்.

உண்மையறிவு உயிர்களுக்கு இயல்பாக உள்ள குணம். அது ஆணவம் என்ற இருள் மறைப்பதால் தானாக அறியுந்தன்மை இழந்துவிடுகின்றது. நல்லூழிருந்து மெய்யுணர்வு பெறுவார்க்குக் கல்வியறிவு முதலாயின பயனளிக்கும். இல்லாதார்க்கு இல்லை. அத்துணைதான்; ஆகவே உண்மையறிவு பேதைமையறிவாகாது. பேதைமையறிவு — ஒன்றையொன்றாக உணர்வதும், இதுவோ அதுவோ எனத் துணிவு பெறாத அறிவுமாம். இங்ஙனம் ஐயத்திரிபுக் காட்சிகளும் அறிவின்செயலாய் முதற்கண் இயங்கத் தொடங்கிப் பேதைமை காரணமாக ஐயந்திரிபுகளாகிற தப்பு உணர்ச்சிகளாகின்றன. உலர்ந்த விறகில் தீத்தன்மை எண்ணெய் வடிவிற் கலந்திருந்தாலன்றிப் புறத்தே பற்றவைக்குந் தீப்பற்றாது. அதுபோல உயிர்களுக்கு இயல்பாகவே அறிவுள்ளது. அது உண்மையறிவு. கல்வியறிவு புறத்தீப்போலப் பற்றச்செய்யும் அறிவு. கற்றலான்வரும் அறிவு உண்மையறிவோடு ஒன்றிமிகவேண்டும். ஊழ்மாறாகயிருத்தலின் உண்மையறிவே மிக்குத்தோன்றிக் கல்வியறிவு காணப்படாததாகிறது. நல்லூழ் சூழும்போது உண்மையறிவோடு கல்வியறிவுந் தோன்றி மிகுகிறது'. ஆதலின் இவ்விளக்கத்தை யுதவும் மணக்குடவர் உரை ஏற்புடையது.

ஓ) ஒப்புமைப்பகுதி:

முற்றும்:

கனம்பொதிந்த நூல்விரித்துக் காட்டினும் கீழ்தன்
மனம்புரிந்த வாறேமிகும் —*நாலடி.*,341

பொறியின் வகைசுய கருமம் அதனால்
அறிவினை ஊழே அடும் —*பழமொழி.*,203

உம்மை வல்வினை யாலுணர் வொன்றிலான்
இம்மைச் செய்த வினைப்பயனே இவை
எம்மை யும்இனி நின்றிடும் இவ்வினை
பொய்மை யன்றுஇவர் பொன்றினும் பொன்றல —*யசோ.*,217

கூட்டமொத் திருந்தவீரர் குறித்ததோர் பொருட்கு முன்னாள்
ஈட்டிதவ மும்பின்னர் முயற்சியு மியைந்த தொத்தார்
மீட்டும் வாளரக்க ரென்னும் தீவினை வேரின் வாங்கக்
கேட்டுணர் கல்வியோடு ஞானமும் கிடைத்த தொத்தார்
—*கம்ப. கிட்கிந். நட்பு.*, 22

விதிவழி மதியெனப் புலந்தார் —*திருவிளை. விருத்த.*,10

ஓ) மேற்கோள் பகுதி;

காரி.: பாவிக அலங்காரத்திற்கு மேற்கோள். (*மாற.*251.)

38.4. இருவே றுலகத் தியற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு. (௩௭௪)

உரைப்பகுதி:

அ) *மணக்.*: செல்வமுடையாராதலும் தெள்ளியாராதலும்[1] வேறு வேறு ஊழினால்வரும்; ஆதலால், இரண்டு வகையாதல் உலகத்தியல்பு என்றவாறு.

ஆ) *பரிதி.*: எ—து இரண்டு வகைப்படும் செல்வம்; எப்படியென்றால், எட்டுவகையான செல்வமும்[2], கல்வியும் என்றவாறு.

ஈ) *காளி.*: எ—து இரு கூறுபட்டிருக்கும் உலகத்தார் ஊழாம் இயற்கை; எங்கனம் எனில் செல்வம் உண்டாதலும் ஒருநல்லூழின் கூறு. கல்வியால் தெளிந்த நல்லறிவுடையாராகலும் மற்றொரு நல்விதிக்கு அமைந்த கூறு. எனவே முன்னமே இல்லறத்தானாகலும் துறவறமியற்றியவழித் தெளிந்த நல்லறிவுடைய ஞானத்தானாகலும் என இங்ஙனம் இரண்டுகூறுபடும் என்றவாறு.

உ) *பரிமேல்.*: உலகத்து ஊழினானாய இயற்கை இரண்டுகூறு. ஆதலால் செல்வமுடையராதலும் வேறு அறிவுடையராதலும் வேறு.

செல்வத்தினைப் படைத்தலும் காத்தலும் பயன்கோடலும்[3] அறிவுடையார்க்கல்லது இயலாவன்றே, அவ்வாறன்றி அறிவுடையார் வறியராகவும் ஏனையார் செல்வராகவும் காண்டலான், அறிவுடையராதற்காகும் ஊழ் செல்வமுடையராதற்கு ஆகாது; செல்வமுடையராதற்காகும் ஊழ் அறிவுடையராதற்கு ஆகாது என்றதாயிற்று. ஆகவே செல்வம் செய்யுங்கால் அறிவாகிய துணைக்காரணமும் வேண்டா என்பது பெற்றாம்.

ஊ) *கவிராசர்*: உலகத்திலே ஊழ்வினை இரண்டு வகைப்படும். அவை யாவை எனில், ஐசுவரியம் உண்டாகவேண்டும் என்று நல்வினை செய்கிறதும் அறிவுண்டாகவேண்டும் என்று செய்கிறதுமாம் செல்வம் உண்டாகவேண்டும் என்று செய்தவர்களுக்கு அறிவு வாராது. அறிவு வேண்டிச் செய்தவருக்குச் செல்வம் வாராது. ஆனபடியினாலே செல்வமும் அறிவும் என்ற இரண்டையும் வேண்டித் தவம் செய்யவேண்டும் (எ—று).

---

1 தெள்ளியார்—தெளிந்த அறிவினர்.
2 எட்டுவகையான செல்வம்—தனம், தானியம், தைரியம், வீரியம், சந்தானம், வெற்றி, புகழ், அரசாட்சி என்பன.
3 பயன்கோடல்—பொருட்பயன் கொள்ளுதலாகிய நுகர்ச்சி.

ஏ) பழைய 2: உலகத்து ஊழ்வினையினானாகிய இயற்கை இரண்டு கூறாதலால், செல்வமுடையவராதலும் வேறு;தெளிந்த அறிவுடைய ராதலும் வேறு.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக்., பரிமேல். இருவரும் நல்லூழையே இருவகையாகப் பிரிப்பர்; 'ஒன்று திருவுடையராதற்குரிய ஊழ்; மற்றொன்று அறிவு டையராதற்குரிய ஊழ்' என. *பரிதியார்* 'செல்வம் இருவகைப்படும் கல்விச்செல்வமும் பொருட்செல்வமும்'' என. அவற்றுள் பொருட் செல்வம், தனம், தானியம், தைரியம், வீரியம், சந்தானம், விசயம், கீர்த்தி, இராச்சியம் என எட்டுவகை' என்பர். இவ்வுரை இக்குறட் கருத்தை முழுதும் விளக்குவன அல்ல.

காளிங்கர் 'ஊழ்' பொதுவதிகாரமாதலின் இல்லறம் துறவறம் இரண்டற்கும் இயையவேண்டுமே என்று எண்ணி, 'திருவாளனா தற்குரிய ஊழ் இல்லறத்தானுக்கும், தெளிந்த நல்லறிவுடைய ஞானத்தான் ஆகும் ஊழ் துறவிக்குமாக' இயைத்து, 'இருவேறு உலகத்தியற்கை' என்பர். செல்வமுடையனாதற்குரிய ஊழ் துறவிக் குச் சிறப்புப் பயவாதாகலின் பொதுமையிற் கூறாது இங்ஙனம் பகுத்துக் கொண்ட *காளிங்கர்* பகுப்பும், *மணக்குடவர்* முதலானோர் உரையோடு இயையுமாயின் சிறப்புடையதாகும்.

சொ.த. உரை மணக்குடவர் போன்றாரை ஒத்திருப்பினும், விளக்கம் 'பொருள் செய்ய அறிவும், கல்விகற்கப் பொருளுந் தேவை யான துணைக்காரணம். ஆயினும் ஊழ்வலியான் வறியார்க்கு அமைந்த அறிவு அவரைச் செல்வராக்கப் பயன்படாமல் அறிவிலா ரைச் செல்வராக்கப் பயன்படும்; அறிவிலார்க்கு அமைந்த செல்வம் அவர் அறிவைக் கல்வியால் வளர்த்துக்கொள்ள பயன்படாது; வறிஞர் அறிவைக் கல்வியால் வளர்த்தற்குப் பயன்படும்' என்பர். இவர் கருத்தின் வண்ணம் 'அறிவிலார்தம் செல்வத்தை வறியன றிவை வளர்க்கப் பயன்படுத்துதலும் ஓரறிவுடைமையாகாதோ எனவும் இதுவும் ஒருவகையில் வறிஞனுடைய நல்லூழின் உதவி யாகாதோ' என்றும் எண்ணத் தோன்றுகிறது. அங்ஙனமே அறிவி லான் செல்வத்தைவளர்க்கப்பயன்படும் வறிஞன் அறிவும் அறிவிலா னுடைய நல்லூழ் எனவும் செல்வச்செருக்கின் சிறிது தளர்ந்து இந்த வறியன் அறிவைப் பயன்படுத்திக்கொண்டு வளரும் வகையில் உதவு கிற நல்லூழாகாதோ என்றும் நினைக்கத் தோன்றுகிறது. ஆதலால் தொல்லாசிரியர் உரையளவிலேதான் *திருக்குறள்* அமைந்திருக் கிறது என்றும் நினைக்கத் தோன்றுகிறது. *கவிராசர்* 'செல்வத்திற்கும் அறிவிற்கும் காரணமான ஊழ்வேறாக இருத்தலின் ஒன்றைமட்டும்

அடைவிக்கும் ஊழ்வினையைத் தேடிக்கொள்வது போதாது. இரண்டையும் பெற இருவகையான தவத்தையுஞ் செய்து இருவகையூழினையும் தேடவேண்டும்' என்பர்.

மு. ரா. அரு., இக்குறட்பாவின் கருத்தாக ''அறிவுடையராதற்கு ஆகும் ஊழ், செல்வமுடையராதற்கும், செல்வம் உடையராதற்கு ஆகும் ஊழ் அறிவுடையராதற்கும் ஆகாதென்பது தெளிவாகத் தெரிந்தது. இதனால் செல்வம் வருங்காலம் அறிவாகிய துணைக் காரணமும் முயற்சியாகிய துணைக்காரணம் வேண்டுவதில்லை என்பது கண்டுகொள்க'' என்பர். 'ஆகூழாற்றோன்றும் அசைவின்மை' என்பதால் செல்வம் பெருகுதற்கும் ஊழின்வழி விளையும் முயற்சி காரணமாதலாலும் ஊக்கமுடையானுழை ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் என்பதனாலும் முயற்சி இன்றியமையாத துணையாதல் பெறப்படும். ஆதலால் இக்கருத்து பெரிதும் ஆய்விற்குரியது. மற்றும் அறிவாகிய துணைக்காரணமும் வேண்டாது என்பதும் 'அறிவகற்றும் ஆகலூழ் உற்றக் கடை' என்பதனொடு மாறுபடுதலின் அதுவும் இயையாமை எண்ணுக.

ஒ) ஒப்புமைப்பகுதி:

முற்றும்:

புணர்கடல்சூழ் வையத்துப் புண்ணியமோ வேறே
உணர்வதுடையார் இருப்ப—உணர்விலா
வட்டும் வழுதுணையும் போல்வாரும் வாழ்பவே
பட்டும் துகிலும் உடுத்து —*நாலடி., 264*

நல்லார் நயவர் இருப்ப நயமிலாக்
கல்லார்க் கொன்றாகிய காரணம்—தொல்லை
வினைப்பயன் அல்லது வேல்நெடுங் கண்ணாய்
நினைப்ப வருவதொன் றில் —*நாலடி., 265*

உரைசான்ற சான்றோர் ஒடுங்கி யுறைய
நிறையுளர் அல்லார் நிமிர்ந்து பெருகல் —*பழமொழி., 125*

38.5. நல்லவை எல்லாஅம் தீயவாம் தீயவும் நல்லவாம் செல்வம் செயற்கு. (௬௭௫)

உரைப்பகுதி:

அ) மணக்.: செல்வம் உண்டாக்குவதற்குத்தனக்கு முன்பு தீதாயிருந்

தன எல்லாம் நன்றாம்; அச்செல்வத்தை இல்லையாக்குவதற்கு முன்பு நன்றாய் இருந்தன எல்லாம் தீதாம் என்றவாறு.

ஆ) *பரிதி*.: எ—து ஆகிற ஊழ்வருங்காலம், அழிகிற காரியத்தை யாக்கும்; அழிகிற ஊழ் ஆகிற காரியத்தை அழிக்கும் என்றவாறு.

ஈ) காளி.: எ—து முன்னோர் ஊழினால் வந்துற்ற நல்லவையாகிய செல்வமெல்லாம் நிலைதடுமாறித் தீயனவாம், அங்கனஞ் செய்வதோர் விதிக்கு; மற்று இனித்தீயன ஆகிய எல்லாம் நிலைதடுமாறிய வாறே நல்லனவாகிய செல்வம் வந்துளதாம், மற்றும் இங்ஙனம்தாம் முன்னம் செய்த செயற்குத் தக்காங்கு என்றவாறு.

உ) *பரிமேல்*.: செல்வத்தை ஆக்குதற்கு, நல்லவையெல்லாம் தீயவாய் அழிக்கும், அதுவேயன்றித் தீயவைதாமும் நல்லவாய் ஆக்கும் ஊழ்வயத்தான்.

நல்லவை தீயவை யென்பன காலமும், இடனும், கருவியும், தொழிலும் முதலாயவற்றை.[1] ஊழான்[2] என்பது அதிகாரத்தால் பெற்றாம். அழிக்கும் ஊழ் உற்றவழிக் காலம் முதலிய நல்லவாயினும் அழியும், ஆக்கும் ஊழ் உற்றவழி அவை[3] தீயவாயினும் ஆகும் என்பதாயிற்று. ஆகவே காலம் முதலிய துணைக்காரணங்களையும் வேறுபடுக்கும் என்பது பெற்றாம்.

> *காரி*.: ஊழ் அதிகாரத்தால் வந்தது. இது வகுத்துக் கொண்ட அதிகாரம் என்க. அன்றியும் முற்கவியில் என்று அதிகாரப்பட்டால் அது பிற்கவிக்கு வருவதும் ஆம். 'எல்லாஅம்' என அளபெடுத்துச் சொல்லுக.

ஊ) கவிராசர்: செல்வம் செய்தற்கு ஏதுவாகிய நல்லகாரியங்கள் எல்லாம் பொல்லனவாம்[4], கேடுசெய்ய நினைத்த பொல்லாத காரியங்கள் எல்லாம் நல்லன ஆம், ஊழ்வினை வசத்தினாலே (எ—று).

ஏ) *பழைய 2*: 'எல்லாம்' பாடம். செல்வத்தை அழித்தற்கு நல்லனவெல்லாம் பொல்லாதாகச் செய்விக்கும், அதுவேயன்றி, செல்வத்தை ஆக்குவதற்குப் பொல்லாதன எல்லாம் நல்லனவாகச் செய்விக்கும் ஊழ்வினை வந்தவிடத்து.

---

1 மெய்வருத்த நோக்காமை, பசி பாராமை, தூக்கந் தவிர்தல், அவமதிப்பு கருதாமை, முதலியவற்றையும் 'முதலிய' என்பதாற் கொள்க.
2 ஊழ்வயத்தான் என்றும் பாடமுண்டு.
3 அவை—காலம் கருவி தொழில் இடம் முதலாயின. 4 பொல்லனவாம்-தீயனவாம்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக்குடவர் உரைக்கு ஒரு விளக்கம் போல்வது *பரிமேலழகர்* உரை. *மணக்.* 'தனக்கு முன்பு தீதாயிருந்தன எல்லாம் நல்லனவாயிருந்தன எல்லாம்' என்பவற்றிற்கும் இருந்தன எவை என விளங்காமையான் *பரிமேலழகர்* 'காலம் கருவி இடன் தொழில் அனைத்தும்' என விளக்கினர். ஊழ் தீதாயின் கால முதலியன நன்றாயினும் செல்வம் செய்ய இயலாது. ஊழ்நன்றாயின் காலமுதலியன தீதாயினும் செல்வம் குவியும் என்பது அவர்கள் கருத்து.

பரிதி. 'செல்வம் ஆதற்கும் அழிதற்கும் மட்டுமா ஊழ் காரணம் அனைத்திற்கும் தாம்' என்பர் போல், 'ஆகூழிருந்தால் அழிவனவும் ஆகும். அழிக்கும் ஊழ்வரின் ஆகிற காரியமும் அழியும்' எனக் கூறினர். ஆனால் செல்வம் செயற்கு என வள்ளுவரே கூறுதலால் இவ்வுரை எளிமையும் விளக்கமும் உடையதாயினும் இன்னதற்கு என வரையறுக்காது பொதுமையிற் செய்வதால் குறையுடைத்து எனலாம்.

காளிங்கர், 'நல்லவை, தீயவை என்பன நல்லூழிருந்த காலத்துச் சேர்ந்த செல்வத்தையும் தீயூழ் இருந்த காலத்து அழிகிற செல்வத்தையும்' குறித்தனவாகக் காட்டுவர். அங்ஙனமே 'தீய ஆம்; நல்ல ஆம்' என்பனவற்றிற்கும் 'நல்லனவாகிய செல்வம்; தீயனவாகிய செல்வம்' என்பர்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

நல்லவை தீயவாதற்கு:

நன்மையும் தீமை யன்றோ நாசம்வந் துற்றபோது —*கம்பராமா.,* 3366

ஊழ்வினை யுருத்த காலத்து உறுதவத்தீன்ற நற்றாய்
வீழ்முலை சுரந்த பாலும் உண்டபின் வெய்ய நஞ்சாம்
ஆழ்கடல் பிறந்த நஞ்சும் உண்டபின் அமிழ்தாம் என்றால்
வாழிய மாந்தர் எல்லாம் இருவினை வயத்தர் மன்னோ — *பிரமோத்தர.*

ஊழ் நல்லதாங்கால் சிறுமுயற்சியும் நற்பயனை விளைவிக்கும்
தீய தாங்கால் நற்செயலும் தீயபயனை விளைவிக்கும்
—*சுக்கிர. அத்.,* 1:57—58

ஓ) மேற்கோள்பகுதி:

சேனா.: ''நல்லவை'' —இக்குறள் ஊழால் என அதிகாரமாகிய காரணம் பற்றி வந்ததற்கு மேற்கோள். (தொல். சொல். 22)

38. 6. பரியினும் ஆகாவாம் பாலல்ல உய்த்துச்
சொரியினும் போகா தம. (ரு௭சு)

உரைப்பகுதி:

அ) **மணக்.:** தம்முடைய பகுதியல்லாதவற்றை வருந்திக்காப்பினும் அவை தமக்கு ஆகா; தம்முடைய பகுதியாயினவற்றைக் கொண்டு சென்று சொரிந்துவிடினும்[1] அவை போகா என்றவாறு.

இது முன்புள்ள செல்வம் காவற்படுதலும் களவுபோதலும் ஊழினாலேயாம் என்றது.

ஆ) *பரிதி.:* எ—து ஆகிற காலத்தில் உடைமையைப் புறத்திலே போட்டாலும் போகாது;அழிகிற காலத்தில் உடைமையை எத்தனை பாதுகாத்தாலும் போம் என்றவாறு.

ஈ) **காளி.:** எ—து தாம் செல்வத்தைப் பெரிதும் காதலிப்பினும் தமக்குள்ளவர்க்கு ஆகாவாம் யாவை எனில் அதற்கு ஏய்ந்த ஊழுடைய அல்லாதன. மற்று இவ்வாறன்றி அகத்திருந்த பொருளையும் புறத்துக்கொண்டுசென்று கொடுப்பினும் போகா ஒருவாற்றால் புகுந்தெய்தும்; மற்று அவ்விதியால் தம்முடையன ஆதற்கு உரிய பொருள் என்றவாறு.

உ) *பரிமேல்.:* தமக்கு ஊழல்லாத பொருள்கள் வருந்திக்காப்பினும், தம்மிடத்து நில்லாவாம்; ஊழால் தமவாய பொருள்கள் புறத்தே கொண்டு போய்ச்சொரிந்தாலும் தம்மை விட்டுப்போகா.

பொருள்களின் நிலையும் போக்கும் ஊழினான் ஆவதல்லது காப்பு இகழ்ச்சிகளான்[2] ஆகா என்பதாம். இவை ஆறுபாட்டானும் பொருட்குக் காரணமாய ஊழின் வலி கூறப்பட்டது.

> **காரி.:** பால்—ஊழ்; அஃது அதிகாரவரவில் ஒருபொருட்கிளவியுள் காண்க.

ஊ) **கவிராசர்:** தனக்கு ஊழ்வினையினாலே பிராப்தி[3]யில்லாத பொருளை வருந்திக் காத்தலும் நில்லாது. தனக்குப் பிராப்தியுண்டாயிருக்கிற பொருளை எறிந்துபோட்டாலும் போகாது. (எ—று).

ஏ) *பழைய 2:* தமக்கு ஊழ்வினையினான் அல்லாத பொருள்கள்

---

1. சொரிந்து—வெறுப்பால் வீசி எறிந்து;
2. காப்பு இகழ்ச்சி-பொருள்களைக் காத்தலும் காவாதிகழ்தலும்.
3. பிராப்தி-பேறு.

வருந்திக்காப்பினும் தம்மிடத்து நில்லாதுபோம். ஊழ்வினையால் தமதாகிய பொருள்கள், தம்பாலல்லாத புறத்தே கொண்டுபோய்ச் சொரிந்தாலும் தம்மைவிட்டுப் போகா.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'பால்'

'பகுதி' என்பர் *மணக்.*; 'ஊழ்' என்பர் ***காளி.*** முதலிய தொல்லாசிரியர்களும் பின்னோரும். இவற்றுள் 'ஊழ்' எனவே இயைபுடைத்து.

'பரியினும்'

'வருந்திக் காத்தாலும்' ***மணக்.***, *பரிதி.*, பரிமேல்., ***கா.சு.***, ***சொ.த.***, ***கவிராசர்***, ***தேவநேயர்.***

'பெரிதும் காதலிப்பினும்' ***காளி.***; 'வருந்தித்தேடினும்' *குழந்தை*; 'எவ்வளவு விரும்பினாலும்' ***இராம.***; பரிதல்—பரிவதூஉம் சான்றோர்கடன் என்புழிப் போல 'வருந்துதல்' என்ற பொருளிலும், ''பண்டம் பகர்வான் பரியான்'' (பு.வெ.12, ஒழிபு. 2) எனப் 'பற்றுவைத்தல்' என்ற பொருளிலும் வருதலின் *மணக்குடவர்* முதலியோர் 'வருந்திக் காத்தல்' எனவும், ***காளிங்கர்*** முதலியோர் 'காதலித்தல்' என்ற பொருளிலும் உரைகண்டனர். ஆயினும் 'வருந்திக்காத்தல்' முன் உள்ள பொருளைக் காத்தலினும் 'காதலித்தல்', இருக்கும் பொருளோடு வருபொருளையும் விரும்புதலினும் செல்வதாக இரு நோக்குடையதாதலைக் காணலாம்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

பரியினும் ஆகாவாம் பால் அல்ல:

மிடுக்குற்றுப் பற்றினும் நில்லாது செல்வம்
விடுக்கும் வினையுலந்தக் கால் —*நாலடி.*, 93

தருவது விதியே யென்றால் தவம்பெரி துடைய ரேனும்
வருவது வருநா ளன்றி வந்துகை கூடவற்றோ —***கம்பராமா.***, 3243

உய்த்துச் சொரியினும் போகா தம:

ஈண்டு நீர் வையத்துள் ... ... நல்லவை
வேண்டினும் வேண்டா விடினும் உறற்பால
தீண்டா விடுதல் அரிது —*நாலடி.*, 109

உறற்பால யாவர்க்கும் உறும் —*நாலடி.*, 117

உறற்பால யாவர்க்கும் உறும் —*பழமொழி.*, 15

வேண்டினும் வேண்டா விடினும் உறற்பால
தீண்டா விடுதல் அரிது —*பழமொழி.*, 62

நாட்டுங் கால்நெடு நல்லறத் தீன்பயன்
ஊட்டுங் காலத் திகழ்வ துறுங்கொலோ —*கம்பராமா.*,
நிந்தனை., 34

முற்றும்

ஆகும் சமயத்தார்க் காள்வினையும் வேண்டாவாம்
போகும் பொறியார்புரிவும் பயமின்றே
ஏகன் மலைநாட என்செய்தாங் கென்பெறினும்
ஆகா தார்க் காகுவ தில் —*பழமொழி.*, 127

கழிபெருஞ் சிறப்பிற் கவுந்தி காணாய்
ஒழிகென ஒழியாது ஊட்டும் வல்வினை
இட்ட வித்தின் எதிர்வந் தெய்தி
ஒட்டுங்காலை ஒழிக்கவும் ஒண்ணா —*சிலப்.*10:170—173

ஆம்பொருள்கள் ஆகும்அவை யார்க்கும்அழிக் கொண்ணாப்
போம் பொருள்கள் போகும்அவை பொறியின் வகைவண்ணம்—*சீவக.*,848

அகப்படு பொறியினாரை ஆக்குவார் யாவரம்மா
மிகப்படு பொறியினாரை வெறியராச் செய்யலாமோ —*சீவக.*, 2315

புரிமுத்த மாலைப் பொற்கோல் விளக்கினுட் பெய்த நெய்யும்
திரியுஞ்சென் றற்ற போதே திருச்சுடர் தேம்பி னல்லால்
எரிமொய்த்துப் பெருக லுண்டோ இருவினை சென்று தேய்ந்தால்
பரிவுற்றுக் கெடாமற் செல்வம் பற்றியா ரதனை வைப்பார் —*சீவக.*, 2316

பெருமுழங்கு திரைவரைகள் நீந்திப்பிணி யுறினும்
திருமுயங்கல் இல்லையெனின் இல்லைபொரு ளீட்டம்
ஒருமுழமும் சேறலில ரேனும் பொரு ளுர்க்கே
வரும்வழிவி னாயுழந்து வாழ்கதவம் மாதோ —*சீவக.*, 2556

... ... விதியே நல்கின் மேவலா காதென் னென்றான்
—*கம்பராமா.*, 391

ஆகுவ தாகுங் காலத் தழிவதும் அழிந்து சிந்திப்
போகுவ தயலே நின்று போற்றினும் போதல் திண்ணம்
—*கம்பராமா.*, 7564

வருந்தி அழைத்தாலும் வாராதன வாரா —*நல்வழி.*

பொருந்துவன போமென்றாற் போகா —*நல்வழி.*

ஓ) மேற்கோள் பகுதி:

மயிலை.: ஆறாம் வேற்றுமை அகரவுருபு பிறிதின் கிழமையில் வந்ததற்கு மேற்கோள். (நன். 299)

38.7. வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது. (௩௭௭)

உரைப்பகுதி:

அ) *மணக்.*: விதானம்[1] பண்ணினவன் விதானம் பண்ணின வகையினானல்லது, கோடி பொருளை ஈட்டினவர்க்கும் அதனால்வரும் பயன் கோடல் அருமையுடைத்து என்றவாறு.

இது பொருள்பெற்றாலும் நுகர்தற்கு ஊழ்வேண்டும் என்றது.

ஆ) *பரிதி.*: எ—து இவனுக்குப் பொசிப்பாகிய[2] ஆகிற ஊழ், அழிகிற ஊழ் என்னும் முறைமையிலே இவன் பொசிப்பதன்றியிலே இவனிடத்திலே கோடி தனம் இருந்தாலும் பொசிக்க ஒண்ணாது என்றவாறு.

ஈ) *காளி.*: எ—து அதனால் முன்னஞ்செய்தார் செய்த வினைவகையால் துய்த்தலல்லது மற்று கோடிபொருள் ஈட்டினார்க்கும் அது கொண்டு துய்த்தல் அரிது. எனவே, அங்கனம் ஈட்டுதற்கு உரியர் தானம் முதலிய நல்வினை முன்செய்து, மற்றது கொண்டு, தான் நுகர்தற்கு வேண்டும் நல்வினை முன்னஞ்செய்யாரேல் ஈட்டினரேயாயினும் குறைவறத் துய்த்தல் அரிது என்றவாறு.

உ) *பரிமேல்.*: ஐம்பொறிகளா[3]ன் நுகரப்படும் பொருள்கள் கோடியை முயன்று தொகுத்தார்க்கும், தெய்வம் வகுத்தவகை[4]யானல்லது நுகர்தல் உண்டாகாது.

ஒருயிர் செய்தவினையின்பயன் பிறிதோருயிரின்கண் செல்லாமல் அவ்வுயிர்க்கே வகுத்தலின்[5], 'வகுத்தான்' என்றார். 'இசைத்தலும் உரிய வேறிடத்தான' என்பதனான் உயர்திணையாயிற்று[6]. படையாதார்க்கேயன்றிப் படைத்தார்க்கும் என்றமையால், உம்மை

---

1 விதானம்—ஊழ். தமிழ் லெக்ஸிகன் பக். 3672. இப்பகுதியை எடுத்துக்காட்டுகிறது
2 பொசிப்பாகிய—நுகர்தலாகிய; 3 ஐம்பொறிகள்—மெய் வாய் கண் மூக்கு செவி முதலிய கருவிகள்.
4 வகுத்தவகை—விதித்த வகை; 5 வகுத்தலின்—வாழ்நாளுக்கு ஏற்பப் பகுத்துக் கொடுத்தலின்.
6 தெய்வம் முதலிய 'இவ்வென அறியுந் தமக்கிலவாகிய பெயராயினும் இசைத்தலும் உரிய வேறிடத்தான என்பதால் உயர்திணைப் பெயராகப் பொருள் காணப்பட்டது.

எச்சவும்மை. வெறும்[7] முயற்சிகளால் பொருள்களைப் படைத்தலல்லது நுகர்தலாகாது; அதற்கு ஊழ்வேண்டும் என்பதாயிற்று.

காரி.: ''இசைத்தலுமுரிய வேறிடத்தான'' என்னும் சூத்திரத்துள் வேறுவாய்பாடு என உரைத்துக் 'காலம் உலகம்' என்பவற்றிற்குக் 'காலன் கொண்டான்', 'உலகத்தார் பசித்தார்' எனக் காட்டியதால் தெய்வம் என்பது வகுத்தான் என உயர்திணையாய் முழுதும் வேறுபட்டது.

ஊ) ***கவிராசர்***: ஐம்பொறிகளால் நுகரப்படும் பொருள்கள் கோடி கோடியாத் தேடிவைத்தாலும் தெய்வம் அவனுக்கு அமைத்த மாத்திரம் அல்லாமல் அதிகம் அனுபவிக்கப் போகாது (எ—று).

எ) *பழைய 2*: ஐம்பொறிகளும் அனுபவிக்கும் பொருள்கள் கோடிப் பொருள் தேடிக்குவித்து வைத்தவர்க்கும் தெய்வம் வகுத்த வகை அல்லாமல் தம்மால் அனுபவிக்கப்படா.

மல்லர்: எ—து ஐம்பொறிகளால் அனுபவிக்கப்படும் பொருள்களைக் கோடியளவாக வைத்தவர்களுக்குந் தெய்வம் குறித்த பங்கே அல்லாமல் அதிகம் அனுபவித்தல் அரிது எ—று.

மனிதர் பிரயாசைப்படவேண்டியது சம்பாதித்தாலும், தான் முன் செய்த பாவங்களுக்குப் பலனாக அதை அனுபவிக்கிறதுக்குத் தேவ சித்தம் இல்லாது போனால் அதை அனுபவிக்கப்பெற்றாரில்லை என்பது கருத்து.

வகுத்தான்—படைத்தவன்; வகுத்தல்—பங்கிடுதல்; வகை—கூறுபாடு; தொகுத்தல்—கூட்டல்; துய்த்தல்—நுகர்தல்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'கோடி'

'கோடிதவம்' *மணக்., பரிதி., காளி.,* ***இராம., தேவநேயர்,*** *பி.சா.சு.*; 'ஐம்பொறிகளான் நுகரப்படும் பொருள்கள்' ***பரிமேல்., கவிராசர், கா.சு., சொ.த., குழந்தை.***

'வகுத்தான்'

'தெய்வம்' ***பரிமேல்., கவிராசர், பழைய 2, கா.சு., சொ.த., தேவநேயர், இராமலிங்கனார்.*** 'நுகர்பொருள் பலவாதலின் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வகையாக வகுத்தவர்கள். செய்தவர் பல

7 'வேறு' என்றும் பாடமுண்டு.

ராயினும் ஒவ்வொரு வகையையும் வகுத்தவன் ஒருவனேயாதலின் வகுத்தான் என ஒருமையாற் கூறினார். வகுத்தான் ஊழ் எனலுமாம்' என்பர் குழந்தை.

'இவனுக்குப் பொசிப்பாகிய ஆகிற ஊழ், அழிக்கிற ஊழ் இவன் பொசிக்கவேண்டும் என்ற உரைப்போக்கு, ஊழ்வினையைச் செய்தவன் செய்தமுறையிலே பொசிக்கவேண்டும்' என்பது 'வகுத்தான்—வினைகளைச் செய்து ஊழை வகுத்துக்கொண்டவனையே குறிப்பது போல் தோன்றுகிறது' பரிதியார் உரை. அங்ஙனமே *காளிங்கர்* கூறும்'முன்னஞ் செய்தார் செய்தவினை வகையால் துய்த்தலல்லது' என்ற பகுதியும் வினைசெய்து ஊழினை ஈட்டியவனையே குறிக்கிறது 'விதானம் பண்ணினவன் விதானம் பண்ணினவன் கையினாலல்லது' என்பதும், 'வகுத்தான்—வினைகளைச்செய்தவனையே' குறிக்கிறது. ஆகவே *மணக்குடவர்* போன்ற பழைய உரையாசிரியர்கள் 'வினைகளைச் செய்தவன் செய்தமுறைப்படித்தான் நுகரஇயலும்' என்ற கருத்தினை வழங்குகின்றனர். மேலும் கோடிக்கணக்கான பொருள் சேர்த்தவனும் அப்பொருளைக்கொண்டு இன்பந்துய்க்க இயலாது; தான முதலிய நல்வினை செய்து நல்லூழ் ஈட்டியிருந்தாற்றான் அதனைக்கொண்டு குறைவறத் துய்க்க முடியும்' என்ற *காளிங்கர்* உரை இக்கருத்தை யரண் செய்கிறது. ஆகவே 'பால்வரை தெய்வம்' என உரைகண்டவர்களில் முதல்வர் *பரிமேலழகர்*. அவரை ஒட்டிப் பின் வந்த உரையாசிரியர்களும் கூறினர் எனத் தெரிகிறது.

''தொகுத்தாலும் துய்த்தலரிது'' *தாமத்தர்* பாடம் என்பர் *வ.உ.சி.*

ஓ) ஒப்புமைப்பகுதி:

முற்றும்:

வளப்பட வேண்டாதார் யார்யாரும் இல்லை
அளந்தன போகம் அவரவ ராற்றான் —*நாலடி.,* 107

அளந்துதாங் கொண்டு காத்த அருந்தவமுடைய நீரார்க்
களந்தன போகமெல்லாம் அவரவர்க் கற்றை நாளே''
அளந்தன் வாழு நாளும் ……… ……….. —*சீவக.,* 213

மறிப மறியும் மலிர்ப மலிரும்
பெறுப பெறும்பெற் றிழப்ப இழக்கும்
அறிவ தறிவார் அழுங்குவா துவவார்
உறுவ துறுமென் றுரைப்பது நன்று —*குண்டல.,* 18

அரசு வீற்றிருந் தாளவு மாய்மணிப்
புரசை யானையின் வீதியிற் போதவும்
விரசு கோலங்கள் காண விதியிலேன்
உரைசெய் தென்னையென் னூழ்வினை யுன்னுவேன்—*கம்பராமா.*, 5487

38.8. துறப்பார்மன் துப்புர வில்லார் உறற்பால ஊட்டா கழியும் எனின். (கூ௭அ)

உரைப்பகுதி:

அ) *மணக்.*: நுகரும்பொருள் இல்லாதார் துறக்க அமைவர்; தமக்கு வந்துறுந் துன்பப் பகுதியானவை உறாது[1] போமாயின், என்றவாறு.

இது துறவறமானது ஊழினால் வரும் என்றது.

ஆ) *பரிதி.*: எ—து அழிகிற ஊழ் ஆகிற காலத்திலே, பொருள் மேலே ஆசையறப்பண்ணித் துறவறத்தில் நிற்கப்பண்ணும்; உடனே யழிகிற ஊழ்வந்தால் அத்துறவறத்தைக்கெடுத்து இல்லறமாக்கும் ஆகையால், ஆகிறஊழ், அழிகிறஊழ் என்று பாராமல் எப்போதும் போலிருப்பான் என்றவாறு.

இ) *காளி.*: எ—து தம்து ஊழினால் வந்து எய்தற்பாங்கானவை[3] பலபல. நுகரவும் வந்து ஊட்டாவாய்[4]க்கழியும் ஊழ் உளதாயின் மற்றிதனால் இங்கனம் துறப்பாராவார். மற்றுத்தாமுறுதல் தன்மையவாகிய ஊழானவை நுகர்வி[5]யாது ஒழியுமாயின் என்றவாறு.

துப்புரவு என்பது நுகர்வு.

உ) *பரிமேல்.*: வறுமையால் நுகர்ச்சி இல்லாதார் துறக்குங் கருத்து உடையராவர். ஊழ்கள் உறுதற்பாலவாய துன்பங்களை உறுவியாது[6] ஒழியுமாயின்.

துறப்பார் என்பது ஆரீற்று எதிர்கால முற்றுச்சொல். தம்மால் விடப்பெறுவன[7] தாமே விடப்பெற்றுவைத்தும் கருத்து வேறுபாட்டால் துன்பமுறுகின்றது ஊழின் வலியான் என்பது எஞ்சி நிற்றலின், 'மன்' ஒழியிசைக்கண் வந்தது.

ஊ) *கவிராசர்*: தரித்திரத்தினாலே உண்ண உடுக்க இல்லாதவர்

---

1 உறாது—பொருந்தாமல்; 2 ஆசையறப்பண்ணி—ஆசையை அகற்றி.
3 எய்தற்பாங்கானவை—அடையத்தகும் தன்மைய; 4 ஊட்டாவாய்—நுகரச்செய்யாமல்
5 நுகர்வு—போகம்; 6 உறுவியாது—சேர்க்காமல்.
7 விடப்பெறுவன—நீங்கத்தகுவனவாகிய பொருள்கள்.

கள் துறந்து போகத் தக்கபுத்தியுடையவராவர், முன்செய்த தீவினை வந்து சேராவிட்டால் (எ—று).

ஏ) பழைய 2: வறுமையால் துய்ப்பன இல்லாதார் துறக்கும் கருத்துடையராவர் ஊழ்வினை துன்பங்களைஊட்டுவிக்காதுஒழியுமாயின்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'வயிற்றுக் கில்லாமையான் வறியர் துறவை மேற்கொள்ளக் கருதுவர். மேலும் அவர் செய்த தீவினைப்பயன் துறவைக் கெடுக்காமல் இருக்குமாயின்' என்ற கருத்தமைய உரைகாண்பர் பழைய உரையாசிரியர்கள் நால்வரும்.

'விதியால் நேருந்துன்பங்கள் நேராது ஒழியின் வறியர் துறவை மேற்கொள்வர்' என்பர் *கா.சு.*; *கவிராசர்* உரையும் இக்கருத்தினதே. *சொ.த.* உரையும் அங்ஙனமே.

'வறுமையால் ஒருவன் துறக்கக் கருதுவனாயின் பழவினையான் வரும் காம வெகுளி மயக்கங்கள் அவனைத் துன்பத்துட்படுத்தித் துறக்கவிடாமற் செய்யும்; அவை தோன்றாவாயின் எளிதில் துறப்பான்' என்பர் குழந்தை.

''துறப்பார்மன்'' என்பது 'துறவறத்தை மேற்கொள்வர்' என்னும் கருத்தினதன்று. செல்வத்தைச் சேர்த்துவைத்தவன் அவற்றை நுகரமுடியாதபடி தீயஊழ் தடுக்குமாயின் சேர்த்த செல்வங்களை அப்படியே விட்டுவிட்டுப் பிரிந்து விடுவார்கள் என்பதுதான் பொருள்' என்பர் *இராமலிங்கனார்*.

தேவநேயர், தம் உரைக்கருத்தாக உரைப்பது 'துறவுநிலை இயல்பாகவே அமைந்திருந்தும் அதை வீடுபேற்றிற்குப் பயன்படுத்தாவாறு ஊழ்கெடுக்கும்' என்பது.

பரிதியுரை கருத்துப் பொருளதாக அமையினும், 'உறற்பால— துறவிக்கு உறுதற் பாலனவாகிய ஆகூழும், போகூழும் தத்தம் பயன்களைக் கொடாது ஒழியுமாயின் வறியன் துறவை மேற்கொள்வான்' என்னும் பொருளது. ஆனால், 'அழிகிற ஊழ் ஆகிற காலமானால் பொருட்பற்றைக் கெடுத்துத் துறவறத்தில் நிலைக்கச்செய்யும். இங்ஙனம் இவன் துறவறத்தில் நிற்கும்போது அழிகிற ஊழ்வந்தால் துறவைக்கெடுத்து இல்லறமாக்கிவிடும்' என்ற அவர் விளக்கம் அவர் கருதும் உரையில் எங்ஙனம் அமைகிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டியுள்ளது. மற்றும் ஆகூழ் போகூழ் என்று கருதாமல் 'எப்போதும் போல் இருப்பான்' என்பதன் நோக்கம் என்ன? துறவி எவ்

ஊழ் வந்து பயனைத்தரினும். இன்பத்தில் உவப்பும் துன்பத்தில் உவர்ப்பும் இன்றி இருவினைகளையும் ஒப்பாக எண்ணியிருப்பான் என்பதாயினும் குறளமைதிக்கு இயைந்ததாக இல்லை.

காளிங்கர் உரையமைப்பு, 'ஊழால் வரும்பயன்கள் பல வருகின்றன. ஆனால் அவை தத்தம் பயனை நுகர்வியாது ஒழிகின்றன: அதனால் துறப்பன்' என்கிறார். அவ்வளவில் அமையாது, 'மீண்டும் உறற்பால ஊட்டா கழியுமெனின்' என்கிறார். இதன் நோக்கம் விளங்குவதாக இல்லை. 'உயிர்துறப்பாக' என்ற *இராமலிங்கர்* உரையும் சிறந்ததாகத் தோன்றவில்லை. உயிர்துறத்தலும், வகுத்தான் வகுத்தவினையை நுகராது உயிரை விடுத்து வகுத்தானை ஏய்த்தாலும் இயைவதன்றாகலான் என்க.

வ.உ.சி. விதிகள் தம்பயனை ஊட்டாது கழிவதுமில்லை; வறிஞர் துறக்கப்போவதும் இல்லை. இக்குறள் பொய்த் தற்குறிப்பணி என்பர். தற்குறிப்பணியாவது ஒருபொருளை மற்றொரு பொருள் தரும் சம்பந்தத்தினால் இஃது அஃதன்றெனத் தெரிந்தும், அப்பொருளாகத் தற்குறிப்புச் செய்தல். அதிலும் பொய்த் தற்குறிப்பு என்பதொன்று இவரது படைப்புப்போலும்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

உறற்பால **ஊ**ட்டியே தீரும்:

யாதும் ஊரே யாவருங் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன
சாதலும் புதுவதன்றே வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன் றுமிலமே முனிவின்
இன்னாதென் றலு மிலமே மின்னொடு
வானந்தண் டுளி தலைஇ யானாது
கல்பொரு திரங்கும் மல்லற் பேரியாற்று
நீர்வழிப்படூஉம் புணை போல்ஆருயிர்
முறை வழிப்படூஉம் என்பது திறவோர்
காட்சியிற் றெளிந்தன மாதலின் மாட்சியிற்
பெரியோரை வியத்தலு மிலமே
சிறியோரை யிகழ்தலதனினு மிலமே —*புறநா.,* 192

38.9. நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால்
அல்லற் படுவ தெவன். (௩௭௯)

உரைப்பகுதி:

அ) மணக்.: நன்மைவரும் காலத்து நன்றாகக் காண்பவர் தீமை வருங்காலத்து அல்லற்படுவது யாதினுக்கு[1] என்றவாறு.

இஃது அறிந்தவர் வருவன எல்லாம் இயல்பு என்று கொள்ள வேண்டும் என்றது.

ஆ) பரிதி.: எ—து நல்வினை வருங்காலம் பிரியமாயிருக்கவும், அழிகிறஊழ் வந்தகாலம் வருந்த ஒண்ணாது[2]; ஆகிற ஊழ் என்று கொள்க என்றவாறு.

ஈ) காளி.: எ—து நல்விதியானே தமக்கு நன்றாங் காலத்து அங்கனம் நல்லனவாகக் கண்டு வருகின்றவர் மற்று ஏனைஊழானே நன்மை யல்லவாங்காலத்து அல்லலுழப்பது[3] என்னை; எனவே இங்கனம் வரும் அல்லலும் அப்பொழுதைக்கு அது அல்லது பிறி தொன்று வந்து உதவாது என்பது பொருள் என்றவாறு.

உ) பரிமேல்.: நல்வினை விளையுங்கால் அதன் விளைவாய இன்பங்களைத் துடைக்குந் திறன்[4] நாடாது இவை நல்ல என்று இயைந்து அனுபவிப்பார், ஏனைத்தீவினை விளையுங்கால் அதன் விளைவாய துன்பங்களையும் அவ்வாறு அனுபவியாது துடைக்குந் திறன் நாடி அல்லலுழப்பது என்கருதி.

தாமே முன்செய்துகொண்டமையானும், ஊட்டாது கழியாமையானும், இரண்டும்[5] இயைந்து அனுபவிக்கற்பால; அவற்றுள் ஒன்றற்கு[6] இயைந்தனுபவித்து ஏனையதற்கு[7] அது[8] செய்யாது வருந்துதல் அறிவன்று என்பதாம். இவை மூன்றுபாட்டானும் இன்பத்துன்பங்கட்குக் காரணமாய ஊழின்வலி கூறப்பட்டது.

காரி.: துறப்பார்; ஆர் ஈற்று எதிர்கால முற்றுவினைச்சொல். அஃது ஒரு தொழிற்சொல்லே தன் எச்சப்பொருள் கொண்டு முடியும். அது பெயராகிய எழுவாயாதலும் வேற்றுமை ஏற்றலும் பெறும் என்க; அது ''களித்தானை...குளித்தானை''[9] ''இரப்பார்க்கு ஒன்று ஈவார்மேல் நிற்கும் புகழ்''[10] எனவும் வரும்.

---

1 யாதினுக்கு—எதற்கு; 2 ஒண்ணாது-- பொருந்தாது; 3 அல்லலுழப்பது-துன்பத்தால் வருந்துவது
4 துடைக்குந்திறன்-நீக்குந்திறன் 5 இரண்டும்-நல்வினை, தீவினைகள்.
6 ஒன்றற்கு-நல்வினையின் பயனாகிய இன்பத்திற்கு.
7 ஏனையதற்கு-தீவினையின் பயனாகிய துன்பத்திற்கு.
8 அது-அனுபவித்தல்; 9 குறள் 929; 10 குறள் 232.

ஊ) *கவிராசர்:* நல்லவினை உதயமான காலத்து அதன்விளைவாய இன்பங்களை வேண்டாம் என்று தள்ளாமல் இவை நல்லவென்று அநுபவித்தவர்கள், மற்றைத் தீவினை விளையுங் காலத்து, அதன் விளைவாய துன்பங்களையும் அப்படி அநுபவியாமல் துன்பங்களைப் போக்கடிக்க வேணுமென்று விசாரப்படுகிறது என்ன காரியம்(எ-று).

ஏ) *பழைய 2:* பழைய ஊழாகிய நல்வினைவந்து விளையும் காலத்தில் நல்ல இன்பங்களைத் தள்ளாது நல்லனவென்று பொருந்திஅநுபவிப்பான், ஏனைத்தீவினை வந்து விளையும் காலத்தில் பொல்லாத துன்பங்களை அவ்வாறு என்று அனுபவியாது தள்ளும் அவன்தேடி அல்லல் உழப்பது என் கருதி?

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

''நல்லூழின் பயனாகிய இன்பத்தையும், தீவினையின் பயனாகிய துன்பத்தையும், நுகரும்போது விருப்பு வெறுப்புக்காட்டாது ஒத்த உணர்ச்சியுடன் நுகரவேண்டும்''என்பது *மணக்குடவர்* உரை. இது இருவினை ஒப்பு கூறியது எனலாம்.

'தீயூழையும் நல்லூழ் எனக்கருதுக' என்பர் *பரிதி*.; 'அல்லலை அப்பொழுதைக்கு என்றும் இன்பத்தை அப்பொழுதைக்கு என்றும் கருதுக. ஒன்று நுகரவேண்டிய காலத்துப் பிறிதொன்று வந்து உதவாது' என்றது *காளிங்கர்* கருத்து. 'எது எது எவ்வெப்போது அதனை அதனை அவ்வப்போது மகிழ்வுடன் நுகருக' என்பதே அவரது முடிவு.

இவற்றுள் *மணக்குடவர்* உரை சுருக்கமும் எளிமையும் உடையது. *கவிராசர், கா.சு.,* குழந்தை, தேவநேயர் போன்றோரும் கருத்துமாற்றமிலாராதலைக்காண்க.

ஒ) ஒப்புமைப்பகுதி:

அன்றாங்கால் அல்லற் படுவது:

சிறுகா பெருகா முறைபிறழ்ந்து வாரா
உறுகாலத் தூற்றாக ஆமிடத்தே ஆகும்
சிறுகாலைப் பட்டபொறியும் அதனால்
இறுகாலத் தென்னை பிரிவு —*நாலடி.,* 110

சாதலும் பிறத்தல் தானுந் த[illegible]வினைப் பயத்தின் ஆகும்
ஆதலும் அழிவுமெல்லாம் அவைபொருட்கியல்பு கண்[illegible]

நோதலும் பரிவுமெல்லாம் நுண்ணுணர் வின்மை யன்றே
பேதை நீ பெரிதும் பொல்லாய் பெய்வளைத்தோளி யென்றார்
—சீவக., 269

முடியுநாள் தானேவந்து முற்றினான் துன்பமுந்நீர்ப்
படியுமாம் சிறியோர் தன்மை நினக்கிது பழியிற ராமால்
—கம்பராமா., 9037

இன்பம்வந் துறுமெனின் இனிய தாயிடைத்
துன்பம்வந் துறுமெனின் துறக்க லாகுமே —கம்பராமா., 1957

விலங்கிவில் லுமிழும் பூணான் விழுச்சிறைப் பட்டபோழ்தும்
அலங்கலந் தாரினான்வந் தருஞ்சிறை விடுத்த போழ்தும்
புலம்பலு மகிழ்வு நெஞ்சிற் பொலிதலு மின்றிப் பொன்னார்ந்
துலங்கலந் துயர்ந்த தோளானூ ழ்வினை யென்று விட்டான்
—சீவக., 1167

அறிவது அறிவார் அழுங்கார் உய்யார்
உறுவது உறும் என்று உரைப்பது நன்று —குண்டல., 18

இந்திரர்கள் வந்தடி பணிந்தருள் கெனினும்
சிந்தையிலர் வெந்துயர்கள் எண்ணிலகள் செய்யினும்
தத்தம்வினை என்றும் நமர்பிறர் எனவும் நினையார்
அந்தரம் இகந்து அருந்தவத்தரசர் தாரோய் —யசோ., 271

38.10. ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும். (௩௮௦)

உரைப்பகுதி:

அ) *மணக்.*: ஊழினும் மிக்க வலியுடையன யாவை உள? பிறி தொன்றை ஆராயுங் காலத்தும், தான் முற்பட அவ்வாராய்ச்சிக்கு உடன்பட்டு நிற்கும் என்றவாறு.

ஆ) *பரிதி.*: எ—து ஊழைப்போலே, பொல்லானில்லை; எப்படி என்றால், ஆகின்ற காலம், அழிகின்ற காலங்களிலே, தான்முன்னே வந்து நிற்கையால் என்றவாறு.

ஈ) *காளி.*: எ—து உலகத்து யாவர்க்கும் அவரவர் ஊழின் சிறந்த பெருவலியுடையன யாவை உள? எனவே யாவுமில்லை எனில், தமக்கு விதியினால் வருவது ஒழியத் தம் அவாவினால் வேறொன்று வரக்கருதினும் அஃதிறந்து மற்று அவ்விதியினால் வருவது தானே வந்து முந்துற்று நிற்கும் ஆதலால் என்றவாறு.

உ) *பரிமேல்.*: தன்னை[1] விலக்குதற்பொருட்டுத் தனக்கு மறு

1 தன்னை-ஊழை

தலை[2] யாவதோர் உபாயத்தைச்சூழினும் தான் அவ்வுபாயமேயானும் பிறிதொன்றானும் வழியாக வந்து அச்சூழ்ச்சியின் முற்பட்டு நிற்கும்; அதனால் ஊழ்போல மிக்கவலியுடையன யாவையுள?

பெருவலி ஆகுபெயர்[3]. சூழ்தல் பலருடனும் பழுதற எண்ணுதல். செய்தற்கேயன்றிச் சூழ்தற்கும் அவதி[4]கொடாது என்றமையின், உம்மை எச்சவும்மை[5]. எல்லாம் வழியாக வருதல் உடைமையின், ஊழே வலியது என்பதாம். இதனான் அவ்விருவகையூழின் வலியும்[6] பொதுவாகக் கூறப்பட்டது.

காரி.: பெருவலி—பெருவலியை உடையன: பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை என்னாது ஆகுபெயர் என்றார். 'பாயிரும் பனிக்கடல்' என்னும் பரிபாட்டினுள், ''கயந்தலைக்கும்'' பண்புத்தொகைப் புறத்துவந்த அன்மொழி ஈண்டு ஆகுபெயர் என்றார். இவ்வுரையாசிரியர் முன்னர் 'கனங் குழைக்கும்' இவ்வாறு உரைத்தார்.

இனித் ''தொடலைக் குறுந்தொடி''[8] என்பதனை உவமைத் தொகைப் புறத்து வந்த அன்மொழித்தொகை என்றாராதலால், ''ஐம்பாலறியும் பண்புதொகுமொழியும், மெய்யொருங்கியலுந் தொழில் தொகுமொழியும்'' என்னுஞ் சூத்திரவிதியால் பண்புத் தொகை வினைத்தொகைகளை ஒருமொழியாக்கி அஃது ஆகு பெயராய்வரும் எனவும், ''முன்மொழி நிலையலும் பின்மொழி நிலையலும், இருமொழிமேலும் ஒருங்குடனிலையலும், அம் மொழி நிலையாது அன்மொழி நிலையலும்'' என்னும் நியம விதியாம் தொகைநிலைத் தொடர் மொழியாகிய இருமொழிக் கண் அன்றி ஒருமொழிக்கண் அன்மொழித்தொகை வாராது எனவும் கொள்வது இவ்வுரையாசிரியர் கருத்துப்போலும்.

இனிப் பண்புத்தொகை வினைத்தொகைகளின் புறத்து அன் மொழி வரும் என்னும் சூத்திரத்திற்கு எவ்வாறு கொள்வாரோ? எம்மனோர்க்கறிதல் அரிது என்க. ''வேயின் மென்றோள்'' என்னுங் கோவையாருள் ''பாயின மேகலை''[9] என்பதனை, இச்சொற்கள் ஒரு சொன்னீர்மைப் படுதலின் ஆகுபெயரெனப்

---

2 மறுதலை-எதிரான கருத்து.

3 வலி-வலிமையையுடையது. வலி என்ற பண்புப்பெயர், வலிமையையுடைய பொருளுக்குப் பெயராயிற்று. அது 'பெரு' என்ற அடையடுத்து வந்தமையின் அடையடுத்தபண் பாகுபெயர்

4 அவதி-கால எல்லை. அதாவது சந்தர்ப்பம்.

5 நினைப்பின்வழிச் செயல் நிகழ்வதாதலால் எண்ணுதற்கும் அவதி கொடாதெனின் இனிச் செய்தற்கும் தாராது என்பது பெறப்படுதலின் உம்மை எதிரது தழீஇய எச்சம்.

6 அவ்விருவகை ஊழ்வலியும்-பொருளுடையனாதற்கேற்றது. இன்பதுன்பங்கட்கு ஏற்றது மான இருவகையூழின் வலியும். 7 குறள், 1081; 8 குறள், 1135; 9 கோவை., 232;

படும் என்றும், ''இயல் மன்னும் அன்பு''[10] என்னும் கோவை யாருள் 'மன்னும்'என்பதனைப் பெயரெச்சத்திற்கும் பெயர்க்கும் ஒரு சொன்னீர்மைப்பாடுண்மையின் ஒரு சொல் என்றும், ''மாதுற்றமேனி''[11] ஆகுபெயரென்றும் *பேராசிரியரும்* உரைத்தார்; அவை, தொகைநிலைத் தொடர்மொழியாகலானும், ஆகுபெயரேயாக வேண்டும் என்க.

முதிராமுலை, முற்றாமுலை, உண்ணாமுலை, குடங்கையின் அகன்றவிழி, கை பரந்து வண்டிசைக்குங் கூந்தல் என்பன முதலியனவும் தொகாநிலைத் தொடர்மொழியாய் ஒரு சொன்னீர்மைப்பாடாய் வருதலின் ஆகுபெயராம் என்பது.

இனித் தொல்காப்பியத்துள் மக்கட்சுட்டு என்பதனைப் பண்புத் தொகைப்புறத்துவந்த அன்மொழித்தொகை என்ற *சேனாவரையர்* உரைக்கு வழுக்காட்டி, இருபெயரொட்டுப் பண்புத்தொகை ஆகுபெயராயிற்று என்ற *நச்சினார்க்கினியரும்* உயர்திணை அஃறிணை என்பவற்றை வினைத்தொகை பண்புத்தொகை ஆகுபெயராயின எனக் கூறினரல்லாது, ஆகுபெயர் அன்மொழித் தொகை ஒருசொல் இருசொல் என்றும் ஆகுபெயர்க்கும், அன்மொழித்தொகைக்கும் தம்முள் வேறுபாடு இன்னது என்றும் வரையறை கூறிற்றிலர்; ஆகையால் அவர்கருத்து எம்மனோர்க்கு அறிதல் அரிது என்க.

அறத்துப்பால், பரிமேலழகரையன் உரையுள், இரத்தின கவிராயன் எடுத்துச் சேர்த்த நுண்பொருள்மாலை முற்றிற்று.

ஊ) *கவிராசர்*: வினையை விலக்க வேண்டும் என்று அதற்கு மாறுபாடாகிய உபாயங்களைச்செய்தானும் அந்த உபாயத்திற்குமுன்னே வினைவந்து நிற்கும் (எ—று).

எ) *பழைய 2*: ஊழ்வினை தன்னை விலக்குதற்பொருட்டு அதனுக்கு மறுதலையாகியதோர் உபாயத்தை நினைத்தால் அந்த உபாயமேயாகியும், பிறிதொன்றாகியும் அவ்வழியே வந்து சூழ்ச்சியின் முற்பட்டுநிற்கும்; அதனால் ஊழ்வினைபோல் மிக்கவலி யாவை உள?

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'மற்றொன்று சூழினும்'

'பிறிதொன்றை ஆயுங் காலத்து' என *மணக்.*, வாளா கூறினர். *பரிதி.*, 'ஆகிற காலம் அழிகிற காலங்களிலேதான் முன்னேவந்து

10 கோவை., 365 11 கோவை., 174

நிற்கும்' என்பர். *காளி.*, 'தமது விதியினால் ஒழியத் தம் அவாவி னால் வேறொன்று வரக்கருதினும் அவாவால் வருவதை முந்திக் கொண்டு விதியால் வருவது முன்னிற்கும்' என்றார்.

பரிமேல்., சொ.த., தேவநேயர், 'தன்னைத் தடுத்து ஒழிப்பதற் காக மறுதலையான உபாயத்தை எண்ணினாலும், அவ்வுபாயத் தையே வழியாகக் கொண்டாவது அது இயலாததாயின் வேறொரு வாற்றானாவது விதிமுந்தும்' என்பர்.

கவிராசர், பழைய 2, கா.சு., 'ஊழினைத் தடுக்கச் சூழ்ந்தால்- அச்சூழ்ச்சியைத் தடுக்கும ஊழ்' என்பது.

இவ்வுரைகளுள் *பரிமேலழகரது* விளக்கமே பல்லாற்றானும் சிறந்தது.

ஒ) ஒப்புமைப்பகுதி:

ஊழிற் பெருவலி யாஉள?:

ஊழ்வினைவந் துருத்த தாதலின் —*சிலப்.*, 7:52

.... வெண்மதி நீங்கக்
காரிருள் நின்ற கடைநாட் கங்குல்
ஊழ்வினை கடைஇ உள்ளந் துரப்ப
....
வாயில் நெடுங்கடை கழிந்து —*சிலப்.*, 10:2-8

பண்டைஊழ்வினை உருத்தென் —*சிலப்.*, 16:257

ஊழ்வினை துரப்ப —*சிலப்.*, 20:59

ஊழ்வினை உருத்தெழ —*சிலப்.*, 27:59

முதிர்வினை நுங்கட்கு முடிந்ததாகலின் —*சிலப்., பதி.*,45

ஊழ்வினை உருத்து வந்தூட்டும் —*சிலப்., பதி.*, 57

ஊழ்முறை யல்லது வலியதொன் றில்லென—*சுந்தர., ஊர்தேடு.*, 205

ஒன்றுநாங் கருதிச் சூழின் ஊழது விளைவுதானே
கன்றிநான் கருதிற் றின்றி மற்றொர்வாறாக நண்ணும் —*சூளா.*, 358

அஞ்சின மெனினும் மெய்யே அடையவந் தடையுமானால்
அஞ்சுத லதனின் என்னை பயன்.................. —*யசோ.*, 33

மெய்யே பெற்றொழிந்தேன் விதிவாய்க்கின்று காப்பாரார்
—*திருவாய்.*, 5:1

எம்மா பாவியர்க்கும் விதிவாய்க்கின்று வாய்க்கும் கண்டீர்
திருவாய்., 1:7

வாழ்வினை நுதலிய மங்க லத்துநாள்
தாழ்வினை அதுவரச் சீரை சாத்தினான்
சூழ்வினை நான்முகத் தொருவர்ச் சூழினும்
ஊழ்வினை ஒருவரால் ஒழிக்கற் பாலதோ —கம்பராமா., 1854

அறவோ வினையே வென்னு மரசே யரசே யென்னும்
—கம்பராமா., 1724

விதியது வலியினும் இசைந்தார் —கம்பராமா., மந்திரப், 33

விதியது வலியினானும் ... ... —கம்பராமா., மாரீசன்-,86

வெஞ்சின விதியினை வெல்ல வல்லமோ —கம்பராமா., 3431

தள்ளா வினையேன் ... ... —கம்பராமா., 3709

... ... விதியையார் விலக்கற் பாலார் —கம்பராமா.,4444

தான் முந்துறும்:

மனமா கியபான் மைமுனைத் தெழலால் —சீவக., 215

முற்றும்:

பொறியின் வகைய கருமம் அதனால்
அறவினை ஊழே அடும் —பழமொழி., 203

நல்வினையுடைய நீரார் நஞ்சுணின் அமுதமாகும்
இல்லையேல் அமுதும் நஞ்சாம் இன்னதால் வினையின் ஆக்கம்
—சீவக., 2314

நஞ்சுகுடித் தாலும்நவை யின்று தவநின்றால்
அஞ்சியொளித் தாலும்அர ணில்லைதவம் உலந்தால்
குஞ்சரத்தின் கோட்டிடையும் உய்வர் தவமிக்கார்
அஞ்சலில ரென்றும் அற னேகளைகண் என்பர் —சீவக.,2557

மெய்த்தி ருப்பத மேவென்ற போதினும்
இத்தி ருத்துறந் தேகென்ற போதினும்
சித்தி ரத்தின லர்ந்தசெந் தாமரை
ஒத்தி ருக்குமு கத்தினையுன் னுவாள் —கம்பராமா., காட்சிப்.,20

அப்பொழு தலர்ந்த செந்தா மரையினை வென்ற தம்மா
—கம்பராமா., 1691

நாட்டுங் கானெடு நல்லறத் தின்பயன்
ஊட்டுங் காலத் திகழ்வ துறுங்கொலோ —கம்பராமா., 5285

பகைப் புலத்தோர் துணையல்ல ரென்றிவனைப்
பற்றேமே லறிஞர் பார்க்கின்
நகைப் புலத் தாமன்றே —கம்பராமா., 6593

அதிசய மொருவரா லமைக்க லாகுமோ
துதியலு பிறவியி னின்ப துன்பந்தான்
விதிவய மென்பதை மேற்கொ ளாவிடின்
மதிவலி யான்விதி வெல்ல வல்லமோ —கம்பராமா., 3609

பிரிவுசெய் துலகெலாம் பெறுவிப் பான்றலை
அரிவுசெய் விதியினாக் கரிதுண் டாகுமோ —கம்பராமா., 3610

ஊழ்முறை யல்லது வலியதொன் றில்லன வுணர்வுற்றான்
—கம்பராமா., 5145

அரிதுபோகவோ விதிவலிகடத்தல் என் றஞ்சி —கம்பராமா., 5183

சன்மத்தை ஞாலத் தவர் யாருள ரேகடப்பார் —கம்பராமா., 5418

இறுதியே விளைவ தானா விடையொன்றாற் றடையு முண்டோ
—கம்பராமா., 7440

உடையான்முயவி றொருகாரிய முறுதீவினை யுடற்ற
இடையறு சிதைந்தாங்கு .... —கம்பராமா., 9813

வீதலும் பிழைத்தல்தானும் விதிவழி யன்றி நம்மால்
ஆதலும் அழிவும் உண்டோ .... —பாரதம்., 13ம்போர்

ஒ) மேற்கோள் பகுதி:

மயிலை.: மற்று என்னும் இடைச்சொல் பிறிது என்னும் பொருளில் வந்தமைக்கு மேற்கோள். (*நன்.* 432.)

சங்கர.: ஊழல்லாததொன்று என்னும் பொருள் தந்தமையின் பிறிது என்னும் பொருட்கண் வந்தது. (*நன்.* 433)

38. ஊழ்

	ஆகூழால்	பேதைப்	நுண்ணிய	இருவே	நல்லவை	பரியினும்	வகுத்தான்	துறப்பார்மன்	நன்றாங்கால்	ஊழிற்
மணக்.	1	2	3	6	5	9	10	7	8	4
பரிதி.	1	2	7	8	4	3	6	9	5	10
பரிப்.	—	—	—	—	—	—	—	—	—	—
காளி.	1	5	4	8	7	9	3	2	6	10
பரிமேல்.	1	2	3	4	5	6	7	8	9	10

38—வது அதிகாரம் ''ஊழ்'' முற்றிற்று.

ஊழியல் முற்றிற்று.

நூலோதி

1 அகநானூறு, களிற்றியானை திரை, சோம்சுந்தரனார், பொ. வே.உரை, தி. தெ. சை. சி. நூ. ப. க., லிமி., சென்னை, 1970.

2 அகநானூறு, மணிமிடைபவளம், நித்திலக்கோவை, சோம சுந்தரனார், பொ.வே.உரை, தி.தெ.சை.சி.நூ.ப.க., லிமி., சென்னை, 1970.

3 அடயோக பிரதீபிகை, மொழிபெயர்ப்பு, குப்புசாமி. ராஜு, த., தஞ்சை.

4 அறநெறிச்சாரம், முனைப்பாடியார், எஸ்.பி.சி.கே. அச்சகம், வேப்பேரி, 1912.

5 ஆசாரக்கோவை, பதவுரை விளக்கவுரைகளுடன், தி.தெ.சை.சி. நூ.ப.க., லிமி., சென்னை, 1968.

6 ஆதிநாதர் பிள்ளைத்தமிழ்.

7 இலக்கணக்கொத்து மூலமும் உரையும், சுவாமிநாததேசிகர், ஆறுமுகநாவலர் பதிப்பு, மூன்றாம் பதிப்பு.

8 இலக்கண விளக்கம், வைத்தியநாத தேசிகர், தஞ்சை சரசுவதி மகால், 1973.

9 இலக்கண விளக்கம் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம்—மூலமும் உரையும், வைத்தியநாத தேசிகர், திருவாரூர், தி.தெ.சை.சி. நூ.ப.க., லிமி., சென்னை, 1973.

10 இன்னாநாற்பது, மூலமும் உரையும், தி.தெ.சை.சி.நூ.ப.க, லிமி., சென்னை, 1971.

11 இனியவை நாற்பது, மூலமும் உரையும், தி.தெ.சை.சி.நூ, ப.க., லிமி., சென்னை, 1971.

12 உண்மை விளக்கம், மனவாசகங் கடந்தார், சிவஞானபோத யந்திர சாலை, சிந்தாதிரிப்பேட்டை.

13 உதயணகுமார காவியம், சோமசுந்தரனார், பொ.வே., விளக்க வுரை, தி.தெ.சை.சி.நூ.ப.க., லிமி., சென்னை, 1970.

14 உரைவேற்றுமை, சாரங்கபாணி, கோ., செல்வி பதிப்பகம் காரைக்குடி.

15 கம்பராமாயணம், பதிப்பாசிரியர் குழு, அண்ணாமலைப் பல் கலைக்கழகப் பதிப்பு, அண்ணாமலை நகர்.

16 கலித்தொகை, நச்சினார்க்கினியர் உரையும் விளக்கமும், சோமசுந்தரனார், பொ.வே., விளக்கவுரை, தி.தெ.சை.சி.நூ. ப.க., லிமி., சென்னை, 1970.

17 குண்டலகேசி, சோமசுந்தரனார், பொ.வே., விளக்கவுரை, தி. தெ.சை.சி.நூ.ப.க., லிமி., சென்னை, 1970.

18 குறுந்தொகை, சோமசுந்தரனார், பொ.வே., உரை, தி.தெ. சை.சி.நூ.ப.க., லிமி., முதலாம் பதிப்பு, மறு அச்சு, 1972.

19 குறள் அறப்பால், இராமாநுசகவிராயர், வெள்ளுரையும், புத்து ரையும், சென்னை, 1840.

20 குறள் மூலமும் சுகாத்தியர் இயற்றிய கருத்துரை அட்டவணை யும் பொழிப்புரையும், 1889.

21 கௌடலீயம் பொருணூல், தமிழ்மொழிபெயர்ப்பு, கதிரேசச் செட்டியார், பண்டிதமணி, மு., இராமாநுஜாசாரியார், பி.ஸ்ரீ, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1955.

22 சட்தரிசன சங்கிரகம்.

23 சிலப்பதிகாரம், இளங்கோவடிகள், சோமசுந்தரனார், பொ.வே., விளக்கவுரை, தி.தெ.சை.சி.நூ.ப.க., லிமி., சென்னை, 1972.

24 சிவபெருமான் இரட்டைமணிமாலை, 11 ஆம் திருமுறை, ஸ்ரீ குமரகுருபரன்சங்கம், ஸ்ரீவைகுண்டம், 1971.

25 சீவகசிந்தாமணி மூலமும் உரையும், பகுதி—க, அரசு, புலவர்., சோமசுந்தரனார், பொ.வே. உரை, தி.தெ.சை.சி.நூ.ப.க., லிமி., சென்னை, 1967.

26 சீவகசிந்தாமணி மூலமும் உரையும், பகுதி—உ, அரசு, புலவர், சோமசுந்தரனார், பொ.வே., உரை, தி.தெ.சை.சி நூ.ப.க., லிமி., சென்னை, 1968.

27 சுக்கிர நீதி (தமிழ்), கதிரேசச் செட்டியார், பண்டிதமணி, மு., மொழிபெயர்ப்பு, சன்மார்க்க சபை, மேலைச்சிவபுரி, 1926.

28 சூதசங்கிதை, தேவராஜபிள்ளை, ரிப்பன், அச்சியந்திர சாலை, சென்னை.

29 சூடாமணி நிகண்டு, மண்டலபுருடன், வித்தியாநுபாலன யந்திர சாலை, தங்க சாலைத் தெரு, சென்னைப் பட்டினம்.

30 சூளாமணி மூலமும் உரையும், பகுதி—க, சோமசுந்தரனார் பொ. வே., தி.தெ.சை.சி.நூ.க., லிமி., சென்னை. 1970.

31 சூளாமணி மூலமும் உரையும், பகுதி—உ, சோமசுந்தரனார், பொ.வே., தி.தெ.சை.சி.நூ.ப.க., லிமி., சென்னை, 1962.

32 செந்தமிழ். தொகுதி1, பகுதி8, மதுரைத் தமிழ்ச் சங்கப் பதிப்பு.

33 சேந்தன் திவாகரம், சேந்தனார், மனோன்மணி விலாச அச்சுக் கூடம், சென்னை, 1904.

34 தத்துவார்த்த சூத்திரம்.

35 தண்டியலங்காரம், தண்டியாசிரியர், சுப்பிரமணிய தேசிகர் உரை, தி.தெ.சை.சி.நூ.ப.க., சென்னை, 1960.

36 தமிழர் மதம், தேவநேயன், நேசமணிப் பதிப்பகம், காட்பாடி விரிவு வ.ஆ. மாவட்டம், 1972.

37 தனிப்பாடல் திரட்டு, சந்திரசேகர கவிராஜபண்டிதர் (பதிப்பு), வித்தியாரத்தினாகரம் அச்சகம், சென்னை, 1902.

38 திராவிடப் பிரகாசிகை, சபாபதி நாவலர், தி.தெ.சை.சி.நூ. ப.க., லிமி., சென்னை 1976.

39 திருக்கலம்பகம், உதீசிதேவர், மதுரைத் தமிழ்ச் சங்க முத்திரா சாலை.

40 திருக்குறள்—அறத்துப்பால், தண்டபாணி விருத்தியுரை, தண்டபாணிப்பிள்ளை, நாகை. சொ., தி.தெ.சை.சி.நூ.ப.க., லிமி., சென்னை, 1956.

41 திருக்குறள், அறத்துப்பால், பாலருரையுடன், சுப்பிரமணிய சாஸ்திரி, பி.சா., காசிமடம், திருப்பனந்தாள், 1939.

42 திருக்குறள், உரைவளம், அறத்துப்பால், தருமபுர ஆதீனம் 1950.

43 திருக்குறள் உரைவிளக்கம், வரதராசன், ஜி., பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1958.

44 திருக்குறள் எளிய பொழிப்புரை, இலக்குவனார், சி., வள்ளுவர் பதிப்பகம், புதுக்கோட்டை, 1963.

45 திருக்குறள், கவிராசபண்டிதர், சாது அச்சுக்கூடம், சென்னை, 1949.

46 திருக்குறள், குழந்தையுரை, குழந்தை, புலவர், பாரி நிலையம், சென்னை, 1967.

47 திருக்குறள் தமிழ் மரபுரை, தேவநேயன், ஞா.. நேசமணி பதிப்பகம், காட்பாடி விரிவு, 1969.

48 திருக்குறள் தெளிபொருள் வசனம், மு.ரா. அருணாசலக் கவிராயர், மீனலோசனி அச்சியந்திர சாலை, மதுரை.

49 திருக்குறள் தெளிவுரை, டாக்டர். வரதராசனார், மு., தி.தெ. சை.சி.நூ.ப.க., லிமி., சென்னை.

50 திருக்குறள் நயவுரை, கோவிந்தசாமி, மு., பாரி நிலையம், சென்னை, 1962.

51 திருக்குறள் பரிமேலழகருரையுடன் குறிப்புரையும், கோபால கிருஷ்ணமாசாரியர், ஸ்ரீ உ. வே. வை.மு., சென்னை, 1965.

52 திருக்குறள் புது உரை இராமலிங்கன், நாமக்கல், வெ., சென்னை.

53 திருக்குறள் பொழிப்புரை, சுப்பிரமணியபிள்ளை, கா., தி.தெ சை.சி.நூ.ப., லிமி., சென்னை, 1955.

54 திருக்குறள் மணிவிளக்கவுரை, கா.அ., அலமேலு நிலையம் சென்னை—18

55 திருக்குறள் மூலமும் ஓர் பழைய உரையும், டாக்டர் உ.வே. சாமிநாதஐயர் நூல்நிலையம், அடையாறு வெளியீடு, சென்னை 1961.

56 திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும் — அறத்துப்பால், வடிவேலுச் செட்டியார், கோ., மதுரைப்பல்கலைக் கழகம், மதுரை, 1972.

57 திருக்கோவையார், மாணிக்கவாசகர், ஆறுமுக நாவலர் பதிப்பு, வித்தியாநுபாலன யந்திரசாலை, தங்கசாலைத்தெரு, சென்னை.

58 திருநூற்றந்தாதி, அவிரோதி ஆழ்வார், மதுரைத் தமிழ்ச் சங்க முத்திரா சாலை, 1905.

59 திருமந்திரம், திருமூலர், திருவாவடுதுறை ஆதீனம், தண்ட பாணி தேசிகர் உரையுடன்.

60 திருவந்தாதி

61 திருவருட்பயன், உமாபதிசிவாசாரியார், கோ. சண்முகசுந்தர முதலியார், சென்னை.

62 திருவள்ளுவர் திருக்குறள் அறத்துப்பால், விருத்தியுரை, சிதம்பரம் பிள்ளை, வ.உ., தூத்துக்குடி, 1935.

63 திருவள்ளுவர் திருநாள்விழா மலர், தி.தெ.சை.சி.நூ.ப.க. லிமி., சென்னை 1968.

64 திருவாசகம், மாணிக்கவாசகர், தண்டபாணி தேசிகர் செய்த பஞ்சாக்கர விளக்கவுரையுடன், திருவாவடுதுறை ஆதீனம்.

65 திருவிசைப்பா, 9—ஆம் திருமுறை, தி.தெ.சை.சி.நூ.ப.க. லிமி., சென்னை.

66 திருவிளையாடல் புராணம், பரஞ்சோதி முனிவர், தி.தெ.சை. சி.நூ.ப.க.லிமி., சென்னை.

67 திருவெம்பாவை, (சமண நூல்), திருக்குறள் மூலமும் கட்டுரை களும், ஜைன இளைஞர் மன்றம், சென்னை.

68 திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது.

69 தேவாரம், அப்பர் சுவாமிகள், 4,5,6, ஆம் திருமுறை—தல முறை, ஸ்ரீகுமர குருபரன் அச்சகம், ஸ்ரீ வைகுண்டம், 1971.

70 தேவாரம், சுந்தரமூர்த்தி சுவாமிகள், ஏழாம் திருமுறை—தல முறை, ஸ்ரீகுமர குருபரன் அச்சகம். ஸ்ரீ வைகுண்டம், 1972.

71 தேவாரம், திருஞானசம்பந்த சுவாமிகள், 1,2,3 ஆம் திரு முறை—தலமுறை, ஸ்ரீகுமரகுருபரன் அச்சகம், ஸ்ரீ வைகுண் டம், 1971.

72 தொல்காப்பியச் சூத்திரவிருத்தி, சிவஞான சுவாமிகள், ஆறுமுக நாவலர் பதிப்பு, மூன்றாம் பதிப்பு.

73 தொல்காப்பியம், எழுத்ததிகாரம். இளம்பூரணருரை, தி.தெ. சை.நூ.ப.க., லிமி., சென்னை 1972.

74 தொல்காப்பியம், எழுத்ததிகாரம், நச்சினார்க்கினயருரை, தி.தெ.சை.சி.நூ.ப.க.,லிமி., சென்னை, 6, 1961,

75 தொல்காப்பியம், சொல்லதிகாரம், இளம்பூரணருரை, தி.தெ. சை.சி.நூ.ப.க., லிமி., சென்னை.

76 தொல்காப்பியம், சொல்லதிகாரம், கல்லாடனாருரை, தி.தெ. சை.சி.நூ.ப.க., லிமி., சென்னை, 6, 1964.

77 தொல்காப்பியம், சொல்லதிகாரம், சேனாவரையர் உரை, தி.தெ.சை.சி.நூ.பக.,லிமி., சென்னை, 1970.

78 தொல்காப்பியம், சொல்லதிகாரம், தெய்வச்சிலையார் உரை, தி.தெ.சை.சி.நூ.ப.க. லிமி., சென்னை, 1963.

79 தொல்காப்பியம், சொல்லதிகாரம், நச்சினார்க்கினயருரை, தி.தெ.சை.சி.நூ.ப.க. லிமி., சென்னை, 1962.

80 தொல்காப்பியம், பொருளதிகாரம், இளம்பூரணர் உரை, தி.தெ.சை.சி.நூ ப.க.லிமி., சென்னை 1969.

81 தொல்காப்பியம், பொருளதிகாரம் (செய்யுளியல்), நச்சினர்க்கினியர் உரை, தி.தெ.சை.சி நூ.ப.க. லிமி., சென்னை, 1965.

82 தொல்காப்பியம், பொருளதிகாரம், நச்சினார்க்கினியர் உரை, தி.தெ.சை சி.நூ.ப.க.லிமி., சென்னை 1971

83 தொல்காப்பியம், பொருளதிகாரம், பேராசிரியர் உரை, தி.தெ. சை.சி.நூ.ப.க., சென்னை 1971.

84 தொன்னூல் விளக்கம், திறனாய்வு மூலம் விளக்கம், சுப்பிரமணியன், டாக்டர் ச.வே., தமிழ்ப்பதிப்பகம், சென்னை 1978.

85 தோத்திரத் திரட்டு.

86 நரிவிருத்தம், திருத்தக்கதேவர், 'செந்தமிழ்' வெளியீடு, மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை.

87 நற்றிணை நானூறு, நாராயணசாமி ஐயர், பின்னத்தூர், அ., உரையும், விளக்கமும், தி.தெ.சை.சி.நூ,ப.க., லிமி.,சென்னை 1967.

88 நன்னூல், காண்டிகையுரை, சடகோபராமாநுஜாசாரியார் வை.மு., கிருஷ்ணமாசாரியார், சே., 18—ஆம் பதிப்பு, சென்னை 1958.

89 நன்னூல், மூலமும் விருத்தியுரையும், புத்தம்புத்துரை,சிவஞான சுவாமிகள், ச. தண்டபாணி தேசிகர் குறிப்புரைகள், பாரி நிலையம், சென்னை, 1968.

90 நால்வர் நான்மணிமாலை, சிவப்பிரகாச சுவாமிகள், துறை மங்கலம், மைலம் மடம் பதிப்பு.

91 நாலடியார், பாலசுந்தரம்பிள்ளை, தி.சு., உரை, தி.தெ.சை. சி.நூ.ப.க.லிமி., சென்னை, 1968.

92 நான்மணிக்கடிகை, பதவுரை விளக்கங்களுடன், தி.தெ.சை.சி. நூ.ப.க. லிமி., சென்னை, 1966.

93 நீலகேசி, சோம சுந்தரனார், பொ.வே., விளக்கவுரை, தி.தெ. சை.சி.நூ.ப.க., லிமி., சென்னை 1964.

94 நேமிநாதம், குணவீர பண்டிதர், கோவிந்தராச முதலியார், கா. ர., குறிப்புரைகள், தி.தெ.சை.சி.நூ.ப.க. லிமி., சென்னை, 1964.

95 பத்துப்பாட்டு மூலமும் உரையும், பகுதி—உ, சோமசுந்தரனார்' பொ.வே., உரை தி.தெ.சை.சி.நூ.ப.க.,லிமி., சென்னை 1971.

96 பத்துப்பாட்டு மூலமும் உரையும் பகுதி—க, சோமசுந்தரனார், பொ.வே., உரை, தி.தெ.சை.சி.நூ.ப.க., லிமி., சென்னை 1968.

97 பதிற்றுப்பத்து, மூலமும் விளக்க உரையும், துரைசாமிப்பிள்ளை, ஔவை, சு., தி. தெ. சை. சி. நூ. ப. க., லிமி., சென்னை, 1968.

98 பரிபாடல் மூலமும் உரையும், சோமசுந்தரனார், பொ.வே., உரை, தி.தெ.சை.சி.நூ.ப க., லிமி., சென்னை 1969.

99 பழமொழி நானூறு, முன்றுறையரையனார், இராசமாணிக்கம் பிள்ளை, புலவர், ம., உரை, தி.தெ.சை.சி.நூ.ப.க., லிமி., சென்னை, 1967.

100 புறநானூறு, துரைசாமிப்பிள்ளை, ஔவை.சு., விளக்கவுரை, தி.தெ.சை,சி.நூ.க.ப., லிமி., சென்னை 1970.

101 புறநானூறு மூலமும் பழைய உரையும்,சாமிநாதையர், உ.வே. பதிப்பு, சென்னை 1971.

102 புறப்பொருள் வெண்பாமாலை' ஐயனாரிதனார், சோமசுந்தரனார், பொ.வே., விளக்கவுரை, தி.தெ.சை சி.நூ ப.க.லிமி., சென்னை, —1967.

103 பிரயோகவிவேகம் மூலமும் உரையும், சுப்பிரமணிய தீட்சிதர், தஞ்சை சரசுவதி மஹால், 1973.

104 பெருங்கதை, சாமிநாதையர்,உ.வே., பதிப்பு,டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம், 4-ஆம் பதிப்பு, திருவான்மியூர், சென்னை 1968

105 பொன்வண்ணத்தந்தாதி, சேரமான் பெருமாள் நாயனார், ஸ்ரீகுமரகுருபரன் அச்சகம், ஸ்ரீ வைகுண்டம், 1972.

106 மணிமேகலை, மதுரைக் கூலவாணிகன் சாத்தனார். சோம சுந்தரனார், பொ,வே., விளக்கவுரை, தி.தெ.சை.சி.நூ.ப.க. லிமி., சென்னை, 1971.

107 மதுரைத் தமிழ்ப்பேரகராதி, கோபாலகிருஷ்ணக்கோன், இ. மா., வெளியீடு, மதுரை, 1956.

108 மாறனலங்காரம், காரிரத்னகவிராயர், மதுரைத் தமிழ்ச் சங்கப் பதிப்பு, 1915.

109 முத்துவீரியம், முத்துவீர உபாத்தியாயர், திருப்பாற்கடல்நாத கவிராயர் உரை, தி.தெ.சை.சி.நூ.ப.க., லிமி., சென்னை, 1972.

110 முத்திநிச்சயப் பேருரை, தண்டபாணிதேசிகர், ச., குறிப்புரையுடன் குருஞான சம்பந்தர், தருமபுர ஆதீனம், 1942.

111 முருகு தனுஷ்கோடி விழாமலர் மலர்க்குழு, சென்னை, 1967.

112 மேருமந்திரபுராணம், வாமனமுனிவர், சாது அச்சுக்கூடம், சென்னை, 1922

113 யசோதர காவியம், துரைசாமிப்பிள்ளை ஔவை. சு., உரை, தி.தெ.சை.சி.நூ.ப.க., லிமி., சென்னை, 1970.

114 யாப்பருங்கலக் காரிகை.

115 வள்ளுவம், மாணிக்கம், வ.சுப., பாரி நிலையம், சென்னை, 1969.

116 வள்ளுவர் கண்ட நாடும் காமமும், மீனாட்சி சுந்தரனார், தெ பொ., சென்னை, 1954.

117 வள்ளுவர், நேரிசை, அரசஞ்சண்முகனார், ஸ்ரீகிருஷ்ணவிலாசம் அச்சுயந்திரம், 1919.

118 வளையாபதி, சோமசுந்தரனார், பொ,வே., விளக்கவுரை, தி.தெ.சை.சி.நூ.ப.க., லிமி., சென்னை, 1970.

119 வில்லிபாரதம், வில்லிபுத்தூர் ஆழ்வார், ஆறுமுகநாவலர் பதிப்பு, வித்தியாநுபாலன யந்திர சாலை.

120 வீரசோழியம், புத்தமித்திரனார், பெருந்தேவனார் உரை, தி.தெ.சை.சி.நூ.ப.க., லிமி., சென்னை, 1970.

121 Tamil Lexicon, University of Madras, 1966.

குறள் முதற்குறிப்பகராதி

அஞ்சுவ ௩௭௮
அடல்வேண்டும் ௩௦௩
அருட்செல்வம் ௮
அருள்கருதி ௧௪௨
அருள்சேர்ந்த ௧௬
அருளல்லது ௪௪
அருளில்லார்க்கு ௨௭
அல்லல் ௨௦
அவாஇல்லார்க் ௩௮௩
அவாஎன்ப ௩௬௭
அவாவினை அற்ற ௩௮௧
அவிசொரிந்து ௬௧
அளவல்ல ௧௫௧
அளவறிந்தார் ௧௪௬
அளவின்கண் ௧௪௫
அறவினை ௨௪௦
அற்கா ௨௭௧
அற்றவர் ௩௭௬
அறிவினான் ௨௨௫
ஆகூழான் ௩௯௪
ஆரா இயற்கை ௩௮௭
இணரெரி ௨௦
இயல்பாகும் ௩௦௬
இருவேறு ௪௦௩
இருள் நீங்கி ௩௩௨
இலர்பலராகிய ௯௭
இறந்தார் ௨௧௦
இன்பம் ௩௮௫
இன்னா எனத்தான் ௨௨௭
இன்னாசெய் தாரை ௨௨௩
உண்ணாமைஉள்ளது ௪௮
உண்ணாமைவேண் ௫௭
உயிர் உடம்பின் ௨௬௧
உள்ளத்தால் உள்ளலும் ௧௩௫
உள்ளத்தால்பொய்யா ௧௬௬
உள்ளிய ௨௦௭
உற்றநோய் ௭௦
உறங்குவது ௨௯௦
ஊழின் ௪௧௯
எப்பொருள் ௩௪௩
எல்லா ௧௮௨
எள்ளாமை ௧௩௨
எனைத்தானுப் ௩௧௭
ஐயத்தின் ௩௩௫
ஐயுணர்வு ௩௩௯
ஒருபொழுதும் ௨௮௪
ஒன்றாக ௨௪௫
ஒன்னார்த் ௭௮
ஓர்த்துள்ளம் ௩௫௦
கணைகொடிது ௧௨௪
கள்வார்க்குத் ௧௫௩
களவின்கண் ௧௪௦
களவினால் ௧௩௭
களவென்னும் ௧௪௭
கற்றீண்டு ௩௩௭
கறுத்தின்னா ௨௧௭
காமம் வெகுளி ௩௬௦
குடம்பை ௨௮௭
கூத்தாட்டு ௨௬௯
கூற்றம் ௯௪
கொல்லாமை ௮௫௨
கொல்லான் ௬௪
கொலைவினை ௨௫௯
சார்புணர்ந்து ௩௫௬
சிறப்புஈனும் ௨௧௫
சினத்தைப் ௨௦௨
சினமென்னும் ௧௯௮
சுடச்சுடரும் ௮௮
செய்யாமல் ௨௨௦
செயிரின் தலைப் ௫௯
செல்லா ௧௯௧
செல்லிடத்துக் ௧௮௯

தலைப்பட்டார்	௩௧௫	பற்றி விடாஅ	௩௧௩
தவம்செய்வார்	௮௫	பற்றுக	௩௨0
தவமறைந்து	௧௧௩	பிறப்பென்னும்	௩௫௩
தவமும்	௭௩	பிறர்க்கு	௨௩௩
தன்நெஞ்	௧௯௩	புக்கில்	௨௯௩
தன்னுயிர்க்கு	௨௩௧	புறங்குன்றி	௧௨0
தன்னுயிர் தான்அறப்	௯௨	புறந்தூய்மை	௧௭௯
தன்னுயிர் நீப்பினும்	௨௫௪	பேதைப்	௩௯௭
தன்னூன்	௩௮	பொய்ம்மையும்	௧௬0
தன்னைத்தான்	௧௯௬	பொய்யாமை அன்ன	௧௭௨
தினற்பொருட்டால்	௫௪	பொய்யாமை	௧௭௪
துறந்தார்க்குத்	௭௯	பொருளல்ல	௩௨௯
துறப்பார்மன்	௪௧௪	பொருளற்றார்	௩0
தூஉய்மை	௩௭௯	பொருளாட்சி	௪0
தெருளாதான்	௩௧	பொருள்நீங்கிப்	௨௪
நகையும்	௧௯௪	மழித்தலும்	௧௨௬
நல்லவை	௪0௫	மறத்தல்	௧௯௨
நல்லாற்றான்	௧௨	மற்றுந்	௩0௮
நல்லாறு	௨௪௮	மனத்தது	௧௨௨
நன்றாகும்	௨௫௬	மனத்தொடு	௧௬௯
நன்றாங்கால்	௭௧௯	மன்னுயிர்	௧௭
நாச்செற்று	௨௭௯	யாதனின்	௨௯௯
நாளென	௨௭௪	யாமெய்யாக்	௧௮௪
நில்லாதவற்றை	௨௬௬	யான்எனது	௩௧௧
நிலையஞ்சி	௨௪௯	வகுத்தான்	௪௧௧
நுண்ணிய	௪00	வஞ்சமனத்தான்	௧0௩
நெஞ்சில்	௧௧௮	வலியார்முன்	௩௩
நெருநல்	௨௮௨	வலியில்	௧௧0
நோயெல்லாம்	௨௬௩	வாய்மை	௧௫௮
பகுத்துண்டு	௨௪௩	வானுயர்	௧0௬
படைகொண்டார்	௪௨	வேண்டாமை	௩௭௨
பரியினும்	௪0௮	வேண்டிய	௮0
பற்றற்ற	௩௧௭	வேண்டின்	௩0௧
பற்றற்றேம்	௧௧௫	வேண்டுங்கால்	௩௬௯

பிழை பொறுக்க

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
15	32	கருதிப் பாடம் தேர்தற்கு	கருதித் 'தேர்தற்கு
25	1	செய்யா தாம்	செய்யாது தாம்
	29	என பொச்சாந்தரை	எனப் பொச்சாந்தாரை
34	20	யார்வலி	வலியார்
55	23	அருத்தாவத்தி	அருத்தாபத்தி
57	11	பிரிதொன்றின்	பிறிதொன்றின்
63	12	பிரசரணம்	பிரகரணம்
	13	பிரசரணம்	பிரகரணம்
66	24	நேமி.கு.	நேமி.சூ.
70	8	வழக்கிற்றாபப்த பக்கம்	வழக்கிற்றாபதப் பக்கம்
87	30	உரைத்து	உரைத்துத்
98	25	ஞாளிகள்	ஞானிகள்
105	38	பரிதி......கூறும்	பரிதி கூறும் இவன்
124	12	அருமந்.	திருமந்.
153	1	யுணராம்	யுணராமை
174	9	கிறந்தது	சிறந்தது
194	பக்கத் தலைப்பு	திருக்குறள் உரைக்ளஞ்சியம்	திருக்குறள் உரைக்களஞ்சியம்
207	7	மெகுளியை	வெகுளியை

233	5	ஒம்புமாறு	ஓம்புமாறு
245	28	குளிக்கொள்ளல்	குறிக்கொள்ளல்
254	21	தன்னுயிர்க் நீப்பினுஞ்	தன்னுயிர் நீப்பினுஞ்
256	14	யாசோ,	யசோ.
270	21	விளக்கிற்றிலது	விளங்கிற்றிலது
279	19	விளங்காயம்	விளங்காயாம்[3]
307	29	பொருளுக்கு காரிய	பொருளுக்குக் காரிய
319	10	சாம்உள்ள	சாம்போது உள்ள
328	33	பரிமேலழகர். உரைக்கு	முற்றுப்புள்ளி நீக்குக
351	3-4	ஒருதலை என்பது இணை யிறந்த தலைப்பாடு	இதனைக் காளிங்கர் உரை யாகக் கொள்க.
351	22	உள்ளது உணரின்	முற்றுப்புள்ளி நீக்குக.
367	9	யடைகின்னறன	யடைகின்றன
	22	துறவிக்கு	துறவிக்குக்
378	17	கேட்டுப்	கெட்டுப்
399	13	இழவூழ்வ அறி	இழவூழ் அறிவு

மதுரை—காமராசர் பல்கலைக் கழகம்

திருக்குறள் ஆய்வகம்

வெளியீடுகள்

1986

திருக்குறள் ஆய்வு வெளியீடு: 1

குறள் கண்ட பொருள் வாழ்வு

டாக்டர் தி. முருகரத்தனம்

பொருளடக்கம்

1 உலகச் சிந்தனை

2 வள்ளுவர் சிந்தனை

3 அரசும் பொருளும்

4 வள்ளுவர் கண்ட வளநாடு

"திருக்குறளில் உள்ள பொருளியல் கருத்துக்களைத் தொகுத்தும், அவற்றை இக்காலத்துப் பொருளியல் அறிஞர்களின் கொள்கையோடு ஒப்பிட்டும், பல்கலைக்கழகத் துணைப்பேராசிரியர் டாக்டர் முருகரத்தனம் இந்நூலினை இயற்றியுள்ளார். உலகச் சிந்தனை, வள்ளுவர் சிந்தனை, அரசும் பொருளும், வள்ளுவர் கண்ட வளநாடு என்னும் தலைப்புகள் நூலின் அமைப்பைப் புலப்படுத்துகின்றன. திருக்குறளையும் பொருளியல் நூல்களையும் ஆழ்ந்தும் நுணுகியும் கற்றுப் பலவகைக் கருத்துக்களையும் தெளிவுற இந்நூலில் விளக்கியுள்ளார்."

துணைவேந்தர்
மு. வரதராசன்

டெமி பக்கங்கள் XI + 207 விலை ரூ 5—00

திருக்குறள் ஆய்வு வெளியீடு: 2

குறள் கூறும் இறைமாட்சி

டாக்டர் தி, முருகரத்தனம்

பொருளடக்கம்

1 பொருட்பால் வழங்கும் பொருள்

2 அரசருள் ஏறு

3 வேந்தனும் வேந்தும்

4 பண்புடை வேந்தன்

5 படிப்பும் பண்பாடும்

6 அரசர் பணி

''வள்ளுவர் கண்ட அரசியல் கருத்துக்கள் ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. அவற்றுள்ளும் அரசர் பற்றிய கருத்துக்கள் முதலில் ஒரு நூலாகஎழுதப்பட்டன. அவையே 'குறள் கூறும் இறைமாட்சி' என்னும் இந்நூலாகியது. திருக்குறளின் பொருட்பாலில் முதல் இருபத்தைந்து அதிகாரங்கள் 'அரசியல்' என ஓரியலாக அமைந்துள்ளன. அவ்வியலில் காணப்படும் கருத்துக்களே இங்கு ஆராய்ச்சிக்கு உரியனவாயின'.

டெமி பக்கங்கள் IV + 145 விலை 7-00

திருக்குறள் ஆய்வு வெளியீடு: 3

வள்ளுவர் வகுத்த அரசியல்

(கருத்தரங்கக் கட்டுரைகள்)

தொகுப்பும் பதிப்பும்

டாக்டர் தி. முருகரத்தனம்

பொருளடக்கம்

(1)வள்ளுவர் கண்ட அரசியல் அன்றும் இன்றும்: டாக்டர் மு.வரதராசனார் (2)வள்ளுவர் கண்ட சட்டமும் நீதியும்: திரு பி.ஆர். பக்கிரிசங்கர் (3)வள்ளுவர் கண்ட அரசியலும்சங்கஇலக்கியங்களும்: பேராசிரியர் அ.மு பரம சிவானந்தம் (4) வள்ளுவர்கண்ட அரசியலும் பிற அற இலக்கியத்தார் கண்ட அரசியலும்: டாக்டர் இரா. சாரங்கபாணி (5) வள்ளுவர் கண்ட அரசன் - இறைமை யின் எல்லையும் இயல்பும்: டாக்டர் தி. முருகரத்தனம் (6) வள்ளுவர் கண்ட இறைவனும் வடநூல் மரபும்: டாக்டர் கோ. சுந்தரமூர்த்தி (7) வள்ளுவர் கண்ட அரசியலும் மனுவும்: டாக்டர் சோ. சுப்பிரமணியன் (8) திருவள்ளுவரும் கிரேக்க அரசியற் சிந்தனையாளர் களும: பேராசிரியர் பா. சூரியநாராயணன் (8) TirukKural and Western Political Thought: *டாக்டர் ந. சுப்பிரமணி யன் (10)* Politics and Ethics in Tirukkural; *டாக்டர் எம் முத்துராமன் (11)* Concept of Kingship in kural and Later Epics: *பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன்*

டெமி பக்கங்கள் VII + 103 விலை 6-00

திருக்குறள் ஆய்வு வெளியீடு: 4

வள்ளுவர் வகுத்த பொருளியல்

(கருத்தரங்கக் கட்டுரைகள்)

தொகுப்பும் பதிப்பும்
டாக்டர் தி. முருகரத்தனம்

பொருளடக்கம்

(1) குறள் கூறும் பொருளியல்: டாக்டர் அ. இராமசாமி (2) வள்ளுவரது பொருளியலின் எல்லையும் இயல்பும்: பேராசிரியர் மா பா. குருசாமி (3) திருக்குறளில் வருவாய்த் தோற்றுவாய்கள்: பேராசிரியர் ந.சி. பாலசுப்பிரமணியன் (4) திருக்குறளில் பங்கீட்டுப் பொருளியல்: திரு க. அருணாசலம் (5) திருவள்ளுவரின் ஒப்புரவுக் கோட்பாடு: திரு தே. வேலப்பன் (6) Relevance of Valluvam to Modern Political Economy: டாக்டர் பா. நடராசன் (7) Valluvar on the Making and Using of Wealth- பேராசிரியர் எஸ். வேலாயுதம் (8) Tiruvalluvar's Concep tion of Public Finance: பேராசிரியர் எல். சிதம்பரதாணு (9) Enterpreneurship: பேராசிரியர் எஸ். வேலாயுதம் (10)Economic Thought of Tiruvalluvar with Special Refer- ence to Occupation: பேராசிரியர் ஏ. வி. கிருஷ்ணமூர்த்தி (11) Agriculture in Tirukkural: பேராசிரியர் எஸ். சுந்தரராசன் (12) The Concept of welfare in Tirukkural: திரு எஸ். சங்கரராமலிங்கம் (13) A Comparative Study of the Ideas of Tiruvalluvar and Mahatma Gandhi on the Economic Ideas: திரு. ஆர். அரங்கசுவாமி (14) The Qualities of a Good Administraton: டாக்டர் டி. பிரைட்சிங்.

டெமி—பக் 148

விலை ரூ. 6-00

திருக்குறள் ஆய்வு வெளியீடு: 5

குறள் கூறும் சமுதாயம்

செல்வி காமாட்சி சீனிவாசன்

பொருளடக்கம்

1. திருக்குறள் கூறும் சமுதாயம் ஓர் இலக்கியல் (ideal) சமுதாயமா?

2. இல்லம்

3. தொழில்கள்

4. அறங்கள்

5. மக்களின் அன்றாட வாழ்க்கை

6. சமுதாயத்தின் பிற இயல்புகள்

7. துறவு

8. வள்ளுவர் விரும்பும் சமுதாயத்திற்கும் பிற அறிஞர் விரும்பும் சமுதாயத்திற்கும் ஒப்பு

டெமி—பக். X + 372, விலை ரூ. 10-00

திருக்குறள் ஆய்வு வெளியீடு:6

திருக்குறளும் விவிலியமும்

செல்வி காமாட்சி சீனிவாசன்

பொருளடக்கம்

1. யூத இலக்கியமும் விவிலிய நூலாய்வும்
2. முதலைந்து நூல்கள்
3. வரலாற்று இலக்கியங்கள்
4. தீர்க்கதரிசிகள்
5. துதிப்பாடல்கள்
6. மூதறிவு இலக்கியம்
7. நற்செய்தி நூல்கள்
8. பிற நூல்கள்
9. கடிதங்கள்

டெமி—பக்.346

விலை ரூ

திருக்குறள் ஆய்வக வெளியீடு: 7

குறள் கூறும் சமயம்

செல்வி காமாட்சி சீனிவாசன்

பொருளடக்கம்

1. வள்ளுவர் காலச் சமயச்சூழ்நிலை
2. கடவுளும் அமரரும்
3. வான்சிறப்பு அல்லது இயற்கையின் திறம்
4. உயிர்களும் அவற்றின் நிலைகளும்
5. சமுதாயமும் வாழ்க்கையும்
6. வள்ளுவர் எச்சமயத்தைச் சேர்ந்தவர்?

டெமி— பக் 222

விலை ரூ. 7-00

திருக்குறள் ஆய்வக வெளியீடு: 8

குறள் கூறும் அரசு

டாக்டர் தி. முருகரத்தனம்.

பொருளடக்கம்.

1. நாடு
2. நாட்டின் பொருள்
3. அரண்
4. அரண்வகை
5. நட்பு

''வள்ளுவர் வழங்கிய கருத்துக்களை இன்றைய அரசியற் சிந்தனையுடன் ஒப்பிட்டாராய்தலே இவ்வாராய்ச்சியின் நோக்கம். வள்ளுவர்க்குப் பின் காலமும் கருத்தும் மாறியுள்ளன. ஆனாலும் சில அடிப்படை உண்மைகள் நிலைபேறுடையன. அத்தகைய உண்மைகள் குறளில் காணப்படுகின்றன. திருக்குறளுக்கு அதுவே பெருமை.''

டெமி பக். 134 + 8 1982 விலை ரூ: 8.00

திருக்குறள் ஆய்வக வெளியீடு: 9, 10, 11.

திருக்குறள் உரைக்களஞ்சியம்

டாக்டர் ச. தண்டபாணி தேசிகர்

1. அறத்துப்பால் — பாயிரவியல், பக். 238 விலை ரூ,15-00
2. அறத்துப்பால் — இல்லறவியல், பக், 691 விலை ரூ. 30-00
3. அறத்துப்பால் — துறவறவியல், ஊழியல் பக் விலை ரூ.

டெமி அளவு: முழுக்கலிக்கோக் கட்டு

அடுத்து வருவன

திருக்குறள் உரைக்களஞ்சியம்

டாக்டர் ச. தண்டபாணி தேசிகர்

1. *பொருட்பால்—அரசியல்*
2. *பொருட்பால்—அங்கவியல்*
3. *பொருட்பால்—ஒழிபியல்*

"இவ் வுரைக்களஞ்சியத்தில் தொன்மையுரைகளோடு அண்மையுரைகளும் தொகுப்பிடம் பெற்றிருப்பது மன நிறைவாகும். அப்பாதுரையார், பாவாணர், இலக்குவனார், மு. வ., பாரதிதாசனார், இராமலிங்கனார், கோவிந்தசாமி என்றினையோர் உரைகள் வேண்டுமளவு தழுவப் பெற்றுள. கண்டதும் கேட்டதும் என்ற வகையில் சில நல்லுரைகளும் சேர்ந்துள. இதனால் எவ்வளவு முன்பு உரையிருப்பினும் திருக்குறள் தொட்டனைத்தூறிவரும் மணற்கேணியாகச் சுரப்பதைக் காண்கின்றோம். திருக்குறளுக்கு உரை செய்யும் மனவுணர்வு எக்காலத்தும் பெருகி வருவதையும் அதனால் திருக்குறள் கால நூலாகப் புதுமை பெறுவதையும் அறிகின்றோம்.

உரைக்களஞ்சியம் பல்வேறு உரைகளின் குவியல் என்று எண்ணிவிடல் வேண்டா. ஒவ்வோர் குறளுக்கும் கிடைத்திருக்கும் உரையெல்லாம் ஓரிடத்துக்குவித்துக் காட்டுவதோடு நில்லாது அவற்றை நிறுத்துப் பார்க்கும் ஆய்வுப் பெற்றியுடையது".

வ.சுப. மாணிக்கம்

திருக்குறள் துறையின் புறப்பணி:

திருக்குறள்

(மூலமும், பரிமேலழகருரையும், இவ்வுரைக்கியையுமாறு ஆசிரியர் கோ. வடிவேலு செட்டியார் அவர்கள் இயற்றிய தெளிபொருள் விளக்கமும், கருத்துரையும், குறிப்புரையும், ஆங்கில மொழி பெயர்ப்புடன்.)

டெமி அளவு: முழுக்காலிக்கோ கட்டு

1 **அறத்துப்பால்** பக்கங்கள் VIII + 24 + 428 விலை ரூ 10—00

2 பொருட்பால் 51 + 720 + IX விலை ரூ 25—00

3 **காமத்துப்பால்** பக். 49 + 253 + 30 + 4 விலை ரூ 10—00

''இந்நூலில், திருக்குறளுக்குப் பரிமேலழகர் நல்கிய உரைக்குத் தெளிபொருள் விளக்கம் உள்ளது. கருத்துரை உள்ளது: பரிமேலழகரின் உரையில் இலைமறை காய்போல் உள்ள நுண் பொருள்களுக்குக் குறிப்புரையான விளக்கம் உள்ளது: பரிமேலழகர் மேற்கோளாகக் காட்டியுள்ள செய்யுள்களுக்கு உரை உள்ளது: பரிமேலழகர் தமக்கே உரியவகையில் தந்த இலக்கணக் குறிப்புகளுக்கு விளக்கம் உள்ளது. பல சமயங்களின் கோட்பாடுகள் பற்றிய விளக்கமும் உள்ளது. மேற்கோள் காட்டப்பட்டுள்ள செய்யுள்களின் நூற்பெயர் முதலிய குறிப்புகளும் உள்ளன. பாட வேறுபாடுகளும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. இதன் முதல் பதிப்பு 1904-ஆம் ஆண்டில் வெளியானது. 1918-ஆம் ஆண்டில் இரண்டாம் பதிப்பு வெளியிடுகையில் ஒவ்வொரு குறட்பா விளக்கத்தின் இறுதியிலும் குறளின் ஆங்கில மொழி பெயர்ப்பும் சேர்க்கப்பட்டது. புலவர்களை அணுகித் தமிழ் மரபின்படி கற்க இயலாத பலர் இந்நூலை வாங்கிக் கற்றுத் திருக்குறளை உணரும் வாய்ப்புப் பெற்றார்கள்: படிப்படியே இந்நூலில் ஆழ்ந்த சிலர் பரிமேலழகரின் நுட்பமான உரையை அணுகத் தலைபட்டு அதன் பயனால் மதி நுட்பம் வளரப் பெற்றுத் தமிழ்ப் புலமையும் பெற்றனர். இவ்வாறு பலர் தம் அறிவு வளர்ச்சிக்குப் பயன்பட்டு வந்த இந்தச் சிறந்த நூல் ஏறக் குறைய நாற்பது ஆண்டுகளாய் விற்பனைக்குக் கிட்டாத தாய்க் கற்போர்க்கு எட்டாததாய் நின்றது கண்டு அறிஞர் வருந்தினர்.''

துணைவேந்தர்

டாக்டர் மு. வரதராசன்

மதுரை-காமராசர் பல்கலைக்கழக பதிப்புத்துறை வெளியீடுகள்

விற்பனை முறைகள்:

1. விற்பனையாளர்க்கு (Publishers & Book Sellers) 25% கழிவு உண்டு. மற்ற அனைவருக்கும் 15% கழிவு தரப்படும்.

2. விலைப்பட்டியலில் குறிப்பிட்ட நூல்களைப் பெற விழைவோர் ''பதிவாளர், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை—625 021'' என்ற முகவரிக்கு எழுதுக.

3. நூல் விற்பனை நிலையங்களும், நூலகங்களும், கல்வி நிலையங்களும் தேவையான படிகளை எழுதின் உரிய விதிமுறைக்கிணங்க அவை அனுப்பி வைக்கப்படும்.

4. சில தனிநூல்கள் வேண்டுவோர் நூல்கட்குரிய தொகையுடன் தக்க அஞ்சற் செலவையும் சேர்த்து அனுப்பவேண்டும்.

5. விலையஞ்சல் (V.P.P.) மூலமும் நூல்கள் விடுக்கப்படும்.

குறிப்பு: நூலின் ஆசிரியர், பெயர், விலை, வேண்டும் படிகள், அனுப்புமுறை முதலிய விளக்கங்களைத் தெளிவாகக் குறிப்பிடவேண்டும்.

பதிப்பாளர்,
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்,
பல்கலை நகர்,
மதுரை—625 021.